# குன்றக்குடி அடிகளார்

# நூல்வரிசை

தொகுதி -16

## பொது

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

**16 தொகுதிகள்**
**7200 பக்கங்கள்**

## தொகுதி - 16

## பொது

தமிழ் வளர்ச்சி இயக்ககம்
எழும்பூர்
2 0 ... 2007
சென்னை-600 008
தமிழ் வளர்ச்சி வளாகம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

**மணிவாசகர் பதிப்பகம்**
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2002
திருவள்ளுவர் ஆண்டு : 2033
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
மணிவாசகர் வெளியீட்டு எண் : 958

**விலை : ரூ. 140.00**

பதிப்பாசிரியர் குழு :

தமிழாகரர் தெ. முருகசாமி
நா. சுப்பிரமணியம்
குன்றக்குடி பெரியபெருமாள்
க. கதிரேசன்
மரு. பரமகுரு

செயலர் :


பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

மணிவாசகர் நூலகம்
12 - B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
5, சிங்காரவேலு தெரு, தி. நகர், சென்னை - 600 017.
110, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

| | | | |
|---|---|---|---|
| சிதம்பரம் | : 230069 | சென்னை | : 25361039 |
| தி. நகர் | : 24357832 | கோயமுத்தூர் | : 2397155 |
| மதுரை | : 2622853 | திருச்சி | : 2706450 |

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை- 600 021.
தொலைபேசி : 25954528



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்புகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1925 | • தோற்றம் |
| | • பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை<br>தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி |
| | • பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன் |
| | • தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம். |
| 1931 - 1936 | • சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம். |
| | • 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு. |
| 1937- 1942 | • தலைமையாசிரியர் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல். |
| | • பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல். |
| | • 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு. |
| | • 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல். |
| 1945 | • தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல். |
| | • தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல். |
| 1947 - 1948 | • சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல். |
| 1949 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். |
| 1951 | • காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு. |
| 1952 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல். |

- அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம்.
- 'மணிமொழி' என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953
- ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954
- இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955
- அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- 'தமிழ்நாடு' நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956
- அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958
- குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959
- ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960
- மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962
- சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965
- இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966
- தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967
- திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சிவமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968
- இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - 'திருக்குறள் உரைக்கோவை' நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல்

- திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.
- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.

- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- மணிவிழா

1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப்பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது

1989
- இவர் எழுதிய 'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



# குன்றக்குடி அடிகளார் தமிழுக்கு வழங்கிய கொடை

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்
நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை 16 தொகுதிகளில் 6000 பக்க அளவில் செம்பதிப்பாக மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. 1999இல் தவத்திரு பொன்னம்பல அடிகளார் தலைமையில் குழு அமைக்கப் பெற்றது. அடிகளாரின் சொற்பொழிவுகள், கட்டுரைகள், 60க்கு மேற்பட்ட நூல்கள் அரும்பாடுபட்டுத் தேடித் தொகுக்கப் பெற்றன. பொருண்மை கருதி ஐந்து தலைப்புகளில் அவை வகை செய்யப் பெற்றன. 2002 நவம்பரில் 16 தொகுதிகளும் அச்சுப்பணி நிறைவு பெறுகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் எழுத்துக்கள் அனைத்தையும் தொகைப்படுத்தி வெளியிடும் விதை என் நெஞ்ச நிலத்தில் நட்டேன். அதற்கு நீரூற்றி உரம் இட்டுப் பூத்துக் குலுங்கச் செய்த புண்ணியர் பொன்னம்பல அடிகளார். குன்றக்குடி அடிகளார் வகுத்த அறங்களை வளர்ப்பதும் திருமடத்தின் மரபுகளையும் பெருமையையும் பேணிக்காப்பதும், அடிகளார் புகழ் பரப்புவதும் தம் கடமையாகக் கொண்டு பொன்னம்பல அடிகள் விரதம் பூண்டு, வீறு கொண்டு செயலாற்றி வருகிறார்கள். அவர்கள் பெருமுயற்சியின் பெருவிளைவே இப்பெருந்திட்டம். குன்றக்குடி அடிகளாரின் செயலராக, நிழலாக இருந்த பரமகுருவின் பங்களிப்பு பெரியது, மிகப்பெரியது. அவர் இன்றி இந்நூல்வரிசை வெளிவந்திருக்காது. அடிகளாரின் அசைவுகள், நினைவுகள் அனைத்தும் பரமகுருவின் நெஞ்சில் பதிவாகி விட்டன.

காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரியின் முன்னை முதல்வர் முருகசாமி முனைந்து நின்று இம்மாபெரும் திட்டத்தை வெற்றிபெறச் செய்தனர். சமயநூல்களில் தேர்ச்சியும் அடிகளார் நூல்களில் பயிற்சியும் அடிகளாரிடத்தில் மிகுந்த மதிப்பும் உடைய முருகசாமி முன்னின்று ஆற்றிய பணிகள் பல.

இந்த 16 தொகுதிகளுக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் பெருமக்கள் 15பேர் அரிய ஆய்வு மதிப்புரைகள் வழங்கி யுள்ளனர். அவர்கள் வருமாறு:

தொகுதி 1, 2. சிலம்பொலி செல்லப்பனார்
3. முனைவர் தமிழண்ணல்
4. முனைவர் வா.செ. குழந்தைசாமி
5. முனைவர் ஔவை நடராசன்
6. முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியன்
7. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
8. முனைவர் வை. இரத்தினசபாபதி
9. தருமபுரம் ஆதீனம் தவத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்தர்
10. முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
11. முனைவர் கு. சுந்தரமூர்த்தி
12. தவத்திரு அமுதன் அடிகள்
13. தவத்திரு ஊரன் அடிகள்
14. முனைவர் இ. சுந்தரமூர்த்தி
15. முனைவர் க.ப. அறவாணன்
16. புலவர் இரா. இளங்குமரன்

நூல் நுவலும் பொருள், அடிகளின் எழுத்துக்கொடை, சமய ஞானம், மனிதநேயம், பொதுநல நோக்கம், அறிவியல் அணுகு முறை, சமூகப் பணி பற்றித் திறனாய்வாளர்கள் நுண்ணாய்வு செய்து திறம்பட விளக்கியுள்ளனர். மதிப்புரைகளே ஒரு தனி நூல் அளவுக்கு வளர்ந்துள்ளது.

தவத்திரு ஊரன் அடிகள் தாம் அரிதின் முயன்று உருவாக்கிய 'சைவத் திருமடங்கள் 18' என்னும் பெருநூலில் மணிவாசகர் பதிப்பகத்தின் தொகுப்பு மிகப்பெரிய பணி என்றும் அடிகளாருக்கு நிலைத்த நினைவுச் சின்னம் என்றும் நெஞ்சாரப் பாராட்டியுள்ளார். இத்தொகுதிகளின் பன்முக நலன்களைப் பாரித்துரைத்துள்ளார். திருமடத்தின் வரலாறு எழுதும்போது இப்பெருந்திட்டத்தின் பெரும்பயனை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது குறிப்பிடத் தக்கது. அடிகளார் நூலுக்கு இவர் அளித்துள்ள அணிந்துரையில் ஐவகை அமைப்புகளின் கலவை (Synthesis) அடிகளார் என்பதனை ஆராய்ந்து நிறுவி, அவரது பேரறிவையும் பேராற்றலையும் பெருஞ் செயல்களையும் விளக்கியுள்ளார்.

சங்ககாலத்தில் தனிப் பாடல்கள் தொகைபெற்றது போல இருபதாம் நூற்றாண்டு தொகைநூற் காலம் எனத் திறனாய்வாளர் மதிப்பீடு செய்துள்ளனர். எழுத்தாளரின் கதைகள், அறிஞரின் கட்டுரைகள், ஆய்வுகள், படைப்புகள் ஒரு குடைக்கீழ் தொகைப் படுத்தும் முயற்சி இந்த 20 ஆண்டுகளில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அடிகளாரின் நூற்றொகை 20ஆம் நூற்றாண்டுத் தொகைநூல் வரலாற்றில் வரலாறு படைத்து விட்டது. 6000 பக்கங்களையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்கும்போது பிரமிப்பு உண்டாகிறது. நாளும் சொற்பொழிவு, திருமடத்துப் பணிகள், பல்வேறு அமைப்புகளை உருவாக்குதல், பன்னாட்டுப் பயணம், பன்னாட்டு உறவு, பல்வேறு செயற்பாடுகள் இவற்றுக்கிடையே குன்றக்குடி அடிகளார் செய்த நூற்பணி மலைப்பைத் தருகிறது. கட்டுரைகள் பொழுதுபோக்குக் கட்டுரைகள் அல்ல. புதிய தமிழகம் தோன்ற, தமிழர்கள் விழிப்புணர்ச்சி பெற வழிவகுக்கும் படைக்கலன்கள். தமிழ் மறுமலர்ச்சி, சமய மறுமலர்ச்சி, சைவ சமய எழுச்சி, திருமுறை இயக்கம், திருக்குறள் இயக்கம், தமிழ் வழிபாடு முதலியவற்றுக்கு அடிகளார் அளித்த கருத்துக் கொடைகள் இத்தொகுதிகளில் பதிவு செய்யப் பெற்றுள்ளன.

குன்றக்குடி அடிகளாரிடம் மறைமலையடிகளின் சைவநூற் புலமையும் திரு.வி.க.வின் சமயப் பொதுமையும் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் தமிழ்ப்பற்றும் ஒருங்கிணைந் திருப்பதைத் திறனாய்வாளர்கள் இனங்கண்டு அடையாளங் காட்டியுள்ளனர்.

கி.பி. 2ஆம் நூற்றாண்டில் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரம் என்றொரு மணியாரம் படைத்துச் செந்தமிழுக்குச் செழுமை சேர்த்தார் என்பர். 20ஆம் நூற்றாண்டில் ஈடு இணையற்ற எழுத்துப் பணியால், கருத்துப் புரட்சியால் குன்றக்குடி அடிகளார் குன்றாப் புகழ் பெற்றுக் குன்றேறி நிற்கிறார்.

மேடைத் தமிழுக்கு அடிகளார் மேன்மை சேர்த்தார். மனித குலத்தை மேம்படுத்தும் எண்ணங்களை வாரி வழங்கினார். செந்தமிழ்ப் பொழிவுகளால் தமிழரின் சிந்தை மகிழச் செய்தார். அடிகளின் பாணி தனிப்பாணி. அடிகளார் வழியில் பட்டி மண்டபங்கள் இன்று வெற்றி நடைபோடுகின்றன. அடிகளாரின் பேச்சே எழுத்து வடிவமாக இருக்கும். எழுத்தில் மேடைப் பேச்சின் செல்வாக்கு மிகுந்திருக்கும். இதனை இந்நூல்வரிசை கற்பார் எளிதில் உணர்வர்.

நாவுக்கரசரின் தொண்டு நெறியும் மாணிக்கவாசகரின் அருள்நெறி ஈடுபாடும் சேக்கிழார் வழியில் தொண்டர் சீர்பரவும் இயல்பும் அடிகளார் வாழ்வில் இயல்பாக அமைந்தவை.

அடிகளாரின் திருக்குறள் ஈடுபாடும் திருக்குறள் கல்வியும், திருக்குறள் தேர்ச்சியும் சமூகப் பார்வையும் முதல் நான்கு தொகுதிகளில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. இவர்தரும் புதிய வெளிச்சங்கள் பல.

அடிகளின் நூலினை ஒரு சேரத் தொகுத்து நோக்கிடும்போது முனைவர் பட்டங்களுக்கு ஆய்வு செய்வதற்குக் களங்கள் -

சிந்தனைக் களங்கள் பல உள என்பதை உணர்கிறோம். அடிகளாரின் எழுத்தும் பேச்சும் இளைஞர்களை ஈர்த்தன. புதியதோர் உலகம் செய்ய வழிவகை செய்தன. நீடுதுயில் நீங்க - சமய உலகம் விழிப்புணர்வு கொள்ள அடிகளார் ஆற்றிய பணிகள் தனித்ததோர் பேராய்வுக்கு உரியன.

அவர் பேச்சுக்கள், எழுத்துக்கள், கவிதைகள் அனைத்தையும் தொகுத்து வழங்குகிற பெரும்பேறு, தனிப்பேறு மணிவாசகர் பதிப்பகம் பெற்றபேறு.

கார்ல் மார்க்ஸை எடுத்துரைக்கும் காவி உடையினர். மதக் கலவரங்களை முன்னின்று தீர்க்கும் முன்னோடி. தமிழ்நாட்டுத் திருமடங்களுக்கு ஒட்டுமொத்தப் பெருமை சேர்த்த உயர் மதியாளர். உயர்தரும நெறிகளை ஓயாது பேசியும் எழுதியும் வந்தவர். எளியோர் வாழ்வு உயர, குன்றக்குடித் திட்டம் கண்ட அடிகளார் பெருமைகள் பேசி முடியாது. அடிகளார் உருவாக்கிய கோட்பாடுகள் பல. **கோயிலைச் சார்ந்த குடிகள், குடிகளைச் சார்ந்த கோயில்** என்பன போன்ற தொடர்கள் இவர் எழுத்துக்கள் முழுதும் விரவிக் கிடக்கின்றன.

**தமிழ் வழிபாடு**
**தமிழ் அருச்சனை**
**தமிழ் ஆட்சி மொழி**

முதலிய தமிழியக்கச் செயற்பாடுகளால் அடிகளார் ஆற்றிய அடிப்படைப் பணிகள் அளவிடற்கரியன.

அடிகளாரை 50 ஆண்டுகளாக அறிந்த நான் அவர்தம் 50 ஆண்டு எழுத்துக்களை ஒரு சேரத் தொகுத்து நூற்றொகையாக்கி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்கியதை என் வாழ்வில் **நான் பெற்ற பெரும் பேறாகக்** கருதுகிறேன்.

அடிகளார் பூர்வாசிரமத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றவர். என் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனாருடன் நெருங்கிப் பழகிய கேண்மையர். அடிகளார் தம் வாழ்க்கை வரலாற்றில் என் தந்தையாரைப் பற்றி (தொகுதி 16) நெஞ்சம் நெகிழ எழுதிஉள்ளார்கள். அண்மையில் ஆகஸ்ட் 4ஆம் தேதி இயற்கை எய்திய என் தந்தையார் நினைவு போற்றி இக்கருத்துக் கருவூலத்தை வெளியிடுகிறேன்.

புதிய தமிழ் இலக்கியத்திற்குக் கொடையாக அடிகளார் வழங்கிய இந்நூல் வரிசை, தமிழ்ச் சிந்தனைப் போக்கின் திருப்புமுனையாக அமைந்த நூல்களுள் சிறப்பிடம் பெறும் என்பது என் நம்பிக்கை

இத்தொகை நூல் செழுமைபெறத் துணைநின்ற பதிப்புக் குழுவிற்கும் மெய்யப்பன் தமிழாய்வக அறங்காவலரான என் மகன் மீனாட்சி சோமசுந்தரம் அவர்களுக்கும் அனைத்துத் தொகுதி களையும் வலிவோடும் வனப்போடும் பொலிவோடும் அச்சிட்டு வெளிக்கொணர்ந்த மேலாளர் இரா. குருமூர்த்திக்கும் நன்றி.

# அடிகளார் அருளிய ஆவணம்

## புலவர் இரா. இளங்குமரன்

திருத்தொண்டர்க்குத் திருத்தொண்டே வீடுபேறு. அதனினும் உயரிய வீடு பேறு, அவர்கள் தொண்டு வாழ்விலே ஊடுபுகுதல் இல்லை. ஆதலால் தான், திருத்தொண்டர் புராணமியற்றிய **சேக்கிழாரடிகள்** தொண்டர் திறத்தை, "வீடும் வேண்டா விறல்" என்றார்.

தொண்டே வாழ்வாகக் கொண்ட **அப்பரடிகள்**, இறைநிலை யோடு இணைவது தொண்டே என்பதை, "தொண்டலால் துணையும் இல்லை ஐயன் ஐயாறனார்க்கே" என்றார்.

தொண்டே வீடுபேறாகவும், இறைநிலையாகவும் கொண்ட தூயர், துறவர், தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்கள்.

அவர்கள் வாழ்வுக் கொடை வானமாரி ஒப்பது. கால இட வரம்பற்றுப் பிறந்த மண்ணுக்கும் பெருநலவாழ்வு நாட்டமுடைய பெருநெறியர்க்கும் என்றும் ஆவணமாகத் திகழ்வது.

அடிகளார் வாழ்வா, உரையா, திருத்தொண்டா எல்லாம் எல்லாம் தமிழின விழிப்புக்கும், எழுச்சிக்கும், மீட்டெடுப்புக்கும் கட்டளைக் கல்லாகத் திகழ்வன.

இவற்றையெல்லாம் தொகுதி தொகுத்த பட்டயமாக்கித் தரும் **குன்றக்குடித் திருமடத்திற்கும்** வெளியிட்டுப் பேறு பெறும் **மணிவாசகர் பதிப்பகத்திற்கும்** தமிழுலகு கடப்பாடும் நன்றியும் உடையது.

இத்தொகுதியில் அடிகளார் எழுத்து உண்டு. அடிகளாரைப் பற்றிய அறிஞர் எழுத்துகளும் உண்டு.

அடிகளாரைப் பற்றிய எழுத்திலும், அடிகளார் தம்மைப் பற்றித் தாமே எழுதிய தங்குறிப்பும் உண்டு; பிறர் எழுதியதும் உண்டு.

உரை எழுத்தும் உண்டு; எழுத்து உரையும் உண்டு.

அடிகள் ஒருவர் தாமா இதன்கண் உள்ளார்? அவரால் சுட்டப் படுவார் பன்னூற்றுவர் உளர். இது **திரு.வி.க.** எழுதிய வாழ்க்கைக் குறிப்புப் போல் இந்நூற்றாண்டில் கிடைத்த வாழ்க்கைக் குறிப்பு.

அடிகளாரைப் புரிந்து கொள்ள வேண்டுமா? 'நடந்ததும் நடக்க வேண்டியதும்' என்னும் முதற்கட்டுரை போதும்.

அடிகளார் நிலை மணிவாசகர் நிலையோடு ஒன்றி அடியிடுவதை "என்னால் அறியாப் பதந் தந்தாய்" என்னும் ஆனந்த மாலைப் பாடலைக் காட்டி,

அப் பாடற் கருத்து "**நம்முடைய வாழ்க்கைக்கு நூற்றுக்கு நூறு பொருந்தும்**" என்னும் பொன்னுரை, பொன்னுரையாணி யேயாம். அடிகளோடு ஒன்றியவர் உடனாகியவர் அணுக்கராக

இருந்தவர் அடிமைத்திறம் பூண்டவர் உன்ன உன்ன இப்பாட லொடும் அடிகளாரொடும் ஒன்றித் திளைப்பர் என்பது உறுதியாம்.

இத்தொகுதியில் மேலும் நான்கு பகுதிகளும் பின் இணைப்பும் உள.

2. அடிகளார் நினைவலைகள்
3. மண்ணும் மனிதர்களும்
4. அடிகளார் உவமைநயம்
5. எங்கே போகிறோம்?

என்பவை அப்பகுதிகள் (17-442). பின்னிணைப் பாவது (443-545) "அடிகளார் நூல்களுக்கு அறிஞர்கள் வழங்கிய உரைகள்" என்பது.

"சமய அடிப்படையில் மனித குலம் ஒருமைப் பாட்டைக் காண்பதும், எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கக் கூடிய பொதுமை நலம் மிக்க சமுதாயத்தைக் காண்பதுமே நமது விருப்பம்" (26)

"தமிழகத் திருமடங்கள் இணைந்து செயல்பட வேண்டும்" (27)

"பிறப்பில் வேறுபாடு இன்றி அனைவர்க்கும் பயிற்சி கொடுத்து அனைவரையும் அர்ச்சக ராக்குவது" (28-29) - என்பவை நடந்ததும் நடக்க வேண்டியதுமாகிய இரண்டாம் கட்டுரையில் இடம் பெற்றவை. இவை அன்றையிலும் இன்றை மிகத் தேவையானவை.

**"தெய்வீகப் பேரவை**யில் தமிழர் மடாதிபதிகள் பலர் இருக்கிறீர்கள். நாங்கள் பார்ப்பனர் ஓரிருவர் தாம் இருக்கிறோம். அதனால் உங்கள் கருத்து அரசாங்கத்தின் கருத்தாகிவிடுமே" என்று, பிறப்பால் வேறுபாடு காட்டித் தமிழரைப் பிரித்த கூட்டம், எந்நாளும் தமிழரைப் பிரித்து வைக்கவே எண்ணிப் பேரவையில் இருந்து ஒதுங்கிக் கொண்ட வரலாறு, "அவர்கள் என்றும் அவர்கள் தாம்"; சாதிச் சங்கமாக வைத்துக் கொண்டு சமய உலாக் கொள்ளும் சமர்த்தர்கள்!" என்பது வெளிப்படை. அதுமட்டுமன்று: "அரசியலில் கால் வைக்க மாட்டோம்" என்று சொல்லிக் கொண்டே உள்ளரசியல் நடத்துபவர் என்பதும் ஆளுநர் அறிக்கையால் விளக்கமாகும். என்ன பட்டும் என்ன சொல்லியும் என்ன? தமிழர் விழிப்புறத் தட்டி எழுப்பும் தடியாக என்று தான் அமையுமோ என்பது இன்றும் விளக்க மாகாமலே உள்ளது (31-32).

"குன்றக்குடியைப் போல நூற்றுக் கணக்கான கிராமங்களைத் தன்னிறைவுடைய கிராமங்களாக நாடு முழுதும் காண வேண்டும். நாட்டை நலிவுறச் செய்யும் வறுமையை எதிர்த்துப் போராடுவதே இனி நமது வாழ்நாட்பணி! சாதி மதச் சண்டைகளால் சமூக உறவுகள் பாதிக்கப்பட்டுக் கிராமங்கள் ஒளி இழந்து போகாமல் பாதுகாத்து வளர்ப்பதே நம்பணி!" என்னும் அடிகளார் குறிக்கோள் வென்றெடுக்கக் கடனாற்றல் வழிமுறையர்க்கு வாய்க்கும் பேறல்லவா (34-35).

**விபுலானந்த அடிகள்** யாழ்நூல் கொடையைப் பலரும் அறிவர். ஆனால் அவர் சேரிக்குச் சென்று கல்வித் தொண்டு செய்ததும், தீண்டாமை விலக்குக்குப் பாடுபட்டதும் தமிழ்த் துறவியர் நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டியவை அல்லவா! அடிகள் எடுத்துத் தந்த

தீண்டாமை விலக்குக் கொள்கை இன்றளவும் நமது வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்குகின்றது என்கிறாரே 'குன்றை அடிகளார்' (55, 73).

சொல்லின் செல்வராகத் திகழ்ந்த **சேதுப்பிள்ளை** தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குத் தாமாக உதவும் கொடையாளராகவும் திகழ்ந்தார் என்பதைச் சுட்டும் அடிகள் வரலாறு, உருக வைக்கின்றது. தமிழ்ப் புலமையர் பண்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது காட்டும் பட்டயமும் ஆகின்றது (71, 145).

'அடிகளார் நினைவலை'கள் சார்ந்தவை இவை. 'மண்ணும் மனிதர்களும்' என்னும் மூன்றாம் பகுதி விரிவு மிக்கது (63-231). இன்னும் விரிவாக வந்திருப்பினும் பேறேயாம் என்று வேட்கை கொள்ள வைப்பது. அடிகளார் தம் வரலாற்றைத் தாமே எழுதி வைத்த ஆவணம் அன்னது.

கருவறையில் செத்து நாறிக் கிடந்த நாயை அகற்றவும், கோயிலைக் கழுவித் தூய்மைப்படுத்தவும் திருப்பணி செய்யவும் தொண்டர்கள் வரிந்துகட்டி நின்று கடனாற்றினர். அப்பணி முடிந்ததும், பூசகர் புகுந்து உரிமை கொண்டாடினார் என்பது தொடரும் வரலாறு தானே (77).

திருமடங்களைப் பற்றிப் பல குறிப்புகளை வழங்குகிறார் அடிகளார் :

"துறவிகளிடத்தில் கூட இணக்கம் - ஒற்றுமை - காண்பதரிது"

"ஒருதுறவி போனவழியில் இன்னொரு துறவி போகமாட்டார்" (106)

"திருமடங்களுக்குள்ளேயும் துறவிகளுக்கிடையேயும் வளத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் எண்ணப்படு கின்றன" (131)

- இவை ஆழ்ந்த கவலையில் வெளிப்பட்டவை.

"தமிழ்நாட்டு மடாதிபதிகளில் கப்பல் வழியாகவும் விமானம் வழியாகவும் உலக நாடுகளைச் சுற்றி வந்த மடாதிபதி - ஆதீனகர்த்தர் நாம் ஒருவர் தான்!" - (199)

"தமிழ்நாட்டு மடங்கள் வரலாற்றில் இது (தாம் மேலவை உறுப்பினராயது) ஒரு திருப்பு மையம்" (206)

- இவை காவிக்குள் இருந்த கவின்புரட்சி.

நம்பும் மதம் (ஆத்திகம்) நம்பாமதத்தொடு (நாத்திகத் தொடு) இணைந்த வரலாறு உண்டா? இல்லை! நம்பாமதந்தான் நம்பும் மதத்தை மதித்துக் கூடியது உண்டா? அதுவும் இல்லை. ஆனால், இரண்டும் (அடிகளாரும் பெரியாரும்) இணைந்த பேறு, கூடு துறை போலும் பாடு துறையல்லவா!

பெரியார், "எனக்கும் கடவுளுக்கும் என்ன விரோதம்? நான் பார்த்தது கூட இல்லை. எனக்குத் தேவை மனிதன் மீதுள்ள இழிவு அகற்றப்பட வேண்டும் என்பதே."

நம்முடைய நாட்டில் இந்த இழிவை மாற்ற மத உலகத்திலும் சிலர் முயற்சி செய்திருக்கிறார்கள், ஆனால், அவர்கள் கண்டபயன் தோல்வியே! நீங்கள் முயற்சி செய்கிறீர்கள் பயன் தருமா? சந்தேகந்தான்" என்றார்.

"இருவருமாகச் சேர்ந்து உழைப்போம்" என்றோம், நாம், பெரியார் சிரித்துக்கொண்டே 'எனக்கு ஆட்சேபணை இல்லை. உங்கள் சம்பிரதாயங்கள் இடம் தருமா?' என்றார்.

நாம், 'முயற்சி செய்யலாம்; சம்பிரதாயங்கள் என்பவை காலந்தோறும் மாறுபவை தானே!' என்றோம்.

"சரிபார்ப்போம் முயற்சி செய்வோம்" என்று இருவரும் ஒரே நேரத்தில் கூற, பேச்சு முடிந்தது. (184-185)

- இந்நிகழ்ச்சி குன்றக்குடித் திருமடத்தில் நிகழ்ந்தது.

மதுரையில் டி.கே. சண்முகம் உடன்பிறந்தார் நடித்த **இராசராச சோழன்** நாடகம். அதில், அடிகளாரும் பெரியாரும் கலந்து கொண்டனர். நடிப்புத் திறனைப் பாராட்டிப் பேசிய பெரியார் "இவ்வளவு அற்புதமான கலைத்திறன், வௌவால்கள் அடையும் கோயிலைப் பற்றியதாக அமைந்துவிட்டமையைக் கண்டு வருந்துவதாகவும்" கூறினார். அடிகளார் தம் வாழ்த்துரையில், பெரியாரும் பெரியாரைச் சார்ந்தவர்களும் கோயிலுக்குள் வராததால் தான் வௌவால்கள் குடிபுகுந்து விட்டன. பெரியார் திருக்கோயிலுக்குள் வந்து விட்டால் வௌவால்கள் வெளியேறி விடும்" என்றார்.

இன்றேனும் இதனைப் போற்றியாக வேண்டிய கட்டாய ஆணைமொழி இது. நம் இசைக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக் கலை, வரலாற்றுக் கலை இன்னபலவற்றின் வைப்பகம் திருக்கோயில்களே! பாட்டன் கட்டிய வீட்டில் பாம்பு புகுந்து விட்டதென்றால் அதனை அகற்ற வேண்டுமே ஒழிய, வீட்டை விட்டு அகன்று விடுவது ஆக்கச் செயல் ஆகாதே!

**மண்டைக் காட்டில்** நிகழ்ந்த சாதி சமயச் சிக்கல் தீர்வில் அடிகளார் முழுமையாகத் தம்மை ஒப்படைத்துக் கொண்ட உறுதியும் ஊற்றமும் அஞ்சாமையும் ஒரு போர்ப்படைத் தளபதிக்கு உரியவையாம். (215)

அடிகளார் வழங்கிய உவமைகளை நூற்றுக்கு மேல் தொகுத்து வைக்கப்பட்டது அடிகளார் உவமை நயம் என்பது. முதல் உவமை **'செடியும் - ஆன்மாவும்'**, இது முதல் உவமையே! ஏன்? "முதல் இலார்க்கு ஊதியம் இல்லை" அல்லவா!

தொட்டி எவ்வளவு தான் அழகுடையதாக இருந்தாலும், அதில் நடப்பெறுகிற செடி சிறந்ததாக உயிரோட்டமுடையதாக இருந்தால் தான் உற்ற பயன் கிடைக்கும். அதுபோல், உடல் எவ்வளவுதான் வலிவும் பொலிவும் உடையதாக இருந்தாலும், உள்ளிருக்கும் ஆன்மா சிறந்ததாக இருந்தால்தான் சிறப்பு. செடியைப் பற்றிக் கவலைப்படாமல் தொட்டியைப் பாதுகாப்பது போல் பலர் ஆன்மாவைப் பற்றிக் கவலைப்படாமல் உடம்பைப் பேணிப் பாதுகாக்கிறார்கள். பூஞ்செடி இல்லையானால் தொட்டிக்கு என்ன மதிப்பு? பூஞ்செடிக்காகத்தான்

தொட்டி என்பது போல ஆன்மாவுக்காகத் தானே உடல்? ஆன்மா இல்லாத உடம்பு பூஞ்செடி இல்லாத தொட்டியைப் போன்றது தான்" என்பது அது. (231)

"ஆடுகளை மேய்ப்பவன் அவற்றை நாய், நரிகள் தின்னவிட்டு விட்டு ஆட்டிடையன் மட்டும் பத்திரமாகத் திரும்பி வந்தால், அவனைப் பற்றி நாம் என்ன நினைப்போம்? அதுபோல மக்கட் சமுதாயத்தின் அருள் வேட்கையைத் தூண்டி, அவர்களது ஆன்மாவை வளர்க்க வேண்டிய ஆதீன கர்த்தர்கள், சமுதாயத்தைப் பிற சமய நெறிகளுக்கும் வறுமைக்கும் ஆளாகும்படி விட்டு விட்டு, அவர்கள் மட்டும் வாழ்ந்தால் அதை என்ன என்று கூறுவது?" இது "ஆடு மேய்ப்போனும் ஆதீன கர்த்தரும்" என்னும் உவமை (252) மதமாற்ற நிலையைச் சிந்திக்க வைக்கும் செய்தி அல்லவா இது.

'எங்கே போகிறோம்' என்னும் பகுதி முற்றிலும் **வானொலிப் பொழிவு.** அடிகளார், மதுரை வானொலி வழியாக உலகுக்கு வழங்கிய உய்வு நெறி; பன்னிரு பொழிவுகள். அவற்றுள் நிறைவுப் பொழிவு (12) எங்கே போக வேண்டும்? என்பது. 15-8-1994இல் இருந்து 29-10-94 வரை இடை இடையே பொழியப் பட்டவை. தலைப்பின் வினாவும், முடிவின் விடையும் ஒத்திட்டு நோக்கத் தக்கன. உள்ளே உள்ள பொழிவுத் தலைப்புகளை நோக்கிய அளவாலேயே அடிகளார் கொண்ட குமுகாய மேம்பாட்டுக் காதலும், தொண்டின் உறைப்பும் தெள்ளிதிற் புலப்படுத்தும்.

கல்வி, உழைப்பு, வளர்ச்சி, பொருளாதாரம், வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு, சமுதாயம், இலக்கியம், ஆன்மீகம் என்பவை முகப்புக்கும் முடிவுக்கும் இடை நின்ற சிந்தனைகள். குன்றக்குடி **'மாதிரி'** ஊராக இந்திய நாட்டில் திகழ விதைக்கப்பட்ட வித்துகள் இவை எனல் சாலும்!

அடிகளார் எழுத்தைப் பற்றிய அறிஞர் எழுத்துகள் இணைப்பாக உள்ளன. இடம்பெற்ற இருபத்தைந்து திறனாய்வுரை களுள் 'மண்ணும் மனிதர்களும்' பற்றியது இருபத்தைந்தாம் இறுதியது. அதில் அற்றை 'மூலவர்' அடிகளைப் பற்றி இற்றை 'மூலவர்' அடிகளார் உரை உயரிய மதிப்பீடாகத் திகழ்கின்றது. அதன் தொடக்கமே, "**ஒரு வரலாறு தம் வரலாற்றை எழுதியுள்ளது. ஒரு காப்பியம் தாமே தம்மைப் பற்றி அடிமுதல் முடிவரை அளந்து பார்த்திருக்கின்றது.** இஃதொரு சுயவிளம்பரம் அன்று; தற்பெருமை அளிக்கின்ற தம் முகவரியும் அன்று; எதிர்காலம் எந்தச் சார்புக்குள்ளாவது சிக்கி மிதமிஞ்சிய அன்புணர்வில் மிகைப்படுத்தி எழுதிவிடக் கூடாது என்ற கவன உணர்வு காரணமாக இருக்கலாம்" எனத் திகழ்கின்றது. வரலாற்றுப் பிழிவு கமழ்ந்து "இலட்சியப் பயணம் என்றும் தொடரும்" என்று நிறைவுறுகின்றது (539) நூல் நிறைவில் வாழ்த்தும் போற்றியுமாய், பாட்டும் உரையும் சிறக்கின்றன. (545)

உழவர் கை **'திருக் கை'** எனப்படும்; திருக்கை வழக்கம் கம்பர் இயற்றியதொரு நூல். திருக் கை என்பது ஏடு எழுதும் கை. இதனைத் திருக்கைக் கோட்டி என்னும் கல்வெட்டு வழக்கால் அறியலாம்.

அடிகளார், திருமடத்துக் கொடையைத் திருக்கை வழக்கம் என வழங்குதலைச் சுட்டுகிறார். (128)

**பரிகலம்** என்பது துறவோர் உண்கலம். உணவு ஆக்கும் அட்டிற் சாலைக்கும் அப்பெயர் உண்மையை அடிகளார் சுட்டுகிறார் (94).

தரும சங்கடம் என வழங்கும் வழக்கை **அறச் சங்கடம்** எனப்பயில வழங்குகிறார் அடிகள் (110, 142, 163).

'சோரம் போகும் பழக்கம் நமக்கு இல்லை என்பதிலும், (105)' 'பீடன்று' என்பது இல்வாழ்க்கைக்கு மட்டுமன்று துறவறத்திற்கும் பொருந்தும் என்பதிலும் (159) அடிகளார் நனி நாகரிக்கும் சொற்செட்டும் புலப்படுகின்றன.

**'சூடு இருக்கிறதா?'** என்பதும் (78) **'பழுக்கலாமா?'** (95) என்பதும் சுவையான குறிப்பு மொழிகள்.

இக்கால உழைப்பு விரும்பா இளைஞரை "முறுக்கை ஊறவைத்துச் சாப்பிடும் இளைஞர்கள்" என்பதும், (100) இந்தத் தலைமுறையில் நாம் செய்திருப்பதெல்லாம் கையூட்டைத் தேசிய மயமாக்கி இருப்பது தான் (156) என்பதும் அவலம் இழையோடிய எள்ளல் ஆகும்.

கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்ட துண்டோ? என்பதும் (127) வாழைக் காயைக் கனியவைக்கும் அறை என்பதும் (101) ஆகிய பாடலடியையும் பழமொழியையும் தமக்குத்தாமே சூட்டிக் கொள்ளும் அங்கதத் தனித்தன்மையது.

பெருந்தக்க காவியுடை சிறுமைக்கு ஆட்படுத்தப்படும் நினைவு, அடிகளாரை எங்கெங்கோ உள்ள காட்சிகளுக்கு இழுத்துச் செல்கின்றது (94).

சலுகை, மேலும் சலுகை எதிர்பார்ப்பை ஊக்கி, உழையாமையை உருவாக்குமே ஒழிய உழைப்பை பாக்காது என்னும் உண்மையை அடிகளார் உணர்ந்தது போல் சலுகை வேட்கையரும், சலுகை ஊக்கியமும் உணர்ந்து கடைப்பிடிக்கும் நாளே தன்மான நாள் என்று நினைக்கத் தூண்டுகிறது. (181)

செம்மறியாடு செய்யும் நலத்தை அடிகளார் உரைப்பது கூரிய நோக்கின் விளைவு (360)

கொரட்டி என்பதோர் ஊர். அவ்வூரில் தீத்திரு விளையாடல் தொடர்ந்து நிகழ்ந்தது. தீ வைத்தவரைக் கண்டு பிடிக்க ஒருவழி கண்டனர். அதனைக் **'கொரட்டி வழி'** என்று பெயர் சூட்டி அழைக்கலாம் போலும் (218)

திருமுறைக் கல்வியை மாணவரிடம் பரப்ப அடிகளார் கந்தசாமித் தம்பிரானாக இருந்த காலத்து மேற்கொண்ட முயற்சி (140) இந்நாளில் மேற்கொள்ளப்படுதல் கட்டாயத் தேவை போலுள்ளது. திருமடங்களும் திருத் தொண்டர்களும் நோக்கு வைத்தல் ஆக்கம் பெருக்கும்.

அடிகளாரொடு அளவளாவி அணுக்கராக இருந்தவர்க் கெல்லாம் அடிகளார் திருவுருவும் திருவாய்மொழியும் கண்டும் கேட்டும் திளைக்கின்ற பேறு அடிகளார் வரிசை நூல்களைக் கற்பதால் ஏற்படுதல் ஒருதலை. இதனை ஓதுங்கால் யாம் பெற்ற பேற்றைக் கற்பார் தாமும் பெறுவாராக.

அடிகளார் பேரன்பில்,
***இரா. இளங்குமரன்.***



தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

# முன்னுரை

## தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

அருள்நெறித் தந்தை குரு மகாசந்நிதானம் நூல் தொகுதிகளில் - சமுதாயச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நூல்களின் தொகுப்பில் - இத்தொகுதி சிறப்புமிக்கதாய் விளங்குகின்றது. சமயத்தைப் பற்றிய புதிய பார்வை இன்றையக் காலத்தின் தேவையாக உள்ளது. இன்றையச் சமய உலகம் தம் சிக்கல்களை - பிரச்சினைகளைத் தாமே தீர்வு காண்பதை விட்டு விட்டு அரசிடம் ஒப்படைத்துவிட்டுத் தாம் விலகிக் கொண்டுள்ளது. தாம் ஆற்ற வேண்டிய பணியை அரசிடம் ஒப்படைத்துள்ளது. கள்வர்கள் தோன்றிய சமூகத்தில் சட்டங்களும் சிறைச்சாலைகளும் தவிர்க்க முடியாதவை. சிறைச்சாலைகள் தேவையில்லாத சமூகத்தை உருவாக்குவதுதான் சமய உலகத்தின் கடப்பாடு. கள்வர்கள் தோன்றாத சமூகத்தை உருவாக்குவதுதான் சமய உலகத்தின் கடப்பாடு; நோக்கம். சமநிலைச் சமுதாயத்தைச் சமய உலகத்தின் மூலம் படைக்க வேண்டும் என்பதுதான் அருள்நெறித் தந்தையின் ஆழமான உட்கிடக்கை; கொள்கை; இலட்சியம். அதை இத்தொகுப்பு நிறைவேற்றித் தரும் என்று நம்புகின்றோம். இந்த நூலில் வளர்ந்து வரும் அறிவுலகத்துக்கு ஏற்புடையதாக சடங்குகளே சமயம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற மக்களைச் சமயம் ஒரு வாழ்வியற்கலை என்று அருள்நெறித் தந்தை நெறிப்படுத்துகின்றார்கள். "அறியாமை என்பது ஒன்றும் தெரியாமை அன்று, ஒன்றை முறை பிறழ அறிந்திருப்பதே அறியாமை. அதாவது நன்மையைத் தீமை என்றும், தீமையை நன்மை என்றும், உண்மையைப் பொய்யாகவும், பொய்யை உண்மையாகவும், இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவும், நியாயத்தை அநியாயமாகவும், அநியாயத்தை நியாயமாகவும், நீதியை அநீதியாகவும், அநீதியை நீதியாகவும், நிலையானவற்றை நிலையில்லாதனவாகவும், நிலையில்லாத வற்றை நிலையானவையாகவும் கருதுவது. இன்றையச் சூழ்நிலையில் அறியாமை அறிவு என்று கருதப்படுகின்றது" என்ற கருத்து ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும். ஆணவத்தின் இயல்பால் அல்லல்படும் உயிர்க்குலம் தழைக்கத் தீர்வு காண வேண்டும். நான் யார்? என் உள்ளமார்? ஞானங்கள் யார்? என்னை யாரறிவார்? என்ற பாடல் முழுவதுமாகச் சிந்திக்கப்படுகிறது. "நான் யார்? நான் என்பது அஞ்சலக முகவரி அன்று, நான் என்பது வாழ்க்கை வசதிகளும் பதவி அடையாளங்களும் அன்று. நான் என்பது நாமாக மாறவேண்டும். அறியாமை களைந்து பேரறிவிடம் தம்மை இணைத்துக் கொள்வது வழிபாட்டின் பயனாகும். வழிபாடு இறைவனுக் காகவா? உலக உயிர்க்குலம் தம்மைப் போற்றித் துதிக்க வேண்டும் என்று இறைவன் எதிர்பார்க்கின்றாரா? வழிபாட்டின் பயன் உயிர்க்குலம் தம்மை ஈடேற்றிக் கொள்ளவே" என்ற கருத்து மிகவும் ஏற்புடையதாகும்.

கு XVI 2

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்னும் சிலப்பதிகார நெறி ஏற்புடையதே. ஊழ்வினை என்பது செய்த வினைகளின் பயன்தானே! நெல்லை விதைத்தால் நெல்லைத்தான் அறுக்க முடியும். எதை விதைக்கின்றோமோ அதைத்தான் அறுவடை செய்கின்றோம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்கிறது புறநானூறு. அதேபொழுது ஊழ்வினையை மாற்ற முடியாது என்ற கருத்தினை மறுத்து மகாசந்நிதானம் தெளிவுபடுத்துகின்றார்கள். "ஊழ் மாற்ற முடியாதது என்கின்றனர். கீழே விழுந்தவன் எழுந்திருக்க முடியாதா? எழுந்திருக்கக் கூடாதா? இது என்ன அநியாயம்? கீழே விழுந்தவன் எழுந்திருக்க முடியும்; எழுந்திருக்க வேண்டும். இதுதான் வாழ்க்கையின் குறிக்கோள்!" என்று திட்டவட்டமாக அறிவிக்கின்றார்கள்.

இடுகாட்டில் எரியும் பிணங்கள்!
நடுவீட்டில் நடை பிணங்கள்!

அன்பில்லாத வாழ்க்கை வீட்டுக்குள் மயான அமைதியை வரவழைக்கும் அல்லது போர்க்களத்தை உருவாக்கும்! இன்று பகுத்தறிவுச் செயற்பாடே இல்லை! தொகுப்பறிவுதான் இருக்கிறது. வேண்டும் என்று பழகும் காலத்தில் தமக்குச் சாதகமான நன்மைகளையே தொகுத்துப் பார்க்கிறார்கள். வெறுப்பு வந்தவுடன் நன்மைகளை எல்லாம் மறந்து விட்டு தீமைகளையே - தவறுகளையே தொகுத்துப் பழி சுமத்துகிறார்கள். இன்று சமயங்கள் நிறுவனங்களாக மாறிய பிறகு, சமய நெறியிலிருந்து நெடுந்தொலைவு விலகிச் சென்ற பிறகு தம் தகுதியை இழந்துவிட்டன. அதனால் சமய அடிப்படையில் போர்கள் கூட நடந்தன; நடந்து கொண்டிருக்கின்றன," என்ற கருத்து இன்றும் நடைமுறை உண்மையாகச் சமூகத்தின் போக்கில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

பொங்கல் சிந்தனையில் பொங்கல் நாளன்று "பழைய வீடு புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. பழைய குப்பைகள் அகற்றப் பட்டுப் பழுது பார்த்துப் புதுவண்ணம் பூசிப் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. அதைப் போல இதயத்தில் இடம் பெற்ற மாசுகள் அகற்றப்பட்டு நன்மைகள் எனும் புதுமைகள் சேர வேண்டும்.

'முன்னைப் பழமைக்கும் பழமையாய்
பின்னைப் புதுமைக்கும் போர்த்தும்அப் பெற்றியதாய்'

என்று சொன்னால் போதுமா? எப்பொழுது அதை நிறைவேற்றுவது?" என்ற சிந்தனையில் ஒன்றும் செயல்படுத்த முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது!

"சமூக நோக்கில் அறிவியல்" என்ற கட்டுரையில் 'நிலமகள் திருமேனியில் பசுமை ஆடை போர்த்தவேண்டும்; நிலமகள் முகத்தில் அழுக்குகளை, கழிவுப் பொருள்களை இட்டு அவளை அவலப்படுத்தாதீர்கள்! எல்லாக் கழிவுகளையும் சோம்பல் பாராமல்

அவள் மடியில் வைத்துக் கட்டுங்கள்! அதாவது நிலத்தில் குழிவெட்டிக் கழிவுப் பொருள்களை அந்தக் குழியில் போட்டு மூடுங்கள்! அவள் அவற்றை உரமாக்கிப் பொன்மதிப்பில் உங்களுக்குத் தந்து மகிழ்வாள்," என்ற சிந்தனை மிகத் தேவையானது. 'தண்ணீர் பட்ட பாடு' என்று பணத்தைத் தண்ணீரைப் போல் செலவழிக்கின்றார்கள் என்றும் கூறுவார்கள். இதுமிகத் தவறு. தண்ணீரைச் சேமித்துச் செலவழிக்கத் தெரியாததால் தான் கர்நாடகத்தோடு சண்டைபோட வேண்டிய நிலை! தண்ணீரை, காற்றைப் பற்றி விழிப்புணர்வு மிக்க கருத்துக்கள் இன்றையக் காலத்தில் அவசியமான கருத்துக்கள். 'வாழ்க்கை நெறி - கார்ல் மார்க்ஸ் சிந்தனைகள்' என்ற கட்டுரையில்

'இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்க! இதன் இயல்புணர்ந் தோரே!'

என்ற கவிதைக்குத் தரப்படும் 'இந்த உலகம் துன்பம் நிறைந்ததுதான்! துன்பத்தை விட்டு விட்டு இன்பத்தை மட்டும் உற்றுநோக்கு!' என்ற பழைய விளக்கத்தை மறுதலித்து விட்டு, 'துன்பம் நிறைந்த உலகத்தை இன்பமாக ஆக்கிக் காட்டு!' என்று புதிய விளக்கத்தை அளித்துள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

'உழைப்பின் பெருமையை, சிறப்பை இறைவனே போற்றினான்' என்று கார்ல் மார்க்ஸ் சிந்தனையோடு நமது ஆன்மிகச் சிந்தனையையும் இணைத்துக் கூறியிருப்பது பெரும் பாராட்டுக்குரியது. இறைவன் கொற்றாளாய் மண் சுமந்தான். அவன் பொன்மேனி புண் சுமந்தது. யாருக்குக் கூலியாளாய் இறைவன் தன்னை அமர்த்திக் கொள்கின்றான்? ஓர் ஏழை வந்திக் கிழவிக்குத் தன்னைக் கூலியாளாக அமர்த்திக் கொள்கின்றான். பெறுகின்ற கூலியோ வெறும் உதிர்ந்த பிட்டு! "உழைப்புக்கு உணவு" என்ற தத்துவம் அறிமுகப்படுத்தப் படுகின்றது. பெற்ற கூலிக்கு ஏற்ற நியாயமான உழைப்பினை இறைவன் தரவில்லை. அதற்காகத் தண்டனையும் பெற்றுக் கொள்கின்றான். இது எதை நமக்குக் காட்டுகிறது? பெற்ற கூலிக்கு ஏற்ற நியாயமான உழைப்பினை யார் தர மறுத்தாலும் தண்டிக்கப் படுவார்கள். அவன் ஆண்டவனாய் இருந்தாலும் தண்டிக்கப்படுவான் என்ற அற்புதக் கருத்தைத்தான் இந்தக் திருக்கூத்து நமக்கு உணர்த்துகின்றது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் பொதுவுடைமைச் சிந்தனையே நம் ஆன்மிக உலகம் என்பதைச் சிறப்பாக, புதிய பார்வையில் கூறி இருப்பது பாராட்டுக்குரியது.

அருள்நெறித் தந்தையின் கவிதைகள்: ஞானத் தந்தைக்கு உணர்வுகள் எழும்போது எல்லாம் தமிழ்த்தாய் அவர்களின் சிந்தனையிலிருந்து எழுதுகோல் வழியே நர்த்தனம் ஆடுவாள்! கவிதை ஒரு பேசும் ஓவியம் என்பார்கள். அந்த இலக்கணத்திற்கு

ஏற்புடையதாகக் கவிதை மலர்ந்து மணம் பரப்புகின்றது! சட்டமேலவை உறுப்பினர் பொறுப்பினை ஏற்று முத்தமிழறிஞர் கலைஞருக்கு நன்றி தெரிவிக்கும் கவிதை ஒரு வரலாற்றுப் பெட்டகம்! தம்முடைய 'நெஞ்சுக்கு நீதி' வரலாற்று நூலில் முத்தமிழறிஞர் கலைஞர், அடிகள் பெருமான் கவிதையைப் பொன்னெழுத்துக்களில் பொறித்துப் போற்றியிருக்கின்றார்! அருள்நெறித் தந்தையின் மணிமண்டபத் திறப்பு விழாவில்கூட இக்கவிதையை முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது. "பரமகுரு வாழ்க!" என்ற கவிதை ஆதீனக் கவிஞர் மரு. பரமகுரு அவர்களின் உண்மையான தொண்டிற்கு, உறுதியான உழைப்பிற்கு, சலனப்படாத நேர்மைக்கு, சஞ்சலமில்லாத வாய்மைக்கு அளிக்கப்பட்ட நற்சான்று! அணுக்கையானவர்களிடம் விரைவில் விடைபெறப் போகின்றோம் என்ற முன்னறிவிப்பு! தம்மோடு தோளோடு தோள் கொடுத்துத் தம் பணியை நிறைவாய் பரமகுரு செய்திருக்கின்றார் என்ற நிறைவு! தமிழய்யா கதிரேசனைப் பாராட்டிய வரிகள் அவரின் உண்மைத் தமிழ்த் தொண்டிற்கு அளிக்கப்பட்ட பாராட்டு! நல்ல தோழமைக்கு இலக்கணமாய் விளங்கியது கபிலர் - பாரி நட்பாகும். முந்தி விடைபெற்றுவிட்ட பாரியை நோக்கி 'என்னைத் தனியே விட்டுச் சென்றாயே!' என்று கபிலர், மண்ணுலகில் பாரி விட்டுச் சென்ற கடமையை நிறைவேற்றி விட்டு விரைவில் செல்வார். அதுபோல் நம் அடிகள் பெருமான் தவத்திரு சுந்தர சுவாமிகளின் பிரிவின்போது பாடிய இரங்கற்பாவில் 'விரைவில் உனைத் தொடர்ந்து வருகின்றோம்!' என்று கூறிய வரிகளே வாழ்வில் உண்மையாகி விட்டது. தவத்திரு சுந்தர சுவாமிகள் மறைந்த சிறிது காலத்திலேயே நம் தவத் தந்தையும் மறைந்துவிட்டார்கள்! அடிகள் பெருமானின் கவிதைகள் சத்தியம் தாங்கிய கவிமாலை என்பதே உண்மையாகும்.

'எங்கே போகிறோம்?' என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் மதுரை வானொலி நிலையத்தில் ஒலிபரப்பான பல்வேறு துறைகளின் வளர்ச்சி, இலக்கியம், ஆன்மிகம், சமூக மேம்பாடு பற்றிய அற்புதச் சிந்தனைகளை உள்ளடக்கியதாகும். 'எங்கே போகிறோம்?' என்று எழுப்பப்படுகின்ற வினாவே அற்புத வினா! இது நாட்டை நோக்கி, சமூகத்தை நோக்கிக் கேட்கின்ற வினா! மனச்சாட்சியோடு நடுநிலையோடு கேட்கின்ற வினா! 'கால்நடை என்றால் என்ன?' என்று அருகிலிருப்பவரைக் கேட்கிறார். காலால் நடக்கின்ற ஆடு, மாடுகள் என்று அவர் பதிலளிக்க, 'மனிதனும் காலால் தானே நடக்கின்றான்; அவனுக்கு இந்தக் கால்நடை மருத்துவமனை பயன்படுமா?' என்று கேட்ட கேள்வியின் சிந்தனைக் கிளர்ச்சி, சிந்திக்க மறுக்கும் சமூகத்திற்குக் கொடுக்கின்ற சவுக்கடி! 'விடுதலை விழா என்றைக்கு வீட்டு விழாவாகக் கொண்டாடப்படும்?' என்று கேட்கும் கேள்வியில் 'வழக்கமான சடங்குகளின் விழாவாக - தீபாவளி, பொங்கல் திருநாள்

போன்று அமைந்திடாமல் கடைக்கோடி மனிதனும் ஏற்றம் பெறும் உண்மையான விடுதலைப் பெருவிழா - மக்களின் விழாவாக மலர வேண்டும்' என்ற சிந்தனை, உண்மையான மக்களாட்சித் தத்துவத்தை நடைமுறைப் படுத்துமாறு கூறுகின்றது. அயோத்தி மக்களுக்கு இருக்கும் நாட்டு உணர்வு இராவணன் ஆண்ட இலங்கை மக்களுக்கு இல்லாது போனது ஏன்? ஒடுக்கும் தலைமையின் கீழ்ப் பல்லாண்டு காலம் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களின் மனோபாவம் அது! இன்று நமது மக்களிடம் நாட்டுணர்வு மங்கிக் கிடக்கின்றதே! இன்று ஒடுக்கும் தலைமை இல்லை. தன்னலம் எனும் அரக்கன் நம் அனைவரையும் ஆட்சி செய்கின்றான். தன்னல அரக்கன் மாய்ந்தால்தான் நாட்டு நலம் என்ற அற்புத தீபஒளி மலரும்.

'அறிவியல் இல்லாத ஆன்மீகம் குருட்டுத்தனம்' It generates superstition என்று குறிப்பிடுவார்கள். ஆன்மிகம் இல்லாத அறிவியல் மூடத்தனமானது என்று குறிப்பிடுவார்கள். எந்நேரமும் மூன்றாம் உலகப்போரைத் தோற்றுவித்துவிடும். அறிவியலும் ஆன்மிகமும் இணைந்து செயல்படவேண்டும் என்று தம் அருளியல் வாழ்வோடு சமூக அறிவியல் தொண்டையும் இணைத்து முன்மாதிரியாக விளங்கினார்கள். கல்வி உலகம் படைப்புக் கல்வி உலகமாக மாறவேண்டும் என்ற சிந்தனை இன்றையக் காலத்தின் கட்டாயம். சோவியத் சிந்தனையாளன் சுகோம்லின்ஸ்கி, 'குழந்தைகளுக்கு இதயத்தைக் கொடுங்கள்' என்றான்! பனித்துளி சிதறாமல் ரோஜா இதழைப் பறிப்பதுபோல் குழந்தைகளுக்குக் கல்வியினைச் செலுத்த வேண்டும் என்ற சிந்தனை நெகிழ வைக்கிறது. வறுமையும் ஏழ்மையும் முயன்று மாற்றத் தக்கவை. மனித முயற்சியால் வறுமையும் ஏழ்மையும் அகல வேண்டும். கடவுள் நம்பிக்கையென்ற பெயரில் மனித முயற்சிகள் முடமாகி விடக்கூடாது. கடவுள் நம்பிக்கை தேவை! அறிவறிந்த ஆள்வினை முயற்சிகள் வெற்றி பெறுமாறு கடவுள் நம்பிக்கை வாழ்வியலோடு இணைந்து செயல்பட வேண்டும்

வளரும் வேளாண்மை, கால்நடை அறிவியல் சிந்தனைகள் இன்றைய வளர்ந்து வரும் விவசாய, பொருளாதார உலகத்திற்கு உடனடித் தேவையாகும். கூட்டுறவுத் துறை என்பது அரசின் ஆதிக்கத் துறையாகி விட்டது. கூட்டுறவுத் துறை மக்கள் இயக்கமாக மாற வேண்டும்.

எங்கே பழங்காலத் திருக்கோயில்களைச் சார்ந்து வளர்ந்த ஆன்மிகம்? நாயன்மார்களும் ஆழ்வார்களும் வளர்த்த ஆன்மிகம் எங்கே? சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கிய சீலம் எங்கே? 'எந்நாட்டவர்க்கும் இறைவா!' என்ற உலகப் பொதுமை தழுவிய மாணிக்கவாசகரின் ஆன்மிகம் எங்கே? தொண்டலால் உயிர்க்கு

ஊதியம் இல்லை என்றவாறு தொண்டு நெறியில் வளர்ந்த ஆன்மிகம் எங்கே? வாடிய பயிரைக் கண்டபொழு தெல்லாம் வாடும் மனித நேயமே ஆன்மிகம் என்று ஆன்மிக தளத்தைச் சரியாக அடையாளம் காட்டுகின்றார்கள். 'எங்கே போகிறோம்?' என்ற கட்டுரைகளின் தொகுப்பு. சமூகத்திற்கு எல்லாத் துறைகளிலும் சரியான பாதையை அடையாளம் காட்டுகின்றது.

'மண்ணும் மனிதர்களும்' ஆனந்தவிகடன் வார இதழில் நிறைவுக் காலத்தில் எழுதப்பட்ட தன்வரலாற்றுத் தொடர்! முழுமையான வரலாறு கிடைக்கும்முன் காலம் அடிகள் பெருமானை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. இந்தத் தொடர் வெளிவர அடித்தளமாய் விளங்கிய உளம்கவர் கயல் தினகரன், இந்த வரலாற்றினைப் பதிவு செய்த மரு. பரமகுரு ஆகிய இருவரும் பாராட்டுக்குரியவர்கள். மகாசன்னிதானத்தின் இளம் பருவத்திலேயே குருதியில் கலந்த தொண்டுணர்வு, நாய் இறந்து கிடந்த ஆலயத்தினைத் தூய்மைப்படுத்தி, பூசனை செய்ய வைத்தது; தமிழ் வழிபாட்டு நெறியைச் சமய உலகத்தில் நிலை நிறுத்தியது; புயல் நிவாரணப் பணிகள் ஆற்றியது. இது சமய சமூக மேம்பாட்டுக்குத் தம்மையே அர்ப்பணித்த தமிழ் ஞானியின் வரலாறு!

'கோவிலைத் தழுவிய குடிகள்; குடிகளைத் தழுவிய கோவில்!', 'கடவுளைப் போற்று! மனிதனை நினை!' என்பவை தான் அருள்நெறித் தந்தையின் வாழ்வியல் தாரக மந்திரங்கள்! ஆன்மிகத்தின் அடித்தளத்தில் நின்று கொண்டு மனிதத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டார்கள். மனிதத்தை மறந்து கடவுளைப் போற்றுதல் ஆன்மிகம் ஆகாது! கடவுளை மறந்து மனிதத்தைச் சிந்திப்பது வாழ்வியல் ஆகாது; கடவுளைப் போற்ற வேண்டும்; மனிதனை நினைக்க வேண்டும்.

அற்புதச் சிந்தனைகள் அடங்கிய இந்த அரிய தொகுப்பு நூலின் தொகுப்புப் பணியில் தம்மை அர்ப்பணித்துப் பணி யாற்றிய அருமை நல்லுள்ளங்கள் இராமசாமி தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்களுக்கும், ஆதீனக் கவிக்குயில் அருமை மரு. பரமகுரு அவர்களுக்கும் நெஞ்சுநிறை நன்றிகள்; பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்! இந்நூலுக்குச் சீரிய அணிந்துரை வழங்கிய **பெரும்புலவர் இரா. இளங்குமரனார்** அவர்களுக்கு நன்றி! பாராட்டுக்கள்! இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்துள்ள 'பதிப்புச் செம்மல், தமிழவேள்' பதிப்புப் பணியில் முத்திரை பதித்த வித்தகர், மணிவாசகர் பதிப்பகம் **கடியாபட்டி ச. மெய்யப்பன்** அவர்களுக்கு நெஞ்சுநிறை பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள் நன்றி!

# மகிழ் உரை

## பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் கருத்துக் கருவூலங்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடும் பேற்றினை மணிவாசகர் பதிப்பகம் பெற்றது. 16 தொகுதிகளில் 7200 பக்கங்களில் செம்பதிப்பாக வெளியிட்டுள்ளது. இப்பெருந் திட்டத்திற்கு இசைவளித்த தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களை வணங்கி நன்றி செலுத்துகிறோம். இத்தொகுப்புக்கு மூலவிசையாக அமைந்த கவிஞர் மரு. பரமகுரு அவர்களுக்கு நன்றி. நூல் உருவாகும்பொழுது முழுஒத்துழைப்பு நல்கிய முனைவர் தெ. முருகசாமி அவர்களுக்கு நன்றி. பதிப்புக்குழு உறுப்பினர்களான குன்றக்குடி பெரியபெருமாள், நா. சுப்பிரமணியன், க. கதிரேசன் ஆகியோருக்கும் நன்றி. 16 தொகுதிகளுக்கும் அணிந்துரை அளித்த அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி. ஆயிரம் நூல்களை வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகம் அடிகளார் நூல்வரிசைச் செம்பதிப்பு வெளியீட்டை எண்ணிப் பெருமிதம் கொள்கிறது. பதிப்பகங்களே பாராட்டும் பதிப்புகளாக இவை அமைந்துள்ளன. அலைகடலுக்கு அப்பாலும் ஆர்வமாகஉள்ள அடிகளாரின் வாசகர்களுக்கும் அன்பர்கள், வாசக நேயர்கள், வளர்தமிழுக்கு ஆக்கம்தரும் அனைவருக்கும் நன்றி!

அடிகளாரின் புதியஎண்ணங்கள், புரட்சிக் கருத்துக்கள், சிந்தனை மின்னல்கள், எழுச்சியுரைகள் எல்லாவற்றையும் ஒருசேரத் தொகுத்துக் கொடுப்பதில் பதிப்புக்குழுவின் செயலர் என்ற முறையில் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. சங்கப்பாடல் சொல்வதுபோல், **பல்லோர் உவகை என்னுள் பெய்தற்று** என்று நினைந்து இன்களி மகிழ்நகை கொள்கிறேன். இத்தொகை வலிமைபெற, வளம்பெறத் துணை நின்ற என் மகன் மெ. மீனாட்சிசோமசுந்தரத்திற்கும், பதிப்பக மேலாளர் இரா. குருமூர்த்திக்கும் நன்றி!

# உள்ளுறை


பக்கம்

1. நடந்ததும் நடக்கவேண்டியதும் 17

2. அடிகளார் நினைவலைகள் 39

3. மண்ணும் மனிதர்களும் 63

4. அடிகளார் உவமை நயம் 234

5. எங்கே போகிறோம்! 294

பின்னிணைப்பு - I

அடிகளார் நூல்களுக்கு அறிஞர்கள்
வழங்கிய உரைகள் (1955-1996) 450

பின்னிணைப்பு 553

# 1

# நடந்ததும் நடக்க வேண்டியதும்

*"என்னால் அறியாப் பதம்தந்தாய்*
*யான தறியா தேகெட்டேன்*
*உன்னால் ஒன்றும் குறைவில்லை*
*உடையாய் அடிமைக் காரென்பேன்*
*பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்*
*பழைய அடியா ரொடுங்கூடா(து)*
*என்னா யகமே பிற்பட்டிங்(கு)*
*இருந்தேன் நோய்க்கு விருந்தாயே!"*

— ஆனந்த மாலை–2

என்ற மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல் எண்ணி இன்புறத்தக்கது. இப்பாடற்கருத்து நம்முடைய வாழ்க்கைக்கு நூற்றுக்குநூறு பொருந்தும்! ஆம், யாதொரு குறையுமில்லாமல் முதற்சுற்று முடிந்திருக்கிறது. யாதொரு குறையும் இல்லை யென்றால் "முழு நிறை" என்று பொருள் கொள்ளக்கூடாது. "குறை"யைக் குறையென்று கருதி அலட்டிக் கொள்ளாமல் வாழ்க்கைப்பயணம் நடந்துகொண்டிருக்கிறது. ஆனாலும் நம்முடைய சமுதாய உணர்வுகள் அடிக்கடி பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கிறது. உலகியலைப் பொறுத்தவரையில் யாதொரு குறையும் இல்லை. ஆனால் நாட்டின் நிகழ்வுகளில்

நமக்கு இருந்த அக்கறை சிலபொழுது மகிழ்வையும் சில பொழுது துன்பத்தையும் கொடுத்திருக்கிறது. இராமன், சீதையை நெருப்பிலிட்டுத் தூய்மை காண முயன்றதைப் போல நம்முடைய வாழ்க்கையிலும் சோதனைகள் நடந்த துண்டு. ஆனாலும் இறைவன் திருவருளால் யாதுமோர் குறைவில்லை என்றாயிற்று! அந்தக் காலங்களிலெல்லாம் நம்மோடு உடனிருந்த பரிவுமிகுந்த நண்பர்களுக்கும் பொறுப் புணர்ந்து செயலாற்றிய அலுவலர்களுக்கும் நாம் எங்ஙனம் நன்றி செலுத்த முடியும்!

இந்த முதற்சுற்றின் நீண்ட பயணத்தில் சிந்தனை யாலும், கருத்தாலும், எடுத்துக்கொண்ட பணிகளாலும் நாம் பல்வேறு படிநிலைகளைக் கடந்து வந்திருக்கிறோம். இந்த ஒவ்வொரு படிநிலையிலும் நம்முடைய சிந்தனையும் கருத்தும் சமூகத்தைநோக்கி விரிந்து வளர்ந்தே வந்திருக்கிறது; பின்னடைவு ஏற்பட்டதில்லை. 1942-இல் நாட்டு விடுதலைக்காக, தனிமனிதர் அறப்போராட்டத்தை அண்ணல் காந்தியடிகள் அறிவித்தபோது நமது நெஞ்சத்தில் நாட்டுப்பற்று வித்திடப்பெற்றது. இந்த உணர்வை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே வந்திருக்கிறோம்.

முதற்படிநிலையில் தருமபுர ஆதீனத்தில் துறவு ஏற்று ஆங்கிலத்தொடு அருந்தமிழும் கற்றிடும் இனியவாய்ப்பினைப் பெற்றோம். அங்கேயே எல்லார்க்கும் பணிவுடனிருத்தல், தொண்டு செய்தல் ஆகிய பண்பியல்புகளை அடையப் பெற்றோம்.

தருமையில் வாழ்ந்த காலம் "ஞானமுதலை"த் தேடிக் கொண்டகாலம். தொண்டுசெய்யும் பழக்கத்திற்கு ஆளான காலம். அந்த அமைதி நிறைந்த வாழ்க்கைச் சூழலிலும் ஒருபுயல் வீசியது, அப்புயல் வாழ்க்கையைச் சிதறடித்து விடக்கூடிய அளவுக்கு அச்சமூட்டுவதாக இருந்தது. ஆயினும் உறுதியுடன் கூடிய குரு பக்தியோடும் திருவருட்

கடைபிடிப்போடும், "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று ஏற்றிருந்தமையின் காரணமாகப் புயல் தென்றலாக மாற்றம் பெற்றது. சிலதிங்கள் ஒறுக்கப்பட்டிருந்தாலும் அது திருவருட்சித்தம். "புளியம் வளாரால் மோதுவிப்பாய், உகப்பாய்" என ஆளுடைய அரசு அருளிச் செய்தது போலவும் "அடியார் தினம் தினம் செய்தபிழை பரியாது அறுத்துச்சுடுவது எல்லாம் அவர் பாசத்தையே" என்று குன்றக்குடி ஆதீனக்குரு முதல்வர் வாழ்த்தாக அமைந்துள்ள அனுபூதிப்பாடல்படியும் அமைந்தது. நாம் குருமூர்த்திகளின் அருளார்ந்த உகப்பினைப் பின்னர் பெற்று அனுபவிக்க முடிந்தது.

இந்தத் தென்றல் நீடித்து நிலவ முடியாமல் மீண்டும் ஒருசுழற் காற்று! அந்தச் சுழற்காற்றுதான் நம்மைக் குன்றக் குடித் திருமடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தது! நாம் தருமையிலிருக்கும்பொழுது தருமபுர ஆதீனத்தின் பிரதி நிதியாக வெளியூர்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குச் செல்வதுண்டு. அதுபோல் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்திற்கும் 1948ஆம் ஆண்டு குரு பூசைக்கு வந்திருந்தோம். அப்போதே குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் நம்முடைய சொற் பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இச்சொற்பொழிவு முடிந்ததும், திருமடத்தின் முகவர்கள் நம்மைக் குன்றக் குடியிலேயே தங்கும்படியாகக் கேட்டுக் கொண்டனர். நம்முடைய விருப்பமின்மையையும், ஏற்க இயலாமையையும் தெரிவித்துத் தருமபுரத்திற்கு மீண்டோம். சில திங்கள்கள் ஓடின. ஒருநாள் இரவு 10 மணி அளவில் நம்முடைய அறைக் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்து பார்த்தபொழுது, திருக்கடவூர் பிச்சக்கட்டளை உரிமையாளரும், நமக்கு மிகவும் நெருங்கிய உழுவலன்பராக விளங்கியவருமாகிய திருக்கடவூர் திரு. கைலாசம்பிள்ளை அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். உள்ளே அழைத்து இருக்கச்செய்து 'என்ன! இப்படி இரவில்?' என்று கேட்டோம். அவர்கள்

குன்றக்குடிக்கு உடனடியாகப் புறப்பட வேண்டும் என்று சொன்னார்கள்? 'ஏன்' என்று கேட்டோம். "குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைவர் பொறுப் பேற்பதற்காக" என்று சொன்னார்கள். "திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களிடத்தில் உத்தரவு பெறவேண்டாமா?" என்று கேட்டோம். "முதலில் குன்றக்குடிக்குப் போய்ப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு வந்து சொல்லிக் கொள்ளலாம். இதுதான் நடைமுறை" என்றும் கூறினார்கள். 'நாம் கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு' என்ற திருவாசகப்பாடலை எடுத்துக்காட்டிக் "கண்டிப்பாக இயலாது" என்று அனுப்பிவிட்டோம்! திரும்பத்திரும்ப வற்புறுத்தியதால் "திருவருள் திருமகா சந்நிதானம் அவர் களிடத்தில் கேட்டுப்பாருங்கள்" என்று போக்குக் காட்டி னோம். சிலநாள் கழித்து, திரு. கைலாசம்பிள்ளை அவர்கள், குன்றக்குடித் திருமடத்துக் கைலாசத்தம்பிரான் அவர்கள், குன்றக்குடித் திருமடத்து முகவர் ஆகியோர், திருவருள் திரு மகாசந்நிதானம் அவர்களைக் கண்டு கொண்டு நம்மைக் குன்றக்குடிக்குத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் நம்மை அழைத்துக் கேட்டார்கள். ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பது "கல்விக்கும் தொண்டுக்கும் இடையூறாக இருக்கும். ஆதலால், வேண்டாம்" என்று நாம் கூறினோம். திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களும் வந்தவர்களிடத்தில் "அவருக்கே விருப்பமில்லை. நாம் என்ன செய்வது?" என்றுகூறி அனுப்பி விட்டார்கள். இடையில் வேறொருவர் குன்றக்குடித் திரு மடத்திற்குப் பொறுப்பேற்கத் தயாரிக்கப்பட்டார். ஆனால் குன்றக்குடித் திருமடத்தின் தலைவரும் இசைந்து வரவில்லை. மீண்டும் குன்றக்குடியிலிருந்து அருட்டிரு கைலாசத் தம்பிரான் முதலியோர் நம்மை நாடி அழைத்து வருவதற்கு தருமபுரத்திற்கு வந்தனர். அருட்டிரு கைலாசத் தம்பிரான் அவர்கள் குன்றக்குடி திருமடத்தில் 40 ஆண்டுகளுக்கும் மேலிருந்தவர். குன்றக்குடித் திருமடத்தின் மீது அவருக்கு

அளவற்ற ஈடுபாடு. அதனால் அந்த வயது மூத்தவர், திருவருள் திருமகா சந்நிதானத்தின் திருமுன்பு நிலமிசை வீழ்ந்து வணக்கம் செலுத்தியவர், எழுந்திருக்காமலேயே அழுதுபுலம்பிக் "குன்றக்குடியைக் காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும்" என்று கூறினார். அவருடைய கோரிக்கை நம்மைக் குன்றக்குடிக்குத் தரவேண்டுமென்பதே. திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் அறச்சங்கடத்திற் காளானார்கள். ஒருபுறம் குன்றக்குடி ஆதீனத்தின் பாது காப்பு! பிறிதொருபுறம் நம்முடைய விருப்பமின்மை! கடைசி யாகச் "சொக்கநாதர் சந்நிதியில் திருமுறையில் கயிறுசாத்திப் பார்ப்பது, உத்தரவு கொடுத்தால் நாம் குன்றக்குடிக்குப் போக வேண்டும்" என்று திருவருள் திருமகா சந்நிதானத்தில் உத்தரவு செய்தார்கள். மறுநாட் காலை சொக்கநாதர் வழிபாடு. வழக்கம்போலப் பூசைமடத்திற்குப் போயிருந்தோம். குன்றக் குடி மடத்து அருட்டிரு கைலாசத் தம்பிரான் அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் வந்திருந்தார்கள். இன்றைய தருமபுரம் திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களும் உடனிருந்தார்கள். பூசைமுடிந்த பிறகு அடங்கன் முறையில் கயிறுசாத்தப் பெற்றது. திருஞானசம்பந்தர் அருளிச்செய்த "திருக்கடவூர் மயானப் பதிகம்" கிடைத்தது.

இப்பதிகத்தின் முதல் திருப்பாடல்,

'வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணங்கி
எரிய மதில்கள் எய்தார் எறியும்
முசலம் உடையார்
கரிய மிடறு முடையார் கடவூர்
மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவார் அவர்
எம் பெருமா னடிகளே!'

என்ற திருப்பாடலில் "பெரிய விடைமேல் வருவார்" என்ற குறிப்பு இருந்தமையால் நாம் குன்றக்குடி வருவது தவிர்க்க

முடியாததாயிற்று. ஒருவாறாகப் பிரியா விடைபெற்று குன்றக்குடிக்கு வந்து சேர்ந்தோம். திருமடத்து மரபுப்படி 5–9–1949–இல் பட்டம் கட்டப்பெற்றன. உரிம ஆவணங்கள் எழுதப்பெற்றன. 1952 வரையில் திருமடத்தில் குன்றக்குடி ஆதீனத்தின் சின்னப்பட்டமாக அமர்ந்து குரு, சிவம், அடியார் கூட்ட வழிபாடுகள் செய்து கொண்டு அமைதியாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தக் காலத்தில் நல்ல ஆய்வு மனப்பான்மையில் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. குன்றக்குடி திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் பழைய மரபுகளில் பிடிப்புள்ளவர்கள். நாம் திருமடத்திற்கு வெளியில் செல்வதை விரும்புவதில்லை. இதனால், பேச்சுப் பணிக்குத் தடை ஏற்பட்டது. ஆயினும் நம்விருப்பம் கருதி ஒரோ வழி அனுமதித்தார்கள்.

இந்தத் திருமடத்தில் வாழ்ந்த காலத்தில் ஒரு புயல் சுழன்று அடிக்கும் சூழல் ஏற்பட்டது. அதாவது, திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களிடம், சிலர் கோள்களைச் சொல்லி நம்முடைய உரிம ஆவணத்தைச் செல்லாததாக்கி விடுவது என்ற அளவிற்கு முயற்சியினை மேற்கொண்டார்கள். திருவண்ணாமலைத் தைப்பூசத் திருவிழாச் சொற்பொழிவுக்குச் சென்றிருந்தோம். அப்பொழுது புகைவண்டியில் பயணம். நாம் திருவண்ணாமலைக்குப் பேசச் சென்றிருந்த பொழுது கோள் சொல்லும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்கள். திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் உரிம ஆவணத்தை இரத்து செய்வதற்காக மதுரை சென்று விட்டார்கள். அப்பொழுது ஆதீனத்தின் வழக்கறிஞராக திரு. D. C. சீனிவாச ஐயங்கார் இருந்தார். இவர் அப்பொழுது மதுரைத் தமிழச் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார். சில மாதங்களுக்கு முன்புதான் D. S. சீனிவாச ஐயங்கார் அவர்கள் அழைப்பின்பேரில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பேசிவிட்டு வந்திருந்தோம். அதனால்

அவர்களுக்கு நம்மீது ஈடுபாடு. அவர் உரிம ஆவணத் தள்ளுதலுக்கு இசைவு தரவில்லை. மதுரையிலிருந்து குன்றக்குடிக்குத் திரும்பும்பொழுது திருப்புத்தூரில் அப்பொழுது ஆதீன வழக்கறிஞராக இருந்த திரு. அ. இராமச்சந்திரன் பிள்ளை அவர்களிடமும் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அவர்களும் இசைவு தரவில்லை.

இதற்கிடையில் நாம் திருவண்ணாமலை சென்று விட்டுக் காரைக்குடிப் புகைவண்டி நிலையத்தில் இறங்கினோம். ஒரேஒரு எழுத்தர்மட்டும் அங்கு வந்திருந்தார். அவரும் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வந்திருந்தார். விவரங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது. வழக்கம்போல நாம் அமைதியாகக் குன்றக்குடிக்கு வந்தோம். பூசைமடத்தில் வழிபாடு செய்து கொண்டு அமைதி காத்தோம். சிலநாள்கள் ஓடின. ஆனால், திருவருள் திருமகா சந்நிதானம் அவர்கள் மட்டும் நம்மோடு பேசுவதில்லை. மாலையில் போய் விசிறிக் கொண்டு நிற்போம். அப்போதும் பேசுவதில்லை. இப்படிச் சிலநாட்கள் ஓடின. ஒருநாள் மாலைநேரத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு "என்ன குற்றம் செய்தேன்" என்று மகாசந்நிதானத்தில் விண்ணப்பித்துக் கொண்டோம். உடன் திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களிடத்திலிருக்கிற அதிகாரத்தை நாம் எடுத்துக்கொள்ள முயற்சிப்பதாகச் சற்று அழுத்தக்குரலில் சொன்னார்கள். உடன் நாம் வீழ்ந்து வணங்கி "அப்படி ஒன்றும் எண்ணமில்லை, சொன்னவர்களை விசாரிக்க வேண்டும்" என்று விண்ணப்பித்தோம். கரவிலாத் திருவுள்ளமுடைய அவர்கள் சிலரை அழைத்து விசாரித்தார்கள். சாட்சியங்கள் கேட்டார்கள். விசாரணையின் முடிவு "நாம் குற்றமிலோம்" என்றாயிற்று. மீண்டும் திருவருள் திருமகா சந்நிதானம் அவர்களின் அரவணைப்பில் மகிழ முடிந்தது. இந்தத் தகவல்களை நாம் தருமபுரத்திற்குத் தெரிவிக்கவில்லை. ஆச்சாரியன் திருவுள்ளம் எப்பரிசாயினும் மாணாக்கன் அப்பரிசே ஏற்கவேண்டும் என்பது விதிமுறை.

வேறு வழிகளை நாடக்கூடாது என்பது மரபு. நாம் இந்தப் பகுதியை விரிவாகச் சொன்னதற்குக் காரணம், நாம் தமிழ் நாட்டின் சட்ட மேலவை உறுப்பினர் பதவியை ஏற்றுக் கொண்டபொழுது பதவியாசையால் ஏற்றுக்கொண்டதாகச் சிலர் பழி கூறினர்; புறம் பேசினர். ஒரு ஆதீனத்தின் தலைமைப் பொறுப்புக்கே வலிய அழைத்தும் வரமறுத்த நாம், சட்டமன்ற மேலவைப் பதவிக்கு எளிதில் வசப்படு வோமா? சட்டமன்ற மேலவை உறுப்பினர் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது டாக்டர் கலைஞர் அவர்களின் எண்ணம். அன்றைய சட்ட அமைச்சராக இருந்த வரும் நம்பால் உழுவலன்பு கொண்டவருமாகிய மாண்புமிகு செ. மாதவன் அவர்கள் மூலம் கேட்டனுப்பினார். நாம் முடிவு சொல்ல மூன்று நாட்களாயின. நாம் அமைதியாக ஆலோ சித்து, நம்முடைய வாழ்க்கையில் அக்கறையுடைய தருமையா தீனம் திருவருள் திருமகா சந்நிதானம் கயிலைக்குருமணி அவர்கள், பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்கள் ஆகியோரைக் கலந்துகொண்ட பிறகே இசைவு தந்தோம். இந்தமாதிரிச் செய்திகளில் “ஊரார் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே” என்ற மணி மொழி நம்முடைய வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு பொருந்துவதாயிற்று.

1952-இல் ஆதீனத்தின் முழுப்பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சி, ஒரு சமய விழாவாக நடந்தது. அதன் தொடர்ச்சியாகத் தீண்டாமை விலக்குக்கு வித்திடும் பணியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிக்குச் செல்லும் நிகழ்ச்சியும் அமைக்கப் பெற்று நடந்தது. இதிலிருந்து மூன்றாம்படி நிலை தொடங்குகிறது. 1952-இல் இருந்து கடுமையாக உழைத்து ஆதீனம் திருக்கோயில் நிலபுலன்களை நேரில் சென்று கண்டு, வருவாய்ப் பெருக்கத் திற்கு வழி செய்யப் பெற்றது. 1952இல் ‘அருள் நெறித்திருக் கூட்டம்’ தொடங்கப்பெற்றது. அருள்நெறித் திருக்கூட்டத்

தொடக்கத்திற்குக் காரணமாக அமைந்தது தலைவர் பெரியார் அவர்களின் திருவுருவ உடைப்பு அறிவிப்பாகும். அருள்நெறித் திருக்கூட்டத் தொடக்ககால அமைப்புக் குழுவில் காரைக்குடி கம்பன் அடிப்பொடி அவர்களும், ஈரோடு செஞ்சொற் கொண்டல் S. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களும் செயலாளர்களாக இருந்தார்கள். நாடு முழுதும் தீவிரசமயப்பிரசாரம் செய்யப்பெற்றது. ஒருபுறம் நாத்திகக் கொள்கைகளை எதிர்த்தும், பிறிதொரு புறம் சமயச் சீர்திருத்தக் கொள்கைகளை வலியுறுத்தியும் அதாவது சாதி வேற்றுமை நீக்குதல், தீண்டாமை நீக்குதல், திருமுறைத் தமிழில் அர்ச்சனை செய்தல், சமய நிறுவனங்கள் சமுதாய மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய வேண்டுமெனல் ஆகியன எடுத்து மொழியப் பெற்றன. சாதி வேற்றுமைகள் நீங்க வேண்டும் என்ற இலட்சியத்திற்காக 1952இல் மயிலாடுதுறையில் நடந்த மகேசுவர பூசையில் வெளி நடப்புச் செய்தோம். தமிழ் நாட்டில் தீவிரமாக இயக்கம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் கரூர், புதுக்கோட்டை மாவட்டம் திருப்பெருந்துறை, காமராசர் மாவட்டம் மம்சாபுரம் ஆகிய ஊர்களில் திராவிடர் கழகத்தினருக்கும் நமது அணியினருக்கும் மோதல் ஏற்பட்டன. திராவிடர் கழகத்துத் தொண்டர்கள் கருப்புக் கொடி பிடித்தனர். இந்தச் சூழ்நிலையில் நமது இயக்கத்திற்கு அனைத்துச் செய்தித் தாள்களும் நல்ல விளம்பரம் அளித்தன.

அருள்நெறித் திருக்கூட்ட இயக்கத்தின் வளர்ச்சி, தமிழ் இனத்தில் இருவேறு பிளவுகளை உண்டாக்கித் தமிழின மேம் பாட்டைத் தடுத்துவிடுமோ என்று கருதிய சில சான்றோர் நம்மிடம் தூது வந்தனர். 1954–இல் நாமும் பெரியார் அவர்களும் தமிழறிஞர்களின் ஏற்பாட்டின்படி ஈரோட்டில் திரு. சென்னியப்ப முதலியார் அவர்கள் வீட்டில் இரகசிய மாகச் சந்தித்தோம். சிலமணி நேரங்கள் பயன்தரத்தக்க வகையில் கலந்துரையாடினோம். அன்று தலைவர் பெரியார்

அவர்கள் பழகினபாங்கு அவர் "பெரியார்" என்பதை உறுதிப் படுத்தியது. அதன்பிறகு, தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்தநாள் விழாவைத் திருச்சி பொன்மலைப்பட்டியில் எடுத்தனர். விழாவுக்கு நம்மை அழைத்தனர். நாமும் இசைவு தந்து விழாவுக்குச் சென்றிருந்தோம். தலைவர் பெரியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினோம். அதேபோழ்து நாம் ஆற்றிய உரை சமய நெறிக்கு அரண் செய்வதாகவும் அமைந்திருந்தது. மத எதிர்ப்பாளர்களுக்கும் "ஒரு நல்ல கடவுள் நம்பிக்கையுடையவர்" சொல்லும் பதிலாகவும் உரை அமைந்தது. வழக்கம்போல, தலைவர் பெரியார் அவர்கள் பெருந்தன்மையுடன்-நம்முடைய பேச்சு அவர் கொள்கையை மறுக்கின்ற பேச்சாக இருந்தும், பெரியார் அவர்கள் யாதொன்றும் கூறவில்லை. கூறாமைக்குக் காரணம் பண்பாடு காக்கவேண்டும் என்ற நெறி பற்றியேயாம். ஆயினும், கச்சிதமாகச் "சமுதாயத்தில் நிகழ்கின்ற தீமைக்குக் கடவுள் பொறுப்பில்லையென்றால் அதைத் திருத்தியமைக்க மகா சந்நிதானம் அவர்கள் வழி சொல்ல வேண்டும். மகா சந்நிதானம் அவர்கள் சொல்லும் வழியை மற்ற மதத் தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? என்பதையும் அறிந்து கொள்ள ஆசை" என்று கூறி முடித்தார்கள். நம்முடைய வாழ்க்கையில் ஒருசுற்று முடியப் போகிறது. தலைவர் பெரியாரும் மறைந்து விட்டார். ஆனால் அவருடைய ஆசை இன்னமும் நிறைவேறவில்லை. அதற்கு மாறாகச் சாதி வேற்றுமைகளை- தீண்டாமையை-சமுதாயத்தை அமுக்கி வைக்கும் ஊழ்வினைத் தத்துவத்தை-மதச் சண்டைகளை நாம் ஒத்துக் கொள்ளாததால் இவற்றையே கொள்கைகளாக உடையவர்கள், நம்மை "ஒத்த கருத்தில்லாதவர்" என்று சொல்லி ஒதுக்குகின்றனர். அவர் களுக்கு மிக்க நன்றி. அவர்கள் நம்மை அங்கீகரிப்பதை நாம் விரும்பவில்லை. சமய அடிப்படையில் மனிதகுல ஒருமைப் பாட்டைக் காண்பதும், எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கக்

கூடிய பொதுமை நலம் மிக்க சமுதாயத்தைக் காண்பதுமே நமது விருப்பம். இந்த விருப்பத்தை இலட்சியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு நாம் அந்நியராக இருப்பது ஆச்சரிய மில்லை. வரவேற்கத்தக்கதே. பெரியாருக்குப் பொன்னாடை போர்த்திய பிறகு உயர்குடி மனப்பான்மையுடன் மெல்ல ஒதுங்கினர். உடன்பாடு பேசினர். நாம் ஏற்கவில்லை. வெறுக்கத் தொடங்கினர். இருட்டடிப்புச் செய்தனர். அருள் நெறி இயக்கத்திலிருந்த சிலர் இயக்கத்தை விட்டு வெளியேறினர்; வேறு சிலர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முயன்றனர். இந்த நிலையில் திருப்பரங்குன்றத்தில் நமது கருத்தைச் சார்ந்தோர் கூடி, நம்மீது நம்பிக்கை வாக்கையளித்து மாறுபட்ட சக்திகளை வெளியேற்றினர். இது ஒரு கால கட்டம்.

தொடர்ந்து இயக்கப் பணிகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. 1955இல் அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்கப் பெற்றது. இது பூரணமான நிர்மாணப்பணி செய்யும் இயக்கமாகும். இந்த நிறுவனம் விரைந்து வளர்ந்து வந்தது. இந்த அமைப்பு இன்று ஒரு கல்லூரி, இரண்டு மேனிலைப் பள்ளிகள், நான்கு உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து நடுநிலைப் பள்ளிகள், மூன்று தொடக்கப் பள்ளிகள், ஒரு மாணவர் புண்ணிய விடுதி, பிறிதொரு மாணவர் விடுதி (கட்டணம்) முதலியன நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டத்தின் நீண்ட நெடிய நாள் குறிக்கோளாகிய “தமிழகத் திருமடங்கள் இணைந்து செயல்பட வேண்டும்” என்ற கருத்துக்கு 1966ஆம் ஆண்டில் அறநிலையத்துறை ஆணையராக இருந்த திருமிகு கோ. சாரங்கபாணி முதலியார் அவர்கள் மூலம் அன்றைய அறநிலையத்துறை அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களின் உதவியுடன் “தமிழ்நாடு தெய்விகப் பேரவை” தொடங்கப் பெற்றது.

தமிழ்நாடு தெய்விகப் பேரவைக்கு முதல் தலைவராக சிறப்பான முயற்சியின் பயனாகத் தருமைக் கயிலைக் குருமணி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். அவர்கள் தொடர்ந்து மூன்றாண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்தார்கள். அதன் பிறகு நாம் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றோம். பேரவைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப் பெறும் பொழுது நாம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தோம். டாக்டர் கலைஞர் அவர்கள் நம்முடைய சமுதாய எண்ணங்களைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினர் பதவிக்கு நம்முடைய பெயரை ஆளுநருக்குப் பரிந்துரை செய்தார்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் வளர்ச்சிக்குக் கடுமையாக உழைத்தோம். பேரவை, நாடு முழுதும் ஆல்போல் தழைத்து வளர்ந்தது. பேரவை வளர்ச்சியில் அதிகமாக ஈடுபட்டதால் நமக்கும் நம்முடைய நிறுவனங்களுக்கும் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்பட்டது. அருள்நெறித் திருக்கூட்டத்தின் வளர்ச்சி பாதித்தது. ஆயினும், இது அனைவரும் சேர்ந்து செய்யும் பொதுப்பணி என்பதால் கடுமையான உழைப்புக் கொடுத்து வளர்த்தோம். நம்முடைய சமுதாய - சமயச் சீர்திருத்தக் கருத்துக்களுக்குப் பேரவை வாயிலாக மக்கள் மன்றத்து ஏற்பினை அல்லது அங்கீகாரத்தினைப் பெற்று வந்தோம். இந்தச் சூழ்நிலையில் பேரவை தொடங்கிய காலத்தில் ஆர்வத்தோடு பங்கேற்ற காஞ்சி காமகோடி பீடம், தருமையாதீனம் மகாசந்நிதானம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றபிறகு பேரவைக் கூட்டங்களுக்கு வருவதில்லை. அதே போழ்து, உடன்பாடின்மையையும் காட்டிக்கொள்வதில்லை. நாம் தலைவராக வந்த பிறகு - தீவிரக் கொள்கைகள் பேரவையின் கொள்கைகளான பிறகு - காஞ்சி காமகோடி பீடத்தின் புதியவர் வந்தபிறகு பேரவைக்கும் காமகோடி பீடத்துக்கும் உள்ள இடைவெளி அதிகரித்தது. இந்த நிலையில் தமிழ்நாடு

அரசு அனைத்துச் சமூகத்தினரும் அர்ச்சகர் ஆவதற்குரிய வழி செய்யப்பட்ட மசோதாவைக் கொண்டு வந்தது. அதாவது "பிறப்பில் வேறுபாடின்றி அனைவர்க்கும் பயிற்சி கொடுத்து அனைவரையும் அர்ச்சகராக்குவது" என்ற சட்டத்தைக் கொண்டு வந்தது, சட்ட மன்றத்தில் இந்த மசோதாவை எதிர்க்கும்படி நம்மைக் காஞ்சி காமகோடிபீடப் புதிய பெரியவர் கேட்டுக் கொண்டார்கள். எதிர்ப்புக்குரிய காரண காரியங்களை நாங்கள் விவாதித்த பொழுது புதிய பெரியவர் எடுத்துக் கூறிய காரணங்கள் நிற்கவில்லை. அதுமட்டுமின்றிக் காமகோடி பீடமோ மற்ற மதத் தலைவர்களோ இதுவரை அர்ச்சகர் மசோதாவை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. பேரவை கூடி விவாதித்து எதிர்ப்பதற்குரிய கால எல்லையும் இல்லை. இந்நிலையில் அம்மசோதாவை எதிர்ப்பதற்குரிய நிலையில் நாம் இல்லை என்பதை அறிவித்தோம். பேரவையைக் கூட்டி அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக மறுத்துத் தீர்மானம் நிறைவேற்றினால் நிறுவனக் கட்டுப்பாடு என்ற அடிப்படையில் நாமும் நமது கொள்கைக்கு மாறாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வதாகக் கூறினோம். இதற்குப் புதிய பெரியவர் "தாங்கள் பேரவையின் தலைவர்; ஆதலால், எதிர்த்தேயாக வேண்டும்" என்று கூறினார். புதிய பெரியவர் வேதனைப்படுவதை நம்மால் உணர முடிந்தது. இதிலிருந்து நமக்கும் காமகோடி பீடத்துக்கும் பேரவைக்கும் இருந்த இடைவெளி மேலும் அதிகரித்தது. காஞ்சி காமகோடி பீடத் திருமடத்தின் சார்பில் பரிசுகள் வழங்குவதற்குப் பேரவையிலிருந்து பணம் கேட்டு எழுதினார்கள். தனிப்பட்ட நிலையில் ஒரு திருமடம் நடத்தும் போட்டிகளுக்குப் பேரவை பணம் தருவதில்லை என்று பேரவைச் செயலாளர் எழுதிவிட்டார். இதனை எழுதியிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் எழுதியதில் தவறில்லை. இதற்குப் பிறகு பேரவையுடன் உறவைக் காமகோடி பீடம்

விட்டுவிட்டது எனலாம். மாநில மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது நமக்கும், பேரவைக்கும், கிறித்தவ மதத்தின்பால் வெறுப்புணர்ச்சி இல்லையானாலும் கிறித்தவ மத நிறுவனங்களின் மதமாற்றச் செயல்களை எதிர்க்கும் உணர்வு இருந்தது. கிறித்தவமத இயக்கங்களால் மிகவும் பாதிக்கப்பட்ட தென்கோடி மாவட்டத்தில் மாநாடு நடத்துவதென்று பேரவை முடிவு செய்தது. நாகர்கோயிலில் மாநாட்டை நடத்தினோம். அந்தச் சமயத்தில் கிறித்தவ மிஷனரிகளின் பள்ளி நடைமுறைகளை எதிர்த்து நெல்லை மாவட்டத்தில் இரண்டு நடுநிலைப் பள்ளிகளை நமது நிர்வாகம் தொடங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் பேரவையை நிலையான நிறுவனமாக்கவேண்டும் என்றும், அதற்கு நிலையான நிதிவாயில்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் கருத்துத் தோன்றியது. தமிழ்நாடு அரசை அணுகிப் பேரவையை ஒருசட்டப் பூர்வமான நிறுவனமாக ஆக்கும் படிக் கேட்டுக் கொண்டோம். அது போலவே ஆணையர் அவர்களின் மாற்று ஆணை பெறாமல் நிதி நிலைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துகொண்டு, பேரவைக்கு நிதியளிப்பதை நமது எல்லாச்சமய நிறுவனங்களும் ஏற்கும்படி செய்யச் செய்தோம். சட்டமன்றத்தில் இந்தச் சட்ட வரைவுகள் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப் பெற்றன. இந்தச் சூழ்நிலையில் காஞ்சி காமகோடி பீடம் புதிய பெரியவரிடமிருந்து பேரவை வளர்ச்சி பற்றிய தகவல்கள் கேட்டுத் தூதுவர்கள் வர ஆரம்பித்தார்கள். நம்மிடத்திலும் வந்து பாராட்டிச் சொன்னார்கள். பேரவையின் செயலாளரை அவர்கள் விருப்பத்தின்படி இரண்டொருதடவை சென்று பார்க்கும் படிச் செய்தோம். பேரவைச் செயலாளரிடம் பேரவைப் பணிகளைப் பலபடப் பாராட்டி, பேரவைப் - பணிகளை எல்லாரும் சேர்ந்து செய்ய விரும்புவதாகவும், நம்முடன் கலந்துபேச விரும்புவதாகவும் புதிய பெரியவர்கள் சொல்லி யனுப்பினார்கள். நாமும் சென்று சந்தித்தோம். மகிழ்ச்சி

யாகப் பேசினார். பேரவை மாநிலக்குழுவைக் கூட்டும்படிக் கேட்டுக்கொண்டார்கள். நாமும் அவர்கள் விருப்பத்தை ஏற்று, அப்போது பேரவை, மாநிலக்குழு கூடவேண்டிய அவசியமில்லையென்றாலும், கூட்டினோம். கூடுவதற்கு முதல்நாள் சந்தித்தபொழுது, முதல்தடவை சந்தித்த பொழுதிருந்த பாங்கு இல்லை; சற்றுமாறுபட்டிருந்தது. மாநில அரசைக் கடுமையாகச் சாடிப் பேசினர்; நாம் கலைஞர் சிலையைத் திறந்து வைத்தமையைக் கடுமையாக விமர்சனம் செய்ததோடு இவையெல்லாம் மத்திய அரசுக்குப் பிடிக்காதவை என்றார். அவர் பேச்சின் தொனி அவருக்குப் பின்னணியாக ஒருபலம் இருக்கிறது என்பதை அன்று புலப் படுத்தியது. மறுநாட்காலை மாநிலக்குழு கூடியது. முதலில் தமிழ்நாடு அரசின் நமது சமய நிறுவனங்கள், பேரவைக்கு நிதிவழங்கும் சட்டத் திருத்தம்பற்றித்தான் விவாதம் எழுந்தது. அன்றைய மதுரை ஆதீன கர்த்தரவர்களும், காஞ்சி காம கோடி பீடம் புதிய பெரியவாளும் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்ததோடு, தமிழக அரசைக் கடுமையாகச் சாடினர். அப்பொழுது நாம் சொன்னபதில், “தமிழ்நாடு அரசு விரும்பி இதைச் செய்யவில்லை, நாம் கேட்டுக் கொண்டதன் பேரில் செய்திருக்கிறது. இது பேரவை வளர்ச்சிக்குப் பாதகமென்றால் வேண்டாம் என்று சொல்லிவிடலாம்” என்றோம். “இதனால் பேரவைக்கு நல்லது தானே தவிரக் கெடுதல் இல்லையே” என்றும் எடுத்துச் சொன்னோம். உடனே காஞ்சி காமகோடி பீடம் புதியபெரியவர் இந்தச் சட்ட திருத்தத்தின் மூலம் “பேரவை அரசு நிறுவனம் (தன்னாட்சி நிறுவனம்- Statutary Body) போல் ஆகிவிடுகிறது. இனி அவர்கள் பேரவையைத் தானே கலந்து ஆலோசிப்பார்கள்” என்றார். நாம் உடனே “இதுவரையில் நமது அமைப்பு அரசாங்க அந்தஸ்து பெறாதிருந்தது – இப்பொழுது பெற்றது நல்லது தானே! அரசினர் பேரவையைக் கலந்தாலோசித்துச் செய்வார்கள் என்றால், அதனால் பேரவைக்குப் பெருமை தானே”

என்கிறோம். புதிய பெரியவர்கள் "பேரவையில் தமிழர் மடாதிபதிகள் பலர் இருக்கிறீர்கள். நாங்கள் பார்ப்பனர்கள் ஓரிருவர் தாம் இருக்கிறோம். அதனால், உங்கள் கருத்து அரசாங்கத்தின் கருத்தாகிவிடுமே" என்று வெளிப்படையாகச் சொன்னார். தமிழர்-பார்ப்பனர் என்று பிரிக்கிறார்; அரசாங்கத்திலிருந்து பிரிந்து விடவேண்டுமென்கிறார். இதில் அடிப்படையில் நல்லெண்ணம் இல்லை என்று புரிந்துகொண்டோம் கூட்டம் ஒத்திவைக்கப்பெற்றது. அது மட்டுமா? புதிய பெரியவர் பேரவை அலுவலகத்திற்கு வந்த பொழுது "சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்" என்ற அப்பரடிகளின் அருள்மொழி தாங்கிய சுவரொட்டியைப் பார்த்து இந்தப் பாடல்களையெல்லாம் பேரவை பிரச்சாரம் செய்யலாமா? என்று கண்டித்தார். இரண்டொரு நாட்கள் ஓடின. தமிழ்நாடு அரசு கலைக்கப் பெற்றது. நெருக்கடி காலம் அறிவிக்கப் பெற்றதும் புதிதாக அமைந்த ஆளுநர் ஆட்சி, காஞ்சி காமகோடி பீடம் புதியவரின் குரலாக இருந்து பேரவையின் மீது பழிதூற்றியது. நிதி உதவி இல்லை என்று அறிவித்தது. அன்று (28-12-1985) காமகோடிபீடம் புதிய பெரியவர் பேசிய பேச்சின் தொனிக்குரிய பின்னணியைப் புரிந்துகொள்ள முடிந்தது.

நெருக்கடி காலத்தில் நமக்கும் மிகுந்த நெருக்கடி இருந்தது; பேரவைக்கும் நெருக்கடி ஏற்பட்டது. மாநிலக் குழுவை மீண்டும் கூட்டினோம். மாநில ஆளுநராட்சிக்கு நம்மிடம் கடுமையான அணுகுமுறையிருப்பதை அறிந்து பேரவையைக் காப்பாற்றும் நோக்கத்தோடு, போற்றுதலுக்குரிய மயிலம் ஆதீனகர்த்தரவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். பேரவை, அரசிலிருந்து விலகி விட்டதால் திருப்பனந்தாள் எஜமான் சுவாமிகள் காஞ்சி காமகோடி பீடம் புதிய பெரியவர்கள் பரிந்துரையின்படி செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். இதற்கிடையில் பேரவை பெயர் மாற்றத்திற்கும் வேறு சில மாற்றங்

களுக்கும் புதிய பெரியவர் முயற்சி செய்தார். பேரவைத் தலைவர் அவர்கள் இடம் கொடுக்காததால் வெற்றி கிடைக்கவில்லை. பேரவைக் கணக்குக்குச் சிறப்புத் தணிக்கை செய்ய ஆளுநராட்சி ஆணை பிறப்பித்தது. அதில் பழி தூற்றுவதற்கேற்றவாறு ஒன்றும் கிடைக்கவில்லை. இடையில் புதியவர் எப்படியோ சில முயற்சிகளை மேற்கொண்டு திருப் பனந்தாள் மடத்துச் சுவாமிகளிடமிருந்த பேரவைச் சாவியை அரசிடம் ஒப்படைக்கும்படியும் செயலாளர் பதவியை ராஜினாமா செய்யும்படியும் செய்துவிட்டார். மீண்டும் பேரவை, கொல்லைப்புற வாயிலாக அரசிடம் ஒப்படைக்கப் பெற்றுவிட்டது. ஆயினும் நாம் தொடர்ந்து பேரவையை மீட்க அரசுடன் போராடிக் கொண்டு வருகின்றோம்.

இடையில் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்த அரசு, பேரவைக்குப் பச்சைக் கொடி காட்டியது. பேரவை மாநிலக்குழு கூடியது. இந்த நிலையில் காஞ்சி காமகோடி பீடம் பேரவையிலிருந்து விலகிக் கொள்வதாகக் கடிதம் எழுதியது. நாம் பேரவைச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். பேரவை மாநிலக்குழு இருக்கிறது. ஆனால் இயங்கவில்லை! நிதி இல்லாதது முதற்காரணம்! இரண்டாவது காரணம் நமக்கு ஏற்பட்ட உள்ளப் பாதிப்பு! ஆனால் இன்றோ நாளையோ பேரவை இயங்கும்! திருவருளும் தமிழ்நாடு அரசும் துணை செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

நெருக்கடி காலத்தில் நம்முடைய நிறுவனத்திற்கும் நமக்கும் ஏற்பட்ட நெருக்கடிகள் பல! ஏராளமான ஆய்வுகள்! திருவருள் துணையால் சோர்வின்றி நடை போட் டோம். இந்த நெருக்கடி காலத்தில் ஏற்பட்ட சோதனைகள் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தன. ஏற்கெனவே இருந்த பல அத்தியாயங்களை விட இந்த அத்தி யாயமே பயனுடையது என்று உண்மையாகக் கருது கின்றோம். நெருக்கடி காலத்தில்தான் "குன்றக்குடி கிராம நலச் சங்கம்" தோன்றியது. கிராம முன்னேற்ற வேலைகள்

பற்றி எண்ணித் திட்டமிடப் பெற்றது! இந்தப் பணிகளின் வளர்ச்சி, அதில் ஏற்பட்ட ஆர்வம், விருப்புக்கும் வெறுப்புக்கும் பலியாகக் கூடிய மேடைப் பேச்சுக்குச் செல்லும் நமது ஆர்வத்தைக் குறைத்தது. நீண்ட நெடுநாட்களாகச் சமுதாயத்தில் தீர்வு காணப் பெறாதிருக்கும் பல்வேறு ஆழமான பிரச்சனைகளில் வறுமை நீக்கம் சமூக உறவுகள் போன்றவற்றில் கவனம் செலுத்த முடிந்தது. இதனுடைய வளர்ச்சிப் போக்கில் "கிராமநலத் திட்டக்குழு" தோன்றியது. இப்பணிக்குக் காரைக்குடியில் உள்ள மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் முன்வந்து கைகொடுத்து உதவி வருகின்றனர். 'விஞ்ஞானம் விவசாயிகளிடத்திற்குச் செல்ல வேண்டும்' என்ற அமரர் நேருஜியின் வாக்கினை இன்று காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் செயல்படுத்துகின்றனர். இவர்களுடைய அறிவுக் கொடைக்கு ஏது கைமாறு? தமிழ்நாடு அரசு போதிய ஆதரவு காட்டிவருகிறது. பல கிராமங்கள் ஏற்புத்திட்டத்தின் கீழ் வந்தன! தொழிற்புரட்சிக்கு வித்திடப் பெற்றது. நூற்றுக் கணக்கான குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப் பெற்றது. சோசலிச சமுதாய அமைப்புக்கு முதற்படியாகக் கூட்டுடைமைச் சமுதாயம் அமைக்கப்பட்டு வருகிறது! இந்தப் பணியில் ஒரு "ஆன்ம திருப்தி" இருக்கிறது! குன்றக் குடி 1985-ல் தன்னிறைவு பெற்ற கிராமமாக உருக்கொள்ளும்! இந்தப் பணியைப் பாராட்டி எழுதி முன்னாள் பாரதத் தலைமையமைச்சர் இந்திராகாந்தி அவர்கள் ஊக்கப்படுத்தி னார்கள். நடுவணரசின் திட்டக்குழு ஆலோசகர்கள் "இந்திய நாட்டுக்கு இஃது ஒரு முன்மாதிரியான பணி" என்று பாராட்டினார்கள். நம்முடைய வாழ்க்கை சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது என்று உறுதிப்படுகிறது. இந்த நிலையில் முதற்சுற்றை முடிக்கின்றோம்.

இனி அடுத்த சுற்றில் நிகழப் போவது என்ன? ஐயத்திற்கே இடமில்லை! இனி எண்ணச் சிதறல்கள், பிசிறல்கள் நம்முடைய வாழ்க்கையில் தலைகாட்ட வாய்ப்

பில்லை. குன்றக்குடியைப்போல நூற்றுக்கணக்கான கிராமங்களைத் தன்னிறைவுடைய கிராமங்களாக நாடு முழுதும் காணவேண்டும். நாட்டை நலிவுறச் செய்யும் வறுமையை எதிர்த்துப் போராடுவதே இனி நமது வாழ்நாட்பணி! சாதி, மதச் சண்டைகளால் சமூக உறவுகள் பாதிக்கப்பட்டுக் கிராமங்கள் ஒளியிழந்து போகாமல் பாதுகாத்து வளர்ப்பதே நம்பணி! "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றார் திருமூலர். "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார் மாணிக்கவாசகர். "ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்றார் பட்டினத்தடிகள். இந்த நாட்டில் மதங்களின் பெயரால் பிரிவினைகளைத் தோற்றுவித்துப் பகைமையை வளர்த்துச் சண்டைகளை மூட்டுகிறார்கள்! இந்திய ஒருமைப் பாட்டைச் சிதைக்கின்றனர். பண்பட்ட சமய நெறியை வளர்ப்பதன்மூலம் ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்த்துச் சமயப் பொதுநெறிகண்டு இந்திய ஒருமைப்பாட்டுக்கு அரண் செய்வது ஆகியன நமது கடமைகள்-பணிகள்!

திருக்குறள் ஒரு வாழ்க்கை நூல். திருக்குறளை நாட்டுப் பொது நூலாக்குவதன் மூலம் திருக்குறளை வாழ்க்கை நெறியாக்க வேண்டும். இந்தப் பணிகளோடு நம்முடைய கருத்துக்களுக்கு எழுத்து வடிவம் தரவேண்டும். இப்போதுள்ள பணி நெருக்கடிகளின் காரணமாகப் பத்திரிக்கைப் பணி அடிக்கடி பாதிக்கிறது. பத்திரிகையை முறையாகக்கொண்டு நடத்துதல் வேண்டும். இரண்டாவது சுற்றில் மேடைப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணம்; முற்றுப் புள்ளியாக இல்லாது போனாலும் கட்டாயம் குறைக்கவேண்டும். 1952-இல் நாம் பேசத் தொடங்கிய பொழுது மடத்தின் தலைவர்கள் என்றவகையில் நாம் மட்டுமே! மேடைப் பேச்சுக்கும் இன்று பல திருமடங்களின் போற்றுதலுக்குரிய தலைவர்கள் தமிழ் நாடெங்கும் சென்று சொற்பொழிவாற்றி வருகின்றனர். அதனால் நாம் மேடைக்கு வராமை தமிழ்நாட்டுக்கு ஒருபெரிய இழப்பாகாது.

ஆனாலும் நம்முடன் வழிநடை போடும் இயக்க நண்பர்கள் அன்பர்கள் இடையில் உறவுகள் வளரவும், கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெறவும், கலந்துரையாடல்கள் நடைபெறும். கலந்துரையாடல்கள் அரங்கக் கூட்டமாக நிகழும். நாம் அவர்களிடத்தில் எடுத்து மொழியும் செய்தி களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஆற்றல் அவர் களுக்கு உண்டு என்பது நம்முடைய நம்பிக்கை. கல்வி நிறுவனங்களுக்குச் செல்வது தவிர்க்க இயலாதது. இந்தக் கட்டுப்பாடு தென்காசி திருவள்ளுவர் கழகம், மதுரை அரச மரத்தடி விநாயகர் இசை இலக்கியப் பேரவை, மதுரை நேரு ஆலால சுந்தர விநாயகர் திருக்கோயில், தேனி வரசித்தி விநாயகர் திருக்கோயில், கிருஷ்ணகிரி விஞ்ஞான ஆசிரியர்கள் கழகம் என்பன போன்ற அமைப்புகளுக்குக் கட்டாயம் விதிவிலக்கு உண்டு. இனி தொடர்ந்து "ஆழமாக கிராமச் சமுதாய மேம்பாட்டுப் பணிகளைச் செய்வது, எழுதுவது என்பதுதான் நம்முடைய தலையாய கடமை" என்று உறுதி எடுத்திருக்கிறோம். அதோடு தமிழ்நாட்டு மக்கள் சமய ஞானமும், தெளிவும் பெறத்தக்க வகையில் எழுதுதல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் ஆகிய பணிகளை மேற் கொள்வதோடு திருத்தொண்டர், நாயன்மார் அடிச்சுவட்டில் என்று நாம் தொடங்கிய செயற்பாட்டு வழிபாட்டு முறை யினை மேலும் ஆழம்படச் செய்வது என்பதும் மற்றவர்களையும் செய்யத்தூண்டுவது என்பதும் நமது தலையாய நோக்கம். இனி எதிர்வரும் இரண்டாவது சுற்றில் இங்ஙனம் நம்முடைய பணிகள் நடைபெறத் திருவருள் துணை செய்யும் என்று நம்புகின்றோம். நம்மைச் சார்ந்த நண்பர்களும், அன்பர்களும் தொடர்ந்து நம்முடைய பயணத்தில் வருவார்கள். இந்த மாற்றங்கள் அவர்களையும், சமுதாயத்தையும் வளர்க்கும் என்று நம்புகின்றோம்.

*"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்"*

என்பது நமது இயக்க அன்பர்களுக்கு இனிய வாழ்க்கைப் பாடமாக அமைய வேண்டும். சமய அடிப்படையில் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் ஒரு சமுதாயத்தை அமைத்துச் சமயம் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியது என்பதை வரலாற்று ரீதியாக நிலைநாட்டுவதே இன்றுள்ள முதற்பணி. வெற்றுச் சடங்குகளில் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்தை மீட்டு, அறிவில் தெளிவும் ஞானமும் பெறச் செய்யவேண்டும். இது இன்றைய வரலாறு நமக்கு விதித்துள்ள கடமை. அறிவியல் வளர்ந்து, பூதபௌதிக உலகை இணைத்திருக்கிறது. ஆனால், மனித இதயங்களை அறிவியலால் இணைக்க இயலவில்லை; இணைக்கவும் முடியாது. அதன் காரணமாக உலகு அழிவின் எல்லையில் நின்று கொண்டிருக்கிறது. இது நீர்வாயுக் குண்டு உலகம்! இந்தக் கெட்ட போரிடும் உலகினைமீட்டு, மனிதகுல ஒருமைப்பாட்டை வளர்த்து, மண்ணில் விண்ணகத்தைக் காண முயற்சித்தலே இன்றைய சமுதாயத்திற்குச் செய்யக் கூடிய கடமை. இந்தப் பணிகளை, இன்று காலம் விதித்துள்ள கடமைகள் என்றுகருதி, திருவருள் நம்பிக்கையோடு செய்வோம். இந்த நெடிய பயணத்தில் நாம் வெற்றி பெற்றால் மனிதகுல வரலாறு நம்மை வாழ்த்தும். நம்முடைய தலைமுறையோடு வறுமை, தீண்டாமை, போர்வெறி முதலிய சமுதாயக் கேடுகளுக்கு ஒரு முற்றுப் புள்ளிவைத்து, அடுத்த தலைமுறைக்குப் புதுமையும் பொதுமையும் நிறைந்த வாழ்வைப் பரிசாக வழங்க வேண்டும். சமயம், சமுதாயத்தை வழி நடத்துவதோடு மட்டுமின்றி மேலாண்மையும் பெற்று, மானிடத்தை நிலைபெறச் செய்யவேண்டும். இந்த எண்ணத்தில் நம்மோடு ஒன்றியிருப்பவர்கள் அனைவரும் நம்முடைய அன்பர்கள்! நம்முடைய அகவினத்தார்கள்! பயணம் தொடரட்டும்! பணிகள் நடக்கட்டும்! பணிகளில் ஈடுபடுவதே ஆன்மாவை, நம்மை உயர்த்திக் கொள்ளும்வழி!

திருத்தொண்டு நெறியே நம்மை உய்விக்கும் நெறி! நாட்டுக்கு ஏற்ற நெறி!

மணிவிழா வந்து விட்டது. இல்லை! ஆர்வ மிகுதியால் வரவழைத்து விட்டனர். விழாக்காணும் அளவுக்கு விழா வாழ்க்கை நடத்தக் கற்றோமில்லை. ஆயினும், அன்புக்கு எங்கே குறை தெரிகிறது. அதனால், விழா எடுத்திருக்கிறீர்கள்! விழா, முற்றுப் புள்ளியாகி விடாமல் வீழாத சமுதாய வாழ்க்கையை அமைத்திடும் வகையில் தொடருமாக! நம்முடைய பாதை கடினமானது தான்! ஆனால், அப்பரடிகளும் அண்ணல் காந்தியடிகளும் சென்ற பாதையே! அவர்கள் சென்ற பாதைதான் என்று தெரியாமல் இடைக்கால இடைவெளி மூடி மறைத்துவிட்டது. அதனால் செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறைவென்று விளங்கவும் எல்லாவுயிர்களும் இன்புற்றிருக்கவும் பணி செய்ய உறுதி எடுத்துக் கொள்வோம்!

# 2

# அடிகளார் நினைவலைகள்

(குமுதம் – 1992 சனவரி அடிகளார் தயாரிப்பு)

## சிவகங்கை மன்னர் வருகிறார்

பொதுவாகத் திருமடத்தில் வசதி படைத்தவர்களுக்கும் பெரிய மனிதர்களுக்கும் தனி விருந்து. சாதாரண மக்களுக்கு-கிராமப்புற விவசாய மக்களுக்கு இரண்டாந்தர உணவு வழங்குவது வழக்கம். இந்த முறையை நாம் விரும்ப வில்லை. நிர்வாகிகளுக்கு இதனை அறிவிக்க ஒரு யுக்தி செய்தோம்.

ஒரு நாள், 'சிவகங்கை மன்னர் வரப் போகின்றார். மதியம் விருந்து தயாரியுங்கள்' என்று உத்தரவு இடப்பட்டது. மடம் சுறுசுறுப்பாக இயங்கியது சுவையான உணவு சமைத்தார்கள். மடத்து முகப்பு சிறப்பாக அலங்கரிக்கப் பட்டது. சிவகங்கை மன்னரை வரவேற்க ஆயத்தம். மணி பகல் 12. ஆனாலும் சிவகங்கை மன்னர் வரவில்லை. நமது மடத்து விவசாயிகள் சிலர் வந்தனர். நாம் விவசாயிகளை வரவேற்று, மடத்து நிர்வாகிகளிடம், "இவர்கள்தான் சிவ கங்கை மன்னர்கள். இவர்களை உபசரியுங்கள்" என்றோம். எல்லோர் முகத்திலும் வியப்பு; ஆம்! நாட்டின் மன்னர்கள் விவசாயிகள்தான். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு திருமடத்தில்

விசேடங்களில் இரண்டு உணவு தயாரிப்பு இல்லை —ஒரே வகை உணவு —ஒரே பந்தி.

## காவிரி பிரச்சனையும் நானும்

**நா**ன் காவேரிக்கரையில் பிறந்து வளர்ந்தவன். அதனால் நன்றாய் நீச்சல் தெரியும். ஒருநாள் நீந்திக் கொண்டிருந்தபோது வெள்ளம் கொஞ்சம் அதிகம் இருந்தது. அடுத்தநாள் ஆடி அமாவாசையானதால் காவேரி பூவும் புனலும் நுங்கும் நுரையுமாய் ஓடிக்கொண்டிருந்தாள். நான் பாதி நீந்திக் கொண்டிருந்தபோது என்னையும் அவள் அடித்துக் கொண்டு போய்விட்டாள்.

ஆனால் காவேரி மிகவும் நல்லவள். அவளிடம் ஒரு நல்ல குணம் என்னவென்றால், அவள் நம்புகிறவர்களை அழிக்க மாட்டாள். அதற்காகவே நிறைய மரங்கள் காவேரியின் கரையில் கவிழ்ந்து நமக்குக் கைகொடுக்கக் காத்திருக்கும். அதுபோலத் தாழ்ந்திருந்த ஒரு மரத்தின் கிளையைப் பிடித்துக் கொண்டு நானும் ஜாக்கிரதையாய்க் கரையில் ஏறிக்கொண்டேன். பிறகு காவேரியைப் பார்த்து மெல்லக் கேட்டேன். "ஆமாம்... உனக்கு ஏன் இத்தனை அவசரம்? கொஞ்சம் மெதுவாய்த்தான் போவதற்கென்ன?" என்றேன்.

அதற்குக் காவேரியன்னை சற்றும் தயங்காமல் பதில் சொன்னாள். "நாளைக்கு ஆடி அமாவாசை. நிறையப் பாவிகள் தங்கள் பாவங்களைக் கழுவுவதற்காக என்னிடம் நீராட வருவார்கள். அவர்கள் வந்து விடுவதற்குள் தப்பித்து ஓடுவதற்காகத்தான் இத்தனை வேகமாய்ப் போகிறேன்."

# இளஞ்சூடு ஆமைக்கு இதமா இருக்கும். ஆனால்...

ஆற்றோரத்துச் சிற்றூர் ஒன்று. அந்த ஊரில் உள்ளவர்கள் ஆமை சமைத்துச் சாப்பிடும் பழக்கமுடைய வர்கள். அடுப்பு மூட்டி உலைப்பானை வைத்து அதில் ஆமை ஒன்றை வேகவைக்க இருக்கின்றான் ஒருவன். உலைப் பானையில் உள்ள நீர் இளஞ்சூடு அடைகிறது. அந்த இளஞ்சூடு ஆமைக்கு இதமாக இருக்கிறது. அடுப்போ தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. என்னாகும்? உலைத் தண்ணீர் கொதி நிலை மாறி ஆமை அழிய நேரிடும். ஆனால் ஆமை எதிர் வரும் துன்பம் அறியாமல் கிடைத்த இன்பத்தில் மகிழ்ந்து விளையாடுகிறது. அதுபோல மனிதர்கள் இவ்வுலக வாழ்க்கையில் கிடைத்த பணம், பதவி, அதிகாரம் இவைகளைச் சதம் என்று எண்ணி இறுமாந்து நடக்கின்றனர். பின்னர் அவர்களின் மகிழ்ச்சிக்குரிய வாயிலாக அமைந்தவையே இறுதிக்கும் காரணமாதலை அறிக.

## எது முக்கியம்?

ஓர் ஊரில் ஒருவனுக்கு விவசாயம் செய்யவேண்டும் என்று திடீர் ஆர்வம் ஏற்பட்டது. முன் பின் அனுபவம் இல்லாதவன். இருந்தாலும் சிரமப்பட்டுத் தன் நிலத்தைக் கொத்திச் சீர் செய்தான். நன்றாய் உழுதான். நிறையத் தண்ணீர் பாய்ச்சினான். பாத்தி கட்டினான். எல்லா வற்றையும் முடித்துவிட்டுப் போய் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கி விட்டான்.

கொஞ்ச நாட்கள் கழித்துப் பார்த்தால் பக்கத்து நிலத்தில் அருமையாய்ப் பயிர் விளைந்திருந்தது. ஆனால் இவன் நிலத்தில் மட்டும் எதுவும் விளையவே இல்லை.

அடித்துப் பிடித்து யோசித்த பிறகுதான் புரிந்தது. இவன் விதை போடவே இல்லை!

## சுண்டலும் சுரண்டலும்

புரட்டாசி சனிக்கிழமை. பஜனை மடத்தில் கூட்டம் மிகுதி. ஆனால் பஜனை முடிந்தவுடன் கொடுப்பதற்குரிய சுண்டல் மிகவும் குறைவாக இருந்தது. நிர்வாகிகள் சுண்டலைச் சீராக விநியோகம் செய்து வந்தனர். ஆயினும் பின்வரிசையில் இருந்த ஒருவருக்குத் திடீரென்று ஐயம் ஏற்பட்டுவிட்டது. 'சுண்டல் நாம் இருக்கும் இடம்வரை வருமா?' உடனே எழுந்தார். முண்டியடித்துப் பலரையும் நெருக்கிக்கொண்டு சுண்டல் சட்டியை நோக்கி ஓடினார். தமது இரண்டு கைகளாலும் சுண்டலை அள்ளிக் கொண்டு ஓட முயன்றார். அங்கிருந்த பலர் அவரைப் பிடித்து, பத்துப் பேருக்கான சுண்டலை அவர் அள்ளிக்கொண்டு ஓடுவதைக் கண்டித்துச் சுண்டலைத் திரும்ப வாங்கிவிட்டனர். இந்தப் பஜனை மடத்தில் புரியும் நியாயம் கூட நாட்டு வாழ்க்கையில் யாருக்கும் தெரிவதில்லையே!

ஐந்தாண்டுத் திட்டங்களால் விவசாயம் செழித்தது. தொழிற்புரட்சி ஏற்பட்டது. நாட்டின் வருவாய் உயர்ந்தது. ஆனால் பல தனி நபர்களின் வருவாய் உயரவில்லையே. ஏன்? பலருடைய பங்கு சிலரிடம் போவதால்தானே! வாழ முடியும் என்ற நம்பிக்கை வழங்கப்படாவிட்டால் சமூகக் குற்றங்களை எப்படிக் குறைக்க இயலும்?

## ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?

ஒரு சமயம் செஞ்சிக்குப் போய்விட்டுப் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். பஸ்ஸின் ஜன்னல் வழியே அகஸ்மாத்

தாய்ப் பார்த்துக் கொண்டு வந்தபோது, ஓர் எல்லைக் குடியிருப்பில் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது. பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லோரும் உதவிக்கு விரைந்தோம். மேற்குப் பகுதிக் குடியிருப்பில்தான் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது. எங்களால் கிழக்குப் பகுதி வழியாகத்தான் அங்கு நுழைய முடிந்தது. நுழைந்தால், பெரிய அதிர்ச்சி. கிழக்குப் பகுதி ஆட்கள், எரியாமல் நன்றாய் இருந்த தங்களின் வீடுகளின் கூரையில் அவசரம், அவசரமாய்த் தண்ணீரை எடுத்து ஊற்றிக்கொண்டிருந்தனர். "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று, விசாரித்தேன். அதற்கு அவர்கள் "அந்தத் தீ எங்கள் பகுதிக்கும் பரவிவிட்டால் எங்கள் வீடுகள் தீப்பற்றிக் கொள்ளுமே! அதற்காகத்தான் இப்படிச் செய்கிறோம்," என்றார்கள். "அடக் கடவுளே! இங்கே கொட்டும் தண்ணீரை அங்கே போய்க் கொட்டினால் அவர்கள் வீடும் பிழைக்கும். உங்கள் வீடும் பிழைக்கும், இடையில் உள்ள வீடுகளும் பிழைக்கும் அல்லவா?" என்று கேட்டேன். இன்று பலர் இப்படித்தான் செய்கிறார்கள். தங்களை மட்டுமே காப்பாற்றிக் கொள்வதில் குறியாய் இருக்கிறார்கள், அடுத்தவர்களைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறை இல்லாமல்!

## என் வயது 17½

நான் பதினேழரை வயதிலேயே ஆசிரமம் வாங்கி விட்டேன்.

அந்தச் சமயத்தில் என் சொத்துக்களைச் சரியான முறையில் என் பெற்றோருக்கு உதவுகிற மாதிரி ஏதாவது செய்துவிட்டு வர வேண்டும் என்று என் மனதுக்குள் ஓர் எண்ணம் இருந்தது.

அது விஷயமாய் என் அண்ணன் தம்பிகளை அழைத்துக் கேட்டேன்.

அவர்கள், "நீ சன்யாசியாய்ப் போய்விட்டதால் உனக்குச் சொத்தில் உரிமை இல்லை" என்று சொல்லி விட்டார்கள். அதனால் வக்கீலைக் கலந்து ஆலோசித்தேன்.

வக்கீல், "நீங்கள் சன்யாசியாய்ப் போயிட்டீங்க... தவிரவும் நீங்க இன்னும் மேஜர் ஆகலை. அதனால் நான் ஒண்ணுமே பண்ண முடியாது," என்று சொல்லிவிட்டார். அதனால்தான் நான் சன்யாசம் வாங்கிக் கொண்டபோது என் வயது என்ன என்பதை என்னால் என்றைக்குமே மறக்க முடியாது.

## மூளைச் சோம்பல் கொள்ளாதீர்

வர வரப் பட்டிமன்றங்கள் மக்களிடையே மிகவும் பிரபலமாகிக் கொண்டு வருகின்றன. எப்போதுமே ஒரு விஷயம் ஜனங்களிடையே பிரபலமாகத் தொடங்கினால் அதன் தரம் தாழ்ந்துவிடுவது இயல்பு. இதைச் சரி செய்ய வேண்டுமென்றால் படித்தவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் படித்தவர்களுக்கே இப்போது மூளைச் சோம்பல் ஏற்பட்டுவிட்டது. தொடர்ந்து படிக்கவேண்டும், சிந்திக்க வேண்டும் என்ற எண்ணமே இருப்பதில்லை. அதனால் கையில் கொஞ்சமாய்ச் சரக்கு வைத்துக் கொண்டு நிறையக் கதை விடுகிறார்கள்.

ஒரு சமயம் மயிலை கபாலி கோயிலில் ஒரு பட்டி மன்றம் ஏற்பாடு செய்திருந்தார்கள். 'தந்தது வுந்தன்னைக் கொண்டது என் தன்னை யார்கொலோ சதுரர்..' என்ற திருவாசகத்தை மையமாய் வைத்து, சதுரர் சிவபெருமானா, மாணிக்கவாசகரா என்று பட்டி மன்றம். முதல் ரவுண்டு முடியப் போகும் நேரத்திலேயே பட்டி மன்றத்தின் தரம் கொஞ்சம் தாழ்ந்த மாதிரி தோன்றியது. மாலைநேரம்.

அருமையான கோயில் சூழ்நிலை. எப்போதுமே மைலாப்பூர் ரசிகர்கள் தரமான நிகழச்சியைக் கைதட்டி வரவேற்று ரசிப்பார்கள். அவர்களுக்குப் போய் இப்படி ஒரு நிகழ்ச்சியா என்று எனக்கே கூச்சமாய் இருந்தது. நான் சொல்லி விட்டேன்- "நம் ரசிகர்கள் நத்தையைப் பொறுக்க வர வில்லை... முத்தைப் பொறுக்க வந்திருக்கிறார்கள்... கொஞ்சம் உழைத்துப் பேசுங்கள்..." என்று. ஆக, பட்டிமன்றங்கள் பாதை மாறும்போது வழிநடத்த வேண்டியது நடுவர் கடமை.

## ஒரு கேரோ

குன்றக்குடியில் ஒரு நாளிரவு ஒருவர் தன் மனைவியை மனம் போன போக்கில் அடித்துத் துன்புறுத்தியுள்ளார்.

நான் ஒரு யோசனை சொன்னேன். அதன்படி குன்றக் குடி மாதர் சங்கத்தினர் பதின்மர் சேர்ந்து, வீதியில் மனை வியை அடித்த - அந்தக் கணவரை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக கேரோ செய்து, 'இனி மனைவியை அடிப்பதில்லை' என்று அவரிடம் உறுதிமொழி வாங்கிக்கொண்டுதான் கேரோவிலிருந்து அவரை விடுவித்தனர்.

## பதிவு செய்யாதீர்கள்

அரசு என்பது வேலை வாய்ப்புத்தரும் ஓர் எந்திரம் என்ற நம்பிக்கை இளைஞர்களிடம் இருக்கிறதே, அதை முதலில் மாற்ற வேண்டும். எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து கொண்டால் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை யாருக்குமே இருக்கக்கூடாது. அரசாங்கம் தன்னுடைய எல்லையை ரொம்பவும் சுருக்கிக் கொண்டு, வேலை வாய்ப்புக்களைக் கூட்டுறவுமுறை, சமூகமே வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளும் முறை என்ற மாதிரியான திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

அரசாங்க வேலை கிடைத்தால் மிகவும் சுலபம் என்ற மனோ நிலை மாறவேண்டும். நல்ல உழைப்பு, நல்ல திறம், இவை வளரவேண்டும். கல்வி என்பதே மாணவர்களிடம் சிந்தனைத் திறனும் செயல் திறனும் உருவாக்கும் விஷயமாக அமைய வேண்டும்.

## என் சவால்! யார் தயார்?

இப்போதைய இளைஞர்கள் ஸ்போர்ட்ஸை வாழ்க்கையின் ஓர் அங்கமாய் எடுத்துக் கொள்ளாமல் ஒரு வெறியுடன் பார்க்கிறார்கள். கிரிக்கெட்டில் ஏற்பட்ட மோகத்தில் டி.வி.க்கு முன்னால் எத்தனை மணி நேரம் வீணாய்க் கழிக்கிறார்கள்! அதில் அவர்களுக்கு ஒரு ஆவேசம் வந்து விடுகிறதே? நம் இளைஞர்களுக்கு வாலிபால், ஃபுட்பால் ஆகியவற்றில்தான் நிறையப் பயிற்சி கொடுக்க வேண்டும். அதில்தான் அதிக உடற்பயிற்சி செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

நான் நன்றாக நீச்சல் அடிப்பேன். வாலிபால் மிகவும் நன்றாய் விளையாடுவேன். இப்போதும் கூட விளையாடத் தயார்தான். என்னுடன் ஆட யார் தயாராய் இருக்கிறார்கள்? இங்கே எல்லோருக்கும் வயதாகிவிட்டது!

## கணவர்களைப் பிடியுங்கள்!

பெண்கள் வேலைக்குப் போவதில் எனக்கு உடன்பாடே கிடையாது. அப்படிப் போனால், நம் நாட்டில் உள்ள சிற்றுண்டிச் சாலை, பேருண்டிச்சாலைகளின் தரம் கூட வேண்டும். நல்ல ஆரோக்யமான உணவு கிடைக்க வேண்டும். ஆர்டர் செய்தால் பத்தே நிமிடங்களில் உணவு வந்து சேரும்படி இருக்கவேண்டும்.

நம் நாட்டில் பெண்கள் வேலைக்குப் போவதால் இரண்டு கஷ்டங்கள். ஒன்று குழந்தைகளுக்காகச் செலவிட போதிய அவகாசம் இல்லை. அடுத்து, பெண்கள் இரண்டு பங்கு உழைக்க வேண்டி வருகிறது. ஏனெனில் எந்த ஆணும் வீட்டுக்குப் போய் மனைவியின் வேலையில் பங்கேற்பதே கிடையாது; நம் நாட்டில்!

இரண்டு சம்பாத்தியங்கள் மட்டும் வேண்டும் என்று இருக்கிறதல்லவா? அப்போது இரண்டுபேரும் வீட்டு வேலைகளைச் செய்யவேண்டியதுதானே?

நான் தாஷ்கண்ட் போயிருந்தேன். தாஷ்கண்ட் யூனிவர்சிடியின் போஸ்ட் கிராஜுவேட் மாணவர்களுடன் ஒரு கலந்துரையாடல். தாஷ்கண்ட் யூனிவர்சிடியின் வைஸ் சான்சலர் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார். அவருடைய மனைவி டைரக்டர் ஆஃப் மெடிக்கல்ஸ். அப்போது அவர்களிடம் நான் கேட்டேன்: "இரண்டு பேரும் இப்படி முக்கியமான வேலை பார்க்கறீங்களே... வீடு என்ன ஆகிறது?"

அவர் சொன்ன பதில் எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. "எங்கள் இரண்டு பேரில் யார் முதலில் வீட்டுக்குப் போகிறோமோ, அவர்கள் சமையல் வேலையை ஆரம்பித்துவிடுவோம்," என்றார். இதுபோன்ற முன்னேற்றம் நம் நாட்டிலும் வந்தால் எத்தனை நன்றாய் இருக்கும்!

## ஏன் வந்தீர்கள்?

**செ**ன்னை, மதுரை போன்ற நகரங்களுக்குள் நுழைவதற்குப் பாஸ்போர்ட் வைக்கலாமே என்பது என் கருத்து. ஏன் நகரத்துக்குள் நுழைகிறான் என்று கேள்வி கேட்க

வேண்டும். கிடுக்கிப் பிடி போடவேண்டும். அப்போதுதான் நகரங்களில் அனாவசியமாக ஜனத்தொகை பெருகாது.

## என்னால் முடியாதது எது?

நான் நேரந் தவறாமையை மிகவும் ஒழுங்காய்க் கடைப் பிடிப்பவன். ஆனால் நம் இந்தியாவில் இந்தச் சமாச்சாரம் ரொம்ப கஷ்டம். எவ்வளவுக்கெவ்வளவு காலதாமதமாய் ஒரு பிரமுகர் வருகிறாரோ, அவர் அவ்வளவுக்கவ்வளவு பெரிய மனிதர் என்று நினைக்கிறார்கள். இதுமாறி, பெரிய மனிதர்கள் எல்லாம் நேரம் தவறாமையைக் கடைப் பிடிக்க ஆரம்பித்து விட்டார்களென்றால் இளைஞர்களுக்குத் தானாக அந்தப் பழக்கம் தொற்றிக் கொள்ளும்.

இரண்டு மாதங்களுக்குமுன் பேராவூரணியில் ஒரு நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். முதலில் அரை மணி நேரம் தாமதமாய்த் துவங்க அனுமதி கேட்டார்கள். சரியென்று கொடுத்தேன். சம்பந்தப்பட்டவர்கள் வரவில்லை. பிறகும் வந்து இன்னொரு அரை மணிநேரம் வேண்டும் என்று கேட்டார்கள். நான், "என்னால் அப்படியெல்லாம் காத்திருந்து நேரத்தை வீணாக்கிக் கொள்ள முடியாது." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு ஊருக்கு வந்துவிட்டேன்.

## குடும்பக் கட்டுப்பாடு!

ஆன்மீக, மனமகிழ் பொழுது போக்கெல்லாம் நம் கிராமப்புறங்களில் பெருகாத வரையில், அது ஏழை ஜனங்களை எட்டாத வரையில், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் கொஞ்சமும் கூடாத வரையில், குடும்பக் கட்டுப்பாடு அங்கே சாத்தியமில்லை. ஏனெனில், ஆண் பெண் உறவைத் தவிர வேறு மகிழ்ச்சி எதுவுமே அவனுக்கு இல்லை. மகிழ்ச்சி, களிப்பு என்பது மனிதனுக்குத் தவிர்க்க முடியாத தேவை.

அதனால் குழந்தைகளைப் பெற்றுப் பொழுதைக் கழிப்பதைத் தவிர வேறு வழி? கள், சாராயமெல்லாம் அதிகமானால் குடும்பக் கட்டுப்பாடு கொஞ்சம் இருக்கும். இவன் பாட்டுக்குச் சாராயத்தை ஊற்றிக்கொண்டு எங்காவது கிடப்பான். மனைவியைத் தொந்தரவு செய்யமாட்டான்.

## வறுமை நீக்கப் போராட்டத்தில் ஈடுபடுவது பயன் தருமா?

காரைக்குடி மத்திய மின் வேதியியல் ஆய்வகம் (சிக்ரி) இயக்குநர் பேராசிரியர் எஸ்.கே. ரங்கராஜன் அவர்களுடன் ஒரு சந்திப்பு.

**அடிகளார்:** அறிவியல் ஆய்வு மனப்பான்மையும் கடவுள் நம்பிக்கையும் முரண்பாடானவையா? அல்லது ஒத்திசைந்து செல்லக்கூடியவையா?

**ரங்கராஜன்:** அடிப்படை முரண்பாடு ஏதும் இல்லை. நம்பிக்கைகள் அறிவியலிலும் உண்டு. உதாரணமாக, இயற்கையில் ஒரு நியதி இருப்பதாக அறிவியல் நம்புகிறது, அதைத் தேடுகிறது- அனுபவ அடிப்படையில்.

உணர்வுகள், தேவைகள், நெறிமுறைகள் போன்றவற்றைச் சார்ந்தே வந்த நம் அனுபவம், தொடர்ச்சியாகக் காலத்தில் மாறி, விரிவடைகிறது. இத்தகைய நீடித்த மாறுதலின் ஊடே, மாறாதிருப்பது எது என்பதைப் புரிந்து கொள்வதே அறிவியலின் குறிக்கோள். கடவுள் நம்பிக்கையின் அடிப்படையும் அதுவே. ஆகவே, இரண்டும் ஒத்திசைந்து செல்லக்கூடியவைதான்.

**அடிகளார்:** சமயத் தத்துவங்கள் ஒருவருடைய இன்ப துன்பத்திற்கு ஊழே என்று கூறுகின்றன. அப்படியிருக்க, வறுமை நீக்கப் போராட்டத்தில் ஈடுபடுவது பயன் தருமா? முயற்சி, சமயத் தத்துவங்களுக்கு முரண்பட்டதல்லவா?

**ரங்கராஜன்:** பொருளீட்டலிலோ, பதவி தேடுவதோ, குடும்பத்தில் ஈடுபடுவதோ ஊழிற்கு முரண்பாடு இல்லையெனில், வறுமையை நீக்குவது மட்டும் எப்படிப் பொருந்தாதிருக்கும்? வறுமைக்கு நம்மை ஆளாக்கிய அதே ஊழ், அதை நீக்க நம்மை அழைப்பதாகக் கொள்ளலாமே!

நாளைய நடப்புதான் இன்றைக்கு வித்திடப்படுகிறது. இதைத்தான் எதிர்காலத்தின் விதி முன்னதாகவே எழுதப் படுகிறது என்று கூறுகிறோம். அதாவது, இன்றைய அனுபவம், நேற்றைய சிந்தனைகளின் நிகழ்ச்சிகளின் விளைவுகள். இந்தக் காரண, காரிய பின்னலைத்தான் அறிவியலும் ஆராய்கிறது. சமயமும் 'ஊழ்' என்ற சொற்கொண்டு குறிப்பிடுகிறது.

**அடிகளார்:** அறிவியல் வளர்ச்சிக்கும் உலகத் தொடர்புக்கும் ஆங்கில வழிக் கல்விதான் ஏற்றது என்று தாங்கள் கருதுகிறீர்களா? அல்லது தாய்மொழிவழி அமைய வேண்டுமா?

**ரங்கராஜன்:** நிச்சயமாகத் தாய்மொழி வழிதான் ஏற்றது. ஆனாலும், ஆங்கில மொழிவழி ஓர் தற்காலிக உத்தியாக அவசியமாகிறது. ஆங்கிலத்தில் 'முழுங்குவதை' விட்டு, தாய் மொழியில் 'சுவைத்து உண்ண' நாம் தயாரானவுடன், ஆங்கிலம் கையாளுவதை அளவுடன் கொள்ளலாம்; நிறுத்தலாம்.

**அடிகளார்:** தெற்காசியப் பகுதியை ஆயுதக் கருவிகள் இல்லாத மண்டலமாக்குதல் பற்றித் தங்கள் கருத்து என்ன?

**ரங்கராஜன்:** தெற்காசியப்பகுதி மட்டுமல்ல, உலக முழுவதிலுமே அணு ஆயுதம் அறவே ஒழிக்கப்பட வேண்டும். நடை முறையில் இதைக் கொணர விவேகம் வேண்டும். நாடு, இனம், ஆக்கிரமிக்கும் ஆசை ஆகியவைகளுக்கப்பால் செயல்படும் திண்மை வேண்டும்.

**அடிகளார்:** இந்தியா சுதந்திரம் பெற்றது முதல் அறிவியல் துறையில் சார்ந்த தொழிற்புரட்சியிலும் வேளாண்மைத் துறையிலும், ஏன், கால்நடை வளர்ப்புத்

துறையிலும்கூட நிறைய சாதனை செய்திருக்கிறது. அப்படியிருந்தும் இந்தியாவில் வறுமை இருப்பதற்குக் காரணம் என்ன?

ரங்கராஜன்: வறுமை ஒழிப்புப் போராட்டத்தில் அறிவியல், தொழிற்புரட்சி ஆகியவைகளின் பங்கு முக்கிய மானாலும், முழுமையானதல்ல. சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகளும் இந்தச் சவாலுக்கேற்ப வளர்ச்சி கண்டிருந்தால் வெற்றி இதைவிட இன்னும் அதிகம் இருந்திருக்கும்.

சேர்ந்து வாழுவீரோ - உங்கள் சிறுமைக் குணங்கள் போச்சோ?

சோர்ந்து வீழ்தல் போச்சோ- உங்கள் சோம்பரைத் துடைத்தீரோ!

என்ற கேள்விகளுக்கு இன்னமும் விடை இல்லை.

அடிகளார்: தாங்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்குக் கூறும் செய்தி என்ன?

ரங்கராஜன்: விவேகானந்தர்களாக மாறுங்கள்! "உழைத்தல் வேண்டும், அயராது அன்போடு உழைத்தல் வேண்டும். சுயநலத்தோடு உழைப்பது அடிமையின் வேலை. பிறருக்காக உழைப்பதே தலைவனின் வேலை."

# பிரபலங்களுடன் ஏற்பட்ட சில அனுபவங்கள் பற்றி.

## தந்தை பெரியார்:

### கறுப்புக்கொடி காட்டாதீங்க

அப்போது ஜஸ்டிஸ் பார்ட்டி, நான்பிராமின் இயக்கம் என்றெல்லாம் இருந்ததால், தமிழ் இனமே பிளவுபட்டு

விடுமோ என்று நான் பயந்து கொண்டிருந்தேன். அந்த அளவுக்குத் தீவிரமாய்ப் போய்க் கொண்டிருந்தது. சில உயர் தலைவர்கள் அடங்கிய ஜஸ்டிஸ் கட்சியும் நாங்களும் ஈரோட்டில் சந்தித்துப் பேசுவதாய் ஏற்பாடானது. அந்தச் சந்திப்பில்தான் ஓரளவு எங்களுக்குள் இணக்கம் ஏற்பட்டது.

பெரியாரை எனக்கு இன்னமும் பிரியமானவராய்ச் செய்தது ஒரு நிகழ்ச்சி. திருச்சியில் ஜீவாவின் மகள் கல்யாணம் ஏற்பாடாகியிருந்தது. ஜீவா பெரியாருக்கும் வேண்டியவர், எனக்கும் வேண்டியவர். நானும் பெரியாரும் தான் அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் ஏற்பாடு செய்து வைத்தோம். பெரியார் மாளிகையில்தான் கல்யாணம் வைத்திருந்தோம். நான், பெரியார், அப்போது முதலமைச்சராய் இருந்த அறிஞர் அண்ணா எல்லோரும் கல்யாணத்துக்குப் போயிருந்தோம்.

பெரியாரின் சீடர்கள் கறுப்புக் கொடியை, கையில் வைத்துக்கொண்டு, "கடவுள் இல்லை. கடவுளைப் பரப்புபவன் அயோக்கியன், கடவுளை நம்புகிறவன் காட்டு மிராண்டி," என்பது போன்ற வாசகங்களையெல்லாம் எழுதிக்கொண்டு வந்திருந்தார்கள்.

பெரியார் எப்போதும் என்னைச் **சந்நிதானம்** என்றுதான் அழைப்பார். தன் சீடர்களைக் கூப்பிட்டு, "டேய் **சந்நிதானம்** வந்திருக்காருடா... இங்கே எதுக்குக் கறுப்புக் கொடியும் இன்னொன்றும்?" என்று அதட்டுப்போட்டு அடக்கிவிட்டார். **கறுப்புக்கொடி** வேண்டாம் என்று சொன்னதோடு நில்லாமல் எல்லாவற்றையும் எடுத்து உள்ளே போட்டுவிட்டார். அந்த அளவுக்கு அவர் மனிதர்களின் மனங்களை மதித்தவர்.

### கலைஞர் கருணாநிதி:

**தெ**ன்னரசு ஒரு முறை, "அடிகளார் தி.மு.க. ஆதரவாளர் அல்ல," என்று கலைஞரிடம் கூறினார். கலைஞர்,

"அடிகளார் அவர்களிடம் நாம் காட்டும் மரியாதை தி.மு.க. என்பதற்காக அல்ல. அடிகளார் தமிழார்வலர். சமூக நெறியாளர் என்பதற்காகத்தான்", என்று பதில் கூறினார்.

## எம்.ஜி.ஆர்:

மண்டைக்காடு கலவரத்தின்போது, முதலமைச்சர் என்ற முறையில் சமாதானம் செய்து வைக்க எம்.ஜி.ஆர். சென்றார். நிலைமையைக் கட்டுப்படுத்த அவரால் முடிய வில்லை. திரும்பி விட்டார். பிறகு நான் சென்றேன். ஒரு மாதத்துக்குக் கிட்டத்தட்டத் தங்கிச் சமாதானம் செய்து வைத்துவிட்டுக் கிளம்பி வந்தேன். அதை, வெளிப்படையாய், சட்டசபையிலேயே மனம் திறந்து பாராட்டினார். "அடிகளார் சமாதான முயற்சிகளை நல்ல முறையில் செய்தார். ஒரு மடாதிபதி என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும்," என்று என்னை ஓர் எடுத்துக்காட்டு போலப் பேசினார்.

## நேரு:

டெல்லி தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த பாரதி விழா அது. நேரு தொடங்கி வைத்தார். நான் தலைமை தாங்கினேன். அதன்பிறகு நம் மாவட்டத்துக்கு ஒரு முறை வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன். பள்ளிக்கூட விழாவுக்கு வந்திருந்தார். பொதுவாகவே 'பொலிட்டிகல் எகானமி' விஷயத்தில் அவரைத்தான் நான் மிகவும் அட்மயர் செய்வேன். லெனின், மார்க்ஸ், விவேகானந்தர், திருவள்ளுவர், அப்பர் சுவாமிகள் இவர்களுக்கு அடுத்தபடி எனக்கு நேருதான் வழிகாட்டி.

## என் குரு சுவாமி விபுலானந்தர்:

அவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் புரொபசராய் இருந்தார். அவர் வீட்டுக்கு அடிக்கடி

போவேன். அப்போது நான் சின்னப் பையன். அவருக்கு நிறையப் பணிவிடைகள் எல்லாம் செய்வேன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவர் சேரிக்குப் போவார். கொஞ்சம் பொட்டுக்கடலையும் சர்க்கரையும் மடித்து எடுத்துக் கொள்வோம். அங்கே போய்ப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித் தருவார். பிறகு அந்தப் பொட்டுக்கடலை சர்க்கரையை விநியோகம் செய்வார். பிறகு வீட்டுக்கு நடந்து வருவோம். அப்போது அவருக்குப் பாதை தெரிவதற்காக நான் அரிக்கேன் லைட் எடுத்துக் கொண்டு வருவேன். சுவாமி விபுலானந்தா எங்கே போனாலும் அவருடன் நானும் போவேன். இப்படியெல்லாம் பழக்கம் நெருக்கமானது. கடைசியில் அவர் யாழ்ப்பாணத்துக்குப் போகிறேன் என்று கிளம்பியபோது எனக்கு ஏற்பட்டிருந்த நெருக்கத்தின் காரண மாய்ப் பிரிவு தாங்க முடியாமல் நானும் வருகிறேன் என்று கத்தினேன். 'இந்தச் சின்னப் பயலைக் கூட்டிப்போய் என்ன செய்வது' என்று நினைத்திருப்பார் போலும். நான் தூங்கிக் கொண்டிருந்த நேரமாய்ப் பார்த்துக் கிளம்பிப் போய் விட்டார். இத்தனைக்கும் அவருடன் போக வேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் வீட்டிலேயே போய்ப் படுத்துக் கொண் டிருந்தேன்!

## 1992–ல் வறுமையின் குரல் வளையைப் பிடித்துவிடுவேனா?

நாம் அண்மையில் படித்த, படித்துக் கொண்டிருக்கிற புத்தகம் ஸ்காண்டிநேவியாவின் சமூகவியல் பேராசிரியர்கள் கோரான் ஜூர்ஃபெல்ட் - ஸ்டஃபான் லிண்டர்பர்க் ஆகியோர் எழுதிய 'வறுமையின் பின்னணி' என்ற புத்தகம். இந்தப் புத்தகம் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த தையூர் என்ற கிராமம் பற்றிய ஆய்வு. கிராமத்தில் வறுமை

எப்படித் தோன்றுகிறது, வளர்கிறது, சமுதாய வளர்ச்சிப் பணிகளையும் தாண்டி எப்படிக் கிராமங்களில் வறுமை நிலைபெறுகிறது என்பதை விளக்கும் புத்தகம். இந்தப் புத்தகம் என் வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கிராமப்புற வறுமை நீக்கப் பணியை மேலும் ஆழமாகச் செய்யவேண்டும் என்ற உணர்வைத் தந்துள்ளது.

அரசாங்கத்தின் விலைவாசிக் கொள்கைகள், பொருளாதாரக் கொள்கைகள் ஆகியவை சரியாக இல்லாததால் நம்முடைய வாழ்க்கைத் தரம் மனநிறைவாய் இருக்கிறது என்று சொல்ல முடியாது. அதனால் 91-92 இல் என்னுடைய பயணங்களைக் குறைத்து எங்கள் கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக்கி, எந்தப் பண்டமுமே வெளியில் காசு கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. விலைவாசி உயர்வினால் எங்கள் கிராமம் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் வறுமையின் குரல் வளையை நெறிக்க முடியும். இல்லை யென்றால் என்னாகும்?

இன்றைக்குக் கிலோ அரிசி ஆறு ரூபாய் விற்கிறது. நகர்ப்புறத்தில் பணப் புழக்கம் இருப்பதுபோல் இன்று கிராமப்புறத்தில் புழக்கமும் கிடையாது.

இந்த நிலையில், அப்படி ஒருவன் தன் நிதி நிலைமைக்குள் தனது தேவைகளைக் கவனிக்க முடியாத நிலைமை ஏற்படுமானால், கிராமத்துக்கென்று ஒரு பொதுநிதியை உருவாக்கவேண்டும். அந்த நிதியிலிருந்து அவனுடைய தேவைகள் கவனிக்கப்பட வேண்டும்.

எங்கள் கிராமக் குழந்தைகளுக்குச் சத்துணவு சரியானபடி கிடைக்கவில்லை. ஒரு குழந்தைக்குப் பத்துக்காசுதான் கொடுக்கிறார்கள். ஒரு கத்தரிக்காய்கூடக் கிடைக்காது அந்தத் தொகைக்கு.

அதனால் நாங்கள் ஒரு குழந்தைக்கு 150 கிராம் காய்கறி கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டு அதற்கான உற்பத்தித் திட்டமும் போட்டு நிறைவேற்றத் துவங்கியிருக் கிறோம். நாங்கள் அரசுக்கு என்ன சொல்லிக் கொள்ள விரும்புகிறோம் என்றால், தரிசு நிலங்கள் வீணாய்ப் போவதைக் காட்டிலும் விவசாயிகளை வைத்துக் காய்கறி களைப் பயிர் செய்யுங்கள். அதில் வருவதைக் குழந்தைகள் சத்துணவுக்குச் செலவிடுங்கள். அப்படிச் செய்தால் குழந்தை களும் பலன் பெறுவார்கள். தரிசு நிலங்களும் உபயோகப் படும். அப்படிச் செய்யாமல் காசாகக் கொடுக்கிறீர்களே, அந்தக் காசுக்கு அவர்கள் காய்கறிகள் வாங்குகிறார்களா என்று யார் கவனிப்பது?

எல்லோருமே ஒரு விஷயம் புரிந்துகொள்ள வேண்டும். நான் சுயநலமாய் என் கிராமத்தை மட்டும் முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படவில்லை. என் ஊரை மட்டுமல்லாமல், பசும்பொன் மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்துக்கு அருகில் ஒரு சிறிய ஊரையும் எங்கள் திட்டத்தின் கீழ்கொண்டு வரவிருக் கிறோம். தஞ்சை மாவட்டத்தில் நாங்கள் தேர்ந்தெடுத் திருக்கும் ஊர், கீழ்ப்பழையாறை என்பது. அது மங்கையர்க்கரசி பிறந்த ஊர். ஏழாம் நூற்றாண்டில் சமண சமயத்தோடு போராடியவர் மங்கையர்க்கரசி. பாண்டியன் நெடுமாறனுடைய மனைவி.

அடுத்தபடியாய், நாயன்மார்கள், ஆழ்வார்கள் இவர்கள் பிறந்த ஊர்களுக்கும் வாழ்ந்த ஊர்களுக்கும் கொஞ்சம் முக்கியத்துவம் தர வேண்டும் என்பது என் விருப்பம்.

அதேபோல் நந்தனார் என்னும் திருநாளைப்போவார் பிறந்த மேலாதனூர் எடுத்துச் செய்துகொண்டிருக்கிறேன்: அதுவும் தஞ்சை மாவட்டத்தில்தான் இருக்கிறது. ராமானுஜர்

மதில் மேல் ஏறி உபதேசம் செய்த திருக்கோஷ்டியூரையும் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

ஆகவே, என் பணிகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் முடங்கிவிடப் போவதில்லை. இனிமேல் செயலுக்கு முக்கியத் துவம் கொடுத்துப் பேச்சுக்கு இரண்டாம் இடம் கொடுப்பது என்று தீர்மானித்திருக்கிறேன்.

## பொங்கல் நாள்

நாங்கள் எங்கள் பண்ணையில் பொங்கல் கொண்டாடுவதைப் பார்க்கவே மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கும். பெரிய திடலில் பொதுப் பொங்கல் போடுவோம். அன்று சிறந்த விவசாயிகளுக்குப் பரிசு கொடுப்போம். இதற்காகவே ஒரு தேர்வுக் கமிட்டி உள்ளது. கதிர் விடும் சமயத்திலே கமிட்டி போட்டு விட்டோமென்றால், அவர்கள் கதிரை எடுத்து நெல்மணிகளை எண்ணி, எந்த விவசாயியின் கதிரில் அதிக நெல்மணிகள் இருக்கின்றனவோ, அவர் களுக்குப் பரிசு என்று அறிவிப்பார்கள்.

பொங்கல் தினமாதலால் எல்லோருக்கும் பிரசாதம், திருநீறு எல்லாம் கொடுப்பேன்.

# காலணா கொடுத்தால் திருக்குறள்

திரு. பரமகுரு

சின்ன வயதில், அடிகளாரின் பூர்வாசிரம அண்ணன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டி ருந்தார். அப்போது அடிகளார் அங்கு இருந்த புரொபசர் களுக்குப் பால் கொண்டு போவாராம். விபுலானந்தர், ரா.பி. சேதுப்பிள்ளை இவர்கள் அந்த வரிசையில் இருந்தவர்கள்.

G.XVI.S.

ரா.பி. சேதுப்பிள்ளைக்குப் பால் கொண்டு போகும் போது, அவர் அடிகளாரைத் தினந்தோறும் ஒரு திருக்குறள் சொல்லச் சொல்லுவாராம். அப்படி மனப்பாடமாய்ச் சொன்னால் காலணா தருவாராம். அந்தக் காலணாவை வாங்குவதற்காகவே அடிகளார் தினமும் ஒரு திருக்குறள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பாராம். அதனாலேயே அவருக்குத் திருக்குறளில் ஆழ்ந்த பற்றும் ஆர்வமும் ஏற்பட்டது என்று அடிக்கடி சொல்லுவார்.

இலக்கிய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு நான் 23 வருடமாய் அடிகளாரின் உதவியாளன்.

## நாங்கள் எப்போதெல்லாம் கூப்பிடுகிறோமோ, அப்போதெல்லாம் உடனே சாமி வருவார்

**செல்வராஜ் (அடிகளாரின் உதவியாளர்):**

**நா**ன் இங்கு அறுபத்தைந்தாம் வருடத்திலிருந்து வேலை செய்கிறேன்: அடிகளார் (சாமி) பட்டத்துக்கு வரும் போது நான் பள்ளி மாணவன். சாமி பட்டத்துக்கு வந்த போது ஏழ்மை நிலையில்தான் கிராமம் இருந்தது. அவர் வந்தபோது மடத்தில் கஞ்சித்தொட்டி ஊற்ற வேண்டிய நிலை! அதாவது, ஊர்க் குழந்தைகளுக்கெல்லாம் மதியம் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் கஞ்சி ஊற்றுவார்கள். அந்த நிலையில் இருந்த பள்ளிக்கூடத்தை எடுத்துச் சீர்திருத்தியவர் சாமிதான்.

சாமி ரஷ்யாவுக்குப் போய்வந்த பிறகு கூட்டுறவு நிறுவனங்களை நிறுவ வேண்டும் என்று தீர்மானித்தார் அப்போது 1975இல் நெருக்கடி நிலை பிரகடனம் ஆனது. 1977இல் கிராமத்தை மிகவும் நன்றாய் மேம்படுத்த நினைத்தார். அப்போது சென்ட்ரல் எலக்ட்ரோ கெமிக்கல்

ரிசர்ச் சென்ட்டர் எனப்படும் சிக்ரியின் உறவு கிடைத்தது. அந்த விஞ்ஞானிகளின் ஒத்துழைப்புடன் கிராமத் திட்டக்குழு ஒன்றை அமைத்தார்கள். யோசனைகளை அவர்களிடமும், நிதியுதவிக்கு பாங்கையும் அணுகினார் அடிகளார். திட்டங்களுக்கு அரசின் உதவியை நாடினார்.

அப்போதுதான் கூட்டுறவு நிதி நிலைமையில் மேம்பாடு எல்லாம் ஏற்பட்டது. கிராமத்து விவசாயிகளுக்கு வருமானம் மேம்பட்டது. பிளாஸ்டிக் தொழிற்சாலை, முந்திரிக் கொட்டையின் ஓட்டிலிருந்து பெயிண்ட் தயாரிக்கும் தொழிற்சாலை, கார் பாட்டரிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, பொட்டாசியம் குளோரைடு தொழிற்சாலை ஆகியவை ஏற்பட்டன. கடைசி இரண்டு ஐட்டங்களும் ஹைடெக்னாலஜி. அதுகூடக் கிராமத்தை எட்டியதற்குச் சாமிதான் காரணம்.

படித்தவர்களுக்கு, படிக்காதவர்களுக்கு, பெண்களுக்கு எல்லோருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கிற மாதிரி செய்து விட்டார். எதுவுமே செய்ய லாயக்கில்லாதவர்களுக்குக் கூடக் கல் உடைக்கும் தொழில்!

எங்கள் கிராமத்து இளைஞர்கள் நன்கு படித்து, பொறியியல் போன்ற துறைகளில் மேற்கொண்டு படிக்க விரும்பினால் சாமியே சீட் வாங்கித் தருவார்.

இங்கு 544 குடும்பங்கள் உள்ளன. அனைத்திலும் உள்ள ஒவ்வொருவரையும் சாமி தனித்தனியாய் நன்கு அறிவார் குழந்தைகளைக்கூட நன்றாய்த் தெரியும்.

**டாக்டர் கே. பாலகிருஷ்ணன் (சிக்ரி சேர்மன்):**

**1976** ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் எங்களை இந்த ஊரில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம். முன்பு பாலித்தீன் பைகள் வாங்கி ஒட்டுவது மட்டும் செய்து கொண்டிருந்தார்கள். 1976இல் சிக்ரி இந்த ஊரைத் தத்து எடுத்துக்கொண்ட பிறகு,

ஒவ்வொன்றையும் எவ்வாறு முன்னேற்றலாம் என்று ஆராய ஆரம்பித்தார்கள். திட்டக்குழு என்ற ஒன்றை அமைத்தார்கள். சிக்ரியின் விஞ்ஞானிகள், வங்கி அதிகாரிகள், அரசு அதிகாரிகள், கிராமவாசிகள் ஆகியோர் அதில் இருக்கிறார்கள். விஞ்ஞானிகள் இந்தக் கிராமத்துக்கு என்னென்ன தொழில்கள் பொருத்தமாய் இருக்கும் என்று ஆய்வு செய்து சொல்லுவார்கள். சூழ்நிலையும் கெடாமல் குறிப்பிட்ட அளவில் வேலைவாய்ப்பும் கிடைக்கிற மாதிரியும் ஒரு அறிவியல் தொழில் நுட்பக் கண்ணோட்டம் வரும் வகையிலும் சொல்வார்கள். ஏற்கனவே இருந்த கதர் கிராமத்தொழில் போன்றவற்றில் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும் ஆய்வுகள் செய்வார்கள்.

அடிகளாரால் எங்கள் கிராமத்துக்கு ஏகப்பட்ட நன்மைகள். எத்தனையோ பேருக்கு வேலை வாய்ப்புக்கள். டி.வி. அசெம்பிள் செய்யும் யூனிட் போட்டிருக்கிறோம். எலக்டிரானிக் கருவிகள் டிரெயினிங் சென்டர் போட்டிருக்கிறோம். எங்கள் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் பாட்டரித் தொழிற்சாலை நிறுவியிருக்கிறோம்.

நாங்கள் தினசரி மாலை வேலைகளிலோ, சனி ஞாயிறுகளிலோ ஒரு மீட்டிங் போடுவோம். ஆரம்பித்த தொழில்கள் எப்படி நடக்கின்றன என்று அதில் அலசி ஆராய்வோம். பொதுவாக, நிர்வாகச் சிக்கல்கள் நிறைய வரும். மூலப்பொருட்கள் கிடைக்காமல் போகலாம். குறிப்பிட்ட நேரத்தில் லைசன்ஸ் கிடைக்காமல் போகலாம். அல்லது மூலப்பொருள்களுக்குப் பணம் கிடைக்காது. சில நேரங்களில் தேவையான அனுமதி கிடைக்காது. அதுபோன்ற சமயங்களில் சாமிதான் தலையிட்டுத் தீர்த்து வைப்பார். கலெக்டரிடம் பேசியோ அல்லது தேவைப்பட்ட பெரிய அதிகாரிகளிடம் பேசியோ நமக்குச் சாதகமாக முடித்துக் கொடுப்பார். தொழில் நுட்பத்தைப் பொறுத்தவரையில் அது எங்கள் சம்பந்தப்பட்டதாய் இருந்தால் உடனடியாகத்

தீர்த்துக் கொண்டு விடுவோம். அதற்கு வெளியாட்களின் உதவி தேவை என்னும் பட்சத்தில் உடனே டிரங்க்கால் போட்டு வரவழைத்து விடுவார் சாமி. எங்களுக்கு எப்போது தேவை என்றாலும் சாமி வருவார். அவர் எங்கே இருந்தாலும் போனில் அழைத்துப் பிரசினையைச் சொல்வோம்.

கிராமத்துக்கு வேண்டிய முன்னேற்றத்தை அடிப்படை நிலையில் அவர் அருமையாய் ஏற்படுத்தி வைத்திருந்தார். மாதர் சங்கம், சிறுவர் சங்கம், கிராம நலச் சங்கம், என கிராம முன்னேற்றத்திற்கு என்னென்ன கூட்டுறவு அமைப்புக்கள் வேண்டுமோ அவை அனைத்தையும் தயாராய் வைத்திருந்தார். மக்களையும் தயார்ப்படுத்தியிருந்தார். அதனால்தான் இந்த அட்வான்ஸ்டு டெக்னாலஜியை கிராம மக்கள் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்றிருக்கிறார்கள்.

## வீரப்பன் அம்பலம்:

இங்குள்ள நேருஜி பாலித்தீன் சங்கத்தின் மூலமாக அச்சு இயந்திரம் வாங்கி, பாலித்தீன் பைகளில் அச்சடிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். எங்கள் ஃப்ளுரைடு ஆலையிலும் நாங்கள் ஏற்றுமதி செய்துள்ளோம். இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்றுமதி செய்வது என்பது இந்தக் குன்றக்குடியில் உள்ள சங்கத்தின் மூலமாகத்தான் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தானே? இதே மாதிரி ஃப்ளுரைடு வேண்டுமென்று வெளிநாடுகளில் கேட்கிறார்கள். அதற்காகவே தற்போதுள்ள கூட்டுறவுச் சங்கங்களை மேலும் மெஷின்கள் வாங்கி விரிவு படுத்தத் தீர்மானித்திருக்கிறோம்.

மேலும் இங்கு முந்திரியின் தோலைக் கொண்டு பெயிண்ட் தயாரிக்கும் ஆலை ஒன்று வைத்திருக்கிறோம். தற்போது ஐயாயிரம் லிட்டர்கள்தான் தயாரிக்கிறோம். மேற் கொண்டு பத்தாயிரம் லிட்டர்கள் தயாரிக்க ஏற்பாடுகள் செய்துவருகிறோம்.

டாக்டர் ஷெனாய் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றும் இயங்கி வருகிறது. இதை இன்னும் விரிவாக்கி வீடுகளுக்குத் தேவையான பொருட்களும், பஸ்ஸில் போகும்போது நாம் பிடித்துக் கொள்கிறோமே, அந்தக் 'கிளாம்ப்' எல்லாம் செய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறோம். இத்தனை சிறிய கிராமத்தில் இவ்வளவு தொழிற்சாலைகள் இயங்கி வருகிறது என்பது மிகவும் பெருமையளிக்கிறது.

## அம்மாவிடம் நான் சொன்ன பொய்

என் பதினேழாவது வயதிலேயே எனக்கு ஆன்மீக ஆர்வம் தொடங்கிவிட்டது. பிற்பாடு தருமபுரத்தில் அவர்களுக்கே ஒருவர் தேவையாய் இருந்து என்னைக் கேட்டார்கள். துறவுக்கு அனுமதி வாங்கிக்கொண்டு வருவதாய்ச் சொல்லிவிட்டு ஊருக்கு வந்தேன். வீட்டில் பயங்கர எதிர்ப்பு. என் தாயார் பயந்து விட்டார். "அதெல்லாம் ஒண்ணும் வேணாம்டா ரங்கநாதா, (அதுதான் என் பெயர்) நீ வேலை பார்த்துக் கிழிச்சது போதும். இங்கேயே இருந்து காடு கழனியையெல்லாம் பாத்துக்கோ," என்றார். நான் சும்மா தலையாட்டி விடவில்லை. "நான் வேலை பார்க்கும் இடத்தில் மேலிடத்துக்குச் சொல்லாமல் வந்தால் அது தப்பு. நான் ஒரு நடை போய்ச் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்," என்று அவர்களிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் துறவறம் மேற்கொண்ட பிறகு என் மனதில் சஞ்சலங்கள் வந்ததே கிடையாது.

# 3

# மண்ணும் மனிதர்களும்

## முகவுரை

'ஆனந்த விகடன்' என்றால் புகழ்மிக்க எஸ்.எஸ். வாசன் அவர்கள் நினைவுக்கு வருவார். பேரறிஞர் அண்ணா காலத்தில் சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் ஊர்வலத்துக்குத் தமிழ்த் தேர்கள் செய்து தந்த பெருமை எஸ்.எஸ். வாசன் அவர்களுக்கு உண்டு.

இந்த நினைவு அலைகளுடன் 1992-ம் ஆண்டு சுதந்திர தினத்திலிருந்து நமக்கு ஓர் ஆனந்தம் வந்திருக்கிறது. எழுதுவதே ஓர் ஆனந்தம்! கடந்த காலச் சுவையான அனுபவங்கள், நிகழ்காலப் போக்குகள் இவற்றை நினைத்துச் சுவைத்து எழுத எண்ணம்.

வாழ்க்கையென்பது நிகழ்வுகளால் ஆன தொகுப்பு. நிகழ்வுகளே புவியை நடத்தும் உயிர்சக்திகள். எந்த ஒரு நிகழ்விலும் நிகழ்வு முக்கியமல்ல...அந்த நிகழ்வில் பொதிந்துள்ள எதிர்கால வளர்ச்சிக்குரிய வித்துதான் முக்கியம். நிகழ்வு விரிவாக எழுதப் பெற்றால் வரலாறு. வரலாற்றைக் கவிதைப் பாங்கில் உணர்ச்சி கொப்பளிக்க எழுதினால் காப்பியம். நிகழ்வுகளை-இல்லை, நிகழ்வுகளின் ஊடே இருக்கும் புத்துயிர்ப்பு வாயில்களை எதிர்கால வரலாற்றுக் குரிய வித்தை, உந்து சக்தியைக் கண்டு எழுதுதல் இலக்கியம்.

பெரும்பாலும் நிகழ்வுகள் மலடாவதில்லை. அதுபோலவே, பழமையும் உயிர்ப்புடன் உலா வந்தால் அது பழமையல்ல, அந்தப் பழமையே புதுமையாக பரிணமிக்கிறது. புதுமையாகப் பரிணமிக்காத பழமையாக இருப்பின் அந்தப் பழமை ஒன்றுக்கும் ஆகாது. நமக்கு உயிர்ப்பு வேண்டும். வாழ்ந்தாக வேண்டும். வையகத்தோடு இணைந்து வாழ வேண்டும். கடந்த காலம் மிகக்குறுகிய எல்லையுடையதே. ஆயினும் பலரைச் சந்தித்திருக்கின்றோம். கலந்து பேசியிருக் கின்றோம். அவர்களுக்கு நாம் பயன்பட்ட நிகழ்ச்சிகள் உண்டு. அவர்களை நாம் பயன்படுத்திக் கொண்ட நிகழ்ச்சி களும் உண்டு. இன்று மட்டும் என்ன? என்றுமே மறக்க முடியாது, நினைந்து அசைபோட முடியும்.

நமது வாழ்க்கையின் தொடக்க காலத்திலிருந்தே நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்துள்ளன. ஏன், விரைவாகக்கூட நடந்து வந்துள்ளன. பண்ணைக்காரராக வாழ விரும்பிய நமக்கு அது கொடுத்து வைக்கவில்லை! ஆனால், பெரிய பண்ணை கிடைத்திருக்கிறது. நமது வாழ்க்கைப் போக்கைக் கூர்ந்து பார்த்தால் முரண்பாடு களுக்கிடையே செல்வதை உணர முடியும்! ஏன் இந்த முரண்பாடு?

இவையெல்லாவற்றையும் ஆராய்ந்து எழுதும் முயற்சி இது. மதிப்பீடு செய்யவேண்டியது வாசகர்களின், பொறுப்பும் கடமையுமாகும்!

இது சுயசரிதையும் அல்ல... சுயவிளம்பரமும் அல்ல, நமது வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளின் வழி, எதிர் காலச் சமுதாயத்துக்குப் பயன் படக்கூடிய வித்துக்கள் இக்கட்டுரைகள் வாயிலாகக் கிடைக்கும் என்று நம்பு கின்றோம்!

சுதந்திரத்துக்கும் ஆனந்தத்துக்கும் தொடர்பு உண்டு. அதனால்தான் 'பாரதி, 'ஆனந்த சுதந்திரம்' என்றான்.

ஆனால், இன்று நாம் அனுபவிப்பது ஆனந்த சுதந்திரம் தானா? சுதந்திரம் ஆனந்த சுதந்திரமாக நாம் என்ன செய்ய வேண்டும்? இவற்றையெல்லாம் உபதேசங்களாக எழுத எண்ணம் இல்லை; நிகழ்வுகளின் போக்கிலேயே விளக்கலாம் என்று எண்ணம். திருக்குறள் வழிகாட்டட்டும்.

எல்லாவற்றையும் 'ஆனந்த விகடன்' வாசகர்களுடன் கலந்து சிந்திக்கக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி!

இன்ப அன்பு...
அடிகளார்

(92—ஆம் ஆண்டு 'ஆனந்த விகடன்' இதழில் அடிகளார் அவர்களின் 'மண்ணும் மனிதர்களும்' தொடர் ஆரம்பமாவதற்கு முதல் வாரம் எழுதப்பட்ட முத்தான முகவுரை இது.)

## மண்ணும் மனிதர்களும்

மனிதன் வளர சுதந்திரம் தேவை. மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கிறான். அளவற்ற சுதந்திரத்துடன் பிறக்கிறான். ஆயினும் காலப்போக்கில் அவன் அடிமை ஆகிறான். அடிமை ஆக்கப்படுகிறான். ஏன் இந்த அவலம்? உடலின் முதல் முக்கியத் தேவையாகிய மூச்சுக்காற்று இலவசமாகக் கிடைக்கிறது. அந்தக் காற்றை யாரும் சிறைப்படுத்தவில்லை. இது நமது இஷ்டம் என்றே கூறவேண்டும். எதிர்காலம் எப்படியோ? அதுபோலவே ஆன்மாவின் முதல் தேவை அறிவு! இந்த அறிவைத் தரக்கூடிய கல்வி, அறிவு எல்லோருக்கும் வேண்டும்; அவசியம் வேண்டும். பாரதியை அறம் எது என்று கேட்டால் அவன் 'அன்னசத்திரம் அமைப்பதிலில்லை. ஆலயங்கள் ஆயிரம் கட்டுவதிலில்லை. இவை எல்லாவற்றிலும் சிறந்த அறம் கல்வி வழங்கலே' என்றான். வாழும் மாந்தருக்குக் கல்வி அறிவு தரும் பொறுப்பைச் சமூகம் ஏற்க வேண்டும்; அரசு ஏற்க வேண்டும் என்ற நடைமுறை பிறந்தது. கல்விக்குச் செலவிடும் தொகை செலவல்ல; அது ஒரு முதலீடு என்ற எண்ணம் நமது சமூகத்தில் வளர வேண்டும். அரசின் தலையாய கடமை கல்வி தருதல், ஆனால், இன்று கல்வி விற்கப்படுகிறது. சராசரி விலையல்ல. பல லட்சங்கள்! இன்று கல்வி நிறுவனம் நடத்துதல் ஒரு தொழில் போலாகிவிட்டது. கல்விப் பணியில் ஆர்வம் இல்லை. சிரத்தை இல்லை! பணம் பண்ணுதலே குறிக்கோள் ஆகிவிட்டது!

மனிதனுக்குக் கல்வி வழங்கல் பணியில் பள்ளிகள், கல்லூரிகள் மட்டும் ஈடுபடவில்லை. நூலகங்கள், வாசக சாலைகள் அமைத்து எல்லோருக்கும் பழகும் வாய்ப்பளித்தலும் கல்விப் பணியே! தரமான செய்தித்தாள்கள், திங்களிதழ்கள் படித்தல் அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

நாம் இளமைக்காலம் முதலே இதழ்கள் படிப்பதில் ஆர்வம் காட்டி வந்துள்ளோம். நாம் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து படிக்கும் இதழ்கள் உண்டு. பள்ளியில் பயிலும் காலத்தில் இதழ்கள் படிக்கும் ஆர்வத்தில் நாம் படித்த கடியா பட்டியில் இருந்த, 'ஜோதி கிளப்'புக்கு நாள்தோறும் செல்வது உண்டு. 'ஜோதி கிளப்' என்பது வசதி படைத்தவர்கள் பொழுது போக்குக்காக நிறுவியது. ஜோதி கிளப்புக்குச் சுதேசமித்திரன், ஹனுமான், ஹரிஜன், ஆனந்த விகடன் போன்ற இதழ்கள் வரும், நாள்தோறும் சென்று இதழ்களைப் படிப்பது பழக்கம். என்ன காரணத்தினாலோ ஒரு நாள் திடீரென்று 'ஜோதி கிளப்பின் அங்கத்தினர்களைத் தவிர, மற்றவர்களுக்கு அனுமதி இல்லை' என்று அறிவிப்புத் தொங்கவிட்டிருந்தார்கள். பார்த்தவுடன் அதிர்ச்சியாக இருந்தது. அங்கத்தினர்களாகவும் சேர்க்க மறுத்துவிட்டனர்! என்ன காரணம்? வர்க்க உணர்ச்சியேயாம்!

உடன் சூடு பிறந்தது. நண்பர்களைத் திரட்டினோம். ஒன்றாகக் கூடினோம். செயல் பிறந்தது! ஆம்! அந்த ஆண்டு 1942–விடுதலைப் போராட்டம் சூடு பிடித்திருந்த காலம்! அண்ணல் காந்தியடிகள் தனிநபர் சத்தியாக்கிரகத் திட்டத்தை அறிவித்த ஆண்டு. புனிதர் வினோபாபாவே அவர்களை முதல் தனிநபர் சத்தியாக்கிரகியாகத் தேர்வு அறிவித்த செய்தி நம்மையும் நமது நண்பர்களையும் கடுமையாகப் பாதித்திருந்தது!

உடன் வினோபாபாவே பெயரில் வாசகசாலை தொடங்கினோம். இருபது அங்கத்தினர்கள் ஆளுக்கு ஓர் இதழ் ஆண்டுச் சந்தா கட்டி இதழ் வாங்கித் தந்தனர். உடன் பயின்ற மாணாக்கர்கள் பலர். இன்று பழனியப்பா பிரதர்ஸ் என்ற பெயரில் புத்தக வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கும் எஸ்.எம். பழனியப்பன் ஒருவர். இவர் ராயவரத்தைச் சேர்ந்தவர். இவர் கல்கி, சுதேசமித்திரன் வாங்கித் தந்தார். அடுத்து வாசகசாலைக்கு அடிக்கடி வந்து ஊக்குவித்து

இதழ்களும் புத்தகங்களும் வாங்கித் தந்தவர், தமிழ்நாட்டின் தலைசிறந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, வாசகசாலை நடத்துவதற்கு மட்டுமல்ல... வாசகசாலை உறுப்பினர்களைக் கவிதைகள் எழுதவும், மேடைகளில் பேசவும் பயிற்றுவித்தார் அழ வள்ளியப்பா. வாசகசாலையில் படித்தவர்களில் ஒருவர் எஸ். சுந்தரேசன் என்ற அன்பர். இவர் நம்மோடு பயின்றவர். பின் பட்டதாரியாகி ரயில்வேயில் பணிக்குச் சேர்ந்து பணி செய்து ஓய்வு பெற்றுள்ளார். பொன்மலையில் தங்கியுள்ளார். இவருடன் இன்றும் தொடர்பு இருக்கிறது. நமக்குக் கணக்குப் பாடம் எமன்! சுந்தரேசன்தான் சொல்லிக் கொடுப்பார். திருவேங்கடம் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவர் எப்போதும் திருமண் சாத்திய நெற்றியுடன் விளங்குவார். இவரும் ரயில்வேயில்தான் பணி செய்தார். எஸ்.பி. சேது என்பவர் மின் வாரியத்தில் பணி செய்து ஓய்வு பெற்றுள்ளார். ஏன்? நாங்கள் பயின்ற பள்ளியின் தலைமையாசிரியர் வி. கிருஷ்ணமூர்த்தி ஐயர் எங்களுக்கு ஊக்கம் கொடுத்தார். ராமகிருஷ்ணா மடத்தின் அப்போதைய 'பிரபுத்தபாரதா' என்ற ஆங்கில இதழும் வாங்கிக் கொடுத்தார். ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி வாங்கிக் கொடுத்தார். இங்ஙன மெல்லாம் வாசகசாலைப் பணி நடந்தது. அன்றாடம் வாசக சாலையைத் திறப்பது, மூடுவது. சுத்தமாக வைத்திருப்பது 'சுட்டி' என்று எங்களால் ஆசையுடன் அழைக்கப் பெற்ற திருமலை என்பவருடைய கடமை. நமது கல்வியில் ஆர்வம் காட்டி வீட்டிலும் படிக்கத் தூண்டியது ஒரு ஆசிரியர் குடும்பம்! பக்கத்து வீடு-மலையப்ப ஐயர் வீடு! இந்த வீட்டில் நமக்குப் பசி நேரத்தில் உணவும் கிடைக்கும்; கல்வியும் கிடைக்கும். யக்ஞேஸ்வர ஐயர், இவர் ஓர் இடைநிலை ஆசிரியர். ஆயினும் ஆங்கிலம் நன்றாகக் கற்பிப்பார். யக்ஞேஸ்வர ஐயர் ஓய்வுபெற்று புதுக்கோட்டையில் தங்கியுள்ளார். யக்ஞேஸ்வர ஐயரின் தம்பி - அம்பி இவர் உடல்நல மில்லாதவர். அவர்

பார்த்த பணி வாசகசாலைப் பணிதான். ஒவ்வொருவரும் 20 இதழ்கள் படித்து வாழ்க்கைக் கல்வியைக் கற்றுக் கொள்ள முடிந்தது. நூலகத்துக்கு நிறைய இளைஞர்கள் வரவும் தலைப்பட்டனர்.

இந்த நூலகத்துக்கு நிறைய ஆதரவு கொடுத்தவர்களில் முக்கியமானவர் இன்று வடலூரில் வாழும் கைவல்யம் என்பவர். அவர்தம் அன்றையப் பெயர் சண்முகம் செட்டியார். அன்று நாங்கள் பலர் சுதந்திரமாக இலவச மாகக் கல்வி கற்க முடிந்தது! நாங்கள் படித்த உயர் நிலைப் பள்ளியில் இலவசக் கல்வி, தீ.சொ. நாகப்பச் செட்டியார் அறம். கல்வி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். சாதி களுக்கு அப்பாற்பட்ட கல்வி வழங்க வேண்டும். கல்வி-தரமான கல்வி இலவசமாக எல்லோருக்கும் வழங்க வேண்டும். சுதந்திரமாகக் கல்வி கற்க வாய்ப்பில்லாத நாட்டில் சுதந்திரம் பரிணமிக்காது. அரசியல், பொருளாதாரச் சுதந்திரம் கிடைக்காது. சுதந்திரத்தின் பயன் இலவசமாக, சுதந்திரமாகக் கல்வி வழங்கலிலேயே இருக் கிறது. நமது நாட்டுக்குக் கல்விச் சுதந்திரம் தேவை!

## 2

ஓடி விளையாடும் பருவம், திருவேட்களத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் நாலு, ஐந்து வகுப்புகள் பயின்ற காலம். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள அண்ணாமலை நகருக்கு அருகிலுள்ள சிற்றூர் திருவேட்களம்! திருஞானசம்பந்த சுவாமிகளின் பாடல் பெற்ற திருத்தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் பல ஆண்டுகள் தங்கியிருந்த திருத்தலமும் ஆகும். இங்கு செட்டி நாட்டரசர் முயற்சியினால் பல்கலைக் கழகம் தோன்றி வளர்ந்தது. நாம் தொடக்கப் பள்ளியில் பயின்ற காலத்தில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில்

போற்றிப் பாராட்டுதலுக்குரிய தலை சிறந்த தமிழறிஞர்கள் இருந்தனர். அவர்களுள் 'நாட்டார்' என்று அழைக்கப் பெற்ற ந.மு. வேங்கடசாமி நாட்டார், சர்க்கரைப் புலவர், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் சா. சோமசுந்தர பாரதியார், அருட்டிரு விபுலானந்த அடிகள் ஆகியோர் நினைவுகூரத்தக்க பேரறிஞர்கள்! இந்தப் பெரியவர்களுடன் எல்லாம் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு, 'பால் ஊற்றும் பைய'னாக இருந்த நமக்குக் கிடைத்தது!

நமது வீட்டுக்கு அப்போது தொழில் பால் வியாபாரம். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் பால் ஊற்றச் சென்றகாலம். வாழ்க்கையின் அடிப்படைகள் அமைந்த காலம். இவர்களுள்ளும் 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழ் கற்கும் ஆர்வத்தைத் தூண்டி வளர்த் தார்கள். பிள்ளையவர்களுடைய வீட்டுக்குச் செல்லும்போது அவருடைய அறையின் ஜன்னல் அருகில் நின்று ஒரு குறள் சொல்ல வேண்டும். குறள் ஒப்பிக்கும் நமது குரல் கேட்டவுடன் பிள்ளையவர்கள் காலணா கொடுப்பார்கள்.

சாதாரணமாகப் பிள்ளையவர்கள் பிரியமாக நடத்தினார்கள். நாம் திருவேட்களம் தொடக்கப் பள்ளியில் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போது சாரணர் குருளையர் அணியில் சேரும்படி ஆசிரியர் கூறினார். நாமும் ஒப்புக்கொண்டோம். ஆனால், வீட்டில் குருளையர்க்குரிய சட்டை தைத்துக் கொடுக்க மறுத்து விட்டார்கள். வசதிக்குறைவே காரணம். அன்று பாலூற்றச் சென்றபொழுது பிள்ளையவர்கள் முகப்பிலேயே உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். நாம் பாலை, வீட்டுக்கு முன் வந்தவரின் பாத்திரத்தில் ஊற்றிவிட்டு பிள்ளையவர்கள் முன்வந்து நின்றோம். அன்றைய குறளை ஒப்பித்தோம். எந்தக் குறள் என்பது சரியாக நினைவில் இல்லை, ஆனால், ஈதல் அதிகாரத் தொடர்புடைய குறள் அது! ஏன் எனில், திருக்குறளைக் கேட்ட பிள்ளை அவர்கள் "என்ன

வேண்டும்?" என்றார்கள். நமக்குக் குருளையர் சட்டை கேட்க வேண்டும் என்ற எண்ணம். ஆனால் பயம்! கேட்கத் தோன்றவில்லை! தயக்கமும் அழுகையும் வந்தது, உடனே பிள்ளையவர்கள் நம்மை அருகில் அழைத்து "ஏன் அழுகிறாய்...என்ன வேண்டும்?" என்று கேட்டார்கள். நாம் "குருளையர் சட்டை வேண்டும்" என்று கேட்டுவிட்டோம். "ஏன் வீட்டில் வாங்கித் தரவில்லையா?" என்றார்கள். "வசதியில்லை என்று கூறிவிட்டார்கள்" என்றோம். "உன் வீட்டில் யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டார்கள். "அம்மா, அண்ணன் இருக்கிறார்கள்" என்று பதில் சொன்னோம். "அண்ணன் என்ன செய்கிறார்?" என்று கேட்டார்கள் பிள்ளையவர்கள். "பல்கலைக்கழகத்தில் தமிழ் படிக்கிறார். பெயர் கோபாலகிருஷ்ணன்" என்று பதில் கூறினோம். "அப்படியா? சரி" என்று சொல்லிவிட்டு ஐம்பது ரூபாய் கொடுத்தார்கள் பிள்ளையவர்கள். குருளையர் சட்டை தைத்துக் கொண்டோம். அதன்பிறகு பிள்ளை அவர்களுடன் உறவு நிறை நிலாப்போல வளர்ந்தது. பிள்ளையவர்கள் நமது அண்ணன் கோபாலகிருஷ்ணனை, பல்கலைக் கழக அறைக்கு அழைத்து விவரங்களைத் தெரிந்து கொண்டு, குடும்பத்தையே வளர்த்தார். வசதியில்லாத குடும்பத்துக்கு வசதி உண்டாக்கினார். ஏன்...இன்றும் நாம் உடல்நலத்துடன் இருப்பதற்குரிய காரணம் பிள்ளையவர்கள் வீட்டுத் தயிர்ச் சோறும் வடகமும் என்பதை நினைவு கூர்வதில் மகிழ்வு ஏற்படுகிறது.

நமது தந்தை பரம்பரையாக இருந்த ஐந்து வேலி நிலத்தை விளையாடித் தோற்றுவிட்டார். பிள்ளையவர்கள் வழக்கறிஞராயிற்றே! குடும்பச் சொத்தை மீட்க வழக்கு ஆலோசனைகளும் நிதியும் கொடுத்து உதவினார்கள். சொத்தும் கிடைத்தது. அந்த நன்றிக்கடனுக்கு நாம் குன்றக்குடி வந்த பிறகு 1953-ம் ஆண்டில் பிள்ளையவர்களைக் குன்றக்குடிக்கு அழைத்துப் பாராட்டி வைர மோதிரம் அணிவித்து மகிழ்ந்தோம்.

அடுத்து, அருட்டிரு விபுலானந்த அடிகளுக்குப் பணிவிடை செய்யும் இனிய வாய்ப்புக் கிடைத்தது. மாலை நேரத்தில் பெரும்பாலும் விபுலானந்த அடிகள் வீட்டிலே தான் இருப்போம். விபுலானந்த அடிகள் தொடர்பால்தான் தீண்டாமை விலக்கு உணர்வும் மனிதநேயமும் நமது வாழ்க்கையில் குறிக்கோள்களாக அமைந்தன. அருட்டிரு விபுலானந்த அடிகள் வெள்ளிக்கிழமைதோறும் இரவு 7 மணிக்குத் திருவேட்களத்தில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்புக்குச் சென்று அங்கு பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவார்கள். அந்தக் குடியிருப்பிலுள்ள மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். பொட்டுக்கடலையும் சர்க்கரையும் வழங்குவார்கள். அப்போதெல்லாம் நாம் அடிகளுடன் அரிக்கேன் விளக்கு எடுத்துக் கொண்டு செல்வோம்.

அருட்டிரு விபுலானந்த அடிகளுடன் அதிகநேரம் நமக்குக் கிடைக்கும். காரணம், அடிகளுக்குப் பணிவிடை செய்வதற்கு நாமே பொறுப்பு. அப்போது சுவாமி சகஜானந்தர் அவர்கள் சிதம்பரத்தில் நந்தனார் கல்வி நிலையம் தொடங்கி நடத்தி வந்தார்கள். நந்தனார் விழாவும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். ஒரு தடவை விழாவுக்கு நாமும் அடிகளுடன் சென்றிருந்தோம். அடிகளை மேடைக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டார்கள். நம்மைப் பொடியன்களுடன் உட்கார வைத்துவிட்டார்கள். எல்லாம் புதுமுகம்...பயம்! அழுகை வந்துவிட்டது. நாம் அழுததைப் பார்த்ததும் அடிகள் நம்மை மேடைக்கு அழைத்துக் கொண்டார்கள். மேடையில் கொஞ்ச நேரம் போனதும் 'தூக்கம்' போட்டோம். அடிகளின் தொடர்பு இளமை யிலேயே ஆர்வத்தைத் தூண்டியது. அடிகளைப் பிரியக் கூடாது என்ற உணர்வு மேலோங்கியது. இந்த நிலையில் அடிகள் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதாகத் திட்டம். இதைத் தெரிந்துகொண்ட நாமும் அடிகளுடன் இலங்கைக்கு

வருவதாகக் கேட்டோம். அடிகள் நேரடியாக நம்மிடம் மறுக்கவில்லை. நம் அண்ணனிடம்... "சின்னப் பையன், அங்கு தனியே இருப்பது முடியாது. பின்னர் பார்க்கலாம்..." என்று கூறிவிட்டு, நாம் இரவில் தூங்கும்போது போய் விட்டார்கள். காலையில் எழுந்தால் அடிகளைக் காணவில்லை. ஒரே அழுகை...! பல ஆண்டுகள் கழித்து நாம் இலங்கைப் பயணம் மேற்கொண்டபோது அடிகளின் சமாதிக்குச் சென்று மலர் அஞ்சலி செய்து புத்துயிர்ப்புப் பெற்றோம்.

அன்று அருட்டிரு விபுலானந்த அடிகள் எடுத்துத் தந்த தீண்டாமை விலக்குக் கொள்கை இன்றளவும் நமது வாழ்க்கையின் குறிக்கோளாக விளங்குகின்றது. தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு பெரிய தீமை; என்புருக்கி நோய். இதனை நமது சமூகம் உணர்ந்தாக வேண்டும். அதேபோழ்து அண்மைக்காலமாக ஆதி திராவிடர்கள் மற்ற சமூகத்தினருடன் கலந்து மேவி மேலே வருவதற்குப் பதிலாகத் தனியே சாதிவழி அமைப்பாகவே இயங்க விரும்பு கிறார்கள். இது விரும்பத்தக்கதல்ல... மானிட சமுத்திரம் ஒப்பற்ற பாரத சமுதாயமாக-ஒரே சாதியாக விளங்க வேண்டும். இந்த லட்சியக் கனலை மூட்டி வளர்த்த அருட்டிரு விபுலானந்த அடிகளின் நாமம் வாழ்க!

## 3

தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் வைத்தீஸ்வரன் கோயில்–திருப்பனந்தாள் சாலையில் உள்ளது நடுத்திட்டு என்ற சிற்றூர். இந்தச் சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கிராமத்தையும் சாலையையும் இணைப்பது ஒரு வண்டிப் பாதை. ஊரின் நுழைவாயிலில் ஒரு குளம். அந்த ஊருக்கே ஒரே குளம்தான்! குளத்தங் கரையில் ஒரு பிள்ளையார் கோயில், ஊர், ஒரே தெருதான்!

XVI.6.

பத்துப் பன்னிரண்டு ஓட்டு வீடுகள்! மற்றவையெல்லாம் கூரை வீடுகள்! மச்சு வீடு மருந்துக்குக்கூட ஒன்று இல்லை! ஊரில் சாதிகள் உண்டு! ஆனாலும் குடியிருப்புகள் கலந்தே இருந்தன.

ஊரின் நுழைவாயிலில் உள்ள குளம் தான் அந்த ஊருக்கு. அதில்தான் மக்கள் குளிப்பர்! தங்களுடைய மாடுகளையும் குளிப்பாட்டுவர்! எருமை மாடுகள் ஆனந்த மாகத் தண்ணீருக்குள் படுத்துச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். அந்த எருமைகளின் முதுகில் கிராமத்துச் சிறுவர்கள் உட்கார்ந்து சவாரி செய்து கொண்டிருப்பர்! ஒரு நாள் எங்கள் வீட்டு நாய் ராஜபாளையத்துச் சாதி நாய்-நல்ல வளர்ப்புள்ள நாய், தெரு நாயுடன் சண்டை போட்டுக் கடித்துக் குதறிவிட்டது! நாங்கள் சிறுவர்கள்-இதனை வேடிக்கைப் பார்த்தோம்! தடுக்கவும் செய்தோம்! ஆயினும் விலகுகிற மாதிரி இல்லை! நாய்ச் சண்டையல்லவா? ஒரு மாதிரியாக ஆத்திரம் தணிந்தவுடன் சண்டையிலிருந்து விலகின. கடிபட்ட தெரு நாய் ‘தப்பித்தேன் பிழைத்தேன்’ என்று ஓடிவிட்டது.

சில நாட்கள் உருண்டோடின. ஊர்க் குளத்தங் கரையில் துர்நாற்றம் வீசியது. தாங்கமுடியாத துர்நாற்றம்! குளத்துக்குச் செல்கிறவர்கள் எண்ணிக்கை குறைந்தது. அவரவரும் அவரவர் வீட்டுக் கிணற்றிலேயே புழங்கத் தொடங்கிவிட்டனர். கிணறு இல்லாதவர்கள் அடுத்த வீட்டின் கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றனர். கிணறு இல்லாதவர்கள் கிணறு உள்ளவர்கள் வீட்டுக்குத் தண்ணீர் எடுக்கச் சென்றால்...? ஏச்சுப் பேச்சு; கதவு சாத்தல் முதலியன வாடிக்கையாகிவிட்டன! எங்கள் வீட்டுத் தோட்டத்தில் கிணறு உண்டு! ஆயினும் இறைப்பு இல்லை! உபயோகம் இல்லை! கிணறு இடிந்து கிடந்தது. தாயார் முதியவர்! அடுத்த வீட்டுக் கிணற்றுக்குத் தண்ணீர் எடுக்கச் செல்ல மனமில்லை! கௌரவம் ஒரு காரணம்! தொலைவு

பிறிதொரு காரணம்! நாம்தான் தண்ணீர் எடுத்து வருவது. ஒரு நாள் மாலை அந்திப் பொழுதில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது அந்த வீட்டுக்காரர், "விளக்கேற்றி வைத்த பிறகு தண்ணீர் எடுக்க வரக்கூடாது" என்றார். அவர் சொன்னதில் தவறில்லை! ஆயினும் நமக்கு 'ரோஷம்' பொத்துக் கொண்டு வந்தது! மறுநாளே தோட்டத்துக் கேணியைப் பழுது பார்க்கும் பணி நடந்தது!

ஆனால், யாரும் குளத்தங்கரையில் எங்கிருந்து நாற்றம் வருகிறது! ஏன் நாறுகிறது! நாற்றத்தை அகற்றித் தூய்மை செய்ய முடியுமா? என்றெல்லாம் சிந்திக்க முன்வரவில்லை. அவ்வளவுகூட சமூகச் சிந்தனை அந்தக் கிராமத்தில் யாருக்கும் வரவில்லை! பொதுநலத்தில் சிரத்தையில்லாத காலம்!

நாங்கள் சிறுவர்கள்! நம் நண்பர்கள் கோவிந்தராஜன், ராமானுஜன் என்பவர்கள் கூடினோம். இவர்களில் நமது மூளைதான் வேலை செய்தது! ஆனால், சுத்தம் செய்யும் வேலைக்குப் பொறுப்பேற்று தைரியமாகச் செய்தவர் கோவிந்தராஜன்தான். இப்போது இவர் இல்லை, இப்போது நமது சென்னை அலுவலகத்தில் பணி செய்யும் வைத்திய நாதன் இவருடைய மகன்தான்!

குளத்தங்கரை நாற்றத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கினோம். நாற்றம் எங்களைக் குளத்தங் கரையில் இருந்த பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்றது. அது தனியார் கோயில். ஆனாலும், பூஜை இல்லை. தர்மம் வளரும் நிலை இது. சொல்ல என்ன வெட்கம்? இது எங்கள் குடும்பத்தின் திருக்கோயில். இக்கோயிலுக்கு ஒரு வேலி நிலம் சொத்து உண்டு. குடும்பத்தில் மூத்த வாரிசு நிர்வாகம் செய்ய வேண்டும். எங்கள் பெரிய தந்தையார் நிர்வாகம்! பிள்ளையாரை அவர் கவனிக்க வில்லை! திருக்கோயிலை நெருங்கினோம். நெருங்க நெருங்க நாற்றத்தின் வீச்சு அதிகமானது; குமட்டல் வந்தது! வேறு

வழியில்லை! மூக்கைப் பிடித்துக் கொண்டு முன்னேறினோம். அந்த மண்டபத்தில் ஒன்றும் இல்லை. கருவறையிலும் கண்ணுக்கு ஒன்றும் தென்படவில்லை. ஆயினும், நாற்றம் கருவறையிலிருந்துதான் வந்தது. 'ஐயோ! பாவம்! இந்தப் பிள்ளையார் அந்த நாற்றத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரோ' என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டோம்! விநாயகரை துர்நாற்றத்திலிருந்து மீட்க வேண்டும் என்ற முனைப்புக் கூடியது. சிறுவர்களாகிய நாங்கள் விநாயகரை நெருங்கி விட்டோம்! விநாயகருக்குப் பின்புறம் அழுகிப் புழுத்த நிலையில் நாய் கிடந்தது! அந்த நாய்க்கு என்ன விவேகம்! தெருக்கோடியில் கடிபட்ட நாய், பிள்ளையார் கோயிலைச் சரணடைந்திருக்கிறது! முத்தி என்ற ஒன்று உண்டானால் இந்த நாய்க்கு நிச்சயம் உண்டு. இதற்குள் முத்தியைப் பற்றிய சிந்தனை! வாழத் தெரியாமல்– வாழ்வாங்கு வாழத் தெரியாமல் தடுமாறுபவர்களுக்கு ஏது முத்தி! இந்த ஊர் நாய் தேர்ந்தெடுத்துச் சரண் அடைந்த நிலை சிந்தனைக்குரியது!

நாங்களும் மூச்சை அடக்கிக் கொண்டு நாயின் சடலத்தை பொலபொலவென்று கிடந்த சடலத்தைத் தட்டுக் கூடையில் அள்ளி வெளியில் கொண்டுவந்து ஆழக் குழி தோண்டி அதில் போட்டு பாலூற்றிப் புதைத்தோம்! கோயிலைக் கழுவிச் சுத்தம் செய்தோம்! கருவறையில் செத்த நாயைத் தொட்ட முகூர்த்தம் எங்களுக்கும் பக்தி கொஞ்சம் வந்தது. ஏன் இந்தக் கோயிலுக்கு நாம் பூஜை செய்யக்கூடாது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். அந்த முடிவு விநாயகருக்கு நாள்தோறும் பூஜை செய்வது என்பது.

இந்த முடிவு எடுத்த மாதம் மார்கழி மாதம்! அதுவும் அந்த மாதம் முதல் தேதி! நாங்கள் திருப்பள்ளியெழுச்சி, பஜனை என்றெல்லாம் திட்டமிட்டோம்! நமக்கு பூசாரி பொறுப்பு கொடுத்தார்கள்! கோவிந்தராஜனுக்குத் தண்ணீர், பூ கொண்டு வந்து தரும் பரிசாரக வேலை! ராமானுஜனுக்கு

மணி அடிப்பது வேலை! பூஜைக்கு அரிசி, விளக்குக்கு எண்ணெய் வீடுகள் தோறும் முறை வைத்து வாங்கினோம்! முதலில் சில நாட்கள் பூஜைக்கு நாங்கள் மட்டும்தான் வந்து கொண்டிருந்தோம்! ஆனால் நாயை அகற்றிய மறுநாளே குளத்துக்கு ஊரார் வர ஆரம்பித்துவிட்டனர். நாங்கள் பஜனை கோஷ்டி வேறு நடத்தினோம்! அந்தக் காலத்தில் எங்களுக்கு அதிகமாகப் பாட்டுகள் தெரியாது "ராம்! ராம்!" இதுதான் பஜனை! பஜனைக் கோஷ்டியில் நமக்கு அனுமான் வேடம்! அனுமான் வேடத்தில் ராமபஜனை செய்த அந்த நாட்கள் நமக்கு இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன. மெள்ள மெள்ள திருக்கோயிலுக்குக் கூட்டம் வரத் தொடங்கியது! அனுமான் உண்டியலில் கிடைத்த பணத்தில் திருக்கோயிலுக்கு மூங்கில் தட்டியில் கதவு அமைத்தோம். எங்களுடைய பூஜை, திருக்கோயில் தர்மகர்த்தா அவர் களுக்கு இரக்கச் சிந்தனையை உண்டாக்கிவிட்டது! திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்தார்! குடமுழுக்கு நடந்தவுடன் பிள்ளையாரைத் தொடும் உரிமையைப் பறித்து விட்டனர். ஒரு பூசகர் நியமிக்கப்பட்டார். எங்களுக்கெல்லாம் ஏமாற்றம்தான்.

இருப்பினும், இந்தச் சம்பவத்திலிருந்து மெள்ள மெள்ள நாங்கள் பக்தியில் வளர்ந்தோம்! பல ஆண்டுகள் முறையாக வெளியூரில் இருந்தாலும் பஜனை நடத்தி வந்தோம்! அந்தப் பூஜையும் பஜனையும்தான் நமது சமயம் சார்ந்த வாழ்க்கைக்கு வித்திட்டன. அன்று ஏற்பட்ட பொதுநல உணர்வு இன்னமும் அணையவில்லை!

## 4

"உனக்குச் சூடு இருக்கிறதா...சுரணை இருக்கிறதா என்ன வாய்க்கொழுப்பு"

"எனக்குச் சூடு இருக்கிறதா ....சுரணை இருக்கிறதா என்றா கேட்கிறாய்?"

-இப்படி அடிக்கடி சண்டை போடுவதைப் பார்த்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம். ஆனால், இதுபோன்ற ஓர் உரையாடல் வித்தியாசமான இடத்தில், வித்தியாசமான மனிதர்களிடையில் நடந்தது என்பதுதான் கவனத்துக்குரியது.

திருச்சிராப்பள்ளி நகரில் ஒரு சமய மாநாடு நடக்கிறது. இம்மாநாட்டில் கலந்துகொள்ள அருள்திரு பேரூர் அடிகள் (பேரூர் ஆதீனத் தலைவர்), அருள்திரு சுந்தர சுவாமிகள் (சிரவை ஆதீனத் தலைவர்), குன்னூர் அருள் திரு சற்குரு ராமலிங்க அடிகள் ஆகியோரும் நாமும் பயண மாளிகையில் தங்கியிருக்கிறோம். மாநாட்டு வரவேற்புக் குழுவினர், எல்லோருக்கும் அருந்துவதற்குப் பால் கொடுக்கிறார்கள். சற்குரு ராமலிங்க அடிகள் பால் குவளையைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்த நிலையில், நாம் "சூடு இருக்கிறதா" என்று கேட்டோம்.

குன்னூர் அடிகள், "சூடு இருக்கிறது; பரவாயில்லை..." என்றார். மீண்டும் நாம் "சூடு இருக்கிறதா?" என்று கேட்டோம். பேரூர் அடிகள் புரிந்துகொண்டு விட்டார்! "நமக்குச் சூடு இருக்கிறதா என்று கேட்கிறார்கள்..." என்றார் சுந்தர சுவாமிகள், "கேட்பது புரியவில்லையா?" என்று கேட்டார்.

அன்றைய மாநாட்டில் முக்கியமாக உணர்வுகளைப் பற்றிய விவாதம் சூடாக அமைந்தது. புதிய நோக்கம் பிறந்தது.

பாரத பூமி புண்ணிய பூமி; ரிஷிகளும், ஞானிகளும் அவதரித்த பூமி. ஏன்...கடவுளரே திருஅவதாரங்கள் செய்த நாடு. ஆயினும், ஏன் உலகிலேயே மிகவும் பின் தங்கிய நாடாக அல்லது வளரும் நாடாக இருந்து வருகிறது? ஏன் இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக வறுமை வளர்ந்து வருகிறது?

நமது நாட்டின் முப்பது கோடி மக்களுக்குமேல் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள். எழுபத்துமூன்று

விழுக்காட்டு மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்! ஏராளமான சாதிகள்; சாதிகளுக்கிடையே துவேஷங்களை வளர்ப்பதே இன்றைய தொழிலாக வளர்ந்திருக்கிறது. இவையெல்லாம் நமது பண்பாட்டுக்கு அறைகூவல்கள்! கடவுள் ஒருவர். அவர் உலகத்துக்குத் தந்தை, தாய் என்று கூறுகிறோம். 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்று சாத்திரம் கூறுவது உண்மை! ஆனால், நமது நாட்டு வாழ்க்கையில் இது உண்மையாகி இருக்கிறதா? அல்லது உண்மையாக, வாழ்வாக, வரலாறாக ஆக்கும் முயற்சியாவது இருக்கிறதா என்பதே இன்றுள்ள கேள்வி.

கேள்விக்கு விடை கிடைத்தால் இந்த அவலங்கள் ஏன்? இது விளங்காத புதிர்! கடவுள் ஏன் இப்பொழு தெல்லாம் அவதாரம் செய்வதில்லை! நாம் திருந்த மாட்டோம் என்று கடவுள் முடிவு செய்து விட்டாரா என்றெல்லாம் எங்கள் விவாதம் வளர்ந்தது. விவாதத்தின் முடிவு என்ன? இந்த நாட்டில் ஏராளமான மதங்கள், ஆயிரக் கணக்கான வழிப்பாட்டு நிலையங்கள் இருந்தும் அவலம் தொடர்வது நியாயமா? அவலங்கள் தொடரின் மதங்கள் போதிக்கும் மனிதநேயம் என்ன, ஏட்டுச்சுரைக்காயா? சமூக நீதி வழங்காத மதங்களை மக்கள் பின்பற்றுவதன் அர்த்தம் என்ன? ஒரு அர்த்தமும் இல்லை என்றே விடை கிடைக்கும். நமது நாட்டு மக்களைப் பெரிதும் பாதிக்கும் அவலங்களை எதிர்த்துப் போராடுவது சமயங்களின் பொறுப்பு! சமயத் தலைவர்களின் கடமை!

அன்றைய மாநாட்டில் நாங்கள் அனைவரும் ஒரே சுருதியில் பேசினோம். அன்றைய உரைப்போக்கில் ஓர் உண்மை வெளிப்பட்டது கடமை வேறு; வேலை வேறு. வேலை என்பது அவரவர் வாழ்க்கையோடு (பிழைப்பு, ஜீவனோபாயம்) சம்பந்தமுடையது. கடமை என்பது நாட்டோடும், நாட்டு மக்கள் வாழ்க்கையோடும், நாட்டு வரலாற்றோடும் சம்பந்தம் உடையது. கடமை என்ற சொல்,

கடன் என்ற சொல்லின் வழிப் பிறந்த சொல். நாம் இந்த நாட்டிற்குக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் வாழ்ந்து, இந்த நாட்டை வளப்படுத்திய சென்ற கால வரலாற்றைச் சேர்ந்த ஆயிரம் ஆயிரம் பேருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றுள்ள நஞ்செய்யும் ஒரு காலத்தில் காடு மேடு தான்! காடு வெட்டி நிலம் திருத்திக் கழனியாக்கியவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய இயலும்? மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்பிருந்தே இலக்கியங்களைக் கண்டு இலக்கணங் களைக் கண்டனர். நாளும் நமது ஆன்மாவைச் செழுமை படுத்துபவை இந்த இலக்கியங்கள்; ஆன்மாவின் தரத்தை உயர்த்தும் படைப்புகள். ஏன், நமதுகாலத்தில், நமது தலைமுறையில், நம்முடைய வாழ்க்கைக்காக-வாழ்க்கையின் உயர்வுக்காக உழைக்கும் உயிர்கள் ஒன்றா, இரண்டா? இல்லை பல நூறு ஜீவன்கள்-பல உயிர்கள் கடின உழைப்பின் மூலமே நமது வாழ்க்கையை நகர்த்துகின்றன. நாளும் நமது வாழ்க்கையை நகர்த்தும் அறிஞர் உலகத்துக்கு-உழைப்பாளர் உலகத்துக்கு நாம் என்ன திரும்ப அளிக்கிறோம்? ஒன்றும் இல்லை.

நமது முன்னோர்கள் நமக்கு அளித்தவை பிரமிப் பூட்டுவன. பத்தொன்பதாம் நூற்றாண்டினர்கூட நமது நாட்டு மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்தனர். இன்று வாழும் நாம், அடுத்த தலைமுறைக்கு என்ன தர இருக்கிறோம்? சிந்தனை செய்யுங்கள்; எளிமையின் பெயரால், புதுமையின் பெயரால் பழந்தமிழ் நூல்களைப் படித்துணரும் திறன் குறைந்து வருகிறது. ஏன், பதினைந்து முதல் முப்பது மதிப்பெண்கள் வாங்கினாலே போதும்-தேர்வில் வெற்றி! இது ஒரு பயங்கரமான அறிவுச் சேதாரம் இல்லையா?

சென்ற தலைமுறைகளில் இருந்ததை விட இந்தத் தலைமுறையின் பண்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இது உண்மையா, இல்லையா? சென்ற காலத்தில் தலைமுறை தோறும் சாதிகளை எதிர்க்கும் உணர்வு இருந்தது. இந்தத் தலைமுறையிலோ, சாதிகளைக் காப்பாற்றும் உணர்வு நாளும் வளர்ந்து வருகிறது. ஏன்? அரசின் செயல்முறைகள் சாதி உணர்வுகளைக் கெட்டிப் படுத்துகின்றன. நமது நாட்டில் வறுமை-சென்ற காலத்திலும் இருந்திருக்கிறது. ஆயினும் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் வளர்ந்து வந்துள்ள இந்தத் தலைமுறையிலும், நாமே நம்மை ஆளும் காலத்திலும் சென்ற தலைமுறையில் இருந்ததைவிட வறுமை வளர்ந்திருக்கிறது. ஏன்? தாயுமானாரின் சமய சமரசமும், வள்ளலாரின் சமரச சன்மார்க்கமும் உலாவிய நாட்டில் மதச் சண்டைகள், கலவரங்கள்!

நமது தலைமுறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவு கடுமையானது. இந்தப் பின்னடைவை ஈடுசெய்து முன்னோக்கிச் செல்லத் தவறினால் வரலாறு நம்மைப் பழி தூற்றும்! சிலர் முன்னோக்கிச் செல்வதாகவும் எழுது கின்றனர். ஆனால், இது உண்மையல்ல. தலைக்குள் வளர்ச்சி, மாற்றம் இல்லை. தலையின் மீது அணிந்து கொள்ளும் அணி களிலே-குல்லாக்களிலே தான் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால், எது முன்னேற்றம்? தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை! சரியான முன்னேற்றம் இல்லாவிடில், அடுத்து வரும் தலைமுறையினர் ஏசுவர்.

ஆதலால் விழித்துக்கொள்க! புவியை நடத்த முன் வருக! அறியாமையை எதிர்த்துப் போராடுக! வறுமைக் கோடு வேண்டாம்! எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கட்டும். அதற்குரிய படைப்பாற்றலைப் பெற வேண்டும். உற்பத்திப் பொருளாதாரம் இன்றைய நாட்டுக்குத் தேவை. இன்று இந்த நாட்டின் போக்கைக் கூர்ந்து கண்ணுறின் சூடு பிறக்கும்! சுரணை பிறக்கும். நாட்டின் வரலாற்றை ஆக்கரீதியில் இயக்கிடும் முனைப்பு தோன்றும். சூடாகக் குடித்தால் போதாது. நமக்கும் சூடு தேவை! போர்க்குணம் தேவை!

நமக்கும் போர்க்குணம் மிகுதியும் உண்டு. அதனால் தானே நமது புராணங்களில் கூட-கடவுளர்கள்கூடப் போராடியதாக எழுதி வைத்திருக்கிறார்கள். கிரேக்கச் சிந்தனையாளர் சாக்ரடீஸ், கடவுள்களுக்கிடையில் நடந்த போர்களை மாணவர்களுக்குக் கற்பிக்கக்கூடாது என்று சொன்ன அறிவுரையை எண்ணுக! உலகின் எந்த இனத்தையும்விட நமக்குப் போர்க்குணம் எந்த வகையிலும் குறைவில்லை. ஆனால், ஒரே ஒரு குறை! நமது போர்க்குணம் மனிதர்களுடன் போராடுவதிலேயே கழிகின்றது. மனித குலத்தின் பொதுப் பகையாகிய சாதி வேற்றுமைகள், வறுமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதில் ஈடுபடுத்தப் படுவதில்லை.

எம்பெருமானார்-என்றும் உடையவர் என்றும் போற்றப்பெற்ற ராமானுஜரின் முயற்சி சாதி வேற்றுமைகளை அகற்றுவதில் வெற்றி பெறவில்லை. அதுபோலவே அப்பர் அடிகள் நடத்திய போராட்டமும் வெற்றி பெறவில்லை. நம்முடைய பழக்கம் எதையும் வாழ்த்துவோம்! வழிபடு வோம்! ஆனால், பின்பற்ற மாட்டோம்! வழிபடுதல் என்ற சொல் வழியிலிருந்து தான் வழிபாடு என்ற சொல் பிறந்தது! இந்தத் திசையில் மாநாட்டில் கலந்து கொண்ட துறவிகள், ஆதீனகர்த்தர்கள், மடாதிபதிகள் பேசினார்கள். பார்வை யாளர்களும், மாநாட்டின் பிரதிநிதிகளும் இந்தப் புதிய உத்வேகம் தரக்கூடிய உரையைக் கேட்டனர்! மாநாடு புதிய நோக்கத்தைத் தந்தது! இதுதான் இலக்கு என்று, சரியான இலக்கை இனங்காட்டியது. மாநாட்டின் பாதிப்பு வேண்டிய அளவு இல்லாது போனாலும் ஓரளவு இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த மாநாட்டின் முடிவுகள் புதிய விவாதங்களையும் தோற்றுவித்தன என்பதை மறந்து விடுவதற்கில்லை நம் நாட்டில் ஒரு கதை சொல்வார்கள்... நாய்க்கு வால் அளந்து வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவேதான், ரேஷன்

கார்டுகளில் கண்டுள்ளபடிதான் அவரவருக்கும் அரிசி கிடைக்கும். அதுபோலத்தான் அவரவருக்கும் பரம்பொருள் ஆணைப்படி... வினைப்பயனுக்கு ஏற்ப வழங்கப்படுகிறது என்று கதை அளப்பர். 'ரேஷன் கார்டு'களின் தரம் நாம் அனைவரும் அறிந்ததே! வினைசெயல் வழி பயன் உண்டு என்பது உண்மையே! ஆயினும் அறிவறிந்த ஆள்வினையின் மூலம் செயலை வளர்த்துச் செயலின் பயனையும் கூட்டலாம் என்பதே உண்மை. இதனை திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரத்தின் மூலம் உணரலாம்.

*அவ்வினைக் கிவ்வினையாம்*
*என்று சொல்லும் அஃதறிவீர்*
*உய்வினை நாடாது இருப்பதும்*
*உந்தமக்கு ஊன மன்றே!*
*கைவினை செய்துஎம் பிரான்*
*கழல் போற்றுதும் நாமடியோம்!*
*செய்வினை வந்து எமைத்*
*தீண்டாய் பெருதிரு நீலகண்டம்!"*

என்பது தேவாரம். இந்த நம்பிக்கை நமது நாட்டு மக்களி டையில் வளர்க்கப் பெற்றால் மக்கள் வளர்வர்; மக்களின் செயல்திறம் வளரும். நாடு வளரும்.

இந்த உணர்வை நம்மிடையில் தூண்டி வளர்ப்பது, நம்மைச் சூழ்ந்திருக்கின்ற அவமானத்தை, இழிவை, வறுமையை எதிர்த்துப் போராடத் தேவை சுரணையே! சூடே! தனிமனிதனின் அறியாமையைச் சமூக ரீதியாக மாற்றியமைக்க விரும்பிய பாவேந்தர் பாரதிதாசன்,

*'கல்வி நல்காக்*
*கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்'*

என்றார், தனிமனிதனின் வறுமையைச் சமூகத்தின் பொறுப்பாகக் கூறி, வறுமையை மாற்றாத ஜகத்தினை அழித்திடலாம் என்றான் பாரதி!

'தனி ஒருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்.'

என்பது பாரதி வாக்கு! பலர் இறவாத இன்ப அன்பு நிலை அடைந்திட ஒருவர் நரகம் புகலாம் என்ற ராமானுஜரின் வழியைச் சிந்தனை செய்வோம்! அவர்களின் அடிச் சுவட்டில் நடப்போம்.

## 5

திருமபுர ஆதீனத்தில் நாம் சேர்ந்து தம்பிரானான பிறகு நமக்கு முதலில் திருக்கடவூரிலும், அடுத்து சீகாழி சட்டை நாதசுவாமி திருக்கோயிலிலும் கட்டளைத் தம்பிரான் பணி. சீகாழியில் பணியிலிருந்தாலும் தரும புரத்தில் தங்கிப் படித்துக் கொண்டு வார விடுமுறைகளில் சீகாழிக்குப் போய்த் திருக்கோயில் பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

கட்டளைத் தம்பிரான் பதவி ஓர் அணியேயாம். பணிப்பொறுப்புகள் அதிகம் இராது. நாம் சீகாழியில் கட்டளைத் தம்பிரானாக இருந்தபோது (1948-49) மாவட்டக் கழகங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. மாவட்டக் கழகத் தேர்தலில் காங்கிரஸும் நீதிக் கட்சியும் போட்டியிட்டன. நமக்குக் காங்கிரஸ் மீது இளைமையிலிருந்தே ஆர்வம். சுபாஷ் சந்திரபோஸ், பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய தலைவர்கள் மீது பக்தியென்றே சொல்ல வேண்டும். அப்போது பெருந்தலைவர் காமராஜர், மாவட்டக் கழகத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சீகாழி வரும் செய்தி கிடைத்தது. உடனே சீகாழிக்குச் சென்று பெருந்தலைவர் காமராஜருக்கு வரவேற்புக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

உள்ளூர் காங்கிரஸ்காரர்களும் நம்முடனேயே சேர்ந்து ஏற்பாடுகளைச் செய்தனர்.

மாலை மூன்று மணிக்கு காமராஜர் வந்தார். திருக்கோயில் சார்பில் பிரசாதம் கொடுத்து வரவேற்பு அளிக்கப்பெற்றது. திருக்கோயில் வளாகத்திலேயே கூட்டம்! காமராஜரை வரவேற்று மஞ்சள் பெட்டிக்கு வாக்குக் கேட்டு நாம் பேசினோம்! ஆம்! அன்று தேர்தல் சின்னம் இல்லை! பெட்டிதான்! காங்கிரஸுக்கு மஞ்சள் பெட்டி! "நாம் எல்லோரும் மாவட்டக் கழகத் தேர்தலில் காங்கிரஸுக்கு மஞ்சள் பெட்டியிலேயே வாக்களிக்க வேண்டும்-ஏன்? நமது கண்ணுக்கு மஞ்சள் பெட்டியா தெரிகிறது! இல்லை! இல்லை! அந்த மஞ்சள் பெட்டியில் காணப்படும் ரத்தக் கறைகளைப் பாருங்கள்! இந்த மஞ்சள் பெட்டியின் வடிவத்தில் பகத்சிங் ஆவி வாக்குக் கேட்கிறது"! என்று அன்று நாம் பேசினோம் காமராஜருக்கு அளவற்ற மகிழ்ச்சி. வரவேற்பின்போது வழக்கமான மௌனத்தில் பார்த்தவர், பேச்சு முடிந்த பிறகு நன்றாகப் பழகினார்; பேசினார்!

அன்று தொடங்கிய காங்கிரஸ்-அரசியல் ஈடுபாடு இன்று வரை குறையவில்லை. தலைவர் காமராஜர் மூலமாக அரசியல் தேர்தல் ஈடுபாடு தொடங்கியது. அந்த ஈடுபாடு 1967-ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தல்வரை நீடித்தது. தமிழ்நாடு முழுதும் தேர்தல் மேடைகளில் காங்கிரஸுக்காக-காமராஜரின் தலைமைக்காக வாக்குகள் கேட்ட காலம் பசுமையாக நினைவில் இருக்கிறது. 1967 பொதுத் தேர்தலில் காமராஜர் தோற்றபிறகு அரசியல் தேர்தல் உலகிலிருந்தே விலகி விட்டோம்! காமராஜருடன் தொடர்பு கொண்டிருந்த காலம் பயனுடையதாக இருந்தது.

காமராஜர் ஆட்சிக் காலத்தில் 1955-ல் தமிழ்நாட்டைப் பெரும்புயலும் மழையும் பாதித்திருந்தது. காமராஜர் மிகவும் கவலைக்குள்ளானார். ஊர்தோறும் விரைவாகச் சென்று

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். உதவிகளும் செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டத்திலும் அவருடைய பயணம் அமைந்திருந்தது. ஒரு நாள் பகல் பதினொரு மணிக்கு ஒரு ஜீப் வருகிறது. அதில் முன் ஸீட்டில் தலைவர்-தமிழ்நாட்டின் முதல்வர் காமராஜர்! பின் ஒரு கார் வருகிறது! மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி வழங்கிக் கொண்டிருக் கிறோம்! ஜீப் நின்றது. எதிர்பாராத விதமாகத் தலைவர் இறங்கி வருகிறார். வரிசையில் நின்ற மக்களிடம் பேசுகிறார். பின் நம்மைப் பார்த்து "நிவாரண வேலை செய்கிறீர்களா?" என்றார். வியப்பின் காரணமாக நம் தரப்பில் மௌனம். காமராஜர் "இன்று ஒரு நாள்தான்! ராமநாதபுர மாவட்டப் பயணத்தை முடிக்க வேண்டும் போய் வருகிறேன். கவனித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிப் போய் விட்டார். என்ன எளிமை! இத்தகைய எளிமையை இனி என்று காண இயலும்? அவர் சென்று பல மணி நேரங்கழித்து ஒரு டாக்ஸியில் போலீசார் வந்தனர்...போயினர்!

காங்கிரஸ் கட்சி நல்ல அடிப்படையான கொள்கை உடையது! உண்மையிலேயே ஒரு தேசியக் கட்சி! ஆயினும் குழு மனப்பான்மை காங்கிரஸை உள்ளீடழித்துக் கொண் டிருக்கிறது. இந்தக் குழு மனப்பான்மையிலும் நமக்கு அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டது உண்டு. இன்று ராஜ்யசபை உறுப்பிரனராக இருக்கும் செ. மாதவன் நமது திருமடத்தின் வழக்கறிஞராகப் பணி செய்தவர். அவருடைய தகுதி, திறமை ஆகியவற்றில் நமக்கு ஈடுபாடு உண்டு. நல்ல உறவும் உண்டு. காங்கிரஸில் உள்ள நம்மைப் பிடிக்காதவர்கள் சிலர் நம்மைப் பற்றி "காங்கிரஸில் பற்றில்லாதவர் தி.மு.க. அனுதாபி" என்று கூறிவந்தனர். இந்த நிலையிலே தேனாட்சியம்மன் கோயில்புதூரில் ஒரு பள்ளிக் கூடத்தைக் காமராஜர் திறந்து வைத்து விட்டுப் பேசும்போது இதுபற்றிக் குறிப்பிட்டார். "அடிகளார் காங்கிரஸ்காரர் அல்ல தி.மு.க.

அனுதாபி என்றெல்லாம் கூறுகிறார்கள். அதெல்லாம் எனக்குத் தெரியும். அடிகளார் நீண்ட நாட்களாக முரட்டுக் கதர் கட்டும் காங்கிரஸ்காரர், சில சமயங்களில் 'தமிழ்' 'தமிழன்' என்று பேசுவார். அவ்வளவு தான், அலட்டிக் கொள்ளாதீர்கள்" என்று பேசினார்.

ஒரு தடவை காமராஜரிடம் "காங்கிரஸ் உட்கட்சிச் சண்டை தலைவலியாக இருக்கிறது நமக்கு அரசியலில் ஈடு பாடில்லை. நாட்டுப் பற்றோடு ஏதாவது பணி செய்ய ஆசை! ஆதலால் காங்கிரஸ் கட்சியில் கிராமப் பணி புரிபவர் களுக்கென்று ஒரு பிரிவைத் தொடங்குங்கள். அந்தப் பிரிவில் நாம் வேலை செய்கிறோம்" என்று கூறினோம். தலைவர் காமராஜர் "நல்ல யோசனை! பார்க்கலாம்" என்று கூறி விட்டு. "ஆனால், போட்டிக்கு அங்கேயும் வரமாட்டார்களா, தொல்லை தரமாட்டார்களா, என்ன? ஆதலால் இருக்கிற இடத்திலேயே இருந்துகொண்டு கிராமப் பணிகளைச் செய்யுங்கள். ஆனால் ஒன்று... கட்சிக்காரர்களில் இவர் நல்லவர், அவர் நல்லவர் என்று பிரித்துப் பேசாதீர்கள்! கண்ணன் கடவுள்தானே! அவனாலேயே துரியோதனனை விலக்க முடிந்ததா? துரியோதனன் – பாண்டவர்கள் இரண்டு அணியினரையும் சரிக்கட்டிக் கொண்டு சென்றான். துரியோதனனுக்குப் படைகளைக் கொடுத்தான்! பாண்டவர் களுக்காகத் தானே போராடினான். அப்படித்தானே பாரதம் சொல்கிறது. கண்ணனைவிட நாம் என்ன திறமைசாலிகளா? ஆதலால், எல்லாரையும் அணைத்துக்கொள்ளுங்கள்!" என்று ஆலோசனை கூறினார்.

ஒரு நாள் காலைச் செய்தித்தாளில் 'தலைவர் காமராஜர் தி.மு.க. தலைவர் என்.வி. நடராசன் இல்லத் திருமணத்துக்குச் சென்றார். காரிலிருந்து இறங்கித் திருமண வீட்டுக்குள் செல்ல இயலவில்லை. அதனால் மணமக்கள், காருக்கே வந்து வாழ்த்துப் பெற்றார்கள்!' என்ற செய்தியைப் பார்க்க நேரிட்டது. செய்தி மிகவும் கவலையைத் தந்தது.

உடனே காமராஜரைப் பார்க்கச் சென்னைக்குச் சென்றோம். சென்னையிலுள்ள நமது அலுவலகத்திலிருந்து காமராஜர் இல்லத்துக்குப் பார்க்க வருவதாக அறிவித்தோம். செய்தி யறிந்த காமராஜர், "அழைத்துவர அனந்தனை அனுப்பு கிறோம். அப்போது வரலாம்?" என்று சொல்லிவிட்டார். காலை பத்து மணிக்கு குமரி அனந்தன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஆர். ராமநாதன் செட்டியார் இரண்டு பேரையும் அனுப்பியிருந்தார்; நம்மை அழைத்துவர! உடன் காமராஜர் இல்லத்துக்குச் சென்றோம். சோபாவில் படுத் திருந்தார். எழுந்திருக்க முயன்றார். இயலவில்லை. நாம் ஓடிச் சென்று "எழுந்திருக்க வேண்டாம்" என்று சொல்லி அவரைப் பிடித்துப் படுக்க வைத்தோம். பக்கத்தில் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. அதில் நாம் உட்கார... பேச்சுத் தொடங்கியது.

எங்கள் பேச்சுத் தொடங்கியவுடனேயே குமரி அனந்தனும் ஆர். ராமநாதன் செட்டியாரும் அறைக்கு வெளியே போய் விட்டார்கள். ஒரு மணி வரையில் பேச்சு நீண்டது. அப்போது அவருக்கு அரசியலில் இருந்த உணர்வு களைத் தெளிவாகப் புலப்படுத்தினார். இந்திரா காந்தியைப் பற்றிக் காமராஜர் அப்போது கூறிய கருத்து "நல்ல பொண்ணு; ஆனால், அரவணைத்துச் செல்லும் மனம் இல்லை. அவசரகால நெருக்கடி அவசியமில்லாதது. தூத்துக் குடியில் ஒரு வீட்டில் அதிகாரிகள் புகுந்து சோதனை செய்திருக்கிறார்கள். பெண்களிடம் சரியாக நடந்து கொள்ளவில்லை. நாம் சுதந்திரம் பெற்றது, அதிகாரிகளிடம் மக்கள் சுதந்திரத்தை ஒப்படைக்கவா?" என்று அவர் கேட்ட போது கோபம் கொப்பளிப்பது தெரிந்தது, "மக்களுக்காகச் சுதந்திரம்" என்றார். "பிழைத்து எழுந்தால் மக்களின் சுதந்திரத்துக்காக ஆதிக்க அரசை எதிர்த்துப் போராடுவேன்!" என்றார். நமக்கு நல்லகாலம் இல்லை. காமராஜர், அமரராகி விட்டார். இந்த மண்ணில் பிறந்தவர்களில் காமராஜர் ஒரு மகத்தான மனிதர்.

# 6

நடுத்திட்டுக் கிராமத்தில் பண்ணை வாழ்க்கை அமைதியாக நகர்ந்துகொண்டு இருந்தது. அதிகாலையில் பண்ணை வேலை. பின் விநாயகர் பூஜை; படித்தல், மாலையில் நண்பர்களுடன்! வாழ்க்கைச் சக்கரம் ஒரு Monopoly விளையாட்டு! 'Monopoly' விளையாட்டு இங்கிலாந்திலிருந்து வந்த விளையாட்டு! விளையாட்டின் பெயரிலிருந்தே விளங்க வில்லையா?

ஒருசேர ஆக்கிரமித்தல், ஆதிக்கம் செலுத்துதல் மேற்கத்திய நாடுகளில் குறிப்பாக பிரிட்டனின் நோக்கம் என்பது இன்றும் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோமே! மேற்கத்திய நாடுகளால் இராக், கியூபா போன்ற நாடுகள் அனுபவிக்கும் நெருக்கடி எவ்வளவு கொடுமையானது! இராக் நாட்டின் விமானம் அந்த நாட்டின் தெற்குப்பகுதியில் பறக்கக் கூடாதாம்! என்ன சட்டாம்பிள்ளைத்தனம்? வளரும் நாடுகளுக்கு அணிசேரா நாடுகளுக்கு மேற்கத்திய வல்லரசுகளின் அடாவடித்தனத்தைக் கண்டிக்கும் துணிவு வந்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த 'Monopoly'-யை 'வாழ்க்கைச் சக்கரம்' என்று தமிழாக்கம் செய்து விளையாடுவது எங்கள் குழுவின் பொழுதுபோக்கு!

அன்று விளையாட்டில் சிறந்த ஆக்கிரமிப்பாளனாக- ஆதிக்கக்காரனாக விளங்கியவன் ரெங்கநாதன்! இன்றோ அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கை சமவாய்ப்புச் சமநிலைச் சமுதாயக் கொள்கைதான்...மாலையில் தோட்டம்; மீண்டும் விநாயகர் கோயிலில் திருவிளக்கேற்றி பஜனை செய்தல். பஜனைக்கு ஊரவர் முறை வைத்துச் சுண்டல் வழங்கினர்.

அதிகாலையில் திருக்கோயில் திருமுன்பு தண்ணீர் தெளித்துக் கோலம் போடுதல், நாட் பூசனைக்கு வீசம்படி திருவிளக்கு எண்ணெய்; கால்படி அரிசி இவைதான் திருக்

கோயில் நிர்வாகத்துக்குச் சிறந்த முறை! திருக்கோயிலுக்குச் சொத்துக்கள் இருப்பதைவிட, மனிதர்கள்-வழிபடுவோர்கள் தான் தேவை. மெள்ள மெள்ள எங்கள் பஜனைக் குழு வளர்ந்தது.

விநாயகர் கோயிலில் பஜனை நடந்தது. விநாயகர் கோயில்தான்; ஆயினும் வைணவச் சாயல் கூடுதலாகவே இருந்தது. பஜனைக் குழு வீதியில் பாடல்கள் பாடிக்கொண்டு போகும் போது வேடம் போட்டு ஆடுதலும் நிகழ்ந்தது, ரெங்கநாதனுக்குக் கிடைத்த வேடம், அனுமான் வேடம்! அனுமான் வேடத்தில் உண்டியல் குலுக்கி வருவான்.

இங்ஙனம் அமைதியாக நகர்ந்து கொண்டிருந்த வாழ்க்கையில் ஒரு பூகம்பம் வருவதற்குரிய சூழல் உருவா யிற்று. தந்தையும் தாயும் பேசத் தொடங்கினார்கள்...

"படித்துவிட்டு வேலைக்கு போகாமல் உட்கார்ந்திருக் கிறானே!"-இது தந்தையின் குமுறல்!

"எதற்காக வேலைக்கு போகணும்? மூத்த ரெண்டு பிள்ளைகளும் வேலைக்குப் போய்விட்டார்கள்! கடைசிப் பையன் வீட்டில் தான் இருக்கட்டுமே! வீடும் விளக்கமாக இருக்கட்டும்!''-இது தாயின் எண்ணம். தந்தைக்கு உடன்பாடில்லை. தந்தையின் கட்சியில் மூத்த தமையனாரும் இருந்தார்.

ஒரு நாள் எங்கள் குடும்பத்துக்கு மிகவும் வேண்டிய தலைஞாயிறு குஞ்சிதபாதம்பிள்ளை வந்தார். இவர் அரிசி ஆலை அதிபர். தந்தையாரும் இந்தக் குஞ்சிதபாதம் பிள்ளையும் பேசிய பேச்சின் சாரம் தருமபுரம் மடத்தில் ரெங்கநாதனை வேலைக்குச் சேர்த்துவிடுவதாகும்.

குஞ்சிதபாதம்பிள்ளை உறுதி கூறிவிட்டுச் சென்று விட்டார். தந்தையார் மெள்ளப் பேச்சைத் தொடங்கினார். எடுத்த எடுப்பிலேயே ரெங்கநாதன் மறுத்துவிட்டான். தந்தைக்குக் கோபம்.

"மடத்தின் வேலை அரண்மனை வேலை போல! அரைக்காசு சம்பளமானாலும் பரவாயில்லை...உயர்ந்தது!" -மடத்தின் வேலையைப் புகழ்ந்தார். எல்லை கடந்த நிலையில் "வெட்டிச் சோறு" -என்பன போன்ற கடுஞ் சொற்கள் வெளிப்பட்டன.

ரெங்கநாதன் உணர்ச்சிவசப்பட்டான். தருமபுரம் மடத்துக்கு வேலைக்குப் போய் விடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டான். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மறு நாள் காலை தருமபுரத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டான் தனியாக!

மகா சந்நிதானம் அவர்களின் பேட்டி எளிதாகக் கிடைத்து விட்டது! நல்லூழ் போலும்!

வேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்ட உடனேயே வேலையும் கிடைத்து விட்டது! தபால் பதிவு எழுத்தர் வேலை! மாதம் ஒன்றுக்கு ஏழு ரூபாய் சம்பளம். இரண்டு வேளைச் சாப்பாடு. வேலை பார்த்துத்தான் முன்னேற வேண்டும். பிழைக்க வேண்டும் என்ற உணர்வு பிடரியைப் பிடித்து அழுத்தியதால், வேலையில் மிகவும் கவனம்.

ஆதீன அலுவலகத்தில் நிறைந்த அனுபவம் உள்ள வர்கள் நிறையப் பேர் இருந்தனர். அவர்களிடம் வேலை செய்தது ஒரு தனி அனுபவம்! பத்திரிகைகள் படிப்பதைத் தவிர வேறு எந்தப் பொழுதுபோக்கையும் அப்போது விரும்பியதில்லை! வீட்டுக்குப் போகவும் விருப்பமில்லை. ஆதலால், விடுப்பு எடுப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூட வேலைசெய்வது வழக்கமாயிற்று. ஆதலால் வேலையை நன்றாகச் செய்ய முடிந்தது.

அலுவலகத்தில் கண்காணிப்பாளராக வேலை செய்த ஜெயபால் நாயனார் என்பவர் ரெங்கநாதன் வேலை கற்றுக் கொள்வதற்கு துணைசெய்தார். அது மட்டுமல்ல... மடத்தின் பழக்கவழக்கங்களையும் சொல்லிக் கொடுத்தார். காலப்

போக்கில் ஜெயபால் நாயனார் நெருங்கிய தோழரானார். மடத்தில் வேலையில்லாத நேரத்தில் ஜெயபால் நாயனார் வீட்டில்தான் ரெங்கநாதன் இருப்பது. ஜெயபால் நாயனாரின் தாயார் மிகவும் நல்லவர்கள். நல்ல சாப்பாடு போடுபவர்கள். இன்றும் ஜெயபால் நாயனார் தருமபுரம் ஆதீனத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

ஒரு நாள் காலை எட்டு மணி...அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருக்கிறான் ரெங்கநாதன். அன்று தபால் அனுப்புகை எழுத்தர் பணியும் பொறுப்பில் இருக்கிறது. ஆதலால், 'டெஸ்பாட்ச்' வேலை செய்து கொண்டிருக்கிறான். அன்று மயிலாடுதுறை சப்-கோர்ட்டுக்கு அவசரமாக அனுப்பவேண்டிய தபால் ஒன்றும் இருந்தது! அதனைக் கவருக்குள் வைத்து ஒட்டி முகவரி எழுதிக் கொண்டு அலுவலகச் சேவகரைத் தேடிக் கொண்டிருந்த நேரத்தில், அலுவலகத்தின் முதல் நிலைக் கண்காணிப்பாளர் ரத்தினம் பிள்ளை வந்து சேர்ந்தார். இவர்தான் நிர்வாகத்துக்குத் தலைவர். இவர் வந்ததும் கையில் இருந்த கவரைக் கேட்டு வாங்கினார். முகவரியைப் படித்துச் சரிபார்த்துக் கொண்டார்.

"தபாலில் இணைப்பெல்லாம் சரியாக வைத்திருக் கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே கவரைப் பிரித்துத் தபாலை எடுத்தார். தபாலுடன் பிளேடு ஒன்றும் உடன் வந்தது. பிள்ளைக்கு வந்ததே கோபம்! "சின்னப்பசங்கள், பொறுப்பில்லை!" என்றெல்லாம் திட்டத் தொடங்கி விட்டார். ரெங்கநாதன் அழாக் குறையாகத் தலைகுனிந்த வாறு நின்று கொண்டிருந்தான்.

நடந்தது என்ன? மடத்தில் சிக்கனக் கவர்தான் உபயோகப்படுத்துவது பழக்கம். அதாவது மடத்துக்கு வந்த தபால் கவர்களையே சீர்செய்து திரும்பவும் உபயோகப் படுத்துவது, அப்போது டெஸ்பாட்ச் பணியில் இருந்தவர்

டி.பி.ஏ. ராசமாணிக்கம். அவர் தயார் செய்து வைத்திருந்த கவர் அது. கவர் தயார் செய்யப் பயன்படுத்தி இருந்த பிளேடை அந்தக் கவருக்குள்ளேயே வைத்திருக்கிறார். அவர் ஒட்டிய கோந்தின் ஈரம் பிளேடின் இருபுறமும் படிந்து பிடித்துக் கொண்டிருக்கிறது! தபாலில் அது செருகி இருந்ததால் பிளேடு வெளியே வந்திருக்கிறது. இது வேண்டும் என்று செய்த தவறில்லை. தவறாக இல்லாமலும் போகலாம். ஆனால் குற்றம்தான். இதை ரெங்கநாதன் உணராமல் இல்லை. அழாமலும் இல்லை. ரத்தினம்பிள்ளையிடம் மன்னிப்புக் கேட்டுக் கும்பிட்டான், ஆயினும், அவரின் திட்டுதல் குறைந்தபாடில்லை.

பிள்ளையவர்களின் கோபத்துக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் ரெங்கநாதன் அலுவலகப் பெட்டிச் சாவியை அவர் முன் எடுத்து வைத்தான்! "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

இந்தச் சம்பவ நேரத்தில், மகாசந்நிதானம் அவர்கள் அந்த வழியாகப் பங்களாத் தோட்டத்துக்குச் செல்லும்போது நின்று கவனித்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். மகாசந்நி தானம் அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது! ரெங்கநாதன் சென்று வீழ்ந்து வணங்கி நின்றான்! கேவிக் கேவி அழுதான். மகாசந்நிதானம் அவர்கள் ஆறுதல் கூறினார்கள்! ரத்தினம் பிள்ளையும் வந்து சேர்ந்தார். வந்தது மட்டுமின்றிப் புகாரையும் சொன்னார். "வேலையை விட்டுப் போவதாகக் கூறுகிறான்... போகட்டும்! இந்த மாதிரிப் பொறுப்பற்ற பசங்கள் தேவையில்லை" என்று பொரிந்து தள்ளினார். ஆனால் மகாசந்நிதானம் அவர்கள் மன்னித்தார்கள்! ரத்தினம்பிள்ளைக்குச் சமாதானம் கூறினார்கள். பணி தொடர்ந்தது... ரெங்கநாதனின் நடை, உடை, பாவனைகள் மகாசந்நிதானம் அவர்களைக் கவர்ந்த நிலையில் ஆபத் தில்லா வாழ்க்கை நீடிக்கிறது.

சனிக்கிழமைதோறும் மகாசந்நிதானம் அவர்கள் மிளகுக் காப்புச் செய்து கொள்வார்கள். அன்று மகாசந்நிதானம் அவர்கள் 'சித்திரக்கட்டு' என்னும் இடத்தில் இருப்பார்கள்! அந்த நாளில் ரெங்கநாதன் அலுவலகத்துக்குச் செல்லும் போது, இடையில் இருந்த மகாசந்நிதானம் அவர்களை வணங்கி வாழ்த்துப் பெற்றான். விசிறிக்கொண்டு நின்றான்.

மகாசந்நிதானம் அவர்கள் நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடத்துவதில் ஆர்வம் காட்டுவார்கள். பலரையும் சிரிக்கச் செய்வார்கள். அவர்கள் சிரிக்க மாட்டார்கள். அன்று ஒரு வேடிக்கை! அப்போது 'பண்டாரக்கட்டு' என்னும் பகுதியில் சுப்பையா முதலியார் என்பவர் வேலை செய்தார். நல்லவர், மாடு போல உழைப்பார்! புத்தியை அதிகமாக உபயோகப் படுத்தமாட்டார்! சொன்னபடி செய்வார்.

மகாசந்நிதானம் அவர்கள் பண்டாரக்கட்டு சுப்பை யாவை அழைத்து, "பரிகலம் (சமையற்கட்டு) அம்மியில் பல் குத்தப் பயன்படும் ஊசி குத்தி வைத்திருக்கிறது, எடுத்து வா!" என்றார்கள். சுப்பையா ஓடினார். அம்மியைத் தடவிப் பார்த்தார். ஊசி இல்லை. வந்து "ஊசி இல்லை!" என்றார்.

அம்மியில் ஊசி குத்தி வைக்க முடியுமா? இந்தப் பகுத்தறிவு அவருக்கு இல்லை என்று நினைக்காதீர்கள்! மடத்தில் பழக்கம் அல்லது பழக்கப்படுத்துவது. மகாசந்நிதானம் என்ன உத்தரவு செய்தாலும் அப்படியே கேட்டுக்கொள்ள வேண்டும்! செய்யவேண்டும்... இந்தப் பழக்கத்தால் வந்த விளைவு இது!

அப்போது எதிர்பாராத சூழ்நிலையில் மகாசந்நிதானம் அவர்கள் ரெங்கநாதனிடம் "பழுக்கலாமா?" என்று கேட்டார்கள்! ரெங்கநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

# 7

கயிலைக் குருமணி அவர்களின் கருணையால் ரெங்க நாதன் பழுத்துவிட்டான். அதாவது சந்நியாசியாகி விட்டான். கந்தசாமிப் பரதேசி என்பது தீட்சாநாமம். ரெங்கநாதன் துறவு பூண்டது அவனுடைய பெற்றோருக்குத் தெரியாது. பெற்றோரின் அனுமதியைப் பெற முயற்சித்ததில் தாயாரின் அனுமதி கிடைக்கவில்லை. அனுமதி கிடைக்காதது மட்டுமல்ல மடத்துக்கு வேலைக்குப் போகவே வேண்டாம் என்பது தாயார் ஆணை. என்னென்னவோ சமாதானங்கள், உறுதிமொழிகளைத் தாயாரிடம் கூறிவிட்டு, மீண்டும் பணிக்கு வந்து சேர்ந்தான் ரெங்கநாதன்! கயிலைக் குருமணி அவர்களிடம் இசைந்தபடி யாத்திரைக் காஷாயம் வாங்கிக்கொண்டான்.

மடங்களின் மரபுப்படி முதலில் யாத்திரைக் காஷாயம் தான் தருவார்கள். இது–காவித்துணியைப் பூஜை மடத்தில் வைத்து எடுத்து உடுத்திக் கொள்ளச் சொல்வதாகும். உடன் அவர்கள் யாத்திரை செல்லவேண்டும். அவரவர் சத்திக்கு ஏற்பவும், மகாசந்நிதானம் அவர்களின் உத்தரவுக்கு ஏற்பவும் யாத்திரை செல்ல வேண்டும். பழைய காலத்தில் உண்மை யாகவே பரதேசியாக யாத்திரை செல்ல வேண்டும். பிக்ஷை முதலியன பெற்று உயிர் வாழ்ந்துகொண்டு யாத்திரை செல்ல வேண்டும். பெரும்பாலும் நடை! காலப்போக்கில் நடுத்தர வசதியுடைய யாத்திரையாக இது மாற்றம் பெற்றது.

யாத்திரை முடிந்து வந்தவுடன் பக்குவம் நோக்கி மந்திரக்காஷாயம் தந்தருளுவார்கள். மந்திரக் காஷாயத்துக்கு முன்பு சிவபூஜை எழுந்தருளச் செய்து தருவார்கள்! மந்திரக் காஷாயம் என்பது மகாசந்நிதானம் அவர்கள் திருக்கரங் களால் பூசனை செய்யப் பெற்ற காவித்துணி தருவதாகும். மந்திரக் காஷாயம் பெற்ற நிலையில்தான் பரதேசியாக இருந்தவர் மடத்துத் தம்பிரான் ஆவார்.

ஒருவர் மடத்தில் தம்பிரான் நிலையிலிருக்கும் பொழுதுதான் திருமடத்தின் அங்கீகாரம் பெற்ற உறுப்பினராகிறார். அது முதல் திருமடத்தின் சொத்தாகவும் பிரிக்கப்பட முடியாதவராகவும் ஆகிறார். அவருக்குத் திருமடத்தில் உரிமைகள் உண்டு. திருமடங்களில் பழங்கால தம்பிரான்களுக்கு உரிமைகளும் கடமைகளும் இருந்தன. இன்று நடைமுறையில் இல்லை. எல்லா உரிமைகளும் பெற்ற இந்திய ஜனங்களின் உரிமைகள் போலவே இந்த உரிமைகள் ஆயிற்று! அதற்கும் மேலே பக்குவம் பெற்று, முறையே பெறுபவை-நிர்வாண தீட்சை, ஆசாரியாபிஷேகம் முதலியன.

ரெங்கநாதன் யாத்திரைக் காஷாயம் வாங்கிக் கொண்ட செய்தி மயிலாடுதுறைக்குப் போய்ச்சேர்ந்தது. அப்படியே நடுத்திட்டில் இருந்த பெற்றோருக்கும் செய்தி கிடைத்துவிட்டது. தாய்க்குத் தாங்கமுடியாத துயரம். உடனே தருமபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள் தாய், தந்தை, தமையனார் ஆகியோர். அறைக் கதவு தட்டப்படுகிறது. நள்ளிரவு மணி பன்னிரண்டு. அவர்கள் வந்த நோக்கம் நம்மை மீட்டுக் கொண்டு போய்விடுவது என்பது. கந்தசாமிப் பரதேசி எடுத்துக் கூறிய சமாதானம் எடுபடவில்லை. அவர்களின் அழுகைச் சத்தம் கேட்டு அடுத்தடுத்த அறையினர் வேறு வந்துவிட்டனர். ஒருவாறாகச் சமாளித்துக் காலையில் மகாசந்நிதானம் அவர்களிடம் தெரிவித்துவிட்டு வந்துவிடுவதாக உறுதி (உறுதியில்லாத உறுதி) கூறினோம். அவர்கள் போய்விட்டனர்!

மறுநாள் காலை ஏழு மணி, மகாசந்நிதானம் அவர்கள் நந்தவனத்தில் தனித்திருக்கும் நேரம். அந்த நேரத்தில் அழைப்பு வந்தது. கந்தசாமிப் பரதேசி சென்று கண்டு கொண்டார். நிலத்தில் வீழ்ந்து வணங்கினார். மகாசந்நி தானம் அவர்களிடம் நடந்தவற்றை இரவு காவற்காரர்கள் தெரிவித்திருக்கிறார்கள். கந்தசாமிப் பரதேசியும் நடந்த வற்றைக் கூறினார்.

"என்ன முடிவு?" மகாசந்நிதானம் அவர்களின் கேள்வி?

"எடுத்த முடிவு முடிவுதான்! இனி யோசிப்பதில் பயன்?"

மகாசந்நிதானம் அவர்கள் உடனே உத்தரவு செய்தார்கள்.

"பழைய மரபுப்படி நீ யாத்திரை போய் வா! தெற்குப் பக்கம் போ! குமரி வரையில் சென்று தலங்களை வழிபட்டுவா! உனக்கும் நல்லது... உன் பெற்றோருக்கும் பழகிப் போய்விடும்!" என்று பணித்தார்கள்.

அன்றே கந்தசாமிப் பரதேசியின் யாத்திரை தொடங்கியது. உடன் அலுவலகக் கண்காணிப்பாளர் அ. கல்யாண சுந்தரதேசிகரையும் அனுப்பி வைத்தார்கள். கல்யாண சுந்தரதேசிகர் நல்ல அறிஞர். சாதுரியமானவர். ஆனால், மகாசந்நிதானம் அவர்களைத் தவிர, வேறு எவர் சொல்லையும் கேட்க மாட்டார்கள். தன் பக்கத்தில் தராசு வைத்தே பேசுவார்... பழகுவார். குட்டித் தம்பிரானாக இருந்தால்கூட அவரிடம் இரண்டாம் இடம்தான்!

கந்தசாமிப் பரதேசி, யாத்திரையாக ரயில் வழி மதுரை வந்து சேர்ந்தார். மதுரையில் தருமை ஆதீனம் மடத்தில் தங்கல். மதுரை வழிபாட்டை முடித்துக் கொண்டு அங்கேயே தங்கல். மறுநாள் திருப்புரங்குன்றம் சென்றார். திருப்பரங்குன்றத்துக்குத் தேசிகர் உடன் வரவில்லை.

கந்தசாமிப் பரதேசி மட்டும் பயணம். திருப்பரங் குன்றத்தில் சரவணப் பொய்கையில் தீர்த்தமாடிவிட்டுக் கரையில் துண்டு விரித்து உட்கார்ந்துகொண்டு ஜெபம் செய்தார். தொடக்கக் காலத்தில் பணி நேரங்களில்கூட ஜெபம் செய்வார். அதாவது, திருவைந்தெழுத்து எண்ணு தலாகும். கண்களை மூடி ஜெபம் செய்து கொண்டிருந்தார்.

மொட்டைத் தலை, காவி உடை, இந்தத் தோற்றத் துடன் கந்தசாமிப் பரதேசி ஜெபம் செய்து கொண்டிருக்க, அச்சமயம் திருப்பரங்குன்றத்துக்கு வந்த பக்தர்களுக்கு இலக்கு உடைய பரதேசியாக அவரைக் கருத இயலவில்லை! பிழைப்புத் தேடும் பிச்சைக்காரச் சாமியாராகவே எண்ணி, விரிந்திருந்த துண்டில் காசுகள் போட்டுச் சென்றனர். அன்று பத்து அணா வரை காசுகள் விழுந்திருந்தன. கந்தசாமிப் பரதேசியின் நிலை-மெல்லவும் முடியவில்லை... விழுங்கவும் முடியவில்லை. ஆனாலும், துக்கத்தை அனுபவிக்காமல் இல்லை. யாத்திரை திருநெல்வேலிக்குத் தொடர்ந்தது! மாதம்-ஆடி மாதம்!

திருநெல்வேலியில் தங்கல்... ஆடி அமாவாசைக்குப் பாணதீர்த்தம் சென்று புனித நீராட எண்ணம்! எண்ணம் செயலானது. நெல்லையிலிருந்து, நெல்லைப் பகுதியின் தருமை ஆதீன மேலாளர் கே.பி. மகாலிங்கம் பிள்ளை உடன் வந்தார்.

கே.பி. மகாலிங்கம் பிள்ளை கந்தசாமிப் பரதேசியிடம் பிரியமாக இருந்தார். பக்குவமாக வீட்டில் சமைத்துக் கொண்டு வந்து சாப்பாடு கொடுத்தார். பாணதீர்த்தத்துக்குச் செல்ல இன்று இருப்பதுபோல அன்று வசதிகள் இல்லை. சொரிமுத்தய்யன் கோயிலுக்கு நடந்துதான் போக வேண்டும். ஆடி அமாவாசைக்கு முதல் நாள் இரவே பாணதீர்த்தத் துக்குச் சென்று சேர்ந்தாயிற்று. நாணற்புற்களாலான சிறுசிறு குடிசைகள் 25 ரூபாய் வாடகை! மூன்று குடிசைகள் எடுத்துத் தங்கினோம்.

மறுநாள் காலை. பாணதீர்த்தத்தில் நீராடி வழிபாடு முதலியவை முடித்துக் கொண்டு பயணம். தேசிகரும் பிள்ளையும் மெதுவாக நடந்து வந்தார்கள். கந்தசாமிப் பரதேசியின் நடை எப்போதுமே வேகம்தான். இப்போது தான் சொரிமுத்தய்யன் கோயிலருகில் கந்தசாமிப் பரதேசி

தனியே நடந்து வந்து கொண்டிருந்தார். நல்ல இளமை! இருபத்தோரு வயது. பரதேசிக் கோலம்! நடுவில் சந்தித்தவர் ஒருவர் கந்தசாமிப் பரதேசியை மிரட்டிவிட்டார். அவர் வாயில் வந்த வார்த்தைகளெல்லாம் எழுதும் தரத்தில் அல்ல!

"ஏண்டா! உழைத்துச் சாப்பிடாமல் பிச்சை எடுக்கிறாய்?" என்பது அவருடைய வினா! முதலில் அதிர்ச்சியடைந்தாலும் அழுதாலும் பின் தேற்றிக் கொண்டு, அவருக்குத் தன்னிலை விளக்கம் அளித்து வெற்றி பெற்றார் கந்தசாமிப் பரதேசி! பின் அவரே சாலை வரையில் துணை வந்தார்.

நமது சமயத்தில் காவி உடை, திருநீறு, உத்திராக்கம் போன்ற புனிதச் சின்னங்கள் பிழைப்பின் சாதனங்களாக மாறிவிட்டன! பல்லாயிரக்கணக்கில் பிச்சைக்காரர்கள் இந்தக் கோலத்தில் வயிற்றுக்குக் கேட்டு அலைவது வெட்ககரமான செய்தியே!

கன்யாகுமரி வரையில் யாத்திரை தொடர்ந்தது! இளமையிலேயே கந்தசாமிப் பரதேசிக்கு விவேகானந்தரின் தாக்கமும் உண்டு! நடுத்திட்டுக்குப் பக்கத்தில் உள்ள மண்மேடு என்ற ஊரில் இருந்த மாவட்டக்கழகப் பள்ளியில் ரெங்கநாதன் ஆரம்பக் கல்வி பயின்றவன். இந்தப் பள்ளியில் ஆசிரியராகப் பணி செய்த சாரங்கபாணி நாயுடு என்பவர் இராமகிருஷ்ணமிஷனில் பிற்காலத்தில் சேர்ந்தார். அவருடைய செல்வாக்கின் பயன் இது!

விவேகானந்தர் கன்யாகுமரிக் கடலில் உள்ள குன்றின் மீது உட்கார்ந்து தவம் செய்தார் என்பது அனைவரும் அறிந்த செய்தி! கந்தசாமிப் பரதேசியும் அந்தக் குன்றுக்குச் சென்று சில நிமிடங்கள் அமர்ந்து தியானம் செய்தார். ஒருவாறாக, 47 நாள் யாத்திரையை முடித்துக்கொண்டு தருமபுர ஆதீனத் துக்குத் திரும்பி வந்தார். பெற்றோரும் கைவிட்டு விட்டனர்.

அடுத்து வந்த கார்த்திகை மாதம் திங்கட்கிழமையன்று கந்தசாமிப் பரதேசிக்கு மந்திரக் காஷாயம் வழங்கினார்கள் மகாசந்நிதானம் அவர்கள். கந்தசாமிப் பரதேசி கந்தசாமித் தம்பிரான் ஆனார். எதையும் பொறுப்புடன் செய்ய வேண்டும் என்று உணர்த்தியது மந்திரக் காஷாயம்!

## 8

தருமபுரத்தில் நாம் குட்டித் தம்பிரானாகிப் படித்துக் கொண்டிருந்த காலம். குட்டித் தம்பிரான் என்றால் மடங்களில் சந்நியாசம் பெற்றுப் பயிற்சி பெறுபவர். அந்தக் காலத்தில்தான் தருமையில் கல்லூரி தொடங்கப்பெற்றது. அப்போது தருமபுரம் ஆதீனத்தில் பி. சுந்தரம் பிள்ளை என்றொரு தமிழறிஞர் இருந்தார். நல்ல தமிழறிஞர். தமிழ் இலக்கியங்கள் அவருக்கு மனப்பாடம். திருக்கோவையாரை அருமையாகச் சுவைத்துப் பாடுவார். அவர் சமயப்பாடம் நடத்தினார். அவர் நடத்தும் நடை பழங்காலப் பண்டிதர் நடை. நாங்களோ புதிய தலைமுறையினர். முறுக்கை ஊற வைத்துச் சாப்பிடும் இளைஞர்கள். சமயப்பாடம் புரிய வில்லை.

நம்முடன் காவிரிக்கு வந்தவர்களிடம், "படித்தால் நன்றாக விளங்கிப் படிக்க வேண்டும் இல்லையானால் படித்து என்ன பயன்?" என்று கூறி, "குட்டுப்பட்டால் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்" என்றும் கூறினோம். இந்தப் பழமொழி காவிரிக் கரையில் செடிகளின் மறைவில் இருந்த ஒருவர் காதில் விழுந்திருக்கிறது. இது பெருந் தீயாகப் பற்றி எரிந்தது.

இந்து சமயத்தில் துறவிகளிடத்தில் கூட இணக்கம், ஒற்றுமை காண்பதரிது. ஒரு துறவி போனவழியில் இன்னொரு துறவி போகமாட்டார். பழைய புராணங்களில் கூட விசுவாமித்திரர், வசிஷ்டரிடையே நல்ல உறவு நிலவிய

தாகத் தெரியவில்லை. நமக்கும் தரும புரத்தில் குட்டித் தம்பிரான்கள் ஓரிருவரிடம் உறவு நல்லவண்ணம் அமைய வில்லை. ஏனோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

காவிரிக் கரையில் நாம் சொன்ன 'குட்டுப்பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்பட வேண்டும்' என்ற வார்த்தைகளுக்குக் கண், மூக்கு, காது வைத்து திருமடத்தின் மரபை மீறி பேசியதாக மகாசந்நிதானம் அவர்களிடம் 'கோள்' சொல்லிவிட்டார்கள்.

காலையில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு அறைக்கு வந்து, கடையிலிருந்து வந்த இட்லிப் பொட்டலத்தை அவிழ்த்துச் சாப்பிட உட்கார்ந்தோம். மகாசந்நிதானத்திடமிருந்து அழைப்பு வந்தது. உடன் விரைந்து சென்றோம், மகாசந்நிதானம் உள்ள அஷ்டலட்சுமி கட்டிற்குச் செல்லும்போதே, மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளத்தில் ஏதோ ஆதங்கம் ஏற்பட்டிருப்பதைச் செவிப் புலன் வழியாக உணர முடிந்தது.

அஷ்டலட்சுமி கட்டின் வாசற்படியில் ஆதீன உயர் அலுவலர் தேசிகர் நம்மை நிறுத்தினார். விசாரிக்கத் தொடங்கினார். மகாசந்நிதானம் அவர்களிடம் நேரில் விண்ணப்பித்துக் கொள்வதாக உயர் அலுவலரை ஒதுக்கி விட்டுச் சென்றோம். மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம் சாதகமாக இல்லை என்பதை உணர முடிந்தது. நிலத்தில் வீழ்ந்து வணங்கி, "யானறிந்து எந்த ஒரு பிழையும் செய்யவில்லை... பிழை பொறுத்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்துவிட்டு, விடைக்குக் காத்திராமல் அறைக்கு வந்து விட்டோம்.

அன்று மதியம், அறை மாற்றல் ஆணை கிடைத்தது. 'வாழைக்காயைக் கனிய வைக்கும்' அறை கிடைத்தது. பார்த்து வந்த பணிகளும் பணிவிடைப் பணிகள் உட்படப் பறிக்கப்பெற்றன. நம்முடன் யாரும் பேசக்கூடாது என்ற

ஆணை வேறு. நம்மைப் பொறுத்தவரையில் "நன்றே செய்வாய்... பிழை செய்வாய்! நானோ இதற்கு நாயகமே!" என்ற திருவாசக வரிகளும் "கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ?" என்ற திருஞானசம்பந்தர் அருள்வாக்கும் சிந்தனைக்குப் பயன்பட்டன. உள்ளத்தில் உறுதிப்பாட்டைத் தந்தன. அப்போது உடன் பயின்ற கோ. குஞ்சிதபாதம் என்பவர், இரவு பன்னிரண்டு மணிக்கு வந்து பார்த்துப் பேசுவார். மயிலாடுதுறையிலிருந்து பொருட்கள் வாங்கி வந்து தருவார். இதே போல இப்போது நா. மகாலிங்கம் அவர்களிடம் இருக்கும் கோ. முருகையன் இராங்கியத்தில் தமிழாசிரியராகப் பணி செய்து ஓய்வு பெற்றுள்ள வை.க. தண்டபாணி ஆகியோரும் பிறரறியாமல் உதவி செய்தனர்.

நாட்கள் உருண்டோடின. பல மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் பூஜை மடம் வழிபாடு முடிந்து இரவு எட்டு மணிக்கு மேல் அறையில் வந்து படித்துக்கொண்டிருந்தோம். அப்போது மகாசந்நிதானம் அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. ஒரே பயம்...! ஏதாவது தவறு செய்து விட்டோமோ என்ற அச்சம்! ஆயினும், அழைப்பை ஏற்று மகாசந்நிதானம் அவர்களைக் கண்டுகொள்ளச் சென்று நிலத்தில் சென்னியுற வீழ்ந்து வணங்கி நிற்கும் பேறு கிடைத்தது.

மகாசந்நிதானம் அவர்கள் திருமுன் இருந்த மேஜையில் ஒரு தாம்பாளத்தில் லட்டுகள், பழங்கள், ஒரு ரூபாய் வெள்ளி நாணயங்கள் இருந்தன. வணங்கி எழுந்த நிலையில் திருவாளன் திருநீறு வழங்கி அருளினார்கள்.

"கற்றைச் செஞ்சடையான் உளன்; நாம் உளோம்" என்ற அப்பர் அடிகள் வாக்கினைப் போல மகாசந்நிதானம் அவர்கள்... அவர்கள் திருமுன்பு எளிய மாணாக்கன்... இருவரும் தவிர யாரும் இல்லை. மகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளங்கனிந்து மொழிந்த சொற்கள் ஊனைத்

தொட்டன... உயிரைத் தொட்டன; உணர்வைத் தொட்டன... உவப்பிலா ஆனந்தத்தை தந்தன. அந்தச் சொற்கள்தான் என்ன?

"நீ நல்லபிள்ளை... என்றும் நன்றாக இருப்பாய்!" என்பனவே அந்தச் சொற்கள்! அருள் நிறைந்த வாழ்த்துக் களுடன் இனிய பண்டங்களும் செல்வமும் கிடைத்தன. அன்று இரவெல்லாம் மகிழ்ச்சிவெள்ளம்! இந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டவர்களில் முதல் நிலையி லுள்ளவர்கள், இன்று தருமபுர ஆதீனத்தில் மகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்களாகிய திருவருள் திரு. சண்முகதேசிக ஞானசம்பந்தப் பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். மறுநாள் காலை விடியலில், பழகிய நண்பர்கள் எல்லோரும் வந்து பார்த்தனர்... மகிழ்ந்தனர். அறை மாற்றப் பட்டது. தடைகள் நீங்கின.

ஆயினும், இடையில் மகாசந்நிதானம் அவர்களுக்குரிய பணிவிடை, குட்டித் தப்பிரான்கள் செய்யவேண்டிய தில்லை... ஊழியர்களே செய்யலாம் என்ற நடைமுறை வந்து விட்டது.

ஒரு நாள் வைத்தீசுவரன் கோயிலில் வைகாசி மாதத்தில் வரும் மண்டலாபிஷேகக் கிருத்திகை. மகாசந்நி தானம் அவர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். சித்தாமிர்த தீர்த்தத்தில் ஆசமனம் செய்துவிட்டுக் கரையேறினார்கள். பணிவிடை ஊழியன் நடராசனிடம் மகாசந்நிதானம் அவர்களின் திருவடியைத் துடைக்கப் பரிவட்டம் (துண்டு) வாங்க முயற்சி செய்தோம். அவன் துண்டைக் கொடுக்க மறுத்துவிட்டு, அவனே துடைத்தான். சுற்றிலும் ஏராளமான பக்தர்கள்... மக்கள்!

குருமணிக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்ற வருத்தம். அடக்கமுடியாத ஆதங்கம். வழிபாடெல்லாம் முடித்துக்கொண்டு கட்டளை மடத்துக்கு

வந்தவுடன் பணிவிடை நடராசனை அழைத்து வரச் செய்து ஆத்திரம் தீரத்திட்டினோம்.

"குட்டித் தம்பிரான்கள் பணிவிடை செய்யக் கடமைப் பட்டவர்கள். குட்டித் தம்பிரான்களை அவர்கள் கடமையைச் செய்ய விடாமல் தடுப்பது எப்படி நியாயம்? குரு–சிஷ்ய உறவில் ஊதியம் வாங்கும் ஊழியர்கள் குறுக்கீடு செய்வது என்ன நியாயம்?" என்று சத்தம் போட்டோம்! "இனி நமது தொண்டு வாழ்க்கையில் குறுக்கே நின்றால். அப்புறம் நடப்பது பற்றிக் கவனமாக இருந்துகொள்!" என்று எச்சரித்து அனுப்பி வைத்தோம்.

பணிவிடை நடராசன் நடந்தவற்றை அப்படியே சென்று சொல்லியிருக்கிறான். நமது கருத்துப்படியே, மகாசந்நிதானம் அவர்களிடமிருந்து கந்தசாமிக் குட்டித் தம்பிரான் (இதுதான் தருமபுரத்தில் இருந்தபோது பெயர்) எண்ணம் போல் நடந்து ஒத்துழைக்கும்படி நடராசனுக்கு உத்தரவு கிடைத்தது. அது முதல் குன்றக்குடிக்குப் பயணம் புறப்படும் நேரம் வரையில் மகாசந்நிதானம் அவர்களுக்குப் பணிவிடை செய்ததில் ஓய்வு எடுத்ததில்லை. தவறியதில்லை.

இந்த உணர்வு எப்படி வந்தது? குமரகுருபரர் இயற்றிய பண்டார மும்மணிக் கோவை பாராயணம் தந்தருளிய பரிசு, பாராயணம் மட்டுமன்று... பண்டார மும்மணிக் கோவையின் ஞானாசிரியராகிய மாசிலாமணி தேசிகருடைய குரு மூர்த்தத்தில் நாமும் இன்றைய தருமபுரம் திருவருள் திரு. மகாசந்நிதானம் அவர்களும் வியாழக்கிழமைதோறும் பண்டார மும்மணிக் கோவை ஓதி, வழிபாடு செய்யும் பழக்கம் இருந்தது. அதன் காரணமாக குருபக்தி வளர்ந்தது. இந்தக் குருபக்தியின் காரணமாக அடக்கம் அணி கலனாயிற்று. கல்வியும் ஞானமும் கிடைத்தன. தொண்டு நெறியில் ஆர்வம் எழுந்தது.

ஒரு நாள், இரவு ஏழு மணி! அறை வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரிலிருந்து திருக்கடவூர் கைலாசம் பிள்ளை–திருக்கடவூர் பிச்சைக்கட்டளை விசாரணைதாரர் வேறு ஒருவருடன் வந்தார். திருக்கடவூரில் நாம் கட்டளைத் தம்பிரானாக இருந்தபோது பிள்ளை அவர்களுடன் நல்ல பழக்கம். அறைக்குள் வந்தவர்களுக்குப் பாய் எடுத்துப் போட்டு உட்காரும்படி கேட்டுக் கொண்டோம். உட்கார்ந்த பிள்ளையவர்கள் வழக்கமான விசாரணைகளுக்குப் பிறகு. எதிர்பாராத விதமாக "பெட்டியில் துணிகளை எடுத்து வைத்துக்கொண்டு புறப்படுங்கள்... போகலாம்!" என்றார்.

நமக்கு ஒன்றும் புரியவில்லை. "எங்கே?" என்று கேட்டோம்.

"புறப்படுங்கள்... அப்புறம் சொல்கிறேன்!" என்றார்.

"எங்கே போவது? மகாசந்நிதானம் அவர்களிடம் உத்தரவு பெறாமல் வெளியே எங்கும் செல்லக்கூடாதே?" என்று சொன்னோம்.

"இப்போது புறப்படுங்கள்! சொல்லிக்கொண்டு போகிற மாதிரி சூழ்நிலை இல்லை போய் காரியம் முடிந்த பிறகு வந்து சொல்லிக்கொள்ளலாம்" என்றார்.

நமக்கு ஒன்றும் புரியவில்லை. விவரங்கள் தெரிந்து கொள்ளாமல் புறப்பட இயலாமையைக் கண்டிப்புடன் கூறினோம்! அப்போது அவர், "குன்றக்குடி ஆதீனத்தில் தங்களுக்குப் பட்டம் கட்ட விரும்பி அழைக்கிறார்கள்! இங்கே தெரிந்தால் அனுப்பமாட்டார்கள்! ஒருவர் நல்லது அடைய இந்தக் காலத்தில் யாரும் ஒத்துழைக்க மாட்டார்கள்! ஆதலால் புறப்படுங்கள்... போய்ப் பட்டத்தைக் கட்டிக்கொண்டு திரும்ப வந்து பார்க்கலாம்!" என்றார்.

நமக்கோ எரிச்சல் தாங்க முடியவில்லை, சோரம் போகும் பழக்கம் நமக்கு இல்லை.

கு. XVI. 8.

'கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்லால்.'

என்ற திருவாசகப் பாடல் நினைவுக்கு வந்தது... சிந்தனைக்கு வாயிலாக இருந்தது.

"தயவுசெய்து போய் வாருங்கள்! நமக்குப் பட்டமும் வேண்டாம்...ஒன்றும் வேண்டாம்!" என்று கடிந்து கூறி அனுப்பி வைத்தோம்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் நமது ஆன்மாவைப் பக்குவப்படுத்த உதவி செய்தன.

ஆதலால், 'உறுதியான அன்பு, பக்தி மனிதனை வளர்க்கும்' என்பது உண்மை!

## 9

தருமபுர ஆதீனத்தின் கந்தசாமித் தம்பிரானின் கல்வி பயிலும் வாழ்க்கை வளர்ந்தது. கல்லூரியில் முறையாகத் தமிழ் படிப்பு! அப்போது பெரும்பள்ளம் என்ற ஊரில் நாகலிங்கம் என்பவர் இருந்தார். இவர் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர். திருக்கடவூரில் கட்டளை தம்பிரானாக இருந்தபோது பழக்கமானவர். அவரிடம் ஆங்கிலப் படிப்பு, உலகம் தெரிந்து கொள்வதற்கு! செய்தித்தாள் வழக்கம்போல் படித்தலும் நிகழ்ந்தது.

1946-லிருந்து அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு', பின் 'காஞ்சி' இதழ்கள் படிக்கும் பழக்கம் உண்டு. அறிஞர் அண்ணாவிடம் மதிப்பு உணர்வு வளர்ந்து வந்தது! அதற்குக் காரணம் தமிழேயாகும்! உடன்படா நிலைபாடுகளும் இருந்தன ஆயினும் அறிஞர் அண்ணாவுடன் கொண்ட தொடர்புகள் அனைத்தும் அவரிடம் மதிப்பு உணர்வை நாளும் வளர்த்தது. அவர் ஒரு சிறந்த மனிதர்... தலைவர்!

அறிஞர் அண்ணாவின் நினைவு வரும்போதெல்லாம் கண்கள் குளமாகின்றன. ஏன்? அவர் இருந்த இடம் வெற்றிடமாக இருக்கிறது! யாராலும் நிரப்ப முடியவில்லை... முடியாது! அக்காலத்தில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் "பெரியபுராண ஆராய்ச்சி" என்ற ஆய்வுநூல் எழுதி வெளியிட்டிருந்தார். அறிஞர் அண்ணா இந்த நூலை எதிர்மறையாக விமரிசித்துத் 'திராவிட நாடு' இதழில் 'அன்பரது ஆராய்ச்சியும் அறைகூவல்களும்' என்று எழுதியிருந்தார். கந்தசாமித் தம்பிரான் பெரியபுராணம் படிக்கத் தொடங்கி இருந்த காலம்...உடனே 'அறிஞரின் ஆராய்ச்சியும் விளக்கமும்' என்ற தலைப்பில் மறுப்பு எழுதினார் கந்தசாமித் தம்பிரான்.

அக்காலத்தில் ஜகந்நாதாச்சாரியார் என்ற பெரியவர் 'தார்மீக இந்து' என்ற பெயரில் ஒரு இதழ் நடத்தி வந்தார். இந்த இதழ் செத்துச் செத்துப் பிழைத்துவரும். நாத்திக இயக்கங்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் கடுமையான முறையில் மறுப்பு எழுதுவார் ஜகந்நாதாச்சாரியார். அப்போது விவாதத்தில் இருந்த இந்து அறநிலையச் சட்டத்தை எதிர்த்தார் அந்தப் பெரியவர். அவ்வப்போது திருமடங்களுக்கு வந்து 'தார்மீக இந்து' வளர்ச்சிக்கு நன்கொடை பெற்றுச் செல்வார். தருமபுர ஆதீனத்துக்கு வரும் அறிஞர்களிடமெல்லாம் கந்தசாமித் தம்பிரான் நன்றாகப் பழகி உறவு கொண்டு விடுவார். ஆம்! அறிஞர்கள் உறவு, பல ஆண்டுகள் படித்த பயனைத் தருமல்லவா? 'தார்மீக இந்து' ஜகந்நாதாச்சாரியாருடன் பழகி உறவு கொண்டாடி 'தார்மீக இந்து'வில் சில பக்கங்கள் எழுதும் உரிமை பெற்றுவிட்டார் கந்தசாமித் தம்பிரான்!

அறிஞர் அண்ணாவின் பெரியபுராண ஆராய்ச்சி மறுப்புக்கு மறுப்பு இந்த இதழில் பிரசுரமாயிற்று. 'தார்மீக இந்து'வில் தொடர்ந்து எழுதி வந்தார் கந்தசாமித் தம்பிரான்! அறிஞர் அண்ணாவின் அடிப்படைக் கொள்கையாகிய

சாதிவேற்றுமை ஒழிப்புக்கொள்கையில் கந்தசாமித் தம்பிரானுக்கும் உடன்பாடே! அதனால் அறிஞர் அண்ணாவின் கொள்கையை மறுக்கவில்லை ஆனால், சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் சாதிகளைக் காப்பாற்றும் நூல் என்ற கருத்தில் கந்தசாமித் தம்பிரானுக்கு உடன்பாடில்லை. "காலந்தோறும் கருத்து வளர்கிறது. இலக்கியங்கள் - புராணங்கள் உட்பட அந்தக்கால சமுதாயத்தைக் காட்டும் கண்ணாடியேயாம். சில படைப்புக்கள் எதிர்காலத்தையும் காட்டலாம்! 12-ம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியத்தில் 20-ம் நூற்றாண்டில் வாழும் மனிதனுடைய சிந்தனையைக் காண இயலுமா? சில நல்ல படைப்புக்கள் என்றும் பயன்படும். 'கரு' இருக்கலாம். சேக்கிழார் காலத்தில் சாதிகள் இருந்தன. அப்பரடிகள் காலத்தில் இருந்தன. ஏன்? சங்க காலத்திலேயே இருந்தன. 'கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே' என்று புறநானூறு பேசுகிறது. சேக்கிழார் இந்தச் சாதி வேற்றுமையிலிருந்து சாதிகள் இல்லாத சமுதாயத்தை நோக்கி நகர்த்துகிறார் என்பதைப் பெரிய புராணத்தால் உய்த்துணர முடிகிறது. திருநாளைப்போவார் ஆதிதிராவிடர், திருக்கோயில் வழிபாட்டுரிமை பெறாத சாதியைச் சேர்ந்தவர். ஆனால், அவர் திருக்கோயில் வழிபாட்டுரிமை கேட்டுப் போராடுகிறார். இது வரவேற்கத் தக்க வரலாற்று நிகழ்ச்சி... மனித உரிமைப் போராட்டம் தொடங்குகிறது. தொடர்ந்து வளர்க்க வேண்டிய கருத்து. இந்தக் கடமையைச் சேக்கிழார் செய்துள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கலப்புத் திருமணங்கள் நடத்தி வைக்கிறார் சிவபெருமான். வேடர் கண்ணப்பருக்கும் வைதீக சிவகோசியாருக்கும் பூஜையில் ஏற்பட்ட மோதலை விவரித்து, கண்ணப்பர் பூஜையே உயர்ந்தது என்று தீர்ப்பு எழுதுகிறார். சேக்கிழார் காலத்தில் இவ்வளவுதான் செய்ய இயலும்! அன்றைய நிலையில் அதுவே ஒரு பெரிய சமுதாய

மாற்றம்! அவர் வாழ்ந்த காலம், தலைவர் பெரியார் வாழ்ந்த காலமன்று-இதுதான் மறுப்புரையின் சாரம்!

விவாதங்கள், மறுப்புரைகள் ஒருபுறம், மதிப்பு உணர்வு கொள்ளல், பாராட்டல் ஒருபுறம். இன்றைய பொதுவாழ்வில், இலக்கிய உலகில் இந்தப் போக்கு இல்லாதது ஒரு பெரிய குறையே... அறிஞர் அண்ணாவைப் பொறுத்தவரையில் கந்தசாமித் தம்பிரான் நிலை இது. அறிஞர் அண்ணாவின் நிலையும் அதுவே.

இதுபோலவே, தருமபுர ஆதீனத்தில் இருக்கும் காலத்திலேயே பட்டிமன்றம் தொடங்கப்பெற்றுவிட்டது. ஆவணி மூலத்திருநாள்! 'தருமிக்குப் பொற்கிழி அளித்த வரலாற்றில் குற்றம் செய்தவர் சிவபெருமானா? நாக்கீரரா? என்பது தலைப்பு. நடுவர் ஆசிரியர் புலவர் மு. ஆறுமுக தேசிகர், நக்கீரர் கட்சியில் கந்தசாமித் தம்பிரான் வாதிட்டார். "நக்கீரர் குற்றவாளியல்ல. சிவபெருமானே குற்றவாளி!" என்பது கந்தசாமித் தம்பிரான் வழக்கு! "முதலில் 'பினாமி'க் கவிதை எழுதுவதே பெரிய தவறு. நக்கீரருடன் புலவனாக வந்து வழக்காடிக் கொண்டிருந்த சிவபெருமான், விவாதம் நல்ல உச்ச நிலையில் இருக்கும் போது சிவபெருமானாக மாறி நெற்றிக்கண் காட்டியதும் முறையல்ல... புலமை, புலமையோடு மோதவேண்டுமே தவிர, நெற்றிக்கண்ணுக்குத் தமிழ்ச் சங்கத்தில் என்ன வேலை? வன்முறையில் தமது கருத்தை ஏற்கச்செய்தல் நல்ல மரபாகாது!" என்பது கந்தசாமித் தம்பிரானின் விவாதம். அறிவார்ந்த விவாதங்களுக்கு எப்போதும் வசையும் வன்முறையும் தலைகாட்டும்.

"ஆயினும் இந்தத் தவற்றை சிவபெருமான் செய்திருக்க மாட்டார்... பத்திமையின் காரணமாக சிவபெருமானுக்குப் பெருமை சேர்க்கிறோம் என்று கருதிக்கொண்டு புராணம்

இயற்றிய ஆசிரியர் செய்த தவறு இது" என்று மரபு பிறழாமல் கந்தசாமித் தம்பிரான் பேசினார்.

எப்படிப் பேசினால் என்ன? வழக்காடிய இந்த முறை, தருமபுரம் சூழலில் பலருக்குப் பிடிக்கவில்லை. கடுமையான தாக்குதல்கள்! முடிவு, தருமபுர ஆதீன விசேடங்களில் இனி பட்டிமன்றம் வைக்கக்கூடாது என்பதுதான்! ஆனாலும் பட்டிமன்றங்கள் தருமபுரம் சூழலில் நின்றுவிட்டனவா?

கந்தசாமித் தம்பிரான், புலவர் இடை நிலைத் தேர்வு எழுத திருச்சிக்கு வந்து திருச்சி மௌனமடத்தில் தங்கி யிருந்தார். அந்தச் சமயத்தில் அறிஞர் அண்ணா திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் பேசுவதாக விளம்பரம். கந்தசாமித் தம்பிரானுக்கு அறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆர்வம். காவி உடை! தருமபுர ஆதீனத்துத் தம்பிரான்! கூட்டம் நடப்பதோ டவுன்ஹால் மைதானத்தில்! அறச் சங்கடங்கள் நிறைந்த சூழ்நிலை! முரண்பட்ட இருவேறு நிலைகளுக்குள் கிடந்துழலும் ஆர்வம்! அறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்கும் ஆர்வம், முறைகளைப் பின்தள்ளிவிட்டு வெற்றி பெற்றது. வெளுத்துப்போன காவி ஆடையை உடுத்துக் கொண்டார்... இராங்கியத்தில் தமிழாசிரியர் பணி செய்து இப்போது ஓய்வுபெற்றுள்ள வை.சு. தண்டபாணி துணை! டவுன்ஹால் மைதானத்துக்குப் புறப்பட்டுவிட்டார்.

டவுன்ஹால் மைதானத்தில் ஒரு கோடியில்-மக்கள் கூட்டம் குறைவான பகுதியில் நின்று அறிஞர் அண்ணாவின் பேச்சைக் கேட்டார். அண்ணாவின் உருவம் அவ்வளவாகத் தெரியவில்லை. கையை உயரத் தூக்கி அறைகூவல்களைக் கூறும்போது கை தெரிந்தது. பேச்சு நன்றாகக் கேட்டது. அன்று அண்ணா, திராவிட நாடு கேட்டுக் கொண்டிருந்த காலம். ஆதலால் திராவிட நாட்டைத் தமிழர் பெறுவர் ...ஆள்வர் என்பது பேச்சு. சான்றுக்குச் சேரன் செங்குட்டு

வனின் வடபுலத்து வெற்றியை எடுத்துக் காட்டினார். நல்ல தமிழில், எதுகை மோனை பொருந்தியதாக, கேட்பவர் ஆவேசம் கொள்ளத்தக்க நிலையில் பேச்சு அமைந்திருந்தது. அன்றைய அவருடைய பேச்சில் கந்தசாமித் தம்பிரானைக் கவர்ந்த பகுதி:

"வடபுலத்து மன்னர் தோளும் தலையும் நெரியக் கல் கொணர்ந்த சேரன் செங்குட்டுவன் என் பாட்டன் ஆதலால், இன்று தமிழகத்தை மீட்பது எளிமையானதே!" என்பது. இது கந்தசாமித் தம்பிரானுக்குப் பிடிக்காத கொள்கை ஆம்! இந்தியா ஒரு நாடு-இதில் கந்தசாமித் தம்பிரானுக்கு மாற்றுக் கருத்தில்லை! ஆயினும் அறிஞர் அண்ணா சொன்ன முறை பிடித்துவிட்டது. இதில் என்ன ஒரு வியப்பு என்றால், அந்தப் பயணத்திலேயே ஒரு இந்துப் புராணச் சொற்பொழிவையும் கேட்க கந்தசாமித் தம்பிரான் சென்றிருந்தார். 30 நிமிடங் களுக்குமேல் அந்தப் பேச்சை அவர் உட்கார்ந்து கேட்க இயலவில்லை! ஏன்? தனி மனித விளம்பர வாடை! புராணங்கள் தத்துவச் செறிவுடையன! அவற்றை நடைமுறைகளுடன் இணைத்துக் கொச்சைப்படுத்திப் பேசியது கந்தசாமித் தம்பிரானுக்குப் பிடிக்கவில்லை. சொற்பொழிவில் அருமை இருக்க வேண்டும்... வாழ்க்கைப் போக்கு இருக்க வேண்டும். சிரிக்கப் பேசுவதாக இருந்தாலும் கலைவாணரைப் போலச் சிரிக்க, சிந்திக்க வைக்க வேண்டும்.

இங்ஙனம் உணர்வுபூர்வமாக வளர்ந்த அறிஞர் அண்ணாவின் நட்பு, திருக்குறள் கூறியது போல 'நிறைநீர நீரவர் கேண்மை'யாக உணர்வு நிலையில் வளர்ந்து வந்தது.

கந்தசாமித் தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்ற பெயரில் குன்றக்குடி மடாதிபதியாக இருக்கிறார். குன்றக்குடி ஆதீனகர்த்தர், அருள்நெறித் திருக்கூட்டம் கண்டு சமயப் பிரச்சாரம் செய்து வருகிறார். அன்று அவருடன் அருள் நெறித் திருக்கூட்டத்தில் பங்கேற்றவர்களில் காரைக்குடி

கம்பன் அடிப் பொடி சா. கணேசன், ஈரோடு இருமொழிச் சொற்கொண்டல் எஸ். மீனாட்சி சுந்தர முதலியார், மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பணிசெய்த பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ. முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அப்போது மதுரையிலிருந்து 'தமிழ் நாடு' என்ற பெயரில் நாள் இதழ் ஒன்றினை கருமுத்து தியாகராசன் செட்டியார் நடத்தி வந்தார். இதன் ஆசிரியராக எம்.எஸ்.பி. சண்முகம் இருந்து வந்தார். தமிழ்நாடு நாளிதழ்தான் குன்றக்குடி ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சரிய சுவாமிகளை **'குன்றக்குடி அடிகளார்'** என்று தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியது. பின் குன்றக்குடி அடிகளார் என்ற பெயரே நிலைபெற்று விட்டது. அறிஞர் அண்ணா, 1967-ம் ஆண்டு காரைக்குடி திருக்குறள் கழக விழாவுக்கு வருகிறார்.. அப்போது குன்றக்குடிக்கும் வரும்படி அறிஞர் அண்ணாவுக்கு எழுதினார் அடிகளார். அறிஞர் அண்ணாவும் காரைக்குடி திருக்குறள் விழாப் பேச்சை முடித்துக்கொண்டு குன்றக்குடிக்கு வந்தார். திருமடத்தின் மரபுப்படி வரவேற்பு கொடுக்கப்பட்டது! இரவு உணவு திருமடத்தில்! அன்று அறிஞர் அண்ணாவுடன் கூட வந்தவர்கள் கவியரசு கண்ணதாசன், பூவாளூர் பொன்னம்பலனார். உணவுக்குப் பின் தோட்டத்தில் நிலவொளியில் கலந்துரையாடல்! வழக்கம்போல் அறிஞர் அண்ணாவுக்கும் குன்றக்குடி அடிகளாருக்கும் இடையில் நட்புறவு கலந்த உரையாடல். பேச்சு மெள்ள அரசியல் பக்கம் திரும்பியது. குன்றக்குடி அடிகளார் காங்கிரஸ் கட்சிப் பற்றாளர்... காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு திரட்டுகிறார். அறிஞர் அண்ணா காங்கிரஸுக்கு எதிர்ப்பாகக் கூட்டணி அமைத்துக் கொண்டு ராஜாஜி தலைமையில் போராடுகிறார்! காமராஜரை எதிர்ப்பதற்கும் ராஜாஜியை ஆதரிப்பதற்கும் நோக்கம் என்ன? இது அடிகளாரின் கேள்வி?

## 10

அறிஞர் அண்ணா அன்று தந்த பதில் "காலம் விடை சொல்லும்...காத்திருக்கலாமே!" என்பது. 1967 பொதுத் தேர்தலில் வெற்றிப்பெற்ற பிறகு அறிஞர் அண்ணா தலைவர் பெரியாரைக் கண்டதும் "இது பெரியார் அரசு" என்றதும், "இராஜாஜி தேனிலவு முடிந்து விட்டது" என்று கூறியதும் காலம் தந்த விடைகளாகும்.

அறிஞர் அண்ணாவிடம் சோர்விலாத இனப்பற்று இருந்தது. தலைவர் காமராஜரைப் 'பொற்காப்பு' என்று பாராட்டினார். கட்சி எல்லையைக் கடந்த இதயம் அறிஞர் அண்ணாவுக்கு இருந்தது. அதேபோழ்து இனப்பகை அற்றவர் என்பதை மூதறிஞர் இராஜாஜி, வழக்கறிஞர் வி.பி. இராமன் போன்றவர்களிடம் அவர் வைத்திருந்த மதிப்பினால் உணரலாம்.

சித்திரைத் திங்கள்! பூம்புகாரில் சிலம்பின் நினைவுச் சின்னம் அமைக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டது. சோழப் பேரரசின் தலைநகரம் பூம்புகார். சோழ நாட்டில் பிறந்து அரசியலில் வளர்ந்த கலைஞர், சோழர்களின் புகழ் பாடுவதில் முன்னணியில் நிற்பவர். கலைஞர் அப்போது பொதுப்பணித்துறை அமைச்சர்! கால்கோள் விழா ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. நமக்கும் மிகவும் விருப்பமான காப்பியம் சிலப்பதிகாரம். பூம்புகாரில் அப்போது நடைபெறவிருந்த கண்ணகி விழாவுக்கு நாம் இசைவு தந்திருந்தோம். கண்ணகி விழாவும் தமிழ்நாடு அரசு எடுக்க இருந்த கண்ணகி கோட்டம் கால்கோள் விழாவும் இந்திர விழாவும் அதேநாளில்! கண்ணகி விழாவில் நாம் கலந்துகொள்ளவிருக்கும் செய்தி, முதலமைச்சர் அறிஞர் அண்ணாவுக்கு எட்டியது. உடனே நமது அலுவலகத்துக்குத் தொலைபேசி அழைப்பு! ஆனால், அங்கு பதில் இல்லை. உடனே தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு

முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் ஆணை: "அடிக ளாரைக் கண்டுபிடித்துக் கண்ணகி கோட்டம் கால்கோள் விழாவில் கலந்துகொள்ளும்படி முதலமைச்சர் சார்பாகக் கேட்டுக் கொள்ளுங்கள்!" என்பது. மாவட்ட ஆட்சித் தலைவரும் இசைவு பெற்றார். கட்சியைச் சேர்ந்தவர்கள், வேண்டியவர்கள் என்ற எல்லைகள் நீங்கினால்தான் நடுநிலையாளர்கள் மதிக்கப்படுவார்கள்... நாட்டுக்குத் தேவையான ஒருமைப்பாடு வளரும்.

கண்ணகி கோட்டக் கால்கோள் விழா மேடை! முதலமைச்சர் அறிஞர் அண்ணா, பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோ ருடன் நாமும் மேடையில் இருந்தோம். அறிஞர் அண்ணா பேசும்போது, "அடிகளார் அவர்களே! தாங்கள் இந்த விழாவுக்கு வந்தது மகிழ்ச்சியைத் தருகிறது. முந்தைய அரசு உங்கள் மீது வழக்குப் போட்டது... சிறைக்குள் தள்ளத் துடித்தது. இந்த அரசு உங்கள் அரசு! உங்களுக்குத் தொல்லை தராது! வரவேற்கும் தங்களுடைய ஆலோசனைகளை வரவேற்கும்!" என்று பேசினார். 1967 பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணாவை எதிர்த்து நாம் வேலை செய்ததை நினைவில் கொண்டிருந்தால் அவருக்கு இந்தப் பண்பு முகிழ்ந்திருக்காது. அதனால்தான் திருக்குறள் 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்றது. அறிஞர் அண்ணாவின் "மறப்போம்... மன்னிப்போம்" என்னும் புகழ் பெற்ற மொழி இங்கே நினைவுகூரத்தக்கது. எவ்வளவு பெரிய உள்ளம்! பெருந்தன்மை!

பல சமயங்களில் 'அரசு விழாக்களுக்குக் கட்சிக்காரர் களை மட்டுமே அழைக்க வேண்டும்... வேண்டியவர்களை மட்டுமே அழைக்க வேண்டும்' என்ற கொள்கை நிலவிய துண்டு! நிலவுகிறது. ஏன்? காங்கிரஸ் அமைச்சரவை இருந்த போது ஒரு நிகழ்ச்சி! அந்த நிகழ்ச்சிக்கு நம்மை அழைக்கக்

கூடாது என்று ஒரு அணி, அழைக்க வேண்டும் என்று ஒரு அணி, இந்த அணியில் கிராம மக்களும் இருந்து போராடினர்.

சிங்கம்புணரி ஒன்றியம் பிரான்மலை கிராமத்தில் பிரதம சுகாதார நிலையம் அமைய நாம் முயற்சி செய்தும் நிலம் வாங்கிக்கொடுத்தும் உதவி செய்தோம். ஏன்? தொடக்கத்தில் பிரான்மலையில் உள்ள குன்றக்குடி ஆதீன மடத்திலேயே சுகாதார நிலையம் இயங்கி வந்தது. குன்றக்குடி ஆதீனத் திருக்கோயில்களில் பிரான்மலையும் ஒன்று, ஒன்றல்ல... தலையாயது! ஆதலால், பிரான்மலை கிராமத்துக்கும் ஆதீனத்துக்கும் உள்ள வழிவழி உறவு எளிதில் அலட்சியப்படுத்த முடியாதது. பிரதம சுகாதார நிலையம் கட்டப்பட்டுத் திறப்பு விழா! அமைச்சர் ஒருவர் திறப்பு விழாவுக்கு வந்தார். விழாவுக்கு ஒப்புக் கொண்ட நாம் இல்லாமல் விழா நடத்த உட்குழு முயன்றது. குழுவின் வயப்பட்ட அமைச்சர், நம்மை அழைக்காமல் விழா நடத்த எண்ணினார். அதிகாரிகளுக்கும் உத்தரவு அப்படியே! பிரான்மலை ஊரார், திருப்பத்தூர் பயணமாளிகையில் தங்கியிருந்த அமைச்சரை அணுகி நிலைமையை விளக்கி, நம்மை அழைக்கும்படி வற்புறுத்தினர். அமைச்சர் செவி கொடுக்கவில்லை. விழா நாளும் வந்தது! பிரான்மலை கிராமத்தார் விழாவில் கலந்துகொள்வதில்லை என்று முடிவெடுத்து விழாவைப் பகிஷ்காரம் செய்துவிட்டனர். நாலாயிரம் மக்கள் வாழும் அந்தக் கிராமத்தார், குழந்தைகள் உட்படக் கட்டுப்பாடாக விழாவைப் புறக்கணித்தனர். இப்படியும் ஒரு வரலாறு உண்டு. இந்த நிகழ்ச்சிகளின் நினைவுதான், அறிஞர் அண்ணாவின் பெருந்தன்மையைப் பறைசாற்றியது.

நமது மக்களாட்சி முறையில் கட்சிகள் ஆட்சி அமைக்கின்றன. ஆனால், கட்சிக்கே அரசு சொந்தமல்ல, கட்சிக்கும் கட்சிக்காரர்களுக்கும் மட்டுமே அமைச்சரவை அல்ல. நாட்டை ஆளும் அரசில் நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமையுள்ளது. அமைச்சர்கள் மக்கள் அனைவருக்கும்

அமைச்சர்களேயாம். இந்த உணர்வு செழித்தால்தான் ஜனநாயகம் வளரும். மூதறிஞர் இராஜாஜி, "கட்சி உணர்வு களை வெளியே வைத்து விட்டுத்தான் கோட்டைக்குள் வரவேண்டும்" என்றார். கட்சி முறை ஆட்சி, அரசை உரிமை கொண்டாடுவதற்கல்ல. தமது கட்சியின் கொள்கைகளை, சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் திறமையைக்காட்ட ஒரு வாய்ப்பு! அவ்வளவுதான்!

கேளாமலே நமக்கு, அறிஞர் அண்ணா செய்த உதவி ஒன்று உண்டு. 1965-ல் நாடு தழுவிய நிலையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம்! நாம் மும்மொழித் திட்டத்தை வரவேற்றோம். வரவேற்றாலும் இந்தி ஆதிக்க மொழியாவதை நாம் விரும்பியதில்லை. அமரர் நேருவும் இந்தியை இணைப்பு மொழி என்றே கூறினார். நடுவண் அரசு 1965 குடியரசு நாளன்று இந்தியை நடுவண் அரசின் அலுவல் மொழியாக ஏற்று நடைமுறைப்படுத்துவது; ஆங்கிலத்தை அகற்றுவது என்று முடிவெடுத்தது. இந்த முடிவு அவசரப்பட்ட முடிவு. முதலில் இந்தி-இந்திய மக்கள் அனைவராலும் படிக்கும் மொழியாக இடம் பெறவேண்டும். அனைத்து மாநிலங் களிலும் மக்களால் இந்தி அங்கீகரிக்கப் பெற்றுப் படிக்கும் முயற்சி நடந்து இந்தி மொழியைப் படிக்கவும் எழுதவும் பெருவாரியான மக்கள் வந்தபிறகே-அலுவல் மொழியாக ஆக்கவேண்டும். உண்மையில் - நடைமுறையில் இந்தி இந்திய மக்களின் இணைப்பு மொழியாக வளர்ந்து இடம் பெற்ற பிறகு அலுவல் மொழியாதல் முறை எளிதும்கூட! தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்பு உணர்வு ஓய்ந்தபாடில்லை. இந்த நிலையில் நடுவண் அரசு எடுத்த முடிவு, இந்தி பேசாத மாநில மக்களிடையே எதிர்ப்பு உணர்வைத் தூண்டியது... மொழிப்போராட்டம் வெடித்தது.

## 11

**மொ**ழிப்போராட்டம் 1965-ல் உச்ச நிலையில் இருந்த போது குன்றக்குடியில் அமைதிகாக்கும் முயற்சி மேற்

கொள்ளப்பெற்றது. அரசையும் மக்களையும் குறிப்பாக மாணவர்களையும் கருத்திற்கொண்டு மொழிச்சிக்கலுக்குத் தீர்வுகாணும் கருத்தரங்குகள் நிகழ்ந்தன. நெல்லை பேராசிரியர் நா. வானமாமலையை அழைத்து, இந்தி மொழிச் சிக்கல், மும்மொழித் திட்டம், தாய்மொழி வழிக் கல்வி ஆகியன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப் பெற்றது. மாணவர்கள் ஓரளவு தெளிவுபெற்றனர். அமைதியான சூழ்நிலை-ஆயினும் நிலையான அமைதியல்ல. இந்தச் சூழ்நிலையில் மத்திய அமைச்சர்கள் சி. சுப்பிரமணியம், ஓ.வி. அளகேசன் இருவரும் இந்தித் திணிப்பை எதிர்த்து அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து விட்டார்கள் என்ற செய்தியை வானொலி அறிவித்தது; இந்த ராஜினாமாச் செய்தி மாணவர்களிடையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. மறுநாள் காலையில் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கிவிட்டனர். மீண்டும் மாணவர்களைக் கூட்டிப் பேச முயற்சி செய்யப் பெற்றது. மத்திய அமைச்சர்களின் ராஜினாமாவுக்குப் பின் நம்மாலும் ஒன்றும் சொல்ல இயலவில்லை. பல மொழிகளும் கற்பது நல்லது. அதே நேரத்தில் மொழியைக் கற்கும் வாயில்களைக் காணாமல் இந்தி அலுவல் மொழியாக அரங்கேறுதல் தவறான அணுகுமுறை.

குன்றக்குடியில் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்துவிடக் கூடாது என்ற கவலை, செயலாக உருப்பெற்றது. இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்த அனுமதித்துக் கூட்டம் கூடிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றவும் அனுமதி வழங்கப் பெற்று, கறுப்புத் துணியும் தரப்பெற்றது. ஊர்வலம் அமைதியாக நடந்தேற வேண்டும். வருந்தத்தக்க செயல்கள் யாதொன்றும் நடந்துவிடக்கூடாது என்ற கவலை பிடரியைப் பிடித்துத் தள்ள நாம் ஊர்வலத்தின் முன்வரிசையில் சென்றோம். ஊர்வலம் கட்டுப்பாட்டுடன் அமைதியாகச் சென்றது, "தமிழ் வாழ்க!" என்பது மட்டுமே முழக்கொலி!

'வீழ்க... ஒழிக' என்ற கோஷங்கள் இல்லை. ஊர்வலம் குன்றக்குடித் திருக்கோயில் முகப்பில் உள்ள தகரக்கொட்டகைக்கு வந்துசேர்ந்தது. நம் தலைமையில் கூட்டம்! "இந்தியாவின் அலுவல் மொழிகளாக இந்திய தேசிய மொழிகள் அனைத்தையும் ஆக்க வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. நாம் "எல்லோரும் அமைதியாக வீடுகளுக்குச் சென்று படிக்க வேண்டும்" என்று மாணவர்களைக் கேட்டுக்கொண்டோம். அதுபோலவே நடந்தது.

இந்தச் செய்தி, எல்லா அரசு அலுவலர்களுக்கும் தெரிந்தது! அவர்கள் அன்றிருந்த சூழ்நிலையில் குன்றக்குடியில் நடந்த இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தின் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்குமாறு இல்லையென்று கைவிட்டு விட்டனர்... மேலும் மகிழ்ந்தனர்! ஆயினும் காங்கிரஸுக்குள் இருந்த நம் மீதான எதிர்ப்பு அணி, இந்த நிகழ்ச்சியை அரசியலாக்கப் பார்த்தது. இந்த அணி முதல்வர் எம். பக்தவத்சலத்துக்கு எடுத்துக்கூறியது. முதல்வரும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நம் மீது வழக்குத் தொடருமாறு ஆணை பிறப்பித்தார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப... இப்போது இவர் புதுடெல்லியில் நாடாளுமன்றத் துறைச் செயலாளராகப் பணி செய்து வருகிறார். கோட்டாட்சித் தலைவராக இருந்தவர், செந்தில்நாயகம் பிள்ளை, காவல் துறை அதிகாரி அலிசுல்தான். இவர் இயலாது என்று கூறியதுடன் நடுவணரசின் பணிக்குச் சென்றுவிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர், முதல்வரிடம் நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆனால் பிடிவாதமாக வழக்குத் தொடர்வதிலேயே நின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எம். இராஜேந்திரன் வழக்குத் தொடர இயலாது என்று மீண்டும் கண்டிப்பாக மறுத்து விட்டார். காவல்துறையும் அப்படியே! அன்று நமது நாட்டு அரசு அலுவலர்கள் இருந்த நிலை! நமது நாட்டு ஆட்சிமுறை மூன்று படிநிலைகளை

உடையது. ஒன்று-நாடாளுமன்றம் சட்டமன்றங்கள், அமைச்சரவைகள், இரண்டாவது-அரசு அதிகாரிகளைக் கொண்ட ஆட்சி அலுவலகங்கள், மூன்றாவது-நீதிமன்றங்கள். அதிகாரவர்க்கம் படிப்படியாகச் செயலிழந்து வருவதை யார்தான் அறியாமல் இல்லை.

உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்பட்டார். அனைத்து அதிகாரிகளும் மாற்றப்பட்டனர். நம்மீது வழக்குத் தொடரும் நிலைக்குரிய அதிகாரிகள் நியமனம் செய்யப் பட்டனர். வழக்குத் தொடர்வது என்று மாவட்ட நிர்வாகம் முடிவுசெய்தது... நம்மைக் கைது செய்யவும் ஆணை பிறப்பித்தாயிற்று! மறுநாள் காலை நம்மைக் கைதுசெய்யத் திட்டம்! இரவோடு இரவாகச் செய்தி நமக்குக் கிடைத்து விட்டது! செய்தி கிடைத்த நேரம் இரவு பத்து மணி. கைது செய்யும் விவரம் ரகசியமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரவு எட்டு மணிக்கு அதிகாரிகளுக்கு உத்தரவு தரப்பெறுகிறது. அப்படியிருந்தும் இரண்டு மணி நேரத்தில் நமக்குச் செய்தி கிடைத்துவிட்டது! உடனே நாமும், நம்மிடம் நெருங்கிய நட்புரிமைகொண்டு பழகிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினராகிய மேலமாகாணம் எஸ். நாராயணன், விடுதலைப் போராட்ட வீரர் தேவகோட்டை கே.எம். சுப்பையா ஆகியோரும் ஆதீன வ்ழக்கறிஞர் வி.ஆர்.எஸ். மெய்யப்பனும் தேவகோட்டை சருகணிச்சாலை ஓரத்தில் ஆலோசனை செய்தோம். ஆலோசனையின் முடிவு "மறுநாள் காலையில் நாம் திருப்புத்தூர் குற்றயியல் முறை மன்றத் துக்குச் சென்று ஆஜராகி விடுவது... உடனே பிணையில் அழைத்துவர வழக்கறிஞர் வி.ஆர்.எஸ். மெய்யப்பன் ஆஜராகவேண்டியது" என்பது.

அன்றிரவு நாம் வட்டாணம் பயணமாளிகையில் தங்கி மறுநாள் காலை திருப்புத்தூர் குற்றயியல் முறை மன்றத்தில் ஆஜராகினோம்! வி.ஆர்.எஸ். மெய்யப்பன் பிணையில் எடுத்தார்! இந்தச் செய்தி சட்டமன்றத்தில் எதிரொலித்தது.

சட்டமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர் ஒருவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிப் பேசும்போது, "மத்திய அமைச்சர்கள் ராஜினாமா செய்துள்ளனர். காங்கிரஸ்கார ராகிய அடிகளார் இந்தியை எதிர்த்து ஊர்வலம் நடத்தி யுள்ளார்" என்று பேசினார். அப்போது முதல்வர் பக்தவச்சலம், "அடிகளார் எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல... அடிகளார் காங்கிரஸ் வேறு" என்று பதில் கூறினார்.

வழக்கு நடந்தது! இடையில் ஆர்.வி. சாமிநாதன் முதலமைச்சருக்கும் நமக்கும் சந்திப்பை உண்டாக்கி, சமாதானம் செய்யும் முயற்சி எடுத்தார். இராமநாதபுரம் மாவட்ட அரசியலில் ஆர்.வி. சாமிநாதன் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தார். இன்னும் அவருடைய மகள் டாக்டர் இந்திரா இராமநாதன், பேரர் டாக்டர் நற்குணம் ஆகியோர் அரசியலில் ஈடுபாடு காட்டுகின்றனர். ஆனால் தீவிரமில்லை. இன்றைய தமிழ்நாட்டு அரசியலில் பாக னேரியின் பங்கு குறைந்துவிட்டது. ஆர்.வி. சாமிநாதனிடம் நமக்கு மதிப்பு உணர்வு இருந்தது. ஆர்.வி. சாமிநாதனின் முயற்சியால், முதல்வர் பக்தவத்சலத்துடன் நமது சந்திப்பு நிகழ்ந்தது. நடந்தவற்றை விளக்கினோம். முதல்வர் பக்தவத்சலம் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். பெரியவர் பக்தவத்சலத்துக்கு உண்மைகள் புலனாயின, மிகவும் வருந்தினார். அதேபோழ்து அவருடைய பங்கு மிகமிகக் குறைவு என்று அறிந்துணர முடிந்தது. வழக்குத் தொடுக்கக் காரணமாக இருந்தவர் பிரான் மலையில் பாடம் பெற்ற அமைச்சர்தான் என்று உய்த்துணர முடிந்தது.

ஒருவாறு இந்தி எதிர்ப்பு வழக்கு முடிந்தது. வழக்கை அரசு மிகவும் கண்டிப்புடன் பெரிய வழக்கறிஞரை வைத்து நடத்தியது. வழக்கின் முடிவு ஆள்வோர் எண்ணப்படி நமக்குப் பிரதிகூலம்! 350 ரூபாய் அபராதம் விதிக்கப்பெற்றது.

நாம் உடனடியாக அபராதத்தைக் கட்டி விட்டு விடுதலை யானோம். நிர்வாகச் சூழலும் பணிப்பொறுப்புக்களும் இந்த நிலையை உருவாக்கின.

அறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் வழக்கு நடவடிக்கைகளைத் திரும்பப்பெற ஆணை பிறப்பித்தார். அதுமட்டுமா? அரசு பெற்ற அபராதத் தொகை யையும் திரும்பக் கொடுக்கும்படி ஆணை பிறப்பித்தார்! வழக்கு நடவடிக்கையைத் திரும்பப்பெற்ற அரசாணை கிடைத்தது. பணமும் கிடைத்தது. அந்தத் தொகையை அண்ணாவின் நினைவாகத் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் நிலையான இட்டு வைப்பாக வைக்க நாம் எண்ணினோம். அப்போது நடக்கவில்லை. இப்போது செய்ய வேண்டும். 'உணர்ச்சி நட்பாங்கிழமை தரும்' என்ற திருக்குறள் நினைவுக்கு வரவில்லையா?

1968-ல் உலகத் தமிழ் மாநாட்டு முயற்சி நடந்தது! மாநாடு தொடர்பாக முதல்வர் அறிஞர் அண்ணாவை நாம் சந்தித்தோம்.

## 12

அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது 1968 ஜனவரியில் உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடை பெற்றது. உலகத்தமிழ் மாநாட்டின் போது தமிழறிஞர்களின் சிலைகளை மெரீனா கடற்கரையில் திறப்பது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. இந்த நேரத்தில் நாம் நிறுவி யுள்ள திருப்புத்தூர் தமிழச் சங்கக் கூட்டம் நடந்தது.

திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம் 63 சைவத் தமிழறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. கழகப் புலவர் பா. இராம நாதபிள்ளை, இளவழகனார், பேராசிரியர் அ. சங்கர நாராயணன், பெருப்புலவர் ஔவை துரைசாமிப்பிள்ளை, பெரும்புலவர் சு. வெள்ளைவாரணனார், திருக்குறள் அறிஞர்

G-XVI.9.

மகாவித்வான் ச. தண்டபாணி தேசிகர் முதலியோர் சங்க உறுப்பினர்களாக அப்போது இருந்தனர். தலைசிறந்த தமிழறிஞர்களைக் கொண்ட இந்தத் திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம் டிசம்பரில் கூடியது. இந்தக் கூட்டத்தில், 'உலகத் தமிழ் மாநாட்டில் தமிழறிஞர்களின் சிலைகளைத் திறக்கும் போது அப்பர் அடிகள் சிலையையும் திறக்கும்படி தமிழ்நாடு அரசைக் கேட்டுக்கொள்வது' என்று தீர்மானம் நிறைவேறியது.

முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைச் சந்தித்து இந்தத் தீர்மானத்தைத் தந்து எடுத்துக் கூறி இசைவுபெறும் பணியைத் திருப்புத்தூர் தமிழ்ச் சங்கம் நம்மிடம் ஒப்படைத்தது. இதற்காக நாம் சென்னைக்குச் சென்றோம். மயிலையில் உள்ள குன்றக்குடி ஆதீன மடத்தில் தங்கினோம். முதலமைச்சர் அறிஞர் அண்ணா அலுவலகத்துக்குத் தொலைபேசி வழிச் சந்திப்புக்கு வாய்ப்புக் கேட்கப்பட்டது. சரியாக ஒரு மணி நேரத்தில் அழைப்பு வந்தது. அறிஞர் அண்ணா, அவர்தம் இல்லத்தில் பொங்கிவழியும் புன்முறுவலுடன் நம்மை வரவேற்றார். உடன் கலைஞரும் இருந்தார். நலம் விசாரித்தல் முதலியன முறையாக நடந்தன.

திருப்புத்தூர் தமிழ்ச் சங்கத் தீர்மானம் பற்றி நாம் எடுத்துக் கூறி அப்பர் அடிகள் சிலையை மெரீனாக் கடற்கரையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அறிஞர் அண்ணா, உடனடியாக முறுவலித்துக்கொண்டு–

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யல்லோம்;
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை!
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற் சங்க வெண் குழையோர் காதிற்

கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சே வடியிணையே குறுகி னோமே"

என்ற அப்பர் அடிகளின் திருப்பாடலைக் கூறினார்.

அப்பர் அடிகள் பற்றிய கலந்துரையாடல் நீண்டது. கலைஞர், "அப்பர் அடிகள் சாதிகளையும் எதிர்த்தவர்" என்று சுருதி கூட்டினார். கலந்துரையாடலின் முடிவில் அறிஞர் அண்ணாவிடம் ஒரு தயக்கம் வெளிப்பட்டது. "அப்பர் அடிகள் காட்டிய நெறி தமிழ் மக்களால் குறிப்பாக, சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப் பெற வில்லையே!" என்ற ஆதங்கம் வெளிப்பட்டது! ஏன், வெளிப் படையாகவே, "சைவ மடங்கள், ஆதீனங்கள்கூட அப்பர் அடிகள் நெறியை ஏற்கவில்லையே!" என்று கூறி வருத்தப் பட்டார்.

"நாமார்க்கும் குடியல்லோம்... என்ற அருமையான எழுச்சி நிறைந்த பாடலைத் தந்த அப்பர் அடிகள் சிலை வைப்பதில் எனக்கு எந்தவிதத் தடையும் இல்லை! ஆனால் சிலை வைப்பதை விரும்புகிறீர்களா? திருவுருவம் வைப்பதை விரும்புகிறீர்களா?" என்று கேட்டார். தமிழ்நாட்டில் அப்பர் அடிகள் திருவுருவம் திருக்கோயில்களில் வழிபடும் திருவுருவமாக இடம்பெற்றுள்ளது. பலர் வழிபடும் ஒருவருக்கு மெரீனா கடற்கரையில் சிலை வைப்பது மரபாகாது! வேண்டாம்! மாநாடு முடிந்தவுடன் சென்னையில் அப்பர் அடிகளுக்குத் தனியே ஒரு மணிமண்டபம் கட்டலாம்; அதில் அப்பர் அடிகள் திருவுருவத்தை அமைக்கலாம். அவருடைய அற்புதமான பாடல்களையும் கல்வெட்டாக அமைக்கலாம். நானே செய்து தருகிறேன்'' என்று கூறினார், வாழ்வியல்கள் மாறினாலும், முரண்பாடுகள் அமைந்தாலும் மதிப்பீடுகள் மாறக்கூடாது, தாழக்கூடாது என்ற உண்மையை உணர

முடிந்தது. இன்று இந்தப் போக்கு நிலைகுலைந்து வருவது வருந்துதலுக்குரியது.

அப்பர் அடிகள்பால் அறிஞர் அண்ணாவுக்கு இருந்த மதிப்பீடு எவ்வளவு என்பதை உணரமுடிந்தது! அந்த எண்ணம் நிறைவேறாமல் காலம் சதி செய்துவிட்டது.

இன்று நாட்டில் பரவலாகக் காணப்பெறுவது கருத்துத் திருடு! கொள்கைத் திருடு! அதாவது, ஒரு கருத்தை ஒருவர் சிந்தித்துத் தெரிவிப்பார். அதே கருத்தை வேறொருவர் தமது கருத்துப் போலச் சொல்லிப் பாராட்டுப் பெறுவார். இப்படி ஒரு வகையினர். பிறிதொரு வகையினர், மற்றவர் சொன்ன கருத்தை மதித்து ஏற்பதில்லை. அவர்களின் கருத்து மட்டுமே அவர்களுக்கு உரியதெனக் கொள்வர். ஆனால், அறிஞர் அண்ணா யாருடைய கருத்தையும் விரும்பி ஏற்பவர்; பாராட்டுபவர். தமிழ்நாட்டில் பாராட்டும் போக்கு மேவியதற்கே காரணம் அறிஞர் அண்ணாதான்! **"வளரும் பயிருக்கு மழை போல, வளரும் மனிதனுக்குப் பாராட்டு!"** என்பது அறிஞர் அண்ணாவின் கொள்கை! எந்தக் கருத்தை எடுத்துச் சொன்னாலும் எழுதினாலும் அந்தக் கருத்தைச் சொன்ன வரை, எழுதியவரை அறிமுகப்படுத்தாமல் அவர் விடுவ தில்லை. அன்றைய சந்திப்பில் அறிஞர் அண்ணாவிடம் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் ஒரு மையம் அமைக்கும்படி கேட்டுக்கொண்டோம் நாம். அதாவது, 'பிரெஞ்சு அகாதமி' போல! இந்தத் தமிழ் மையத்தின் மூலம் தமிழைப் பழமைக்குச் சீர்குலைவில்லாமல் காலத்துக்கு ஏற்ப, புதுமைப்படுத்தி வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் நாம். இந்த ஆலோசனையை அறிஞர் அண்ணா மகிழ்ச்சியுடன் வரவேற்றார், செய்வதாக உறுதி கூறினார். பின் 'கலைமகள்' இதழுக்கு முதலமைச்சர் அறிஞர் அண்ணா ஒரு பேட்டி கொடுத்திருந்தார். அந்தப் பேட்டியில் 'தமிழ் மையம்' பற்றி விவரித்து, "இந்த ஆலோசனை

குன்றக்குடி அடிகளாருடையது. தமிழ்நாடு அரசு செய்யும்" என்று கூறியிருந்தார். இதுவும் கைகூடவில்லை!

ஆனால் முதல்வர் எம்.ஜி.ஆர்., தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கினார். வரவேற்று மகிழத்தக்க பணி இது! ஆனால், தமிழ்ப் பல்கலைக்கழகம்-தமிழின் வளர்ச்சிக் குரியனவாகச் செய்வது மிகவும் குறைவே. இன்று தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பாதுகாப்புப் பணிதான் அதிகமாகச் செய்து வருகிறது; தமிழ் வளர்ச்சிப் பணி ஓரளவுதான் செய்கிறது. ஆக்கம் தந்தால் செய்யும். அறிவியல் புலம் அமைந்துள்ளது. அறிவியல் சொற்களுக்குத் தமிழாக்கம் செய்துள்ளது. பொறியியலைத் தமிழில் கற்பிக்கப் பாடநூல் தயாரித்துள்ளது. ஆயினும், தமிழ்நாட்டின் தேவை மிகுதி.

தமிழ் நூல்களின் கருத்துக்களை, குறைந்தது ஐந்து மொழிகளிலாவது இலக்கிய ஏடுகளாக வெளியிட வேண்டும். முத்திங்கள் இதழாகக்கூட வெளியிடலாம். இந்தி, ஆங்கிலம், உருது, ருஷ்யன், சீனம் ஆகிய மொழிகளில் வெளியிட வேண்டும். உடனடியாக இந்தியிலும் ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டும். அதுபோல பிற மொழி இலக்கியங்கள் பற்றித் தமிழில் இதழ் நடத்த வேண்டும். இன்றைய வாழ்வு, அறிவியல் சார்ந்த வாழ்வு; தொழில்நுட்பம் சார்ந்த வாழ்வு! **தமிழ், அறிவியல் மொழியாக வளர வேண்டும் இந்தப் பணியைச் செய்ய வேண்டிய பொறுப்பு தமிழ்ப் பல்கலைக்கழகத்தினுடையது, பாவேந்தர் பாரதிதாசன் கூறியதைப் போல், துறைதோறும் தமிழை வளர்க்க வேண்டும். அறிவியல் துறைதோறும் தமிழில் நூல்கள் வெளியிட வேண்டும். இந்தப் பணிகளை இன்று செய்தால்தான் தமிழன் வளர்வான்! தமிழ் வளரும்! வாழும்! இது எப்போது நடக்கும்?**

தமிழ் மக்களேகூட அரசியல் சார்பின்றி இத்தகைய ஒரு பெரிய தமிழ் வளர்ச்சி மையத்தைத் தோற்றுவிக்கலாம். நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே ஒரு பல்கலைக்

கழகத்தைக் கண்ட செட்டிநாட்டரசர் குடும்பம் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். செட்டிநாட்டரசர் மு.அ.மு. இராமசாமியால் செய்ய முடியும்-செய்வார் என்று தமிழகம் எதிர்பார்க்கிறது.

இங்ஙனம் தமிழுணர்வு வளர்ந்து வரும் வேளையில், ஒரு நாள் எதிர்பாராத நிலையில் தலைவர் பெரியார், "தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி!" என்று கூறினார். தமிழ் விழாக்கொண்டாடும் தைத் திங்கள்-பொங்கல் நாளில் சென்னை பெரம்பூரில் ரயில் பெட்டித் தொழிற்சாலையில் பொங்கல் விழா! தமிழர் திருநாள்! நாமும் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவும் இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்கள். அப்போது நாம், "தமிழ் காட்டுமிராண்டி மொழி" என்று பெரியார் கூறியிருப்பதை முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். உடனே அறிஞர் அண்ணா பரபரப்பு உணர்வுடன் "பெரியாரின் கருத்தை மறுத்துவிட்டீர்களா?" என்று கேட்டார். நாம், "இல்லை! அண்ணாவின் கருத்தறிந்து செய்ய எண்ணியதால் உடனே மறுக்கவில்லை" என்றோம். அண்ணா அமைதியாக "மறுக்காதீர்கள்! மறுத்தால் திரும்பத் திரும்பச் சொல்வார்! மறுக்காமல் விட்டுவிட்டால் சும்மா இருப்பார். இது பெரியாரின் பழக்கம்!" என்றார். மேலும், "வீட்டிலே பெரிய வர்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்ள மாட்டோமா? அது போலத் தமிழகத்தில் பெரியார்! மறுக்க வேண்டாம்!" என்றார். எவ்வளவு இதமான பழக்கங்கள், வழக்கங்கள் அண்ணாவிடம் இருந்தன. ஆம். உண்மைதானே! பலரும் கூடி வாழ வேண்டுமாயின் முரண்பாடுகளை-மாறுபாடு களைப் பெரிதுபடுத்தாமல்-விரிவு படுத்தாமல் பழகக் கற்றுக் கொள்ள வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் மீதுள்ள மதிப்பீட்டைக் குறைத்துக் கொள்ளக் கூடாது. மன முறிவுகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்ற வாழ்வியல் உண்மையே சமுதாய உருவாக்கத்துக்குத் துணை செய்யும்.

## 13

திருக்கடவூர் கைலாசம் பிள்ளை மூலம் குன்றக்குடியிலிருந்து வந்த அழைப்பை மறுத்த பிறகு, அடுத்த வந்த 1948 ஆவணித் திங்கள் பூரட்டாதி நட்சத்திரத்தில் குன்றக்குடி ஆதீனம் மகாகுருபூஜை விழா வந்தது. ஆதீனங்களில் நடைபெறும் குருபூஜை அந்தந்த ஆதீனங்களின் ஸ்தாபகர்கள் பரிபூரணம் எய்திய நாளில் நடைபெறும். இப்படி ஆதீனங்களில் நடைபெறும் குருபூஜைக்கு மற்ற ஆதீனங்களிலிருந்து தம்பிரான்கள் பிரதிநிதிகளாகச் செல்வது வழக்கம். இது ஒரு சம்பிரதாயமான நடைமுறையே! இதனால் விளையும் பயன் என்ன? கேள்விக்குறியே! ஆயினும் நடைமுறையில் ஓர் உறவு பேணப்பட்டு வருவது மதித்தற்குரிய செய்தி!

குன்றக்குடி ஆதீன குருபூஜைக்குச் செல்ல கந்தசாமித் தம்பிரானுக்கு (குன்றக்குடி அடிகளார்) திருவுள்ளச் சீட்டு விழுந்தது. செய்தி, கந்தசாமித் தம்பிரானுக்கு அதிர்ச்சியைத் தந்தது. கைலாசம் பிள்ளையின் முயற்சியை நினைவு கூர்ந்தார்! குன்றக்குடியில் நெருக்கடி ஏற்பட்டால் என்ன செய்வது? குரு பூஜைக்குச் செல்வதைத் தவிர்க்கவும் இயலாது!

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ?" என்னும் திருஞானசம்பந்தர் அருளிய அடிகள் நினைவுக்கு வந்தன. எருது விருப்பத்தின்படியா சுமை ஏற்றப்படுகிறது! இல்லையே! அதுபோல மற்றவர் விருப்பத்தை, வசதியைக் கேட்பார் யார்? வேறு வழியில்லை. அப்போது தருமபுர ஆதீனத்தில் சம்பந்த ஓதுவார் என்ற ஒருவர் இருந்தார். மிகவும் நல்லவர். மருத்துக்குக்கூட வினயம் இல்லாதவர். கந்தசாமித் தம்பிரானுடைய உயிர்ப்புள்ள விளையாட்டுப் பொருளில் இவரும் ஒருவர். இவர்தான் பெரும்பாலும் தம்பிரான்களுடன் மற்ற ஆதீன

குருபூஜைக்குச் செல்வார். கந்தசாமித் தம்பிரானின் நம்பிக்கைக்கும் உரியவர். சம்பந்த ஓதுவாரைக் கலந்தார். அவர் "சமாளித்துக் கொள்ளலாம்" என்றார்.

குன்றக்குடி ஆதீன குருபூஜை விழாவுக்கு கந்தசாமித் தம்பிரான் பயணமானார். முதல் நாள் காரைக்குடி வந்து சோமசுந்தரம் பிள்ளை மரக்கடையில் தங்கல். அந்தக் காலத்தில் சோமசுந்தரம் பிள்ளை மரக்கடை செல்வாக்காக இருந்தது. இவருடைய கூட்டாளி செல்லையா பிள்ளை. இவர்கள் இருவரும் குன்றக்குடி ஆதீனத்துக்கு மிகவும் வேண்டியவர்கள். காலத்தால் பல நல்ல உதவிகள் செய்த வர்கள். சோமசுந்தரம் பிள்ளை சுத்த சைவர். பஞ்சகச்சம் கட்டுவார். கழுத்தில் நவரத்தினம் வைத்துக் கட்டிய உருட்தி ராட்சமாலை. உச்சிக்குடுமி நீறு நிறைந்த நெற்றியுடன் விளங்குவார். நாளும் பூஜை தவறாமல் செய்வார். இவருடைய கடையின் மாடி தங்குவதற்கு உரிய வசதிகளுடையது. அங்கு தங்கல்; நல்ல உபசரணை! பழகும் உறவுக்கு சோமசுந்தரம் பிள்ளை ஓர் எடுத்துக்காட்டாவார்.

கந்தசாமித் தம்பிரான் குன்றக்குடிக்கு வந்து சேர்ந்ததும், கைலாசம் பிள்ளையும் அவர் புதல்வர் கனகசபை பிள்ளையும் வந்திருந்ததைக் கண்டார். ஆனால், கந்தசாமித் தம்பிரானுடன் கைலாசம் பிள்ளை பேசவில்லை. ஒதுங்கிப் போனார். கனகசபை பிள்ளை மட்டும் பேசினார். மகேஸ்வர பூஜைக்குப் பிறகு குன்றக்குடி ஆதீனத்தில் ஒரு நிகழ்ச்சி உண்டு, அதற்குப் பெயர் 'தர்பார்'. மற்ற ஆதீனங் களில் தர்பார் இல்லை. மாலை மூன்று மணிக்குத் தர்பார் ஆரம்பமானது. அதுபோது பல்வேறு தரப்பினர் குன்றக்குடி ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களைக் கண்டு கொண்டனர். அப்போது எதிர்பாராமல் கந்தசாமித் தம்பிரான் சொற் பொழிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் பெற்றார். திறமைகள் வெளிப்பட வேண்டாத இடம் என்று கந்தசாமி தம்பிரான் உணர்ந்தார்; பேசினார். சிறப்பாகப் பேசக்கூடாது

என்ற நினைப்பில் தொடங்கிப் பேசினார். பத்து நிமிடங்களில் முடித்துவிட்டார் ஆயினும் அந்த அவையினர் பேச்சைப் பாராட்டினர்.

குன்றக்குடி ஆதீனம் மகாசந்நிதானம் அவர்கள் “நன்றாக இருந்தது?” என்று ஆசி கூறி ஒரு ஆரஞ்சுப் பழமும் பத்து ரூபாய் திருக்கைவழக்கமும் தந்தருளினார்கள்.

குன்றக்குடி ஆதீனத்தில் நாராயணசாமி ஐயர் என்பவர் ஏஜெண்டாக இருந்தார். அவரும் கனகசபை பிள்ளையும் காரைக்குடி சோமசுந்தரம் பிள்ளையும் மகா சந்நிதானம் அவர்களும் ஏதோ பேசுகிறார்கள் என்பது தெரிகிறது. வழக்கமாகத் தம்பிரான்களுக்கு நடைபெறும் உபசாரத்தைவிட உபசாரம் கூடுதலாக இருந்தது. ‘கொக்கு தலையில் வெண்ணெய் வைக்கும்’ செய்தி நினைவுக்கு வருகிறது. கடைசியாக ஒரு செய்தி! குன்றக்குடி ஆதீன மகாசந்நிதானம் அவர்களிடமிருந்து “இரண்டு நாட்கள் தங்கி ஆதீனத் திருக்கோயில்களாகிய திருப்புத்தூர், பிரான்மலைத் திருக்கோயில்கள் வழிபாடு செய்து விட்டுப் போகலாம்” என்று உத்தரவு ஆனது. என்ன செய்வது? திகைப்புத்தான் வந்தது. ஒருவாறு இசைந்து மறுநாள் காலை திருப்புத்தூர் திருக்கோயில் வழிபாடு நடந்தது. ஏஜெண்ட் நாராயணசாமி ஐயர் கூடவே வருகிறார். மாலையில் பிரான்மலை! பிரான் மலையில் அப்போது கோபாலன் என்று ஒரு நாயனக்காரர் இருந்தார். முன்பே பழகினவர்போல மேவிபழகினார். மலைப்பகுதிக்கு அழைத்துச் சென்றார். இரவு பிரான்மலையில் தங்கல்! பிரான்மலையில் பாண்டிய நாட்டுக் குருக்கள் மடம் என்று ஒன்று இருக்கிறது. இந்த மடம் அருவியூர் நகரத் தார்க்கு குருமடம். அருவியூர் நகரத்தார் பூம்புகாரிலிருந்து வந்து குடியேறியவர்கள். கோவலன் மரபினர் என்பது வரலாறு. நல்ல மரபினர். பொருளீட்டி வாழ்வாங்கு வாழ்ந்து பழகியவர்கள். இவர்கள் சமூகம் கட்டுக்கோப்பாக ஒற்றுமையாக வளர்ந்து வருகிறது. அப்போது இந்த மடத்தின்

குருவாக இருந்தவர் ஸ்ரீ சுப்பிரமணியஈசான தேசிகர் என்பவர். இந்த மடத்தில் தயாரித்து உணவு வந்தது. உணவுடன் பாண்டிய நாட்டுக் குருக்கள் ஐயா, ஏஜெண்ட் நாராயணசாமி ஐயர் ஆகியோர் வந்தனர். அருகிலிருந்து உபசரித்தனர். நல்ல சுவையான உணவு, உணவு மட்டுமல்ல பாண்டிய நாட்டுக் குருக்கள் சாதுரியமாக ஆலோசனை கூறும்போது அவர்களின் தூய அன்பினை அனுபவிக்கவும் முடிந்தது. ஆனால் அந்த அன்பு கந்தசாமித் தம்பிரானுக்குச் செரிமானம் ஆகவில்லை.

உணவுக்குப் பின் உரையாடல் தொடங்குகிறது! உரையாடலில் முக்கியமாக இடம்பெற்றவை குன்றக்குடி ஆதீன வரலாறு. குன்றக்குடி ஆதீனத்துக்கு இருக்கும் சொத்துக்கள் பற்றிய தகவல்கள், தகவல்களினூடே கந்தசாமித் தம்பிரானுடைய திறமையும் புகழப்படுகிறது. எல்லாவற்றையும் புரிந்துகொண்ட கந்தசாமித் தம்பிரான் "உறக்கம் வருகிறது" என்றார்.

வாழும்போது புகழப்படுதல் புகழல்ல அது முகமனேயாம் அல்லது எதிர்பார்ப்புக்குரிய கையூட்டேயாம். ஒருவர் இறந்தபின், இறந்தவரின் சமுதாய நடப்பியலுக்கு அவருடைய தேவையை, இருப்பை எண்ணிப் பேசும் புகழே புகழ். இன்றைய இந்தியாவின் நிலையில் பல நேரங்களில் இந்திய மக்கள் 'அண்ணல் காந்தியடிகள் இல்லையே, அமரர் நேருஜி இல்லையே' என்று ஏங்குகின்றனர்.

கந்தசாமித் தம்பிரான் மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கு நாயனக்காரர் கோபாலன் துணையுடன் புதுக் கோட்டைக்குச் செல்லும் பேருந்தைப் பிடித்து, பிரான் மலையிலிருந்து தருமபுரத்துக்குப் பயணம் செய்துவிட்டார். திரும்பக் குன்றக்குடிக்குச் செல்வதைத் தவிர்த்துவிட்டார்.

தருமபுரத்துக்கு வந்தவுடன் தருமபுர ஆதீனம் மகா சந்நிதானம் அவர்களைக் கண்டுக்கொண்டு குன்றக்குடி குரு

பூஜையில் நடந்தவையெல்லாம் விண்ணப்பிக்கப் பெற்றன, "ஏன் தாமதம்?"-இது மகாசந்நிதானம் அவர்களின் வினா. சம்பந்த ஓதுவார் பதில் சொன்னார்; "பாண்டிப்பதி பதினான்கில் திருப்புத்தூர், பிரான்மலை வழிபாடு செய்து கொண்டு வந்ததால் தாமதம்" என்றார். குன்றக்குடி ஆதீனத்தைப் பற்றியும் பேச்சு வந்தது. அப்போது குன்றக்குடி மடம் செல்வ ஆதாரத்தில் வளமாக இல்லை. குன்றக்குடி ஆதீனத்தில் தகர வாளிகள் தகர குவளைகள் புழக்கம். இது குறித்து தருமபுர ஆதீன அலுவலர்கள் 'தகர குவளை மடம்' என்றார்கள். இந்த வார்த்தை கந்தசாமித் தம்பிரான் நெஞ்சில் 'சுருக்'கென்று தைத்தது!

திருமடங்களுக்குள்ளேயும் துறவிகளுக்கிடையேயும் வளத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் எண்ணப்படு கின்றன. அவ்வெண்ணத்தின் வழி மதிப்பீடு குறைகிறது. இது ஏற்க முடியாத ஒன்று. நயத்தக்க நாகரிகம் எப்போது மலரும்? எங்கு மலரும்? திருக்கோயில்கள்-திருமடங்கள்கூட இன்று பண மதிப்பீட்டுச் சமுதாய அமைப்பின் காரணமாக வெகுவாக அவற்றின் அகநிலை அறநெறிகள் பாதிக்கப் பட்டுள்ளன. இந்த நிலை ஆழ்ந்த கவலைக்குரியது.

கந்தசாமி தம்பிரானுக்கு சீகாழி சட்டநாதசுவாமி திருக்கோயில் கட்டளையும் சேர்த்துப் பார்க்கும்படி உத்திரவாகியது. புலவர் இரண்டாம் ஆண்டுப் படிப்பு வேறு, திருக்கடவூர் கட்டளை, சீகாழி கட்டளைகளும் சேர்ந்தன, சமயப்பணிகள் அதாவது, குருமூர்த்தங்கள் வழிபாடு, திருக்கோயில் வழிபாடு ஆகியனவும் வந்துவிடும்.

இந்தக் காலங்களில் பெரும்பாலும் மாலை நேரத்தில் காவிரிக் கரையில் அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான் (இன்றைய தருமபுர ஆதீனம் மகாசந்நிதானமாக எழுந்தருளி யிருப்பவர்கள்) அவர்களுடன் இலக்கிய விவாதங்கள், பொது சர்ச்சைகள் நிகழும். எல்லா விவாதங்களிலும் சர்ச்சை

களிலும் அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் நிதானம்! நமது நிலை தீவிரவாதமே. மாலை ஆறு மணிக்குள் காவிரியில் மாலை அனுட்டானம் முடித்துக்கொண்டு வருவார்கள். கந்தசாமித் தம்பிரான் தனது அறைக்குச் சென்று படிப்பார். அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் அருள்திரு ஞானபுரீசர் திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்வார். ஒரு நாள்கூட ஞானபுரீசர் திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்லத் தவற மாட்டார். இன்றும் தருமபுரம் மகாசந்நிதானம் இந்த வழிபாட்டில் நள்ளிரவிலும் தவறுவதில்லை. அது அவர்கள் செய்த புண்ணியம் போலும்.

கந்தசாமித் தம்பிரானைப் பொறுத்த வரையில் வியாழக்கிழமைகளில் கோயில் வழிபாட்டுக்குப் போவார். மற்றபடி கோபுர தரிசனம்தான். படிப்புக் காலத்தில் கந்தசாமித் தம்பிரானுக்கு மற்றவர்களைவிட நன்றாகப் படிக்க வேண்டும், வகுப்பில் முதல் நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணம். ஆதலால், அந்தக் காலத்தில் விடியற்காலை மூன்று மணிக்கு எழுந்து படிப்பார். அன்று தொடங்கிய அந்தப் பழக்கம் இன்றளவும் மாறவில்லை. காலை மூன்று மணிக்கு எழுந்து படிக்கும் கந்தசாமித் தம்பிரான் விடியல் ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்து விடுவார். ஒரு நாள் காலை உடன் பயில்வோராகிற அருள்திரு சோமசுந்தரத் தம்பிரான், கோ. முருகையா ஆகியோருடன் பேசும்போது "படிக்கவே இல்லை. தூங்கிவிட்டேன்" என்று கந்தசாமித் தம்பிரான் கூறினார்.

கோ. முருகையா கந்தசாமித் தம்பிரானுடன் தமிழ்க் கல்லூரியில் பயின்றவர். நன்றாகப் பாடுவார். இவர் இப்போது அருட்செல்வர் நா. மகாலிங்கம் அரவணைப்பில் திருமுறைப் பணி செய்து வருகிறார். இவர் ஒரு நாள் காலை கந்தசாமித் தம்பிரான் அறையில் விளக்கெரிவதைப் பார்த்து

விட்டார். அன்று காலை வழக்கம்போல் கந்தசாமித் தம்பிரான் படிக்கவில்லை என்கிறார் "காலையில் விளக் கெரிந்ததே...?" என்று முருகையா கேட்கிறார். கந்தசாமித் தம்பிரான் சதுரப்பாட்டுடன் "எறும்பு கடித்தது. விளக்கு போட்டுப் பார்த்தேன்!" என்று கூறுகிறார். அருள்திரு சோமசுந்தரம் தம்பிரானும் சரி, முருகையாவும் சரி, நம்ப வில்லை, பொய் சொன்னதாகவே அன்றும் சொன்னார்கள்... இப்போதும் சொல்வார்கள். இப்படியெல்லாம் கல்வியில் ஆர்வம் காட்டியதால் அந்தப் பொய் 'பொய்ம்மையும் வாய்மை யிடத்த' என்னும் குறள்நெறிப்படி அமைந்தது என்பது அமைதி.

சீகாழியில் கட்டளைத் தம்பிரான் ஆன பிறகு, வாரத்தில் ஒரு நாள் சீகாழிக்குச் செல்வது வழக்கம். கல்லூரி விடுமுறைக் காலங்களில் சீகாழியில் தங்கும் கடப் பாட்டினையும் கந்தசாமித் தம்பிரான் ஏற்றுக்கொண்டார். தருமபுர ஆதீனத்தின் வில்வண்டியில் சீகாழிக்குச் செல்வது வழக்கம். ஒன்றே முக்கால் மணி நேரத்தில் வண்டி போய்ச் சேரும்.

கட்டளைத் தம்பிரான்களுக்குச் சில மரியாதைகள் உண்டு. கட்டளைச் சேவகர் உண்டு. அப்போது கட்டளைச் சேவகராக வேலை பார்த்தவர் கோவிந்தராசன் என்பவர். இவர் இப்போது சீகாழித் திருக்கோயிலில் பணி செய்கிறார். சீகாழி சைவத் தமிழுலகின் புண்ணியத் திருத்தலம். திருஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த திருத்தலம். அது மட்டுமா? 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்ற பழமொழிக்கு ஏற்ப, திருஞானசம்பந்தர் அழுது உமாதேவியே ஞானப்பால் தரக் குடித்தார், இந்தத் திருத்தலத்தில், சைவ சமயத்தில் எத்தகைய மனிதநேயம்!

ஒரு குழந்தை அழுகிறது. அந்த அழுகையைக்கூடத் தாங்கமுடியாத நிலையில் அம்மையப்பனே எழுந்தருளி

ஞானப் பால் தரும் நிகழ்ச்சியினால் வெளிப்படும் மனித நேயம் உணரத்தக்கது. இந்த மனித நேயம் சமய நெறியினரின் ஒழுகலாறாக என்று அமையும்? இத்திருத்தலத்தில் கட்டளைத்தம்பிரானாகத் தொண்டு செய்யக் கிடைத்த வாய்ப்பை முன்செய்த தவத்தின் பயன் என்று எண்ணி மகிழ்ந்தார் கந்தசாமித் தம்பிரான். ஆதலால், சீகாழித் திருத்தலக் கட்டளை விசாரணைகளில் ஆர்வம் மிகுதியும் காட்டினார். ஆனாலும் நடைமுறைகள் எளிதில் துணை செய்யவில்லை. திருக்கோயிலுக்கும் கட்டளை மடத்துக்கும் நெடுந்தூரம்! நாள்தோறும் மாலையில் திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்வார். முன்னே கை விளக்கு, பின்னே சேவகர் என்ற நிலை! வழித்தடம் மாற இயலாது; மாறுவ தில்லை.

## 14

வருடம் 1948... சீகாழித் திருத்தலத்தில் சித்திரைத் திருவிழா! சீகாழியில் தங்கித் திருவிழாவை நடத்த தருமை யாதீனம் மகா சந்நிதானத்திடம் உத்தரவு பெற்றுக்கொண்டு கந்தசாமித் தம்பிரான் சீகாழிக்குச் சென்றிருந்தார். அதுபோது ஒரு நாள் மாலை 4 மணிக்குச் சீகாழித் திருக்கோயிலுக்கு ஆய்வுக்காகச் சென்றார். பொதுவாகக் கட்டளைத் தம்பிரான் களுக்கு இப்படி ஆய்வு செய்யும் பணி இல்லை! அப்படி ஆர்வம் தலையெடுத்தாலும் அங்குள்ள நிர்வாகத்தின் அனுசரணை போதிய அளவு இருக்காது; இவையெல்லாம் கந்தசாமித் தம்பிரானுக்குத் தெரியும். ஆயினும் கந்தசாமித் தம்பிரான் யாரோடும் இணங்கிப் போய்விடுவார்.

அப்போது சீகாழித் திருக்கோயிலின் கார்ப்பாராக (தலைமை நிர்வாகியாக) இருந்தவர் சிவசிதம்பரம்பிள்ளை என்பவர். இவர் நல்ல நிர்வாகி. இவருடைய பணிகள் விவசாயிகள் நிர்வாகம், வசூல், வழக்கு நிர்வாகம் முதலியன.

ஷராப்பாக (காசாளராக) இருந்தவர் சீனிவாச ஐயங்கார் என்பவர்! இவரும் நல்ல நிர்வாகி. சமய ஆசாரங்களை விடாது கடைப்பிடித்து ஒழுகுபவர். இவர் நெற்றியில் திருமண் சார்த்திய பொலிவு எப்போதும் இருக்கும். இவர்கள் இருவருமே கந்தசாமித் தம்பிரானைப் பொறுத்தவரையில் நல்ல உறவு. ஏன்? இவர்களை மதித்தும் பாராட்டியும் அடிக்கடி ஆலோசனை கேட்டும் கந்தசாமித் தம்பிரான் பழகியதே காரணம்.

அன்று மாலை திருக்கோயிலுக்கு வருவது பற்றிக்கூட ஐயங்காருடன் ஆலோசனை செய்யப்பெற்றது. கந்தசாமித் தம்பிரான் மேற்குக் கோபுரவாசல் வழியாகத் திருக் கோயிலுக்குள் நுழைந்து மேற்கு வெளிப் பிராகாரம் போய்ச் சேருகிறார். இங்கு காலியிடங்களில் தோட்டம் முதலியன உண்டு. பின், வடக்குப் பிரகாரம் செல்லத் திரும்பும்போது ஒரு திருக்கோயில் விமானம் தெரிந்தது. கட்டளைச் சேவகரிடம் கந்தசாமித் தம்பிரான், "இது என்ன கோயில்?" என்று கேட்டார்! கட்டளைச் சேவகர், "சம்பந்தர் கோயில்" என்றார். "இதுவரையில் காட்டவில்லையே! வழிபாட்டுக்கு அழைத்துச் செல்லவில்லையே! எங்கே சாவி?" என்றார் கந்தசாமித் தம்பிரான்.

கட்டளைச் சேவகர் ஓடிப்போய் சாவி வாங்கிவர, திருஞானசம்பந்தர் திருக்கோயிலின் கதவு திறக்கப்பட்டது. திருக்கோயில் இருந்த நிலை வருந்தத்தக்கது.

சைவசித்தாந்தத்தில் ஆன்மாக்களுக்குப் 'பசு' என்று பெயர். இந்தப் 'பசு'க்களைக் காத்தருள திருஅவதாரம் செய்த திருஞானசம்பந்தர், நான்கு கால் பசுக்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருந்தார். பால் குடிக்கும் ஆர்வம் திருஞானசம்பந்தருக்குப் போகவில்லையோ என்று கேட்கா தீர்கள்! திருஞானசம்பந்தர் குடித்தது மீண்டும் பசி வராத ஞானப்பால்!

ஆன்மாக்களின் அறியாமைக்கு 'ஆணவமலம்' என்று பெயர். திருஞானசம்பந்தரின் திருக்கோயிலில் நான்கு கால் பசுக்களின் மலமாகிய சாணம் கதிரொளியில் பக்குவப் பட்டுக் கொண்டு கிடந்தது. திருஞானசம்பந்தர் திரு அவதாரம் மனிதர்களின் மேம்பாட்டுக்கு அல்லவா!

திருஞானசம்பந்தர் கோயிலில் வைக்கோல் போர்! தட்டுமுட்டுச் சாமான்கள்! திருக்கோயிலில் செடிகள் முளைத் திருந்தன! தூய்மையில்லை! கந்தசாமித் தம்பிரானுக்குத் தாங்கொணாத் துயரம்! நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் திருக்கோயில் அல்லவா இது!

உடனே ஐயங்கார் அழைக்கப்பட்டார்! ஆட்கள் அழைக்கப்பட்டனர்! தூய்மை செய்யும் பணி தொடங்கப் பட்டன. மாடுகள் கட்டுவதற்குத் தனியே பசுமடம் அமைக்க வேண்டும். வைக்கோல்போரும் குப்பைக் குழியும் பசு மடத்தி லேயே அமைக்க வேண்டும். திருஞானசம்பந்தர் திருக் கோயில் எப்போதும் தூய்மைப் பொலிவுடன் அமைய வேண்டும். திருக்கோயில் 'குடவரை'க் காவல் நியமனம் செய்து எப்போதும் திறந்திருக்க வேண்டும் என்பது திட்டம். இந்தத் திட்டத்துடன் மகாசந்நிதானத்துக்கு விண்ணப்பங்கள் தயாரித்து சீனிவாச ஐயங்கார் அன்று இரவு பத்து மணிக்குக் கொடுத்தார். இவற்றை வாங்கிக்கொண்டு உடனே கந்தசாமித் தம்பிரான் தருமபுரத்துக்குப் பயணமானார்.

மறுநாள் காலை தருமபுரம் பூஜை மடத்தில் வழிபாடு செய்துகொண்டு மகாசந்நிதானத்தை வணங்கி, திருஞான சம்பந்தர் கோயில் பற்றி விண்ணப்பித்துக் கொண்டார்; உடனே சீர் செய்தலுக்குரிய திட்டங்களுடன் கூடிய விண்ணப்பங்களைத் திருக்கண் பார்வைக்கு வைத்தார் கந்தசாமித் தம்பிரான்! மகாசந்நிதானம் விண்ணப்பங் களைக் கண்ணுறும் போதே, மகாசந்நிதானத்துக்கு வருத்தம் கலந்த நிலையில் திருப்பணியில் ஆர்வம் பொங்கியெழுவதை

கந்தசாமித் தம்பிரான் உணர்ந்தார். விண்ணப்பங்களையும் திட்டங்களையும் படித்த பிறகு மகாசந்நிதானம் திருக் கண்களிலிருந்து இரண்டொரு சொட்டு நீர் விண்ணபத் தாள்களில் வீழ்ந்தன. நாத்தழுதழுத்தார்கள். அனைத்து விண்ணப்பங்களும் உடன் அங்கீகரிக்கப் பெற்றன. 'திருவிழா வுக்குள் விரைந்து முடிக்க வேண்டும்' என உத்தரவாகியது.

மிக்க மகிழ்ச்சியுடன் சீகாழிக்கு வந்து ஐயங்காரை முடுக்கிவிட்டுப் பணிகளைச் செய்து முடிக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. திருக்கோயில் விமானம், மதிற்சுவர்களில் முளைத்துள்ள செடிகளை வெட்ட வேண்டும். உடனே கந்தசாமித் தம்பிரான் சில இளைஞர்களையும் மாணவர் களையும் தேர்ந்தெடுத்தார்.

அவர்களுள் கவனத்துக்குரியவர் திருமுறைச் செல்வர் புலவர் மு. கணபதி! இன்று பட்டிமண்டபங்களில் முழக்கம் செய்து வருகிறாரே அந்த கணபதிதான். இவர். மு. கணபதி, சிதம்பரத்தில் பிறந்தவர். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் தமிழ்க் கல்லூரியில் தமிழ் பயின்றவர். திருப்பனந்தாளில் தமிழ் பயின்று கொண்டிருந்த காலத்தில் மகாவித்வான் சா. தண்டபாணி தேசிகருடனும் தனியாகவும் அடிக்கடி தருமபுர ஆதீனத்துக்கு வருவார். அவர் தமிழில் மட்டும் புலவர் அல்லர். நல்ல ஓவியருமாவார். தருமபுர ஆதீனம் 'ஞானசம்பந்தம்' இதழுக்கு ஓவியங்கள் தீட்டிக்கொடுப்பார். வழக்கம்போல மு. கணபதியிடம் கந்தசாமித் தம்பிரான் நட்புறவு கொண்டார். பணி கருதி இவர் அவசரத் தந்தி மூலம் வரவழைக்கப்பெற்றார்.

தருமபுரம் ஆதீனக் கல்லூரியில் பயின்ற புலவர் வை. சு. தண்டபாணி, மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயில் ஓதுவார் மிராசு, புலவர் தா. குருசாமி ஆகியோரை கந்தசாமித் தம்பிரான் சீகாழிக்கு வரும்போதே பணிக்கு அழைத்து வந்து விட்டார்!

G.XVI.10-

புலவர் மு. கணபதி உழவாரப் பணியில் ஆர்வத்துடன் மடிதற்றுக்கொண்டு செய்தார். அதோடு திருமுறை விழாவுக்கு விளம்பரத் தட்டிகள் எழுதி உதவினார். மேலும், வெளியூர்களிலிருந்து வரும் எல்லா அறிஞர்களையும் வரவேற்று உபசரித்தார். இப்படிப் பல நாட்கள் சீகாழியில் தங்கிப் பணி செய்தார். பணி முடிந்து ஊருக்குச் செல்லும் போது செலவுக்குப் பணம் கொடுக்கப்பெற்றது. செலவுக்கு உரிய தொகையை மட்டும் பெற்றுக்கொண்டார். வற்புறுத்தியும் கூடுதலாக ஒரு காசுகூட வாங்கவில்லை.

புலவர் தா. குருசாமிக்கு இப்போதுபோல் அப்போதும் துரும்பு உடம்புதான். கடின உழைப்பு அவரால் இயலாது. ஆனாலும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்தார். உணவு முதலியன வழங்கும் பணியை வை. சு. தண்டபாணி கவனித்தார். திருஞானசம்பந்தர் திருக்கோயில் திருப்பணியில் கந்தசாமித் தம்பிரானுக்கு உடனிருந்து உதவியவர்கள் பலர். சீகாழி என்றால் முதலியார் குடும்பம் நினைவுக்கு வரும். தொண்டை மண்டல முதலியார் குடும்பம், பெரிய குடும்பம்; சைவத்தில் மிக்கப் பற்றுள்ள குடும்பம். சீகாழித் திருக்கோயிலுடனும் தருமபுர ஆதீனத்துடனும் நெருக்கமான தொடர்புள்ள குடும்பம். இக்குடும்பத்தில் இந்தத் திருப் பணிக்கு உடனிருந்து உதவியவர்களில் வக்கீல் சீனவாச முதலியார், பெரியவர் சுப்பராய முதலியார், கிருஷ்ணமூர்த்தி முதலியார், சதாசிவ முதலியார், ராமநாத முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்! இளைஞர்கள், மாணவர்கள் பத்துப்பேர், மெய்க்காட்டு ஆட்கள் ஐந்து பேர் பணி செய்தனர். இவர்கள் எல்லோருடைய ஒத்துழைப் பாலும் திருஞானசம்பந்தர் திருக்கோயில் உழவாரப் பணி நடந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் கந்தசாமித் தம்பிரானுக்கு உழவாரத் தொண்டு அறிமுகமாகியது. இன்றுவரை இந்த உழவாரத்தொண்டில் ஆர்வம் குறையவில்லை. இன்றும்

திருத்தலங்களுக்குச் சென்றால் வழிபாட்டில் காட்டும் ஆர்வத்தைவிட உழவாரத் தொண்டில் காட்டும் ஆர்வமே மிகுதி.

ஆம்! ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளால் தொடங்கி வைக்கப்பெற்ற உழவாரத் தொண்டு இன்றும் தேவைப்படுகிறது.

திருஞானசம்பந்தருக்குப் படையல் செய்த திருவமுது, உழவாரத் தொண்டர்களுக்கு மதிய உணவாயிற்று. உழவாரத் தொண்டு தொடர்ந்து நடைபெற்றது. மாலை நான்கு மணி இருக்கும். திருக்கோயில் அலுவலகச் சேவகர் ஓடிவந்து, 'மகாசந்நிதானம் வந்திருக்கிறார்கள்... திருஞானசம்பந்தர் கோயிலுக்கு நேரே வந்து கொண்டிருக்கிறார்கள்...' என்ற செய்தியைச் சொன்னார். சிந்தைக்கினிய செவிக்கினிய செய்தியல்லவா?

திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்கு மகாசந்நிதானம் எழுந்தருளி நேரே திருஞானசம்பந்தர் சந்நிதிக்குச் சென்று வழிபாடு செய்துகொண்டார்கள். திருக்கோயில் முழுதும் பார்த்துவிட்டு, கந்தசாமித் தம்பிரான் எதிர்பார்க்காத நிலையில் பல திருப்பணிகளுக்கு நிதியாணைகள் வழங்கி னார்கள். "எல்லாம் வாயுவேகத்தில் நடைபெற வேண்டும். திருவிழாவின்போது திருஞானசம்பந்தருக்கு நூறாயிரம் போற்றி (லட்சார்ச்சனை) செய்யவேண்டும். திருமுறைப் பாராயணம் அகண்ட வேள்வி நடத்தவேண்டும்" என்றெல்லாம் உத்தரவு பிறப்பித்தார்கள். எல்லோருக்கும் மகிழ்ச்சி! தொடர்ந்து வேலை நடந்தது இனிதே நிறைவெய்தியது.

திருஞானசம்பந்தருக்கு லட்சார்ச்சனை தொடங்கியது. கந்தசாமித் தம்பிரான் திருமுறை வகுப்பு தொடங்க எண்ணினார். அப்போது திருக்கோயிலில் சட்டநாத தேசிகர் என்பவர் ஓதுவாராகப் பணி செய்தார். கந்தசாமித்

தம்பிரான் அவரை அழைத்துக் கலந்து பேசினார். "வகுப்புக் கென்று இப்போது தனி ஊதியம் தர இயலாது. தாங்கள் தொண்டாகத்தான் கருதிச் செய்யவேண்டும். பின்னே மகாசந்நிதானத்திடம் விண்ணப்பித்து ஊதியம் வழங்க முயல் கிறேன்" என்று கந்தசாமித் தம்பிரான் கூறினார். சட்டநாத தேசிகர் கடமையுணர்வுடன் ஒப்புக்கொண்டார். மாலை நேரத்தில் திருமுறை வகுப்பு நடத்துவதென்று திட்டமிடப் பெற்றது. இருபது முதல் ஐம்பது வரை திருமுறை வகுப்புக்கு மாணவ மாணவியர் சேர்ப்பதென்பது திட்டம். மாணவ மாணவியரை எப்படிச் சேர்ப்பது? தாமே ஆர்வத்துடன் படிக்க முன்வருவார்களா? அப்படியே வந்தாலும் சராசரித் தகுதியுடைய குடும்பத்து மாணவ மாணவியர் பங்கேற்பார்களா என்னும் கேள்விகள் எழுந்தன.

அப்போது உயர்நிலைப் பள்ளிகளில் இலவசக் கல்வி இல்லை! கட்டணம் இருந்தது. திருமுறை வகுப்பில் சேரும் மாணவ மாணவியருக்குப் பள்ளிக் கட்டணம் திருக்கோயில் செலுத்தும், சீருடை வழங்கும், புத்தகங்கள் வாங்கித் தரும் என்று திட்டம் தீட்டப்பெற்று மகாசந்நிதானத்திடம் ஆணை பெறப்பட்டது. நல்ல வரவேற்பு! போட்டி! 200-க்கு மேல் விண்ணப்பங்கள் வந்தன. விண்ணப்பம் அனுப்பியவர்களில் 50 பேர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பள்ளிக் கட்டணம் போக சீருடை, புத்தகங்கள் வகைக்கு நன்கொடை வசூலிக்கப் பெற்றது. நன்கொடை கொடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் வைத்தீஸ்வரன் கோயில் நெல் வியாபாரி சீனிவாச ரெட்டி யார். இவர் மிகவும் நல்லவர்; எப்போதும் மலர்ந்த முகத் தினர். இவர் ரூ 1000/-ம் கொடுத்ததுடன் 25 சீருடைகளும் தைத்துக் கொடுத்தார். மற்றொருவர் சீகாழியில் இருந்த குத்தகைதாரர் உருத்திராபதி படையாச்சி. இவர் எதிலும் தாராளமனப்பான்மையுடையவர். இவர் மீதிச் சீருடைகள் வாங்கிக் கொடுத்ததுடன் வகுப்பு நடைபெறும் நாளன்று விநியோகப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

திருஞானசம்பந்தர் லட்சார்ச்சனை பூர்த்திவிழா, திருமுறை விழா, திருமுறை வகுப்புத் தொடக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றன. சீகாழி வட்டாரத்தில் எண்ணத்தக்க பெருமையுடைய மனிதர்கள் அனைவரும் வந்திருந்தனர். மக்கள் கூட்டமும் அதிகம். மாலைச் சிற்றுண்டி அளிக்கும் பணியில் திணற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஊழியர்கள் போதவில்லை! ஒரு கட்டத்தில் ஷராப் சீனிவாச ஐயங்கார், மற்றவர்கள் சாப்பிட்ட எச்சில் இலையை எடுத்து இடத்தைச் சுத்தம் செய்தார். இந்தக் காட்சி கந்தசாமித் தம்பிரானின் நெஞ்சைத் தொட்டது! இப்பிறப்பில் மட்டும் அல்ல, எப்பிறப்பிலும் சீனிவாச ஐயங்கார் பணி நினைவி லிருக்கும்! வழிகாட்டும்!

மகாசந்நிதானம் எழுந்தருளி அருமையான வாழ்த்துரை வழங்கினார்கள். அந்த நாள்முதல் திருஞான சம்பந்தர் திருக்கோயில் மேலும் மேலும் அழகுபெற்று வருகிறது. இப்போது திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் நல்ல நூலகம் ஒன்று அமைந்துள்ளது. இவை மட்டுமா? இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சீகாழியில் ஆண்டுதோறும் நடைபெறும் திருமுலைப்பால் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்று அருளாட்சி செய்யும் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம், திருமுலைப்பால் திருவிழாவை மிகவும் சிறப்பாக பக்தி சிரத்தையுடன் நடத்திவருகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியின் விளைவாக கந்தசாமித் தம்பிரா னுக்குத் திருமுறைத் தமிழின்பால் ஆர்வம் மிக்குயர்ந்து வளர்ந்தது.

## 15

குன்றக்குடி ஆதீனகர்த்தர் கந்தசாமித் தம்பிரானை விட்டபாடில்லை! மீண்டும் அணுகினார்கள். இப்போது திருக்கடவூர் கனகசபை பிள்ளை, ஆற்றங்கரை முத்தையா

முதலியார், காரைக்குடி மரக்கடை சோமசுந்தரம் பிள்ளை மூவரும் வந்து கந்தசாமித் தம்பிரானைச் சந்தித்தனர். வழக்கம் போல் மறுத்தார் கந்தசாமித் தம்பிரான். ஆனால், அவர்கள் விடவில்லை. அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள "மகாசந்நிதானத்தை அணுகுங்கள்... உத்தரவு கொடுத்தால் வருகிறேன்!" என்றார் கந்தசாமித் தம்பிரான். அவர்கள் மகாசந்நிதானத்தைச் சந்தித்துக் கேட்கிறார்கள். மகாசந்நிதானம், கந்தசாமித் தம்பிரான் கருத்தறியாமலேயே மறுத்துவிட்டார்கள்.

பின், குன்றக்குடி ஆதீனத்தார் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து தம்பிரான் ஒருவரை அழைத்து வந்து வைத்திருந்தார்கள். மூன்று மாத கால அளவில் குன்றக்குடி ஆதீனம் மகா சந்நிதானத்துக்குப் பிடிக்காமல் அவர் திரும்ப அனுப்பப் பட்டார். மறுபடியும் குன்றக்குடி ஆதீனத்தார் தருமபுர ஆதீனத்துக்குப் படையெடுத்தனர். இந்தத் தட்வை என்ன காரணம் பற்றியோ திருமடத்து மரபுப்படி பரிவட்டங் களுடன் தம்பிரான், ஓதுவார் ஆகியோரும் வந்திருந்தனர். இரவு ஏழு மணிக்கு மகா சந்நிதானத்தைக் கண்டு கொள்கின்றனர். குன்றக்குடி ஆதீனத்தில் கும்பகோணம் மடத்திலிருந்த கைலாசத் தம்பிரான் என்பவர் வந்திருந்தார். இவர் வயதானவர். நன்றாக வாதம் பண்ணுவார். குன்றக்குடி ஆதீனத்தின் வழக்குகளைக் கவனமுடன் நடத்தியவர்.

இவர் மகாசந்நிதானத்தைக் கண்டு கொண்டபோது நிலமிசை வீழ்ந்து வணங்கியவர் எழுந்திருக்கவே இல்லை. அழுகிறார்! "குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தைக் காப்பாற்ற வேண்டும். விளக்கேற்றி வைக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அழுகிறார். "மகாசந்நிதானம் சரி என்று' சொன்னால்தான் எழுந்திருப்பேன்" என்கிறார்.

மகாசந்நிதானத்துக்கு அறச் சங்கடம்! கந்தசாமித் தம்பிரானை அழைத்து விருப்பம் கேட்கிறார்கள், கந்தசாமித்

தம்பிரான் மறுக்கிறார். ஆயினும் தருமபுரம் மகாசந்நிதானம் மனம் நெகிழ்ந்துவிட்டது. அதுவும் ஒரு ஆதீனம். வயதான ஒரு தம்பிரான் அழுகிறார்! குன்றக்குடி ஆதீனத்துக்கு உதவி செய்யத் திருவுள்ளம்! அதேபோழ்து கந்தசாமித் தம்பிரானை இழக்க முடியாத திருவுள்ளம்! இந்த நிலையில் தருமபுரம் மகாசந்நிதானம் ஒரு முடிவுக்கு வந்தார்கள். மறுநாள் காலையில் பூஜை மடத்தில் திருமுறையில் கயிறு சார்த்திப் பார்ப்பது என்பதுதான் அந்த முடிவு. திருமுறை வாயிலாகச் சொக்கநாதப் பெருமாள் உத்தரவு எப்படி அருளிப்பாடு ஆகிறதோ அப்படி நடந்துகொள்வது என்பது முடிவு.

திருமுறையில் கயிறு சார்த்திப் பார்ப்பது பழைய மரபு. ஒன்றைச் செய்யத் துணிவதற்கு முன் திருவருளின் திருவுளப் பாங்கை அறிய இருந்த அணுகுமுறை. மூவர் தேவாரம் அடங்கன் முறையில் இறைவன் சந்நிதியில் மஞ்சட் கயிறு சார்த்துவது.

மறுநாள் காலை பூஜை மடத்தில் சிறப்பு வழிபாடு. குன்றக்குடி ஆதீனத்தின் உபயம். பூஜை மடத்தில் தேவார அடங்கன் முறை மஞ்சட்கயிறுடன் இருக்கிறது. எல்லோரிடமும் பரபரப்பு கலந்த சூழல்! பூஜை மடம் வழிபாடு முடிந்தது. மகாசந்நிதானம் எல்லோருக்கும் திருநீறு அளித்த பின், குன்றக்குடி ஆதீனத்தார், கந்தசாமித் தம்பிரான் மற்றும் திருக்கூட்டத்தார் முன்னிலையில் அடங்கன் முறையில் கயிறு சார்த்தினார்கள். முடிவு? திருக்கடவூர் மயானம் திருத்தலத்தில் திருஞானசம்பந்தர் அருளிய 'வரிய மறையார்...' என்று தொடங்கும் பதிகம் அருள் பாலித்தது.

இப்பதிகத்தின் முதல் திருப்பாடல்,

> *'வரிய மறையார் பிறையார்*
> *மலையோர் சிலையா வணங்கி*
> *எரிய மதில்கள் எய்தார் எறியும்*
> *முசலம் உடையார்*

*கரிய மிடறு முடையார் கடவூர்*
*மயானம் அமர்ந்தார்*
*பெரிய விடைமேல் வருவார் அவர்*
*எம் பெருமா னடிகளே!'*

என்பது. 'பெரிய விடைமேல் வருவார் அவர் எம்பெருமான் அடிகளே' என்பது இத்திருப்பாடலின் நான்காம் அடிக ளாகும். 'பெரிய விடைமேல் வருவார்' என்பது எதிர் காலத்தில் பெரிய பொறுப்புகளுடனும் ஊர்திகளுடனும் வருவார் என்றும் அவர் 'அடிகள்' என்றும் திருவருள் உணர்த்துவதாக மகாசந்நிதானம் பொருள் கொண்டார்கள்.

மேலும் இத்திருப்பதிகத்தின் ஏழாம் திருப்பாட்டு,

*'பாசமான களைவார் பரிவார்க்கமுத மனையார்*
*ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல்*
*விடைமேல் வருவார்*
*காசை மலர்போல் மிடற்றார்*
*கடவூர்மயான மமர்ந்தார்*
*பேச வருவார் ஒருவர் அவரெம்*
*பெருமா னடிகளே!'*

என்பதாகும். இதில் 'பேச வருவார் ஒருவர். அவர் எம் பெருமான் அடிகளே!' என்று வருவது கந்தசாமித் தம்பிரானின் பேசும் ஆர்வத்தை உறுதி செய்கிறது. மேலும், சிறப்பாகப் பேசி வருவார் என்றும் திருவருள் உணர்த்துகிறது. அது மட்டுமல்ல 'அடிகள்' என்ற பெயர் பெற்று விளக்கமுற வாழ்வார் என்றும் சொக்கநாதர் அருள்பாலித்துள்ளார். 'இனி, குன்றக்குடிக்குப் போவதுதான் ஒரே வழி, சொக்கநாதர் ஆணை!' என்று அருளித் திருநீறு வழங்கி வாழ்த்தினார்கள் மகாசந்நிதானம்.

குன்றக்குடி ஆதீனத்தாருக்கு மிக்க மகிழ்ச்சி. உடனே அவசர உணர்வுடன் தருமபுர ஆதீனத்தின் அலுவலர்கள்,

கந்தசாமித் தம்பிரானைக் குன்றக்குடிக்கு எப்படி அனுப்பு வது? என்ன மாதிரி ஆவணம் பெறுவது? உயிலா? செட்டில் மெண்டா என்றெல்லாம் வழக்கறிஞர்களுடன் ஆலோசனை செய்தனர். செட்டில்மெண்ட் எழுதி வாங்குவது என்று முடிவு செய்தனர். இங்ஙனம், முறையாகப் பொறுப்புக்கு அனுப்பவும் சிறப்பாக வழியனுப்பவும் விரும்பிச் செயல் பட்டனர். குன்றக்குடி ஆதீனத்தாரிடம் 'கந்தசாமித் தம்பிரான் ஆவணி மூல நாள் வழிபாடு செய்துகொண்டு 5–9–49–ல் வருவார். மற்ற ஏற்பாடுகளைச் செய்யுங்கள்' என்றும், ஆவணி மூலத்தன்று (1–9–49) செட்டில்மெண்ட் எழுதிக் கொண்டு வரும்படியும் சொல்லி அனுப்பி விட்டார்கள்.

குன்றக்குடிக்குச் செல்வது முடிவானவுடன் கந்தசாமித் தம்பிரானுக்கு ஒரு கடமை உணர்வு தோன்றியது. அந்தக் கடமை பற்றித் தீவிரமாகச் சிந்தித்தார்; செயல்படவும் துணிந்தார். கந்தசாமித் தம்பிரான் தம் பெற்றோரைப் பற்றி எண்ணினார்.

குடும்பத்துக்குச் சொத்துகள் உண்டு. ஆனால், அவை பெற்றோர் பெயரில் இல்லை. கந்தசாமித் தம்பிரானின் (அரங்கநாதனின்) தந்தை, பரம்பரைச் சொத்துக்களை விற்று முதலாக்கி இல்லை முதலாக்கவில்லை! செலவழித்து விட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை இயல்பாகத் தாராள மனம் படைத்தவர். எல்லோ ருக்கும் உதவி செய்வார். அதுவும் கார்காத்த சைவ வேளாளர் மரபினர் என்றால் பிள்ளையவர்களின் உதவி நிச்சயம் கிடைக்கும். பால் ஊற்றும் பையனாக இருந்த அந்தக் காலத்தில் அரங்கநாதன் மூலம் பிள்ளைக்கு அரங்கநாதன் குடும்பம் அறிமுகமாயிற்று. அதன் பிறகு அரங்கநாதன் (கந்தசாமித் தம்பிரான்) குடும்பத்தின் சிக்கல்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்ந்து வந்தன. பிள்ளை வழக்கறிஞர் பட்டம்

பெற்றவர்கள். தமிழ்த் துறை அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட துறை. அரங்கநாதன் குடும்பம் சொத்து இழந்து நிற்கும் நிலையில் பரம்பரைச் சொத்தை விற்க உரிமை இல்லை என்ற அடிப்படையில் சீகாழி முன்சிப்கோர்ட்டில் வழக்கினைத் தொடுத்துச் சொத்தை மீட்டுத் தந்தார்கள் பிள்ளை.

வழக்கில் அரங்கநாதன், அவருடைய மூத்த அண்ணன் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாதிகள். நேர் மூத்த அண்ணன் பாண்டுரங்கன், அரங்கநாதனின் பெரிய தந்தைக்குப் பிள்ளை போனதால் அவரைச் சேர்க்கவில்லை. ஆனால், பாண்டுரங்கன் பிள்ளை போன இடத்தில் சொத்து மீட்பு முயற்சியில் முழு ஒத்துழைப்பு தராததால் தோல்வி அவருக்கு ஒன்றும் இல்லை. அரங்கநாதன் பேரிலும் கோபாலகிருஷ்ணன் பேரிலும் சொத்து கந்தசாமித் தம்பிரான் (அரங்கநாதன்) தன் பங்குச் சொத்தைப் பிரித்துப் பெற்றோருக்குத் தர எண்ணினார். குன்றக்குடிக்குப் போன பிறகு அவர்கள் நிம்மதியாக வாழ! அதேபோல் பாண்டு ரங்கனுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் எண்ணம், அரங்கநாதனின் மூத்த அண்ணன் அழைப்புகளுக்குச் செவி கொடுக்க வில்லை; வரவில்லை. ஆனால் வந்த செய்தி கோபாலகிருஷ்ணன், வழக்கறிஞர் உதவியை நாடிவிட்டார் என்பது. வழக்கறிஞர்கள் "இந்துச் சட்டப்படி சந்நியாசியாகப் போனவர்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமையில்லை" என்றனர்.

கந்தசாமித் தம்பிரான் அதிர்ச்சியடைந்தார். ஆனால், மனித இயல்களை, உறவுகளை இழந்துவரும் சொத்தினால் பயன் என்ன? இந்த நிலையில் கந்தசாமித் தம்பிரான் தொடர்ந்து முயற்சி செய்து நீண்ட விவாதத்துக்குப் பிறகு குடும்பச் சொத்து நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. இரண்டு பாகம் மூத்த அண்ணன் கோபாலகிருஷ்ணனுக்கு, ஒரு பாகம் பிறப்புரிமை, மற்றொரு பாகம் அதுவரையில் உழைத்துக் குடும்பத்தைப் பாதுகாத்ததற்காக! அரங்க

நாதனுக்கு ஒரு பாகம், பாண்டுரங்கனுக்கு ஒரு பாகம் என்று பிரித்துப் பத்திரம் எழுதப் பெற்றது! அரங்கநாதனுடைய பங்கு, பெற்றோர் பெயருக்குப் பத்திரம் எழுதிப் பதிவு செய்யப்பட்டது. பெற்றோருக்குப் பிறகு அவர்கள் விருப்பம் போல செய்து கொள்ளலாம் என்பது பத்திரத்தில் கண்ட விதிகள். இந்தப் பணிகள் முடிந்தது.

இந்தப் பொறுப்பை நிறைவேற்றியதன் மூலம் பெற்றோர் குன்றக்குடிக்கு வருவது தவிர்க்கப்படும் என்பது கந்தசாமித் தம்பிரானின் கருத்து. மனிதனுக்கு இயல்பாய் அமைந்த முதல் சுற்றம் ஈன்றெடுத்த தாய்வழி அமைவது. ஆனால், மனிதன் வளர்ந்து அன்பினால் மற்றவர்களையும் சுற்றமாக்கிக்கொண்டு வாழ்தல் வேண்டும். அன்பினால் அமைந்த சுற்றம் அறநிலையங்களைச் சார்ந்து அமைதல் முறை. ஈன்றவழிச் சுற்றத்துக்கு தடையில்லை எனினும், ஆக்கம் வழங்குதல் இல்லையென்பது ஆன்றோர் கண்ட மரபு.

பெற்றோர் மூத்த பிள்ளையிடத்திலேயே இருந்தனர். அவருக்கும் அவருடைய வாரிசுகளுக்கும் தங்கள் பங்கை எழுதிக்கொடுத்துவிட்டார்கள். இப்போது பெற்றோர் இல்லை. மூத்த சகோதரரும் இல்லை. அந்தக் குடும்பத்தை எடுத்து நிறுத்தும் முயற்சியில் அரங்கநாதனின் ஊக்கம் வரவேற்கப்படவும் இல்லை. இன்று அந்த குடும்பத்துக்கு அப்படி ஒரு வாய்ப்பு ஏதும் இல்லாது போனது ஒரு குறையே! அந்தக் குடும்பத்தில் உருவாக்கப்பட்ட அறக் கட்டளைப் பணிகள் அரங்கநாதன் விளையாட்டுப் பிள்ளையாக இருந்தபோது இருந்த நிலையே இன்றும்! தர்ம கர்த்தாக்கள் மாறுகிறார்கள். ஆனால், தர்மம் நடப்பதில்லை!

## 16

**கு**ன்றக்குடியில் 5-9-1949 அன்று காலை பத்து மணியளவில் கந்தசாமித் தம்பியாரன், ஸ்ரீமத் தெய்வ

சிகாமணி அருணாசலத் தேசிகர் என்ற தீட்சாநாமத்துடன் சின்னப்பட்டமானார். ஆதீன மடங்களின் மரபுப்படி, ஆதீனக் குருமுதல்வர் பெயர் முதற்பெயராகவும், தமது ஆசிரியர் வைக்கும் தீட்சாநாமம் இரண்டாவது பெயராகவும் நின்று விளங்கும்.

குன்றக்குடி ஆதீனம் திருவண்ணாமலையில் நிறுவப் பெற்றது திருவண்ணாமலை ஆதீனக் குருமுதல்வர், திருவண்ணாமலைத் திருக்கோயிலின் முதன்மைச் சிவாச் சாரியாராக இருந்த தெய்வசிகாமணி அவர்கள். இல்லறவாசி. ஆகமஞானம் கைவரப்பெற்றவர். காலப் போக்கில் இந்த ஆதீனம் சைவவேளாளர் கைக்கு மாறியிருக்கிறது. அந்தக் காலத்தில் சாதி உணர்வுகள் நெகிழ்ந்து கொடுப்பனவ்ாகவும் மாற்றத்துக்குரியனவாகவும் இருந்துள்ளன என்பது ஒரு சிறந்த உண்மை. காலம் செல்லச் செல்ல இந்தச் சமய நிறுவனங்கள் சாதிமுறையில் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை இழந்து விட்டன என்ற வருந்தத்தக்க உண்மையைச் சொல்ல, ஏற்க வெட்கப்பட வேண்டிய நிலை. மிகவும் பிற்காலத்தில்தான் குன்றக்குடி ஆதீனம் துறவு நெறிக்கு மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். குன்றக்குடி ஆதீனகர்த்தர் பூணூல் அணிய வேண்டும். நாள்தோறும் நித்யாக்கினி வளர்க்க வேண்டும். இந்த நடைமுறை இன்றும் இருக்கிறது.

திருவண்ணாமலைத் திருக்கோயில் சுவரில் குரு முதல்வர் திருமேனி, அண்ணாமலையாரை வணங்கிய நிலையில் இருக்கிறது. ஆதிகுருமுதல்வர் சகலாகமப் பண்டிதராக விளங்கிய அருணந்தி சிவாச்சாரியாரின் மாணாக்கர். வல்லாள மகாராஜாவுக்கும் ஆதிகுரு முதல்வருக்கும் தொடர்பு இருந்திருக்கிறது.

குன்றக்குடி ஆதீனத்தின் கிளை மடங்கள் தமிழ்நாடு முழுதும் பரவியுள்ளன. திருவண்ணாமலை ஆதீனச் சொத்துக்கள் செங்கற்பட்டு, சென்னை மாவட்டங்களில்

அக்காலத்தில் விழுதுவிட்டுத் தழைத்திருந்தன. ஆதீனகுரு முதல்வரின் ஜீவசமாதி திருவண்ணாமலை-வேட்டவலம் சாலையில் திருக்கோயிலாகக் கற்றளியாக அமைந்துள்ளது. ரமண மகரிஷி இந்த ஆதிகுருமுதல்வர் சந்நிதியில் பல ஆண்டுகள் தவம் செய்திருக்கின்றார். இன்றும் கண்கண்ட தெய்வமாக அருள்பாலித்து வருகிறார்.

கி.பி. 1680–1700 பட்டத்தில் இருத்தவர் நாகலிங்கத் தேசிகர். இவர் ராமேசுவரம் யாத்திரை வந்த இடத்தில் அப்போது ராமநாதபுரம் மன்னர் ரகுநாதசேதுபதி, குரு மூர்த்தியை இந்தப் பகுதியிலேயே தங்கியிருக்கும்படி கேட்டுக்கொண்டார். குருமூர்த்தி முற்றாக இசையவில்லை. ஆயினும், சேதுபதி மன்னர் வழங்கும் அறப்பணிக்காகத் தக்காரை வைத்து நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டார். அப்போதுதான் பிரான்மலை வகைத் திருக்கோயில்கள் ஐந்து பிரான்மலை (சதுர்வேதமங்கலம்), திருப்புத்தூர், குன்றக்குடி, திருக்கோளக்குடி, தேனாட்சியம்மன்கோயில் நிர்வாகம் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. தலைமையகம் பிரான்மலையில் அமைந்தது. தம்பிரான்களை வைத்துத் திருக்கோயில் நிர்வாகம் நடந்தது. பின், கி.பி. 1790–1800 ஆண்டுகளில் ஆதீனத் தலைமையகம் படிப்படியாகக் குன்றக்குடிக்கு மாறியது.

தமிழ்நாட்டின் திருக்கயிலாயப் பரம்பரை ஆதீனத் திருமடங்களில் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனமும் ஒன்று. செந்தமிழுக்கும் சிவாகம நெறிக்கும் தொண்டு செய்த ஆதீனம் இது. நல்ல நிர்வாகிகள் பலர் இருந்து ஆதீனத்தை வளர்த்து வந்துள்ளனர். ஆயினும், கி.பி. 1905–1928 ஆண்டளவில் வேண்டாத வம்புகளை விலைக்கு வாங்கியதாலும்; தியாகம்-தொண்டு என்பதற்குப் பதிலாக, மடாதிபதி என்பது ஒரு பதவி என்ற மனப்போக்கு வளர்ந்ததாலும் ஆதீனம் அல்லல்பட்டதை எண்ணி வருந்தாமலிருக்க முடியாது. இந்தச் சூழ்நிலையிலும் நல்ல நிர்வாகத் திறனும், சமூக மனப்பான்மையும், புலமையும்

உடைய ஆதீனகர்த்தர்களும் தம்பிரான்களும் இருந்தனர் என்பது நினைத்து மகிழ வேண்டிய ஒன்று.

மருது சகோதரர் (கி.பி. 1780–1801) காலம். குன்றக்குடி ஆதீனத்தில் சங்கரலிங்க முனிவர் என்ற தம்பிரான் இருந்தார், சங்கரலிங்க முனிவருக்கு மருது பாண்டியர் பாத காணிக்கையாக வைத்த-செம்பொற்காசுகளை ஏற்க மறுத்து, அதை வெள்ளையரோடு போராடப் பயன்படுத்திக் கொள்ளும்படி திருப்பித் தந்த பெருந்தகை அவர். ஆனால், மருது பாண்டியர் அந்தப் பொற்காசுகளைக் கொடுத்து ஒரு கிராமத்தை வாங்கி 'செம் பொன்மாறி' என்ற பெயர் வைத்து அறக்கட்டளை ஓலை எழுதி, குன்றக்குடி ஆதீனத்தின் குருமுதல்வராய் வருவோர் நலனுக்குரிய கட்டளைச் சொத்தாக அதை உரிமைப்படுத்தினர். சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புகொண்டு அதை ஊக்குவித்த பெருமை குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்துக்கும் உண்டு.

38-வது ஆதீனகர்த்தர் ஆறுமுகத் தேசிகர். இவர் காலத்தில் ஆதீனத்தில் சபாபதித் தம்பிரான் இருந்தார். இந்தத் தம்பிரானிடம் நிர்வாகப் பொறுப்பை விட்டிருந்தார் ஆதீனக்கர்த்தர். ஆதீனகர்த்தருக்கும் சபாபதித் தம்பிரானுக்கும் நிர்வாகத் துறையில் கருத்து மாறுபாடுகள் வந்ததுண்டு. ஆயினும், அவை புகையாமலும் எரியாமலும் ஆதீன நலனுக்காக இருவரும் காத்துக்கொண்டவர்கள். ஆதீன கர்த்தர் நல்ல தமிழறிஞர். பூஜை, வழிபாடுகளில் தம்பிரான் நல்ல உழைப்பாளி! ஆதீனத்தின் பொருளாதாரச் செழிப்புக்கு வழிகண்டவர். குன்றக்குடி ஆதீனத்தைப் பொறுத்தவரையில் சபாபதித் தம்பிரான் செய்த பணி மகத்தானது.

43-வது பட்டம் பொன்னம்பலத் தேசிகர். இந்த ஆதீனத்தின் மடாதிபதியாக வந்ததே ஒரு போராட்டத்தின்

வழிதான்! அவர் வாழ்க்கையில் தொடர்ந்து போராட்டம்! வாகீசம்பிள்ளை என்பவர் பொன்னம்பலத் தேசிகர் என்ற திருநாமத்துடன் பட்டத்துக்கு வந்தார். மடத்தில் ஓதுவாராகவும், நிர்வாகப் பணிப் பொறுப்பு முகவராகவும் இருந்தவர், இவர் நன்றாகத் திருமுறை பாடுவார். வீணை வாசிப்பார். இவருக்கு முந்திய மகாசந்நிதானம் அண்ணாமலைத் தேசிகர் பட்டத்தில் இருந்த காலத்தில் வட்டிக்கடைக்காரர்களிடம் சிக்கிக் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார். வட்டிக்குக் கடன் வாங்கினாலே வாழ்ந்தாற்போலத்தான்! அதனால் தான் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தன் பதவிக் காலத்தில் வட்டிக்கடைகளை அகற்றச் சட்டமியற்றினார்.

அந்தக் காலத்தில் சில பேரங்களை இழப்புக் கருதி வாகீசம் பிள்ளை மறுத்து வந்துள்ளார். இதனால் வட்டிக் கடை முதலாளிக்கும் வாகீசம் பிள்ளைக்கும் பகை மூண்டது. பகை வன்முறை அளவுக்குக்கூட வளர்ந்தது. அதனால் வாகீசம் பிள்ளை ஆத்தங்குடியில் ராம. கா. அரு. வள்ளியப்பச் செட்டியார் வீட்டில் சில நாட்கள் மறைவாக இருந்தார். இந்த வள்ளிப்பச் செட்டியார் பேரர் ஏ.ஆர். லட்சுமணன், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மைக் கல்லூரியில் இப்போது 'டீன்' ஆகப் பணி யாற்றி வருகிறார். இதற்கிடையில், அண்ணாமலைத் தேசிகர் தமக்கு அடுத்த வாரிசு நியமிக்க வேண்டிய கட்டாயச் சூழல் உருவாயிற்று. வட்டிக்கடை முதலாளி, சண்முகத் தம்பிரான் என்பவரை மடாதிபதி ஆக்க முயற்சி செய்தார். அதற்குரிய கைக்கூலிகளும் கிடைத்தனர். தனக்கு அனுசரணையாகக் குன்றக்குடி மகாசந்நிதானம் எண்ணம் கொள்ளத்தக்கவாறு அமைத்துக்கொள்ள, குன்றக்குடி மகாசந்நிதானத்தை யாரும் சந்திக்க முடியாதபடி தடை செய்து காவல் போட்டு விட்டார். திருமடத்துக்குள் யாரும் பிரவேசிக்க இயல வில்லை. முறை மன்ற ஆணை வேறு பெற்றுவிட்டார். எனவே, மடம்-போலீஸ் காவலில் இருந்தது.

குன்றக்குடி மகாசந்நிதானம், சண்முகத் தம்பிரானுக்குப் பட்டம் கட்ட விரும்பவில்லை. வாகீசம் பிள்ளைக்குக் காவி கொடுத்து, அவரையே தனது வாரிசாக-மடாதிபதியாக்க விரும்பினார். இந்தக் கருத்து உருவாக்கத்தில் பங்குபெற்றிருந்தவர்-குன்றக்குடித் திருக்கோயில் ஸ்தானிகம் து.அ. அண்ணாசாமி குருக்கள். இவர் துடிப்பு மிக்க இளைஞராக இருந்தபோது வாகீசம் பிள்ளையோடு பழக்கம்; நல்ல தோற்றமுடையவர்; புத்திசாலி. து.அ. அண்ணாசாமி குருக்கள், வாராப்பூர் சின்னக்கண்ணு சேர்வை, சிதம்பரம் பிள்ளை, அம்மாளம்மாள், பழனியாண்டி சேர்வை ஆகியோர் அடங்கிய குழு, வட்டிக்கடை முதலாளியின் கைக்கூலிகளை எதிர்த்து வாகீசம் பிள்ளையை மடாதிபதியாக்க முயற்சி செய்தது. இத்தனை பேரும் வெளிப்படையாக வட்டிக்கடை முதலாளியை எதிர்க்க வில்லை. சின்னக்கண்ணு சேர்வை மடத்துக் காவற்காரர். ஒரு காலகட்டத்தில், முதலாளியின் ஆட்கள் மடத்துக்குள் நுழைய முயன்ற போது அடித்து விரட்டிக் காயம்பட்டவர். பழனியாண்டி சேர்வை வாகீசம் பிள்ளையின் நண்பர். வாகீசம் பிள்ளையுடன் ஆத்தங்குடியில் இருந்தவர் அம்மாளம்மாள் காவல் துறையை "அசந்து" நிற்கும்படி செய்தவர்.

திட்டம் விரிவாயிற்று. குன்றக்குடி மடத்தின் கொல்லைப் புறத்தில் மடத்தையும், அண்ணாசாமி குருக்கள் வீட்டையும் பிரிப்பது ஒரு சுவர். அந்தச் சுவர் வழியாக இரவு நேரத்தில் வாகீசம் பிள்ளையை மடத்துக்குள் இறக்கிவிடுவது; நாவிதரையும் இறக்கிவிடுவது. யாருக்கும் தெரிவிக்காமல் வாகீசம் பிள்ளைக்கு இரவோடிரவாகப் பட்டம் கட்டி விடுவது என்பது முடிவு. திட்டமிட்டபடி எல்லாம் நிறை வேறின.

இப்படிப் பல போராட்டங்களுக்கிடையில் வந்த (வாகீசம்பிள்ளை) பொன்னம்பலத் தேசிகர், மடத்து

நிர்வாகத்தை நன்றாக நடத்தினார். வட்டிக்கடை முதலாளியிடம் ஈன ஒத்தியாக இருந்த சொத்துக்களை மீட்க வழக்குத் தொடுத்தார். வாகீசம் பிள்ளை என்ற பெயரில் இவர் நிர்வாகியாக இருந்த போது வைத்த ஒத்தி! அதனால், வட்டிக் கடைக்காரர் பிரமாணம் கேட்க மகாசந்நிதானத்தை நீதி மன்றத்துக்கு அழைத்தார், மடாதிபதி நீதிமன்றத்துக்கு வர மாட்டார் என்று கருதி! ஆனால், மடத்தின் நலம் கருதி நீதிமன்றத்துக்கும் போக பொன்னம்பலத் தேசிகர் ஒப்புக் கொண்டார். அப்போதுதான் மடாதிபதியின் பயண வசதி கருதி, முதன்முதலாக மடத்துக்கு ஒரு கார் வாங்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு மடாதிபதி வரப் போகிறார் என்பதை அறிந்தவுடன் வட்டிக்கடை முதலாளி சமாதானத்துக்கு முயன்றார். சமாதானம் கைகூடியது. 'பாதி சொத்துக்களை உடனடியாக ஆதீனம் வசம் ஒப்படைக்க வேண்டும். மீதியை இருபத்தைந்து ஆண்டுகளில் ஆதீனத்தில் ஒப்படைக்க வேண்டும்' என்று முடிவானது. இந்தச் சொத்துக்களை நாம் வந்துதான் மீட்டோம்.

பொன்னம்பலத் தேசிகருக்குப் பின் ஆறுமுகத் தேசிகர் பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில், இருந்த சொத்துக்கள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் பராமரிக்கப் பெற்றன. படு சிக்கனம்! இவர்கள்தான் நம்முடைய ஞானாசிரியர்; குரு மூர்த்தி.

## 17

**நா**ம் சின்னப்பட்டம் ஆனதும் திருமடத்தின் மாடியில் இருப்பு. யாதொரு பணியும் இல்லை. ஆதலால், நிறையப் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. குன்றக்குடி து.ச. துரைசாமி குருக்கள் சாத்திரம், ஆகமங்களில் போதிய பயிற்சியுடையவர். இவரிடம் நாம் வடமொழி படித்துக்கொண்டோம்.

திருக்குறள் வகுப்புத் தொடங்கினோம். வாரத்தில் ஒரு நாள் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் மடத்தில்

கு.XVI_11

திருக்குறள் வகுப்பு நடத்தினோம். இந்த வகுப்பில் பத்து மாணவர்கள் படித்தனர். மாணவர்கள் என்று கூறுவது தவறு. நல்ல தகுதி வாய்ந்த பத்துப் பேர் படித்தனர். அவர்களுள் ஆத்தன்குடி கா.அரு.கா. காடப்ப செட்டியார் ஒருவர். இவர் நல்ல இலக்கியப் பிரியர்; இலக்கியத்தை அனுபவிப்பவர்; அழகுப் பிரியர்; எதையும் நன்றாகச் செய்பவர். இவர் அன்று முதல் இன்று வரை நமக்கு மிகவும் நெருங்கிய உழுவலன்பராக விளங்கி வருகிறார். அவர்தம் பிள்ளைகளும் அப்படியே! அடுத்து பலவான்குடி கும. சுப்பிரமணியன் செட்டியார் ஒருவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம்.ஏ. படித்துத் தேறியவர். இவர் தகப்பனார் குமரப்ப செட்டியார் நமது உழுவலன்பர். இவரும் இவருடைய குடும்பத்தினரும் நமக்கு மிகவும் வேண்டியவர்கள். அடுத்து, குன்றக்குடியில் இருந்த கு.மு. வீராசாமி என்பவர். இவர் நல்ல மனிதர். நாவிதர் ரா. சுப்புராமன், இன்னும் பலர்.

திருக்குறள் வகுப்பைத் தொடர்ந்து திருமுறை வகுப்பு தொடங்கப் பெற்றது. புலவர் தா. குருசாமி, புலவர் வை.சு. தண்டபாணி ஆகியோர் ஆசிரியர்கள். ஒவ்வொரு வகுப்பிலும் பத்துப் பத்துப் பேர் பயின்றனர்.

இடையிடையே சதுரப் பாட்டின் வழி அணுகி மகா சந்நிதானத்திடம் உத்தரவு பெற்று வெளியில் சொற்பொழிவு களுக்கும் சென்று வந்து கொண்டிருந்தோம்.

அந்தச் சொற்பொழிவுகளில் கவனத்துக்குரியன ஐந்து. முதலாவது மதுரை தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவு. தலைப்பு; 'தண்பாண்டி நாட்டில் தமிழ்' என்பது. அப்போது தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சீனிவாச ஐயங்கார். நல்ல வண்ணம் பேச்சு அமைந்ததாக அறிஞர்கள் பாராட்டி மகிழ் வித்தனர். இரண்டாவது திருப்புத்தூரில் வழக்கறிஞராகவும் கூட்டுறவாளராகவும் சமையத்தொண்டராகவும் பணி செய்து சிறப்புற்று விளங்கிய அ. ராமச்சந்திரன் பிள்ளை, ராம நாதபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணி

செய்ததற்காக நடந்த பாராட்டு விழா! இந்த மேடை மடத்தின் பகுதியில் அமைந்தது. கிராமங்களில் அறிமுக மாகத் துணை செய்தது. மூன்றாவது, காரைக்குடி கம்பன் விழா-நாட்டரசன் கோட்டையில் நடந்த நிகழ்ச்சியில் 'புதரிடை மலர்' என்ற தலைப்பில் திரிசடையைப் பற்றிய பேச்சு, நான்காவது ராமநாதபுரத்தில் நடந்த சைவசித்தாந்த சமாஜ மாநாட்டில் இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை யேற்று நிகழ்த்திய உரை.

ஐந்தாவது, கூத்தலூர் கிறித்துவ தேவாலயத்தில் நடந்த 'கடவுள் தின' விழாப் பேச்சு. இந்த விழாவை அப்போதைய கூத்தலூர் பங்குத் தந்தை அருள்மிகு பால்ராஜ் ஏற்பாடு செய்தார். இந்த விழாவில் திருச்சி ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சீனிவாசன் கலந்து கொண்டு பேசினார். நாம் தலைமை. நமது தலைமையுரையில் ரோமன் ரோலண்டு, அண்ணல் காந்தியடிகளைப் பாராட்டிய மொழிகளை-அதாவது 'நான் இயேசுவை நினைக்கும்போது காந்தியடிகளை நினைக்கிறேன்' என்று சொன்ன வாசகத்தை எடுத்துக் காட்டிப் பேசினோம். இயேசுவை, காந்தியடிகளுடன் ஒப்பிட்டது பேராசிரியர் சீனி வாசனுக்குப் பிடிக்கவில்லை. மறுத்துப் பேசினார். மறுத்துப் பேசியதுடன் இந்து சமயக் கோட்பாடுகளைக் குறைத்தும் பேசினார். நமது நிலை இடர்பாட்டுக்குரியதாயிற்று. நாம் முடிவுரையில் வன்மையாக மறுத்துப் பேசினோம். இளமைக் காலம். ஆதலால் ஆவேசமான பேச்சு! அதோடு சைவத்தின் மேல் உள்ள ஈடுபாட்டினால் அழுதுவிட்டோம்! அவையில் இருந்த இந்து மக்களிடம் நமது பேச்சுக்கு நல்ல வரவேற்பு! நிகழ்ச்சி முடிந்ததும் பயணமானோம்! விழா அமைப் பாளர்கள் மாலையிலும் இருக்கும்படி கேட்டுக்கொண் டார்கள். முதலில் இருந்த திட்டமும் அதுதான்! நாம் ஒரு தோட்டத்தில் தங்கியிருந்ததோம்! இந்து மக்கள் சாரை சாரையாக வந்து பாராட்டியும் வணங்கியும் திருநீறு பெற்றும் சென்றனர். இது ஒரு நல்ல அறிமுகமாயிற்று.

மாலை 3.30 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கவேண்டும். மதியம் 2 மணிக்கு எதிர்பாராமல் பெரும் மழை பெய்யத் தொடங்கியது. மாலை நிகழ்ச்சி நடத்த இயலவில்லை. மக்கள் மத்தியில் "அடிகளார் மனத்தைத் துன்புறுத்திவிட்டனர். பாவம்.... அழுதார்! அதனால் கூட்டம் நடத்த திருவருள் அனுமதிக்கவில்லை" என்று பரவலாகப் பேசிக்கொண்டனர். ஆனால், இது உண்மையல்ல, விழாவை நடத்திய பங்குத் தந்தை மற்றும் கிறித்துவப் பெரியார்கள் பேராசிரியர் சீனிவாசனின் பேச்சை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, நம்மிடம் தங்களுடைய நல்லெண்ணங்களைப் பரிமாறிக் கொண்டனர். சொல்லப்போனால் அன்றுதான் கிறித் துவத்தைப் பற்றிய மதிப்பீடு நம் வாழ்க்கையில் தொடங்கியது. சமய சமரச உணர்வுகளுக்குக் கால்கோள் செய்ததே கூத்தலூர் விழாதான்.

'ஓர் ஆட்சிக்கு பின்வரும் ஆட்சிக்கும் உள்ள இடை வெளி அவ்வளவு சிறப்பாக அமையாது' என்று இலக்கியங்கள் கூறும். ஆதீனங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அதுவும் பெரிய பட்டம் சின்னப் பட்டம் என்ற அமைப்பின் ஆயுள் நீடிப்பது நல்லதல்ல நாம் 33 மாதம் சின்னப் பட்டமாக இருந்தோம். முதல் ஆறு மாதங்கள் சிக்கலின்றி ஓடியது. மெள்ள மெள்ள வாடகைதாரர்கள். குத்தகைதாரர்கள் நம்மைப் பார்க்கத் தலைப்பட்டனர். இது ஆதீனம், திருக்கோயில் அலுவலகங்களில் வேலை பார்த்தவர்களுக்குப் பிடிக்க வில்லை; ஏன்? எதனால் உய்த்துணர்க!.

நமது நாட்டில் கையூட்டு (லஞ்சம்) தோன்றிப் பலநூறு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. அது சிரஞ்சீவித்தன்மை வரமும் பெற்றிருக்கும் போலும்! இந்தத் தலைமுறையில் நாம் செய்திருப்பதெல்லாம் கையூட்டை (லஞ்சத்தை) தேசிய மயமாக்கி இருப்பதுதான்! மாமூல் பாதிக்கும் என்று அஞ்சியவர்கள் கோள் சொல்ல ஆரம்பித்தார்கள். 1950-தைப் பூசம்! திருவண்ணாமலை சமயச் சொற்பொழிவுக்கு நாம்

சென்றிருந்தோம்! புகை வண்டிப் பயணம். பேசிமுடித்து விட்டு அன்று இரவே பயணமாகி காரைக்குடிக்கு வந்து சேர்ந்தோம். ஆதீன மடத்துக் கார் வரவில்லை, அலுவலகத்தைச் சேர்ந்த எழுத்தர் சா. சொக்கலிங்கம் என்பவர் மட்டும் வந்திருந்தார். இவரும் ஆதீனச் சார்பிலோ மகாசந்நிதானத்தின் உத்தரவுப்படியோ வரவில்லை. இவர் நம்மால் பணியில் சேர்க்கப் பெற்றவர். அந்த நன்றி உணர்வில் வந்திருந்தார். இவர் நம்பால் நல்லன்பு கொண்டவர். இவர் இப்போது ஆதீன அலுவலகத்தில் வருவாய்த் துறைப் பொறுப்பாளராகப் பணி செய்கிறார். பணி செய்வதில் ஒழுங்கும் கட்டுப்பாடும் உடையவர்.

ஒரு வாடகைக் காரை அமர்த்திக் கொண்டு இருவரும் குன்றக்குடி வந்தோம். காரில் இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. மௌனமே! குன்றக்குடி வந்தவுடன் பூஜை மடத்தில் வழிபாடு நிகழவில்லை என்பதை அறிந்து, வழக்கம் போல் நாம் வழிபாட்டுக்குச் சென்றோம். வழிபாடு முடிந்தவுடன் சொக்கலிங்கத்தை தனிமையில் அழைத்து, "என்ன நடந்தது?" என்று கேட்டோம்! சா. சொக்கலிங்கம், "மகா சந்நிதானத்துக்குக் கோபம் வந்திருக்கிறது. செட்டில் மெண்ட்டை ரத்து செய்ய மதுரை சென்றிருக்கிறார்கள்" என்று சொன்னார். இந்தச் செய்தி நம்மைப் பாதிக்கவில்லை. இந்த உலகத்தில் இன்பம் மட்டுமா உண்டு? துன்பமும் உண்டு! இனிமையும் உண்டு! கசப்பும் உண்டு! இனிமையையும் கசப்பையும் சேர்த்து விழுங்குவதுதான் ஒழுக்கம். முதல் நாள் இரவு கண்விழிப்பு. ஆதலால் தூங்கச் சென்றுவிட்டோம். நிம்மதியாகத் தூங்கினோம்! மாலைப் பொழுதாகி விட்டது. மகாசந்நிதானம் மதுரையிலிருந்து வரவில்லை. இரவு எட்டு மணிக்குத்தான் வந்தார்கள். ஆதீனமடம் வழக்கம்போல் இருந்தது. நாம் தங்கியிருந்த அறைக் கதவை இரவு பத்து மணிக்கு ஆதீனத்தின் உயர் அலுவலர் வி. கிருஷ்ணன் தட்டினார்.

## 18

இரவு பத்து மணிக்கு நம்மை நாடி வந்த ஆதீனத்தின் உயர் அலுவலர் வி. கிருஷ்ணன் ஏதோ சொல்ல நினைத்துச் சொல்ல முடியாமல் தவித்தார். நாம் அவருக்கு ஆறுதலும் தைரியமும் கொடுத்துக் கேட்டோம்!

மகாசந்நிதானத்திடம் சில அலுவலர்கள், சின்னப் பட்டமாக இருக்கும்போதே அதிகாரத்தைப் பெற நாம் முயற்சி செய்வதாகவும் மகாசந்நிதானத்தை யாரும் பார்க்கக் கூடாது என்று உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்ன தாகவும் அதை நம்பி மகாசந்நிதானம் கோபத்தில் செட்டில் மெண்டை ரத்துசெய்ய மதுரை வழக்கறிஞர் சீனிவாச ஐயங்காரிடம் சென்றதாகவும், ஆனால், சீனிவாச ஐயங்கார் நிறைய எடுத்துக்கூறி செட்டில்மெண்டை ரத்து செய்யும் ஆலோசனையைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டதாகவும் கூறினார் வி. கிருஷ்ணன்.

"அதன்பின் திருப்புத்தூருக்கு வந்து வழக்கறிஞர் ராமசந்திரன் பிள்ளையிடமும் ஆலோசனை கேட்டார்" என்றார். ராமச்சந்திரன் பிள்ளை நல்ல வழக்கறிஞர். திருப் புத்தூரில் வாரவழிபாடு நடத்தியவர். ஆதி திராவிடர்களுக்கு ராஜாஜி பெயரில் ஒரு விடுதியும் நடத்தியவர். இப்போது இவர் அமர நிலை. இவரது அருமை மகன் ரத்தினசாமி, மாவட்ட உரிமையியல் மன்ற நடுவராகப் பணி செய்து வருகிறார். "வழக்கறிஞர் ராமச்சந்திரன் பிள்ளையும் செட்டில்மெண்டை ரத்துசெய்யும் யோசனையை வரவேற் காமல் நிறைய எடுத்துக்கூறி அனுப்பி விட்டார்" என்ற செய்தியையும் வி. கிருஷ்ணன் கூறினார்.

"சரி... போங்கள்!" என்று கூறி வி. கிருஷ்ணனை அனுப்பிவிட்டு மீண்டும் தூங்கினோம். நமது மனதில் எந்தச் சலனமும் இல்லை.

மறுநாள் காலை வழக்கம்போல் பூஜைமடத்தில் வழிபாடு செய்துவிட்டு, மகாசந்நிதானத்திடம் திருநீறு பிரசாதம் கொடுக்கச் சென்றோம்! தந்தோம்! மகாசந்நிதானம் வாங்கிக்கொண்டார்கள். நமக்குத் திருநீறும் தந்தார். ஆனால், முகத்தோடு முகம் பார்க்க இயலவில்லை. சிரித்து நோக்கும் பார்வை கிடைக்கவில்லை. இப்படிச் சில நாட்கள் ஓடின. இடையில் சா. சொக்கலிங்கம் ஒரு தவறு செய்து விட்டார். அதாவது, இந்தப் பிணக்குச் செய்தியை தருமபுரம் ஆதீனத்துக்கு எழுதி விட்டார். அங்கிருந்து ஒரு அலுவலர் வந்தார்... நம்மை விசாரித்தார். நாம் "ஒன்றும் இல்லை. எல்லாம் நன்றாக நடக்கிறது" என்று கூறி அனுப்பி விட்டோம்.

குன்றக்குடிக்கு வந்து தொழும்பா இருப்பதாக முடிவு செய்தபிறகு தருமபுர ஆதீனத்துக்குச் சொல்வதும் பரிகாரம் தேடுவதும் மரபன்று, கண்ணகி சொன்ன 'பீடன்று' என்பது இல்வாழ்க்கைக்கு மட்டும் அல்ல. துறவறத்துக்கும் பொருந்தும் அல்லவா!

சில நாட்கள் ஓடின. வழக்கம்போல் நாம் மகா சந்நிதானத்துக்கு மாலை நேரத்தில் விசிறிக்கொண்டிருந் தோம். செவ்வி பார்த்து, செய்த பிழை யாதென அறிய மகாசந்நிதானத்திடம் விண்ணப்பித்துக் கொண்டோம். உடனே மகாசந்நிதானம் தக்கன் வேள்வித் தீயென, "நீங்கள் தான் அதிகாரத்தைப் பறிக்கச் சூழ்ச்சி செய்கிறீர்களே! நான் மரணமடைய மந்திரம் செய்கிறீர்களாமே?" என்றார், உடனே நாம் விசிறியைக் கீழே வைத்துவிட்டு மகாசந்நிதானத்தின் முன்வந்து நிலத்தின் மிசை வீழ்ந்து வணங்கி "இப்பிறப்பில் ஏதும் பிழை செய்யவில்லை. வலிந்து அழைத்தும் பட்டமேற்க மறுத்த எனக்கு அதிகார ஆசையா? ஒருபொழுதும் இருந்த தில்லை. இனிமேலும் வராது. மகாசந்நிதானம் உண்மை தெரியவேண்டும்!" என்று கூறி வேண்டிக்கொண்டு திரும்பத் திரும்ப வீழ்ந்து வணங்கினோம்.

அருகில் நின்ற ஏவலர் சின்னச்சாமி பிள்ளையிடம் சில அலுவலர்களை அழைத்து வரும்படி உத்தரவு செய்தார். அவர்களும் வந்தனர். ஒவ்வொருவரும் 'அவர் சொன்னார்! இவர் சொன்னார்!' என்றார்களே தவிர, நிரூபணம் செய்ய வில்லை. மகாசந்நிதானம் மிகவும் வருத்தப்பட்டார். நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொண்டார். கோள் சொல்லிய இருவரை உடனே பணியிலிருந்து நிறுத்தினார். நாம் பரிந்துரை செய்து... திரும்ப அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டனர்.

மகாசந்நிதானத்துக்கு உண்மை அறியப்போதிய வாய்ப்பில்லை, முதுமை, அதோடு பணம் கிடைத்தால் சரி... பல பொருட்கள் பயனற்றவை விற்பனையாயின. ஒருநாள் 'குன்றக்குடிக் கீழ்க்கோயிலில் பாத்திரங்கள் விற்க எடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் சிலர்' என்ற செய்தி கிடைத்தது. உடனே நாம் மடத்து முகுப்பு வழியாகப் புறப் பட்டுப் பக்கத்திலுள்ள சரவணப்பொய்கைச் சந்து வழியாகக் கீழ்க்கோயிலுக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றோம். பாத்திரங்களை எடை போட்டுக் கொண்டிருந்தனர். எல்லாம் புதுப் பாத்திரங்கள்! நாம் கடுமையாகப் பேசிவிட்டு. பாத்திரங்களை அறைக்குள் அள்ளிப் போட்டுப் பூட்டினோம். இதுபற்றி அன்றுமாலை மகாசந்நிதானத்திடம் விண்ணப்பித்துக் கொண்டோம்! பாத்திரங்கள் மகா சந்நிதானத்தின் முன் கொண்டுவந்து பரப்பப்பட்டன.

## 19

மகாசந்நிதானம், வந்து பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் பார்த்தார்கள். எல்லாம் புதியனவாக அல்லவா உள்ளன! பழையவை ஒன்றுக்கும் ஆகாதவை என்றல்லவா கூறினார்கள் என்று வருத்தப்பட்டார்கள். இதற்குக் காரணமாக இருந்த அலுவலரைக் கடிந்து கொண்டார்கள்.

*இந்த நிகழ்ச்சிக்குப் பின் 1951 ஜூன், ஜூலைகளில் மகாசந்நிதானத்தின் திருமேனி நலம் குன்றியது. மருத்துவ மனையில் வைத்து மருத்துவம் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. திருப்புத்தூரில் உள்ள ஸ்வீடிஷ் மருத்துவமனை புகழ்பெற்ற மருத்துவமனை. இந்த மருத்துவமனை அமைந்து இன்றைக்கு ஏறத்தாழ 80 ஆண்டுகளாகச் சிறந்த முறையில் மருத்துவப் பணியாற்றி வருகிறது. இந்த மருத்துவமனை தோன்றிய காலந்தொட்டு குன்றக்குடி ஆதீனத்துடன் தொடர்புடையதாக இருந்து வந்திருக்கிறது. இந்த மருத்துவ மனையிலேயே மருத்துவம் பெற்றுக்கொள்ள மகாசந்நிதானம் விரும்பினார்கள்.*

*மருத்துவமனையில் வைத்துப் பார்ப்பது என்ற கருத்து உருவானவுடன் ஆதீன உயர் அலுவலர்களின் ஆலோசனை நடந்தது! எதற்காக...? மகாசந்நிதானத்தை மருத்துவமனையில் கவனித்துக்கொள்ள யார் யாரை அனுப்பலாம் என்பதற் காக! இதற்கு அலுவலர் ஒருவரும் பணிவிடைத் தொண்டர்* (Care Taker) *ஒருவரும் தேவை. அலுவரைாக வி. கிருஷ்ணன் என்பவரை அனுப்புவதென்று முடிவாயிற்று. பணிவிடைத் தொண்டுக்கு யாரை அனுப்புவதென்று கேள்வி பிறந்தது! அப்போதைய தலைமை எழுத்தர் ராமசாமி ஐயர் என்பவர், "சித. பேச்சிமுத்தனை அனுப்பலாம் என்றார். சித. பேச்சி முத்தன் நமக்கு அறிமுகமாகாதவர். குன்றக்குடித் திருக் கோயில் வழிவழி மரபு வயிராவி நிர்வாகம் பார்த்து வரும் தலைமுறையைச் சேர்ந்தவர்; திருவாபரணங்கள் பொறுப்பாளர்; நல்ல தோற்றமுள்ளவர். தூய்மைப்பொலிவு, அடக்கம், பணிவு என்றெல்லாம் எடுப்பிலேயே புலப்படுத்தி னார். நாம் சித. பேச்சிமுத்தனிடம் மகாசந்நிதானத்தைக் கவனமாக பார்த்துக் கொள்வாயா?" என்று கேட்டோம். "உத்தரவு" என்று கூறி நம்முன் வீழ்ந்து வணங்கினார்.*

*மருத்துவமனையில் மகாசந்நிதானம் சேர்ந்து விட்டார்கள். ஆதீன நிர்வாகம் மருத்துவமனையிலேயே*

நடக்கிறது. நாம், மகாசந்நிதானத்தின் அழைப்பின் பேரிலும், தன் விருப்ப அடிப்படையிலும் மருத்துவமனைக்கு அடிக்கடி சென்று பார்த்து வந்தோம். பலநாட்கள் உருண்டோடி விட்டன.

ஒரு நாள் இரவு எட்டு மணியளவில் மகாசந்நிதானத்துக்கு மயக்கம் வந்திருக்கிறது. "இது ஆபத்தான அறிகுறி. ஆயினும் முயற்சி செய்கிறோம்" என்று தலைமை மருத்துவர் ஆள்மூலம் குன்றக்குடியில் இருந்த நமக்குச் சொல்லியனுப்புகிறார். அப்போது தொலைபேசி வசதி ஆதீனத்தில் இல்லை. உடன் மகாசந்நிதானத்தைக் காண விரும்பினோம். ஆதீனத்து கார் திருப்புத்தூர் மருத்துவ மனையிலேயே நிற்கிறது. அதைக் கேட்டுப் பெற அச்சம்! அதுமட்டுமல்ல, இனிமேல் கார் வருவித்தும் போவதில் காலதாமதமும் ஆகும். வாடகைக்கு கார் எடுக்கவும் இயலாத நிலை. அதாவது நம் கையில் பணமில்லை. இந்நிலையில் அலுவலக ஏவலர் நடேசன் என்பவரின் உதவி கிடைத்தது.

நடேசன் நல்ல விசுவாசமான உறுதியான ஏவலர், அவர் மகன் ந. பழனிச்சாமி. பழனிச்சாமி மகன் பாண்டித்துரை. இவர்கள் இருவரும் இப்போது நம்மிடம் பணிசெய்து வருகின்றனர். பழனிச்சாமி படுகோபி. ஆயினும் நிறுவனப் பற்றுடையவர். பாண்டித்துரை அவர் தாத்தா போல வெகுளியல்ல; தந்தை போல படுகோபியும் அல்ல. நல்ல பிள்ளை. வளர்ந்து வருகிறார். குன்றக்குடி சண்முகநாதன் அச்சகம் இவர் நிர்வாகத்தில்தான் இருக்கிறது. 'அறிக அறிவியல்' இதழை அச்சிட்டு வருபவரும் இவரே.

நடேசனும் நாமும் ஆளுக்கு ஒரு சைக்கிள் எடுத்துக் கொண்டு திருப்புத்தூர் மருத்துவமனைக்குக் குன்றக்குடியிலிருந்து பயணமானோம்!. நாங்களிருவரும் மருத்துவ மனைக்குச் சென்றடையும் நேரத்தில் மகாசந்நிதானம் மயக்கம் தெளிந்து உணர்வுடன் இருந்தார்கள் நலம் விசாரித்தறிந்த பிறகு மகாசந்நிதானம் "எப்படி வந்தீர்கள்?"

என்று கேட்டார்கள். "சைக்கிளில்" என்றார் ஏவலர் நடேசன். மகா சந்நிதானம் மிகவும் வருந்தினார்கள்; சலுகைக் கோபத்தையும் காட்டினார்கள். காரை எடுத்துக் கொண்டு போகும்படியும், கார் குன்றக்குடியிலேயே இருக்கட்டும் என்றும் உத்தரவு போட்டார்கள். அதோடு "காரை அநாவசியமாக எடுக்க வேண்டாம்; பிரசங்கத்துக்கெல்லாம் போக வேண்டாம்" என்றும் சொன்னார்கள். அந்த உத்தரவைப் பின்பற்றினோம்.

மகாசந்நிதானத்துக்குக் குணமாகவில்லை. எனவே, மடத்துக்கு அழைத்து வரப்பட்டார்கள். குன்றக்குடிக்கு வந்தவுடன் மகாசந்நிதானம் மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை சுழற்சி முறையில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப் பெற்றது. தருமபுர ஆதீனம் கச்சேரியில் நாம் அரங்கநாதனாக வேலை பார்த்த காலத்தில் தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம், திருமேனி நலம் குன்றியிருந்தார்கள். அதுபோது இவ்வாறான சுழற்சி முறைதான் அனுசரிக்கப் பெற்றது. அந்தச் சுழற்சி முறைப்பணியில் அரங்கநாதனைச் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். ஆனாலும் அன்று அரங்க நாதன் போராடி அந்த உரிமையைக் கேட்டு வாங்கினான். ஆனால், இங்கு ஆர்வத்தோடு சிலர்தான் வந்தனர். ஆயினும் வழங்கிய பணியை எல்லோரும் ஏற்றுக்கொண்டு செய்தனர். நாட்கள் மாதங்களாகி உருண்டோடிக்கொண்டிருந்தன.

இந்த நிலையில் சேலம் குகையில் உள்ள திருக்குறட் கழகப் பொன்விழா நிகழ்ச்சிக்கு நாம் அழைக்கப் பெற்றிருந் தோம்! திருக்குறள் ஆர்வம்; பொன்விழாவில் பங்குகொள்ள விருப்பம். ஆனால், மகாசந்நிதானத்தின் திருமேனி நிலை. இந்த இரண்டையும் எண்ணி அறச்சங்கட நிலையில் தவித்தோம்! நோய்வாய்ப் பட்டுப் பல திங்கள் படுத்தாலே சுற்றிலும் இருப்பவர்களுக்கு உள்ள சிரத்தை குறையும். பொன்விழாவில் கலந்துகொள்ளும் ஆர்வமே நமக்குத் தலைதூக்கியது! ஆயினும் மகாசந்நிதானத்தின் உத்தரவு

பெறத் துணிவில்லை! மனச்சங்கடம். ஆதலால், உத்தரவு பெறாமலே சேலம் பயணம். காரை மடத்தை விட்டுச் சிறிது தூரம் தள்ளிக் கொண்டு போய்த்தான் ஓடச் செய்தோம்!

தார்மீகப் பொறுப்பைவிட மேடை விருப்பம் வெற்றி பெற்றுவிட்டது இது தவறுதான்! ஆயினும் ஒரே நிலை நீடித்ததால் வந்த எதிர் விளைவு! ஆயினும், தார்மீகப் பொறுப்பு வெற்றி பெறுவது தள்ளப்படவில்லை.

சேலம் குகையில் திருக்குறட் கழகப் பொன்விழா... முதல் நாள் நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது. அன்று நமது தலைமை. மூன்று மணி நேரத்துக்கு மேல் பேசினோம்! பேச்சுக்கு வரவேற்பு இருந்தது! நிகழ்ச்சி இரவு பத்து மணிக்கு முடிந்தது. உடனே நெஞ்சத்தில் ஓர் ஐயுறவு; துணுக்கம்! இசைவு கொடுத்தபடி மூன்று நாள் தங்க மனம் ஒருப் படவில்லை! அறச்சங்கடம் நிறைந்த சூழ்நிலையில் இரவு பதினோரு மணிக்குக் குன்றக்குடிக்குப் பயணம். அப்போது, பிச்சைராவ் என்பவர் டிரைவராக இருந்தார். நன்றாகக் கார் ஓட்டுவார். பல ஆண்டுகள் நம்மிடம் பணி செய்தார். நம்மிடம் மட்டுமே பணி செய்தார். அவருக்கு ஒரே மகன். பெயர் ஆறுகமுகம். இவர் திருமணத்துக்குப் பிறகு தந்தை வீட்டிலேயே தங்கி விட்டார். இன்று குன்றக்குடி நேருஜீ பாலிதீன் கூட்டுறவுத் தொழிற் சாலையின் முன்னோடித் தொழிலாளியாகவும் நிர்வாகக்குழுத் தலைவராகவும் ஆறுமுகம் பணி செய்து வருகிறார். இவருக்கு நிர்வாக அறிவில் வளர்ச்சி இருக்கிறது. ஆறுமுகத்தின் மகன்– பிச்சை ராவ் பேரன் கி. சிங்காரவடிவேல் வளரும் இளைஞன். இவர் நம்மிடத்தில் பணி செய்கிறார்; கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர். இவரிடம் நாமும் குன்றக்குடியும் எதிர்பார்ப்பது நிறைய என்பதை அவர் அறிதல் வேண்டும்.

விடியற்காலை நாலரை மணி, மகாசந்நிதானத்தைக் காணச் சென்றோம். நல்ல நித்திரை. சித. பேச்சிமுத்தன் அருகில் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவரைத்

தனியே அழைத்து, "விசாரித்தார்களா?" என்று கேட்டோம்! அவர் கூறிய "இல்லை" என்ற பதில் மூச்சுவிடத் துணை செய்தது.

நீண்ட நெடுநாட்களாகக் காலை மூன்று மணி முதல் பணி தொடங்கிச் செய்வது நமது வழக்கம். எனவே, மடத்தின் தளத்துக்கு வ்ந்து ஒய்வு நாற்காலியில் சற்று நேரம் ஓய்வு எடுத்தோம். பின்பு நீராடிவிட்டுப் பூஜை மடத்தில் பூஜை முடித்து வந்தோம். அப்போது மகாசந்நிதானம் அழைப்பதாக சித. பேச்சிமுத்தன் வந்து அழைத்தார். உடனே விரைந்து சென்று அணுகியபோது சரியான சூழல் இல்லை! பருகுவதற்கு ஹார்லிக்ஸ் கொடுத்தோம். உணர்வு திரும்பியது. அருகில் இருக்கச் சொன்னார்கள். கையைத் தூக்கி வாழ்த்தி னார்கள். "நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்; நமது மடம் கஷ்டப்பட்டது; சிக்கனமாக இருக்கவேண்டும்!" என்றார்கள்! பரிபூரணம் அடைந்துவிட்டார்கள்!

மகாசந்நிதானம் அழைத்த நேரத்தில் இருந்தது, திரு வருட்செயல்! அடிமனத்தின் ஆழத்தில் இருந்த தார்மீகப் பொறுப்பு உணர்வின் வெற்றி! உழுவலன்பு தந்த பயன்!

## 20

**நா**ம் சின்னப் பட்டமாக இருக்கும் போது குன்றக் குடியில் தமிழ் விழா ஒன்று மகாசந்நிதானத்தின் இசைவு பெற்றே நடந்தது. தமிழ் விழா என்றால் சாதாரண விழா அல்ல. அது ஒரு பெரிய விழா. செட்டிநாட்டரசர் மு.அ. முத்தையா செட்டியார் அவர்கள் விழாவுக்குத் தலைமை. செட்டிநாட்டு அரசரின் – அந்தக் குடும்பத்தினரின் வண்மை நிறைந்த அரண் ஆதீனத்துக்கு. என்றும் தேவை என்ற அடிப் படையில் செட்டிநாட்டரசர் விழாவுக்கு அழைக்கப் பட்டார். செட்டிநாட்டரசர் மு.அ. முத்தையா செட்டியார் நம் மீதும் நமது ஆதீனத்தின் மீதும் தனிக் கவனம் செலுத்தி

வந்தார். இன்றும் அவர் அருமைப் புதல்வர் டாக்டர் மு.அ. ராமசாமி, தன் தந்தையார் போலவே இருந்துவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தி.

செட்டிநாட்டரசர் தலைமையில் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாருக்குப் பாராட்டு விழா. பண்டிதமணி வடமொழியிலும் தென் தமிழிலும் சிறந்த அறிஞர். சுக்கிர நீதியை மொழி பெயர்த்துத் தந்தவர், திருவாசகத்துக்கு 'கதிர்மணி விளக்கம்' என்ற பேருரை எழுதியவர். அடுத்து ரசிகமணி டி. கே. சி. க்குப் பாராட்டு விழா. டி. கே. சி.யைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? கம்பன் பாடல்களையும் காரைக்கால் அம்மையார் பாடல்களையும் அனுபவித்துப் பாடுவார். அடுத்து-தேவகோட்டை உ. ராம மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியாருக்கும் பாராட்டு விழா. மெய்யப்ப செட்டியார் நம்மோடு உடனிருந்த ஒரு புரவலர் என்றே கூறலாம்; அவ்வளவு பரிவு; கனிந்த அன்பு.

தமிழ் விழா மிகச் சிறப்பாக நடந்தது. அதற்குப் பிறகு ஆண்டுதோறும் நடந்து வந்தது. இத்தமிழ் விழா பறம்பு மலையில் பாரி விழாவாகச் சங்க இலக்கியங்களுக்கும், திருப்புத்தூரில் திருமுறை விழாவாகத் திருமுறைத் தமிழுக்கும் இப்போது நடந்து வருகிறது.

நமது மேடைகளில் அதிகமாகத் தமிழ் அர்ச்சனை செய்தி பேசப் பெற்றது. ஒரு ஆடிக் கிருத்திகையன்று குன்றக் குடியில் தமிழ் அர்ச்சனை தொடங்கியது. அடுத்து 1953-ல் கோவை மாவட்டம் பயணம் மிகவும் பயனுடைய பயணம். கொங்கு நாட்டுத் தங்கங்கள் என்று புகழ்ந்து பாராட்டத் தக்கப் பெரியோர்கள் எல்லாம் வரவேற்று, நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்கள். ஆர். கே. சண்முகம் செட்டியார், வி.சி. சுப்பய்யா கவுண்டர், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆர். கே. சண்முகம் செட்டியார் சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற

இலக்கியங்களில் ஈடுபாடுடையவர். வி. சி. சுப்பய்யாக் கவுண்டர் நல்ல பக்தர். வேளாண்மைக் குடிக்குரிய இயல்புகள் அனைத்தும் நிறைந்தவர். சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் நல்ல தமிழார்வலர்; தமிழின நலம் காக்கும் பண்பாளர். நீதிக் கட்சியாளர். நல்ல கூட்டுறவாளரும்கூட! இவர்களுடைய கூட்டுறவு அந்தக் காலத்தில் மிகவும் பயன் தந்தது. வி.சி. சுப்பய்யாக் கவுண்டரின் பெருமுயற்சியால் பேரூர்த் திருக்கோயிலில் தமிழ் அர்ச்சனை தொடங்கப் பெற்றது.

தமிழ் அர்ச்சனை, வடமொழி வெறுப்பு இயக்கமல்ல. வழிபாடு-இதயங்கலந்ததாக அமையவேண்டும். அர்ச்சனையில் வழிபடுவோரும் கலந்து கொள்ள வேண்டும் என்பதே நோக்கம். கடிகாரத்தின் பெண்டுலம் அசைந்தால் மட்டும் போதாது. கடிகாரத்தின் முள்கள் நகர்ந்து காலம் காட்ட வேண்டும். அதுபோல திருக்கோயில்களில் மணிகள் அசைந்தால் மட்டும் போதாது, மனித இதயங்கள் அசையவேண்டும். நெகிழ்ந்து கொடுத்துப் பண்பாட்டு வளர்ச்சியைக் காட்ட வேண்டும். கல்லைப் பிசைந்து கனியாக்குதல் என்று திருவாசகம் கூறும். ஆன்மாவின் புலன்களை உழுது பக்குவப்படுத்தி வளர்த்தெடுப்பது வழிபாடு. மனிதன் விலங்கல்ல; மனிதனுமல்ல. அவனை விலங்குத் தன்மையிலிருந்து பையப்பைய மீட்டு மனிதனாக்கி அதன்பின் அருள்நலம் செறிந்த மாமனிதனாக்குவது வழிபாட்டின் நோக்கம். ஊனும் உயிரும் உணர்வும் உருகச் செய்யும் இயல்பு தாய்மொழிக்கே உண்டு. அதிலும் தமிழ், அருளியல் நலம் செழிப்பதற்கே முகிழ்த்த மொழி. ஆக, மனிதம் தோன்றவேண்டும். இதுதான் தமிழ் அர்ச்சனையின் விழுமிய நோக்கம். நாடு தழுவிய நிலையில் தமிழ் அர்ச்சனை விவாதப் பொருளாக மாறியது.

எந்த ஒரு செய்தி மக்கள் மன்றத்தில் பரவலாக விவாதிக்கப் பெறும் பொருளாக இடம் பெறுகிறதோ அந்தத்

திசையில் நாடு நகரும். தமிழ் அர்ச்சனையை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள் என்ற நிலை உருவானது. இதற்கிடையில் கடவுள் நம்பிக்கை இல்லாத நாவலர் இரா. நெடுஞ்செழியன் போன்றவர்களும் தமிழ் அர்ச்சனை விவாதத்தில் பங்கேற்றனர். வணக்கத்துக்குரிய அகோபில மடம் ஜீயர் தமிழ் அர்ச்சனையை எதிர்த்தார்கள். 'வடமொழி மட்டுமே அர்ச்சனை மொழி' என்றார்கள். நாம் 'இல்லை, தென் தமிழும் அர்ச்சனைக்குரியது' என்று வாதாடினோம். ஆனால், வடமொழியில் அர்ச்சனை செய்வதை மறுக்கவில்லை.

ஏன் வடமொழி அர்ச்சனையை மறுக்கவில்லை? நமது போற்றுதலுக்குரிய அப்பரடிகளே, 'வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்' என்று பாடி யுள்ளார். வடமொழியும் நாயன்மார்களால் அங்கீகரிக்கப் பெற்ற ஒரு மொழியே! அதுமட்டுமல்ல, கடவுள் ஒருவர். உலகத்துக்கு ஒரேயொரு கடவுள்தான்! அந்தக் கடவுளை-மொழி, இனம், மதம் எல்லைகளைக் கடந்த கடவுளை-மொழி என்ற ஒரு சிறிய வட்டத்துக்குள் அமைப்பது தவறு-குற்றம், என்பது நமது கருத்து. நாவலர் தமது 'மன்றம்' இதழில் 'அகோபில மடத்துக்கு உள்ள துணிவு அடிகளாருக்கு இல்லையே!' என்று எழுதினார். தவறுகள் செய்வதற்கு தைரியம் இல்லாதிருப்பது நல்லதுதானே!

நாளும் தமிழ் அர்ச்சனை இயக்கம் வளர்ந்தது. திருக் கோயில்களில் திருமுறை விண்ணப்பிப்பது. கட்டாயமா யிற்று! இந்த நிலையில் முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலம் 'தமிழ் அர்ச்சனை கோருபவர்கள் பண்பா டில்லாதவர்கள்' என்று சாடினார், பரமக்குடியில் பேசிய ஒரு கூட்டத்தில்! இந்தப் பேச்சு மக்கள் மத்தியில் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது. அருள்நெறித் திருக்கூட்டத்தினர் கண்டனம் செய்யத் தொடங்கினர். தந்திகள் பறந்தன. நாம் எல்லோரையும் அமைதிப்படுத்தினோம். முதலமைச்சரை நேரடியாக அணுக முயற்சி செய்தோம்!

எந்த ஒரு செய்தியையும் நேரடியாகப் பேசித் தீர்வு காண்பதே மனிதப் பண்பாடு. இந்தப் பண்பாட்டு முறையே காலப்போக்கில் ஜனநாயகமாக வளர்ந்தது. கலந்து பேசிக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது வளர்ச்சிக்குரிய வழி, தனி ஒரு மூளை எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் அதன் முழுத்தன்மை ஆய்வுக்குரியதே. பல மூளைகள் ஒன்று கூடிச் சிந்தித்து எடுக்கும் முடிவுகள் பெரும்பாலும் சிறப்பாக இருக்கும். ஆனால், கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொள்ளும் மூளைகள் சிந்திக்கும் கடமையை எந்தக் காரணத்தை முன்னிட்டும் மற்றவர்களுக்கு ஒதுக்கி வைத்து விடக்கூடாது. நல்லதை எண்ணவும் செய்யவும் விரும்பு கிறவர்களுடைய சிந்திக்கின்ற சொல்லுகின்ற உரிமைகளை அடக்கக் கூடாது. ஆக்கிரமிக்கக் கூடாது. இந்தச் சித்தாந்தத்தை விளக்குவதாகக்கூட ஆறுமுகச் செவ்வேள் வழிபாடு கால் கொண்டிருக்கலாம். இங்ஙனம் எண்ணுவதில் தவறில்லை. இந்தப் பண்பாடு வரவரக் குறைந்து வருகிறது. இன்று ஒருவரோடு ஒத்துழைத்தல் என்பது சிந்திக்காமல், மறு கருத்து இல்லாமல் இருப்பதுதான் என்று கருதிப் பலர், கூடித்தொழிற்படுகின்ற அமைப்புகளில் கூட 'தனி மனித நிலை' ஏற்றுக் கொள்ளப்பெற்று அசுர சேனைகள் உருவாகி வருகின்றன. இதுவே நமது நாட்டின் இன்றைய நிலை.

## 21

தமிழ் அர்ச்சனை சம்பந்தமாக முதல்வர் பக்தவத்சலத்தை நேரடியாக அணுகும் முயற்சிக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்தன. சென்னையில் இருந்த 'திருக்கோயில்' ஆசிரியர் ந.ரா. முருகவேள் அழைக்கப் பெற்றார். ந. ரா. முருக வேள் மறைமலையடிகளின் மாணாக்கர். சைவத் தமிழறிஞர். இவரும் நாமும் சேர்ந்து தமிழ் அர்ச்சனைப் புத்தகம் ஒன்று தயாரித்து அச்சிட்டோம். அதில் எதிர்ப்பாளர்க்குரிய பதில் இருந்தது. ஒன்றை மறவாமல் நினைவில் கொள்ளவேண்டும்.

கு.XVI.12.

தமிழ் அர்ச்சனை இயக்கத்தை கண்டவர்கள் சிவபெருமானும் திருமாலும்தான்! 'அர்ச்சனை பாட்டேயாகும்' என்று பாடச் சொல்லிக் கேட்டவன் சிவபெருமான். திருமாலும் ஆண்டாள் நாச்சியார் பாடலுக்குக் குழைந்தான். இன்றும் வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்கள் அருளிய பிரபந்தத் தமிழ் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. சாத்து முறை இல்லாமல் பூஜை நிறைவுபெறுவது இல்லை. சைவத் திருக்கோயில்களில் தான் திருமுறைகள் போதிய இடத்தைப் பெறவில்லை. நமது விளக்கங்களுக்குரிய ஆதாரங்களையும் ஆதாரமாக அமையும் நூல்களையும் திரட்டி அடையாளம் வைத்து, 52 புத்தங்கள் அடங்கிய ஒரு சிறு நூலகம் போல அமைத்துப் பேட்டிக்கு ஒரு வாரத்துக்கு முன்பே முதலமைச் சருக்கு அனுப்பிவைக்கப் பெற்றது.

பேட்டிக்குச் செல்வோர் பட்டியல் தயாரிக்கப்பெற்றது. 63 தமிழறிஞர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். தவத்திரு சாந்தலிங்க ராசமசாமி அடிகள், இளவழகனார், கழகப் புலவர் ப. ராமநாதபிள்ளை, மகாவித்வான் ச. தண்ட பாணி தேசிகர், மகாவித்வான் சி. அருணைவடிவேல் முதலியார் என்று அன்றைய தமிழகத்தின் தலை சிறந்த அறிஞர்கள் பலர் இந்தக் குழுவில் இருந்தனர். இவர்கள் எண்ணிக்கை 63. இது 63 நாயன்மார்களின் அடையாளம்! எல்லோரும் 12 கார்களில் முதலமைச்சரைக் காணச் சென்றோம். இது 12 திருமுறைகளுக்குச் சான்று. முதலமைச்சர் அகமும் முகமும் மலர வரவேற்றார். விவாதமே இல்லாமல் "திருமுறைத் தமிழ் அர்ச்சனை எனக்கு உடன்பாடே" என்று தெரிவித்தார்.

அதன்பின் 4-10-61-ல் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் பி.டி. ராஜன் தலைமையில், நமது முன்னிலையில் திருமறைத் தமிழ் அர்ச்சனையை பக்தவத்சலம் தொடங்கி வைத்தார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் மொழிக்குத் திருக்கோயில்

கருவறை நுழைவு கிடைத்தது. தமிழக வரலாற்றில் இது ஒரு திருப்புமையம். ஆயினும், பூரண வெற்றி கிடைக்கவில்லை. மக்களிடத்தில் வழிபாட்டின் நோக்கம், பயன், அதற்குத் திருமுறைத் தமிழ் துணை செய்யும் பங்கு பற்றிய அறிவு இடம் பெற்றால்தான் தமிழ் வாழும். பொதுவாகத் தமிழ் மக்களிடத்தில் மொழி உணர்வு குறைவு! இன்று வெகு வேகமாக ஆங்கிலத்தின் பக்கம் சென்று கொண்டிருக் கிறார்கள். எதிர்காலத்தில் தமிழரின் அறிவு வளர்ச்சி, பண் பாட்டு வளர்ச்சி என்னாகும்?

தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றத்துக்கு உழைத்த பெருமை பெரியாருக்கு உண்டு. அவர் தமது வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில் தேசபக்தர்; தெய்வ பக்தியுடையவர். இதில் எத்துணையும் ஐயமில்லை. வரலாறு உண்மைகளைப் பேசவேண்டும். ஆனால், பெரியார் தமது வளர்ச்சிப் போக்கில் சமுதாயச் சீர்கேடுகளை, மனிதருக்குள் நிலவும் சாதி வேற்றுமைகளை, தீண்டா மையைப் பார்த்தார்; புழுங்கினார். வழக்கம்போல் இந்து மதம் நெகிழ்ந்து கொடுக்க மறுத்தது. ‘இவையெல்லாம் கடவுளின் ஏற்பாடு-மாற்ற இயலாதது, மாற்றக்கூடாதது’ என்று சொல்லத்தொடங்கினர். பெரியாருக்குக் கோபம் வந்து விட்டது. “மனிதருள் சூத்திரனை, தாழ்த்தப்பட்டவனைப் படைத்து இழிவுபடுத்தும் கடவுள் வேண்டாம்!” என்றார். இதுதான் அவர் வந்த வழி! கூர்ந்து நோக்கினால் மாணிக்க வாசகரும் அப்பர் அடிகளும், ராமானுசரும், வள்ளலாரும் வந்த வழி! அவர்கள் சாதிமுறைகளை எதிர்த்தார்கள் என்பது உண்மை! ஆனால், பெரியார் மாதிரி போராடவில்லை. தொடக்க காலத்தில் பெரியாரின் கடவுள் எதிர்ப்புக் கொள்கையை நம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை. ஆதலால், நமது வாழ்க்கையின் தொடக்கத்தில் எதிர்த்தோம். காலப்போக்கில் நடந்தது என்ன? அது யாருக்குத்தான் தெரியாது?

பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை, சிலை உடைப்புக் கொள்கையை எதிர்த்துப் போராட தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டம் 1952-ல் தொடங்கப் பெற்றது. நமக்குத் தலைவர் பொறுப்பு தந்தனர். மாநிலச் செயலாளர் களாக கம்பன் அடிப்பொடி சா. கணேசன், ஈரோடு எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் இருவரும் பொறுப்பேற்றனர். பொருளாளராக தேவகோட்டை உ.ராம.மெ.சுப.சேவு.மெ. மெய்யப்பச் செட்டியார் பொறுப்பேற்றார். மாநிலம் தழுவிய இயக்கமாக வளர்ந்தது. இந்த இயக்கம் பெரியாரின் கோயில் சிலை உடைப்புக் கொள்கையைக் கடுமையாக விமரிசித்தது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, சமயப் பரப்புக்கென இயக்க அமைப்பில் தோன்றியது அருள்நெறித் திருக் கூட்டம் ஒன்றே யாம். இந்த இயக்கம் ஆதீனங்களின் வாழ்த்துகளைப் பெற்ற இயக்கம்.

கம்பன் அடிப்பொடி சா. கணேசன் தமிழிலக்கியங் களில் மட்டுமின்றி சிற்ப சாத்திரத்திலும் நல்ல அறிஞர்; ஆதாரங்களுடன் பேசினார். ஈரோடு எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் வல்லமை யுடையவர். எனவே ஆங்கில மேற்கோள்களுடன் கடுமையாகப் பேசினார். மற்றும் பன் மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், இலக்கிய மேதை அ.ச. ஞானசம்பந்தன், கு. அருணாசலக் கவுண்டர் போன்ற பல அறிஞர்கள் அருள் நெறித் திருக்கூட்ட மேடைகளில் பேசினார்கள்.

பெரியார், விநாயகர் சிலை செய்து உடைப்பதாகக் கூறினார். அருள்நெறித் திருக்கூட்டத்தினர் அமைதி பெற்றனர். பக்தர்கள், சிலையில் கடவுள் இருப்பதாக நம்பி வழிபாடு செய்கின்றனர். பெரியாரும் அங்ஙனமே நம்பி உடைக்கின்றார். அருள்நெறித் திருக்கூட்டத்தின் பிரசார வேகத்தினால் ஆங்காங்கு மோதல்களும் வந்தன. திருவில்லிப் புத்தூர் மம்சாபுரத்தில் நாம் பேசினோம். சரமாரியாகக் கல்

வீச்சு! அன்று நம்மைக் காப்பாற்றியவர் திருவில்லிபுத்தூர் கணக்குப் பிள்ளையாவார். கரூரில் தி.க. வினர் எதிர்ப்பு ஆர்ப் பாட்டம்! திராவிட கழகத்தினர் மதவாதிகளுக்கு என்று பத்து வினாக்களை எழுதி அச்சிட்டுத் தமிழ்நாடு முழுதும் வழங்கினர். இந்த வினாக்களுக்கு விடை தயாரித்தும் மேலும் பத்து வினாக்களை திராவிடக் கழகத்தினரைக் கேட்கும் வடிவத்திலும் நூல் வெளியிட்டது. அருள்நெறித் திருக்கூட்டம். பிரசங்கங்கள் சூடாக இருந்தன.

## 22

தொடக்க காலத்தில் நாம் பெரும்பாலும் வியாழக் கிழமைதோறும் திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) சென்று வழிபட்டு வருவது வழக்கம். நமக்குத் திருவாசகத்தில் நிறைந்த ஈடுபாடு. நாட்காலையில் திருவாசகத்தைச் சிந்தித்தும் பாடியும் நடை பயிலுதல் பழக்கம்; இல்லை, வழக்கம். விடியற்காலையில் அருட்பாடல்களைச் சிந்திப்பது அதிகப் பயன்தரும். ஆயினும், வாயினால் சொன்னால்தான் புறத்தே செல்லும் பொறிகளை, புலன்களை மீட்டுக் கொணர இயலும்.

திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) மாணிக்க வாசகப் பெருமானால் கட்டப்பெற்றது. சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த திருக்கோயில். இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் அருள்மிகு ஆத்மநாதசுவாமி. மாணிக்க வாசகர் திருவாசகத்தில் 'உடையாய் என்னைக் கண்டு கொள்ளே!' என்று அருளிச்செய்துள்ளார். ஆதலால் ஆன்ம நாயகன், ஆத்மநாதசுவாமி என்றெல்லாம் திருநாமங்கள் வழங்கப்படுகின்றன.

ஆன்மாவைக் கிராமப்புறத்தார், ஆவி என்பர். ஆன்ம நாயகர் என்பது 'ஆவி உடையார்' என மருவியது. ஆவி என்பது பொருள் பிறழ உணரலாயிற்று. 'சோற்று ஆவி உடையார்' எனப் பொருள் கொண்டு 'புழுங்கல் அரிசிச்

சோறு படையல்' போட்டு அந்த ஆவி, சுவாமி மீது படும்படி கதவைச் சாத்துகின்றனர். இது தவறான முறை. நமது புராணச் சடங்குகள் பலப்பல சொற்களையும் பிழைபடப் பொருள் கொண்டு தோன்றிய இவை தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இத்திருத்தலத்துக்கு அடிக்கடி சென்று வழிபாடு செய்துகொண்டு வருவது வழக்கம். ஒரு நாள் திருக் கோயிலுக்கு எதிரிலேயே கறுப்புக்கொடி பறந்தது கண்ணில் பட்டது. 'சோதியனே! துன்னிருளே!' என்ற திருவாசக அடி களை அடிமனம் சிந்தித்தது. ஆவுடையார் கோயில் நண்பர் முத்துதேசிகர், திராவிடர் கழக நண்பர்களை அழைத்து வரும்படி கேட்டுக்கொள்ளப்பெற்றார். முத்துதேசிகர் ஆவுடையார் கோயில் கிராம ஹெட்மேன், இனிய அன்பர். நல்ல வண்ணம் உபசரிப்பார். அருமையாகத் திருவாசகம் பாடுவார். முத்துதேசிகர், திராவிடர் கழக நண்பர்கள் சிலருடன் வந்து சேர்ந்தார். இரவு 8 மணிக்கு உட்கார்ந்து அவர்களுடன் பேசத் தொடங்கினோம். இரவு 2 மணிவரை பேச்சு நீண்டது. வினாக்களும் விடைகளும் பரிமாறிக் கொள்ளப்பெற்றன. பேச்சின் முடிவு 'திருக்கோயில் எதிரில் உள்ள திராவிடர் கழகக் கருப்புக் கொடியை அகற்றிவிடுவது... அருள்நெறித் திருக்கூட்டப் பணிகளுக்கு ஒத்துழைப்பது' என்பது. மறுநாள் காலை திருக்கோயில் முன் உள்ள திராவிடர் கழகக் கொடி இறக்கப்பெற்றது.

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. அறந்தாங்கி மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து தி. க. அன்பர்கள் மீண்டும் திராவிடர் கழகக் கொடியை ஏற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். நமது அணியைச் சேர்ந்தவர்கள் மறுக்கின்றனர். மதுரையில் மேடை ஒன்றில் பேசிக் கொண்டிருந்த நமக்கு உடன் தகவல் தந்தனர். நாம் உடனே கூட்டத்தை முடித்துக் கொண்டு தேவகோட்டைக்கு போய் வழக்கறிஞர் வி.ஆர்.எஸ். மெய்யப்பனை அழைத்துக் கொண்டு ஆவுடையார் கோயில்

போனோம். வி.ஆர்.எஸ். மெய்யப்பன் திறமையான வழக்கறிஞர் மட்டுமல்ல... நம்பால் பெரிதும் பற்றுடையவர். நம்முடைய சிறந்த ஆலோசகரில் ஒருவர். இரவு 12 மணி. ஆரவாரம் அடங்கியிருந்தது. நமது தரப்பினரை எழுப்பி ஊருக்கு வெளியே கொணர்ந்து நிலைமை விசாரித்து அறியப் பெற்றது. முடிவு என்ன?

கொடிக்கம்பம் இருந்த இடம், தையற்கடை உரிமை யாளர் மணி என்பவரின் கடைமுன். அது அவருடைய சொந்த இடம். அவர் தனது சொந்த இடத்தில் திராவிடர் கழகக் கொடியை அமைக்க விரும்பவில்லை என்று எழுதிக் காவல் நிலையத்தில் கொடுத்துப் பாதுகாப்புக் கேட்பது என்று முடிவு. காவல் நிலையத்துக்குச் சென்று ஆய்வாளரை எழுப்பி; மணி கொடுத்த மனுவுடன் நமது சார்பிலும் ஒரு மனுவை வழக்கறிஞர் தயாரித்துக் கொடுத்தார். ஒருவழியாக அன்று விவகாரம் ஒரு முடிவுக்கு வந்தது.

திராவிடர் கழகத்தினரின் வேகம் அடங்கவில்லை. பரவலாகக் கிளர்ச்சி செய்தனர். நம் தரப்பிலும் கிளர்ச்சி செய்யப்பெற்றது. திருப்பெருந்துறையில் 'திருவாசக விழா' தொடங்கப்பெற்றது.

மற்ற நூல்களுக்கு இல்லாத ஒரு பெருமை திருவாசகத் துக்கு உண்டு. அது என்ன? திருவாசகத்தைப் பூசை செய்து ஓதினால் சிவபூசை செய்ததற்கு ஒப்பு என்ற மரபு உண்டு. திருவாசகத்தின் அருமை கருதி, காரைக்குடியில் திருவாசக மடம் கட்டித் திருவாசகம் ஓத ஏற்பாடு செய்தனர். ஆண்டு தோறும் திருவாசக விழா நடத்தி வருகின்றனர்.

திருவாசகர் தோன்றிய திருப்பெருந் துறையில் அரிமழம் அரு. அ. அண்ணாமலை செட்டியார் திருவாசக மடம் அமைத்துத் திருவாசகம் படிக்கவும் ஓதவும் ஏற்பாடு செய்துள்ளார். 1953-ம் ஆண்டு திருவாசக விழா, திருவாத வூரில் முதலில் தொடங்கப்பெற்றது. மதுரை அருள்மிகு

மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் வடக்குக் கோபுர வாசலில் உள்ளது மொட்டைக் கோபுரம் முனீஸ்வர சுவாமி கோயில். இந்தக் கோயில் பூசாரி யாழ்கீத சுந்தரம் பிள்ளை. குழைந்த அன்பினர்; வழங்கும் இயல்பினர்; நம்பால் தாயிற் சிறந்த பரிவினர். இவர் திருவாதவூர்த் திருக்கோயிலுக்கு ஓதுவார்.

திருவாதவூர் தமிழ் வழங்கிய நிலம்; புண்ணியத் திருத்தலம். 'புலனழுக்கற்ற அந்தணாளர் கபிலர்' தோன்றிய புண்ணிய பூமி. மாணிக்கவாசகர் திருவவதாரம் செய்த திருத் தலமும் திருவாதவூரே! ஆதலால், யாழ்கீத சுந்தரம்பிள்ளை திருவாதவூரில் திருவாசக விழாவைத் தொடங்கினார். (இப்போதும் காரைக்குடி-திருவாதவூர் ஆகிய ஊர்களில் தொடர்ச்சியாக திருவாசக விழா கொண்டாடி வருகின்றனர்!). கார்த்திகை மாதம் 4-வது திங்கட்கிழமை யன்று தொடர்ந்து திருவாதவூரில் திருவாசக விழா தவறாமல் நடைபெற்று வருகிறது. நாம் இவ்விழாவில் கலந்துகொள்ளும் கடமையில் தவறியதில்லை. யாழ்கீத சுந்தரம்பிள்ளை அமரர். அவருடைய அருமைப்புதல்வர் சுந்தரம் முறையாக நடத்தி வருகிறார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருப்பெருந் துறை திருவாசக விழாவுக்கு அழைக்கப்பெற்றார். கம்பன் அடிப்பொடி சா. கணேசன் மற்றும் அறிஞர்கள் பலர் அழைக்கப் பெற்றனர்.

காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆவுடையார் கோயிலில். 'திருவாசக விழா' ஊர்வலத்தில் ஏராளமான அன்பர்கள், பக்தர்கள்! பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தலைமையில் வெண்கலக் குரலில் கம்பன் அடிப்பொடி சா. கணேசன் சிவபுராணம் ஓத, அருள்நெறித் திருக்கூட்டக் கொடிகளுடன் ஊர்வலம்! இந்த ஊர்வலத்துக்குப் போட்டியாக இரு பக்கத்திலும்-திராவிடர் கழகக் கொடிகளுடன் பாலைவனம்

ஜமீன் துரை அரசன் தலைமையில் ஊர்வலம். ஆயினும், எந்தவிதமான சலசலப்பும் இல்லை; மோதலும் இல்லை. திருவாசக விழா ஊர்வலம் முடிந்தவுடன் திருக்கோயில் முன்பு அருள்நெறித் திருக்கூட்டக் கொடி ஏற்றப் பெற்றது! பின் வழிபாடு நடந்தது.

திருவாசக விழா மாநாடு தொடங்கியது. மேடையில் ஈரோடு எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் பேசுகையில் ஒன்றிரண்டு சூடான சொற்கள் வந்துவிட்டன. உடன் மாநாட்டில் இருந்த திராவிடர் கழகத்தினர் கூச்சல்போட ஆரம்பித்து விட்டனர். தேவர் திருமகனாருக்கு ஆற்றொணா நிலை! தம்பி சிறுமருதூர் முத்துக்குமாரசாமி சேர்வைக்கு அளவற்ற கோபம்! கழகத்தினரின் சலசலப்பை அறைகூவலாக ஏற்றுக்கொள்வதாகப் பேச்சு! இந்த நிலையில் நாம் ஒலிபெருக்கியின் முன் வந்து வழக்கம்போல் சமாதானம் கூறி வேண்டுதல் செய்தோம். கூட்டம் அமைதியாகியது. அடுத்து பசும்பொன் தேவர் திருமகனாரின் அற்புதமான பேச்சு. இந்த பணியில் உற்ற துணையாக இருந்த மணி இன்று அமரர். இன்று துரை அரசன் சிறந்த பக்தர். அறங்காவலர். நமக்கு மிகவும் வேண்டிய உழுவலன்பர்.

தம்பி முத்துக்குமாரசாமி சேர்வை இன்றும் நமக்கு நல்ல உழுவலன்பராகத் திருப்பெருந்துறை ஈசனுக்கு நல்ல தொண்டராக விளங்கிப் பணி செய்கிறார். அண்மையில் திருப் பெருந்துறைத் திருக்கோயில் திருப்பணித் 'திருப்பணிநாயகம்' என்று பாராட்டப்பெறும் தவத்திரு சுந்தரசுவாமிகளின் அரிய முயற்சியால் நடைபெற்றது. இந்தத் திருப்பணியிலும் தம்பி முத்துக்குமாரசாமி சேர்வையின் ஒத்துழைப்புப் பாராட்டுதலுக்குரியது. இங்ஙனம் பெரியாருக்கும் நமக்கும் இடையே விவாதங்கள் முற்றி வளர்வதை தமிழகத்தில் அறிஞர்கள் சிலர் விரும்பவில்லை. பெரியாரும் நாமும் நட்பாக இருக்கவேண்டும் என்று எண்ணினர். முயற்சி நடந்தது-முயற்சியின் முடிவு என்ன?

## 23

அருள்நெறித் திருக்கூட்டம் 1952-ல் தொடங்கி வெகு வேகமாக வளர்ந்தது. திருவிழாக் கூட்டங்களில் எல்லாம், ஊர்வலங்களும் தெருமுனைப் பிரசாரங்களும் செய்யப் பெற்றன. தெருமுனைப் பிரசாரங்களில் தமிழ்நாட்டின் தலை சிறந்த அறிஞர்கள் பங்கேற்றுக் கொண்டது குறிப்பிடத் தக்கது. கும்பகோணம் மகாமகத்தில் (1956) பிரசாரம் நடந்தது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வருவது மகாமகம்.

அடுத்து மயிலாடுதுறையில் நடந்த கடைமுக முழுக்கின்போது நடந்த பிரசாரம் முதன்மையானது. பல மாவட்டங்களிலிருந்தும் அன்பர்கள், ஊழியர்கள் வந்திருந்தனர். மாநாடு போல் கூடியிருந்தனர். இந்த விழாவுக்கு குன்றக்குடி ஆதீனகர்த்தராகிய நாம் வருவதறிந்த அந்தப் பகுதியில் உள்ள வேளாளர் பெருங்குடி மக்கள் நமக்கு வரவேற்புக்கும் மகேசுவர பூஜைக்கும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். வேளாளர் பெருங்குடி மரபினர் சிவநெறியைச் சார்ந்து ஒழுகும் சிறப்பினர் என்பதால் 'சைவர்கள்' என்றும் அழைக்கப்படுவர். சமயநெறி சார்ந்த பெயர் காலப்போக்கில் ஜாதிப் பெயராகி விட்டது. அந்தோ பரிதாபம்! திருஞான சம்பந்தர் திருமுறையில் ஆக்கூர் தேவாரத்தில், வேளாளர் குல மரபினர் பாராட்டப்பெற்றுள்ளனர்.

"வாளார் கண் செந்துவர் வாய்
மாமலையான் தன்மடந்தை
தோளாகம் பாகமாப்
புல்கினான் தொல்கோயில்
வேளாளர் என்றவர்கள்
வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே!"

என்பது அத்திருப்பாடல்.

மகேசுவரபூஜை என்பது சைவ ஆதீனத் திருமடங்களில் அடியார்களுக்குக் குருமுதல்வரையும் இறைவனையும் எண்ணி உணவளிப்பது. உண்பதற்கு முன் பூஜையும் நடைபெறும். வைதீக மடங்களில், 'பிக்ஷை' என்று சொல்வர். மயிலாடுதுறையில் மகேசுவரபூஜை ஏற்பாட்டில் நாம் அமர்ந்துவிட்டோம். பூசனை முதலிய சடங்குகள் முடிந்தன. உண்பதற்கு முன் பந்தியில் சுற்றி ஒரு கண்ணோட்டம். பந்தியில் அறிஞர்கள், தொண்டர்களைக் காணோம். கை. கனகசபை பிள்ளையை அழைத்து நாம் விவரம் கேட்டதில் "அவர்கள் சைவர்கள் அல்லர், ஆதலால் தனிப்பந்தியில் சாப்பிடுகிறார்கள்" என்றார்.

ஜாதி வேற்றுமைகளை அகற்றுவது லட்சியம். ஜாதி வேற்றுமைகளாலேயே சமுதாயம் அழிந்துவருகிறது. நோயால் உருக்குலைந்த உடல்போல் ஆகிவருகிறது. உண்பதிலும் உறவு கொண்டாடுவதிலும் ஜாதி வேற்றுமைகள் ஏன்? இந்த ஜாதி முறைகள் எப்படி வந்தன? முன்னோர்கள் ஜாதி முறைகளை அங்கீகரித்தார்களா? இல்லை. திருமுறைகளில் ஜாதி வேற்றுமைக்கு ஒரு சான்றும் இல்லை. மாறாக மறுத்துள்ளன. 'ஜாதி, குலம், பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை' என்பது திருவாசகம்.

ஒழுக்கத்தின்பாற்பட்டதாக ஜாதி முறைகளைப் பின்பற்றினாலும் தவறில்லை... அதாவது சிவநெறியில் நின்றொழுகுபவர்கள் சைவர்கள் என்பது. சமயம் ஜாதியாக மாறிய தீமை வைணவத்தில் இல்லை. வைணவர்கள் என்றால் திருமாலை வணங்குபவர்கள் என்பதே பெறப்படும் பொருள். ஆனால், சைவர்கள் என்று கூறினால், சிவனை வழிபடுபவர்கள் என்று பொருள்படுவதற்குப் பதிலாக ஜாதியையே குறிக்கிறது. ஆதலால், ஜாதி முறைகள் மீது வெறுப்பு. மகேசுவர பூஜை என்ற பெயரில் ஜாதி முறைக்கு அங்கீகாரமா? அல்லது மகேசுவர பூஜையைப் புறக்கணித்துப் போராடுவதா? போராட்ட உணர்வே வெற்றி பெற்றது.

*மகேசுவர பூஜையை-பந்தியைப் புறக்கணித்துவிட்டு வெளிநடப்பு... இதனால், வேளாண்குடி மரபினரின் பொல்லாப்பு ஏற்பட்டது. ஜாதிகளை எதிர்த்துப் போராடிய அனுபவம் உணர்த்துவது என்ன? ஜாதி வேற்றுமை எளிதில் நீங்காது... அது புரையோடிப்போன புண் என்பதேயாம். இன்று அனைத்துத் துறைகளிலும் ஜாதி உணர்வே மேலாதிக்கம் செய்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. வேதனைக்குரிய செய்தி.*

*அருள்நெறித் திருக்கூட்டமே காலப்போக்கில் ஜாதிகள் இயக்கமாக உருப்பெற்று விடுமோ என்ற ஐயத்தை நெல்லை, காமராஜர் மாவட்டங்கள் பாடம் புகட்டின. பல இடங்களில் இயக்கம் பொதுமை வடிவம் பெறவில்லை. ஒரு ஊரில் அருள்நெறித் திருப்பணி மன்றம் அமைத்து ஒரு பள்ளி தொடங்க எண்ணி, பள்ளி நிர்வாகக்குழு அமைக்கப் பெற்றதில் ஜாதிகளுக்கு அப்பாற்பட்டதாக அந்தக் குழுவை அமைக்க அந்த ஊரார் உடன்பட்டுவரவில்லை. அரிதின் முயன்று செய்து முடிக்கப்பெற்றது. ஆனால், நடைமுறையில் மாற்றம் இல்லை. இது கால் நூற்றாண்டுக்கு முன் நடந்த நிகழ்வு. இப்போது அதைவிட மோசமான நிலை.*

இன்று ஜாதி உணர்ச்சி தலையெடுத்து வளர்கிறது. ஜாதி உணர்ச்சி இறுக்கம் அடைந்து வருகிறது. எங்கு பார்த்தாலும் ஜாதிச் சங்கங்கள்! அரசுகளின் நடைமுறைகள் ஜாதி முறைகளை வலுப்படுத்துகின்றன. வரலாற்றுப் போக்கில் தாழ்ந்தும் பின்னடைந்தும் இருக்கும் சமுதாயத்தில் பள்ளத்தில் கிடப்பவர்களை மேலே கொண்டு வருவது அவசியம். தலையாய கடமையும்கூட. இதற்கெனக் கல்வியில், பணியில் இடம் ஒதுக்கீடு செய்வது தவறன்று... வரவேற்கத் தக்கதும்கூட! ஆனால், இட ஒதுக்கீட்டைப் பள்ளத்தில் கிடப்பது –என்ற ஒரே கொள்கையை வைத்து வழங்க வேண்டும். அதற்காக ஜாதிப் பெயர்களைத் திரும்பத் திரும்ப நினைவுகூர்வது அவசியமா? சலுகைகளை வழங்குவது பள்ளத்தில்

கிடப்பவர்களை மற்றவர்களுடன் சமநிலைக்குக் கொண்டு வருவதற்குத் தான். ஆனால், இன்று நடைமுறையில் சலுகைகளைக் காப்பாற்ற ஜாதிகளைக் காப்பாற்றும் முறை தோன்றி வளர்ந்து வருகிறது. ஆதலால், சமுதாயத்தில் நிலவும் ஜாதி வேற்றுமைகளை அகற்ற கல்வி, பொருளாதாரம், சமூகத்தகுதி இவற்றில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை அகற்ற பிறப்பின் காரணமாக அமையும் ஜாதிகளை, ஏற்காமல், தாழ்ந்தும் பின்னடைந்தும் கிடக்கும் தகுதியையே அளவு கோலாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

*மக்கள் தொகுதி மூன்று பிரிவினர். தாழ்த்தப்பட்டவர்கள் என்பது சமூகத் தகுதியில், கல்வியில், பொருளாதாரத்தில் தக்க இடம் பெறாதவர்கள். இவர்கள் அரசின் முழு உதவியையும் பெறத் தகுதியினர் என்று கணக்கெடுத்து அட்டை வழங்கலாம். (இந்தப் பிரிவினர் இன்றைய ஆதி திராவிடர் சமூகம்) ஜாதிச் சான்றுகளைத் தவிர்த்துவிடலாம். அடுத்து, கல்வியிலும் பொருளாதாரத்திலும் பின்தங்கியவர்கள். இவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். அடுத்து, கல்வி அல்லது பொருளாதாரத்தில் ஏதேனும் ஒன்றில் பின் தங்கியவர்கள். இவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சமூகத்தைப் பிரித்து காலக்கெடுவுடன் கூடிய திட்டம் வகுத்து நிறைவேற்ற வேண்டும்.*

*பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்து, முன்னேறியவர்களிடமிருந்து அட்டைகளைத் திரும்பப் பெற வேண்டும். முன்னேறாதவர்களுக்கு மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு அட்டை முறையை நீட்டிக்கலாம். இப்போதுள்ள இட ஒதுக்கீடுகூடத் திட்டுத் திட்டாக ஒரு சிலருக்கே பயன்படுகின்றது. கடைக்கோடி மனிதனுக்குச் சென்று சேரவில்லை. இத்தகைய கருத்துப்போக்கு நமக்கு உண்டு. இந்தக் கருத்தை இப்போது இந்திய உயர்நீதி மன்றம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அன்று அரசியல் கட்சிகள் இந்த ஆலோசனையை ஏற்க முன்வரவில்லை... முன்வரமாட்டா.*

ஏன்? "உங்கள் ஜாதிக்கு நன்மை செய்தோம்" என்று கூறி ஜாதியின் ரீதியாக வாக்குகள் சேகரிக்க முடியாது. தூறலால் பயிர்கள் வளர்ந்து விடுவதில்லை. சலுகைகளால் சமுதாயம் வளர்ந்து விடுவதில்லை. மக்களைத் தற்சார்புடையவர்களாக, அறிவாளிகளாக, திறமைசாலிகளாக வளர்க்கும் முறையில் கவனம் தேவை. திட்டம் தேவை. இந்தக் கருத்துக்களை ஏற்பார்களா? பொதுவாக யாரும் ஏற்பதில்லை. அதனால், இயக்கங்களை நடத்துவதில் நமக்கு நம்பிக்கை இழந்தது. அண்மையில் இந்திய உயர்நீதி மன்றம்-மண்டல் கமிஷன் அறிக்கையின் மீது ஒரு வரலாற்றுப் புகழ்மிக்கத் தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பில் சில பகுதிகள் 11-10-80-ல் ரத்தினகிரியில் நடந்த திருக்குறள் பேரவை மாநில மாநாட்டுத் தீர்மானங்களைப் பிரதிபலிக்கின்றன. அதாவது,

1. பிற்பட்டோரில் முன்னேறியவர்களுக்கு இட ஒதுக்கீடு தரக்கூடாது.

2. பதவி உயர்வுகளுக்கும்கூட ஒதுக்கீட்டுக்கொள்கை கூடாது என்ற தீர்ப்புகள். இவை ஓரளவு சமூகநீதிக்கு அரண் செய்யும்.

## 24

அரிய பல சான்றோர்களின் முயற்சியால் 1956-ல் தலைவர் பெரியாரை ஈரோட்டில் சென்னியப்ப முதலியார் வீட்டில் சந்தித்துப் பேச ஏற்பாடு. முற்றிலும் தனி ஏற்பாடு கூட்டம் இல்லை. அதுமட்டுமல்ல...சந்திக்கப் போகும் நிகழ்ச்சி செய்தியாகவில்லை; வதந்தியாகவும் உரு எடுக்க வில்லை.

'ஈரோட்டில் யாரை யார் சந்திப்பது?' என்பது கேள்வி! ஐயத்துக்கு அல்லது யோசனை செய்யவேண்டியதற்கு அவசியம் இராமல் "மகாசந்நிதானம் இடத்துக்கு நான் போய்ச் சந்திக்கிறேன்" என்றாராம் பெரியார். அடுத்த வினா!

நாம் தங்கியிருப்பது சென்னியப்ப முதலியார் வள மனையின் மாடி! பெரியாரால் மாடி ஏறக் கூடுதல் முயற்சி தேவை இருக்குமா என்பது நமக்கு ஏற்பட்ட ஐயம். "கீழேயே ஒரு அறை பார்க்கலாம்!" இது நமது கருத்து. அவ்வாறே ஏற்பாடு செய்ய நினைப்பு. ஆனால், பெரியார் இதற்கு இசையவில்லை. "பரவாயில்லை! மாடியில் மகாசந்நிதானம் இருக்கும் இடத்திலேயே சென்று பார்ப்பது தான் முறை!" என்றாராம்.

மாடியில் ஓர் அறையில் இரண்டு நாற்காலிகள்! இருவர் உட்காரக்கூடிய நாற்காலி ஒன்று! இருவர் உட்காரும் நாற்காலியில் நாம் ஒரு முனையில் அமர்ந்திருந்தோம். பெரியார் வந்துவிட்டார். அறைக்குள் அவர் நுழையும்போது நாம் எழுந்து அவரை வரவேற்றோம். பெரியார் வணக்கம் செய்யக் கையிரண்டையும் அவசரத்தில் சேர்க்கும்போது, அவரது கைத்தடி கீழே விழுந்தது! "அமருங்க! அமருங்க!" என்று சொல்லிக்கொண்டே வருகிறார். நாம் உட்கார்ந்திருந்த இருவர் உட்காரக்கூடிய நாற்காலியின் மற்றொரு பகுதியில் உட்காரும்படி கேட்டுக் கொள்கிறோம்! பெரியார் மறுக் கிறார்! "மகாசந்நிதானத்துடன் ஒரு இருக்கையில் அமருவது முறையன்று" என்று கூறிக்கொண்டே, அருகில் இருந்த வேறு நாற்காலியில் உட்காருகிறார்!

உடன் வந்தவர்கள் - இருந்தவர்கள். அனைவரும் போய்விட்டனர்; கதவுகள் சாத்தப்பட்டன. நாமும் பெரியாரும் மட்டும்தான் அறைக்குள் இருக்கின்றோம். முதலில் சில நிமிடங்கள் பரஸ்பர நலன் விசாரித்தல், மற்ற பொதுத் தகவல்கள் பேசப்பெற்றன. சிறிது நேரத்தில் பெரியாருக்கும் நமக்கும் இடையேயான பேச்சு ஆஸ்தீக நாஸ்தீக பக்கம் திரும்பியது. ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் பேச்சு தொடர்ந்தது. நமது சமயம் அவ்வப்போது கால, தேச வர்த்தமான நிலைமைகளுக்கு ஏற்றவாறு புதுமைப்படுத்திக் கொள்ளத் தவறியதன் விளைவே பெரியார்! நமது சமயத்தில்

காலங்கள் தோறும் தோன்றிய மதத் தலைவர்கள், சிந்தனை யாளர்கள் கருத்துக்களை குறிப்பாக எம்பெருமானார் ராமானுஜர், அப்பரடிகள், வள்ளல் ராமலிங்கர் கொள்கைகள் பின்பற்றப்பட்டிருந்தாலும் பெரியாரின் வரவைத் தவிர்த்திருக்கலாம்.

"சமயம், கடவுள் எல்லாம் தீண்டாமையை ஒழிக்க வில்லையே...? மனிதனை மனிதனாக்கவில்லையே? ஜாதிகளை அகற்றவில்லையே? கடவுள் சாமி என்றெல்லாம் வாழும் மக்கள் இழிவிலும் வறுமையிலும் கிடந்து உழல் கிறார்களே! இதற்குப் பரிகாரம் இதுவரையில் மதங்கள் தேடவில்லையே. கடவுளும் தேடவில்லையே. அதுமட்டு மல்ல... கடவுள் பெயரால்தானே இந்த அவலமான காரியங்கள் செய்யப்படுகின்றன? என்றார் பெரியார். இதற்கு நாம் சொன்ன பதில்: "இவற்றைக் கடவுள் செய்யவில்லை!" என்பது. "அப்படியானால் இந்த அநியாயத்தைக் கடவுள் ஏன் தட்டிக் கேட்கவில்லை?" என்றார் பெரியார்.

என்ன பதில் சொல்வது? நம்முடைய தத்துவங் களுக்கும் நடைமுறைகளுக்கும் இடையில் உள்ள இடை வெளி மிகவும் அதிகம். கணியன்பூங்குன்றன் காலத்திலிருந்து கண்ணதாசன் காலம்வரை தோன்றிய எந்த சிந்தனையும் செயலுருவம் பெற்றதில்லை. மக்கள் பின்பற்றவேண்டும் என்பதற்காகவே இறைவன் சில திருவிளையாடல்களை நடத்தினான், ஆனால் மக்கள் அதையும் பின்பற்றத் தயாராக இல்லை. இன்று சமய ஆசாரங்களைப் பின்பற்றுகின்றனர். கடவுளைத் திருப்திப்படுத்தலாம் என்று எண்ணி ஆரவாரமாக வழிபாடுகள் செய்கின்றனர். ஆனால், சமய நெறி காட்டிய வழியில் மனித நேயத்தை ஏற்று ஒழுகுபவர்கள் எத்தனை பேர்?

பேச்சின் முடிவு? பெரியார், "எனக்கும் கடவுளுக்கும் என்ன விரோதம்? அவரை நான் பார்த்ததுகூட இல்லை.

எனக்குத் தேவை மனிதன் மீதுள்ள இழிவு அகற்றப்பட வேண்டும் என்பதே? நம்முடைய நாட்டில் இந்த இழிவை மாற்ற மத உலகத்திலும் சிலர் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் கண்ட பலன் தோல்வியே! நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். பலன் தருமா; சந்தேகந்தான்" என்றார்.

"இருவருமாகச் சேர்ந்து உழைப்போம்!" என்றோம் நாம். பெரியார் சிரித்துக்கொண்டே "எனக்கு ஆட்சேபணை இல்லை உங்கள் சம்பிரதாயங்கள் இடம் தருமா?" என்றார்.

நாம், "முயற்சி செய்யலாம். சம்பிரதாயங்கள் என்பவை காலந்தோறும் மாறுபவைதானே!" என்றோம்.

"சரி, பார்ப்போம்! முயற்சி செய்வோம்." என்று இருவரும் ஒரே நேரத்தில் கூற, பேச்சு முடிந்தது.

பெரியார் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார். நாமும் அவரை வழியனுப்ப எழுந்தோம். உடனே பெரியார் "இல்லை! இல்லை! மகாசந்நிதானம் அமருங்கள்! எனக்கு எல்லா மரபுகளும் தெரியும். மரபுகளைப் போற்றும் ஆர்வமும் உண்டு. ஒரு காலத்தில் ஞானியார் சுவாமிகளை என் தோளில் தூக்கிச் சுமந்துள்ளேன். மகாசந்நிதானம் எழுந்திருக்கக் கூடாது..." என்றார்.

இந்தச் சந்திப்புக்கு பின் நம்மிடம் சூடான விவாதங்கள் குறைந்தன. பெரியார் கொள்கையை மறுக்கும் போக்கு குறைந்தது. உடன்பட்டு நின்று பேசும் பாங்கு கூடியது. அதாவது, பெரியார் கொள்கைகளை எதிர்மறையாக அணுகாமல் உடன்பாட்டு முறையில் அணுகி, பெரியாரின் நியாயமான கொள்கைகளை ஏற்றும் உடன்படாதவற்றை நயம்பட விவாத வடிவிலும் பேசும் முறை வளர்ந்தது.

தலைவர் பெரியார் 1955-ல் மலேயா சென்றார். நாமும் 1955-ல் மலேயா சென்றோம். நாம் ஓய்வு கருதி கப்பலில் சென்றோம். பினாங்கு துறைமுகத்தில் நாம் இறங்குவதாக

ஏற்பாடு. அன்று பினாங்கில் பெரியார் உள்ளார். மலேயா அரசாங்கம் நாங்கள் இருவரும் ஒரே இடத்தில் இல்லாதபடி கவனமாகப் பார்த்துக் கொண்டது. மலேயாத் தமிழர்கள் சுறுசுறுப்பாக இருந்தனர். போட்டி உணர்ச்சி! ஆதலால், நல்ல வண்ணம் பழகக்கூடிய இருவர் ஒரு நாட்டில் ஒரே நேரத்தில் இருந்தும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்ள இயலவில்லை. ஒரே மேடையில் பேச இயலவில்லை! ஏன்? கருத்து வேற்றுமைகள் பல தீமைகளை உண்டாக்குகின்றன. இது வாழும் முறையன்று.. வேற்றுமைகள் நீங்க நெருங்கிச் செல்வதே முறை!

பெரியார் பிறந்த நாள் விழாவை 1956 செப்டம்பரில் திருச்சி பொன்மலையில் திராவிடர் கழகத்தினர் எடுத்தனர். நம்மையும் விழாவுக்கு அழைத்திருந்தனர். ஈரோட்டில் சந்தித்ததற்குப் பின் எங்களுக்கிடையில் நட்பே இருந்தது. மேடையில் இருவரும் ஒன்றாகப் பேசியதில்லை. இந்தச் சூழ்நிலையில் திராவிடர் கழக நண்பர்களின் அழைப்பை ஏற்கத் தயக்கம்! ஏன் தயக்கம்? முரண்பட்ட கருத்துகளைக் கொண்டிருந்தாலும், பழகி வரும் நட்பு பாதித்துவிடக் கூடாதே என்ற கவலை! கருத்தைவிட நட்பே முக்கியம்! நட்பும் உறவும் இடையூறின்றி வளர்ந்தால்தான் கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்து நிகழும். என்றாவது ஒரு நாள் கருத்தொருமை தோன்றும்! நாம் நமது வாழ்க்கையில் நன்மை, தீமை, நன்றி, பழி, பாவங்கள் எல்லாவற்றையும் விடப் பழகுதலுக்கும் நட்புக்கும் முதன்மை கொடுப்பது உண்டு. இதனால் பொல்லாப்புகள், இழப்புகள் வரும் ஆனாலும், இதுவே வாழ்க்கை முறை என்ற நம்பிக்கை இருக்கிறது. இதனால் என்றாவது ஒரு நாள் நன்றாக முடியும் பகைமை தீது. 'யாரோடும் பகை கொள்ளலன்' என்றான் கம்பன்.

பெரியார் பிறந்தநாள் விழாவில் கலந்துகொள்ள நம் இசைவு தரப்பெற்றது. திருச்சி பொன்மலைப்பட்டியில் விழா.

பெரியாருக்கு மிக்க மகிழ்ச்சி. நாங்கள் இருவரும் இணைந்து மேடையில் உட்கார்ந்திருந்து கலந்து பேசியது... எங்களுக் கிடையில் அடிக்கடி சிரிப்பு... எல்லாவற்றிலும் திராவிடர் கழகத்தினருக்கு அளவற்ற மகிழ்ச்சி. போட்டோகிராபர்கள் பற்றிச் சொல்ல வேண்டாம்.

விழாவில் திருச்சி வழக்கறிஞர் திராவிடர் கழகப் பிரமுகர் தெ. பொ. வேதாசலம் முதலில் பேசினார். அவருடைய பேச்சு முழுவதும் கடவுள் மறுப்பு. மத மறுப்பு தான்! பெரியார் நயமாகத் தன் கைத்தடியினால் தட்டிப் பார்த்தார். ஆனால், அவர் கவனிக்கவில்லை. அடுத்து நாம் தலைவர் பெரியாரைப் பாராட்டிப் பேசி, அவருக்குப் பொன்னாடை போர்த்தி பெருமைப்படுத்தினோம். முதலில் அரை மணி நேரம் பெரியாரின் அரிய தொண்டுகளைப் பாராட்டிப் பேசின பிறகு, வேதாசலத்தின் பேச்சுக்கு மறுப்புரை சொன்னோம். ஏன்? நமக்குத் திராவிடர் கழகத் தினரின் மேடைகளில் முதல் மேடை இது! நமது நியாயமான மறுப்புரைகளுக்குத் திராவிடர் கழகத்தினரிடமும் வரவேற்பு இருந்தது. அடுத்து, தலைவர் பெரியார் பேசினார். பேச்சு மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. "எனக்கென்ன கவலை! தமிழன் - சூத்திரன் என்று இழிவுபடுத்தப் படுகிறான். இந்த இழிவு கடவுளால் துடைக்கப்பட்டாலும் சரி, மகாசந்நி தானத்தால் துடைக்கப்பட்டாலும் சரி! எனக்கு அது ஒன்றுதான் குறிக்கோள்! சென்ற காலத்தில் எந்தக் கடவுளும் செய்யவில்லையே என்ற ஏமாற்றம் எங்களுக்கு இருப்பதை - திராவிடர் கழகத்தினருக்கு இருப்பதை மகாசந்நிதானம் புரிந்துகொள்ள வேண்டும்? மகாசந்நிதானம் வருத்தப்படக் கூடாது. அவர் வாழ்த்தை நான் நம்புகிறேன். எனது தோழர்கள் நான் பக்தனாகி விட்டேன் என்று எண்ணக் கூடாது. மகாசந்நிதானம் நமது இனத்தின்மீது ஆர்வம் காட்டு கிறார்கள். குறிப்பாக என்மீது நம்பிக்கை வைத்து வாழ்த்து கிறார்கள். இந்த வாழ்த்து பலிக்கும்படியாகத் தொடர்ந்து

நமது பணிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள்...." என்று பேசினார்.

விழா முடிந்த பிறகு போட்டோகிராபர் ஒருவர் தனது ஸ்டூடியோவுக்கு இரண்டு பேரையும் படம் எடுக்க விரும்பி அழைத்தார். பெரியார், "மகாசந்நிதானம் அங்கெல்லாம் வரமாட்டார்கள்" என்று மறுத்துவிட்டார்.

## 25

ஒரு நாள் மதுரையிலிருந்து நெல்லை வரையில் (1956–ல்) பெரியாருடன் காரில் பயணம்... திருப்பரங்குன்றம் கடந்தவுடன் பெரியார் தமது பையிலிருந்து திருக்குறள் புத்தகத்தை எடுத்தார். அதில்,

> "குடி செய்வார்க்கில்லை பருவம் மடிசெய்து
> மானம் கருதக் கெடும்..."

என்ற திருக்குறளைக் காட்டி நம்மிடம் தந்து படிக்கச் சொன்னார்... விளக்கம் கேட்டார்.

தாம் பிறந்த குடியை ஆக்க விரும்புபவர்கள் காலம் கருதிக் காத்திருக்க மாட்டார்கள். குடி வளர்வதற்குரிய பணிகளைச் செய்வதில் ஒருபோதும் சோம்பல் காட்ட மாட்டார்கள். பெருமையை ஒரு பொருளாக எண்ண மாட்டார்கள் என்று விளக்கம் கூறினோம். தொடர்ந்து எங்கள் இருவரிடையிலும் விளக்கம், விவாதம், கருத்துப் பரிமாற்றம் என்று வளர்ந்தது.

அன்று பெரியார் தமிழின வரலாற்றுப் பேராசிரியராக விளங்கிப் பல்வேறு செய்திகளை எடுத்துக் கூறினார். தமிழர்களின் ஆட்சிகள் வீழ்ந்ததையெல்லாம் காரண காரியங்களுடன் விளக்கினார். நீதிக் கட்சி வரலாற்றையும் எடுத்துக் கூறினார். இந்தப் பயணம் இலக்கிய சமூகச் சிந்தனைக்குத் துணை செய்தது.

பலதடவை பெரியார் நமது திருமடத்துக்கு வருகை தந்துள்ளார். முதல் வருகையின்போது ஆதீன மடத்து மரபுப்படி தலமரியாதை அவருக்கு வழங்கப்பெற்றது. அதில் திருநீறு அணிவித்தலும் உண்டு. அப்போது சின்னப் பட்டமாக இருந்த நடராஜ தேசிகர் தலைவர் பெரியாருக்கும் திருநீறு பூசிவிட்டார். பெரியாரும் தயக்கமும் மறுப்பும் இன்றிப் பூசிக்கொண்டார். திருநீறு பூசிக் கொண்டதை பற்றிக் கேட்ட போது, "நான் திருநீறு பூசிக்கொண்டது மகாசந்நிதானத்துக்காக. அது அவருக்குக் கௌரவத்தைக் கொடுக்கும் என்றால் நான் பூசிக்கொண்டது சரியே!" என்றார். இதுபோல உறவுகளைப் பேணிக் காப்பதில் விழிப்புணர்வு உள்ளவர் பெரியார்.

முத்துப்பேட்டைப் பகுதி த. கீழக்காடு கிராமத்தில் பழைய அரசியல் தியாகி - காங்கிரஸ்காரர் ஆர். எம். சோமுத் தேவர் இல்லத் திருமணம் 1957 ஜூலை மாதம் நடைபெற்றது. சோமுத் தேவர் இந்தத் திருமணத்துக்குப் பெரியாரை அழைக்க விரும்பினார். மாப்பிள்ளை நமது அணியைச் சேர்ந்தவர். எனவே, மாப்பிள்ளை திருமணத்துக்கு நம்மை அழைக்கிறார். அதுவரையில் தனி நபர்களின் நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் வழக்கம் இருந்ததில்லை. மாப்பிள்ளையின் பிடிவாதத்தால் நாம் ஒப்புக்கொண்டோம். சோமுத்தேவர் மகன் ராஜமாணிக்கம் - நீலாவதி சோமுத் தேவர் மகள் பத்மாவதி - பன்னீர் செல்வம், சோமுத் தேவர் மகன் மகாலிங்கம் - செல்வநாயகி இவர்களின் திருமணம். திருமண நாள் வந்தது. நாம் மிகுந்த ஜாக்கிரதையுடன் அணுகினோம். சமயச் சடங்குகள் இல்லாமலே திருமணத்தைப் பெரியார் வழியில் செய்யவும் விருப்பமில்லை. பெரியாருக்கும் நமக்குமுள்ள ஒரு பெரிய வேற்றுமை, பெரியார் மற்றவர்கள் என்ன சொல்வார்கள் என்று எண்ண மாட்டார்; யோசிக்க மாட்டார்; பயப்பட மாட்டார். நாம் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று எண்ணுவதுண்டு. இந்தப் போக்கு மேடைகளுக்கு மட்டுமே.

தனியே பேசும்போது கூறுவதுண்டு. இதன் காரணமாக இன்னமும்கூட மேடைகளில் நம்முடைய சிந்தனைகளை முழுமையாகக் கூறவில்லை. "ஊரார் தத்தம் மனத்தளவே பேசுவார்கள்" என்பது நாம் ஓதும் திருவாசகம். ஆனால், இந்த ஏற்புக் குணம் இன்னமும் உருவாகவில்லை. வாழ்க்கையில் கடைசி அத்தியாயம் நடந்து கொண்டிருக் கிறது. இனிமேலாவது இந்தப் போக்கை ஏற்க எண்ணம். ஆதலால், சமயச் சடங்குகளுடன் திருமணம் நடைபெற வேண்டும் என்ற முடிவுடன் இசைவு.

திருமணத்தை நடத்தி வைக்க திருவாரூரிலிருந்து புலவர் மு. இரத்தின தேசிகர் என்பவர் அழைக்கப்பட்டார். மு. இரத்தின தேசிகர் தமிழ்த் தேசிகர் பரம்பரையைச் சேர்ந்தவர். தமிழகத்தின் வட மாவட்டங்களில் 'தேசிகர்' என்ற பெயரிலும், தென் மாவட்டங்களில் 'ஓதுவார்' 'குருக்கள்' என்ற பெயர்களிலும் சமூகங்கள் வாழ்கின்றன. இவர்கள் தமிழர் இல்லங்களில் திருமணம் முதலியன செய்து வைக்கும் புரோகிதர்களாக வாழ்ந்தனர். வாழ்ந்து கொண்டுள்ளனர். இது ஒரு வகையில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்ற இனவழிப் போராட்டத்தின் விளைவாக இருக்குமா? ஆய்வுக்குரியது.

இரத்தின தேசிகரிடம் "சடங்குகளுடன் திருமணத்தை நடத்தி வையுங்கள். அதேபோழ்து சடங்குகளைக் குறைத்துக் கொள்ளவும்" என்ற ஆலோசனை கூறப்பெற்றது.

கீழக்காட்டுக்குப் பெரியார் வந்துவிட்டார். திருமண வீட்டார் போய், "திருமணத்தை எந்த முறையில் செய்வது?" என்று அவரிடம் கேட்கின்றனர். பெரியார் வழக்கம்போல் பெருந்தன்மையுடன் "மகாசந்நிதானம் விருப்பம்போல் செய்யுங்கள் எனக்கு அதில் ஆட்சேபணை இல்லை!" என்று கூறிவிட்டார். திருமணம் நடந்தது! திருமுறை வாழ்த்து களுடன்! அடுத்து வாழ்த்துரை! தலைவர் பெரியார் தாம் முதலில் பேசுவதுதான் முறை என்றும், தாம் பேசிய பின் மகாசந்நிதானம் வாழ்த்துரை வழங்கி நிறைவு செய்வதுதான்

மரபு என்றும் கூறினார். நாமும் பெரியாரும் கலந்துகொண்ட எந்தவொரு மேடையிலும் பெரியார் மறந்தும்கூட மரபுகளை மீறியதில்லை. பெரியார் ஒரு மணி நேரம் பேசினார். மக்களிடம் அதற்கு வரவேற்பு! பின் நாம் நமது உரையில் பெரியாரின் ஐயங்களுக்கு விடை கூறினோம். இதற்கும் மக்களிடம் வரவேற்பு! இன்று நாட்டில் ஒரே ஒரு குறை - நமது மக்களை நாம் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பது தான்.

சேலம் மாவட்டம் நாகரசம்பட்டியில் பெரியாரைப் பின்பற்றும் குடும்பங்கள் பல உண்டு. நாகரசம்பட்டி சம்பந்தன் தீவிர திராவிடர் கழகப் பற்றாளர். நாமும் பெரியாரும் ஒரு விழாவுக்குப் போயிருந்தோம். மேடையில் நினைவுக் கையெழுத்து (Autograph) வாங்கும் கூட்டம் படை யெடுத்தது. ஒரு கையெழுத்துக்கு ஒரு ரூபாய் என்று பெரியார் வாங்கினார். நாம் பணம் வாங்காமலே கையெழுத்துப் போட்டுத் தந்ததைக் கண்ட பெரியார், "காசு வாங்குங்கள். காசு வாங்காமல் கையெழுத்துப் போடாதீர்கள்" என்று சொன்னார். ஆயினும் உடனடியாக நாம் காசு கேட்க வில்லை. மீண்டும் பார்த்துவிட்டுக் காசு வாங்கும்படி வற்புறுத்தினார். நாமும் காசு கேட்டு வாங்கினோம். கையெழுத்துப் போட்டு முடிந்தவுடன் எண்ணிப் பார்த்ததில் 157 ரூபாய் இருந்தது. இந்த ரூபாயை இனிய நண்பர். கி. வீரமணி (இன்றைய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர்) கேட்டார்: "உங்களுக்குத்தான் காசு வாங்குவதில் விருப்பம் இல்லையே... பெரியாருக்குக் கொடுத்து விடுங்கள்!" என்றார். இது பெரியார் காதில் விழுந்தவுடன் "காசு நம்மிடம் இருந்தால் என்ன... மகாசந்நிதானத்திடம் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்!" என்றார்.

## 26

மதுரையில் டி. கே. சண்முகம் சகோதரர்களின் 'ராஜ ராஜ சோழன்' நாடகம். நாமும் பெரியாரும் கலந்து கொண்டு

நாடகத்தைப் பார்க்கிறோம். டி. கே. சண்முகம் சகோதரர் களின் நாடகங்களில் மிகவும் சிறந்தது 'ராஜராஜ சோழன்' நாடகம் என்பது நாடறிந்த செய்தி! பெரியார் நாடகத்தை நன்றாக அனுபவித்துப் பார்த்தார். நாடக முடிவில் வாழ்த் துரை! பெரியார் பேசும்போது டி. கே. சண்முகம் சகோதரர் களின் நடிப்புத் திறனை, கலையை மிகவும் பாராட்டிப் பேசினார். ஆயினும், முடிவில் 'இவ்வளவு அற்புதமான கலைத்திறன் வௌவால்கள் அடையும் கோயிலைப் பற்றியதாக அமைந்துவிட்டமையை கண்டு வருந்துவதாக'வும் கூறினார். அடுத்து, நமது வாழ்த்துரை! நாம் பேசும்போது 'நயம்பட', "பெரியாரும் பெரியாரைச் சார்ந்தவர்களும் கோயிலுக்குள் வராததால்தான் வௌவால்கள் குடிபுகுந்து விட்டன. பெரியார் திருக்கோயிலுக்குள் வந்துவிட்டால் வௌவால்கள் வெளியேறிவிடும்" என்று பேசினோம். மக்களிடம் ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு ஏற்பட்டது.

• தமிழ்நாடு அரசு நம் மீது 1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்ட வழக்குத் தொடுத்ததைக் கண்டித்து பெரியார் ஒரு பெரிய அறிக்கை வெளியிட்டார். 'வழக்கைத் திரும்பப் பெறாது போனால் போராடுவேன்' என்று அறிவித்தார். நமக்கும் பெரியாருக்கும் இடையே கால்கொண்ட உறவு நாளும் உழுவலன்பாக வளர்ந்து வந்தது.

1967-ம் ஆண்டு! அறிஞர் அண்ணா முதலமைச்சர். பொதுவுடைமைக் கட்சித் தோழர் அமரர் ஜீவானந்தம் மகளுக்கு திருமணம் செய்யவேண்டும். பெரியாரும் நாமும் பொறுப்பேற்றுக் கொண்டு திருச்சியில் திருமணம் நடந்தது. முதலமைச்சர் அறிஞர் அண்ணாவும் வந்திருந்தார். அண்ணாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி! அண்ணா பேசும் போது, "பொதுவுடைமைக் கட்சித் தோழரின் மகள் திருமணம்! பெரியாரின் தலைமை! அடிகளாரின் வாழ்த்துரை! ஒரே மேடையில் தமிழர்களின் தலைவர்கள் புழுக்கமின்றி இணைந்திருக்கும் இந்த விழா, தமிழினத்துக்கு

நம்பிக்கையூட்டும் விழா!” என்றார். அண்மைக்காலமாக இத்தகைய சமுதாய நிகழ்வுகள் குறைந்து வருகின்றன. இது வளர்ச்சிக்கு உதவி செய்யாது. திருமண மேடைகள் தனிக் கட்சி மேடைகளாவதைத் தவிர்க்க வேண்டும். பலரும் பங்கேற்கும் சமுதாய விழாவாக நடத்தப்பட வேண்டும்.

திண்டுக்கல்லில் மாணிக்க நாடார் நல்ல செல்வாக் குள்ள மனிதர். அவர் பெரியார் சிலை வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். திராவிடர் கழகக் கொள்கையில் பிடிப் புள்ளவர். இது இனவழிப் பற்றேயாம். சமய எதிர்ப்பாளர் அல்லர் - நம்மிடத்திலும் அன்புடையவர், பெரியார் சிலையைத் திறந்து வைக்க நம்மை அழைத்தார். அப்போ தெல்லாம் பெரியார் சிலையின் அடியில் -

‘கடவுள் இல்லை:

கடவுளைப் படைத்தவன் முட்டாள்’

என்றும், இவற்றைப் போல மேலும் சில வாசகங்களும் பொறிக்கும் பழக்கம் இருந்தது. இதைக் காரணம் காட்டி இயலாமையை எழுதினோம். மாணிக்க நாடார் பெரியாரைக் கலந்ததில் “மகாசந்நிதானம் விரும்ப வில்லையென்றால் பொறிக்க வேண்டாம். அவர்கள் விருப்பப்படி செய்க!” என்று உடனடியாகப் பெரியார் பதில் எழுதிவிட்டார். கடவுள் மறுப்பு வாசகம் இல்லாமலேயே திண்டுக்கல்லில் பெரியார் சிலை நம்மால் திறந்து வைக்கப் பெற்றது.

பெரியார் மறைவு நமக்கு ஆற்றொணாத் துயரத்தைத் தந்தது. சமுதாயக் கலவரங்கள், தீண்டாமைக் கொடுமை ஆகியவற்றால் நெருக்கடி நேரும்போதெல்லாம் பெரியார் இல்லாத குறையை உணர்வது உண்டு. நினைந்து வருந்துவ துண்டு. அந்த இடத்தை யாரால் நிரப்ப இயலும்?

## 27

சுதந்திரப் போராட்டம் 1942-ல் சூடுபிடித்தது. அண்ணல் காந்தியடிகள் தைரியமும் மன உறுதியும் படைத்தவர். ஆயினும், சுதந்திரப் போராட்டங்களில் கூட்டத்தைக் கூட்டவோ வன்முறைகளைப் பயன்படுத்தவோ விரும்புவதில்லை. கூட்டத்தைக் கூட்டுவது எளிது. ஆனால், அந்தக் கூட்டத்தைக் கட்டுப்பாடாகக் கொண்டு செலுத்துவது கடினம் என்பதை நாட்டு வரலாறு உணர்த்து கிறது. ஆதலால், அண்ணல் காந்தியடிகள் 1942-ல் சுதந்திரப் போராட்டத்தைத் தனி நபர் சத்தியாக்கிரக இயக்கமாகத் தொடங்கினார். அந்தத் தனி நபர் சத்தியாக்கிரகத்துக்கு முதல் மனிதராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார் புனிதர் வினோபாபாவே. மாணவப் பருவத்தில் லட்சிய மனிதராக ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒருவரை ஒரு மாமனிதரை வாழ்க்கையில் நேரில் காணவும் அவருடன் பணி செய்யவும் நமக்குக் கிடைத்த பேறு பெரும்பேறு என்று எழுதவும் வேண்டுமா?

புனிதர் வினோபாபாவே தவமுனிவர்; ஞானி; பலனில் பற்றின்றிப் பணி செய்த உத்தமர் வினோபாபாவே. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நிர்மாண வேலைகளில் ஈடுபட்டார். இந்தச் சூழ்நிலையில் சுதந்திர இந்தியாவில் நிலப்பிரச்னை தீராமல் இருந்தது. 1947-ல் இயற்றப்பெற்ற ஜமீன்தாரி இனாம் ஒழிப்புச் சட்டம் மூலம் ஓரளவு தீர்வு கிடைத்தது. ஆயினும் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளிகள் பல கோடியினர். நிலத்தை உழுது பிழைத்த விவசாயிகள், குத்தகை விவசாயிகள் மற்றும் கூலி விவசாயிகளேயாவர். இந்தியாவில் நிலச் சீர்திருத்தம் செய்ய அவசியம் இருந்தது. இருக்கிறது. 1951-ல் தெலுங்கானாவில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட கலவரம் தோன்றியது. அப்போது வினோபாபாவே சமாதான யாத்திரையாக நாடு தழுவிய நிலக்கொடை

(பூதானம்) இயக்கம் தொடங்கி பாரதம் முழுவதும் பாதயாத்திரை செய்தார்.

இது ஓர் அமைதிப் புரட்சி! பல லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கிடைத்தன. வினோபாபாவேயின் 1956 தமிழ் நாட்டு யாத்திரையில் நாம் பங்கு பற்றினோம். தமிழ் நாட்டு எல்லையில் வரவேற்றது; தென் ஆற்காடு மாவட்டத்தில் சில நாட்கள் யாத்திரை செய்தது. ராமநாதபுரம் மாவட்ட யாத்திரைப் பொறுப்பு நம்மிடமே விடப்பெற்றிருந்தது. புதுக்கோட்டை மாவட்ட எல்லையில் வினோபாபாவேக்கு வரவேற்பு நிகழ்ச்சி. சாக்கோட்டை, புதுவயல், காரைக்குடி வழியாகக் குன்றக்குடிக்கு வினோபாபாவே வந்திருந்தார்.

குன்றக்குடியில் சிறப்பான வரவேற்பு. மறுநாள் திருப்புத்தூர். அங்கு நமது ஆதீனத் திருமடத்தில் தங்கல். திருப்புத்தூரில் மடத்தில் தங்கியிருந்தபோதுதான் பூதான இயக்கம் கிராமதானமாக உருவெடுத்தது. இந்தக் கூட்டத்தில் காந்திகிராமப் பல்கலைக்கழக நிறுவனர் சகோதரி டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன், டி. கல்லுப்பட்டி குருசாமி நாடார், பூதான இயக்கத்தலைவர் ச. ஜகந்நாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள். நாம் அன்றைய சூழ்நிலையில் கிராமதான முறையை ஏற்கவில்லை. ஏன்? ஒரு கிராமத்தி லுள்ள நிலங்களில் எழுபத்தைந்து சதவிகிதம் நிலக்கொடை யாகக் கிடைத்து விட்டால்; தானே கிராமதானம் ஆகிவிடும். இதுதான் முறை. நேரடியாகக் கிராமதானம் உருவாகாது. ஆனாலும் சிக்கல் இருக்கும் என்பது நமது கருத்து. ஆயினும் நீண்ட விவாதத்துக்குப் பிறகு கிராமதானம் பெறுவது என்று முடிவு செய்யப்பெற்றது.

வினோபாபாவே நம்மிடத்தில் அதிகப் பரிவு காட்டினார். ஓய்வு நேரங்களில் பூதான இயக்கச் செயல்முறை, திருக்குறள், அத்வைதம், சுத்தாத்வைதம் என்பனபற்றி யெல்லாம் கலந்து பேசுவார். வினோபாபாவேயின்

எளிமையின் காரணமாக நம்மைப் பாராட்டுவார். "உங்கள் சக்திக்கு குன்றக்குடி மடம் நிர்வாகம் போதுமா? இன்னும் விரிந்த, பரந்த எல்லையில் பணி செய்யலாம்" என்றார். தம்முடன் பணியில் சேரும்படி அழைத்தார். நமக்கும் விருப்பம் தோன்றி விட்டது. வினோபாபாவேயுடன் போவதாக முடிவு செய்து விட்டோம்!

மடத்தின் நிர்வாகத்தைத் திருநெல்வேலி மாவட்டம் பெருங்குளத்தில் உள்ள செங்கோல் மடத்தின் மடாதிபதியிடம் ஒப்படைத்து விட்டுச் செல்வதென முடிவு. பெருங்குளம் மடாதிபதிக்கும் தந்தி கொடுத்து வரவழைக்கப்பட்டு விட்டார். உரிய ஆவணங்கள் தயாரிக்கப்பெற்றுவிட்டன. அலுவலர்கள் கூட்டம் போட்டுப் பிரியாவிடை பெற்றுக் கொள்ளப்பெற்றது. காலையில் வழிபாடு முடித்துக் கொண்டு வினோபாபாவேயுடன் சேர்ந்து கொள்வதாகத் திட்டம். அன்று பூஜைக்கு எல்லா அலுவலர்களும் ஊராரும் திரளாக வந்திருந்தனர். வழிபாடு முடிந்த பிறகு ஆதீனத்தின் மேலாளராகப் பணி செய்த வி. புஷ்பவனம் என்பவரும் மற்றும் சில மூத்த அலுவலர்களும் வந்தனர். புஷ்பவனம் நல்ல நிர்வாகி. அவருக்கு அழுகை வந்தது. பேச முடியாமல் தவிக்கிறார். முயன்று தடுத்துக் கொள்வதை நம்மால் பார்க்க முடிந்தது; உணர முடிந்தது.

புஷ்பவனம் பேசத் தொடங்கினார்: "மகாசந்நிதானத்தின் விருப்பத்துக்குத் தடை சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும். தயவுசெய்து நன்றாக ஆய்வு செய்ய வேண்டும்" என்றார். "நமது மடத்தின் நிர்வாகத்தை இப்போது தேர்ந் தெடுக்கப் பெற்றிருப்பவரால் செய்ய இயலாது. அனுபவம் போதாது. மடத்துக்கு ஒரு நல்ல நிர்வாகியை அமர்த்தி விட்டுப் போகலாம்" என்றார். காலப்போக்கில் பெருங்குளம் செங்கோல் ஆதீனம் இயங்கா நிலையை அடைந்தது என்பதை நோக்க வி. புஷ்பவனம் சொன்னது உண்மையா யிற்று. வேறுவழியின்றித் திட்டம் ஒத்திவைக்கப் பெற்றது. வினோபாபாவேயிடமும் நிலைமைகள் எடுத்துக்

கூறப்பெற்று விரைவில் வருவதாகக் கூறி இசைவு பெறப்பட்டது. 'சுதந்திரமான பணிக்கும், வாழ்க்கைக்கும் நிறுவனம் தடை' என்ற அனுபவ வாக்கு நமது நிலையிலும் உறுதியாயிற்று.

வினோபாபாவேயுடன் ராமநாதபுரம், மதுரை மாவட்ட யாத்திரைகளில் கலந்து கொள்ள முடிந்தது. பின், மடத்தின் நிர்வாகத்திலிருந்து மெள்ள மெள்ள விடுதலை பெற்றுச் செல்லும் முயற்சியில் தீவிரம் குறைந்தது.

## 23

கயாவில் நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளோர் கூட்டம் ஒன்றை 1968 அக்டோபரில் வினோபாபாவே கூட்டினார். அதற்கு அவசியம் வரும்படி அழைப்பு வந்தது. கயாவுக்குச் சென்றோம். கயா, புத்தர் ஞானோதயம் பெற்ற புண்ணியத் திருத்தலம். புத்தரின் காலம் கி. மு. 5-ம் நூற்றாண்டு. புத்தர் அரச குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் வாழ்க்கையின் துன்பம் - மக்களின் துன்பம் முதலியவற்றைக் கண்டு அரசுக் கட்டிலைத் துறந்தார். துன்பத்தின் காரணத்தை ஆராய்ந்தறிந்தார். 'ஆசையே காரணம்' என்று கண்டார். ஆசையென்பது கொச்சையானது; நிர்வாணத் தன்மையுடையது. எப்படியும் அதாவது வழி, துறை பற்றிக் கவலைப்படாமல் பொருட்களை அடைய நினைப்பது ஆசை! திருமூலரும்,

> "ஆசை அறுமின்கள்; ஆசை அறுமின்கள்
> ஈச னோடாயினும் ஆசை அறுமின்கள்"

என்றார். நெறிமுறைகளோடு இசைந்த விருப்பங்கள் தவிர்க்கத் தக்கனவல்ல. இந்திய வரலாற்றில் புத்தர் கொள்கைகளின் தாக்கம் மிகுதி. இந்து மதம் புத்தரின் கொள்கையை நேரடியாக ஏற்காததால் புத்த மதம் தனி மதமாயிற்று. ஆயினும், பௌத்தத்தின் தாக்கம் இந்து மதத்தில் நிறைய ஏற்பட்டிருக்

கிறது. இந்து நாகரிகத்துக்கு அஹிம்சையைத் தந்ததே பௌத்தம்தான் என்றால் மிகையன்று. கயாவில் உள்ள புத்தவிஹாரில் தியானம் செய்ய எண்ணம். ஆனால், எண்ணம் கைகூடவில்லை ஏன்? பிச்சைக்காரர்கள் கூட்டம்! அமைதியான சூழ்நிலை கிடைக்கவில்லை! தூய்மை இல்லை!

கயாவில் வினோபாபாவேயைச் சந்தித்து அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அவர் சிரித்துக்கொண்டே "இரும்பு விலங்கு அரசு போடுவது; கால நிர்ணயப்படி கழற்றப்பெறும். தங்க விலங்கு நாமே போட்டுக்கொள்வது எளிதில் கழற்ற முடியாது" என்று கூறி, "விடுதலை! விடுதலை!" என்றார். அடுத்துப் பல்வேறு சமூகப்பணிகள் பற்றிக் கலந்துரையாடினார். சரியாகக் காலை பத்து மணிக்குக் கூட்டம் தொடங்கியது. நாம் நமது உரையை ஆங்கிலத்தில் தயாரித்துக் கொண்டு போயிருந்தோம். யு. என். தேபர் மற்றும் ஆங்கிலம் தெரிந்த பலர் வந்திருந்தனர். ஆயினும், ஆங்கிலத்தில் யாரும் பேசவில்லை. இந்தியிலேயே பேசினர். நமக்கு ஆற்றொணாத் துயரம்! நாமும் வல்லடி வழக்காகத் தமிழில் பேசினோம். உடன் அழைத்துப் போயிருந்த சகோதரி திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் நமது தமிழ்ப் பேச்சை இந்தியில் மொழி பெயர்த்துக் கூறினார். மீண்டும் வினோபாப்பாவேயிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பி விட்டோம். அந்தக்கூட்டத்தின் முடிவு, பூதான நிலங்களை நல்லவண்ணம் சாகுபடி செய்வது, பூதானத்தின் மூலம் ஏழைகளுக்குக் கிடைத்த நிலங்களைக் கைமாறாமல் பார்த்துக் கொள்வது முதலியவை.

தமிழ்நாடு திரும்பியதும் மீண்டும் பணி; விரைந்து செய்யும் பணி தொடங்கியது; ஆனால், நிலக்கொடை இயக்க நிலங்களின் பயன்பாட்டில் ஏற்பட்ட அனுபவம், ஏழைகளும் கூடத் தனி உடைமைகளில் காட்டும் ஆர்வம் கூட்டுடைமையில் காட்டுவதில்லை என்பதுதான்! பல தலைமுறைகளாகச்

சொத்து என்று ஏதும் இல்லாதிருந்ததால் ஏற்பட்ட ஆசையா? அல்லது பரஸ்பர நம்பிக்கையின்மையா? ஆய்வு செய்ய வேண்டும். இந்திய நாட்டின் நிலப்பரப்பளவையும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்போர் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எல்லோருக்கும் நிலம் வழங்குவதன் மூலம் தீர்வுகாண இயலாது. அது மட்டுமல்ல, சாதாரணமாக ஏழைகள் சொத்தின் மேல் ஆசைப்படுவார்கள். ஆனால் வைத்துப் பாதுகாக்க மாட்டார்கள். நில உச்ச வரம்புச் சட்டம் மூலம் நிலமற்ற ஏழை விவாசயத் தொழிலாளர் களுக்கு வழங்கப்பெற்ற நிலம் அவர்கள் கைவசம் இல்லை என்பதை நீதிபதி கணபதியா பிள்ளை விசாரணை அறிக்கை அறிவித்தமையை நாடறியும். "உள்ளவர்களுக்கு மேலும் தரப்படும். இல்லாதவர்களிடமிருந்து உள்ளதும் எடுக்கப் படும்" என்ற விவிலிய வாக்கு நமது நாட்டு ஏழைகளைப் பொறுத்தவரை நூற்றுக்குநூறு உண்மையாயிற்று.

வினோபாபாவேயுடன் பழகிய தாக்கத்தால் நமது ஆதீன நிலங்கள் இடைத்தரகர் வழி குத்தகைக்கு விடும் பழக்கம் தவிர்க்கப் பெற்றது. விவசாயிகளுக்கே நேரடிக் குத்தகையாக ஒப்படைக்கப்பெறும் நடைமுறை அறிமுகப் படுத்தப்பெற்றது. நம் இளமைக்காலத்தில் கடியாபட்டியில் இருந்தபோது புனிதர் வினோபாபாவே மீது ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக வாழ்நாள் முழுதும் அவர் நினைவு நம்மிடம் இருக்கும்.

## 29

அறிவு வளர்ச்சிக்கு, ஆன்மாவின் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பயணங்கள் மிகுதியும் துணை செய்யும். நமது நாயன்மார்கள், ஆழ்வார்கள் பயணம் செய்த வரலாறுகள் கவனத்துடன் படிக்கத்தக்கன.

தமிழ்நாட்டு மடாதிபதிகளில் கப்பல் வழியாகவும் விமானம் வழியாகவும் உலக நாடுகளைச் சுற்றி வந்த மடாதிபதி - ஆதீனகர்த்தர் நாம் ஒருவர்தான்! யாம் பயணம் செய்யாத பகுதி ஆப்பிரிக்க நாடுகள், ஆஸ்திரேலியா மட்டும்தான். கம்யூனிஸ்ட் நாடுகளாகிய சோவியத் ரஷ்யா, செஞ்சீனா முதலிய நாடுகளுக்குப் பயணம் செய்தமையால் சம வாய்ப்பு சமுதாயத்தில் ஈடுபாடு. "சம வாய்ப்புச் சமுதாயம் காண முதற்படி கூட்டுறவு" என்பது மாமேதை லெனின் வாக்கு. அதனால் கூட்டுறவு இயக்கத்தில் நமக்குத் தனி ஈடுபாடு. 1953-ல் முதன் முதலாக இலங்கைக்கு பயணம். இந்தப் பயணத்துக்குரிய ஏற்பாடுகளை முன்னின்று செய்தவர் பயண நூல் எழுதிச் சிறப்புப் பெற்ற சோம.லெ.! இவர் உலக நாடுகளைச் சுற்றி வந்தவர். நல்ல எழுத்தாளர். அவர் இப்போது அமரர். அவரது அருமை மகன் சோமசுந்தரம் அமெரிக்காவில் உள்ளார்.

இலங்கையில் மட்டக்களப்பில் தமிழ் மாநாடு நடந்தது. மாநாட்டை நடத்தியவர் அருள்தந்தை தனிநாயகம் அடிகளார். இவர் நல்ல தமிழறிஞர். உலகந் தழுவிய தமிழ் அமைப்பைக் கண்ட பெருமை தனிநாயகம் அடிகளாருக்கே உரியது. 'Tamil Literature' என்ற ஆங்கில இதழை நடத்தியதன் மூலம் தமிழை உலகத்தின் வீதிகளுக்கு எடுத்துச் சென்றவர் தனிநாயகம் அடிகளார். இவர் தமிழ் மாநாட்டுக்கு அழைத்திருந்ததன் வாயிலாக நமது முதல் அயல்நாட்டுப் பயணம் அமைந்தது.

1953-ல் இலங்கையில் பதினைந்து நாட்கள் சுற்றுப் பயணம். தமிழ் மாநாட்டில் நல்ல கூட்டம். இலங்கைத் தமிழர்களின் தமிழார்வம், தமிழ்நாட்டினர் தமிழார்வத்துக்கு எத்துணையும் குறைந்ததல்ல. தமிழ் மாநாட்டில் இரண்டு நாட்கள் பங்கேற்பு! அதற்குப் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விரிவுரையாளர் மணி அருள்நந்தி அழைப்பு. பின் முஸ்லிம் கல்லூரியில் இந்து சமய மரபுப்படி வரவேற்பு.

அடுத்து, திரிகோணமலை தீவுப் பகுதிகள் சுற்றுப் பயணம். இந்தப் பயணம் தொடக்கம். அதன்பின் தொடர்ச்சியாகப் பல முறை இலங்கைப் பயணம் சென்று வரும் வாய்ப்புக் கிடைத்தது. பின் இலங்கைப் பயணம் தொடராமைக்கு காரணம் நாமே விதித்துக்கொண்ட தடை. 1968 அக்டோபரில் நாம் யாழ்ப்பாணத்தில் பேசிய கடைசிக் கூட்டத்தில் "இனி இலங்கைக்கு-யாழ்ப்பாணத்துக்கு வரும் உத்தேசமில்லை" என்று அறிவிக்கப் பெற்றது.

ஏன்? இலங்கைத் தமிழர்கள்-சிங்களர்கள் சேர்ந்து ஒருமைப்பாட்டுடன் வாழ்வது தவிர்க்க இயலாதது என்பது கருத்து. இதைப் பலவாறாக மேடைகளிலும் தனிக்கலந்துரையாடல்களிலும் வலியுறுத்தியும் கூடத் தீவிரவாதம் குறையவில்லை. நடுநிலைவாதிகள் இணைந்து வாழ்வதை நம்பியவர்கள்கூட அமரர் அமிர்தலிங்கம் உட்பட தீவிரவாதிகளைக் கண்டு அஞ்சினர். என்.எம். பெர்ரா தலைமையில் சமசமாஜம் என்ற ஓர் அரசியல் கட்சி இயங்கியது. என்.எம். பெர்ராவை இலங்கை ஒருமைப்பாட்டுக்குத் தீவிர முயற்சி மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப் பெற்றது. ஆனால், நமது நாட்டு வரலாறுதான் அங்கேயும். இரண்டு தேசிய இன மக்களும் கலந்து பழகுதற்குரிய வாயில்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தகர்க்கப்பட்டு வந்தன. அதுமட்டுமல்ல... பகையும் வளரத் தலைப்பட்டதை உய்த்துணர முடிந்தது.

எந்தவொரு நாடாயினும் நாம் வாழும் நாட்டை நமது நாடாக்கிக் கொள்ள வேண்டும். அந்த நாட்டு மக்களை நமது சுற்றத்தாராக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் வாழும் முறைமை. இங்ஙனம் வாழும் முறைமை சீன இனத்துக்கு இருக்கிறது. ஆரியருக்கும் உண்டு.

தமிழ் மக்கள் இந்த வழி வாழ்ந்து சிறப்புப் பெற முடியாத நிலையில் இலங்கைக்கு வந்துபோவதில் என்ன பயன் என்பதே நமது கவலை.

இன்றைய நிலையில் புவிக்கோளம் மிக நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது. இந்த உலகில் இன்று எந்தவொரு

இனமும் தனித்து வாழ்ந்துவிட இயலாது. இன்று மனிதகுல ஒருமைப்பாடு என்பது கொள்கையல்ல. நாகரிகம் அல்ல... அறமும் அல்ல! இன்று மனித குல ஒருமைப்பாடு என்பது வாழும் முறைமை. மனித குலம் உயிர் வாழ இன்றியமையாதது. இந்த உணர்வால் உந்தப்பட்டு இலங்கை செல்வதை நாம் தவிர்த்தோம். அதற்குப் பிறகு, இலங்கையில் திரிகோண மலையில் உள்ள இளைஞர் அருள்நெறி மன்றத்தினர், தொண்டர் இ. சண்முகராசா தலைமையில் உண்ணாவிரதம் இருந்தும் கூட அழைக்க முயன்றனர். மறுப்பதே கடமையாகி விட்டது.

## 30

இலங்கை அறநிலையத்துறை கொழும்பில் நடத்திய உலக இந்து மத மாநாட்டுக்கு நம்மை அழைத்தனர். நமக்கு உடன்பாடில்லை. வற்புறுத்தினர். ஓரளவு உடன்பட்டு நின்று, இலங்கையில் உள்ள ஆர்வலர்கள் கருத்தறிய ஐம்பது பேருக்குக் கடிதங்கள் எழுதப் பெற்றன. நாற்பத்தைந்து கடிதங்களுக்குப் பதில் வந்தது. ஐந்து கடிதங்கள் முகவரி மாற்றம் காரணமாகத் திரும்பி வந்தவிட்டன. ஒன்றிரண்டு கடிதங்களைத் தவிர, பல கடிதங்கள் இலங்கைக்கு வரும்படியே எழுதப் பெற்றிருந்தன. அவற்றுள் ஒரு கடிதத்தில் மட்டும் விரிவான ஆலோசனை இருந்தது. இதை எழுதியவர் 'இலங்கை காந்தி' என்று பாராட்டப் பெறுபவரும், அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவருமாகிய சி.சு. வேலாயுத பிள்ளை, இவர் ஒரு காந்தியத்தொண்டர். பிரம்மச்சாரி. சட்டை அணியாதவர். எப்போதும் கதர் உடுத்துபவர். அண்ணல் காந்தியடிகள் வழியில் நிர்மாணப் பணிகள் செய்து வருபவர், இவர், நாம் இலங்கைக்கு வருவதன் மூலம் நல்லிணக்கப் பேச்சு நடத்த வாய்ப்பிருக்கிறது என்று நம்பினார். அதற்காக வரவேற்றார். இலங்கையில் தமிழர்–சிங்களர் நல்லிணக்கமின்மை ஒருபுறம் இருக்க, தமிழர்

களிடையேகூட நல்லிணக்கம் இல்லை. யாழ்ப்பாணத் தமிழர்கள்-மட்டக்களப்புத் தமிழர்களிடையேயாவது ஒருமைப்பாடு காணலாம் என்று ஆசைப்பட்டார் இவர். நமக்கும் நல்ல ஆலோசனையாகப்பட்டது. "மாநாட்டில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து அறிஞர்கள் அழைக்கப்பட்டுள்ளார்களா?" என்று உலக இந்து மாநாட்டு வரவேற்புக் குழுவினரிடம் கேட்டோம். அவர்கள் "இல்லை" என்றனர். நாம் ஒரு பெயர்ப்பட்டியல் கொடுத்து அவர்களை அழைக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு வரவேற்புக் குழுவினர் உடன்படவில்லை. இந்த பெயர்ப் பட்டியலில் யாழ்ப் பாணத்தில் தலைசிறந்த சமய அறிஞர்கள்-பண்டிதமணி சி. கணபதியாபிள்ளை உள்ளிட்ட அறிஞர்கள் இருந்தார்கள். வரவேற்புக் குழுவினர் "யாழ்ப்பாணத்துக்காரர்கள் மட்டக் களப்புக்காரர்களை இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதுப வர்கள். அதனால் அழைக்க இயலாது" என்றனர். ஒரு மொழி பேசும் மக்கள் ஒரு சமய நெறி நின்றொழுகும் மக்கள் சேர்ந்து வாழ முடியாத நிலையில் உலகம் பற்றிய எண்ணம் ஏதாவது பயன் தருமா? இதுதான் இன்றைய போக்கு. உலகத்தில் வாழும் எந்த இனத்தாரையும்விட இன்றும் தமிழ்நாட்டில் வாழும் தமிழரிடையில் 'உலகம்' என்ற பெயர் ஒட்டிக் கொண்ட அமைப்புக்கள் பலப்பல. தமிழ்நாட்டில் என்ன உலகம் வேண்டியிருக்கிறது?

தமிழ்நாட்டில் தமிழ் இல்லை. ஆனால், உலகத்துடன் இணைந்த தமிழ் அமைப்புக்கள் ஏராளம். விநோதமான சூழ்நிலை.

நாம் "ஒருமைப்பாடு காணும் நிலை இருந்தால் ஒழிய மாநாட்டுக்கு வர விருப்பமில்லை" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டோம். வரவேற்புக் குழுவினர் ஒப்புக் கொண்டனர். நமது இலங்கைப் பயணமும் உறுதி செய்யப் பெற்றது. எல்லோருக்கும் தெரிவிக்கப் பெற்றது. நமது நம்பிக்கைக்குரிய புதுக்கோட்டை வழக்கறிஞர் வீர. சா.

மெய்யப்பனைச் சில நாட்களுக்கு முன்பே இலங்கைக்கு அனுப்பி, மாநாட்டு ஏற்பாடுகளை அறிந்து கணித்து அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பெற்றது. மாநாட்டு வரவேற்புக் குழுவினர் நம்முடைய வருகையை விளம்பரப்படுத்தினர். ஆனால், யாழ்ப்பாணத்துக்காரர் யாரையும் அழைக்கவில்லை. எனவே, நாமும் மாநாட்டுக்குச் செல்லவில்லை.

அடுத்து முயன்றவர் பாராட்டுதலுக்கு உரிய இலங்கை அரசின் கிராமத் தொழில் அமைச்சர் தொண்டைமான். அமைச்சர் தொண்டைமான் நமது மாவட்டத்தைச் சேர்ந்தவர். நமக்கு மிகவும் வேண்டிய குடும்பம். அமைச்சரின் முழுப்பெயர் சௌமியநாராயணத் தொண்டைமான். திருக் கோட்டியூரில் எழுந்தருளியுள்ள அருள்திரு சௌமிய நாராயணப் பெருமாள், தொண்டைமானின் குலதெய்வம். நாம் இலங்கைப் பயணம் மேற்கொண்டிருந்தபோதெல்லாம் மலைப் பகுதியில் அமைச்சர் தொண்டைமானும் அவர் இளவல் குமாரவேலுவுமே பயண ஏற்பாடுகளைச் செய்வார்கள். இவர்களுடைய வளமனைகளிலேயே தங்கும் பழக்கமும் உண்டு. அமைச்சர் தொண்டைமான் நல்ல அரசியல் தலைவர், நிர்வாகி.

இவர் தமது அரசியல் வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாட அழைத்தார். நிபந்தனைகளுடன் ஒப்புக் கொண்டோம்! என்ன நிபந்தனை? இலங்கையில் இனக் கலவரம்! மூண்டு எரிந்துகொண்டிருந்த நிலை I.P.K.F. (இந்திய அமைதிப்படை) இலங்கையில் இருந்த நிலை! யாழ்ப் பாணத்தில் நமக்கு நல்ல உறவு உண்டு. இனக் கலவரத்தால் யாழ்ப்பாணத்து மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் கொழும்புக்கு வந்து மீள்வது முறையன்று. யாழ்ப்பாணம் பகுதிக்குச் சென்று அந்த மக்களைப் பார்த்து ஆறுதல் கூற வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்தால் விழாவில் கலந்து கொள்வதாகக் கூறினோம்.

அமைச்சர் தொண்டைமானின் முயற்சி கைகூடவில்லை. மீண்டும் நாம் வற்புறுத்தியதன் பேரில் I.P.K.F. விமானத்தில் செல்ல அனுமதி வாங்கினார். இந்த விமானத்தில் செல்வது உரிய பயனைத் தராது என்று கருதி நாம் மறுத்துவிட்டோம்!

ஆக, 1968-க்குப் பிறகு நாம் இலங்கை செல்லவில்லை. இனி என்று கைகூடுமோ? திருவருள் என்ன நினைத் துள்ளதோ? இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் "விதியே! விதியே! தமிழச்சாதியை என்செய நினைத்தாய்?" என்ற பாரதியின் புலம்பலையொட்டி நாமும் புலம்ப வேண்டியதுதானா?

இலங்கைப் பயணங்களில் இலங்கை மண்ணின் மைந்தர்கள் சிலரின் அறிமுகம் கிடைத்தது நல்ல பேறு. செந்தமிழ்ச் செல்வர் முதலியார் சின்னத் தம்பி. இவருக்கு முதலியார் என்பது பட்டப்பெயர். நல்ல பண்பாளர். யாழ்ப் பாணம் பகுதிப் பயணத்தின்போதெல்லாம் இவருடைய ஊராகிய வட்டுக்கோட்டையில் இவர் வீட்டில் தங்குவது வழக்கம். நாம் தங்குவற்கென்றே இவர் ஒரு வளமனை கட்டி, அதற்கு 'குன்றக்குடி' என்று பேரும் சூட்டினார். இவருக்கு இரண்டு மகளிர் மட்டுமே! மூத்த பெண் ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார். இரண்டாவது மகள் பெயர் குஞ்சு; படுசுட்டி! குழந்தையாக இருக்கும் காலத்திலிருந்தே இந்தப் பெண் நமக்குப் பழக்கம். இன்று இவர் கொழும்பில் வாழ்கிறார். நல்ல குடும்பம்! விருந்தளிப்பில் ஆர்வம் காட்டும் குடும்பம்! அடுத்து, பண்டிதர் துரைசிங்கம், இவர் மனைவி சத்திய தேவி. இவர்களிருவரும் இப்போது அமரர்கள். இவர்கள் நீர்வேலி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஈழத்துச் சிவானந்தன் புங்குடு தீவைச் சேர்ந்தவர். இவருடைய சகோதரர் சிதம்பர ராமலிங்கம் இந்துக் கல்லூரியில் பணி செய்தார். இந்துக் கல்லூரி நிர்வாகிகள் நமக்கும் பெரியாருக்கும் உள்ள நட்பு கருதி முதலில் மறுத்தனர். ஈழத்துச் சிவானந்தன் போராடி வெற்றிபெற்றார். ஈழத்துச் சிவானந்தன் துடிப்புள்ள

இளைஞர்; நல்ல சொற்பொழிவாளர்; நம்பால் கனத்த அன்புடையவர். நமது 'ஈழத்துச் சொற்பொழிவுகள்' நூலின் பதிப்பாசிரியர். அடுத்து பி. கணநாதபிள்ளை. இவர் ஆறுமுக நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் 19-ம் நூற்றாண்டில் செந்தமிழுக்கும் சிவ நெறிக்கும் செய்த தொண்டு அளப்பரியது, ஆறுமுக நாவலர் நிறுவிய அறச்செயல் இலங்கையிலும் உண்டு; தமிழ் நாட்டிலும் உண்டு. பி. கணநாத பிள்ளை ஆறுமுகநாவலர் செய்த அறத்தைக் காக்கும் கடமை பூண்டவர்; முணு முணுக்கிறார்! அவ்வளவுதான் செயல் திறன்! ஆறுமுக நாவலர் நிறுவிய அறக்கட்டளை சார்பில் சிதம்பரத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளி நடைபெறுகிறது. சென்னை தங்கசாலைத் தெருவில் ஓர் அச்சகம். இந்தப் பணிகளுக்கு ஊட்டமளிக்க வேண்டியிருக்கிறது. கணநாதபிள்ளை தமிழ் நாட்டில் உள்ள ஆறுமுக நாவலர் அறக்கட்டளைக்கு அறங்காவலராக நம்மை நியமனம் செய்துள்ளார்.

## 31

ஆகஸ்ட் 1969-ல் ஒரு நாள் காலையில் தொலைபேசி ஒலித்தது. எடுத்துக் கேட்டோம். மாண்புமிகு சட்ட அமைச்சர் செ. மாதவன் பேசினார். அதாவது, தமிழ்நாடு மேல்சபை உறுப்பினராக இருக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் சம்மதம் கேட்கச் சொன்னார் என்பதுதான் செய்தி! எதிர்பாராத செய்தி... வியப்பு! "அவசியமில்லை... வேண்டாம்..." என்பது நமது பதில்.

இரண்டு நாள் கழித்துத் திரும்பவும் முதல்வர் மிகவும் விரும்புவதாகக் கூறித் தமது பங்கிலும் வற்புறுத்தினார். நமது பதில் யோசித்துச் சொல்வதாக இரண்டு நாள் தவணை கேட்கப்பெற்றது. முதல்வர் கலைஞரும் தொலைபேசி வழி பேசினார். உடனே, பொது வாழ்க்கை தொடங்கிய அந்த நாள் முதல் இன்று வரை நமது கெழுதகை நட்புக்குரிய

வர்களாக விளங்கும் பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள், தவத்திரு சுந்தர சுவாமிகள் இருவரிடமும் தொலை பேசியில் தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்கப்பெற்றது.

அடிகள் பெருமக்கள் இருவரும் மேல்சபைக்குப் போகலாம் என்றார்கள். அதன்பின் வளர்ப்புத் தந்தையாகிய தருமபுரம் மகாசந்நிதானம் கயிலைக் குருமணியின் கருத்தறிய முயற்சி. அவர்களும் 'மேல்சபைக்குப் போகலாம்' என்று இசைவு தந்தார்கள். இதற்குப் பிறகுதான் கலைஞருக்கு இசைவு தரப்பெற்றது. தமிழ்நாட்டு மடங்கள் வரலாற்றில் இது ஒரு திருப்புமையம்! கலைஞர் நமது சமுதாயச் சிந்தனைக்குத் தந்த ஆக்கம் இது.

கலைஞரிடம் நமக்கு நல்ல பழக்கம் உண்டு! திருமடத் துக்கு வந்திருக்கிறார். 1967 தேர்தலில் நாம் காங்கிரஸ் பக்கம்! நாம் மயிலாடுதுறை நகராட்சிப் பயண மாளிகையில் தங்கி யிருந்தபோது கலைஞரும் அங்கே தங்கியிருந்தார். அன்று மாலை இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது நமது சமய அமைப்பு செய்யவேண்டிய சீர்த்திருத்தங்கள் பற்றி அவர் கொண்டி ருந்த உணர்வுகளைப் புலப்படுத்தினார். பயனுள்ள கலந்துரை யாடல். இந்தக் காலக்கட்டத்தில் தான் பல நல்ல நண்பர்கள் கிடைத்தனர். இன்றைய சட்ட அமைச்சராக இருக்கும் கே.ஏ. கிருஷ்ணசாமியும் அறிமுகமானார்.

மேல்சபை உறுப்பினராகப் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி 1969 ஆகஸ்டில் நடந்தது. முதல்வர் கலைஞர், மற்ற அமைச்சர்கள் உடனிருந்து நடத்தி வைத்தனர். நாம் உறுதிமொழியைக் கடவுள் பெயரால் எடுக்காமல் மனச் சாட்சியின் பெயரால் எடுத்துக்கொண்டோம். இது பலருடைய கவனத்தை ஈர்த்த செய்தியாயிற்று. பல செய்தித்தாள்கள் கட்டம் கட்டிச் செய்தியாக்கின. இதனால் விளைவுகளும் தோன்றின. எதிர் விளைவுகளும் தோன்றின.

தமிழ்நாட்டில் ராய சொக்கலிங்கம் என்று அறிமுகமான ராய. சொ-வை அறியாதவர் யார்? நல்ல தமிழறிஞர். தமிழ் இலக்கியத்துக்கு கணிப்பான் போல விளங்கியவர். நம்பால் சாலப்பரிவு காட்டியவர். இவருக்குக் கோபம் வந்துவிட்டது! நீண்ட கடிதம் எழுதினார்-மனச்சாட்சியின் பெயரால் உறுதிமொழி எடுத்ததற்கு! நாமும் நீண்ட கடிதமாக விளக்கமாகப் பதில் எழுதினோம். 'எதிர்பாராத சூழ்நிலையில் எடுத்த முடிவல்ல... நீண்ட மனப்போராட்டத்துக்குப்பின் எடுத்த முடிவு. உலகியலில் பொய் சொல்லும் வாய்ப்புகள் வரலாம்' என்ற முற்காப்புணர்வுடனேயே திருவள்ளுவர்.

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்...'

என்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கடவுள் முன்னால் உறுதிமொழி தர-சத்தியம் செய்ய உடன்படாது இறைவனை மகிழின்கீழ் இருக்க விண்ணப்பிக்கிறார். ஆதலால், ஒருவர் பொது வாழ்க்கையில் கடவுள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்கு வாய்மையாளராக இருப்பது கடினம்! கண்ணோட்டம் கருதிப் பல வழுக்கல்களும் இழுக்கல்களும் வரும்! ஆதலால், 'தன்நெஞ்சறிவது பொய்யற்க' என்ற மொழிவழி நடப்பதுதான் நடைமுறையில் இயலும் என்று விளக்கினோம். மேலும், சமய நெறிப்படி பார்த்தாலும் 'மனச் சாட்சி' என்ற சொல்லேகூடக் கடவுளைக் குறிக்கும். எப்படி? மனதினது சாட்சி மனச்சாட்சி என்று விரியும். உயிருக் குயிராக விளங்கும் பரம்பொருளே மனத்தினுடைய சாட்சியாக விளங்குகிறது என்று கருதவும் இடமுண்டு! ராய. சொக்கலிங்கம் ஒருவாறு சமாதானம் அடைந்தார்.

கலைஞர் எப்போதும் ஏதாவது புதுமையாகச் செய்வதில் ஆர்வமுடையவர்! விரைந்து முடிவெடுப்பார். முடிவெடுப்பதைத் துணிவுடன் செயலாற்றுவார். ஆற்றல் மிக்க பேச்சாளர்! அண்ணாவின் அடிச்சுவட்டில் 'உடன்

பிறப்பு'களுக்கு மடல் எழுதி, நிலைமாறா அணி சேர்த்து வைத்துள்ளார். இவர் நம்மிடம் காட்டிய பரிவுக்குத் தமிழார்வம் மட்டுமே காரணம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தக்கார் ஒருவர் கலைஞரிடம், "அடிகளாரை நாம்தான் விரும்புகிறோம். ஆனால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார். அவருடைய ஆதரவு முழுதும் காங்கிரஸுக்கு அல்லது கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான்..." என்று கூறியுள்ளார். இதற்குக் கலைஞர், "நாம் அடிகளாரை ஆதரிப்பது கட்சிக்காக அல்ல... தமிழுக்காக!', என்று பதில் கூறியுள்ளார். கலைஞருக்கு நல்ல நினைவாற்றல் உண்டு. கலைஞரின் தமிழார்வம் பாராட்டி மகிழத்தக்கது.

அவர் ஆட்சிக் காலத்தில் தமிழ்வழிக் கல்வி கற்ற மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை தர ஓர் அரசாணை பிறப்பித்தார். இந்த ஆணையைப் பிறப்பிக்க காரணமாக இருந்ததில் நமது பங்கும் உண்டு. தமிழ்நாட்டு மாணவர்கள் இந்த அரசு ஆணையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார்கள். இந்தச் சூழ்நிலையில் அரசு ஆணையைத் திரும்பப் பெறுவதன் மூலம் அமைதி காண விரும்பி முதல்வர் கலைஞரை அணுகியபோது, "தமிழினால் பதவிக்கு வந்தோம். அதே தமிழினால் பதவி போகட்டுமே!" என்று உறுதியாகக் கூறினார். நாம்தான் பல காணங்களைக் கூறி 'லட்சுமணசாமி கமிஷ'னை நியமிக்கச் செய்து ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தோம்.

மேல்சபை உறுப்பினராக இருந்தபோது மகிழும் வண்ணம் கலைஞர் அரசின் வாயிலாக பல பணிகள் நடை பெற்றன. வள்ளுவர்கோட்டம் கருக்கொண்டது இந்தக் காலத்தில்தான்! இந்த அனுபவங்கள் முழுதும் எழுதினால், அது விரிவாகும்! அரசியல், சமூக வரலாறாகவும் அமையும்!

பணிகளைத் தேடிப் போகலாம்; பதவிகளைத் தேடிப் போகக் கூடாது. இந்தக் கோட்பாடு மிகவும் நல்லது.

## 32

ராஜாஜி மூதறிஞர்; தத்துவஞானி. அவருடைய அரசியல் சமூகக் கோட்பாடுகளில் முரண்பாடுகள் இருக்கலாம். இருப்பினும் ராஜாஜியின் மூதறிவு வியக்கத்தக்கது. பாராட்டத்தக்கது. இந்தியாவின் அரிய சொத்து. 1952-ல் அருள்நெறித் திருக்கூட்ட மாநில மாநாடு தேவகோட்டையில் நடந்தது. மாநாட்டைத் தொடங்கி வைக்க ராஜாஜி அழைக்கப்பெற்று, தேவகோட்டைக்குச் செல்லுமுன் குன்றக்குடி திருமடத்துக்கு வந்தார். சில மணித் துளிகள் மானுடத்தின் தரம் பற்றி பேசினார்.

பின், தேவகோட்டை மாநாடு! 'ராமனின் அரசு, அதிகாரம், பதவி நிராகரிப்பு, பாண்டவர்களின் பொறுமை, சீதையின் தவம், பரதனின் பரிவு ஆகியவை இன்றைய மனித சமுதாயத்தில் வளர வேண்டும்' என்று குறிப்பிட்டு அற்புத மான உரை நிகழ்த்தினார். மாநாட்டின் முடிவில் நாமே இயக்கத் தலைமையில் இருக்க விரும்பவில்லை. அருள்நெறித் திருக்கூட்டம் மக்கள் இயக்கமாக வளரவேண்டும் என்ற விருப்பத்தில் நெல்லை மாவட்டத் தலைவராக அப்போது விளங்கிய இலஞ்சி ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளையைத் தலைவராகத் தேர்வு செய்யும்படி கோரினோம். அவை ஒப்புக்கொண்டது.

இலஞ்சி ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை முதுகலைப் பட்டம் பெற்றவர்; நன்றாகப் பேசுவார். பழகுதலுக்கு இனியவர்; மாநிலத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அருள்நெறித் திருக்கூட்டத்தை வளர்த்தார்; திருக்கோயில் தவறாமல் வார வழிபாடுகள் நடந்தன. நாடு தழுவிய நிலையில் நமது பயணம் அமைந்தது. சங்கரன்கோயில்

எஸ்.என். அம்பலவாணன் பிள்ளை இணைச் செயலாளர். நல்ல உழைப்பாளி. இயக்கப் பணிகளைப் பொறுப்புடன் செய்தவர். இவருடைய அருமைப் புதல்வர் நமசிவாயம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணி செய்கிறார். பழகிய பழக்கம் விட்டுப் போகவில்லை. உறவுகள் பராமரிக்கப் பெற்று வருகின்றன.

திருச்சி மாவட்டத்தில்தான் அருள்நெறி இயக்கம் நாலாந்தர மட்டத்தில் உள்ள மக்களுக்கும் சென்றது. இப் போதைய மாவட்டத் தலைவர் ப. மூக்கப்பிள்ளை, இவர் சிவபூஜை செல்வர். பழந்தமிழகத்தின் கணக்காயரை நினைவூட்டும் வகையில் படித்தவர். பண்ணோடு திருமுறை பாடுவார். விகற்பம் இல்லாது பழகுபவர்; இவருடைய முயற்சியால் திருச்சி கைலாசபுரத்தில் அருள்நெறித் திருக் கூட்டம் தோன்றி நாளும் நல்ல பணிகளைச் செய்து வருகிறது. இப்போதைய திருச்சி மாவட்டச் செயலாளர் மா. சொக்கையன் நல்லவர். இவருக்குச் சேக்கிழார் மீது ஈடுபாடு. சேக்கிழார் மண்டபம் கட்ட ஆசை! நாம் மறுத்தோம். ஆனாலும் அவர் விடாப்பிடியாக அடிக்கல் போட்டார். சேக்கிழார் மண்டபம் எழவில்லை. விநாயகர் கோயிலே தோன்றியுள்ளது. ஏன்? சேக்கிழார் மண்டபம் வேண்டாமா, சேக்கிழார் திருத்தொண்டர்களின் புகழ்பாடிப் பரவியவர்; திருத்தொண்டின் நெறி வாழப் பெரிய புராணம் செய்தவர். சேக்கிழாருக்கு உண்மையான நினைவுச் சின்னம் சேக்கிழார் பாடிப் பரவிய திருத்தொண்டர்களின் திருத்தொண்டுகளை நமது தலைமுறையிலும் செய்தலே!

1972-ம் ஆண்டு மகாசிவராத்தியன்று இரவு ‘நாயன்மார் அடிச்சுவட்டில்’ என்னும் திருத்தொண்டு வழிகாட்டிக் கையேடு எழுதப்பெற்றது. இது திருத்தொண்டு செய்வோருக்கு வழிகாட்டும்!

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை தமிழ்நாட்டில் புகழ்பெற்ற மருத்துவமனை. இந்த மருத்துவமனையை நிறுவி

வளர்த்து வருபவர் டாக்டர் ஜி. வேங்கடசாமி நாயுடு. இவர் நல்ல மருத்துவர்; பண்பாளர். இவருடைய அருமை மகள் நாச்சியார். இவர்கள் மருத்துவப் பணியைச் சேவையாக செய்துவருபவர்கள். டாக்டர் ஜி. வேங்கடசாமி நாயுடு, மதுரை ராஜாஜி அரசு பொது மருத்துவமனையில் 'டீன்' ஆகப்பணிசெய்தபோது, அருளாளர் ஒருவரின் கண் மருத்துவத்திற்காக ஒரு மாதம் நாம் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது டாக்டருடன் நல்ல பழக்கம் ஏற்பட்டது. டாக்டரிடம் கண்ணப்பநாயனார் வரலாற்றைக் கூறினோம் கண் மருத்துவத்துறைப் பார்வையில் கண்ணப்ப நாயனாரின் மருத்துவ அறிவு காலத்தால் முந்தையது என்று டாக்டர் பாராட்டினார். அதன்பிறகு அரசு பொது மருத்துவ மனையில் கண் மருத்துவப் பகுதிக்கென கட்டப்பட்ட புதிய கட்டடத்துக்கு 'கண்ணப்பர் கண் மருத்துவப் பகுதி' என்று பெயர் சூட்டப்பெற்றது. இங்ஙனம் அடியார்களைப் பின் பற்றித் தொண்டுகள் செய்வதுதான் முறை. வழிபாடு என்ற சொல்லே வழிப்படுதல் என்ற அடிப்படையில் பிறந்த சொல்லேயாம்.

தண்டியடிகள் திருவாரூர் வாழ்ந்த அடியார்; பிறவியிலேயே பார்வை இழந்தவர். திருவாரூர் கமலாலயம் பெரிய தெப்பக்குளம். ஐந்து வேலி பரப்பளவு உடையது. இது தூர்ந்து போயிற்று. இந்தச் செய்தியறிந்த தண்டியடிகள் கமலாலயத்தைத் தூர்வை அள்ளித் தூய்மை செய்ய விரும்பினார். கமலாலயத்தில் மண்ணெடுக்கும் இடத்தில் தறிநட்டு ஒரு கயிற்றின் நுனியை அதில் கட்டினார். அதற்கு எதிர்த்திசையில் கரையின் புறத்தே தறிநட்டு அதில் கயிற்றின் மறு நுனியைக் கட்டினார். கயிற்றைப் பிடித்துக் கொண்டே போய் ஒவ்வொரு தட்டாக மண்ணை அள்ளிக் கரையில் கொட்டினார். தொண்டின் ஆவேசம்!

மதுரையில் இம்மையில் நன்மை தருவார் கோயில் என்று ஒன்று இருக்கிறது! அற்புதமான திருக்கோயில். திருக்

கோயிலுக்குள்ளேயே திருக்குளம்! கட்டுமானத்துடன் கூடிய திருக்குளம்! ஆயினும் திருக்குளம் முழுதும் தூர்ந்து குப்பை மேடாகிவிட்டது. 1953-ல் தண்டியடிகள் நினைவாக 30 நாட்கள் தூர்வை எடுக்கப் பெற்றது. மதுரை மாநகர மக்கள்; மாணவர்கள், தொழிலாளர்கள் முதலியோர் ஒத்துழைப்புத் தந்தனர். இதுபோன்ற பணிகளைச் செய்வது தான் புராணங்களைப் போற்றும் நெறி!

இன்று நமது மக்களிடையே திருக்கோயில்கள், திருக் குளங்கள் இவற்றைப் பேணும் மனோநிலை அருகி வருகிறது மதுரை பொற்றாமரைக் குளம், மயிலை கபாலீசுவரர் திருக்கோயில் குளம் ஆகியவற்றின் தண்ணீர் வரத்துக்கால் களைத் தூர்த்து வீடுகள் கட்டிவிட்டனர். அதனால் தண்ணீர் வரத்து இல்லை. தெப்பக்குளம், நீர் நிலைகளை அமைத்தல் சமயஞ்சார்ந்த சமுதாய அறம் என்பதை நமது மக்கள் மறந்தது வருந்தத்தக்கது. அறம் செய்தலைவிட அறத்தைக் காப்பதுமேல் என்பதை நமது மக்கள் உணர வேண்டும்.

திருஞானசம்பந்தர் அடிச்சுவட்டில், பாலின்றி அழும் லட்சக்கணக்கான குழந்தைகளுக்குப் பால் வழங்கல், குழந்தை காப்பகங்கள் நடத்தல், அப்பரடிகள் அடிச் சுவட்டில் உழவாரத் திருத்தொண்டு செய்து நம்முடைய திருக்கோயில்களைப் பாதுகாத்தல், தண்டியடிகள் அடிச் சுவட்டில் திருக்குளங்கள் தூய்மை செய்தல் முதலிய பணி களைச் செய்யலாம். பட்டியல் போட்டால் விரிவடையும். இன்று திருத்தொண்டு செய்தால் புராணம் புத்துயிர்ப்புப் பெறும். மக்களையும் வளர்க்கலாம்; சமய நெறியையும் வளர்க்கலாம். இன்றைய உலகு அவாவி நிற்பது தொண்டு களையே!

இன்றும் திருச்சியைப் பொறுத்தவரை அனைவரும் அருள்நெறி இயக்கத்தில் உள்ளனர். அருள்நெறித் திருக் கூட்டத்துக்குக் கிடைத்த தீவிர ஊழியர் தொட்டியம் வீ. கிருஷ்ணமூர்த்தி. இன்றும் இடைவிடாது பணி செய்து

வருகிறார். அணியே திரட்டி வைத்துள்ளார். அந்த அணியில் சந்திரசேகரன் நல்ல ஊழியர். பழுத்த பழம் கீழப்பழுவூர் உ. ரத்தின சபாபதி பிள்ளை. இவர் நல்லவர்? சொன்னதைக் கேட்பவர். இவர் ஆசிரியராகப் பணி செய்த கீழப்பழுவூர்ப் பள்ளியில் தீண்டாமை விலக்குக்கு ஓர் ஆலோசனைக் கூட்டம் கூட்டப் பெற்றது. அது என்ன ஆலோசனை? மகப்பேறு இல்லாதவர்கள் ஆதிதிராவிடர் குழந்தைகளைச் சுவீகாரம் எடுத்து வளர்க்கலாம் என்பது தான் இந்த ஆலோசனை! ஆசிரியர் உ. ரத்தினசபாபதி பிள்ளை, உடனே தனது பள்ளியிலேயே படித்த ஆதிதிராவிடர் பெண் குழந்தை ஒன்றைச் சுவீகாரம் எடுத்து வளர்த்து டாக்டருக்குப் படிக்க வைத்துள்ளார். இந்த மாதிரி நாடு முழுதும் விதைக்கப்படும் சொற்கள் செயலுக்கு வந்தால் நாடு வளரும்; மக்கள் வாழ்வர்.

## 33

**சா**தி, மத வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி மோதல் களை உருவாக்குவதை எதிர்ப்பது எப்போதும் நமது பழக்கம்.

1982 மார்ச் மாதம்! கன்னியாகுமரி மாவட்டத்தில் மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் திருவிழா. அபிஷேகத்துக்குக் கடலில் தண்ணீர் எடுப்பதில் இந்து கிறிஸ்துவ சமூகங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுவிட்டது. பின் இஸ்லாமிய சமூகத்துக்கும் பரவியது. மிகவும் மோசமான கலகம்! இழப்பு ஏராளம்! துன்பமும் துயரமும் எழுதிக்காட்ட இயலாதது. கலகம் தொடங்கிய சில நாட்கள் வரை சரியாகப் போய்விடும் என்ற நம்பிக்கையில் நாம் மௌனம். பின் தணியாதது கண்டு நாகர்கோவிலுக்குச் சென்றோம். நாகர் கோவிலுக்கு வரும் தகவல் கெழுதகை நட்பும் பரிவும் கொண்ட அருமனை ஜி. ஸ்ரீகுமாருக்குத் தரப்பெற்றது. அருமனை ஜி. ஸ்ரீகுமார் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர். உயர்ந்த பண்புகளை அணிகலன்களாகக் கொண்டவர்.

திருமணம் செய்து கொள்ளாமலே சமூகப் பணி செய்து வருபவர். கடுமையான உழைப்பாளி. கால் நூற்றாண்டுக்கும் மேலாக தம்முடைய பணிகளில் ஈடுபட்டு வருபவர். காந்தி மிஷன் தலைவர். முதியோர் இல்லம் நடத்தி வருகிறார். இவர் வடசேரி பயண மாளிகையில் நம்மை வரவேற்றார். உடனே அறநிலையத்துறை, காவல் துறை, வருவாய்த் துறைகளைச் சேர்ந்த பல்வேறு அலுவலர்களுடன் ஆலோசனை! அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பி. பிராணேஷைச் சந்தித்து நிலைமைகளை அறிந்துகொண்டு, செய்ய இருக்கும் பணிகள் குறித்து ஆலோசனை செய்யப்பெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்ட காவல்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர். தொடக்கத்தில் நாம் தனியே கலவரப் பகுதிகளுக்குச் செல்வதை அவர்கள் விரும்பவில்லை. ஆயினும், நம்மால் அந்தக் கட்டுப்பாட்டை அனுசரிக்க முடியவில்லை. 'துணிவின்மைதான்' நமது நாட்டுச் சிக்கல்களுக்குப் பெரிதும் காரணம். துணிந்து தொழிற்பட்டால் எல்லாம் நன்றாக நடக்கும்! விஞ்சினால் என்ன மரணம் தானே வரும். என்றாவது ஒருநாள் இறப்பது உறுதி – இதற்கேன் பயம்?

நாகர்கோயில் ஆயர் எம். ஆரோக்கியசாமி மருத்துவ மனையில் இருந்தார். அவரைக் கண்டு அமைதிப் பணிக்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொண்டோம். உடல்நல மில்லாமல் மருத்துவமனையில் இருந்தாலும் ஊக்கத்துடன் ஒத்துழைப்பதாக உறுதி அளித்தார். மண்டைக்காடு அமைதிப் பணியில் நமக்குக் கிடைத்த தோழமை எம். ஆரோக்கியசாமி. அவர் நம்மீது அளவற்ற பரிவும் பாசமும் காட்டி வருபவர். இப்போது மதுரையில் பேராயராக விளங்குகிறார். அடுத்து, இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த எம். அகமத்கான். இவர் சிறந்த பேச்சாளர். தேர்ந்த வழக்கறிஞர். நல்ல பண்பாளர். அமைதிப் பணியில் பூரணமாக ஈடுபட்டவர். வடசேரி பயண மாளிகை நாள்தோறும் மக்கள் கூடும் பணிமனையாக வளர்ந்தது.

இந்த அமைதிப் பணியில் முழு ஒத்துழைப்பு அளித்தவர் பூஜிதகுரு பால பிரஜாபதி அடிகள். இவர் வைகுண்ட ஐயா மரபைச் சார்ந்த சமயத் தலைவர்; நல்ல இளைஞர்; ஆர்வம் நிறைந்தவர்; நன்றாகப் பேசுவார். இவர் தம்பி பால ஜனாதிபதி நல்ல வழக்கறிஞர்; தொண்டில் ஆர்வலர். மற்றும் வழக்கறிஞர் ஆர். ராஜபாண்டியன், தியாகி வைத்தியலிங்கம், எல். செங்கோட முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சுசீந்திரம் முத்துக்கிருஷ்ணபிள்ளையைச் சொல்லாமல் இருக்க இயலுமா? இவர் தொண்டர்களுக்கெல்லாம் உணவு வழங்கினார். தென்னிந்தியத் திருச்சபை ஆயர் ஜி. கிறிஸ்துதாஸ் மிகுந்த ஒத்துழைப்புத் தந்தார்.

அமைதிப் பணிக்கென தஞ்சை கோ. த. ரங்கநாதன், மேலூர் சுப. சொக்கலிங்கம், கோவை ப. ராஜேந்திரன் ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். தஞ்சை கோ. த. ரங்க நாதன் சுதந்திரப் போராட்ட வீரர். 'பலனில் பற்றின்றிப் பணி செய்க' என்ற கீதை வாசகத்துக்கு இலக்கணமானவர் மேலூர் சுப. சொக்கலிங்கம். நல்ல தேசத்தொண்டர். தீண்டாமை விலக்குப் பணியில் பல ஆண்டுகள் நம்முடன் தொடர்ந்து பணியாற்றியவர்.

நாகர்கோவிலில் தங்கி அமைதிப் பணி செய்யப் பெற்றது. தொடக்கத்தில் கடினமாகவே இருந்தது. தாணுலிங்க நாடார்-இந்து முன்னணியினர் தொடக்கத்தில் உடன்பட வில்லை. நாம் உண்ணா நோன்பு இருந்தபின் அமைதிப் பணிக்கு ஒத்துழைப்புத் தர ஒப்புக்கொண்டனர்.

ஊர் ஊராக, பாதித்த குப்பங்கள் எல்லாவற்றுக்கும் சென்றோம். குடும்பங்களையெல்லாம் சந்தித்தோம். தமிழ் நாட்டு மக்கள் நல்ல வண்ணம் நிதி, துணிகள், அரிசி முதலிய உதவிகள் செய்தனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி களும் செய்யப்பெற்றன. சேதப்படுத்தப்பட்ட பள்ளந்துறை சர்ச், மருத்துவமனை சீரமைப்புக்கு நாம் ஒரு பங்கு நிதி

தந்தோம். திங்கள் சந்தையில் இடிபட்ட பிள்ளையார்கோயில் கிறிஸ்தவர்கள் சார்பில் ஆயர் செலவில் கட்டப்பெற்றது. பின் மூன்று சமயத்தாரும் சேர்ந்து ஊர் தோறும் ஊர்வலமாக (சாலைகளில் கார் பயணமாக) அமைதிப் பயணம் சென்று ஒருவாறாக அமைதிப் பணி முடிந்தது. நாகர்கோவில் சுழற்குழு பாராட்டு செய்தது.

குன்றக்குடிக்குப் பயணமாகும் முதல் நாள் இரவு கன்யாகுமரியில் அனைத்து சமயத்தினரும் ஒரு விருந்து கொடுத்தனர். அந்த விருந்தின்போது நடந்த கலந்துரையாடலில் பிறந்த இயக்கம்தான் திருவருட் பேரவை. பேராயர் எம். ஆரோக்கியசாமி ஆலோசனையின் மீது தொடங்கப் பெற்றது. இன்று தமிழ்நாட்டில் 'திருவருட் பேரவை' நாளும் வளர்ந்து வருகிறது. பாபர் மசூதி இடிப்பின்போது தமிழ்நாட்டின் பல இடங்களில் சந்தடியில்லாமல் அமைதியைக் காத்த பெருமை திருவருட்பேரவை இயக்கத்துக்கு உண்டு. குறிப்பாக மதுரை, தஞ்சை மாவட்ட அமைப்புகள் சிறப்பாகப் பணி செய்து மோதல்களைத் தவிர்த்திருக்கின்றன.

குமரி மாவட்ட அமைதிப் பணியின் போது தமிழக முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர்., அமைதிப் பணியைப் பற்றி அடிக்கடி அக்கறையோடு கேட்டறிந்தார். ஏன்? நமக்குப்போதிய பாதுகாப்புக்கு காவலர்களை அனுப்பும்படி பணித்திருக்கிறார். நாம் வேண்டாம் என்று மறுத்து விட்டோம். இடையில் அமைதிப் பணி பற்றியும் எதிர்காலம் பற்றியும் தமிழக முதல்வரைச் சென்னையில் கண்டு கலந்து பேசினோம். பரிந்துரைகள் முழுதும் ஏற்கப் பெற்றன. மக்கள் நலத்தில் கௌரவப் பிரச்னையின்றி முதல்வர் எம்.ஜி.ஆர். காட்டிய ஆர்வம் என்றும் நினைவு கூரத்தக்கது.

அமைதிப்பணி நிறைவெய்திய நிலையில் மண்டைக் காடு பகவதியம்மனுக்குக் கடலில் மூழ்கித் தண்ணீர் எடுத்துச்

கு.XVI.15.

சென்று திருமுழுக்கு செய்யப் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான இந்து சகோதரர்களும் சகோதரிகளும் கலந்துகொண்டனர். மண்டைக்காடு அமைதிப் பணி குறித்து முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 29-3-82-ல் சட்டமன்றத்தில் பாராட்டினார். 'மடாதிபதிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டுமே தவிர வேறு வழிகளைப் பின்பற்றக் கூடாது' என்று பாராட்டியது நினைவில் நின்று பணிகளில் ஈடுபடுத்துகிறது. இனி எதிர்வரும் காலத்திலும் ஈடுபடுத்தும்.

மண்டைக்காடு தந்த படிப்பினை என்ன? எந்தக் காரணத்தை முன்னிட்டும் கலகம் செய்யக்கூடாது. கலகம் மனித உயிர்களைக் காவுகொள்கிறது. பொருள் இழப்பு ஏற்படுத்துகிறது. சில பல குடும்பங்களுக்கு ஈடு செய்ய இயலாத துன்பத்தைத் தந்துவிடுகிறது. எந்தவொரு பகுதியிலும் மக்கள் சாதி அடிப்படையிலோ மத அடிப்படையிலோ தனித்து ஒதுங்கி ஒரே கும்பலாக வாழக் கூடாது. பலரும் கூடி வாழ்தல் வேண்டும்.

**ஒருவன் தன்னுடைய சமயத்தைப் பற்றி உயர்த்திப் பேசவும் அந்தச் சமயத்தில் நின்றொழுகவும் உரிமை உண்டு. ஆனால், மற்ற மதங்களை ஒப்பு நோக்கியும், தாழ்த்தியும் பேசுவது தவிர்க்கப்படுதல் வேண்டும்.** பொதுவாக, மதம் அனுட்டானத்துக்குரியது. பிரசாரத்துக்கு உரியதல்ல என்பதை நாம் அனைவரும் உணர்தல் வேண்டும். மதம் பிரச்சார வடிவம் கொள்ளுமானால் பூசலே உருவாகும்.... வளரும். மதம், கடவுளைப் போற்றுவது, மனிதனை வளர்ப்பது. இவையே மதத்தின் கொள்கை, கோட்பாடு என்று கொண்டால் வம்பில்லை. கடவுளே வான் பழித்து இம்மண் புகுந்து மனிதனை ஆட்கொள்கிறான் என்றால் மனிதனைப் பயமுறுத்துவதும் கொல்வதும் எப்படி மதமாக இருக்க முடியும்?

## 34

குன்றக்குடிக்கு அருகில் கொரட்டி என்ற சிற்றூர் உள்ளது. கொரட்டியில் 1977–ல் திடீர் திடீர் என்று வீடுகளில் தீப்பிடித்தது. காவலில் நிற்கவில்லை; மந்திரங்கள், பூஜைகளாலும் நிற்கவில்லை, இச்சமயத்தில் வீடுகள் எரிந்த சாம்பலை வைத்துக் கண்டுபிடிக்கலாம் என்று கருதி காரைக்குடியில் மத்திய மின்வேதியியல் விஞ்ஞானிகளை அணுகினோம். நான்கு விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அவர்களின் ஆய்வு, முடிவினைத் தரவில்லை. அப்போது தனித்தனியே அவரவரைப் பாதிக்கும்படியான ஒரு செயலைச் செய்ததில் அடங்கியது. தேங்காய்களை மந்திரித்து ஊரார் ஒவ்வொருவருக்கு ஒன்று கொடுத்து, "தீ வைக்கிறவர் யாரோ அவர் வீட்டில் உள்ள தேங்காய் உடையும். உடனே அந்த வீட்டில் மரணம் நேரும்" என்று சொல்லப்பட்டது. கொடுத்தபிறகு தீப்பிடிக்கவில்லை. தன்னைச் சுடும் என்றால் ஏற்படும் பயம் பிறரைச் சுடும் என்றபோதும் தேவை அல்லவா?

இளமைக் காலம் தொட்டு நம்மிடம் வளர்ந்து வந்த மனிதநேயம் 'திருக்கோயில்களைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய திருக்கோயில்களும்' என்ற கோட்பாடாக உருப்பெற்றது. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் நமது ஆதினத் திருக்கோயில்களின் விழாக்களில் சமுதாய மேம்பாட்டுக் கருத்தரங்குகள், ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பெற்றன. முதற்கூட்டம் 1962–ல் திருப்பத்தூர் திருவிழாவின்போது நடந்தது. இதன் செயற்பாடாகக் குன்றக்குடியில் மருதுபாண்டியர் காதி கிராமத் தொழிற் கூட்டுறவு சங்கமும் நேருஜி காகித அட்டைப் பெட்டி செய்யும் தொழிலும் தொடங்கப் பெற்றன. இது மெள்ள வளர்ந்து கிராமத் திட்டக்குழுவாக 1977–ல் வடிவம் பெற்றது.

விஞ்ஞானி சி.வி. சூரியநாராயணன் திட்டக்குழுவின் முதல் தலைவர் பொறுப்பை ஏற்றார். இவர் மனிதநேயம் மிக்கவர். குன்றக்குடி மேல்நிலைப்பள்ளிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட விஞ்ஞானப் புத்தகங்கள் வழங்கினார். திட்டக் குழுவின் இரண்டாவது தலைவர் பி.ஏ. ஷெனாய் காலத்தில் திட்டப்பணிகள் ஒரு வேகத்தைப் பெற்றன. அன்றைய இயக்குநர் கே.எஸ். ராஜகோபாலன் குன்றக்குடி பாரதி பொட்டாசியம் குளோரைடு தொழிற்சாலை தோன்றியது இந்தக் கால கட்டத்தில்தான்.

அடுத்து மத்திய மின்வேதியியல் ஆய்வகத்துக்கு இயக்குநராக வந்த பேராசிரியர் கை. இ. வாசு பணிபுரிந்த போது கிராமப்புறத்துக்கு விஞ்ஞானம் எடுத்துச் செல்லும் பல புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அடுத்து இயக்குநர் பொறுப்பேற்ற எஸ்.கே. ரங்கராஜன் காலத்தில் மேலும் சிறப்பாகப் பெயர் படுத்தப்பட்டன. திட்டக்குழுவின் அடுத்த தலைவர் டாக்டர் கே. பாலகிருஷ்ணன். கடின உழைப்பாளி. நன்றாகவே வேலை வாங்குவார். இன்று நாம் பதில் சொல்லும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பது டாக்டர் கே. பாலகிருஷ்ணனுக்குத்தான்! இன்று திட்டக்குழு கிராமப்புற அறிவியல் மையம், வளர்ச்சி மையம், சுதேசி விஞ்ஞான இயக்கம் என்றெல்லாம் கிளை பரப்பி வளர்ந்து வந்துள்ளது. இந்தப் பணிகளில் இன்று மத்திய மின் வேதியியல் ஆய்வக இயக்குநராக பொறுப்பேற்றிருக்கும் ஜி.வி. சுப்பாராவ் மற்றுமுள்ள மின்வேதியியல் ஆய்வக விஞ்ஞானிகள் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்கின்றனர்.

இப்படிக் கிராம வளர்ச்சித் திட்டப்பணிகளில் பல நூறு பேர் பங்கு பெற்றிருக்கிறார்கள். பெயர்களை எடுத்தெழுத இயலாது.

கிராமத் திட்டப்பணிகள், தொழிற்சாலை அமைவுகள் பற்றிய வரலாறு கணியூர்க் குடும்பம் தந்த கொங்கு நாட்டுச்

செல்வம் கே.ஏ.கே-யை வட்டமிடும். கே.ஏ.கே. திருக்குறள் வழி நமக்கு அறிமுகம். தொடர்ந்து வரும் ஒரு புரவலர்...

இன்று குன்றக்குடி கிராமம் நாட்டில் உள்ள பல அறிவியல் ஆய்வு மையங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. தொழில் நுட்பம் வாங்கியிருக்கிறது. மத்திய தோல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் விஞ்ஞானி டாக்டர் ஜி. தியாகராஜன் மிகவும் அக்கறை காட்டுகிறார். இவர் ஹைதராபாத் மத்திய அறிவியல் ஆராய்ச்சி மையத்தில் இருந்த போது முந்திரி எண்ணெயிலிருந்து வண்ணப் பூச்சுக்குரிய பெயிண்ட் செய்யும் தொழில் நுட்பத்தைத் தகுதிக் கட்டணம் இல்லாமலே கொடுத்து உதவி செய்தார். இன்று இவர் முயற்சியால் ஐ.நா. சபையின் உதவியுடன் தோல் தொடர்பான தொழில் மையம் ஒன்று, குன்றக்குடியில் எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டில் தொடங்க இருக்கிறது. மேலும், முன்பு மத்திய அறிவியல் ஆய்வு மையமாக இருந்தது இன்று Indian Institute of Chemical Technology என்ற பெயரில் விளங்குகிறது. இதன் இயக்குநர் விஞ்ஞானி ராமாராவ் ஆமணக்கு எண்ணெய் அடிப்படையிலான தொழில் நுட்பம் தந்து உதவியுள்ளார். விளக்கெண்ணெய் என்று சொல்லப் படும் ஆமணக்கு எண்ணெய் விலைமதிப்புள்ள பொருள். அயல்நாட்டு செலாவணி சேகரிக்கக் கூடியது. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் செம்மண் பூமி. மூன்றுமாத வித்து ஆமணக்கு மழையிலேயே விளைவிக்கலாம். மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் உப்பு நிலங்கள் மேம்பாட்டுத்திட்டம் ஒன்றை குஜராத் மாநிலம் பவநகரில் உள்ள உப்பு அறிவியல் ஆராய்ச்சி மையம் தந்துள்ளது. இதைப்போன்று பெங்களூர் உணவு ஆராய்ச்சி மையம் என். ஆர். டி. ஸி. ஆராய்ச்சி நிறுவனம் போன்றவைகளும் தொழில் நுட்பங்களைத் தந்துள்ளன. இன்று குன்றக்குடி கிராமம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலாம் ஆண்டைக் கடந்து சென்று கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத்

திட்ட முடிவில் தன்னிறைவு பெறவேண்டும். இது நமது இலக்கு. திட்டப் பணிகள் வளர்ச்சித் தன்மை பொருந்தியவை. வளர்ச்சிக்கு ஏது முற்றுப்புள்ளி?

இனம், சாதி, மதம், அரசியல் கட்சி வேற்றுமைகள் இல்லாமல் ஒரு கூட்டுக் குடும்பமாகக் குன்றக்குடி வளர்ந்து வந்தது. வளர்ந்து கொண்டிருக்கிறது. தேவை - போதிய விழிப்பு உணர்வு. ஊழியர்களின் அயர்விலா உழைப்பு. குறிப்பாக, இளைஞர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

குன்றக்குடி ஒரு மாதிரி கிராமமாக முழுமையடைந்து விடின் நமது பிறப்பின் நோக்கம் நிறைவேறும்.

## 35

இளமைக் காலம் தொட்டே நமக்குத் தேசியத் தலைவர்களிடத்தில் அளவற்ற ஈடுபாடு. அவர்களுள்ளும் அமரர் பண்டித ஜவஹர்லால் நேருவிடம் மிகவும் ஈடுபாடு. **பண்டித ஜவஹர்லால் நேரு, தம் அருமை மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களையும் (உலக சரித்திரம் என்ற புத்தகம்) 'கண்டுணர்ந்த இந்தியா' Discovery of India** என்ற புத்தகத்தையும் இந்த நாட்டு இளைஞர்கள் அனைவரும் படிக்கும்படி செய்யவேண்டும். இந்த நூல்கள் நாட்டுப் பற்றையும் சமூக சிந்தனையையும் தருவதில் தலை சிறந்தவை. இந்த நூல்களை நாம் பல தடவை படித்ததன் பயன் இன்றைய குறிக்கோள்.

இந்திய வரலாற்றின் சிற்பியாக - ஒப்பற்ற தலைவராக விளங்கிய நேருஜியின் காலம் பொற்காலம். நேருஜி இந்த நாட்டைச் சரியான திசையில் அழைத்துச் செல்ல அடி அடியாக எடுத்து வைத்தார். உள்ளேயும் சரி - வெளியேயும் சரி, அவர் சந்தித்த சோதனைகள் கணக்கில.

1957-62-ல் பண்டித நேரு அமைச்சரவையில் மரகதம் சந்திரசேகர் சமூகநலத்துறை அமைச்சராக இருந்தார்.

மரகதம் சந்திரசேகர் லண்டனில் படித்தவர். ஆயினும் பாரதப் பண்பாட்டைப் போற்றி வளர்த்தவர்; வளர்த்து வருபவர். அமரர் நேரு குடும்பத்துடன் நல்ல உறவு உடையவர். நம் மீது பரிவு மிகவும் உடையவர்.

1960-ம் ஆண்டில் நாம் மத்திய சமூக நலக்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பெற்றோம். ஆறு ஆண்டுகள் இந்தப் பொறுப்பில் இருந்து பணி செய்ய நேர்ந்தது. இந்தப் பொறுப்புக் காலத்தில் தமிழ்நாட்டளவில் ஆதிதிராவிடர்கள் மேம்பாடு குறித்துப் பயணங்கள் மேற்கொள்ளும் இனிய வாய்ப்புக் கிடைத்தது. சமூக நலக் குழுவில் இருந்தபோது நம்முடைய சமூகச் சிந்தனை ஒன்று வெற்றி பெற்றது. அது என்ன? மீண்டும் ஜாதிச் சிக்கல்தான்! ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்களில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை மட்டுமே சேர்த்தார்கள். இப்படி மாணவர் களைப் பிரித்து வளர்த்தால் - என்று தீண்டாமை போவது? தீண்டாமை என்பது ஆதிதிராவிடர்களிடம் இல்லையே! மற்ற ஜாதியாரிடம் உள்ள மனப்பான்மைதானே தீண்டாமை. இவர்கள் தீண்டாமையிலிருந்து விலகினால் தானே தீண்டாமை அகலும்; நீங்கும். அன்றும் - இன்றும் இந்த முயற்சி மிகவும் குறைவு. ஆதலால், ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் நூற்றுக்குப் பத்து மாணவர்கள், இதர ஜாதிப் பிரிவு மாணவர்களைச் சேர்க்கவேண்டும். கங்கையும் காவிரியும் கலப்பதற்கு நாளானாலும் ஜாதிகளைக் கலக்கும்படி செய்ய வேண்டும் என்ற கருத்தை அரசுக்குப் பரிந்துரை செய்தோம். அரசு ஏற்றுக்கொண்டது; இன்றும் நடைமுறையில் உள்ளது. நமது ஆதீன நிர்வாகத்தில் திருப்பத்தூர் மடத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஒன்று நடந்தது. இந்த விடுதியிலும் இது நடைமுறைக்கு வந்தது. இந்த விடுதியில் தங்கிப் பயின்ற மாணவர் ஒருவர் வடவன்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். ஐ.ஏ.எஸ். தேர்ச்சி பெற்று இன்று இந்திய அரசின் உயர் அலுவலராகப்

பணியாற்றி வருகிறார். மிகச் சிறந்த மதிநுட்பம் படைத்தவர்; நல்ல நிர்வாகி. அவர்தாம் ஏ.ஆர். சுப்பய்யர்!

நல்ல முறையில் பணி செய்துவரும் தமிழ்ச் சங்கங் களில் டெல்லி தமிழ்ச் சங்கம் முதன்மையானது. டெல்லி தமிழ்ச்சங்கம் கொண்டாடிய பாரதி விழாவில் ஜவஹர்லால் நேருவுக்குப் பக்கத்தில் இருக்கவும் அவர் முன் பேசவும் கூடிய இனிய வாய்ப்பு நமக்குக் கிடைத்தது. அளவற்ற மகிழ்ச்சி. ஆதர்ச புருஷராக விளங்கியவர் அருகில் நிற்கவும் பேசவும் வாய்ப்புக் கிடைத்தால் மகிழ்ச்சிக்குச் சொல்லவும் வேண்டுமோ? அப்போது டெல்லிக்குச் செல்லும்போது 'சட்டை' அணிந்த கோலம்.

பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் கல்விப் புரட்சி நடந்தது. தாமரைச் செல்வர் நெ.து. சுந்தரவடிவேலு தமிழ்நாடு கல்வி இயக்குநர். நெ.து. சுந்தரவடிவேலு சிறந்த சமூகச் சிந்தனையாளர். தமிழ்நாட்டில் கல்வியை மக்கள் இயக்கமாக்கிய பெருமை சுந்தரவடிவேலு அவர்களுக்கே உரியது. வீதிகள்தோறும் வீடுகள்தோறும் கல்வியைப் பற்றியே பேச்சு! பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள். பள்ளிகளுக்கும், பள்ளிகளின் மேம்பாட்டுக்கும் பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பெற்றன. இயக்குநர் சுந்தரவடிவேலு நிறையப் பயணம் செய்தார்; பேசினார் அவருடைய பேச்சு தூண்டு கோலாக விளங்கியது. 'இத்தகையதொரு பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை ராமநாதபுர மாவட்டத்தில் நடத்தவேண்டும்... அதற்குப் பண்டித ஜவஹர்லால் நேருவை அழைக்கவேண்டும்'. இது நமது விருப்பம். இயக்குநர் நெ.து. சுந்தரவடிவேலு ஏற்றுக் கொண்ட விருப்பம். பெருந்தலைவர் முதலமைச்சர் காமராஜரும் இசைவு தந்துவிட்டார். மாநாட்டுப் பணிகள் சுறுசுறுப்பாக நடந்தன.

பாரதப் பிரதமர் வருகிறார் என்ற காரணத்தால் நன் கொடைகள் குவிந்தன. ஆனால், பாரதப் பிரதமரின் வருகை தள்ளிக்கொண்டே போயிற்று.

இடையில் கேதார் யாத்திரை செல்ல நமக்கு விருப்பம். பயணம் தொடங்கியாயிற்று. திருவேணியில் இடைத்தங்கல் இருந்தபோது நேரு குன்றக்குடிக்குப் பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுக்கு வர நாள் கொடுத்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது. கேதார் யாத்திரைத் தொடர்ந்து மேற் கொள்ளாமல் குன்றக்குடிக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. பள்ளிச் சீரமைப்பு மாநாட்டு வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன. இடையில் மாநாடு நடக்கும் இடம் பற்றிய சிக்கல் தோன்றியது.

கலைத் தந்தை கருமுத்து தியாகராச செட்டியார் ஆ. தெக்கூரில் புதிய பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டியிருந்தார். அதை நேருவைக் கொண்டு திறக்கவும் விரும்பினார். பெருந் தலைவர் காமராஜர் “பெருஞ்செலவு வருமே! ஆதலால், ஆ. தெக்கூரில் நடத்தும் பொறுப்பை கருமுத்து தியாகராச செட்டியாரிடம் ஒப்படைக்கலாமே! இதமாக அடிகளாரிடம் கேட்டு முடிவு செய்யுங்கள்” என்று இயக்குநரிடம் கூற, இயக்குநர் தயக்க உணர்வுடன் நம்மிடம் ஆலோசனை கேட்டார். கருமுத்து தியாகராச செட்டியார் கேட்கும் நிலையில் நாம் எந்த ஆட்சேபணையும் கூறவில்லை. நேருஜி குன்றக்குடி வழியாக ஆ. தெக்கூர் வருவதாகத் திட்டம் தீட்டப்பெற்றது. அனுபவங்கள் வேறுமாதிரியாக அமைந்தன.

1959-ம் வருடம் ஏப்ரல் 15-ல் நேருஜியும் வந்தார். ஆனால், குன்றக்குடியில் நாம் இருந்து வரவேற்கத்தான் இயலவில்லை. பள்ளிச் சீரமைப்பு மாநாட்டுப் பணிகள் காரணமாக ஆ. தெக்கூரிலேயே தங்கவேண்டிய நிலை, ஆனால், “குன்றக்குடியில் மிகவும் சிறப்பான வரவேற்பு!”

என்று நெருக்கடியான நிலையிலும் பாகனேரி ஆர். வி. சுவாமிநாதன் கூறினார்.

நேருஜி ஆ. தெக்கூருக்கு வந்தார். மேடைமீது ஏறினார். கலைத் தந்தை கருமுத்து தியாகராச செட்டியாரும் நாமும் பொன்னாடை போர்த்தி, சந்தன மாலை அணிவித்து வரவேற்றோம். நமது இளமைப் பருவத்தில் தேசத் தலைவர் களைக் கண்டால் தேசிய முழக்கங்கள் விண்ணைப் பிளக்கும். காங்கிரஸ் தொண்டர்கள் தலைவருக்குப் பாதுகாப்பு வளையம் அமைத்து அழைத்து வருவர். கூடவே பாதுகாப்பார்கள். தலைவரைப் போலீஸ் காவலில் ஒப்புவித்து விட்டு வேடிக்கை பார்க்கும் பழக்கம் இருந்ததில்லை. இந்தப் பழக்கம் இப்போது காங்கிரஸுக்கு அருகி வருகிறது. ராஜீவ்காந்தி மரணத்துக்குக்கூட இது ஒரு காரணம். நேருஜி, கடல் போல் இருந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்து, கைகளைக் கூப்பி வணங்கினார். மாநாட்டில் **"நாட்டின் வளர்ச்சி மக்களின் கைகளிலேயே இருக்கிறது"** என்று கூறினார். பள்ளிச் சீரமைப்பு முயற்சிகளைப் பாராட்டினார்.

1964 ஜனவரியில், புவனேசுவரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் நேருஜியின் உடல்நிலை பாதிக்கப்பெற்றது. அதற்குப் பிறகு நடந்த பாராளுமன்றக் கூட்ட நடவடிக்கை களைப் பார்க்கவும், நேருஜியைப் பார்க்கவும் அனுமதி பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றிருந்தோம்.

## 36

**பா**ராளுமன்றத்தில் கேள்வி நேரம்... பிரதமர் பதில் அளிக்க வேண்டிய கேள்விகள் வந்தன. உடல் நலம் பாதித்த நிலையில் நேருஜியால் எளிதாக எழுந்திருக்க இயலவில்லை. பாராளுமன்றத்தில் இருந்த அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர்களும் அவரை உட்கார்ந்தபடியே பதில் சொல்லும்படி ஒருமுகமாகக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், நேருஜி அதை மறுத்ததோடு, "இந்த நாட்டின் மிக

உயர்ந்த இடம் பாராளுமன்றம்தான். பாராளுமன்றத்தின் மரபுகளைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்" என்று கூறினார். நேருஜி போன்ற தலைவர்கள் பாராளு மன்றத்துக்குக் கொடுத்த பெருமை என்ன! உயர்வு என்ன! இன்று நாம் பாராளுமன்றத்துக்கும், சட்டமன்றங்களுக்கும் கொடுக்கும் மரியாதை என்ன? தொலைக்காட்சி எடுத்துக் காட்டலாமா... வேண்டாமா என்று ஆலோசிக்க வேண்டியுள்ள நமது நிலை இரங்கத் தக்கது!

1964-ம் ஆண்டு மே 27-ந் தேதி நேருஜி அமரரானார்.

நேருஜி நிலச் சீர்த்திருத்தச் சட்டம் செய்வதிலும் விவசாயிகளின் உரிமைகளைக் காப்பதிலும் ஆர்வம் பெரிதும் காட்டினார். எல்லா மாநில அரசுகளும் நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் இயற்றின. அரசியல் சட்டத்துக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளில் சொத்துரிமையும் ஒன்று. ஆனால், இந்திய உச்சநீதிமன்றம் நிலச் சீர்திருத்தச்சட்டம் செல்லாது என்று தீர்ப்பளித்துவிட்டது. உடனே அரசியல் சட்டத்தைத் திருத்த, பாராளுமன்றம் கூடியது. 17-வது திருத்தம் - பாராளு மன்றத்தில் சட்ட அமைச்சரின் கடுமையான வாதத்துக்குப் பிறகு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பாராளுமன்றத்தில் ஆளுங்கட்சி காங்கிரஸுக்குப் பெரும்பான்மையிருந்தும் சட்டத்திருத்தம் தோற்றுவிட்டது. இந்தத் தோல்வி நேருஜிக்குக் கடுமையான பாதிப்பைத் தந்துவிட்டது. உடன் திரும்பவும் மறுவாக்குக் கொண்டுவர வேண்டும் என்று நேருஜி வற்புறுத்தினார். பாராளுமன்றத்தின் மறு ஆய்வுக்கு நாள் குறிப்பிட்டு அறிக்கை தரும்படி கூறிவிட்டு குளு பள்ளத் தாக்குக்கு ஓய்வெடுக்கப் போனார்.

ஓய்வெடுத்த பிறகு புதுடெல்லி திரும்பினார். அரசியல் சட்டம் 17-வது திருத்தம் நிறைவேற்றுவதற்காகப் பாராளு மன்றம் கூடுகிறது. இரவு நேரத்தில் வீட்டுக்குச் சென்று வழக்கமான கடமைகளைச் செய்துவிட்டுப் படுத்தவர்

திரும்ப எழுந்திருக்கவில்லை; உயிர் பிரிந்துவிட்டது. ஏன் பிரிந்தது? மறுநாள் பாராளுமன்றத்தில் 17–வது திருத்தம் நிறை வேறுமா? விவசாயிகள் உரிமை பெறுவார்களா என்ற கவலை நேருஜியின் உயிரைக் குடித்து விட்டது! அதனால் தானே அவர் தமது உயிலில் 'தமது உடலை எரித்த சாம்பலை இந்த நாட்டு உழவர்கள் உழும் வயல்களிலே தூவுங்கள்' என்று எழுதினார். இதை 'நான் இந்த நாட்டு உழவர்களுக்கு வேறு ஒன்றும் செய்ய இயலவில்லை. என் சாம்பல்தான் இந்த உழவர்களுக்கு!' என்று நினைத்து ஆற்றாமை தாளாமல் எழுதியிருக்க வேண்டும். இன்னமும் நம்முடைய நாட்டில் நிலத்தின் அடிப்படைச் சிக்கல்கள் தீர்ந்தபாடில்லை. இந்த நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருப்பவர்களில் பெரும்பாலோர் விவசாயிகளே! என்று கலி தீரும்?

நேருஜி அமரரான அன்று குன்றக்குடியில் காகிதப்பை தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்ப விழா. ஆனால், நேருஜி அமரரான துயரம் காரணமாக விழா இல்லாமல் தொழில் தொடங்கப் பெற்றது. அதுதான் இன்று 'நேருஜி பாலிதீன் கூட்டுறவுத் தொழிற்சாலை'யாக வளர்ந்து அறுபது பெண் களுக்கு வேலைவாய்ப்புத் தந்திருக்கிறது. நேருஜியின் நினைவுச் சின்னமாக அமைந்தது இந்தத் தொழிற்சாலையே!

ஓர் ஆன்மாவின் பயணம், நெடிய பயணமாகவே நடந்திருக்கிறது; வாழவேண்டிய அளவுக்கு வாழ்ந்திருக்கிறது. ஆனால், பயன் என்ன? இது அடுத்துவரும் தலைமுறை எடுக்கவேண்டிய முடிவு! நமது நிலையில் நிறை இல்லை யானாலும் குறையில்லை. தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் அங்கீகாரம் தந்தன. அதிலும் நாம் ஒரு மத நிறுவனத்தைச் சேர்ந்திருந்தும் திராவிடர் கழகம், பகுத்தறிவுக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் அங்கீகாரம் கிடைத்தது. இது ஒரு மகிழ்ச்சியான செய்தி.

தமிழ்நாட்டின் செய்தித்தாள்கள், இதழ்கள் போதிய அளவு ஒத்துழைத்தன. 1955–ம் ஆண்டில் நாம் இந்தோ

னேஷியா சென்றிருந்தோம். அப்போது - ஜகார்த்தாவில் வரலாற்றுச் சின்னம் என்ற அடிப்படையில் அந்த நாட்டு அரசு பழைய சிவன்கோயில் ஒன்றின் இடிபாடுகளை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தது. தென்கிழக்காசியாவில் ஒரு பழைய சிவாலயத்தைப் பார்த்ததில் நமக்குக் கொள்ளை மகிழ்ச்சி! அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களுடன் நாமும் சேர்ந்து கல்தூக்கிக் கொடுக்கும் சிற்றாள் வேலை செய்தோம். அந்தச் சமயம் எடுக்கப்பட்ட புகைப்படம் தமிழ் நாட்டுக்கு வந்து ஆனந்த விகடனில் வெளிவந்தது.

தமிழ்நாட்டு மக்கள் அன்பைப் பொழிகிறார்கள். ஆனால், ஒரு குறை! அழைத்திடும்போது வரமாட்டார்கள்! ஏன்? நாம் ஜாதி, மொழி, மதம் பெயரில் மக்களைத் திரட்ட விரும்பியதில்லை. இனிமேலும் விரும்பமாட்டோம். நமது நாட்டு மக்களோ ஏதாவது ஒரு வகையில் சிக்கியிருக் கிறார்கள். அதனால், நமக்குப் பின்னால் வெறிபிடித்த கூட்டம் இல்லை. ஜாதிச் சங்கங்களின் விழாக்களில் கலந்து கொள்வதில்லை என்ற நெறிமுறையைப் பின்பற்றுகிறோம். துறவிக்கு ஜாதி இல்லை என்பார்கள். ஆனால், நமது நாட்டில் துறவிகள்தான் ஜாதிகளைப் பாதுகாக்கிறார்கள்.

இந்து சமயம் உண்மையில் உயர்வானது; உலகம் தழுவியது. ஆனால், அதை இடையில் சின்னஞ்சிறு குட்டிச் சுவர்களை எழுப்பிக் கெடுத்துவிட்டார்கள். இதுவே குறை. இந்தக் குறையை நீக்க நாயன்மார்களும் ஆழ்வார்களும் சுவாமி விவேகானந்தரும் அருட்பிரகாச வள்ளலாரும் முயன்றனர். போதிய பயன் கிடைக்கவில்லை. வரலாறு என்பது ஒரு நாள் நிகழ்ச்சியல்லவே! தொடர்கதை தான். அதனால், இந்தச் சிந்தனை வாழ்வு மேலும் தொடர்ந்து நடக்கும். நமது வாழ்வில் புதிய சித்தாந்தங்கள் எதுவும் காணவும் இல்லை. காண ஆசையும் இல்லை. ஏன்! நமது பழமை 'மனிதம்' தழுவியது; செறிவானது; செழிப்பானது; நீதி

சார்ந்தது. பழமை வாய்ந்த மரபுகளைப் புதுப்பித்தாலே போதும்! இதுவே நமது குறிக்கோள்.

நமது சமுதாயம் வேற்றுமைகள் அனைத்தையும் கடந்து ஒன்றுபட வேண்டும். ஒருமைப்பாட்டு உணர்வில் கலந்து ஒரு குலமாகிக் கூடிவாழ்தல் வேண்டும். நமது திருக்கோயில்கள் விளக்கமுறுதல் வேண்டும். திருக்கோயில்களைத் தழுவிக் குடிகள் வாழ்தல் வேண்டும். திருக்கோயில்கள் குடிமக்களைத் தழுவி நிற்க வேண்டும். நாட்டு மக்களில் கடைக்கோடி மனிதனுக்கும் தேற்றம் வேண்டும். தமிழ், துறை தோறும் வளரவேண்டும். நாட்டு மக்கள் வறுமை – ஏழ்மையிலிருந்து மீட்கப்படுதல் வேண்டும். இந்தக் குறிக்கோளுடன் தொடங்கப்பட்ட வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. நடக்கவேண்டிய தூரம் அதிகம். ஆதலால், விரைவில் நடந்து முடிக்க அடுத்து வருபவர்கள் விரைந்து வந்து உதவுவதன் மூலம் வரலாற்றின் ஏடுகளை நிரப்ப உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

இந்தப் பயணத்தின் முன்னோடிகளாக நாம் ஏற்றுக் கொண்டவர்கள் திருவள்ளுவர், அப்பரடிகள், ஜவஹர்லால் நேரு, கார்ல் மார்க்ஸ், திரு.வி.க. முதலியோர். நமது வாழ்க்கையில் ஊக்குவிப்புச் சக்திகளாகப் பெருந்தலைவர் காமராஜரும், தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் இருந்தார்கள். இன்று நம்முடைய வாழ்வில் துணையாக – இயக்கும் சத்தியாகக் காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆய்வக விஞ்ஞானிகள் விளங்குகின்றனர்.

பொதுப்பணி என்றால் வங்கிகளின் உதவி தேவை. ஒரு நாள் திருப்புத்தூர் ஸ்டேட் வங்கி மேலாளர் என். சீனிவாசன் டெப்பாசிட் திரட்டுவதற்காக வந்தார். நாம் நாட்டுடைமை யாக்கப்பட்ட வங்கிகள் மீது ஒரு தவறான கருத்தைக் கொண்டிருந்தோம். ஆதலால், அவர் வந்தவுடன் "இங்கு ஏது டெப்பாசிட்? உங்கள் வங்கி மூலம் கிராமங்களுக்கு, ஏழை

களுக்கு உதவி செய்யமாட்டீர்கள்!" என்று பேசி விட்டோம். அவர் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "டெப்பாசிட் அப்புறம் வாங்கிக் கொள்கிறேன். இப்போது என்ன செய்யவேண்டும்? உத்தரவு!" என்றார் அமைதியாக. 'குன்றக்குடி மாதிரித் திட்டம்' சிற்பிகளில் இந்த சீனிவாசனும் ஒருவர்! இப்போது சென்னையில் மாநில அலுவலகத்தில் விவசாயப் பிரிவில் பணி செய்கிறார். அன்றிலிருந்து இன்று வரை பாரத ஸ்டேட் வங்கி தாய்போல உதவி வருகிறது. மேலும் மத்திய வங்கி, இந்தியன் வங்கி, மதுரை வங்கி மற்றும் கனரா வங்கியும் உதவி செய்து வருகின்றன.

நம்முடன் கூடவே நடந்தும் ஓடியும்வரும் உதவி யாளர்கள் அனைவருக்கும் நன்றி! ஆனாலும் வேகம் போதாது என்பதை இவர்கள் உணர வேண்டும்.

பொது வாழ்க்கையில், இயக்க வாழ்க்கையில் நமக்கு உறுதுணையாக இருந்தவர்களின் பெயர்களைப் பட்டியல் போட்டால் நீண்டுகொண்டே போகும்... எழுதியவர்களை விட எழுதாதவர்கள் அதிகம்! எல்லோருக்கும் நன்றி! நமது பயணத்தில் கூட வரும் கடமைப் பாடுடையவர்கள் கூட வராமல் முந்துவார்களாக!

சராசரி வாழ்வு நிறைவேறியிருக்கிறது. பல்வேறு களங் களில் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. மனநிறைவு இல்லாது போனாலும் மனக்குறையில்லை. ஆயினும் இலக்குகள் எட்டாக்கனிகளாகவே இருப்பது நெஞ்சை அழுத்துகிறது. நமது இலக்கு-குறிக்கோள் தற்சார்புடையது அல்ல. சமுதாய வரலாற்றுடன் தொடர்புடைய குறிக்கோள். அதாவது, வலிமையும் வளமும் வாய்ந்த சமுதாயம் அமைய வேண்டும். இந்த இலக்கை அடைய மார்க்ஸியமே சிறந்த வழி. மார்க்ஸியத்துக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. நாம் கடவுளை நம்புகிறோம். புதுமை நலஞ்சார்ந்த அப்பரடிகள் நெறியை நாட்டுநெறியாக்க இயலவில்லை. தமிழ்த்தந்தை திரு.வி.க.

**மார்க்ஸியம் உடலாகவும் காந்தியம் உயிராகவும்
எனக்குத் தோன்றுகின்றன. உடலும் உயிரும்
ஒன்றுபட்டுக் குலவுவதன்றோ வாழ்க்கை?**

என்று கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது.

இந்த நெடிய வாழ்க்கைக்கு இதமான ஆறுதல் தரும் முனிவர் ஒருவர் மௌனமாகப் பின்தொடர்கிறார். அந்த முனிவருடைய இதமான அரவணைப்பு, பரிவு நமக்குப் புத்துயிர்ப்புத் தந்து வழிநடத்துகிறது. அந்த முனிவர் யார்? போற்றுதலுக்குரிய **ரத்தினகிரி பாலமுருகனடிமை;** அவர் நம் தலைமுறையில் வாழும் அருந்தவ முனிவர்; சித்தர். பொதுப் பணியில் ஆர்வம் காட்டும் அறநெறியண்ணல்! லெ. நராயாணன் செட்டியார் நமக்கு வாய்த்த தனித்துணை; புரவலர். வெளிநாடுகளில் நிறைய அன்பர்கள்.

நமக்குக் கனவுகள் கிடையாது; கற்பனைகள் உண்டு. கற்பனைகள் கைகூடுமாக! வாழ்நாள் வீழ்நாள் படவில்லை. இது உறுதி. பல நாடுகளில் பயணங்கள் மேற்கொண்ட தாலும், பலர் உறவு ஏற்பட்டதாலும் வளர்வதற்குரிய வாயில்கள் ஏற்பட்டுள்ளன. பலருக்கும் அறிமுகமான வாழ்வு! மக்களிடையே இருந்தது ஒரு மனநிறைவு. யாரையும், எவரையும் நாம் அந்நியமாக எண்ணியதில்லை. யாரோடும் பகை கொள்ள நினைத்ததில்லை. இனிமேலும் நினைக்க மாட்டோம். ஆனால், மக்கள் மத்தியில் குண தோஷங்கள் உண்டு என்பார் சிலர் உண்டு. இது அவர்கள் கருத்து. 'ஊரார் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல்சாவதுவே!' என்ற திருவாசக அடிகளை நினைவதைத் தவிர வேறு வழியில்லை.

எல்லா நூல்களையும்விட சேக்கிழார் அருளிய பெரியபுரணத்தில் ஈடுபாடு அதிகம்! 'அன்பலால் பொருளும் இல்லை; ஐயன்ஐயாற னார்க்கே!', 'தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை!' என்ற சொற்றொடர்களுக்கு – இலக்கணத் துக்கு இலக்கியம் பெரிய புராணம். நாயன்மார்கள்

அடிச்சுவட்டில் தொடங்கியிருக்கும் தொண்டுப் பயணம் தொடர வேண்டும். நாடு தழுவிய நிலையில் தொண்டு வளர வேண்டும். நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களிலாவது நடக்க வேண்டும். புராணங்களைப் போதிப்பதன் மூலம் அல்லாமல், தொண்டின் வாயிலாக மக்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும். இந்தப் பயணம் இடையீடின்றி நடக்க வேண்டும். மங்கையக்கரசியார் பிறந்த மண் செழிக்க சு. கல்யாண சுந்தரம், பேராசிரியர் சாமி. தியாகராசன் ஆகியோர் உதவி மேலும் மேலும் தேவை. மங்கையக்கரசி யாரின் சமயப் பணிக்கு உதவியாக இருந்த குலச்சிறை நாயனார் பிறந்த ஊர் மணமேல்குடி. இந்த ஊரில் குலச்சிறையார் வழிபட்ட திருக்கோயில் திருப்பணி செய்யப் பட்டு, நாட்பூஜை அறக்கட்டளையும் நிறைவெய்தியிருக் கிறது. இதற்குத் துணையாக அமைந்தவர்கள் ஏ. ஆர். பக்கிரிசாமி, கே. தியாகராசன் முதலியோர். குலச்சிறையார் நினைவாகக் கல்விப் பணி தொடங்கவும் இருக்கிறது. திருநாளைப் போவார் பிறந்த குலமும் ஊரும் செழிக்க இராம. சிதம்பரம், ராஜாங்கம் ஆகியோர் ஒத்துழைப்பு மேலும் மேலும் தேவை. தண்டியடிகள் நினைவாகக் கமலாலயம் தூய்மை செய்யப் பெறுகிறது. பல அன்பர்கள் இந்தப் பணிக்கு வந்துள்ளனர். இனிதே நிறைவெய்தும்.

இந்தப் பயணம் இரண்டாவது சுற்று. ஆதலால், பயணம் விரைவாக நடத்த வேண்டும். பயணம் முடியும் வரையில் வரலாறு நிற்காது; எழுதுவது நிற்கிறது. பணி தொடரும்.

கு-XVI-16.

# 4

# அடிகளார் உவமை நயம்

## செடியும்–ஆன்மாவும்

தொட்டி எவ்வளவுதான் அழகுடையதா இருந்தாலும், அதில் நடப்பெறுகிற செடி சிறந்ததாக-உயிரோட்ட முடையதாக இருந்தால்தான் உற்ற பயன் கிடைக்கும். அதுபோல், உடல் எவ்வளவுதான் வலிவும் பொலிவும் உடையதாக இருந்தாலும், உள்ளிருக்கும் ஆன்மா சிறந்ததாக இருந்தால் தான் சிறப்பு. செடியைப் பற்றிக் கவலைப்படாமல் தொட்டியைப் பாதுகாப்பது போல் பலர் ஆன்மாவைப் பற்றிக் கவலைப்படாமல் உடம்பைப் பேணிப் பாதுகாக் கிறார்கள். பூஞ்செடி இல்லையானால் தொட்டிக்கு என்ன மதிப்பு? பூஞ்செடிக்காகத்தான் தொட்டி என்பதுபோல, ஆன்மாவுக்காகத்தானே உடல்? ஆன்மா இல்லாத உடம்பு பூஞ்செடி இல்லாத தொட்டியைப் போன்றதுதான்.

## கொலுவும்–மனிதனும்

பல பெரிய மனிதர்கள் தங்கள் வீடுகளில் நவராத்திரிக் காலங்களில் கொலு வைப்பதைப் பார்க்கிறோம். அவ்வாறு கொலு வைப்பதன் தத்துவம் என்ன? அந்தக் கொலு போன்றதுதான் மனித வாழ்க்கை. கொலு கலைவது போல மனித வாழ்க்கையும் கலைந்துவிடும் என்பதை உணர்த்தத் தான் 'கொலு' ஆரம்பிக்கப் பெற்றது. ஆனாலும், பலர் தங்கள்

வீட்டில் கொலு வைக்கிறார்கள்; பின் கலைக்கிறார்கள். ஆனாலும், அந்தக் கொலு கலைவது போல் மனித வாழ்க்கையும் கலைந்துவிடும் என்பதை மட்டும் மறந்து போய் விடுகிறார்கள்.

## மனிதன் யார்

கார் வைத்திருப்போர் அனைவரும் காரோட்டிகள் அல்லர்; பொறி வைத்திருப்போர் அத்தனை பேரும் பொறி யியலாளர் அல்லர். காரை ஓட்டத் தெரிந்தவன் காரோட்டி; பொறியை இயக்கத் தெரிந்தவன் பொறியியலாளன். அதுபோல மனித உடலையும், மனிதனுக்குரிய பிற புற உறுப்புகளையும் பெற்றிருந்தாலும் இன்றியமையாத மனத்தைப் பெற்று, அந்த மனத்தையும் உரிய வழியில் இயக்கத் தெரிந்தவனே மனிதன்.

## கூட்டுமாறும்—பொதுநலவாதிகளும்

குப்பையைக் கூட்டித் தள்ளுகிற கூட்டு மாறிலேயே குப்பை இருந்தால் அது எப்படிக் குப்பையைக் கூட்டித் தள்ள முடியும்? அதுபோல, பொதுநலவாதிகளும், சேவையுணர் வுடையோரும் குறைபாடுடையவர்களாக இருந்தால் அவர்கள் எப்படிச் சமுதாயத்தின் குறைபாடுகளைக் களைந் தெறிய முடியும்? எனவே, பொதுநலவாதிகளும், சேவை யுணர்வுடையோரும் தம்மிடத்தே குறைபாடிலில்லாதவர் களாக இருந்தால் அவர்களுடைய முயற்சியில் வெற்றி பெறுவார்கள் - மக்களும் நற்பயன் அடைவார்கள்.

## அஞ்சல் தலையும்—சிறுவர்களும்

உறையில் ஒட்ட பசையுள்ள அஞ்சல்தலை தேவை. பசையற்ற அஞ்சல் தலை பயனற்றது; வெறும் பசை மட்டும் கூடப் போதாது—தண்ணீரும் தேவை. இரண்டில் எது இல்லை யானாலும் பயனில்லை!

அதுபோல, இன்றையச் சிறுவர்களாகிய எதிர்காலச் சமுதாயத்தினர் நாட்டுடன், மக்கட் சமுதாயத்துடன் ஒட்டி உறவாடி உயிர்வாழ வீட்டிலும் வெளியிலும் நல்ல சூழ்நிலை வேண்டும். நல்ல சூழ்நிலையே ஒருவனைப் பண்படுத்தும்-பக்குவப்படுத்தும்-பயனுடையவனாக்கும். வீட்டுச் சூழ்நிலை, வெளிச் சூழ்நிலை ஆகிய இரண்டில் ஒன்று குறைபடுமாயினும் அவன் முழுமையாகச் சிறப்படைய வழியில்லை. அஞ்சலுறை நாடு-அஞ்சல் தலை சிறுவன்-பசை வீட்டுச் சூழ்நிலை. தண்ணீர் வெளிச் சூழ்நிலை.

## ஜனநாயக வெற்றி

ஆட்டைப் பலி கொடுப்பதானால்கூட, அதற்கு நல்ல உணவு கொடுத்து வளர்த்துக் கொழுக்க வைத்து அதன் பிறகுதான் பலி கொடுப்பார்கள். அதுபேல, எதிரியைத் தோற் கடித்து வெற்றிபெற வேண்டுமென்றாலும், எதிரியை ஆரோக்கியமாக வளர்க்க வேண்டாமா? ஆரோக்கியமான எதிரியிடம் வெற்றி பெற்றால்தான் அது நியாயமான-ஜனநாயக ரீதியான வெற்றியாகும். இல்லையானால், நொண்டியிடம் பெற்ற பெரு வெற்றியாகவே அது அமையும்.

## பிஞ்சு-காய்-பழம்

புளியம் பிஞ்சுபோல இருப்பவர்கள் மனித விலங்குகள்; புளியங் காய்போல் இருப்பவர்கள் மனிதர்கள்; புளியம் பழம்போல் இருப்பவர்கள் ஞானிகள்.

புளியம் பிஞ்சு தோற்றமிருக்கும்; ஆனால் பயன்படக் கூடிய ஒன்றும் உள்ளே இருக்காது. அது போலப் பலரிடத்து மனித உருவமிருக்கும்; ஆனால், மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய மனிதப் பண்பு இருக்காது.

காயில் பசையிருக்கும்; புளிக்கும். அதுபோல, காய் போன்றோர் தன்னலப்பற்றுடையவர்களாக இருப்பர். மற்றவர்களுக்குப் புளித்த வாழ்க்கை நடத்துவார்கள்.

பழம் சுவையுடையதாக இருக்கும்; ஓடும் உட்பகுதியும் பற்றற்ற நிலையில் இருக்கும். பழம் போன்ற மனிதர்கள் மற்றவர்கட்கு இன்பந்தருவார்கள்-தன்னலப் பற்றின்றி வாழ்வார்கள்.

## பாத்திரமும்—திருக்கோயிலும்

பாத்திரம் முக்கியமல்ல-பாத்திரத்தில் செய்யப் பெற்ற பொருள்தான் முக்கியம் என்பது போல, தேர் முக்கியமல்ல-தேரில் இருக்கும் தேவன்தான் முக்கியம் என்பது போல, திருக்கோயில் முக்கியமல்ல-அங்கு இருக்கிற திருவருள்தான் முக்கியம்.

## அறைகளும்—வேறுபாடுகளும்

வீட்டில் சிறுசிறு அறைகள் இருப்பது நமது வாழ்க்கை வசதிக்காக என்றிருப்பது போல, வாழ்க்கையில் சில சில வேறுபாடுகள் இருந்தால் அவை வாழ்க்கையின் நன்மைக் காகவே இருத்தல் வேண்டும்.

## தீவினையும்—வேகாத உப்புமாவும்

வேகாத அரிசி உப்புமாவைத் தின்றவர்கள் அஜீரணத்தை அனுபவிப்பது போல, தீங்கு செய்தவர்கள் அந்தத் தீவினையை அனுபவித்தாக வேண்டும்.

## கோலும்—உதவியாளர்களும்

நமது கால்கள் தளர்ந்து போகிற போது உதவியாகக் கோல் வைத்துக் கொள்வது போல, நிருவாகத்தில் அதிகப் பொறுப்புக்கள் ஏற்படும் போது அவற்றைச் செவ்வனே ஏற்று

நடத்த உதவியாக உதவியாளர்களை வைத்துக் கொள்ளு கிறோம்.

## கண்வலிக்காரனும்—பத்தாம் பசலியும்

கண்வலிக்காரர்கள் வெளிச்சத்தைப் பார்க்கக் கூசுவது போல, சமுதாயத்தில் உள்ள பத்தாம் பசலிக் கொள்கையினர் புதிய கண்ணோட்டத்தைக் காணக் கூசுகிறார்கள்.

## வேட்டியும்—கல்வியும்

வேட்டிக் கட்டிக் கொள்வது தனி மனிதனின் மானத்தைக் காப்பதற்கு மட்டுமல்ல, சமுதாய ஒழுக்கத்திற்கும் பயன்படுகிறது. அதுபோல, கல்வி, தனி மனிதனின் நலத்திற்கு மட்டுமல்ல சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுகிறது.

## அடித்தளமும்—மேல்மாடியும்

அடித்தளத்தை வலுப்படுத்தாமல் மேல் மாடியை அழகுபடுத்துவதால் என்ன பயன்? அதுபோல, இளஞ் சிறுவர்களுக்கு அவர்களின் மனப்போக்கும், மனத் தத்துவமும் அறிந்த நல்லவர்களையும், வல்லவர்களையும், ஆசிரியர்களாக்கி, சின்னஞ்சிறு சிறுவர்களைக் கல்வித் துறையில்-நல்ல முறையில் வளர்க்காமல் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியர்களையும், மனவியல் வல்லுநர்களையும் ஆசிரியர்களாக நியமிப்பதால் என்ன பயன்?

## உலையும்—உள்ளமும்

உலையில் அரிசி வெந்து கொண்டிருக்கும் பொழுது கொதிவந்து பொங்கினால் கரண்டியைக் கொண்டு நன்றாகக் கிளறிவிட்டுப் பொங்கி வழியாமல் தடுத்து விடுகிறோம். அப்படிச் செய்வதால் அரிசியும் நன்றாக நின்று வேகிறது.

உலை பொங்கி வழிந்து விட்டால், அரிசி நின்று வேகுவதற்கு வேண்டிய தண்ணீர் கீழே வழிந்து ஓடிவிடும். அரிசியும் சரிவர வேகாது. அது மட்டுமல்ல, அப்படிப் பொங்கி வழிவதால், சமையல் செய்வதற்காக உள்ள அடுப்பும், நெருப்பும் அவிந்து போய்விடும். அதுபோல, மனிதர்களும், ஆத்திரம் ஏற்பட்டால் உடனே அதைத் தடுத்துக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்; அப்படியில்லாமல், ஆத்திரப்பட்டுப் பொங்கினால், செயல் செய்வதற்குரிய ஆற்றல் கெட்டுப் போகும். காரிய சாதனைக்குரிய அடிப்படைச் சூழலும் பாதிக்கப் பட்டுவிடும்.

## இரயிலும்—காரும்

இரயிலும் காரும் சென்று கொண்டிருந்தால், காருக்காக இரயிலின் போக்கைத் தடுக்காமல் வழிக்கதவை (Railway Gate) அடைத்துக் காரை நிறுத்தி, இரயிலைப் போக விட்டுப் பின்னரே காருக்கு வழிவிடப் பெறும். ஏனெனில், இரயில் சமுதாயத்தின் சின்னம். கார் தனி மனிதனின் சின்னம். தனி மனித முன்னேற்றத்திற்காகச் சமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தலாமா?

## பாயசமும்—சமுதாயமும்

பாயசத்தில் மிதப்பது முந்திரிப் பருப்பாக இருந்தால் பாயசம் சுவையாக இருக்கும். மிதப்பது பாச்சையாக இருந்தால் பாயசம் சுவையும், பயனும் இழப்பதோடு, தீமை பயப்பதாகவும் மாறிவிடும். அதுபோல சமுதாயத்தின் மேல் மட்டத்தில் நிற்கும் தலைவர்கள் ஒழுங்கும், நேர்மையும், நாணயமும், நாட்டு நலனில் அக்கறையும் உடையவர்களாக இருந்தால் அவர்களையுடைய சமுதாயம் சிறந்து விளங்கும். இல்லையேல் அது பண்பும் பயனும் அற்றதாகிக் கெட்டொழிந்து போகும்.

## பொருளாதாரமும்—மழையும்

பொருளாதாரத்தை வரன்முறை செய்து சேமித்து வைக்காமல் வாழ்க்கை நடத்துவது, மழை பெய்யும் போது நீர் வேட்கைதீர அண்ணாந்து வாயைப் பிளப்பது போன்றது தான். வரன்முறை செய்யப் பெறாத பொருளாதாரம் வாழ்க்கைத் தேவையை நிறைவேற்றாது-சேமித்து வைக்கப் பெறாத நீர், நீர் வேட்கையைத் தீர்க்காது.

## கொடிக்கம்பமும்—தொண்டரும்

கொடிக் கம்பத்தை நட்டதும் நிழல் விழுவது போல, நாம் ஒரு செயலைச் செய்யத் தொடங்கியதும் அதனை எதிர்ப்பவர்களும், ஏளனம் செய்பவர்களும் தோன்றத்தான் செய்வார்கள். நிழலைக் கொடிக் கம்பம் பொருட்படுத்தாது போல, தொண்டு செய்கிறவர்களும் எதிர்ப்பையும் ஏளனத்தையும் பொருட்படுத்தக் கூடாது.

## வலியும்—இழப்பும்

ஆரோக்கியம் ஏற்படும் என்றால் வலியையும் பொறுத்துக் கொண்டு நாம் ஊசி குத்திக் கொள்வது போல, இந்த நாட்டுக்கு நன்மை என்றால் நமக்குச் சிறு சிறு இழப்புக்கள் ஏற்பட்டாலும் அதைப் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

## தட்டும்—நாடும்

அகன்று விரிந்த தட்டில் உழக்குப் பாலைக் கொட்டினால், பாலின் அளவு குறைவாகவே தோன்றும். ஆனால் அதை உழக்கிலேயே ஊற்றி வைத்தால் நிறைய இருப்பது போல் தோன்றும். அதுபோல, சுதந்திரத்திற்குப் பிறகு இந்த நாடு பொருளாதாரத் துறையிலும், வாழ்க்கைத் துறையிலும் விரைந்து முன்னேறியிருந்தாலும், நாற்பத்தாறு கோடி மக்கள் வாழுகிற பரந்த நாடாதலின், இங்கு ஏற்பட்டிருக்கிற

முன்னேற்றமெல்லாம் மிகக் குறைந்த முன்னேற்றம் போல் தோன்றுகிறது.

## வீடும்—சடங்கும்

குடியிருப்பதற்காகத்தான் வீடு; தண்ணீர் வைப்பதற்காகத்தான் பானை. வீட்டிலுள்ள மனிதனைப் பற்றிக் கவலைப்படாமல் வீட்டைப் பற்றிக் கவலைப் படுவதும், பானையிலுள்ள தண்ணீரைப் பற்றிக் கவலைப் படாமல் பானையைப் பற்றிக் கவலைப்படுவதும் புத்திசாலித் தனமாகுமா? அது போலவே, இங்கு வாழ்கின்ற மனித உயிர் களைப் பற்றிக் கவலைப்படாமல், அவர்களை வாழ்வாங்கு வாழ வைக்கத் தோன்றிய சமயத்தின் புறச் சடங்குகளைப் பற்றி மட்டும் கவலைப்படுவது புத்திசாலித்தனமாகாது; நியாயமுமாகாது.

## விசிறியும்—திருவுருவும்

வெப்பம் நிறைந்த அறையில் நாம் இருக்கும்போது காற்று இல்லாதது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. அப்பொழுது, விசிறிகொண்டு வீசி, காற்றை அசைத்து விட்டு, நாம் அதை அனுபவித்து மகிழ்கிறோம். காற்றை உணர்ந்து அனுபவிக்க விசிறி தேவை.

விண்ணில் ஒலி அலைகள் பரவிப் பாய்ந்து வரு கின்றன. எனினும் வானொலிப் பெட்டியின் வாயிலாகவே அதை நாம் கேட்டு அனுபவிக்க முடிகிறது. ஒலி அலைகளைச் செவிப் புலனால் நுகர்ந்து அனுபவிக்க வானொலிப் பெட்டி தேவை. காற்றுப் போல ஒலி அலைகளைப் போல எங்கும் நிறைந்திருக்கிற இறையருளைக் கண்டு—கேட்டு—உண்டு— உயிர்த்து அனுபவிக்கத் திருவுருவங்கள் பயன்படுகின்றன.

## நகமும்—செல்வமும்

உடல் வளத்திற்கேற்ப நகம் வளர்கிறது; விரலின் நீளத்தைக் கடந்தும் அது வளரும். அப்படி வளர்வது இயற்கை. எனினும், நகத்தை எல்லை மீறி வளர்த்துக் கொள்வது உடல் நலத்திற்கு உகந்ததல்ல; அழகாகவும் இருக்காது. பிறருக்கு அருவருப்பாக மட்டுமல்ல அபாயத்தை விளைவிப்பதாகவும் இருக்கும். அதனாலேயே நகம் வளர்ந்தவுடன் அதை நாம் வெட்டிவிட்டுக் கொள்ளுகிறோம். அப்படி நகத்தை நாம் வெட்டும்பொழுது, நமக்குத் துன்பம் ஏற்படுவதில்லை; செங்குருதியும் சிந்துவதில்லை. அது போலத்தான் ஒரு தனி மனிதனிடத்தில் நியாயமான தேவைக்குமேல் குவியும் செல்வத் தேக்கமும். அத்தேக்கத்தைக் குறைப்பது, எல்லை கடந்து வளர்ந்துள்ள நகத்தை வெட்டி எடுப்பது போன்றதுதான்.

## உறக்கமும்—வழிபாடும்

பகலெல்லாம் பாடுபடுகிற மனிதன், தனது உடற் சோர்வு நீங்கிப் புதிய தெம்பு பெற உறக்கம் பயன்படுகிறது; அதுபோல, வாழ்க்கையில் உழலும் உயிரின் ஆன்மாவின் சோர்வு நீங்கிப் புதிய ஆற்றல் பெறுவதற்கு வழிபாடு பயன்படுகிறது.

## உடலும்—உள்ளமும்

ஆரோக்கியமான உடம்பில் ஒரு புண் ஏற்பட்டால் அது விரைவில் மேவி ஆறிவிடும். ஆரோக்கியக் குறைவான உடம்பில் ஏற்பட்ட புண் அப்படி ஆறிவிடுவதில்லை. அது போல, ஆரோக்கியமான மனம் உடையவர்களிடத்தில் சில நேரங்களில் கோபதாபங்கள் ஏற்பட்டாலும் அது மிக விரைவில் மாறி, மீண்டும் பழைய பரிவும், பாசமும் ஏற்படும். ஆரோக்கியமில்லாத மனமுடையவர்களிடத்தில் ஏற்படுகிற கோபதாபங்கள் அப்படி மாறுவதில்லை.

## குழந்தையும்—செடியும்

குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். அவர்கள் தம் போக்கில் வளர்வார்களானால், வெட்டி விடப் படாத 'குரோட்டன்ஸ்'களைப் போலக் கரடு முரடாகத்தான் இருப்பார்கள்.

## பழச்சாறும்—வழிபாடும்

நாம் பழச்சாறு அருந்துவதனால் மட்டும் உரிய பலனைப் பெற்றுவிட முடியாது. அந்தச் சாற்றைச் செறிக்க வைக்கிற ஆற்றல் நமது உடலுக்கு இருந்து, சாப்பிட்ட சாறு சீரணித்தால்தான் பயன் ஏற்படும். அதுபோல, நாம் வழிபாடு செய்வதால் மட்டுமே உரிய பயனைப் பெற்றுவிட முடியாது. வழிபாட்டின் வழியாகக் கிளர்ந்தெழுகிற உணர்வுகளைப் பாதுகாத்துக் கொண்டு அவற்றை அனுபவிக்கிற இயல்பும் நம் மனத்திற்கு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வழிபாட்டின் பயனை நாம் பெறமுடியும்.

## தோண்டுதலும்—சிந்தித்தலும்

நிலத்திலே தோண்டினால் நிலக்கரியும், இரும்பும் இன்ன பிற தாதுப் பொருள்களும் கிடைப்பது போல, நாம் ஆழ்ந்து சிந்தித்தால் நல்லறிவு பெறுவோம்.

## பம்பரமும்—நாமும்

பம்பரம் எவ்வளவு வேகமாகச் சுற்றினாலும், அது தொடர்பை விடாமலே சுற்றும். அதுபோல, நாம் நமது வாழ்க்கையில் எத்தனை போராட்டங்களைச் சமாளிக்க வேண்டி வந்தாலும் கடவுள் உணர்வை விட்டு விலகாமல் வாழ வேண்டும்.

## நோயும்—தன்னலமும்

சிலர் எத்தகைய நோயும் இல்லாதவர்கள் போலத் தோன்றுவார்கள். அவர்களின் புறத்தோற்றம் அப்படியிருந்தாலும், அவர்களினுள்ளே தோன்றி வளர்ந்து கொண்டு வந்துள்ள நோய் திடீரென்று உடலைத் தாக்கி வருத்தும். அதுபோல சிலர் உள்ளத்திலே தோன்றி வளரும் தன்னலம் என்ற பெருநோய் திடீரென ஒருநாள் சமுதாயத்தையே தாக்கி வருத்தும்.

## சோஷலிசத் தாக்குதல்

புதிய காற்று சிலருக்கு உடல்நலக் குறைவை உண்டாக்குவது போல, புதிய தண்ணீர் சிலருக்கு ஜலதோஷத்தை உண்டாக்குவது போல 'சோஷலிசம்' சிலரின் சுகபோக சுரண்டலுக்கு இடையூறு ஏற்படுத்துகிறது.

## கழனியும்—கருத்துக்களும்

நெல் விளையும் கழனியிலே புல்லும் முளைப்பது போல, மனித சமுதாயத்தின் கருத்துக் குவியல்களில் நல்லனவும் தீயனவும் தலைகாட்டவே செய்யும்; கழனியில் களை எடுப்பது போல, கருத்துக் கழனியிலே தீமைகளை நீக்கி நல்லனவற்றைப் பாதுகாத்துப் பயன்பெற வேண்டும்.

## இயந்திரமும்—ஆன்மாவும்

ஒரு பெரிய வண்டியை அதனுள் நுட்பமாக அமைந்திருக்கும் இயந்திரம் இயக்குவதுபோல, மனிதனை அவனுள்ளிருக்கும் ஆன்மாவே இயக்க வேண்டும்.

## இறைவனின் திருப்தி

கவிதையைப் பாராட்டுவதன் மூலம் அதைப் பாடிய கவிஞனைத் திருப்திப்படுத்துவது போல, ஓவியத்தைப் பாராட்டுவதன் மூலம் அதை வரைந்த ஓவியனைத் திருப்தி

படுத்துவது போல, மனித உலகுக்குச் சேவை செய்வதன் மூலமே மனித உலகை இயக்கும் இறைவனைத் திருப்திப் படுத்த முடியும்.

## நீரும்—மனிதனும்

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கித் தண்ணீர் பாய்வது போல ஆத்திரப்படுவதும், கோபங் கொள்வதும், பகைமை காட்டுவதும் மனித இயல்பு. எனினும், இயல்புக்கு மாறாக, பள்ளத்திலிருந்து மேட்டிற்குத் தண்ணீர் கொண்டு செல்வது போல, மனித இயல்புக்கு மாறாக ஆத்திரப் படாமல், கோபங் கொள்ளாமல் பகைமை பாராட்டாமல் வாழ்வதுதான் வாழ்க்கைக்குச் சிறப்பு.

## விரல்களும்—வேறுபாடுகளும்

ஒன்றை ஓங்கிக் குத்தி வீழ்த்த வேறுபட்ட அளவை களும், தோற்றங்களும் உடைய ஐந்து விரல்களையும் ஒருசேர மடக்கி இணைப்பது போல, மலிந்து கிடக்கும் வேற்றுமை களைக் களைந்தெறிந்து ஒருமைப்பாடு காண வேறுபட்ட கருத்துக்களும் கட்சிகளும் கொண்ட எல்லாரும் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும்.

## பச்சை மட்கலம்

மொழியினால் தேசீய ஒருமைப்பாட்டை உருவாக்க முயற்சிப்பது பச்சை மண்கலத்திலே தண்ணீர் ஊற்றி வைப்பது போன்றதுதான். பச்சை மண் கலத்தில் நீர் ஊற்றினால் மண்கலம் அழிவதோடு, அதில் ஊற்றிய நீரும் சிந்திப் பயனற்றுப் போகும். அப்படித்தான் மொழியால் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க முயன்றால் மொழியும் கெட்டுப் போகும்—ஒருமைப்பாடும் உருவாகாது.

## அரும்பும்—மனிதனும்

அரும்பு மலர்ந்து விட்டபிறகு எப்படி மணத்தைச் சிறைப்படுத்திவைக்க முடியாதோ அப்படித்தான் அன்பில்-அறத்தில்-கொள்கை உறுதிப் பாட்டில் மலர்ந்து விட்டால் மனிதனையும் யாரும் சிறைப்படுத்தி வைக்க முடியாது.

## பசுவும்—இலக்கியமும்

பசுவைக் குளிப்பாட்டிப் பொட்டிட்டு இலட்சுமி என்று பாராட்டுவார்கள்-தீனி மட்டும் சரியாக வைக்க மாட்டார்கள். அதுபோல, தமிழர்கள் இலக்கியங்களைப் படிப்பார்கள்-பாராட்டுவார்கள்; வாழ்க்கையில் கடைப் பிடிக்க மட்டும் மாட்டார்கள்.

## மழை நீரும்—மனித உணர்ச்சியும்

மழை பெய்து தண்ணீர் புரண்டோடி வருகிறது; அதனைக் கால்வாய்களின் வழிக் கொணர்ந்து-ஏரிகளில் தேக்கிக் கழனிக்குப் பாய்ச்சும் போதுதான் உரிய பயன் ஏற்படுகிறது. அதுபோல, மனிதனிடம் இயல்பாகத் தோன்றும் உணர்ச்சிகளை அறிவுக் கால்வாய்களின் வழியே செலுத்தி, அனுபவம் என்ற ஏரியில் தேக்கிச் செயல்முறை என்ற கழனியில் செலுத்தினால் உரிய பயன் ஏற்படும். சிந்தனையற்ற மனிதனின் உணர்ச்சிகள் பொட்டல்காட்டில் பெய்த மழை போல பயனற்றுப் போய்விடும்.

## சொறி சிரங்கு

மனிதன், சொறி சிரங்கு பிடித்தவன் போல அரிப்பு ஏற்படும் போது சொறிந்து கொள்வான்; சொறியும் போது சுகமாக இருக்கும். பின்னர் எரிச்சல் ஏற்படும். அவ்வாறு எரிவெடுத்ததும் இனி சொறியக் கூடாது என்று தனக்குள் எண்ணிக் கொள்வான். பின்னர் ஊரல் ஏற்படும் போது தன்னை மறந்து சொறிய ஆரம்பித்துவிடுவான். அது போல,

பலர் அன்பு அருள் என்று படிக்கும் போது அன்பும் அருளும் காக்க வேண்டும் என்று எண்ணிக் கொள்வார்கள். அடுத்த நேரமே அதை மறந்துவிடுவார்கள்.

## கொத்தனாரும்–சமுதாயத் தலைவரும்

இலட்சம் செங்கல் கொட்டிக் கிடந்தாலும் அது கட்டிடமாவதில்லை. அவற்றை அடுக்கிச் சந்து பதிந்துதான் சுவரை எழுப்பவேண்டும். உடைந்த செங்கல்லையும் முழு செங்கல்லையும் இணைத்து இடைவெளி ஏற்பட்ட இடத்தில் முழுச் செங்கல்லையும் உடைத்துப் போட்டுச் சந்து நிரப்புவது போல, மனிதனும் தனது சொந்த மதிப்பையும், சுகத்தையும் குறைத்துக் கொண்டாவது சமுதாயச் சுவரை எழுப்ப முற்படவேண்டும். உடைந்த செங்கல்லையும் முழுச் செங்கல்லையும் இணைத்துச் சுவரை எழுப்புபவர் கொத்த னார்; சமுதாயத்தில் உள்ள வலிமையுடையவனையும், வலிமையற்றவனையும் இணைத்து ஒரு சேர அழைத்துச் செல்லுபவர் சமுதாயத் தலைவர்.

## மலரும்–மனிதனும்

சமயவாதி என்றால் நல்ல மணமுள்ள மலர்போல இருக்க வேண்டும். மலரின் மணத்தினால் இன்ப அனுபவம் மனிதர்களுக்கேயன்றி மலருக்கல்ல. மலர் இருக்கும் செடி, அனுபவிப்பது பலருக்கு அருவருப்பூட்டும் உரத்தைத்தான். ரோஜா மலர் வண்ணத்தால் மணத்தால் பலருக்கு விருந்தளிக்கிறது. அது போல மனிதனும் காட்சியாலும் செயலாலும் மற்றவர்களுக்கு இன்பமளிக்க வேண்டும்.

## விளையாட்டும்–வாழ்க்கையும்

கால்பந்து விளையாட்டு உங்களுக்குத் தெரியும். யாரையும் தரையில்விழச் செய்து வெற்றி பெற்றால் அது வெற்றியாக எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது; எதிரியையும்

ஆரோக்யமாக விளையாடச் செய்து, நம் திறமையால் பந்தை விளையாடித்தான் வெற்றி பெற வேண்டும். அந்த விளை யாட்டுப் போட்டியைப் போலவே நமது வாழ்க்கைப் போட்டிகளையும் திறந்த வெளியில் நடத்தி வெற்றி பெற வேண்டும்.

## அடித்தளமும்—கூரையும்

அடித்தளத்திற்கும் கூரைக்கும் ஏற்றபடி வீட்டிற்கு வாயிற்படி அமையும். ஒரு மனிதனின் உழைப்பு, அறிவு ஆகிய வற்றிற்கேற்பவே அவனுக்குச் செல்வம், செல்வாக்கு அமையும். மனிதனுக்குக் கால்-கைகள் உழைப்பின் சின்னம்-அடித்தளம். தலை அறிவின் சின்னம்-கூரை.

## சமயமும்—அறப்பணியும்

அறம் வேறு சமயம் வேறல்ல-கை, கால் எல்லாம் சேர்ந்ததுதானே உடம்பு. அவை இல்லாமல் உடம்பு உண்டா? மேலே கூறியன யாவும் உடலின் உறுப்புக்கள். அவற்றிற் சில குறைந்தாலும் மனிதன் வாழ்ந்து விடலாம். ஆனால், இதயம் இல்லாமல் வாழ முடியுமா? இதயம் வேறு நாம் வேறு அல்ல. நம் வாழ்வுக்கு இதயம் போலச் சமயத்திற்கு அறம் அவசியம். எனவே, அறம் வேறு சமயம் வேறு அல்ல. அறமே சமயம்; சமயமே அறம்.

## கொடியும்—ஆர்வலனும்

படரும் கொடிக்குக் கொம்பு நட்டால் நன்றாகப் படர்ந்து வளரும்; பூக்கும்; காய்க்கும். அது போல, முன்னேற வேண்டும் என்ற எழுச்சியும் ஆர்வமும் உடையவனுக்கு ஒரு சிறு உதவி கிடைத்தாலும் அதைப் பற்றிக் கொண்டு அதனைப் பற்றுக் கோலாகக் கொண்டு வளர்வான்-முன்னேறுவான். முன்னேற்றத்திற்கு முயற்சியும்; உதவியும் எவ்வளவு அவசியமோ; அதைவிட ஆர்வம் அவசியம்.

## மனிதனும்—மரமும்

மண்ணில் முளைக்கும் மரம் ஊட்டமாகச் செழித்து வளர்ந்து பயன் தர, மண்ணோடும் விண்ணோடும் அதற்குத் தொடர்பு வேண்டும். கதிரொளியையும் காற்றையும் அது விண்ணோடு தொடர்பு கொண்டு தானே பெறுகிறது? அதுபோல, உலகந்தழீஇய வாழ்க்கை வாழ வேண்டிய மனிதனுக்குத் தாய்மொழி அறிவு மட்டும் போதாது; பிற மொழிகளின் தொடர்பும் வேண்டும். மரத்திற்கு மண்ணோடுள்ள உறவு போன்றது மனிதனுக்குத் தாய்மொழியோடு உள்ள தொடர்பு! விண்ணோடுள்ள உறவு போன்றது பிற மொழித் தொடர்பு.

## நாவற்பழமும்—நண்பர்களும்

பழுத்துக் கனிந்த நாவற்பழம் நல்ல சுவையுடையதாக இருக்கும். அவ்வாறு பழுத்துக் கனிந்த நாவற்பழம் கீழே உதிர்ந்தால் அதிலே மண் ஒட்டிக் கொள்ளும். அந்தப் பழத்தின் மீது நமக்கு விருப்பம் இருக்கிறது. ஆனாலும் அதில், ஒட்டிக் கொள்ளும் மண்ணை நாம் வெறுக்கிறோம். நாம் வெறுக்கிற அந்த மண் ஒட்டியதால், நாம் நாவற்பழத்தையே ஒதுக்கி விடுகிறோமா? இல்லையே! பழத்திற்குக் கேடு வராமல் மண்ணை ஊதித் தள்ளிவிட்டுப் பழத்தைப் பயன் படுத்தத்தானே செய்கிறோம். அதுபோல, நாம் விரும்புகிற சிலரிடத்தில் நமக்கு விருப்பமில்லாத-நாம் வெறுக்கத்தக்க சில குணங்கள் இருக்கலாம். ஆனாலும், நமக்குப் பிடிக்காத-நாம் விரும்பாத அந்தக் குணங்களை, நாவற்பழத்தில் ஒட்டிய மண்ணை நாவற்பழத்திற்குக் கேடு வராமல் ஊதி ஒதுக்குவது போல, அவர்களுக்கு வருத்தமோ நோவோ ஏற்படாத வண்ணம் விலக்க முயற்சிப்பதுதான் நல்லது.

கு-XVI.17.

## தாயும்–சீர்திருத்தவாதியும்

துன்பத்திலிருந்து இன்பமும், சோதனையிலிருந்து திறமையும் தோன்றுவது மரபு, அதனால்தான் துன்பத்தின் முடிவு இன்பம் என்று ஆன்றோர் கூறுகின்றனர்.

மகப்பேறு பெறும் தாய் ஒருத்தி, படுகிற துன்பம் மிக அதிகம். ஆனாலும் அந்தத் துன்பத்தைத் தொடர்ந்து இனிய மகிழ்ச்சி மட்டுமல்ல, சமுதாய வளர்ச்சியும் தொடர்கிறது. அதுபோலவே, சமுதாயத்தில் ஒரு சீர்திருத்தம் செய்ய விரும்பி முயற்சிக்கின்ற போது, முதலில் நாம் அடைவது தோல்வியும் ஏமாற்றமும் இன்ன பிறவுமே! ஆனால் தொடர்ந்து முயற்சித்தால் சமுதாயம் மாறி வளரத்தான் செய்யும். சில சமயங்களில்-மகப்பேற்றில் தாய் இறந்து விட்டாலும் குழந்தை வளர்ந்து சமுதாய வளர்ச்சி தொடர்வது போலச் சீர்த்திருத்தம் செய்ய முயற்சிக்கும் தலைவன் இறந்து போனாலும், அந்தத் தலைவனின் சீர்திருத்தக் குழந்தை வளர்ந்து, வாழ்ந்து சமுதாயத்திற்குப் பயன் தருவது உறுதி.

## வெறும் பானையும்–குறிக்கோள் இலா மனிதர்களும்

சில தென்னை மரங்களைப் பார்த்திருப்பீர்கள்; மற்ற தென்னை மரங்களைப் போலவே அதுவும் வளர்ந்து, பாளை விட்டுக் காய்க்கும். காய், மற்ற தென்னை மரங்களில் காய்க்கும் காய்போலவே தோற்றமளிக்கும். ஆனால், அந்தக் காயை எடுத்து உடைத்துப் பார்த்தால் உள்ளீடு இருக்காது. அதற்கு, ‘வெறும்பாடை’ என்று பெயர். அந்த மரமும் உரிய காலம்வரை வளர்ந்துதான் இருக்கும். தேங்காயின் தோற்றமும் மற்ற தேங்காயைப் போலவே இருக்கும். ஆனாலும் உடைத்துப் பார்க்கும் போது உள்ளீடு இருப்பதில்லை. அது வெறும் பாடையாக இருக்கிறது. இதைப் போலவே மனிதர் களிலும் பலர் உள்ளனர். அவர்கள் பருவுடல் தோற்றத்தால்

மற்ற மனிதர்களைப் போலவே தோன்றுவார்கள். ஆனாலும் அவர்களிடம் ஆன்மநலம் இருக்காது-குறிக்கோள் இருக்காது.

## யாக்கையும்—வீணையும்

மானிட வாழ்க்கை அனைவர்க்கும் பொது. அந்த மானிட யாக்கையை இறைவன் தகுதியும் தரமும் பார்த்துப் பிரித்துக் கொடுக்கவில்லை. மிழற்றுகின்றவனின் திறமைக்கு ஏற்ப வீணையின் நாதம் எழுவதுபோல, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி அதனை இயக்குகின்றவனின் திறமைக்கேற்பக் குறிக்கோள் நிறைவு பெறுகிறது-வாழ்க்கை அமைகிறது.

## மனமும்—சமையலறையும்

நிலத்திலே நீருற்று இருப்பது போல மனிதனிடத்திலே நினைப்பூற்று இருக்கிறது. நினைப்பு நல்லதாக இருந்தால் மனிதன் நல்லவனாவான். பொதுவாக, பகல் 12 மணிக்கு நாம் ஒரு நல்ல விருந்து படைக்க வேண்டும் என்று விரும்பினால், காலை 8 மணிக்கே சமையற்கட்டுக்கு நல்ல சரக்குகளைக் கொடுக்க வேண்டும். சமையற்கட்டுக்கு நாற்றம் பிடித்த அரிசியையும், பூச்சி வைத்துக் கெட்டுப்போன கத்திரிக்காயையும் கொடுத்துவிட்டு, 12 மணிக்கு நல்ல சாப்பாடு வேண்டுமென்றால் ஒருபொழுதும் வராது. சமையற்கட்டுக்குக் கொடுக்கப்பெற்ற சரக்குகளுக்கு ஏற்பவே பந்தியிலே விருந்து அமையும். அதுபோல, நமது இதயம் என்ற சமையற்கட்டிலே ஏற்றப் பெற்ற எண்ணம் என்ற சரக்குகளுக்கு ஏற்பத்தான் சமுதாய வாழ்க்கை அமையும்.

## பாத்திரமும்—மனமும்

ஒரு பாத்திரத்தில் எதையாவது ஒன்றை வைத்துக் கொண்டு இன்னொன்றை அதன் மேல் ஊற்ற முடியாது. அதில் இருப்பதை அப்புறப்படுத்தி விட்டுத்தான் இன்னொன்றை ஊற்றவேண்டும். மனித உள்ளத்தில் வஞ்ச

ஆறு இயல்பிலே ஊற்றெடுக்கிறது. அதனை நாம் தூர்வை எடுத்துத் தூய்மைப்படுத்தி விட்டால் பக்தி ஆறு பெருக்கெடுக்கும். மனத்திலே வஞ்சம், பொய், களவு, சூது என்ற வஞ்ச ஆறுகள் வற்றினால்தான் பக்தி ஆறு பெருக்கெடுக்கும்.

## இலட்சியமும்–சுவையுணவும்

பசித்தபோது சுவையுணவு சாப்பிடுகிறோம். சாப்பிட்டு முடிந்ததும் கைகளைக் கழுவிவிடுகிறோமல்லவா? அது போல, உலகியலில் மிக்குயர்ந்த இலட்சியத்தை நோக்கிச் செல்லும் போது அதற்குச் சாதனமாகக் கொண்ட பொருளியல் பற்று முதலியவற்றை நாம் அந்த இலட்சியத்தை அடைந்ததும் அகற்றிவிட வேண்டும்.

## மூளையும்–சமயக்கணக்கரும்

மூளை மிகவும் முக்கியமான உறுப்பு. ஆனாலும், அது தானே அள்ளிச் சாப்பிடுவதில்லை. பிற உறுப்புக்கள் முயன்று உழைத்து மூளையைக் காப்பாற்றுகின்றன.

வேதம் ஓதுகிறவர்களும் சமயக் கணக்கர்களும் சமுதாயத்திற்கு மூளை போன்றவர்கள்; அவர்கள் தமது வாழ்க்கைப் பிரச்னைகளில் ஈடுபடாமல் தத்தம் கடமைகளைச் செய்தால், பிற உறுப்புக்கள் முயன்று உழைத்து மூளையைக் காப்பதுபோல, சமுதாயத்தின் மூளைபோல விளங்கும் அவர்களைச் சமுதாயம் முயன்று உழைத்துக் காக்கும்.

## ஊற்று நீரும்–மழை நீரும்

சிந்தனையால் பெறும் அறிவு ஊற்று நீர் போல. படிப்பால் பெறும் அறிவு மழை நீர் போல. ஊற்று நீர் எப்போதும் சுரந்து கொண்டிருக்கும். மழைநீரால் நிலம் நனையும். எனினும் ஈரம் எப்போதும் இருந்து கொண்டே

இருக்காது. எனவே சமுதாய வளர்ச்சிக்கு சிந்தனையறிவு தேவை.

## மருந்தும்—பணமும்

மருத்துவர்களிடமிருக்கும் மருந்து மற்றவர்களின் உடல் நோய் தீர்க்கப் பயன்படுவது போல, செல்வந்தர்களிடம் குவிந்து கிடக்கும் பணம் மற்றவர்களின் வறுமை நோய் நீக்கப் பயன்பட வேண்டும்.

## வாய்க்கால்களும் உழைப்பாளிகளும்

வரத்து வாய்க்கால்கள் மூலமே ஏரிக்குத் தண்ணீர் வரும்; அந்த வரத்து வாய்க்கால்களைக் கோடை காலத்தில் சரிவர மராமத்துச் செய்து வைத்திராவிட்டால் ஏரிக்குத் தண்ணீர் எப்படி வரும்? அதுபோல, உழைப்பு மூலமே செல்வந்தர்களுக்குப் பணம் சேர்கிறது. செல்வந்தர்களுக்குப் பணம் வருகின்ற வாய்க்கால்களான உழைப்பாளிகளைச் சரிவரப் பேணிக் காக்கத் தவறி விட்டால் செல்வந்தர்களுக்கு எப்படிச் செல்வம் சேரும்.

## தனி மனிதனும்—தனி மரமும்

தனி மரம் ஒன்று நின்றால் அந்த மரத்தினடியிலும் நிழல் இருக்கும். ஆனாலும் அந்த மரத்தைச் சுற்றி வெப்பம் இருக்குமானால், அந்த மரத்தின் நிழல் நாம் அனுபவிக்கத் தக்க குளிர்ச்சியுடையதாக இருப்பதில்லை. மரங்கள் அடர்ந்த சோலையாக இருக்குமானால் அதில் உள்ள நிழல் பெரிதும் அனுபவிக்கத்தக்க தண்மையும் இன்பமும் உடையதாக இருக்கும். செழிப்பற்ற சமுதாயத்தில் ஒரு தனி மனிதனும், செழிப்புள்ள சமுதாயத்தில் ஒரு தனி மனிதனும் இருக்கிறார்கள்.

செழிப்பற்ற சமுதாயத்தில் உள்ள ஒரு தனி மனிதனின் வாழ்க்கை இன்பம் போலத் தோன்றித் துன்பம் செய்யும்.

செழிப்புள்ள சமுதாயத்தோடு கலந்து வாழும் ஒரு தனி மனிதனின் வாழ்க்கை இன்பமே தரும்.

## தாழ்வாரமும்—சமுதாயமும்

வீட்டுத் திண்ணையின் முன்னே தாழ்வாரம் இருந்தால் வெளியே இருக்கிற வெப்பமும் தட்பமும் தாக்காத வண்ணம் வசிக்கலாம். தாழ்வாரம் இல்லையானால், வெப்பமும் தட்பமும் வீட்டில் வசிப்பவர்களைத் தாக்கவே செய்யும்., அதுபோல, சமுதாயம் என்ற தாழ்வாரம் இருந்தால் அதனுள்ளடங்கிய தனி மனிதன் வாழ்க்கை இன்பம் தழுவியதாக இருக்கும்.

## கட்டிடமும்—சமுதாயமும்

ஒரு கட்டிட அமைப்பில் சுவர்கள் ஒன்றோடொன்று இறுக்கமாகப் பொருந்தினாலேயே கட்டிடம் வலிமையுடையதாக அமையும். அதுபோல, மனிதர்களுக்குள் அன்பும் அறிவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தாலேயே சமுதாய அமைப்பு வலிமையும் வளமும் உடையதாக இருக்கும்!

## நாய்களும்—தீயர்களும்

கார்கள் ஓடும்பொழுது சில நாய்கள் குரைத்துக் கொண்டு விரட்டும். கொஞ்ச தூரம் போன பிறகு தொடர முடியாமல் எய்த்துப் போய் நிற்கும். அது போல, சமுதாய நலத் தொண்டு புரிபவர்களைச் சில சுய நலமிகளும், தீய சக்தியுடையவர்களும் தூற்றத் தலைப்படுவார்கள்-இறுதியில் தோல்வியுற்று அடங்கி விடுவார்கள்.

## அஞ்சற் பெட்டிகள்

உயிரினங்கள் இறைவனால் அங்கீகரிக்கப் பெற்ற அஞ்சற் பெட்டிகள்; சாதாரணமாக யாருக்கு அஞ்சல்

சென்று சேர வேண்டுமோ அவர் முகவரியை எழுதி, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பெற்ற எந்த அஞ்சற் பெட்டியில் போட்டாலும், அஃது உரியவருக்குச் சென்று கிடைப்பது போல, இறைவனுக்குச் செய்யும் நோக்கத்தோடு இறைவனின் அங்கீகாரம் பெற்ற மக்கட் சமுதாயத்திற்குச் செய்யும் சேவை இறைவனையே சென்று சேரும். இவ்வாறு செய்வதால் மக்கட்கும் இறைவனுக்கும் சேவை செய்த இருவகைப் புண்ணியங்கள் கிடைக்கும்.

## ஆடு மேய்ப்போனும்—ஆதீன கர்த்தரும்

ஆடுகளை மேய்ப்பவன் அவற்றை நாய் நரிகள் தின்ன விட்டு விட்டு ஆட்டிடையன் மட்டும் பத்திரமாகத் திரும்பி வந்தால் அவனைப் பற்றி நாம் என்ன நினைப்போம்? அது போல, மக்கட் சமுதாயத்தின் அருள் வேட்கையைத் தூண்டி அவர்களது ஆன்மாவை வளர்க்க வேண்டிய ஆதீன கர்த்தர்கள் சமுதாயத்தைப் பிற சமய நெறிகளுக்கும் வறுமைக்கும் ஆளாகும்படி விட்டு விட்டு, அவர்கள் மட்டும் வாழ்ந்தால் அதை என்ன என்று கூறுவது?

* * *

கோயிலுக்குச் செல்லும் வழியில், நடைபாதையில் பளுவான-பெரிய பட்டியல் கற்கள் பதிக்கப் பெற்றிருந்தன. அவற்றில் ஒரே ஒரு கல் மட்டும் தன் நிலையிலிருந்து மேலே எழும்பி, நடப்போரின் கால்களைப் பதம் பார்த்த வண்ணம் இருந்தது. ஒரு நாள் தவத்திரு அடிகளார் அவர்கள் அந்தக் கல்லைக் காண நேர்ந்தது. உடனே அந்தக் கல்லைப் பெயர்த்தெடுத்து மீண்டும் பதிக்கும்படி கட்டளையிட்டார்கள். ஆறேழு வேலைக்காரர்கள் கனத்த கடப்பாறைகளின் துணை கொண்டு அந்தக் கல்லை மிகவும் சிரமப்பட்டுப் பெயர்த் தெடுத்தார்கள்! என்ன வியப்பு! உள்ளே சுமார் ஒன்றரை முழம் நீளமுள்ள-கடப்பாறை போன்ற பருமனுள்ள ஒரு

பசிய வேர்-பசு மரத்தின் வேர் ஓடிக் கொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. வேரை வெட்டி எடுத்து விட்டு மீண்டும் அந்த ஆறேழு வேலைக்காரர்களும் சேர்ந்து முழு முயற்சி யோடு அந்தக் கல்லைப் பதித்தார்கள். இந்தக் காட்சி தவத் திரு அடிகளார் அவர்களின் மனத்தில் மின்னல் போலப் பளிச்சிட்டு, ஓர் அழகான உவமையாக வெளிவந்தது. "பல டன் எடையுள்ள-பலர் சேர்ந்து முழு முயற்சியுடன் பெயர்க்கக் கூடிய இந்தப் பெரிய கல்லை ஒன்றரையடி நீளமுள்ள இந்த வேர் நெம்பித் தூக்கிவிட்டது; இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது? கல் பல டன் எடையுள்ளது. ஆனாலும் அதற்கு உயிரோட்டமில்லை. வேரோ சுமார் ஒன்றரை முழ நீளமிருந்தாலும் அதற்கு உயிர்ப்பு இருக்கிறது-உயிரோட்ட மிருக்கிறது. அது பசுமரத்தின் வேர். உயிரோட்டமில்லாத பட்ட மரத்தின் வேர் ஒன்றை இந்தக் கல்லுக்கு அடியில் போட்டால் வேர் நசுங்கிப் போகும். மனிதனும் இப்படித் தான்! அவன் நாளும் சிந்தனையால் செயலால் வளரும் சக்தி படைத்தவனாக-உயிரோட்டமுள்ளவனாக இருந்தால் அடுக் கடுக்காகத் துன்பங்கள் வந்தாலும் அவற்றை எதிர்த்து நின்று வெற்றி பெற்று விடலாம். மனிதனுக்கு உயிரோட்டமிருக்கிறது என்பதன் அடையாளமே அவன் நாள்தோறும் சிந்தனையால் செயலால் வளர்வதுதான்!" என்று கூறி முடித்தார்கள். பக்கத்தில் இருந்த அனைவரும் அடிகளார் அவர்களின் உவமையின்பத்தில் மூழ்கித் திளைத்தார்கள்! எவ்வளவு அழகான உவமை!

## மனித மனமும்—வண்ணத்துணியும்

அடிக்கடி வண்ணம் மாறுகிற சென்னைத் துணி (Bleeding Madras) போல மனித மனம் அடிக்கடி மாறுகிற தன்மையுடையதாக இருக்கின்றது.

## காவிரியும்—கனிதமிழும்

காவிரி கடலோடு கலப்பது உண்மை; ஆனாலும் கடல்நீர் முழுவதும் காவிரிக்கு வந்துவிட்டால் காவிரி நீரின் சுவை கெட்டுவிடும். இரண்டுக்கும் உறவில்லையென்றாலோ, காவிரியின் ஊற்றுவளம் குன்றும். எனவே, காவிரியும் வேண்டும்-கடலும் வேண்டும். காவிரிக்கும் கடலுக்கும் உறவு இருப்பது போல, உலக மொழிகளோடும், இந்திய மொழி களோடும் தமிழுக்கு உறவிருக்க வேண்டும். ஆனாலும், அவற்றோடு கலந்து விடாமல், தமிழ் தன்னுடைய தன்மையை தகுதிப்பாட்டை இழந்துவிடாமல் பாதுகாக்கப் பெற வேண்டும். நம்முடைய தமிழினத்தினுடைய தமிழ் உணர்வும் ஆற்றலும் முயற்சியும் இதற்குப் பயன்பட வேண்டும்.

## மலரும்—மனிதனும்

செடிகளில் மலர்கள் பூத்துக் குலுங்குவது மக்களுக்கு மகிழ்ச்சி தருவதற்கு என்பதுபோல, நம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரத்தக்கதாக அமையவேண்டும்.

## பிரேக்கும்—நண்பர்களும்

வண்டிக்கு பிரேக் அவசியமாக இருத்தல் போல, மனிதர்களுக்கு அவர்களின் இயல்பான உணர்ச்சிப் போக்குக்குத் தடை போட்டு ஆற்றுப் படுத்தும் நண்பர்கள் தேவை.

## கொடியும்—கொம்பும்

கொடியும் கொம்பும் ஒன்றாகி விடுவதில்லை. ஆனாலும் அவை இரண்டுக்கும் உறவிருக்கும். இவ்வாறு கொடிக்கும் கொம்புக்கும் உள்ள உறவு போல உலகின் எல்லா மொழிகளோடும் தமிழுக்கு உறவு இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் தழைக்கும்.

## அரைக் கீரையும்–ஆற்றலரும்

அரைக்கீரை கிள்ளக் கிள்ளத் துளிர்த்து வளர்வது போல ஆற்றல் நிறைந்த மனிதன் துன்பத்தால் தாக்கப் பெறத் தாக்கப் பெற அவன் ஊக்கமும் உற்சாகமும் பெறுகின்றான். கோழைகள் பகைவரால் அழிக்கப்படுகிறார்கள்.

## கோயிலும்–பஞ்சாயத்தும்

திருக்கோயிலுக்குள் நாம் நுழையும் போது காற் செருப்பை வெளியே கழற்றி வைத்து விட்டுப் போவது போல, பஞ்சாயத்துக்குள் நுழைபவர்கள் தனி மனித உணர்வு, சாதிய உணர்வு ஆகியவற்றையெல்லாம் வெளியிலேயே விட்டு விட்டுப் போக வேண்டும்.

## புகையும்–தீமையும்

உத்திரத்திலோ சுவரிலோ புகை படிவது போலவே மனித மனத்தில் தீமைகள் படிகின்றன. புகை கொஞ்சம் கொஞ்சமாகவே படியும். தீமையும் அப்படித்தான்!

## வீடும்–சமுதாயமும்

இன்றையச் சமுதாய வாழ்க்கை கலைந்த வீடுபோல் காட்சியளிக்கிறது. கலைந்த வீட்டில் குடியிருப்பது என்பது எப்படி முடியாதோ அதுபோலவே, அன்பிலும் உறவிலும் வாழவேண்டிய சமுதாயம் தம்முள் கலைந்து விடுமாயின் மனித சமுதாயம் வாழமுடியாது!

## மழைநீரும்–மனித உணர்ச்சியும்

மழைபெய்து புரண்டுவரும் தண்ணீரைக் கால்வாய் களின் வழிக்கொணர்ந்து ஏரிகளில் தேக்கிக் கழனிகளுக்குப் பாய்ச்சும் போதுதான் உரிய பயன் ஏற்படுகிறது. அதுபோல, மனிதனிடம் தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை அறிவுக் கால்வாய்கள் வழிச்செலுத்தி அனுபவம் என்ற ஏரியில்

தேக்கிச் செயல்முறை என்ற கழனியில் செலுத்தினால்தான் உரிய பயன் விளையும். சிந்திக்காத மனிதனின் உணர்ச்சிகள் பொட்டல் காட்டில் பெய்த மழையைப் போலப் பயன் படாமல் போய்விடும்.

## சாம்பாரும்—வாழ்வும்

*சாம்பாரில் கடுகு அதிகமாகிப் போனால் சாம்பார் கசக்கும். பருப்பு அதிகரித்தால் சுவைக்கும். தன்னலம் பெருகுவது கடுகு அதிகரிப்பது போல, பொது நலம் பெருகுவது பருப்பு அதிகரிப்பது போல.*

## கீரைக்கட்டும்—நூல்களும்

*சந்தைக்குச் சென்று கீரைக்கட்டு வாங்கும் போது பூச்சிக்கீரைகளை ஒதுக்கி நல்ல கீரைதானா என்று பார்த்து வாங்குகிறோம். ஆனால், தரமான இலக்கியங்களைத் தேர்ந் தெடுத்துப் படிப்பதில் கீரைக்கட்டு வாங்குவதில் காட்டும் அளவு அக்கறைகூடக் காட்டுவதில்லையே!*

## சாளரமும்—மொழியும்

*நான்குபுறமும் சாளரம் உள்ள வீட்டில்தான் நல்ல ஆரோக்கியமான காற்றோட்டம் இருக்கும்; அதுபோல நாம் பல மொழிகளையும் பயில்வதன் மூலமே நமது தாய்மொழி செழுமையுறும்.*

## கற்ற கல்வியும்—பெற்ற பொருளும்

*கற்ற கல்வியை மறந்துவிடுவது என்பது சம்பாதித்த பணத்தைத் தெருவிலே போட்டுவிட்டு வருவது போன்றது. கற்ற கல்வியை மறந்து விட்டால் அது உற்ற நேரத்தில் கைகொடுத்து உதவாது.*

## ஊறுகாயும்—சமயமும்

நாம் பல்வேறு வகையான உணவுகளையும் சாப்பிட்ட பிறகு கொஞ்சம் ஊறுகாயைச் சாப்பிட்டால் நாம் சாப்பிட்ட உணவனைத்தும் செரித்து ஊறுகாயின் மணம் மட்டும் மேலெழுந்து நிற்பது போல, மதமும், கடவுள் நம்பிக்கையும் நம்மிடமுள்ள வஞ்சம், பொய், களவு, சூது, சினம் ஆகியவற்றைச் சீரணிக்கச் செய்து அன்பையும் சகோதரத்து வத்தையும் மேலெழுந்து நிற்கச் செய்யும்.

## ரோஜாவும்—மனிதனும்

ரோஜா மலர் மணத்தால் வண்ணத்தால் பலருக்கும் விருந்தளிக்கிறது. அதுபோல, மனிதனும் காட்சியாலும் செயலாலும் மற்றவர்களுக்கு இன்பமளிக்க வேண்டும்; அது மனிதனின் கடமை.

## ஒலிப்பதிவும்—உயிரும்

ஒலிப்பதிவு நாடாவில் (Tape Recorder) நாம் ஒலிப்பதிவு செய்வதையே மீண்டும் கேட்கிறோம். புதிதாகக் கேட்க முடிவதில்லை. அப்படிப் புதியது கேட்க விரும்புவோ மானால் அழித்துவிட்டுப் புதுப்பதிவு செய்ய வேண்டும். அதுபோல, நம் உயிரின் ஒலிப்பெட்டியில் நாம் எண்ணி யனவும் சிந்தித்தனவுமே பதிகின்றன. அவையே நம்மை நிழல் போலத் தொடர்கின்றன.

## இரும்பும்—மனிதனும்

இரும்பை நெருப்பில் போட்டுச் சூடுண்டாக்கிச் சம்மட்டியால் அடித்தால்தான் அது வில்லாக வளையும் என்பதுபோல, மனிதனை நோன்பால் வருத்திப் பக்குவப் படுத்தினால்தான் அவன் பயன்படும் மனிதனாவான்.

## சமையற்காரரும்—ஆசிரியரும்

சமையற்காரர்களின் திறமையைப் பொறுத்துச் சமையலின் சுவை அமைவதுபோல, ஆசிரியர்களின் திறமையைப் பொறுத்தே மாணவர்களின் எதிர்காலம் அமையும்.

## தராசும்—மனிதனும்

ஒன்றை நிறுத்துக் காட்டுகின்ற தராசின் முள் மட்டும் தனித்துக் கிடக்குமானால் அதற்குக் கடமையுமில்லை, சிறப்பு மில்லை. அதே முள் தராசில் இணைக்கப் பெறுமானால் கடமையுண்டு-சிறப்பும் உண்டு. அப்பொழுது அம்முள் குறையையும், நிறையையும் காட்ட வேண்டும். அதுபோல, மனிதர்கள் பொறுப்புள்ள பதவிகளைப் பெறுவார் களானால், அப்பதவிகளுக்கு ஏற்பக் கடமைகளுண்டு. குறை நிறை காட்டும் கடமை புரியாத தராசு-ஓட்டைத் தராசு, கடமையைச் செய்யாமல் பதவியில் வீற்றிருப்பவர்கள் உபயோகமற்றவர்கள்; உதவாக்கரைகள்.

## மரமும்—மதமும்

மரம் செழித்து வளர வேண்டுமானால் அந்த மரம் தங்கி முளைக்கும் மண்ணைச் செழிப்பாக்க வேண்டும். மதம் செழித்து வளர வேண்டுமானால் அம்மதத்தைத் தழுவுகிற-அம்மதத்தில் வாழுகிற மனிதர்களின் வாழ்க்கையைச் செழிப் பாக்க வேண்டும்.

## கேணியும்—மனித வாழ்வும்

கேணிச்சுவர் வெள்ளியால் கட்டப் பெற்றிருந்தாலும் வாளி தங்கத்தால் செய்யப் பெற்றிருந்தாலும், கயிறு வெள்ளியினால் செய்யப் பெற்றிருந்தாலும் அந்த கேணியில் இறைக்கும் நீர் குப்பென்று நாற்றமடித்தால் என்ன பயன்? அது போல, மனிதன் மாடமாளிகையில் வாழ்ந்தாலும்

கூடகோபுரத்தில் குடியிருந்தாலும், எல்லா இன்பங்களையும் அனுபவித்தாலும் அவனிடத்தே அன்பும், ஆன்மீக உணர்வும், மனிதப் பண்பும் இல்லையானால் என்ன பயன்?

## உணவும்-வழிபாடும்

சாப்பிடுகிற மனிதனுக்குப் பசி நீங்க வேண்டும்; குளிக்கிற மனிதனுக்கு உடல் அழுக்கு நீங்கி வெப்பம் தணிய வேண்டும் என்பனபோல, வழிபாடு செய்கிற மனிதனுக்கு உள்ளத்தில் உள்ள வெப்ப நோய் நீங்க வேண்டும்; இல்லை யானால் வழிபாட்டால் என்ன பயன்?

## தாமரையும்-தனி மனிதனும்

தண்ணீருக்கும் தாமரைக்கும் இருக்கிற உறவு போல, மண்ணுக்கும் மரத்திற்கும் இருக்கிற உறவு போலத் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும்.

## மண்ணின் ஈர்ப்பும்-இழிதகைமையும்

விண்ணோக்கிச் செல்லும் பொருளை மண்ணோக்கி இழுக்கும் ஈர்ப்புச் சக்தி மண்ணுக்கு இருப்பதுபோல, மேல் நோக்கிப் பறக்கிற மனிதனைக் கீழ்நோக்கி இழுக்கின்ற ஆற்றல் வஞ்சனை பொய் களவு சூது சினம் ஆகியவற்றிற்கு உண்டு. அவற்றின் ஆற்றலை அடக்கி மனிதனை மாமனிதனாக ஆக்கும் சக்தி மதத்திற்கும் கடவுள் நம்பிக்கைக்கும் உண்டு.

## ஆறும்-இறைவனும்

ஆறுகளுக்குத் துறை பலவாக இருக்கலாம்; ஆனாலும் நாம் ஒரு நேரத்தில் இறங்கிக் குளிக்க ஒரு துறையே பயன்படும். அதுபோல, இறைவனுக்குப் பெயர்கள் பலவாக இருக்கலாம். எனினும் நாம் அனுபவித்து மகிழ-பயன் பெற

ஒவ்வொருவரும் ஒரு நாமத்தையே உறுதியாகக் கொள்ள வேண்டும்.

## தேனாறும்—திருவருளும்

தேனிலோ உப்பிலோ ஊறிய பொருள் அவற்றின் சுவையைப் பெறுவது போல, இறைவனுடைய திருவருளை நினைந்து நினைந்து அந்த இன்ப அனுபவத்தில் ஊறித் திளைத்தவர்கள் அருள் வசமாகி விடுவார்கள்.

## சமூகமும்—சீன வெடிக்கட்டும்

சமூகம் என்பது ஒரு சீன வெடிக்கட்டுப் போன்றது; சீன வெடிக்கட்டில் ஓரிடத்தில் தீ வைத்தாலும் கட்டு முழுவதும் வெடிப்பது போல, சமூகத்தில் எங்கேனும் ஒரு மூலையில் தீமை பற்றினால் அது சமூகம் முழுவதையுமே பற்றத்தான் செய்யும்.

## விவசாயமும்—சமயமும்

நிலத்தை உழுதல் வளப்படுத்துதல் பயிர் செய்தல் பயிர்களைப் பாதுகாத்தல் முதலான அனைத்துமே விவசாயத் தொழில்கள்தாம் என்பது போல, மனித குலத்திற்கு நல்லறிவு தருதல், நலத்தைப் பாதுகாத்தல், வறுமை, பிணி, பகை முதலியவற்றிலிருந்து பாதுகாத்தல் ஆகிய அனைத்துமே சமயத் தொண்டுகள்தாம்.

## கழனியும் மக்களும்

கழனிகள் இல்லையேல் விளை பொருள்கள் இல்லாமற்போவது போல, மக்கள் மன்றம் இல்லையேல் சமயம் இல்லாமற் போகும்.

* * *

நமக்கு இருக்கிற நிலபுலன்களையும், சொத்துக் களையும் நாம் நமது வாரிசுகளுக்குப் பத்திரம் செய்து

கொடுப்பதுபோல, நமது அருளாளர்களும், ஞானியர்களும் நமக்களித்திருக்கிற அருட்பாடல்களையும் அறவுரைகளையும் நமது பரம்பரைக்கு நாம் பத்திரம் செய்து கொடுத்துப் படிக்கச் செய்து சொந்தமாக்கிக் கொள்ளும்படி செய்ய வேண்டும்.

* * *

கரித்துண்டை என்னதான் பாலூற்றிக் கழுவினாலும் கரித்துண்டு பாலின் நிறத்தைப் பெறாதது போல, எட்டிக் காயை என்னதான் தேனில் ஊறப்போட்டாலும் எட்டிக்காய் தேனின் இன்சுவையைப் பெறாதது போல, கீழ்மைக் குணம் படைத்த கயவர்களை எவ்வளவுதான் திருத்த முயற்சித் தாலும் அவர்கள் திருந்தி நல்லவர்களாக மாட்டார்கள். மாறாகக் கரித்துண்டு பாலைத் தன் நிறத்திற்கு மாற்றி விடுவது போல, கீழ்மைக் குணம் படைத்த கயவர்கள் நல்லவர்களையும் கெடுத்து விடுவார்கள்.

* * *

உரிமையைக் கடமையாகச் செய்தால்தான் உரிமை சிறக்கும். உரிமை மட்டும் இருந்து கடமை சிறக்கவில்லை யானால் அந்த உரிமையும் சிறப்பிழக்கும். பயிரைப் பாதுகாக்க வேலி இருப்பது போல உரிமையைப் பாதுகாக்க கடமை இருக்கிறது.

* * *

நாள்தோறும் உடலில் சேரும் அழுக்கைக் குளிப்பதன் மூலம், தூய்மைப் படுத்திக் கொள்வது போல, நாள்தோறும் உடையில் சேரும் அழுக்கை துவைப்பதன் மூலம் தூய்மைப் படுத்திக் கொள்வது போல, நாள்தோறும் உள்ளத்தே எழும் துன்பங்களையும் இறைவனை நோக்கி அழுவதன் மூலம் போக்கித் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த அழுகை இதயத்திலிருந்து பொங்கி வர வேண்டும். அதுதான்

பிழையைத் திருத்தும் – பிழையிலிருந்து நம்மை விடுவிக்கும், பிறப்பைத் தடுக்கும், பேரின்பத்தை அளிக்கும்.

* * *

படிப்பவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் பொறுத்தே பத்திரிகைக்குப் பெருமை என்பது போல கும்பிடு கிறவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் பொறுத்தே நெறிக்கும் கடவுளுக்கும் பெருமை ஏற்படும்.

* * *

பாலிலே தண்ணீர் கலப்பதும், அரிசியிலே கல்லைக் கலப்பதும் எவ்வளவு பெரிய குற்றமோ அதைவிட மாபெரும் குற்றம் சிந்தனையிலே நஞ்சு கலந்து மக்கள் மத்தியிலே உலவ விடுவது.

* * *

வீடில்லாதவர் வாழ்க்கையில் வெய்யில் வருத்துவது போல, சமூகம் இல்லாதவர் வாழ்க்கையில் பகை வருத்தும், வீடில்லாதவர் வாழ்க்கையில் குளிர் வருத்துவது போல சமூகம் இல்லாதவர் வாழ்க்கையில் அழுக்காறு வருத்தும். சமூக வாழ்க்கை மிக மிக முக்கியமானது. அதுதான் கடவுள் பக்தி என்று நான் கருதுகிறேன்.

உள்ளத்தில் உள்ள சக்திதான் பக்தி–அதைப் பயன் படுத்திச் செயலாக்குவதுதான் தொண்டு. பக்தியும் தொண்டும் உடலும் உயிரும் போல; மலரும் மணமும் போல.

* * *

வானம் மழை பொழிந்தால் மண்ணில் மரம் செடி கொடிகள் தழைக்கும் என்பது போல, மனித மனத்தில் அன்பு மழை பொழிந்தால் மனித சமுதாயம் செழிக்கும்!

* * *

கு XVI-18.

குழந்தைகளின் மனம் சுறுசுறுப்பாக இயங்கும் ஆற்றல் மிக்கதோர் இயந்திரம் போல. அது, எதையும் படம் பிடித்துக் கொள்ள சக்தி வாய்ந்த ஒரு காமிரா. எனவே, குழந்தை களிடத்தில் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் பழக வேண்டும். அவர்களுக்கு நல்ல காட்சிகளையும் நல்ல சூழலையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

* * *

மக்களுக்கு மணமும் தேனும் தந்துதவுகிற மலர்களை இறைவன் விரும்புவது போல, மக்களுக்கு அன்போடும் பண்போடும் உதவி செய்கின்றவர்களையும் இறைவன் விரும்புவான்.

* * *

பக்தியும் தொண்டும் ஒரு நாணயத்தின் இருபுறங் களைப் போல, கண்களை மூடிக்கொண்டு பஜனை செய்கின்ற அளவிலேயே நிற்பது பக்தி-மனிதன் அசைய ஆரம்பித்ததும் தொண்டு மலர்கிறது. பானைக்குள் இருக்கும் தண்ணீரைத் தூய்மையாக வைத்துக் காப்பது பக்தி. அதனை அள்ளிக் குடிக்கும்படி செய்வது தொண்டு.

* * *

கட்டுச்சோறு மறுநாள் பயணத்திற்குப் பயன்படுவது போல, குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் கல்வி அவர்களின் எதிர்காலத்திற்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும்.

* * *

பெய்கின்ற தண்ணீரைத் தனக்கு உணவாக ஏற்றுக் கொள்ளாத செடிகொடிகள் செழித்து வளராதது போலக் கற்கின்ற கல்வியை-அந்தக் கல்வியின் மூலம் கிடைக்கக்கூடிய சிந்தனையை உணவாக ஏற்றுக் கொள்ளாத குழந்தைகள் சிறந்து வாழமுடியாது.

# திருவாசக உவமைகள்

## இரைதேர் கொக்கு

ஆற்றங்கரைகளிலும் - குளத்தங்கரைகளிலும் கொக்கு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கும். பரபரப்பின்றி - தவம் செய்வது போல உட்கார்ந்து கொண்டிருக்கும். ஏன்? இரையை எதிர்பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. கொக்குக்கு இரை மீன்! அம்மீன்கள் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றின் கரையில்தான் அது உட்கார்ந்து கொண்டிருக்கின்றது. ஏன் ஓடுகிற மீன் குஞ்சுகளை-மீன்களைப் பிடிக்கக் கூடாதா? பிடிக்கலாம்; தடையில்லை. ஆனால், வயிற்றுக்குப் போதுமானதாக-திரும்பத் திரும்பப் பிடிக்க வேண்டிய அவசியமில்லாதபடி ஒரே முயற்சியில் பிடித்து உண்ணும் அளவிற்குப் பெரிய மீன் வரும் வரைக் காத்திருக்கின்றது. இந்தக் காட்சியும் கொக்கின் வாழ்க்கை முறையும் கவராத கவிஞர்கள் கிடையா? மாணிக்கவாசகரும் இந்தக் காட்சியில்-வாழ்க்கையில் கவர்ச்சிக்கப்பட்டுள்ளார். தாமும் இரைதேர் கொக்கு போல வாழ்ந்ததாகக் கூறுகிறார்.

உயிருக்கு இரை இறைவனின் திருவருளேயாம். உடற் பசிக்கு எடுக்கும் இரை-மீண்டும் மீண்டும் பசியைத் தோற்றுவிக்கும். ஆதலால், உயிர் மீண்டும் பசிக்காத-அனுபவிப்பதால் மேலும் மேலும் இன்பப் பெருக்கினைத் தருகின்ற இறைவனின் திருவருளையே உணவாக ஏற்று உண்டு தேக்கெறிந்து வாழ்தல் வேண்டும். இந்த வேட்கை மாணிக்கவாசகரின் பெரு விருப்பம். மாணிக்கவாசகப் பெருமான் உடல் தாங்கி உலவினாலும், உடம்பு நீங்கி விடுதலை பெறுதலையே விரும்பினார். அவரது விருப்பம் கை கூடுவதற்குரிய காலத்தை அவர் எதிர்பார்த்துக் காத்திருந்தார். இடைவெளியில் அமைச்சு அதிகாரம் பரிகள் வாங்குதல் ஆகிய பல்வேறு கவர்ச்சிகளுக்குரிய பேறுகள்

கிடைத்தும் மாணிக்கவாசகர் அவற்றில் நின்று நிலைத்து அனுபவிக்கவில்லை. சமய வாழ்க்கையின் சிறந்த நோக்கம் இம்மையும் மறுமையும் ஒருங்கே நலம் பெறுதலேயாகும். மாணிக்கவாசகர் இம்மை நலன்களை, தம்மைத் தேடி வந்தவற்றைத் துச்சமென உதறித் தள்ளினார். “பொன் வேண்டேன்; புகழ் வேண்டேன்; பொருள் வேண்டேன்” என்று பாடுகின்றார்.

கொக்கின் நிறம்போல மாணிக்கவாசகர் அகத்தாலும் புறத்தாலும் தூயவர்-கொக்கு உட்கார்ந்திருக்கும் ஆற்றில் புனலும், போகத்துக்குரிய மீன்களும் ஓடுதல்போல, மாணிக்கவாசகர் அமர்ந்திருந்த அரசவை வாழ்க்கையில் பொருள்களும் போகமும் புரண்டன. கொக்கு, ஓடிய எல்லா மீன்களையும் பிடிக்காதது போல அவர், தமக்கு கைக்கு எட்டியனவாக இருந்த எந்தப் பொருள்களையும் போகங் களையும் விரும்பினாரில்லை. கொக்கிற்குத் தனக்குத் தேவையானதும் போதுமானதுமான மீன் எது என்று தேர்ந்தெடுக்கும் அறிவு இருப்பதால் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடிக் காத்திருக்கிறது. மாணிக்கவாசகரும் ஞானம் கைவரப் பெற்றவரானமையால் நிலையில்லாத வற்றைத் தெளிவுற உணர்ந்து நிலையான திருவருட் பேற்றை விரும்பி நிற்கிறார். நாம் விரும்புவதொன்று, விரும்பியவுடன் கிடைத்துவிடுவதில்லை. அதற்காகப் பலகாலும் காத்திருக்க வேண்டிவரும். அதுமட்டுமின்றி, கொக்கு ஆற்றங்கரையில் பெரிய மீனுக்காகக் காத்திருக்கிறது. பெரிய மீன் கிடைக்கு மளவு இரவுபகல் என்று பாராமல் காத்திருக்கின்றது. காற்று, வெயில், மழை, இன்னபிற இயற்கைத் துன்பங்களை ஏற்றுப் பொறுத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அது மட்டுமா? அந்தக் கொக்கையே கொல்லும் பகை மனிதனும் நடமாடு கிறான். அவனுடைய குறியிலிருந்தும் அது தப்பி, இடம் மாறித் தற்காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அது போலவே, இறைவனுடைய திருவருளைப் பெற்று ஆரத் துய்க்க வேண்டும் என்று விரும்புகிற ஆன்மா இரவு பகல்

என்று பாராமல், முயற்சிக்க வேண்டும். மாணிக்கவாசகர் கங்குல் பகற்பொழுது எல்லாம் கரைந்து அழுது திருவருளைப் பெற முயற்சித்தார். திருவருள் பெறும் முயற்சியில் உலகும், உலகியலும் தீராத் தொல்லைகள் தரும். அத்துன்பங்களையும் இன்பமாகக் கருதி ஏற்றுக் கொள்ளாவிடில் திருவருட்பேறு சித்திப்பதில்லை. மேலும், எப்படி கொக்கையே சுடும் மனிதன், நடமாடுகிறானோ அப்படியே நம்மையே தன்னுணர்வளித்து நெறியல்லா நெறிதன்னில் பயின்று மூர்க்கராகி முதலிழந்து அழியச் செய்யும் பொறிகளும் புலன்களும் பகை காட்டுகின்றன. மாணிக்கவாசகர் தாம் இப்படி அலைக்கப்பட்டதாகத் தம் மீது ஏற்றிக் கூறுகின்றார். ஒன்றைப் பெறாமையினால், துன்பம் உண்டாக வேண்டும். அத்துன்பத்தினால் நாம் வாடுதலும் வேண்டும். அப்பொழுதுதான் பெறாமைக்குரிய காரணங்களை நீக்கி, பெறுதற்குரிய முயற்சிகளைக் கவலையுடனும் அக்கரையுடனும் மேற்கொள்ள முடியும். ஆதலால், இறைவனுடைய திருவருளைப் பெறாது அல்லற் படுபவர்கள் அதற்காகத் துக்கப்பட வேண்டும்; வாடுதல் வேண்டும். மாணிக்கவாசகர் இப்படித் துக்கித்தார்-வாடினார் என்பதை அவருடைய நூலாகிய திருவாசகமே நமக்குணர்த்தும். இரைதேர் கொக்கொத்து இரவுபகல் ஏசற்றிருந்தே வேசற்றேன் என்பது மாணிக்கவாசகரின் மணிமொழி. முழுப்பாடலையும் அனுபவிப்போம்:

*அரைசே பொன்னம் பலத்தாடும்*
*அமுதே என்றுன் அருள்நோக்கி*
*இரைதேர் கொக்கொத் திரவுபகல்*
*ஏசற் றிருந்தே வேசற்றேன்*
*கரைசேர் அடியார் களிசிறப்பக்*
*காட்சி கொடுத்துன் அடியேன்பால்*
*பிரைசேர் பாலில் நெய்போலப்*
*பேசா திருந்தால் ஏசாரோ?*

## பொற்கிண்ணம்

சிவானந்த அனுபவத்தில் திளைத்த மாணிக்க வாசகருக்கு உலகியல் சான்றுகள் எளிதில் கிடைக்கின்றன; அவர் மிகச் சிறந்த உண்மைகளை விளக்க எடுத்தாளும் உவமைகள் எளியனவாக இருக்கின்றன- நடைமுறையை ஒட்டியனவாகவும் இருக்கின்றன என்பது உணர்ந்தின்புறத் தக்கது.

உலகியலில் அறியா மக்கள் தாம் முயன்று பெற்றவற்றையேகூட அருமை கருதித் தொடர்ந்து போற்றிக் காப்பாற்றுவதில்லை. மிக மோசமான இயல்புடைய மக்கள் தங்களுக்கு எளிதில் கிடைக்கும் எதையும் அதனுடைய தகுதியறிந்து போற்றுவதில்லை. பன்றியின் முன்னே முத்தை வாரியிறைத்தது போலவும், கழுதையின் மீது குங்குமப் பூவைச் சுமத்தியது போலவும் ஆகிவிடும், அறியா மாக்களுக்குச் சான்றோர் செய்யும் உதவிகள். பலகால் கேட்டுப் பெறுவதைவிடக் கேளாமல் கிடைப்பதைப் போற்றும் இயல்பு பொதுவாக மக்களிடத்து இருப்பதில்லை. அருமையை உணர்ந்து பாராட்டுவதற்குப் பதிலாக அந்த உதவியைச் செய்யும் இயல்புக்கும் ஏதாவதொரு உள்நோக்கம் கற்பித்துக் களங்கப்படுத்தவும் செய்கின்றனர். இவ்வாறு கேட்டுப் பெறுவதைவிடக் கேளாமல் கிடைப்பதைப் போற்றும் இயல்பினை, மாணிக்கவாசகர் தம்முடைய அனுபவத்தின் மீதேற்றி விளக்குகிறார்.

ஒரு செல்வந்தரின் வீடு–தங்கம் தாராளமாகப் புழங்கும் வீடு–ஒரு நாள், வீட்டுத்தலைவி சாமான்களை எண்ணிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் அருகில் இருந்த அவளுடைய அருமைக் குழந்தை அங்கிருந்த பொருள்களில் ஒன்றாகிய தங்கக் கிண்ணத்தை விரும்பிக் கேட்டது. தாயும் கொடுத்தாள். குழந்தை தங்கத்தின் மதிப்பறிந்து கேட்க வில்லை. ஏதோ ஒரு பொருள். மற்றவர்கள் வைத்திருக்

கிறார்கள்; அது தனக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கேட்கிறது; குழந்தை அந்தத் தங்கக் கிண்ணத்தை வாங்கியதும் விளையாட்டுப் போக்கில் வீதிப்பக்கம் வருகிறது. அப்போது அது, தனக்கு மிக உவப்பான– பிடித்தமான கற்கண்டு கட்டிகளையோ, வைத்து விளையாடுதற்குரிய விளையாட்டுப் பொருள்களையோ யாராவது தந்து தங்கக் கிண்ணத்தைக் கேட்டால் கொடுத்து விடும். அதற்குத் தங்கக் கிண்ணத்தின் மதிப்புத் தெரியாது. பொம்மைகளைப் போட்டு உடைத்து விளையாடுவது போலத் தங்கக் கிண்ணத்தைப் போட்டு விளையாடவும் செய்யலாம். காரணம், அது அறியாக் குழந்தை.

அது போல,

இறைவன் உயிர்களுக்குக் கருணையினால் மாறிலாக் கருணையை வழங்குகின்றான். எனினும் பல உயிர்கள் அதைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்வதில்லை. இறைவன் கருணை நிறைந்தவன் என்பதை யுணர்த்தும் வண்ணம், அவன் அம்மையப்பனாகவே விளங்குகின்றான். அவன் உயிர்கள் இருக்கும் இடம்தேடி, இல்லங்கள்தோறும் எழுந்தருளித் திருவடித் தாமரைகளைக் காட்டி ஆட்கொள்ளுகின்றான். மாணிக்கவாசகப் பெருமானையும், பெருந்துறையில் பிச்சதியற்றி ஆட்கொண்டதாகவும், தான் அதன் அருமையை உணராததாகவும் மேற்கண்ட உவமையின் வாயிலாக விளக்குகின்றார். இக்கருத்தமைந்த அழகிய பாடல் இதோ:

*"மையி லங்குநற் கண்ணி பங்கனே*
*வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்*
*கையி லங்குபொற் கிண்ண மென்றலால்*
*அரியை என்றுனைக் கருது கின்றிலேன்*
*மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்*
*மெய்மை யன்பருள் மெய்ம்மை மேவினார்*

*பொய்யி லங்கெனைப் புகுத விட்டு நீ*
*போவ தோசொலாய் பொருத்த மாவதே!"*

தங்கத்தின் மதிப்பறியாக் குழந்தை போல தன்னைக் கற்பனை செய்து கொள்ளுகின்றார் மாணிக்கவாசகர். தங்கக் கிண்ணம் போன்றது இறைவன் வழங்கிய தண்ணருள்.

அடுத்து, குழந்தை தங்கக் கிண்ணத்தின் மதிப்பறியாது கெடுத்தாலும் குழந்தையின் மீது யாரும் குற்றம் சொல்ல மாட்டார்கள். ஆதலால், குழந்தையின் கையில் கொடுக்கப் பெற்ற தங்கக் கிண்ணத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அத்தாய்க்கு இருக்கிறது. அதையுணர்ந்த தாய் குழந்தையைத் தொடர்ந்து சென்று அந்தப் பொற் கிண்ணத்தைக் காப்பாற்றுவது போல தன்னையும் காப்பாற்ற வேண்டும் என்று மாணிக்கவாசகர் விண்ணப்பிக்கின்றார். காரணம், இறைவன் வெண்ணீற்று மேனியன். அவ்வாறு வெண்ணீற்று மேனியனாக இருக்கின்றான் என்று குறிப்பதன் பொருள் ஆன்மாக்கள் வினை நீக்கம் பெற வேண்டும் என்பதற்காகவே அவன் வெண்ணீறணிகின்றான் என்று ணர்த்தலேயாகும். ஆதலால் குழந்தையின் அறியாமைக்குத் தாய் பொறுப்பேற்று ஈடுசெய்தல் போலத் தன்னுடைய அறியாமைக்கும் இறைவனே பொறுப்பேற்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். அறியாக் குழந்தையின் தவறைத் தாய் திருத்திப் பாதுகாப்பது போலப் பொய்யிலங்குகின்ற தன்னை இறைவன்தான் பாதுகாக்க வேண்டும் என்றும் சொல்லுகின்றார். ஒரு தாய் குழந்தைக்கு உவப்பான பொருள் களைக் குழந்தைகளிடத்துக் கொடுத்தும், அனுபவிக்கச் செய்தும், அழிவு வராமல், அனுபவம் இடையறாமல் பாதுகாத்து அனுபவிக்கச் செய்வது போலத் தனக்கு இறைவன் வழங்கிய திருவருளின்பத்தை இடையறாமல் அனுபவிக்கும்படி செய்து பாதுகாக்க வேண்டும் என்றும் விண்ணப்பிக்கின்றார். எவ்வளவு அழகான உவமை!

## ஐயோ பாவம்!

ஒரு சிலருக்குப் பிறப்பின் சார்பினாலே பெருந்தன்மை பெருங்குணம் முதலியன இயல்பிலேயே அமைந்து கிடக்கின்றன. ஒரு சிலர் மேற்கூறிய நல்லியல்புகளைப் போராடிப் பெறுவார்கள். இன்னும் ஒரு சிலர் அற்பத்தனத்திலேயே பிறந்து அற்பத்தனத்திலேயே வாழ்ந்து வாழ்ந்து, அற்பத்தனத்திலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்ளுவார்கள். அவர்கள் சிறியவர்கள்–அற்பர்கள். அவர்களுக்கு– இக்கடை இனத்தார்க்கு நலன் தெரியாது; அவர்கள் நலன் நினைக்க மாட்டார்கள்; நலன் செய்யமாட்டார்கள். சிறுமை பொருந்திப் பெருமை முடங்கிக் காட்சி தருவார்கள். செயலற்று அற்பமாக ஏமாற்றியும் புறம் சொல்லியும் வாழ்வார்கள். ஆக்கத்தில் வாழத்தெரியாமல் அழிவில் ஆதாயம் எடுப்பார்கள். எரிகின்ற பிணத்தை நரி பிடுங்குவது போல, இத்தகையோர் பரிதாபத்திற்குரியவர்கள். இந்த வரிசையைச் சார்ந்த மக்களை மாணிக்கவாசகர் ஒரு சிறந்த உவமையால் விளக்குகின்றார்.

கடலில் தண்ணீர் நிறையக் கிடக்கின்றது–நாய் நிற்பதோ கடற்கரை. நாய்க்கு மிகுதியான நீர்வேட்கை. நாவறண்டு தொங்க அது நீரைத் தேடிக் கடற்கரைக்கு வந்தது. நிறையக் குடிக்க வேண்டும் என்ற ஆசை. தேவையும் கூட. கடலிலும் தண்ணீர் நிறைந்து கிடக்கின்றது. எனினும் அது நக்கியே குடிக்கின்றது. அது போலவே சிலர் நல்ல இடத்தில் இருப்பார்கள்–அவர்களுக்குத் தேவையும் ஆசையும்கூட நிறைய இருக்கும். எனினும், அற்பத்தனமாகவே பிழைப்பு நடத்துவார்கள்.

இறைவனுடைய திருவருளால் இந்த உலகம் இயங்குகின்றது. அவனுடைய திருவருள் வைப்பின் காரணமாக எத்தனையோ கோடி இன்பங்கள் இந்த உலக அரங்கில் நிரம்பிக் கிடக்கின்றன. எனினும், மனிதர்கள் உழைத்து

இன்பத்தைப் பெற முயற்சிப்பதில்லை. அற்பமாகவே நடந்து கொள்ளுகிறார்கள். இறைவனையும் எண்ணிப் பார்ப்ப தில்லை. நாய் கடல் நீரை நக்கிக் குடிப்பது போலவே, மனிதர் களில் பலரும் திருவருளின்பம் மலிந்து கிடக்கும் இந்த உலகியலில் நக்கி வாழும் சிறுமையைச் செய்கிறார்கள் என்று கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

கடலில் நாய் நக்கிக் குடித்தல் இயற்கை. அது மாற்ற முடியாத ஒன்று. ஆனால், மனிதனின் இயற்கை பெருந் தன்மைக்குரியது. மனிதனின் வாழ்க்கையில் சிறுமை இருப்பது இயற்கைக்கு முரண்பட்டது. செயற்கையும்கூட என்ற குறிப்பையும் அவர் உணர்த்துகின்றார்.

நாய்க்கோ நீர் வேட்கை-வேட்கையைத் தணித்துக் கொள்ள அது கடற்கரையினருகிலுள்ள சிறிய தெண்ணீ ரூற்றுக்களுக்குப் போகாமல் ஆசை மிகுதியால் நிறை நீர்ப்பரப்புள்ள கடலையே நோக்கி வந்திருக்கிறது. கடல் நீரோ உப்பு நீர், நக்கித்தான் பார்க்க முடிந்ததே தவிர குடிக்க முடியவில்லை. வேட்கையைத் தணித்துக் கொள்ள முடிய வில்லை. அது போல மனிதர்கள் பேராசையின் காரணமாக-அற்பத்தனங்களின் சின்னமாக தீமைக் கடல்களையே நாடு கின்றார்கள். எனினும் அவர்களால் முடிவதில்லை என்ற கருத்தையும் மாணிக்கவாசகர் உணர்த்துகின்றார்.

“ஒன்று பரம்பொருள்-நாமதன் மக்கள்-உலகின்பக் கேணி” என்ற பெருவட்ட நோக்கோடு ஒருவரோடொருவர் ஒத்தும், ஒத்துழைத்தும் வாழ்ந்தால் நினைத்தவை கைகூடும்-இன்பமாக வாழலாம்-இறையருளைப் பெறலாம் என்பது மாணிக்கவவாசகரின் கருத்து. இதோ பாடலைப் பாருங்கள்:

கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியார்

*உடலில மேமன்னும் உத்தர*
*கோசமங் கைக்கரசே*
*மடலின்மட் டேமணி யேயமு*
*தேயென் மதுவெள்ளமே!*

## ஆன்மாவும் கொடியும்

உலகியலில் எந்த ஒன்றும் தனித்து இருப்பதில்லை. தனித்திருப்பது வளர்ச்சிக்கு இடையூறு-முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை. இதே தத்துவம் சமய இயலுக்கும் பொருந்தும். உயிர் தனித்திருப்பதில்லை. உயிருக்குச் சார்பின்றித் தனித்திருக்கும் இயல்பும் ஆற்றலும் இல்லை. ஒன்று, உலகப் பொருள்களைச் சார்ந்து அவற்றை அனுபவிக்க வேண்டும்; அல்லது, இறைவனுடைய திருவருளைச் சார்ந்து திருவருளின்பத்தை அனுபவிக்க வேண்டும். இஃது உயிரின் இயற்கை. உயிர் திருவருளைச் சார்ந்திருப்பது திருத்தத்திற்கும் உய்திக்கும் வழிவகுக்கிறது. அப்படியின்றி உலகியலை மட்டும் சார்ந்திருப்பது துன்பத்திற்குக் காரணமாக அமைகின்றது. உலகியல் வசப்பட்ட உயிர் எரியுள் அகப்பட்ட கட்டை போல அழிக்கப்படுகிறது. திருவருட் சார்பினைத் தழுவிய உயிர், விளையும் நிலத்திலே இட்ட வித்துப் போல விளைகின்றது-பயன் தருகின்றது. முன்னைய வாழ்க்கையை நினைந்து நொந்து மாணிக்க வாசகர் பாடும் இடங்கள் பற்பல!

*"தனியனேன் பெரும்பிறவிப்*
*பௌவத் தெய்வத்*
*தடந்திரையால் எற்றுண்டு*
*பற்றொன் றின்றிக்*
*கனியைநேர் துவர்வாயார்*
*என்னுங் காலால்*
*கலக்குண்டு காமவான்*
*சுரவின் வாய்ப்பட்டு*

*இனியென்னே உய்யுமாறு*
*என்றென் றெண்ணி*
*அஞ்செழுத்தின் புணைபிடித்துக்*
*கிடக்கின் றேனை*
*முனைவனே முதலந்தம்*
*இல்லா மல்லற்*
*கரை காட்டி யாட்கொண்டாய்*
*மூர்க்க னேற்கே!"*

என்ற பாடல் இதற்கு எடுத்துக்காட்டு, 'தனியனேன்' என்று குறிப்பிடுவது திருவருட் சார்பின்றி உயிர் தனித்திருக்கும் நிலையினையேயாம். உயிர் எந்த ஒன்றையாவது சார்ந்துதானே இருக்கும். அப்படியிருக்கத் தனியனேன் என்று கூறுவானேன்? உயிர் திருவருட் சார்பின்றி உலகியல் சார்பில் வாழ்வது உண்மைதான், ஆயினும், பயன்தாரத சார்பைச் சார்பென்று கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. அந்தத் துணை இருந்தும் இல்லாதது போலவே! ஆதலால், 'தனியனேன்' என்று குறிப்பிடுகின்றார். அதுவும் மயக்க உணர்வில் துணை என எடுத்துக் கொண்ட ஒன்று தன்னையே திரும்ப அழிக்க முற்படும்பொழுது அந்த உயிருக்குத் துணை நிற்பார் யாரு மில்லை. அந்தக் கால கட்டத்தில் உயிர் தனித்தே நிற்க வேண்டியிருக்கிறது. இந்த அழகான தத்துவத்தை ஒரு சீரிய உவமையின் மூலம் மாணிக்கவாசகர் எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

கொடிகள் படர கொம்புகள் தேவை! கொம்பில் ஏறிப்படரும் கொடியே வளமாக இருக்கும். பூக்கும்; மணக்கும். அங்ஙனம் படர்தற்கு கொம்பு கிடைக்காத கொடி தரையில் படரும். கொம்பில் படர்வதைப் போலத் தரையில் பண்ணப் பிணைந்து அடர்ந்து படராது. நரைத்து நலிந்து காட்சியளிக்கும். பூக்கவும் செய்யாது, மணக்கவும் செய்யாது. ஆதலால், கொடி வளர, மலர, மணம்வீச, காய்கனிகளாகிய

பயனைத் தர கொம்பு தேவை. அங்ஙனம் கொம்பின்றி வாடிய முல்லைக் கொடியின் இயல்பறிந்துதானே பாரி முல்லைக்கொடி படரத் தேரை நிறுத்தினான்? பற்றிப் படரக் கொம்பு கிடைக்காத கொடி படராமல் கிடந்து அழியும். உயிர்க் கொடி-உயிருக்குப் பற்றுக்கோடாக இருக்கிற இறைவனுடைய திருவருள் கொம்பு இறைவனின் திருவருளைச் சார்பாகக் கொண்டு தழுவி வாழும் உயிர் சிவஞானம் மணக்கும். திருவருட்சார்பு கிடைக்காமல் ஏமாற்றமடையும் உயிர் அலமந்து அழியும். இதனை, 'கொம்பரிலாக் கொடி போல அலமந்து' என்று குறிப்பிடுகின்றார். இதனை,

*கொம்பரில் லாக்கொடி போல்அல*
*மந்தனன் கோமளமே*
*வெம்புகின் றேனை விடுதிகண்*
*டாய்விண்ணர் நண்ணுகில்லா*
*உம்பருள் ளாய்மன்னும் உத்தர*
*கோசமங் கைக்கரசே*
*அம்பர மேநில னேயனல்*
*காலொடப் பானவனே.*

இப்பாடலின் மூலம் நாம் உணர்வது கொடிக்குக் கொம்பு இன்றியமையாதது போல, உயிருக்குத் திருவருட் சார்பு பற்றுக்கோடு. கொடி என்றமையால், கொம்பில் ஏறிப் படர் வதற்கு உரிய தகுதிப்பாட்டை அடைந்த ஒன்றினைத்தான் கொடி என்று அழைப்பது மரபு. படரும் தகுதி பெறாமல் குழியளவிலேயே இருப்பதையோ அல்லது முளைக்காமல் மக்கி மண்ணில் மறைந்து கிடக்கும் ஒன்றினையோ கொடி என்று குறிப்பிடுவதில்லை. இங்கு கொடிபோல் அலமந்தனன் என்று உயிரைக் கொடி போல என்று குறிப்பிடுவதால் உயிர் மல நீக்கம் பெற்று திருவருட் சக்தியின் பதிவு பெற்று (சத்தினி பாதம்) இறைவனுடைய திருவருளைச் சார்ந்து நின்று ஒழுகுதற்குரிய தகுதிப்பாட்டை அடைந்திருக்கிறது என்பது

பெறப்படுகிறது. கொம்பரில்லாக் கொடி என்ற உவமை அழகிய உவமை! சிறந்த தத்துவ விளக்கத்தைத் தரும் உவமை! நாமும், கொழு கொம்பில்லாக் கொடியாக அலமந்தழியாமல் இறைவனுடைய திருவருட் சார்பெனும் கொம்பினைப் பற்றிப் படர்ந்து உய்தி பெறவேண்டும். கொம்பில் படரும் கொடிகள் தமது மெல்லிய உறுப்புக்களால் கொம்பை இறுகச் சுற்றிக் கொண்டு கொம்போடு இணைந்து கொள்வதைப் பார்க்கிறோம். அதுபோல, நாமும், நம்முடைய உயிரை- ஆன்மாவை "கன்றாப் பூர் நடு தறி" என்று அப்பரடிகளால் குறிக்கப் பெறும் கொம்பினைத் தழுவிச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளவேண்டும். கொம்பினைத் தழுவிய கொடிபோல, இம்மை மறுமை இன்பங்களைப் பெற்றுத் தழைத்து விளங்க முயற்சிப்போமாக!

## நாங்கூழ்

சிவஞானத்திற் சிறந்த-அறிவாற் சிவனே ஆய மாணிக்கவாசகப் பெருமான் மிக்குயர்ந்த தத்துவங்களை மிக எளிய உவமைகளால் விளக்குகின்றார். உயர்ந்த அறிவு கடுமையாக இருக்கும். ஆனால், உயர்ந்த அறிவோடு அனுபவமும் இருக்குமானால் நிச்சயமாக அந்த அறிவு எளிய வடிவம் பெறும். மாணிக்கவாசகர் சிறந்த அனுபவம் உடையவர்.

நாங்கூழ், உழுத நிலங்களிடையே ஊர்ந்து திரியும் புழு- எலும்பில்லாதது. மெல்லிய தசைகளிலேயே ஆயது. ஆயினும், உழவியல் தொழில் வேளாண்மை செய்யும் குடிமக்களுக்குப் பெருந்துணை செய்வது; மண்ணைக் கிண்டி வளமுறச் செய்வது; அதன் எச்சில் பட்ட மண் நல் உரமுடையது- பல்வளங்கொழிப்பது என்று உழவியல் அறிஞர்கள் கூறு கின்றார்கள். 'உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து' என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளை பேசுகின்றார்.

நாங்கூழ் புழுவோடு உயிரை உவமிக்கின்றார். நாங்கூழ் பூச்சியைப் போல அன்பினால் தகுதிப்பாடடையாத உயிர்கள் எலும்பில்லாப் புழுக்களைப் போன்றனவேயாம் மனித உயிர்கள், பயனுடையன; மனித உயிர்களின் அறிவும் ஆற்றலும் உலகத்திற்கும் பயனுடையன. இறைமைத் தன்மைக்கும் பயனுடையன. கழனிகளுக்குப் பயன்தரக்கூடிய நாங்கூழ் எறும்புகளிடையே அகப்பட்டுக் கொண்டது; எறும்புகள் நாங்கூழ் புழுவை அரித்துத் தின்னுகின்றன. இக்கருத்தினை உயிரியல் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றது. அன்பு என்ற எலும்புரம் பெறாத உயிர் தன்னல வேட்கையின் நிலைக்களனாக இருக்கும். எலும்பில்லாத உடம்பையுடைய நாங்கூழ் புழுவை எறும்புகள் சுலபமாக அரித்துத் தின்பது போல, அன்பில்லாத உயிர்களைப் புலன்கள் அரித்துத் தொல்லைப்படுத்தும். நாங்கூழ் புழுவை எறும்பு அரித்தல் மூலம் அதன் வடிவைச் சிதைக்கிறது-பயன்படு தன்மையை அழிக்கிறது. அது போல, புலன்களால் அரிக்கப்பெறும் உயிர்கள் உயிர்களின் இயற்கைத் தன்மைத்தாய வளர்தல், பயன் பெறுதல், நிறைவு பெறுதல் ஆகிய தன்மைகளினின்றும் அழிகின்றன.

எறும்பிடை நாங்கூழ் பட்டு அரிக்கப்படுதலினும் உயிர் புலன்களால் அரிக்கப்பெறுதல் வேதனைக்குரியது என்று மாணிக்கவாசகர் கண்டார். 'எறும்பு இடை நாங்கூழ்' என்று குறிப்பிட்டதால், நாங்கூழ் எறும்புகளால் சூழப்பெற்று விட்டன-நாங்கூழால் தப்ப முடியவில்லை என்று பொருள் பெறப்படுகிறது. உயிர்கள் புலன்களால் சூழப்படுவதில்லை. சூழ முடியாது; புலன்களினும் ஆற்றல்மிக்க-புழுவுக்கில்லாத அறிவு மனித உயிர்களுக்கு இருக்கிறது. இருந்தும், பயன் படுத்தாமையால் எலும்பற்ற புழு எறும்புகளிடையே சிக்கியது போல, உயிர் புலன்களிடையே சிக்கிக் கொள்ளு கிறது என்ற குறிப்பை உணர்த்துகின்றார்.

நிலத்தை உழுது பயன்காணும் உழவன் நாங்கூழ் புழு தன் நிலத்தில் நெளிவதை விரும்புவான். அதற்குப் பகை

யாகிய எறும்பை விலக்குவான். அதுபோல மனித உயிர்களைப் பாதுகாத்துப் பயன்பெறுதல், ஞான உழவு செய்கின்ற ஞான ஏருழவனாக இருக்கின்ற இறைவன் உயிர்களைப் பாதுகாத்துப் பயன்கொள்ளக் கடமைப்பட்டவன். மனித உயிர்களுக்குப் பகையாகிய புலன் அரிப்பைத் தடுத்துப் பாதுகாக்க வேண்டியவன் அவன். புலன் வாழ்க்கை வேறு; புலன் அரிப்பு வேறு. சமய வாழ்க்கை புலன் வாழ்க்கையை மறுக்கவில்லை; புலன் அரிப்பையே மறுக்கிறது. அதனாலேயே 'அரித்தல்' என்ற சொல் வழக்கைக் கையாளுகிறார் மாணிக்கவாசகர்.

நாங்கூழ் புழு எறும்புகளிடையே அகப்பட்டால் அரித்துத் தின்னப்பெறும்; பயன்படும் புழுவாயினும் அழிக்கப்பெறும். மனித உயிர் அன்பு, அறிவு என்ற எலும்புகளைப் பெறாவிடின் புலன்களால் அரிக்கப் பெறும் எறும்புகளின் அரிப்பிலிருந்து நாங்கூழ் புழுவை விவசாயிகள் காப்பாற்றிப் பயன் அடைவது போல, இறைவன் உயிர்களைப் புலன்களின் அரிப்பிலிருந்து பாதுகாத்து பயன் கொள்ளுதல் வேண்டுமென்ற கருத்தை மாணிக்கவாசகர் வலியுறுத்துகிறார். அந்த அழகிய பாடல் இதோ:

"எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர்
வுற்றவர் உம்பரும்பர்;
பெறும்பத மேயடி யார்பெய
ராத பெருமையனே!"

## மரப்பொந்தும் மனப்பொந்தும்

சாலை ஓரத்தில் வழிச் செல்வோர் நலனுக்காக நிழல் தரு மரங்கள் வைத்து வளர்க்கப் பெற்றுள்ளன. அம்மரங்

களிற் சிலவற்றில் கவனக் குறைவின் காரணமாகவும், வலிமையான உள்ளீடின்மையின் காரணமாகவும் பொந்துகள் விழுவதுண்டு. வழிப்போக்கர்களில் பொறுப்புணராத மனிதர்கள், நாம் புகைத்ததுபோக எஞ்சிய துண்டுப் பீடியை அந்தப் பொந்தில் போட்டுச் சுற்றிலும் கிடக்கும் சருகுகளையும் அள்ளிப் போடுவார்கள். மற்றவர்கள் கட்புலனுக்கு வராத இடத்தில் துண்டு பீடியில் இருந்த தீ, உள்ளூரப் புகைந்து எரிந்து அம்மரம் அழியக் கூடியது-அல்லது முறிந்து விழக்கூடிய நிலையில்தான் தீ வெளிப்படும். அந்த நிலையில் அந்த மரத்தை என்ன செய்தாலும் காப்பாற்ற முடியாது. இது அன்றாடம் சாதாரணமாக நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சி. இந்த எளிய காட்சி அரிய பொருளை விளக்கும் உவமையாகத் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளது.

உயிர், இறவாத இன்ப அன்பில் திளைத்து இன்புற வேண்டும்-நலமுற வேண்டும் என்ற திருவருள் நோக்கத்தினாலேயே உயிருக்குப் பொறி புலன்களோடு கூடிய வாழ்க்கை கிடைத்தது. ஆனாலும், கவனக்குறைவின் காரணமாகவும் கருத்து இன்மையாலும் உயிர் இன்புறுதலுக்குப் பதிலாக ஆராத் துயரில் ஆழ்கிறது. இதற்குக் காரணம் பொறிபுலன்களோடு கூடிய வாழ்வியல் நடத்தும் உயிரிடத்தில் ஆசையென்ற பொந்து விழுந்து விடுகிறது "ஆசை மோசம்" என்பது அனுபவ மொழி

> "ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
> ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்"

என்கிறது திருமந்திரம். தமிழ்மறை தந்த திருவள்ளுவரும் "மேன்மேலும் துன்பச் சார்புடைய பிறப்பை விளைக்கும் வித்து ஆசையே" என்கின்றார். மாணிக்கவாசகரும் "அவா வெள்ளக் கள்வனேனை" என்று குறிப்பிடுகின்றார். ஆதலால், உயிரியல் நல்வாழ்க்கையைக் கெடுக்கும் பொந்து ஆசையேயாகும். இங்கு ஆசை என்று குறிப்பிடும்பொழுது,

இறைவனாலேயே வழங்கியருளப் பெறுகின்ற பொன், பொருள், போகத்தை விரும்புவதா கூடாதா என்ற வினா எழும். தேவையை விரும்புதல் ஆசையென்று சொல்லப் பெறுவதில்லை. மாணிக்கவாசகரும், "வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று குறிப் பிடுவது சிந்தித்து உணரத்தக்கது. தகுதியில்லாத ஒன்றினை விரும்புதல் ஆசை. அதுமட்டுமல்ல, சாதனத்தையே சாத்திய மாகக் கருதிக் காமுறுதலும் ஆசையே. உதாரணமாகப் பொருள்களைப் பெற்றுத் துய்த்து வாழப் பொன் தேவை. அந்த அளவிற்குப் பொன்னை விரும்புதல் பிழையன்று. அளவிற்கு மேலாகத் துய்க்கவும், அத்தோடு தானும் துய்க்காமல் பிறரையும் துய்க்கச் செய்யாமல் பொன் காக்கும் பூதமாக வாழ்தலும் ஆசையின் பாற்பட்ட வாழ்க்கை. கடுங்கோடை-மண் சுடுகிறது-அந்த நேரத்தில் காலில் அணிந்து கொள்ளும் செருப்பைப் பெற்ற ஒருவன், செருப்பைக் கையில் தூக்கிக் கொண்டு சுடுமணலில் நடந்து துயர்ப்படுவானானால் அது இரங்கத்தக்கதல்லவா? அவனுடைய உணர்வில் செருப்பின் பயனைவிட செருப்பு அதிகப்படியான இடத்தைப் பெற்றுவிடுகிறது. இத்தகு வாழ்க்கை ஆசைக்கோர் எடுத்துக்காட்டு.

இத்தகைய ஆசையென்ற பொந்தில் துய்த்தல் என்ற நெருப்பை யாராவது இட்டுவிட்டால் அந்தத் தீ உள்ளுக் குள்ளேயே புகைந்து எரிகிறது. புலன்கள், வேட்கை என்ற வெப்பத்தால் புகைந்து எரிந்து வெதும்புகின்றன. இந்த நிலையில் திருவருளே உயிரைக் காப்பாற்ற வேண்டும்! அதுவும் உடனடியாகக் காப்பாற்ற வேண்டும். வருந்தும் போது காப்பாற்றுதலே முடியும். அழிந்து போன பிறகு காப்பாற்றுதல் என்பது இயலாத ஒன்று. ஆதலால், ஆசை என்ற பொந்து ஏற்பட்டு அதில் துய்த்தல் என்ற தீ பற்றி எரிவதன் மூலம் தான் அழிந்துபடாமல் காப்பாற்று என்று விண்ணப்பிக்கின்றார் மாணிக்கவாசகர். இத்தகைய கருத்தை விளக்கும் பாடல் இதோ:

“பொதும்புறு தீப்போற்
புகைதெரி யாப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை
விடுதிகண் டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற்
றாரம் பயிற்றுமத் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தேன்
அவிர்சடை வானத் தடலரைசே”

—திருவாசகம்
நீத்தல் விண்ணப்பம்—36

## ஊர் நாய்

மாணிக்கவாசகர் நாடுமுழுவதும் சுற்றிப் பார்த்து நாட்டு மக்களின் நாடி பிடித்து, நன்மை தீமைகளை இனம் காட்டுகிறார்-பிறர்மீது வைத்துக் காட்டவில்லை-தன்மீதே வைத்துக் காட்டுகிறார். இஃது ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோரின் இயல்பு. அடியவர்கள் தம்மை யுடைய தலைவனை-சிவபெருமானை நினைந்து உருகிக் காதல்மீக் கூர்ந்து அவனடியை நாடுகிறார்கள். ஆனாலும் அறிவிலாத மனிதனோ, தன்னையுடைய தலைவனை உண ராமையின் காரணமாக அன்பு காட்டுவதில்லை. தலைவனை நாடிச் செல்வதில்லை. இறைக்கும் கிணறு ஊறுவதுபோல அன்பு காட்டுதலே அன்பைப் பெற்றுத் தரும்.

இங்ஙனம், தன்னுடைய தலைவனை ஏத்தி வாழ்த்தி வாழத்தெரியாத மனிதனை ஊர்நாய் என்றும் ஏன்? ஊர் நாயினும் மோசமானவன் என்றும் திருவாசகம் கூறுகிறது.

நாய்ப் பிறப்பு இழிவான பிறப்பு. எனினும் தனிப்பட்ட வர்களுடைய வளர்ப்பால்-அரவணைப்பால் அது நலமாக வாழும். இன்பமாக இருக்கும். பாற்சோறும் பஞ்சணையும் பெறும். வளர்ப்பவரின் விருந்தினர்கள் தட்டிக் கொடுத்துத் தகுதியுண்டாக்குவார்கள். அவர் தம் வீட்டுக் குழந்தைகள்

கொஞ்சிக் குலாவுவர். இத்தனை அரிய வாய்ப்புக்களையும் இழக்கும், வளர்ப்பார் ஒருவர் இன்றித் தானே வளர்ந்து வாழும் ஊர் நாய். ஊர் நாய் நற்சோறு உண்ண முடியாது. காரணம், போடுவார் இல்லை. அதனால் இழிந்த கழிவுப் பொருட்களை உண்டு வாழும் ஈனநிலை ஏற்படுகிறது. ஆன்மாவும் தக்க அறிவு தந்து நல்லாற்றுப் படுத்தும் தலைவன் இன்மையின் காரணத்தால் மும்மலத்திற்கிடந்து உழலும்; மும்மல வழிப்பட்ட உணர்வுகளைப் புசிக்கும்..

தக்க ஒருவரின் பாதுகாப்பின்மையால்தான் ஊர் நாயை எல்லோரும் அடிப்பர். ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்க நாதியில்லை. சட்டப்படிகூட கேட்க முடியாது. அது போல உற்றுழி உதவி உறுதுணையாக நின்று வாழ்வளிக்கும் இறைவனுடைய பாதுகாப்பில் அமர்ந்தால் அவர்களை யாரும் தாக்க முடியாது; தாக்கினால் தலைவன்-இறைவன் பாதுகாப்பான். "நமன் தமரும் இவன் தமர்" என்று தீண்ட அஞ்சி ஓடுவர். மார்க்கண்டேயர் வரலாறு இதற்குத் தக்க சான்று.

ஊர் நாய் ஊர் சுற்றித் திரிதலின் காரணமாக நிலை யான உணர்வும், நினைப்பும், வாழ்க்கையும் அதற்கு இருக்காது. அதுபோல, இறைவனின் திருவடிச் சிந்தனையில் நிலையான நினைப்பில்லாதவர்கள் உலகியலில் நினைப்பு மாறி, நிலை மாறி சுற்றித் திரிகுவர்.

ஊர் நாய்க்கு முறையாகச் சோறிடுவோர் இல்லாமையின் காரணத்தாலும், சில பொழுது உண்டும் பல பொழுது உண்ணாமலும் வாழ்வதாலும் இளைத்துக் கிடக்கும். குளிப்பாட்டிச் சீராட்டுவார் இல்லாத காரணத் தாலும் கண்ட கண்ட இடத்தில் படுத்துப் புரள்வதின் காரணத்தாலும் வங்கு பிடித்துக் கிடக்கும். அது போலவே, இறைவனின் திருவருள் நினைவு இல்லார் அந்நினைவு

இன்மையின் காரணத்தால் உணர்வால் இளைத்து ஒழுக்கத்தால் இளைத்துக் கயமை நிலையடைவர்.

வங்கு பிடித்த ஊர் நாய் அரிப்பு மிகுதியால் தன்னைத் தானே கடித்துக் கொள்ளும். அதுபோல, திருவருட் சிந்தனை யற்ற மனிதன் பேராசைகளால் அரிக்கப் பெற்று அவ்வழிப் பட்ட குற்றங்கள் பல செய்து அதற்குரிய துன்பங்களைத் தானே பெற்று அநுபவிப்பான்.

நாய் இழிவான பிறப்பு எனினும் நன்றி காட்டும் பண்பு அதனிடத்தில் சிறப்பாக உண்டு. நன்றி காட்டும் இந்தச் சிறப்பில்பும்கூட ஒரு தலைவனிடத்தில் வளர்ந்தாலன்றோ விளங்க முடியும்? ஊர் நாயாக இருப்பதால் நன்றி காட்ட வேண்டிய அவசியமில்லாமற் போகிறது. மனிதனும், அந்த ஊர் நாய் போல் வாழ முடிவதில்லை. எந்த மட்டத்திலும் எந்தக் கட்டத்திலும் அவன் பலரின் உதவிகளைப் பெற்றே வாழுகிறான் - வாழவேண்டியவன். அதனால் அவன் நன்றி காட்ட வேண்டியவனாக இருக்கிறான். ஆனால் அவன் நன்றி காட்டுவதில்லை. காரணம், அவன் ஊர் நாயினும் தரங் கெட்டவனாகத் தரணியில் உலவிக் கொண்டிருக்கிறான்.

ஊர் நாய் ஊரைச் சுற்றிக் கொண்டேயிருக்கும். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டே இருக்கும். பயன் என்ன? நாலு எச்சில் இலையை நக்கிப் பார்க்கும். தன் இனத்தைச் சார்ந்த வேறு நாய்களோடு தேவையின்றிக் குரைத்துக் கடித்தும் கடிப்பட்டுவரும். அதுபோலவே, சிவச் சிந்தனை இல்லாத மனிதர்கள் ஒன்றிய சிந்தனையில் திளைக்காமல்-உறுதியான தொண்டுகளில் ஈடுபடாமல் ஊரைச் சுற்றுவர்-உடம்பாலும் சுற்றுவர். உள்ளத்தாலும் சுற்றுவர். பயன் என்ன? வம்பளத்தல். தீமொழி பேசல்-கலகம் விளைவித்தல்-கேவலமான முறையில் வயிற்றைக் கழுவிக் கொள்ள நான்கு காசு கிடைக்காதா என்று ஏங்கி நிற்றல் ஆகியனவேயாகும்.

வளர்ப்பு நாய் அருமையாகக் குரைக்கும். காரணத்தோடு குரைக்கும்-கள்வரைக் காட்டிக் கொடுக்கும். ஆனால் ஊர் நாயோ எப்பொழுதும் குரைக்கும். அச்சத்தாற் குரைத்துக் கொண்டே இருக்கும். அது போல் திருவருட் சிந்தனையில்லாதவர்கள்-உறவில்லாதவர்கள் நிறையப் பேசுவர்-பயனற்ற சொற்களையே பேசுவர். பகைகாட்டும் சொற்களையே பேசுவர்-அச்சத்தினால் பேசித் திரிகுவர்-ஆனால் ஒரு பயனும் காணார்.

நாய் இயல்பாக அறிவில்லாதது. அறிவிடைச் செயல்கள் செய்யும் ஆற்றல் இயல்பில் இல்லை. ஆனாலும் அது ஒரு வளர்ப்பு நாயாக இருந்தால் - வளர்ப்பவர்கள் முறையாக வளர்த்தால் சொன்னதைக் கேட்கும், செய்யும்! அறிவோடு தொடர்புடைய காரியங்களை கூடச் செய்யும். இயல்பாக இல்லாத ஒன்றை வளர்ப்பின் மூலம் பெற்றுவிடுகிறது. ஊர் நாய் இந்த வாய்ப்பை இழந்து வருகிறது. அதுபோலவே மனிதனும் தக்கவர்களைச் சார்ந்து வளர்வதன் மூலம் தன்னிடத்தில் இயல்பில் இல்லாத அறிவு, ஆற்றல் போன்ற பண்புகளைப் பெற்றுச் சிறக்க முடியும். தக்கோரைச் சார்ந்து வாழாதவன் அத்தகு அறிவு ஆற்றல் பண்புகளைப் பெறமாட்டான்.

வளர்ப்பு நாய்க்குத் தன்னுடைய வளர்ப்புத் தலைவனுக்கு நன்றி காட்ட வேண்டும்-அவனையும் அவனுடைய உடைமையையும் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கடமையுணர்வு இருக்கும். ஊர் நாய்க்கோ ஒருவர் ஏது? அதுதான் வீதி முழுதும் சுற்றுமே, ஆதலால் கடமையுணர்வு அரும்பித் தோன்ற வழியில்லை. அதுபோல, கடவுள் நினைவும், உறுதியான மனித இயல்பும் உடையோர் ஒரு தலைவனை-நண்பனை நாடி வாழ்வர். அவனுக்குரிய கடமைகளைச் செய்வர். அங்ஙனம் அல்லாதவர்கள் ஒரு எச்சில் இலையை முடித்து, அடுத்த எச்சில் இலைக்கும் ஓடும் ஊர் நாய் போல் அடிக்கடி ஆளை மாற்றுவார்கள். ஆதலால்

அவர்களுக்குக் கடமையுமில்லை, உரிமையுமில்லை. எனவே, திருவருட் சிந்தனையோடு நல்லியல்புகள் பெற்று வாழ்க்கை வாழ்தலே சிறப்புமிக்கது. இதனை மாணிக்கவாசகர் கூறுகிறார், பாருங்கள்:

*உடையா னேநி ன்றனையுள்கி*
*உள்ள முருக்கும் பெருங்காதல்*
*உடையா ருடையாய் நின்பாதம்*
*சேரக் கண்டிங்(கு) ஊர்நாயின்*
*கடையா னேனெஞ்(சு) உருகாதேன்*
*கல்லா மனத்தேன் கசியா தேன்*
*முடையார் புழுக்கூ டிதுகாத்திங்(கு)*
*இருப்ப தாகவடித்தா யே!*

## ஊர் ஆவும் குருட்டாவும்

மாலைநேரம். மேயச் சென்றிருந்த பசுக்கள் வயிறார மேய்ந்துவிட்டு வீடுகளை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. தூரத்தில் தன்னுடைய கன்றுகளைப் பார்த்தவுடன் கனைக்கின்றன. இப்பசுக்களுடன் வந்த ஒரு குருட்டுப் பசுவும் கனைத்தது. மற்ற பசுக்கள் கன்றைப் பார்த்து உறவு மேலிட்ட உணர்ச்சியால் கத்தின. குருட்டுப் பசுவோ, கன்றைப் பார்க்காமல் உறவு உணர்வு இல்லாமல் மற்றவை கத்துவதனால் கத்தியது என்ற இந்த எடுத்துக்காட்டை மாணிக்கவாசகர் பொய்யடியார் வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டுகிறார். இறைவன்மீது தணியாத காதல் கொண்டு ஒன்றாகி, உடனாகி இருந்து உள்உள்கி நினைந்து அனுபவிப்பவர்கள் மெய்யடியார்கள். அதன் காரணமாக, அவர்கள் இறைவனுடைய திருவருள் இன்பத்தைப் பெறுகிறார்கள். பொய்யடியார்களோ இறைவனை நினைந்து காதலாகிக் கசிந்து அழுவதில்லை; அழ நினைப்பதுமில்லை. ஆனாலும் மெய்யடியார்கள் பெற்றனுபவிக்கும் இன்பத்தைப்

பெற விரும்புகிறார்கள். விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முழுதும் முயற்சி செய்வதில்லை. அடியார்கள் இறைவனுடைய நாமத்தைச் சொல்லுவதைப் பார்த்து இவர்களும் சொல்லுகிறார்கள். ஆனாலும், மெய்யடியார்கள் நினைந்து நினைந்து நெக்கு நெக்குருகி உளங்கலந்து ஓதுதல் போல், இவர்கள் ஓதவில்லை. உதற்றால் ஓதுகிறார்கள். ஒலிக்குறிப்புத் தோன்றுகிறதே தவிர உள்ளுணர்வு தோன்றவில்லை. இறைவனுடைய திருவருளின்பம் உள்ளத்தால் அனுபவிக்கக் கூடிய ஒன்று. அஃது எப்படி வெறும் போலித்தனமான பொறிகளின் இயக்கத்திற்குக் கிடைக்கும்? பொறிகள், ஒன்றின் குறையினை இன்னொன்று நிரப்பமுடியும். ஆனால் உள்ளம் அப்படியல்ல-இதே கருத்தினை.

**'கோவுடனே கூடியதோர் குருட்டாவும் ஊர்புகுதும்'** என்று உமாபதி சிவமும் குறிப்பிடுகின்றார்.

மேலும், கண்ணுள்ள பசுக்கள் நன்றாக மேய்ந்து வந்திருப்பதால் அதனிடத்தே பால் வளம் இருக்கும். அது, கன்றை நோக்கிக் கனிந்தழைத்து ஊட்ட முடியும். குருட்டுப் பசுவோ, வழக்கத்தினால் மேய்ச்சல் தரைக்குப் போயிற்று. எனினும் கண் குருடானமையினால் நல்ல வண்ணம் மேய்ந் திருக்க முடியாது-பால்வளம் இருக்காது. அது எப்படி கன்றுக்கு அன்பு காட்டமுடியும்? அதுபோல மெய்யடி யார்கள் ஞானப் பசியுடையராயிருத்தலால் ஞான நூல் களைக் கற்றும் கேட்டும் தனக்குவமை இல்லாத தலைவன் மீது முருகிய அன்பை வளர்க்கிறார்கள். இறைவனைக் கண்ணப்பர் முழுக்காட்டியது போல அன்பினால் முழுக் காட்டிப் பரவசப்படுத்த முடியும். பொய்யடியார்க்கு ஞானப் பசி இல்லை. இறைவன் மீது தணியாத காதலும் இல்லை ஞான நூல்களைக் கற்கவும் கேட்கவும் வாய்ப்பில்லை. பழக்கத்தினாலேயே பெயர் சொல்லுவார்கள். எனினும் மெய்யுணர்வில்லை. அவர்கள் எங்ஙனம் இறைவனை மகிழ்வித்துத் திருவருளைப் பெற முடியும்?

ஆதலால் நாடகத்தால் அடியார் போல் நடிப்பவர்கள் உண்மையான திருவருள் இன்பத்தைப் பெறமுடியாது. உண்மைத் திருவருள் இன்பத்தைப் பெற வேண்டுமென்றால், இறைவனிடத்தில் உண்மையான அன்பு கொள்ள வேண்டும். அத்தகு அன்பினை உள்ளத்தில் தோற்றுவித்து அருள் வழங்கி ஆட்கொள்ளும் வண்ணம் மாணிக்கவாசகர் பிரார்த்திக்கிறார். பாடலைப் பாருங்கள்:

*தாராயுடையா யடியேற்கு*
*உன்தாள் இணையன்பு*
*போரா வுலகம் புக்காரடியார்*
*புறமே போந்தேன் யான்*
*ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்கு*
*உன்தாள் இணையன்புக்*
*காராயடியேன் அயலே*
*மயல்கொண் டெழுகேனே!*

—திருவாசகம்

## இருகை யானை

சிவநெறி சிந்தைக்கினியது - உயிர்களுக்கு உய்வு தரும் நெறி, மயக்கங்களினின்றும் விடுபெற்ற ஒரு நெறி. சிவநெறி, தத்துவம் விளக்கும் சாத்திரங்களும் அருளார்ந்த அனுபவத்தைத் தந்து உயிர்களை விளக்கமுறச் செய்யும் திருமுறைகளும், பெற்றுத் திகழும் பெருநெறி.

சைவத் திருமுறைகளுள் மிகச் சிறந்தது திருவாசகம். திருவாசகம் ஒரு அனுபவப் பொதிவு-ஞானப் புலம்பல். அது, உணர்த்தும் நூலன்று-உணரச் செய்யும் நூல். அனுபவத்தைச் சொல்லும் நூலன்று, இன்ப அனுபவத்தை விளைவிக்கும் நூல். இத்தகு திருவாசகம் ஓதுவோரை உயர்த்தும்! திருவாசகம், சைவம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் மூன்று பொருள்களை (இறை, உயிர், தளை)யும் தக்க உவமைகளுடன் காட்டி விளக்குவதில் சிறந்தது. ஆன்மாவை, உயிர் நெறியைப்

பற்றித் திருவாசகம் காட்டும் உவமை இருகையானையை ஒத்திருந்தும் என் உள்ளக் கருவைக் கண்டிலேன் என்பது, மாணிக்கவாசகர் வாக்கு. உவமை மிகமிக அழகானது.

யானை மிகப் பெரிய உடலையுடையது. ஆனாலும் இத்தகு பேருடலுக்குள் இருக்கும் உயிர் நிலையையோ உயிருக்கு உயிராக விளங்கும் இறைநிலையையோ தெரிந்து தெளியும் ஆற்றல் அதற்கில்லை. அது போலவே மனிதர்கள் அறிவாலும், வேறு பிறவற்றாலும், சிறந்த மனித உடம்பைப் பெற்றிருந்தும் தன்னைப் பற்றியே அறியாமல்-அறிந்து கொள்ள முயற்சிக்காமல் இருந்துவிடுகிறார்கள். சீரிய சமய வாழ்வின் தொடக்கம் தன்னை அறிதலிலும் உணர்தலிலுமே தொடங்குகிறது. அமைகிறது. இதனை மெய்கண்ட நூல் தம்மையுணர்ந்து தலைவனையுணர்ந்து என்றருளுமாற்றால் உணரலாம்.

அடுத்து, யானை நீண்ட கையையுடையது. தொலைவி லிருந்தும் உணவெடுக்கும். தும்பிக்கையாலும் உணவெடுக்கும் -வாயினாலும் வாங்கும். நிறையத் தின்னும். எனினும் பருத்த தன்னுடலையே பார்க்க முடியாத குறையுண்டு. அதேபோல மனிதன் உண்டுடுத்து வாழ்ந்தாலும் தன்னைப்பற்றியே அறிந்து கொள்ள முடியாத "அறியாமை நிலை" எண்ணி யிரங்கத் தக்கது.

யானை இவ்வளவு பருத்த உடலுடையதாக இருந்தும், மிக நீண்ட கையையுடையதாக இருந்தும் தன்னுடைய முதுகில் உட்கார்ந்து தன்னை இயக்கும் மாவுத்தனை அறிந்து கொள்ள முடியாமல் இருப்பது போலவே, மனிதன் கூர்த்த அறிவுடையவனாக இருந்தும், தன்னுள் இருந்து தன்னை இயக்கும் இறைவனை உணர முடியாத நிலையில் இருக் கின்றான்.

யானை மதம் பிடித்தபோது, பிற உயிர்களுக்குத் துன்பமும் தொல்லையும் விளைவித்து தன் போக்கில்

திரிகிறது. அதுபோலவே, மனிதன் ஆணவம் பிடித்தாட்டும் பொழுது தன்னைச் சார்ந்தவர்கட்குத் துன்பங்களும் தொல்லைகளும் விளைவிக்கின்றான். தன்னிச்சையாகத் திரிகின்றான். தன்னுடைய தலைவனாகிய இறைவனையே மறுக்கின்றான்.

யானை சில பொழுது தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்ளும். அது போலவே மனிதனும் தன்னை வினைச் சேற்றில் அழுத்துக் கொள்ளுகிறான். யானை, தன்னைக் கட்டுதற்குரிய சங்கிலியைத் தானே எடுத்துக் கொடுப்பது போல மனிதனும் வினைவழித் தொடர்புடைய பிறப்புக்களுக்குத் தன்னையே ஆட்படுத்திக் கொள்கின்றான். வினைகளும் வினைகளால் வரும் துன்பங்களும் உயிர்களின் சொந்தச் செயலே தவிர, இன்னொருவர் தந்தவையல்ல. நமக்குரிய ஒன்றை ஊழியர் கொண்டுவந்து தருவதுபோல, நம்முடைய சொந்த பலா பலன்களை காலத்தால் தோன்றும் நியதித் தத்துவங்களும் தலைவர் வழி நம்மிடம் கொணர்ந்து சேர்க்கின்றன. கொணர்பவர்மீது காய்தலும் உவத்தலும் தேவையில்லை. அவர்கள் அஞ்சற்காரர்போல அலுவல்களைச் செய்ப வர்கள்-நாமே நம்முடைய நிலைமையையுணர்ந்து சிந்தையால் சிவனை நினைந்து உரிய தொண்டுகளைச் செய்து உயர்வும், உய்தியும் பெற முயற்சிக்க வேண்டும். பாடலைப் பாருங்கள்;

"இருகை யானையை ஒத்திருந் தென்உளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே"

## எள்ளும் எண்ணெயும்

திருவாதவூரடிகள் சிறந்த உலகியல் அனுபவம் உடையவர்; அந்த உலகியல் அனுபவம் அருளியலை நோக்கி,

வளர்ந்தமையால் பயனடையதாக அமைந்தது! அனுபவ முதிர்ச்சியினின்று பாடுவதால் கருத்துக்களை இனிதாக -எளிதாக விளக்குகிற உவமைகள் திருவாசகத்தில் மலிந்து காணப்பெறுகின்றன.

வழிபடும் தெய்வத்திற்கு இறைவன் என்ற அருமையான பொருள் பொதிந்த தத்துவப் பெயரை அனுபூதிமான்கள் சூட்டினார்கள். தென்னாடுடைய சிவனே என்று அகங்குளிர வாழ்த்தும் மணிவாசகர், "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று ஏற்றிப் போற்றுகிறார். எந்நாட்டவர்க்கும் என்னும் சொல், நாடு, மொழி, இனம், சமய வேறுபாடுகளைக் கடந்த பொருளைக் காட்ட எடுத்தாண்ட வலிவுபெற்ற ஒரு சொல். இறைவன் எங்கணும் தங்கியிருக் கிறான். எல்லாப் பொருள்களுக்குள்ளும் இருக்கின்றான். எப்போதும் இருக்கிறான். இந்த அருமையான இறைவன் கலந்துறையும் காட்சியைக் காண்பவர் சிலரே. காணப் பெறாதவர் பலர். ஏன்? பலர் காணமுயற்சிப்பது கூட இல்லை. அங்ஙனம் காண முயற்சிக்காதவர்களில் சமய நெறியைச் சார்ந்தோரும் உண்டு-சாராதவர்களும் உண்டு. சமயநெறியைச் சார்ந்தோரினும் பலர் இந்த உண்மையை மறந்துவிட்டு வெறும் ஆரவாரத் தன்மையுடைய-சமயம் போல் தோற்றமளிக்கக் கூடிய சடங்கு நிகழ்ச்சிகளிலேயே ஆர்வமும் அக்கறையும் காட்டுகின்றனர். எல்லா உயிர்களிடத்தும் இறைவன் நீங்கா துறைகின்றான் எனக்கருதி அன்பு காட்டும் இயல்பை மறந்து விடுகின்றனர்-மாறாக தீமையும் புரிந்தொழுகுகின்றனர். கள்ளுள்ள மலர்களி லெல்லாம் நிச்சயமாக வண்டுகள் வந்து தங்கும். அதுபோல அன்புடைய மனிதர்களிடத்திலெல்லாம் இறைவன் வந்து தங்குவான் என்ற குறிப்பையுணர்த்த "கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்" என்று குறிப்பிடுகின்றார் மாணிக்கவாசகர். மது நிறைந்த மலரும் வண்டும் பிரிக்கப்படாதன. அது போல அன்பு சார்ந்த மனிதனும்

கடவுளும் பிரிக்கப்படாதவர்கள். மேலும், இறைவன் எந்த இடம் என்று வரையறுத்துக் கூற இயலா வண்ணம் நடு, கீழ், மேல் ஆகிய எல்லா இடங்களிலும் கலந்து உறைகின்றார். அது மட்டுமல்ல-யாவுள்ளுந் தங்கியிருக்கிறான் என்றும் குறிப்பிடுகின்றார். யாவுளும் என்பதனால் உயிரின வேறுபாடின்றி, இழிவு உயர்வு வேறுபாடின்றி கலந்து உறைகின்றான் என்பது பெறப்படுகிறது. இந்தக் கருத்தை விளக்க எள்ளும் எண்ணெயும் போல என்ற உவமையை எடுத்தாளுகின்றார். எள்ளுக்கு எண்ணெய் இடவேறுபாடின்றி, ஒன்றித்து இருக்கிறது. உள் உலகம் உலகப் பொருள்கள். எண்ணெய்-இறைவன் எள்ளினுள் எண்ணெய் கலந்திருந்தாலும் வெளிப் படையாகத் தெரியா வண்ணம் மறைந்தே இருக்கிறது. அதுபோல இறைவன் உயிர்களுக்குள் உறைதலை எளிதற் காணமுடியாதவாறு மும்மலங்கள் மறைத்துக் கொண்டிருக் கின்றன. வலிய முயற்சிகளால் தோலையும் சக்கையையும் நீக்கிக் கடையும்பொழுது தோலும் சக்கையும் ஒதுங்கி எண்ணெய் வெளிப்படுகிறது. அது போல, உயிர்களும் தவத்தால், நோன்பால்-அகம் நிறைந்த பக்தியால் முருக வாங்கிக் கடையும் பொழுது இறைவனும் வெளிப்படுகிறான்.

எண்ணெய் உடல் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருதல்போல், இறைவன் திருவருள் உயிர்வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. இங்ஙனம் இறைவனுடைய இருப்பையும், அவனை அடையும் முறையையும் அவனால் அடையத்தக்க பயனையும் ஒரே உவமையில் திருவாசகம் தெளிவாக உணர்த்துகிறது. பாடலைப் பாருங்கள்:

*கொள்ளுங் கில்லெனையன் பரிற் கூய்ப்பணி*
*கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்*
*நள்ளுங் கீழுளா மேலுளும் யாவுளும்*
*எள்ளும் எண்ணெயும் போனின்ற எந்தையே!*

# 5

# எங்கே போகிறோம்!

## 1. சுதந்திர தின விழாச் சிந்தனைகள்

(15–8–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)

எங்கே போகிறோம்? சுதந்திர தினத்தன்று நம்முடைய மதுரை வானொலி நிலையம் இந்த வினாவை நம்மை நோக்கிக் கேட்கிறது. இல்லை! இல்லை! இந்த நாட்டு மக்களை நோக்கிக் கேட்கிறது. ஏன்?

எங்கே போகவேண்டும் என்று சொல்லாமல், வழிகாட்டாமல், எங்கே போகிறோம் என்று கேட்பதற்குக் காரணமென்ன?

குற்றங்கள் தெரிந்தால் குணங்களை வளர்த்துக் கொள்ள முடியும். குறைகள் தெரிந்தால் நிறைகளை வளர்த்துக் கொள்ள முடியும். எனவே, எங்கே போகிறோம்? வழி தவறி விட்டோமா? அல்லது வழித்தடத்தில் தான் செல்லுகிறோமா? இப்போது செல்லுகின்ற வழி அல்லது தடம், எங்கே செல்லவேண்டுமோ அங்கே அழைத்துச் சென்றுவிடுமா? இன்று நாம் போகவேண்டிய வழியில் போகிறோமா அல்லது நம்மை இந்த உலகத்தின் செய்திகள், சின்னஞ்சிறு கதைகள், நிகழ்ச்சிகள், இழுத்துக் கொண்டு செல்லுகின்றனவா? இன்று சுதந்திரமாகப் பயணம் செய்வோர் யார்?

காலநடை மருத்துவமனை என்று அறிவிப்புப் பலகை போட்டிருக்கிறார்கள். எனக்கு ஒருநாள் ஐயம் வந்தது. இது என்ன 'கால்நடை' என்றால் என்று பக்கத்திலுள்ளவரைக் கேட்டேன். 'கால்நடை' என்றே திருப்பிச் சொன்னார். திருப்பித் திருப்பிக் கேட்ட பிறகு "காலால் நடக்கின்ற மாடு, ஆடுகள்" என்று சொன்னார். அப்படியானால் மனிதனும் காலால் தானே நடக்கின்றான்? அவனுக்கும் இந்த மருத்துவ மனை பயன்படுமா? என்று சிந்தித்தேன். காலால் நடப்பது மட்டுமே கால்நடைகளின் இயல்பு.

சிந்தனையாலும், கருத்தாலும், அறிவாலும், நாகரிகத் தாலும், பண்பாட்டாலும், படைப்பாற்றலாலும், நடக்க வேண்டிய பொறுப்பு மனிதனுடையது. அவன், தான் நடக்க வேண்டிய தடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். புவி அவனை நடத்தக்கூடாது. புவியை அவன் நடத்தவேண்டும். பாவேந்தன் பாரதிதாசன் "புவியை நடத்துக! பொதுவில் நடத்துக" என்று சொன்னான்.

சுதந்திர தினத்தன்று இதைப் பற்றிச் சிந்தனை செய்யுங்கள்! பாரதி, சுதந்திர தினத்தை மக்கள் தினமாக நினைத்துப் பாடுகின்றான். ஆடச் சொல்லுகின்றான், பள்ளுப் பாடச் சொல்லுகின்றான், "ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று பாடுகிறான். இன்றைக்கு எந்த மக்கள் ஆடுகிறார்கள்? எந்த மக்கள் பள்ளுப் பாடுகிறார்கள்? எந்த நாட்டு, நகர வீதிகளில் சுதந்திர தினவிழா மக்கள் விழாவாக கொண்டாடப்படுகிறது? இன்னமும் தீபாவளிக்கு இருக்கிற செல்வாக்கு குறையவில்லை. பொங்கலுக்கு இருக்கிற செல்வாக்கு குறையவில்லை. சுதந்திர தினவிழா அரசு பணிமனைகளில், கல்வி நிலையங்களில் கொடியேற்று விழாவாக முடிந்து விடுகிறது. பாரதியின் ஆசை அதுதானா? இல்லை. தினந்தோறும் மக்கள் ஆடவேண்டும். சுதந்திரப் பள்ளுப் பாடவேண்டும். ஆனந்த சுதந்திரம் அடைந்து

விட்டோம் என்று பாடவேண்டும். ஆம்! இன்றைக்கு மக்கள் அப்படிப் பாடாததற்குக் காரணம் என்ன? அவர்கள் அனுபவிப்பது ஆனந்த சுதந்திரமா? இல்லை. எத்தனையோ நெருக்கடிகள்! எத்தனையோ தொல்லைகள்! அடிமைத் தனங்கள்! பயந்தாங்கொள்ளித் தனங்கள்! பயமுறுத்தல்கள்! இவைகளுக்கிடையே இந்தச் சமுதாயம் மெள்ள ஊர்ந்து கொண்டிருக்கிறது.

இப்பொழுது வானொலி நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும் பொழுது, இரண்டு மூன்று காட்சிகள்! ஓர் இடத்தில் போராட்ட உண்ணாவிரதம்! இன்னொரு புறத்தில் மகிழ்வுந்தில் கூக்குரலிட்டுக் கொண்டு, கோஷம் எழுப்பிக் கொண்டு இந்த நாட்டு மகளிர் செல்லுகிறார்கள். மகளிர் எழுப்பிய முழக்கொலி "பெண்களை விடுதலை செய்! பெண்களுக்குச் சுதந்திரம்!" நாடு விடுதலை பெற்று 47 ஆண்டுகள் கடந்த பிறகும் "பெண்களுக்கு விடுதலை இல்லை" என்று தெருவில் நின்று முழக்கொலி செய்கிறார்கள் என்றால் ஆனந்த சுதந்திரம் ஆக முடியுமா?

சுதந்திர தினவிழா என்பது கொடியேற்றுதல் மட்டுமல்ல. ஒரு கணக்காய்வு செய்யவேண்டும். நேற்று என்ன நடந்தது? இன்று என்ன நடந்து கொண்டிருக்கிறது? நாளை என்ன நடக்கும்? நாளை என்ன நடக்குமாறு செய்ய வேண்டும்? இந்தக் கணக்காய்வு செய்யாது போனால் சுதந்திர தினவிழாவுக்கு என்ன பொருள்? நேற்றிலிருந்து இன்று பிறக்கிறது. இன்றிலிருந்து நாளை பிறக்கிறது.

இன்றைக்கு நமது இளைய சமூகத்தைப் பற்றி, இளைய பாரதத்தைப் பற்றி, அடுத்து வருகின்ற தலைமுறையினரைப் பற்றி, நமக்குக் கவலை இருக்கிறதா? அதற்குரிய திட்டங் களைத் தீட்டுகிறோமா? அப்படியே தீட்டினாலும், அந்தத் திட்டத்தினுடைய பயன்கள் குழந்தைகளுக்குப் போய்ச் சேருகிறதா? இவையெல்லாம் சிந்திக்க வேண்டியன, எங்கே

போகிறோம்! சிந்தனை செய்வோம்? எங்கே போக வேண்டும்? முடிவு செய்வோம்.

இந்தியா பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றுப் பழமை உடையது, இந்த நாட்டினுடைய பழமைக்கு ஈடாக வேறு எதுவும் சொல்ல முடியாது. அந்தப் பழமையினுடைய வரலாற்றுப் பெட்டகங்கள் ஏராளம் உண்டு. இந்திய நாட்டு வரலாறு தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறது. ஏராளமான வரலாற்றுப் படிப்பினைகளை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். வரலாற்றுப் படிப்பினைகளை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக் கொண்டு, புதியன கண்டு, போர்க் குணத்தோடு போராடி வந்திருந்தால் இன்றைக்கு இந்த நாட்டினுடைய அமைவே வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆயினும் அவர்கள் படிப்பினைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்தியாவில் இருக்கின்ற இலக்கியங்களில் மிகப் பழமையானவை இதிகாசங்கள். இராமகாதை; பாரதம். இந்த இரண்டு இதிகாசங்களும் மிகப் பழமையானவை என்பது மட்டுமல்ல. வாழ்க்கைக்குரிய நெறிகளை, முறைகளை நமக்கு ஏராளமாகப் புகட்டுகின்றன. இவைகளைப் பற்றி நாம் படித்துத் தெரிந்து கொண்டது ஓரளவுதான். ஆனாலும், எங்கு பார்த்தாலும் இராமனுக்குப் புகழ் பாடுபவர்கள் உணர்க. பாரதத்திற்குப் பறைசாற்றுபவர்கள் உண்டு. எனினும், இராம காதையினாலும், பாரதத்தினாலும், படித்துக்கொள்ள வேண்டிய பாடங்கள் என்ன? இராம காதையிலிருந்த கோசலநாடு என்ன? இலங்கை நாடு என்ன? இன்றைக்கு இருக்கிற நம்முடைய நாடு என்ன? ஒப்பு நோக்கிப் பார்த்தோமா? புராணங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏராளமான புராணங்கள்! அந்தப் புராணங்களும் கூட, தெரிந்தோ, தெரியாமலோ, சண்டைகளைப் பற்றியே நிறைய பேசிவிட்டன. கடவுளுக்கும், தேவர்களுக்கும் சண்டைகள்! தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சண்டைகள்! மூன்று

B-XVI.20-

தேவர்களுக்கிடையில் சண்டைகள்! இப்படிச் சண்டைகளைப் பற்றியே இந்தியா ஏன் சிந்தித்துக் கொண்டிருந்தது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தச் சண்டைகளை மறப்பது அவசியம்.

இலக்கிய உலகத்திற்குள் நுழைந்தால், இந்தியமொழி இலக்கியங்கள் ஒரு பூங்கா என்று சொல்லலாம். பெரிய கருவூலமாக இருக்கின்ற உபநிடத்திலிருந்து, நம்முடைய இராமானுசர் காலம் வரையில், ஏன், நம்முடைய பாரதி காலம் வரையில் இலக்கிய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வந்தால், ஏராளமான படிப்பினைகள்! பழைய உபநிஷத்து ஒன்று கூறுகிறது.

> *"ஒன்றாக உழையுங்கள்! ஒன்றாக உண்ணுங்கள்!*
> *ஒன்றாக இருங்கள், ஒன்றாக வாழுங்கள்!"*

என்று.

இது வேதங்களின் மணிமுடிச் சிகரமாக உள்ள உபநிடத்தின் வார்த்தைகள். இன்றைக்கு எங்கே அப்படி வாழுகிறோம்? ஒன்றாக உண்ணுவதிலேயே சாதி முறைகள் குறுக்கிடுகின்றன. இராமகாதையை எடுத்துக் கொண்டால், கம்பன் அற்புதமாக ஒரு நாட்டை எண்ணிப் பார்க்கிறான். அவனுடைய லட்சிய நாடு அது. அவனுடைய கோசல நாடு அப்படியிருந்ததா? தெரியாது. அவன் கண்ட இலங்கை நாடு அப்படியிருந்ததா? சொல்ல முடியாது. ஆனாலும் கம்பன் தன்னுடைய இலட்சிய நாடு ஒன்றை தன்னுடைய காதையில் நினைவூட்டுகிறான். "கள்வரும், காவல் செய்வாரும் இல்லாத நாடாக இருக்கவேண்டும்" என்று ஆசைப்படுகிறான். எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் பெறவேண்டு மென்று ஆசைப்படுகின்றான். இன்று இந்த நாட்டினுடைய நிலைமை என்ன? எண்ணிப் பாருங்கள்.

புறநானூற்றுக் காலத்திற்கு வந்தால், உலக சர்வ தேசிய இளைஞனைப் போல விளங்குகின்றான் கணியன்

பூங்குன்றன். ஓர் உலகம் என்னும் கருத்து அறிவியல் பூத்துக் குலுங்கிய பின்னர் மேற்றிசை நாட்டில் தோன்றிய கருத்து. இன்னும் சொல்லப் போனால் அச்சத்தில் தோன்றிய கருத்து. ஆனால் கணியன் பூங்குன்றன் அன்பு தழுவிய நிலையில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடுகின்றான். "எல்லா ஊர்களும் என்னுடைய ஊர். எல்லாரும் என்னுடைய சுற்றத்தார்" என்ற கணியன் பூங்குன்றன் பிறந்த மண்ணில் இன்றைக்கு ஜாதி, குலம் போன்ற வேற்றுமைகள் பிரிந்து வளர்ந்து வருகின்றன.

பழைய காலத்தில் சாதி வேற்றுமைகள் இருந்ததுண்டு. ஆனாலும் அந்த வேற்றுமைகள் நெகிழ்ந்து கொடுத்தன. இன்று அவை நெகிழ்ந்து கொடுக்காமல் இறுக்கமடைந்து வருகின்றன என்பதை அன்பு கூர்ந்து எண்ணிப் பாருங்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

என்று சொன்னார். பிறப்பில் உயிர்களிடையே வேறுபாடு இல்லை. அனைவரும் சமம் என்று சொன்னார். அதையே வழி மொழிந்த அப்பரடிகள், "இந்த நாட்டில் சாதி இல்லை. சாதிகளைச் சொல்பவர்கள் சழக்கர்கள்" என்று மிகக் கடுமையாகச் சாடினார்.

எல்லோருக்கும் மேலாகப் புரட்சி பூத்த மண்ணாகிய பசும்பொன் மாவட்டத்துத் திருக்கோட்டியூர் மதில் மேல் ஏறி ஒரு பெருந்தகை உபதேசித்தார். மந்திரத்தை எல்லா மக்களுக்கும் வாரிக் கொடுத்தார். அவருடைய ஆச்சாரியன் "இந்த மந்திரத்தை நீ மற்றவர்களுக்குச் சொன்னால் நீ நரகத்திற்குப் போவாய்" என்று சொன்னார். "கோடானுகோடிப் பேர் வைகுந்தத்துக்குப் போகும்போது நான் நரகத்திற்குப் போனால் என்ன?" என்று இராமாநுசர் கேட்டார். அந்த இராமாநுசர் பிறந்த மண்ணில் இன்றைக்குச் சுயநலமே வளர்ந்து வருகிறது. பிறர் நலம் குறைந்து வருகிறது.

நாட்டுக்கு உழைத்தல் தவம் என்று பாரதி சொன்னானே, அந்தத் தவம் மீண்டும் தோன்ற வேண்டும். அந்தத் தவத்தை வளர்க்க வேண்டும். அந்தப் பெருமக்கள் காலத்தை வென்றார்களா?

எத்தனை சிறந்த கவிஞர்கள், தத்துவ ஞானிகள், மேதைகள் இந்த நாட்டில் தோன்றினார்கள்? அவர்கள் காலம் கடந்து நம்மால் பாராட்டப்படுகிறார்கள். போற்றப் படுகிறார்கள். ஆனால் அவர்களை நாம் பின்பற்றுகிறோமா? அவர்களுடைய வழித் தடத்தில் நாம் நடக்கின்றோமா? அவர்களுடைய சிந்தனைகளுக்குச் செயல்களுக்கு நாம் வெற்றி சேர்ப்பிக்கின்றோமா? என்றால் இல்லை.

இன்று நம்முடைய நாடு ஜனநாயக நாடு. மக்களாட்சி முறை நடைபெறுகின்ற நாடு. ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் கோட்பாடு மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. நண்பர்களுக்கிடையில், கணவன் மனைவிக்கிடையில், குடும்பச் சூழ்நிலையில், கடைவீதியில், ஊரில், நாட்டில், சட்டசபையில், பாராளுமன்றத்தில், எங்கும் ஜனநாயக மரபுகள் செழித்து வளர வேண்டும். சொல்லுவது சிலவாக இருக்கவேண்டும். பிறர் வாய் கேட்பது அதிகமாக இருக்க வேண்டும். ஜனநாயக வடிவம் போதாது. ஜனநாயக உணர்வு தேவை. ஜனநாயக வாழ்க்கையின் மரபில் அலட்சியம் கூடாது.

ஒரு சாதாரண பாத்திரம் கூனி. அவளை அலட்சியப் படுத்தியதால் இராம காதையின் திசையே மாறிவிட்டது. சிறுவர்களை, சின்னஞ்சிறு மனிதர்களை அலட்சியப்படுத்துகிற மனப்போக்கு கூடாது. எல்லோருக்கும் மதிப்புத் தர வேண்டும். பாராட்ட வேண்டும். போற்ற வேண்டும். அரசியல் என்பது ஒரு ஞானம். அது ஓர் அறிவியல். அரசியல் அறிவு மக்களாட்சி முறையில் வாழுகின்ற நாட்டு மக்களுக்குத் தவிர்க்க முடியாது. அரசியல் அறிவு, அரசியல் போராட்டங்கள், அரசியல் கட்சிகளுக்கே சொந்தமானவை

அல்ல. நம்முடைய நாட்டில் அரசியலை, அரசியல் கட்சிகளிடமே ஒப்படைத்து விடுகிறார்கள்.

படித்தவர்கள், பேராசிரியர்கள், சிந்தனையாளர்கள், இவர்கள்கூட அரசியலைப் பற்றி பேச கூச்சப்படுகிறார்கள்- பயப்படுகிறார்கள். தப்பித் தவறி பேசிவிட்டால் கட்சிக்காரர் களுக்குக் கடுஞ்சினம் ஏற்படுகிறது. அன்பு கூர்ந்து மன்னித்துக் கொள்ளுங்கள். அரசியல் சிந்தனை இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் என்றைக்கு ஏற்படுகிறதோ, அன்றைக்கே மக்களாட்சி முறை வளரும்.

கோசல நாட்டில் இராமனுக்கு முடிசூட்டப் போகிற செய்தியறிந்தபோதும் மக்கள் மகிழ்ந்தார்கள். இராமன் காட்டுக்குப் போகிறபோதும் அழுதார்கள். அது நாட்டு அரசோடு மக்கள் சேர்ந்து இயங்கிய, இயக்கத்தினுடைய விளைவு. இன்றைக்கு நம்முடைய நாட்டு அரசியலில், ஆட்சியில் அந்த இயக்கத்தோடு மக்கள் சேர்ந்து இயங்கு கிறார்களா? இல்லையில்லை. நாடு கடன் வாங்கினால் நம்முடைய நாட்டு மக்கள் கவலைப்படுகிறார்களா? அழுகிறார்களா? நாட்டுக் கடனை தீர்ப்பதற்காக ஒருவேளை சாப்பாட்டை தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்களா? சாப்பாட்டைத் தியாகம் செய்ய வேண்டாம். ஒரு தேநீரைத் தியாகம் செய்வார்களா? அப்படிப்பட்ட புரட்சி எண்ணத்தை நாட்டு மக்களுக்குக் கொடுத்தாக வேண்டும். மக்களை அரசு காப்பாற்றக் கூடாது. அரசை மக்கள் காப்பாற்ற வேண்டும்.

ஜனநாயகம் என்பது ஒரு முறை மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. அது உணர்வு செறிந்தது. ஒழுங்கு செறிந்தது. ஒழுக்கம் செறிந்தது. இன்று எங்கு பார்த்தாலும் போட்டா போட்டிகள்! தலைமைக்கும் பெருமைக்கும் போராட்டங்கள்! இலட்சியத்தைப் பறிகொடுத்து விட்டுக் கூட பெருமை தேடுவார்கள் போலத் தெரிகிறது. இலட்சியம் பெரிது. இலட்சியம் தூய்மையானது. இலட்சிய வாழ்க்கை

உயர்ந்தது. பதவிகளும், பெருமையும் வரலாம் - போகலாம். இலட்சியத்தைத் தியாகம் செய்துவிட்டுத் தயவு செய்து பதவி களைத் தேடவேண்டாம்... பெருமைகளைத் தேடவேண்டாம்.

இளைய பாரதமே! எழுந்திரு! புதிய பாரதமே! எழுந்து வா; உனக்குத் தேவையான கல்வி எது என்று நிர்ணயம் செய்! தற்சார்பான கல்வியைப் பெறு! வேலையைத் தேடாதே! வேலையை உருவாக்கு! கை வருந்தி உழைப்பவர் தெய்வம் என்று நம்பு! நோன்பு நோற்று உழைத்து வாழ்க! புதிய வரலாறு படைத்திடுக! வரலாற்றுப் போக்கோடு ஓடி விடலாம் என்று நினைக்காதே! நீ வரலாற்றை நிகழ்த்தி, நின்று போராடிப் புதிய வரலாற்றைப் படைத்து சாதனை செய்! உன்னுடைய காலம் இந்த நாட்டினுடைய வரலாற்றில் பொன்னேடாக அமைய வேண்டும்.

எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? அன்பு கூர்ந்து சிந்தனை செய்யுங்கள். இன்று இந்த நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது? எங்குப் பார்த்தாலும் வன்முறைகள்! மொழிச் சண்டைகள்! சாதிச் சண்டைகள்! மதச் சண்டைகள்! ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு அவல மனத்தோடு அலைந்து கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் திருப்தியில்லை. எங்கும் அதிருப்தி! இதற்கென்ன மாற்று? இதற்கென்ன வழி? இதற்கு யார் வழி சொல்ல முடியும்? வேறுயாறும் சொல்ல முடியாது.

இளைய பாரதம் ஒன்றுதான் சொல்ல முடியும். அவர்கள் எழுந்தால், எழுந்து நடந்தால், அவர்களால் இந்த நாட்டுக்கு வெற்றி வாய்ப்புக்களை, குவிக்க முடியும். புதிய வரலாற்றைப் படைக்க முடியும். புதிய பாரதம் பொலிவோடு விளங்கும். அதை நினைத்து, எண்ணிப் பார்த்து, முடிவு செய்வதற்காக எங்கே போகின்றோம் என்று சிந்தனை செய்யுங்கள்! எங்கே போக வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்! போக வேண்டிய இடத்திற்கு, போகவேண்டிய

வழி, முறை, தொலைவு ஆகியவற்றையும் முடிவு செய்யுங்கள். தைரியமாக, துணிவாக, நடைபோடுங்கள்! வெற்றி பெறலாம்.

எங்கே போகின்றோம் என்ற கேள்விக்குப் பதிலாக நாம் எங்கே போக வேண்டும் என்ற கேள்வியைக் கேட்கப் போகின்றோம். ஆம்! மனிதனை முதலில் உருவாக்க வேண்டும். படிப்பாளிகளை உருவாக்கி இருக்கிறோம். ஆனால் படைப்பாளிகளை உருவாக்குகின்ற கல்வி, படைப்பாளிகளை உருவாக்குகின்ற அறிவு, திசை நோக்கி நாம் இனி போகவேண்டும். உழைப்பு என்பது உயர்ந்தது. மதிப்பில் உயர்ந்தது. தவமனையது. அந்த உழைப்பை அலட்சியம் செய்யக் கூடாது. ஒரு நாட்டு மக்கள் கடுமையாக உழைத்தால் அந்த நாடு வளரும்! வாழும்!

எந்த ஒரு நாட்டிலும் எளிதாக மாற்றத்தை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மாற்றம் என்பது வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாதது. எங்கு வளர்ச்சி இருக்கிறதோ அங்கு மாற்றம் இருக்கும். மாற்றம் இருக்கின்ற இடத்தில் வளர்ச்சி இருக்கும். இவற்றை நோக்கி நாம் பயணம் செய்ய வேண்டும்.

இந்த நாடு பரம்பரை பரம்பரையாக வேளாண்மையில் சிறந்து விளங்கிய நாடு. "உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பான் பாரதி. ஆனால் இந்த நாட்டில் கோடிக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. சாதாரணமாக கிராமப் புறங்களில் பெண் சிரித்தால், பலருக்கு, ஆண்களுக்குக் கோபம் வரும். பெண் சிரித்து விட்டாளே என்று கோபப் படுவார்கள். ஆனால் இந்த நாட்டில் நீண்ட நாட்களாக ஒரு பெண் சிரித்துக் கொண்டே இருக்கிறாள். அதிலும் பரிகாசமாக நம்மைப் பார்த்து நகைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் யார்? நிலமகளாகிய பூமி தேவி.

> *"இலம் என்றசை இருப்பாரைக் காணின்*
> *நிலம்என்னும் நல்லாள் நகும்"*

என்றார் திருவள்ளுவர். இன்றைக்கு நிலமகள் நம்மைப் பார்த்து நாணிச் சிரிக்கின்றாள். நம் நாட்டில் எண்ணெய் இறக்குமதி, கோதுமை இறக்குமதி செய்கிறார்கள். இப்படி விளைகின்ற விளையுள் இருந்தும், உழைக்கின்ற கரங்கள் இருந்தும், ஏன் இந்த நிலை? எண்ணுங்கள்! நல்ல வளமான நாட்டை உருவாக்க நடந்திடுங்ககள்! அந்த திசைநோக்கி நடக்க வேண்டும்.

நல்ல கால்நடைகளைப் பேணிவளர்ப்போம் "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்" என்று அன்று ஆண்டாள் நாச்சியார் பாடினார். இன்று குடம் நிறையக் கறக்கும் மாடுகளை நமது நாட்டில் பஞ்சாபில்தான் பார்க்க முடிகிறது. அடுத்து குஜராத்தில்தான் பார்க்க முடிகிறது. நாடு முழுதும் அத்தகைய கால்நடைகள் வளர வேண்டும்.

அறிவியல், நாட்டுக்கு இன்றி அமையாதது. அறிவியலும், ஆன்மிகமும் முரண்பட்டதல்ல. ஆன்மிகமும் ஒரு அறிவியல்தான். அறிவியல் என்பது வளரும் உலகத்தை, நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை, நம்மைச் சுற்றியிருக்கக் கூடிய சமூகத்தை, நமக்குப் பயன்படுத்திக் கொள்வது, வளர்ப்பது, வாழ்வது, என்பதுதான். நம்முடைய பொருளாதாரம் செழிப்பாக இருக்கவேண்டும். கடன் வாங்கிய காசு கையில் புரளலாம். ஆனால் சொந்தமாகாது. நம்முடைய நாட்டினுடைய சொந்த மூலாதார வளங்கள் பெருகி ஆக வேண்டும். நம்முடைய மூலதனம் பெருக வேண்டும். பன்னாட்டு மூலதனங்களைவிட, சொந்த மூலதனம்தான் தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்!

எல்லோரும்தான் பிறக்கிறார்கள், எல்லோருக்கும் ஒரே ஒரு முறைதான் பிறப்பு. ஆதலால் மீண்டும் பிறக்கப் போவது நிச்சயமில்லை. ஆதலால், இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள். அந்த இலட்சியம் எதுவாக இருக்க வேண்டும்? நம்முடைய

நாடு, நம்முடைய காலத்தில், நாடா வளத்தனவாக விளங்க வேண்டும். தாழ்விலாச் செல்வர் பலர் வாழவேண்டும், வளர வேண்டும். இந்த நாட்டை, இமயம் முதல் குமரி வரையில் ஒரு நாடாக ஆக்குவோம்! கூட்டுவாழ்க்கை வாழ்வோம்! கூடிவாழ்தல் என்பது ஒரு பண்பாடாக இருக்கவேண்டும்.

ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடிப்போம் என்பது எல்லாம், இந்த நாட்டு வாழ்க்கை நெறியில், முறையில் உயிர்பிக்க வேண்டும். அன்பு நெறி இந்த நாட்டு நெறி; உலகத்தின் மிகப்பெரிய சமயமான புத்த மதத்தைக் கொடுத்தது இந்தியா - மறந்து விடாதீர்கள். போர்க்களத்தை விட்டு விலகினான் அசோகன். உயர்ந்த அன்பு நெறியை இந்த நாடு ஒரு காலத்தில் போற்றியது. பாராட்டியது. இன்று இந்த நாட்டில் எங்குபார்த்தாலும் வன்முறைகள்! கிளர்ச்சிகள்! தீவிரவாதங்கள்! இவைகளை எதிர்த்துப் போராடி, அன்பும், அமைதியும், சமாதானமும், தழுவிய ஒரு சமூக அமைப்பை நோக்கி நாம் நடைபோட வேண்டும்.

எங்கே போகிறோம்? தெளிவாக முடிவுசெய்யுங்கள். எங்கே போகவேண்டும்? தெளிவாக முடிவுசெய்யுங்கள். இதைப்பற்றித் தொடர்ந்து சிந்திக்க, தொடர்ந்து பேச, வானொலி அனுமதி வழங்கியிருக்கிறது. நீங்களும் கூடவே வாருங்கள்! கூடவே சிந்தனை செய்யுங்கள். என்னுடைய பேச்சில் ஐயங்கள் இருந்தால் எழுதுங்கள்! வினாக்கள் இருந்தால் தொடுங்கள்! விடைகள் வேண்டுமா? தரப்படும். ஆனாலும் ஒரு நாடு எதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறதோ, அந்தத் திசையில் அந்த நாடு நகரும் என்பதை மறந்து விடாதீர்கள்!

நாம் அனைவருமாக வானொலியின் மூலம் இந்த நாட்டினுடைய முன்னேற்றத்தைப் பற்றி, இந்த நாட்டினுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசவேண்டும்! சிந்திக்க வேண்டும்! செல்ல வேண்டும்! அப்போதுதான் நமது

நாட்டை நல்லதிசைக்கு அழைத்துச் செல்லமுடியும். எங்கே போகவேண்டுமோ அங்கே போகமுடியும். அந்தத் தடம் அதோ தெரிகிறது! அந்தத் தடத்தைப் பிடிப்போம்! தடம் மாறாமல் நடந்துபோவோம்! வருக! வருக!

## 2. கல்விச் சிந்தனைகள்

**(20–8–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

உயிர்த் தொகுதி பரிணாம வளர்ச்சியில் புல், புழு, விலங்கு.... என்று வளர்ந்து கடைசியாக ஐந்து அறிவினாலாகிய விலங்கினின்றும் ஆறறிவுடைய மனிதன் பரிணமித்தான். மனிதன், மிருகமும் அல்லன்; முழு மனிதனுமல்லன். மனிதன் மிருகத் தன்மையிலிருந்து விலகி மனிதனாக வாழ்ந்து அமர நிலை எய்த வேண்டும். இதுதான் மனிதனின் பரிணாம வளர்ச்சி. குறிக்கோள்! ஆனால் எல்லா மனிதருமே விலங்குத் தன்மையிலிருந்து அறவே விலகியதில்லை. முழு மனிதனாகவும் வாழ்ந்ததில்லை; தெய்வமாகத் திகழ்ந்ததுமில்லை.

இம்மூன்றின் கலவையாகவே கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்றனர். கோடியில் ஒருவர் விலங்கியல் தன்மையைப் பூரணமாக வெற்றி கொண்டு, மனிதராக - மாமனிதராக விளங்கி, இந்த மண்ணிலேயே அமரர் சிறப்பினைப் பெற்று வாழ்ந்துள்ளனர்.

இன்று நமது நிலை என்ன? நாம் விலங்கினத்திலிருந்து வேறுபட்டு நிற்கும் தடத்தில் செல்கிறோமா? மனிதத் தன்மையுடன் வாழ்கிறோமா? இங்கேயே அமரர் சிறப்புக் காணும் தடத்தில் செல்கிறோமா? சிந்தனை செய்யுங்கள்! இன்றைய மனிதன் உணர்ச்சி வசப்படுகிறான். அவன் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் விலங்குகளிலும் மோசமாகி விடுகிறான்; கலகம் செய்கிறான்; கொலை செய்கிறான்;

சுயநலமே உருக்கொண்டது போல ஆகிவிடுகிறான். இன்றைய மனிதன் தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை என்ற கடுகுப் புத்தியிலேயே நிற்கிறான்.

மனிதப் பிறவி அருமையானது என்று உணர்ந்து, அந்த அருமைப் பாட்டினை உலகு உணரும் தடத்தில் செல்வோர் எத்தனை பேர்? வாழ்வோர் எத்தனை பேர்?

"அரிது அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன், குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது.
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது.
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செய்தல் அரிது.
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே!"

என்று அவ்வையார் மனிதப் பிறவியைச் சிறப்பிக்கின்றார்.

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர்
பிறவி மதித்திடுமின்"

என்று அப்பரடிகள் அருளிச் செய்துள்ளார். ஆம்! மானுடப் பிறவி ஒரே ஒரு பிறவிதான்! இப்பிறவியிலேயே அறியாமையை அகற்றி ஞானம் பெறுதல் வேண்டும். மாணிக்கவாசகரும், "என்னால் அறியாப் பதந் தந்தாய்" என்றார். ஆம்! மானிடப் பிறவி ஒரு பதந்தான்! மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அறிகருவிகளுடன், மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியன தொடர்புச் சாதனங்களாகவும், நிறைவேற்றும் பொறிகளாகவும் விளங்குகின்றன.

அற்புதமான கருவிகள்! இந்த உடம்போடு கூடிய ஆன்மாவின் வாழ்க்கையை அறிந்து போற்றிப் பாதுகாத்து வாழ்பவன் மனிதன். திருமூலர் "உடம்பை வளர்த்தேன் உயிர்

வளர்த்தேனே!" என்றார். உடம்பை வளர்த்தல் என்றால், எடை கூடுதலாக வளர்த்தல் என்பதல்ல. உடம்பின் பயன் பாட்டு ஆற்றலை வளர்த்தல்!

இன்று உடல் நலத்திற்கு எதிரான செயற்பாடுகளே மிகுதி. சமையல் தோன்றிய பிறகு மனிதன் உடலுக்கு உகந்ததை - உடல் நலத்திற்கு ஏற்றதை - உண்ணாமல், சுவைக்காக உண்ணத் தலைப்பட்டு விட்டான்! போதும் போதாததற்குப் புகையிலையரக்கன் பலவகைப் புனைவு களில் மனிதனை அழித்துக்கொண்டு வருகிறான்.

காற்று சுவாசிப்பதற்காக அமைந்த மூக்கினை வாணக் குழியில் வெடி மருந்து திணிப்பதுபோல மூக்குப் பொடியைத் திணிக்கிறான். அடுப்பில் புகை இருத்தல் போல இன்று பலருடைய வாயில் புகை! புகை பிடித்தல், சாராயம் குடித்தல் இன்னோரன்ன தீமைகள் நாளும் பலரின் உடல் நலத்தைக் கெடுத்து வருவதோடு அவர்களை மனிதப் பண்பி லிருந்து தடம் மாற்றி விலங்கியல் நிலைக்கு அழைத்துப் போகின்றன. இவர்களும் போய்க் கொண்டிருக்கிறார்கள்!

மனிதன் வரலாற்றின் உறுப்பு. மனிதன் வரலாற்றின் கருப்பொருள். மனிதன் இந்த உலகைப் பயன்படுத்தும் வகையில் அமைப்பவன். மனிதன் படைப்பாளி! மனிதன் காலந்தோறும் இப்புவிக் கோளின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருப்பவன். மனிதனை அளவு கோலாகக் கொண்டே இந்த உலகம் மதிப்பிடப்படுகிறது. மனிதப் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற, மனிதனுக்குக் கருவியாக அமைவது அறிவு!

"அறிவுடையார் எல்லாம் உடையார்"

என்பது திருக்குறள்.

மனிதகுலம் தோன்றிய நாள் தொட்டு, அறிவைத் தேடும் முயற்சி நடைபெற்று வருகிறது. மனித குலத்தினர்

அனைவரும் அறிவு பெற்று விளங்கவேண்டும் என்பது நியதி. இத்திசையில் மனிதகுலம் எடுத்த முயற்சிகள் பலப் பல. ஆயினும் அறிவு பெற்றோர் கோடியில் ஒருவரே!

இன்று நாம் அறிவுடைமை பற்றி, கொண்டிருக்கிற கருத்து, பிழையானது, தகவல்கள் நிறைய வைத்திருப்பவர்கள், நிறைய படித்தவர்கள், பட்டம் பெற்றிருப்பவர்கள், இவர்கள் எல்லாம் அறிஞர்கள் என்று பிழையாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். இவர்களில் அறிஞர்கள் இருக்கலாம். தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.

ஆனால் திருக்குறள் கூறும் அறிவுடைமை எது? மனிதனை - மனித குலத்தைத் துன்பத்திலிருந்து காப்பதே அறிவு. இன்று நமது வாழ்க்கையில், துறை தோறும் துன்பந்தானே சூழ்ந்திருக்கிறது. மனிதரை மனிதர் கொன்று அழிக்கும் ஆற்றல் மிக்க கொலைக் கருவிகளை மனிதன் படைத்திருக்கிறான். அப்படியானால் நாம் எங்கு போய்க் கொண்டிருக்கிறோம்?

இன்றைய உலகம் அறிவியல் உலகம் என்கிறார்கள். கூர்ந்து நோக்கின், உயர்தர அறிவியல் வளரவில்லை. அருவருக்கத்தக்க நிர்வாணமான சுயநலம் வளர்ந்து வருகிறது. வீட்டிலிருந்து, உலகத்தின் பெரு வீதிகள் வரை எங்கும் பண மதிப்பீட்டுச் சமுதாய அமைப்பு! ஆதிக்கப் போட்டிகள்! மற்றவர் துன்பம் பொருத பண்பே அறிவுடைமை என்று கூறுகின்றது திருக்குறள்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை"

என்பது திருக்குறள். இத்தகு அறிவைப் பெறும் கல்வி வழங்கப் பெறுகிறதா? இன்று நமது கல்வி உலகம் எங்கு போய்க் கொண்டிருக்கிறது? பட்டதாரிகளை உருவாக்கு வதில் கல்வி உலகம் வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனால், படைப்பாளிகளை உருவாக்குவதில் பெற்ற வெற்றி, மிக மிகக் குறைவு! கல்வியே அறிவுடைமையல்ல. கற்றவர்கள் எல்லாம் அறிவுடையவர்களும் அல்லர். கல்வியும், கேள்வியும் அறிவு பெறுதலுக்குரிய வாயில்களே ஆகும்!

இன்று நமது கல்வியுலகம் எங்கே சென்று கொண்டிருக் கிறது? மனிதனின் ஆன்மாவுக்கு உணவு கல்வி. ஆன்மாவை வளர்ப்பது கல்வி! இன்றைய கல்வி முறை மூளையில் தகவல் களைத் திணிப்பதாக அமைந்திருக்கிறதே ஒழிய ஆன்மாவைத் தொடவில்லையே! இன்றுள்ள கல்விப் பெருக்கத்திற்கு, இக்கல்வி உலகம், அளப்பரிய ஆற்றல் வாய்ந்த கல்வியாய் இருப்பின், இந்த உலகத்தையே மாற்றியிருக்கும்.

எங்கே மாற்றங்க்ள்? மனிதன் வர வரச் சூழ்நிலையின் கைதியாகிப் போகிறானே தவிர, சூழ்நிலையை அவன் மாற்ற முற்படவில்லையே! விலங்குகள் சூழ்நிலையைச் சார்ந்தவை. ஆனால், மனிதனோ சூழ்நிலைகளைத் தன்னுடைய வாழ் நிலைக்கும், இலட்சியத்துக்கும் ஏற்ப, மாற்றி அமைத்துக் கொள்ளும் ஆற்றலுடையவனாக விளங்குமாறு செய்தல் கல்வியின் விழுமிய நோக்கம். இன்றைய கல்வி உலகு, கடமை உணர்வுகளை, காலம் போற்றும் உயர் பண்பினை, கட்டுப் பாடுகளைப் போற்றி வளர்த்துக் கொள்ளக் கற்றுத் தரவில்லை. வெற்றி வாய்ப்புகளுக்குரிய கட்டுப்பாடுகளை நெகிழ்த்தி விட்டது இன்றைய கல்வி உலகம். ஏன்?

இன்று அறிவியல் என்ற பெயரில் வரலாறு, இலக்கியம், தத்துவம் ஆகிய துறைகள் புறக்கணிக்கப் படுகின்றன. ஆதலால், இன்றைய மனிதன் நாகரீகத்தை இழந்து காவல் நிலையங்களின் வளர்ச்சிக்கும், சிறைக் கூடங்களை நிரப்பவுமே உரியவர்களாகி விட்டார்கள். கடந்த சில ஆண்டு களில் காவல் நிலையங்களின் வளர்ச்சியே குற்றங்களின்

வளர்ச்சிக்கு நிரூபணமாகிறது. ஆணும், பெண்ணும் இணைந்து வாழவேண்டியது சமூக அமைப்பு.

இச்சமூகத்தில் இன்று கல்வித் துறையிலிருந்து காவல் துறை வரையில் ஆண், பெண், பிரிக்கப்படுகின்றனர். ஏன் இந்த அவலம்? இந்த அவலத்தை முதலில் செய்தது ஆண் ஆதிக்கச் சமுதாய அமைப்பு. திருக்கோயிலில் அம்மை அப்பனாக இருந்து வழிபடும் பொருளை - அர்த்த நாரீசுவரனாக இருந்த பரம்பொருளை - இருவேறாகப் பிரித்துத் தனித்தனியாக்கினார்கள்.

அதற்குப் பிறகுதான் புராணங்களில்கூட ஆண் சாமிக்கும், பெண் சாமிக்கும் சண்டைகள் தொடங்கின. இன்னும் அதே திசையில்தான் போய்க்கொண்டிருக்கிறோம். ஆண், பெண் சமத்துவத்தைக் கல்வியில்கூடக் காண முடிய வில்லை. ஏன்? பண்பாட்டு வளர்ச்சிக்குரிய கல்வியை வழங் காததுதான் காரணம். வளரும் வரலாற்றுக்குரிய உயிர்ப்புள்ள கல்வியை மனிதனுக்குத் தரவேண்டும்.

கல்வி, தெரியாததைத் தெரிந்து கொள்வதற்கு மட்டு மன்று. கல்வி, ஆன்மாவின் சக்தியைத் தூண்ட வேண்டும். நல்ல காரியங்களைச் செய்தால் மட்டும் போதாது! நல்ல காரியங்களைச் செய்யும் ஆர்வத்தைத் தரவேண்டும். ஓர் ஊர், ஒரு நாடு எப்படி இருக்கிறது என்பதை அளந்தறியப் பயன் படுவது கல்வியேயாம். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களுடைய நாடு விளங்குமானால் "கெட்ட போர்" அங்கு இராது. ஆன்ற கல்வி கற்றோர் நல்லவராயிருப்பர். நாடும் நன்றாகவே இருக்கும்.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்பது புறநானூறு.

கல்வி என்பது கல்லுதல் அல்லது தோண்டுதல் என்னும் சொல் அடியில் பிறந்தது. மனிதனிடத்தில்

இயல்பாக உள்ள அறியாமையைத் தோண்டி எறிந்து விட்டு, அறிவூற்றைக் கண்டு, அந்த உயர்ந்த சக்தியை வளர்ப்பதே கல்வியாகும். இதுவே கல்வியின் நோக்கம் - பயன். கல்வித் துறை மக்கள் தொகுதிக்குரியதான பிறகு, இது நடைபெற வில்லை. ஆயினும், தக்க நாட்டுப்பற்றுள்ள சமூகச் சிந்தனை யுள்ள ஆசிரியர்கள் மனமிருந்தால், இன்னும் செய்ய இயலும்; செய்யவேண்டும்.

கல்வியின் தகுதி, கற்பிக்கும் ஆசிரியரையே மிகுதியும் சார்ந்திருக்கிறது. கற்பிக்கும் ஆசிரியரிடம் சிறந்த திறன் இல்லையானால் பள்ளியால் விளையும் நன்மையைவிட விபத்துக்களும் குழப்பங்களும்தான் ஏற்படும். வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்பொழுது, மாணவர் பகுதியுடன் ஒன்றி யிருக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் என்ன நடக்கிறது? கற்கும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் தனக்கும் அந்நிலையில் உள்ள ஒன்றுதலில் உள்ள அமைவு அல்லது இடை வெளியைத் தெரிந்துகொண்டு கற்பிக்கும் ஆசிரியர்தான், கற்பிப்பதில் வெற்றி பெற இயலும்.

பாடம் என்பது கற்பிக்கும் ஆசிரியரும் கற்கும் மாணவரும் ஆகிய இருவரும் இணைந்து செயல்பட வேண்டிய முயற்சி என்பதை ஆசிரியர் நினைவில் கொள்ள வேண்டும். கற்பிக்கும் தனது ஆசிரியத் தன்மையுடன், கற்கும் மாணவரையும் ஒன்றச் செய்வதன் மூலம் - கற்கும், கேட்கும், சிந்திக்கும் திறனைத் தூண்டித் தம்பால் ஈர்த்து, வினா - விடை மூலம் - மாணவன் கற்றுக் கொள்கிறான்; தெளிவாக இருக்கிறான் என்பதை ஆசிரியர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

ஒரு செடி வளர்வதற்குப் பலவகை உணவுப் பொருட்கள், மருந்துகள் தேவைப்படும். அதுபோல், மனிதனும் வாழ்க்கையில் வளர, பண்பாட்டில் வளர கல்வி தேவை. கற்கவேண்டிய துறைகள், நூல்கள் மனிதர்களுக்

கிடையில் வேறுபடும்! ஆன்மாவின் தேவைக்கு ஏற்பவும், ஆன்மாவின் வளர்ச்சிக்கேற்பவும் மாறுபடும்.

ஆதலால் கல்வியில் பொதுக் கல்வியும், சிறப்புக் கல்வியும் இடம்பெற வேண்டும். பொதுக் கல்வி என்பது பொது அறிவு, சமூக வாழ்க்கைக்கு - ஒரு பணி செய்யத் தேவைப்படும் அறிவு. சிறப்புக் கல்வி என்பது கற்போர் நிலைக்கேற்ப மாறும். அது அறிவியலாகவும் இருக்கலாம். அல்லது தத்துவத் துறையாகவும் இருக்கலாம். பிறவாகவும் இருக்கலாம். இங்ஙனம் கல்வி வழங்கப் பெற்றால்தான் மனிதர்களை, அறிஞர்களை, ஞானிகளை உருவாக்கலாம்.

நம்முடைய குழந்தைகளைச் சிந்திக்கிறவர்களாகப் பழக்கிவிடுதல் அவசியம். முதல் இரண்டு வகுப்பு வரை பாடப் புத்தகங்களே வேண்டியதில்லை என்பது நமது கருத்து. இந்த வகுப்புக்களில் கற்பது எப்படி? நினைவாற்றலைப் பெறுவது எப்படி? சிந்திப்பது எங்ஙனம்? ஆகிய கல்வி கற்றலின் அடிப்படைகளைச் செயல்வழிக் கற்பிக்க வேண்டும். கற்கும் குழந்தைகளின் சிந்திக்கும் திறமையே ஆசிரியரின் திறமைக்கு அளவுகோல் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு இயல்பாகவே அளவற்ற சக்தி இருக்கிறது. நாம் இங்கு குறிப்பிடுவது உடல்சக்தி, மூளை சக்தி இரண்டையுமே குறிப்பிடுகின்றோம். இந்த இருவகை சக்திகளையும் குழந்தைகள் உபயோகிக்கும்படி ஆசிரியர் பழக்கவேண்டும். நடக்கும்பொழுது கீழே விழுந்துவிடும் குழந்தை, தானே எழுந்துவிடும் திறமையுடையது; மனப் பாங்கு உடையது. நாம் தூக்கும் போதுதான் குழந்தையின் ஆற்றல் குறைகிறது. மற்றவர்களை எதிர்பார்ப்பது குழந்தை களிடத்தில் வளர்ந்து விடுகிறது.

ஆசிரியர், கற்கும் மாணவர்களிடத்தில் வினா கேட்கலாம். ஆனால் ஆசிரியர் விடை கற்றுத்தரவே கூடாது.

மாணவர் சற்று விடை தரத் தாமதித்தால் அடுத்து - Next - சொல்லி விடுகிறார் ஆசிரியர். சில அவசரமுடைய ஆசிரியர்கள் விடையைத் தாமே சொல்லிக் கொடுத்து விடுகிறார்கள். இது தவறு. வினாவுக்குரிய விடைகளை மாணவர்களே அவர்களின் அறிவுப்புலனால் தேட வேண்டும். தேவையானால் ஆசிரியர் துணை வினாக்களைத் தொடுத்து, மாணவர்களிடத்தில் விடை காணும் முயற்சியைத் தூண்டலாம். எந்தச் சூழ்நிலையிலும் ஆசிரியர் விடை கூறக்கூடாது.

ஆனால், இன்று நடப்பு, வினா-விடைகளை எழுதிப் போட்டு மனப்பாடம் செய்வதுதான்! இதனால், சிந்தனைத் திறனும், புதியன காணும் முனைப்பும் வளரவில்லை! கல்வி உலகு, தேர்வு மட்டுமே என்ற குறுகிய குறிக்கோளில் சென்று கொண்டிருக்கிறது. திசையை விரிவுபடுத்திக் கொண்டு, சிந்தனையாளர்களை, படைப்பாளர்களை உருவாக்கும் உலகை நோக்கிச் செல்லவேண்டும். படிப் பாளிகளை உருவாக்கும் நிலையிலிருந்து படைப்பாளிகளை உருவாக்கும் உலகை நோக்கிச் செல்லவேண்டும்.

கல்விக்கு இதயம் தேவை. சோவியத் கல்வியாளன் சுகோம்லின்ஸ்கி "குழந்தைகளுக்கு இதயத்தைக் கொடுங்கள்" என்று எழுதினான். கல்வி, மூளையோடு மட்டுமோ, கற்கும் நூல்களோடு மட்டுமோ சம்பந்தமுடையதன்று. இதயத் தோடும் சம்பந்தமுடையது. கல்வி கற்பிக்கவும், கல்வி கற்கவும், அதற்கென ஒரு சிறந்த பாங்கு தேவை.

கற்பிக்கும் ஆசிரியருக்குச் சிறந்த உணர்வு நிறைந்த இதயம் தேவை. கற்கும் மாணவருக்கும் ஆசிரியரைப் பூரணமாக - ஆசிரியரின் மனத்தைக் கூடப் புரிந்துகொள்ளும் உள்ளம் வேண்டும். அப்போதுதான் கற்பிக்கும் பணியும், கற்கும் பணியும் அர்த்தமுள்ளது ஆகும்.

இத்தகு கல்விச் சூழலுக்கு உரியமொழி தாய்மொழியே என்ற கருத்திற்கு இரண்டாவது கருத்து இருக்கமுடியாது.

இயற்கை வழங்கும் கொடைகளில் ஒன்று தாய்மொழி. தாய்மொழியே சிந்தனைமொழி; உணரும்மொழி. ஒரு நாட்டு மக்களை அடிமைப்படுத்த முதற்சாதனம் அந்த நாட்டு மக்களைத் தாய்மொழியில் கல்வி கற்க அனுமதிக்காது இருப்பதே.

இன்று நம்முடைய நாட்டில் தாய்மொழி வழிக் கல்வியியக்கம் வெற்றிபெறவில்லை. தேசியமொழியைக் கற்றபாடில்லை. ஆங்கிலத்திலிருந்து தாய்மொழிக் கல்விக்கு மாற மறுப்பது பலவீனம். இந்த திசையில் செல்வது விரும்பத் தக்கதல்ல - தாய்மொழிக் கல்வியும், தேசிய மொழியறிவும் நாம் பெற வேண்டியவை. உலகத்தின் சாளரத்தை மூடவும் வேண்டாம். ஆங்கிலத்தையும் ஒரு மொழியாகக் கற்கலாம்.

தாய்மொழியை மதித்துப் போற்றும் கல்வி உலகமே நமக்குத் தேவை. தாய்மொழி வழி உள்ளத்தை உயர்வு செய்யும் கல்வி கற்போம்; அறிவை வளப்படுத்தும் கல்வி கற்போம். உலகக் கல்வியும் கற்று உலகமாந்தருடன் கை கோர்த்து நிற்போம்! சுய அறிவை வளர்ப்போம். அதற்குத் துணையாகக் கற்கும் கல்வியை ஆக்குவோம்!

பெரிய, பெரிய இலட்சியங்களை - இமயத்திலும் உயர்ந்த இலட்சியங்களைக் கொள்வோம்! அவற்றை அடைய உழைப்போம்! இதுவே இன்றைய கல்வி உலகு நம்மை அழைத்துச் செல்ல வேண்டிய இடம்.

நாளைய இந்தியா இன்றைய பள்ளியிலேயே தொடங்குகிறது என்பதை நமது அரசுகளும் சமூகமும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். எதிர்கால இந்தியா ஏற்றமடைவது இன்றைய பள்ளியின் நடைமுறையையும், நமது குழந்தைகளுக்குத் தரப்பெறும் கல்வியையுமே பொறுத் திருக்கிறது.

நாம் இன்று சாதி, மத, இன எல்லைகளிலும், பகுத்தறி வுக்கு முரணான மூடநம்பிக்கைகளிலும் சிக்கிச் சீரழியும்

போக்கினைத் தவிர்த்து, அடுத்த தலைமுறையினருக்குப் புதிய உலகைக் காட்டவேண்டும். நம்முடைய இளைஞர்கள் சிறந்த கல்வியையும், ஞானத்தையும் பெற்று, பொறுமை, உறுதி, முயற்சி, இவற்றோடு அர்ப்பணிப்பு உணர்வோடு பணி செய்வதில் நம்பிக்கை வைக்கக்கூடிய கல்வியே இன்றையத் தேவை. இதுவே நாம் செல்லவேண்டிய திசை...!

கல்வி உலகம் இன்றைக்கு இரண்டாகப் பிரிந்து இருக்கிறது. மேலும் தெளிவாகச் சொல்லப் போனால் கல்வியில் இரண்டு ஜாதிமுறை தோன்றியிருப்பது போலத் தெரிகிறது. அதாவது கிராமப்புறக்கல்வி, நகர்ப்புறக்கல்வி என்று குறிப்பிடுகின்றோம். கிராமப்புறக் கல்விக்கும், நகர்ப் புறக் கல்விக்குமுள்ள இடைவெளி மிகவும் அதிகம் என்பதை வருத்தத்தோடு குறிப்பிட வேண்டி இருக்கிறது.

நகர்ப்புறத்து இளைஞர்கள், மாணவர்கள், தரமானக் கல்வி பெறமுடிகிறது. அவர்களது அறிவுப் புலன்களுக்கு நிறைய விருந்து கிடைக்கிறது. அதனால், தரமும் திறமையும் உடைய இளைஞர்கள், நகர்ப்புறத்தில் உருவாக வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் கிராமப் புறத்தில் அது இல்லை. கிராமப்புற பள்ளிக் கூடங்கள் எந்தவிதமான ஊட்டச்சத்தும் இல்லாத கல்வி நிலையங்களாக விளங்குகின்றன. சோதனைக் கருவிகள் கிடைப்பதில்லை. நல்ல நூலகம் அமைவது இல்லை. அவர்களுடைய செவிப்புலனுக்கு நிறைய விருந்துகள் கிடைப்பதில்லை. அதன் காரணமாக, கிராமப் புறக் கல்வியில், தரம் குறைந்திருக்கிறது என்பது இரண்டு கருத்துகளுக்கு இடமில்லாத ஒரு பொதுச் செய்தி. கிராமப் புறக் கல்வியை மேம்படுத்துவதில் இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நமக்கு இப்படி ஒரு ஆலோசனைக் கூடச் சொல்ல முடிகிறது. கிராமப்புறத்தில் திருக்கோயில்கள் உண்டு.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதை நாம் பின்பற்றுபவர்கள். ஒவ்வொரு கோயிலும், அந்தக் கிராமப்புறத்தினுடைய ஆரம்பப் பாடசாலையைத் தத்தெடுத்துக் கொண்டு, அந்த ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சிக்கு, அங்கு பயிலுகின்ற சிறுவர்களுடைய வளர்ச்சிக் குரிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளலாம்; அப்படிச் செய்தால்தான் கிராமப்புறக்கல்வி வளரும்.

அடுத்து, ஏடுகளின் வழியாக, புத்தகங்களின் வழியாக, கல்வி கற்றுத் தருவதை விட செயல் வழிக் கல்வி கற்பிப்பது நல்லது என்று கருதுகின்றோம். செயல் வழிக் கற்கும் கல்வி நீண்ட நெடு நாட்களுக்கு, நினைவில் இருக்கும். அதனால் அதற்குரிய சாதனங்களை ஒவ்வொரு பள்ளியும் பெற வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் ஆண்டுதோறும் புதிய புதிய நூல்கள் வாங்கவேண்டும்.

நம்முடைய நாட்டில் தீபாவளி கொண்டாடப்படுவது போல, - பொங்கல் கொண்டாடப் படுவதைப்போல, கலை மகள் விழா கொண்டாடும் காலம் விரைவில் வர வேண்டும். அப்பொழுதான் கல்வியுலகில் புத்துணர்வும், ஆர்வமும் தோன்றும். இன்று கலைமகள் விழா என்று ஒன்று இருக்கிற தாகவே பலருக்குத் தெரியவில்லை. நூல்களை வாங்குவது மில்லை. நூல்களைப் புதுப்பிப்பதுமில்லை.

இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் ஏதோ ஒரு மூடநம்பிக்கையில், அன்றைக்குப் படிக்கக் கூடாது என்றே, ஒரு கருத்து உலா வருகிறது. அன்றைக்கு, இருக்கும் புத்தகங் களையும் கட்டிவைத்துவிட்டு, பூப்போட்டு மூடிவிட்டு, படிக்கக் கூடாது என்று முடிவுசெய்து விடுகிறார்கள். இதையும் நாம் மறுத்துவிட வேண்டும்.

பள்ளிக் கூடங்கள் கலைமகள் விழாவன்று திறந்திருக்க வேண்டும். நூலகங்கள் திறந்திருக்க வேண்டும். அன்றைக்குக் கல்வி வேள்வி எங்கும் செய்யவேண்டும். கடைவீதியில் உள்ள புத்தகக்கடைகளில், நீண்ட, நெடிய வரிசையில் மக்கள் நின்று,

தங்களுக்கும், தங்களுடைய குழந்தைகளுக்கும் தேவையான புத்தகங்களை வாங்கும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். தன்னுடைய அருமை மகனுக்கு, அல்லது அருமை மகளுக்கு, ஒரு பெற்றோர் வாங்கிக் கொடுக்கக்கூடிய உயர்ந்த பரிசு புத்தகமாகவே இருக்க வேண்டும். அந்தப் பழக்கத்தைக் குழந்தைகளும் கற்றுக்கொள்ள வேண்டும், பெற்றோர்களும் பயில்விக்க வேண்டும்.

பணிப் பாதுகாப்பு என்பது இன்று வளர்ந்து வந்திருக்கக் கூடிய நாகரீகம். தவிர்க்க முடியாதது. வரவேற்கத் தக்கதும்கூட. பணிப் பாதுகாப்பு எவ்வளவு முக்கியமோ அதைப் போலவே, அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகள் தரமானவர்களாக, திறமானவர்களாக, அறிஞர் களாக உருவாவதில் ஆசிரியர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

அவர்களுடைய பணி தரமானதாக, எல்லோருக்கும் ஏற்றம் தரத்தக்கதாக அமையவேண்டும். அப்பொழுதுதான் பணியினுடைய பாங்கு வளர்ச்சி அடைய முடியும். வெற்றி - பெற முடியும்; உயர்ந்த ஆசிரியர் பணி மேற்கொண்டிருக்கக் கூடியவர்கள், ஒரு நாட்டின் வரலாற்றைச் சீரமைக்க உதவி செய்கிறோம் என்ற எண்ணத்துடன் தம்முடைய பணியை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்ய வேண்டும்

வகுப்பறையில் உட்கார்ந்து படிக்கும் மாணாக்கன், நாளை நாட்டை ஆட்சி செய்பவனாக மாறமுடியும், மாற வேண்டும். அதற்குரிய வாயிலை பள்ளிக்கூடங்கள், சிறப்பாக, ஆசிரியர்கள் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

எனவே இன்றைய கல்வியுலகத்தினுடைய தடத்தில் நாம் செல்லுவது போதாது. அகன்ற, விரிவான, உயர்ந்த குறிக்கோளுடைய, லட்சியமுடைய சிறந்த நாட்டை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன், நாம் செல்லும் திசையை அகலப்படுத்தி மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். சிறந்த கல்வி உலகம், அறிஞர் உலகம் தோன்ற வேண்டும். அதுவே நாம் செல்ல வேண்டிய திசை.

# 5. உழைப்புச் சிந்தனைகள்

**(27–8–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

*இன்றைய மனிதன் படிக்கிறான்; பட்டதாரியாகிறான்; அறிஞன் ஆகிறான். அறிவின் பயன், என்ன செய்யவேண்டும் என்று அறிந்து செய்தலேயாம். செயல், உழைப்பின் பாற்பட்டது. உழைப்பற்ற செயல்களும் உண்டு. ஆயினும் உண்ணல், உடுத்தல், காதல் செய்தல் ஆகிய நுகர்ச்சிகளுக்கும் உழைப்பு இன்றியமையாதது.*

*ஏன்? மனிதன் விலங்குகளின்றும் வேறுபட்ட நிலை, உணவைத் தேடும் நிலையில்தான் தொடங்கியது. பின்னாளில் அவன் வளர, வளர உணவைத் தேடாமல் படைத்தான். இந்தக் காலக்கட்டத்தில் உழைப்பு வளர்ந்தது; கருவிகளுடன் மனிதனுக்குத் தொடர்பு ஏற்பட்டது. ஆக, உழைப்பே வாழ்வு என்றாகிறது. உழைப்பிற்கே உரியது வாழ்வு.*

*வாழ்வு, உழைப்பினாலாயது. வாழ்வினால் உழைப்பு வளர்கிறது. உண்ணும் உணவைத் தனது கடின உழைப்பால் - நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துப் படைத்து உண்பவர்கள் நல்லவர்கள்; உத்தமர்கள்! "உழைத்தால்தான் உணவு" என்ற சட்டம் வேண்டும் என்றான் ஜான்ஸ்மித்.*

*இந்தச் சட்டத்தை உலக நாடுகள் இயற்ற வேண்டும். அதற்கு நாம் எல்லாரும் கீழ்ப்படிய வேண்டும். அண்ணல் காந்தியடிகள் "உழைக்காமல் உண்பவர்கள் திருடர்கள்" என்றார்.*

*வாழ்க்கையின் இயல்பே உழைப்புத்தான்! அறி கருவிகள், செயற் கருவிகளுடன் கூடிய உடல் சார்ந்த வாழ்க்கையை உழைக்காமல் நடத்துவது யாங்ஙனம்? மனிதனின் இன்றியமையாத் தேவை உணவு. அடுத்தது காதல்.*

பழங்காலத்தில் உற்பத்தியுடன் கூடிய நாகரிகத் தொடக்கம் உழைப்பினாலேயே தொடங்கப் பெற்றது. காதல் வாழ்க்கையும் அப்படித்தான்! சோம்பலுடனும் சோர்வுடனும் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிடப் பெருமுயற்சி, கடின உழைப்புடன் ஒருநாள் வாழ்ந்தால்கூடப் போதும்! உழைப்புடன் கூடிய வாழ்க்கை, சொர்க்கத்தின் கதவைக்கூடத் தட்ட உதவும்.

ஒவ்வொருவரும் எந்தவிதமான தூண்டுதலுமின்றி இயல்பாகவே உழைக்கும் உணர்வு பெறவேண்டும். என்று மனிதகுலத்துக்கு உழைப்பு ஜீவ சுபாவமாக அமைகிறதோ, அன்றே "சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்" என்ற பொதுவுடைமைச் சமுதாயம் அமைய இயலும், முடியும்.

உழைப்பின் சின்னமாகிய காய்த்துப்போன கைகளும் கால்களும் பெறவேண்டும். அதுவே, உழைத்தலைக் காட்டும் சின்னம்! ஒருநாள் நபிகள் நாயகம், தம்மைக் காண வந்தவர்களுடன் கட்டித் தழுவியும், கைகளைப் பற்றிக் கண்ணில் ஒற்றியும் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் வழங்கிக் கொண்டிருந்தார்.

அப்படி வந்தவர்களுள் ஒருவரின் கையைப் பற்றிய அண்ணலார் நபிகள் நாயகம் நீண்ட நேரம் திரும்பத் திரும்ப அவர் கையைக் கண்களில் ஒற்றிக் கொண்டதோடன்றி, கண்களில் நீர்மல்க நின்றுகொண்டிருந்தார். மற்றவர்கள் காரணம் கேட்டபோது, "இவருடைய கைகளில் உழைத்துக் காய்த்துப் போன சுவடுகள் இருந்தன. அவை எனக்குப் பெருமகிழ்வைத் தந்தன" என்று நபிகள் நாயகம் அருளிச் செய்ததாக அவர் வரலாறு கூறுகிறது.

மனிதன் இன்ப நுகர்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் மட்டுமே திளைத்து வாழ்தல் கூடாது. இன்ப நுகர்ச்சியையும் மகிழ்ச்சியையும் வாழ்க்கையின் இலட்சியங்களாகக்

கொள்ளக்கூடாது. உழைப்பே வாழ்க்கையின் உயர் குறிக்கோளாக அமையவேண்டும். உழைப்பின் வழி, இன்ப நுகர்ச்சியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இது உறுதி.

உழைப்பு, உடலுக்கு உறுதி சேர்க்கும். அறிவு வளர்ச்சிக்கும் உதவும். இந்த உலகில் பலவற்றிற்கு எல்லை உண்டு. ஆனால், அறிவுக்கும் ஆளுமை நிறைந்த உழைக்கும் சக்திக்கும் எல்லையே கிடையாது. மூளை இயங்க, இயங்க அறிவு வளரும். உழைப்பு தொடர்ந்து இடையீடின்றி நிகழின் உழைக்கும் சக்தியும் வளரும்.

நம் ஒவ்வொருவருடனும் பிறப்பிலேயே கலந்திருப்பது உழைப்பாற்றல்; உழைக்கும் சக்தி. உழைப்பதே மனிதப் படைப்பின் நோக்கம். கால்களையும் கைகளையும் மற்றப் பொறிகளையும் முறையாக உழைப்பில் ஈடுபடுத்தினால் எல்லையே இல்லாத அளவுக்கு உழைத்துக்கொண்டே இருக்கலாம்.

அறிவு பூர்வமாகவும், விருப்பத்துடனும், ஆர்வத் துடனும் உழைத்தால் களைப்பு வாராது. மாறாகக் களிப் புணர்வே தோன்றும். ஓய்வு எடுக்கும் எண்ணமே தலை காட்டாது. உழைப்பாளிக்கு ஓய்வு, வேலையை மாற்றிக் கொள்வதுதான்.

நம்முடைய வாழ்நாளின் குறிக்கோள் இன்னதென நிர்ணயம் செய்துகொண்டு உறுதியுடன் தொடர்ந்து உழைக்க வேண்டும். அப்படி ஒரு குறிக்கோளுடன் ஒரு துறையில் வாழ்நாள் முழுதும் உழைத்தால்தான் அந்தக் குறிக்கோள் கைகூடும். நமது வாழ்க்கையும் உன்னத நிலையை அடையும். இங்ஙனம், துறைதோறும் நின்று உழைப்பவர்கள் எண்ணிக்கைக் கூடினால் நாடு வளரும். உழைப்பவர் உலகம் எளிதில் வெற்றி பெறும்.

உழைத்து வாழ்வது என்ற வாழ்க்கையின் கோட்பாடு அனைவருக்கும் பொருந்தும். உழைப்பு என்பது அனை

வருக்கும்—மனித குலம் முழுவதுக்கும் உரிய பொறுப்பு. மனித குலத்தில் யாராவது சிலர் உழைக்காமல் வாழ்ந்தால் அவர்களுடைய உழைப்பின் பங்கை மற்றவர்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்படும்.

இன்று இந்தப் போக்கு அதிகமாக வளர்ந்து வருகிறது. உழைக்காதவர்களும் அல்லது அரைகுறையாக உழைப்பவர்களும் அல்லது உழைப்பது போலப் பாவனை செய்பவர்களும் இன்று சமுதாயத்தில் பல்கிப் பெருகி வருகின்றனர். இஃது ஒரு சாபக்கேடு.

இந்தத் தவறான நடைமுறை பெரும்பாலும் படித்தவர்களிடையிலும் அதிகார வர்க்கத்தினரிடையிலும் பரவி வருகிறது. நம்முடைய நாட்டில் உணவுப் பற்றாக் குறை இல்லை. இரண்டு ஆண்டுகளுக்குரிய கையிருப்பு இருக்கிறது என்று உணவு அமைச்சகம் கூறுகிறது.

ஆனால், பணப் பற்றாக்குறை இருக்கிறது. கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இது ஏன்? உழுவோர் உலகம் தமது உழைப்பை முறையாகச் செய்து நாட்டைப் பாதுகாத்து வருகிறது. மற்ற துறைகளில் போதிய உழைப்புக் கிடைக்கவில்லை என்பது, தானே உய்த்துணரக்கூடிய கருத்து.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உழைப்பில் – எண்ணற்ற உயிர்த் தொகுதிகளின் உழைப்பில் வாழ்கிறோம். நாம் நமது ஒருநாள் வாழ்க்கைக்கு என்னென்ன தேவை என்று கணக்கிட்டால் நாம் இந்த உலகத்தில் மற்றவர்கள் அல்லது மற்றவை உழைப்பிலிருந்து நமது வாழ்க்கைக்கும் நுகர்வுக்கும் எவ்வளவு எடுத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்காவது நாம் திருப்பித் தரும் வகையில் உழைக்கின்றோமா? பலர் வாழ்க்கையில் இல்லை என்பதே விடையாக இருக்கிறது.

அப்படியானால், உழைக்காது வாழ்பவர்கள் பிறர் பங்கைத் திருடுகிறார்கள். அல்லது பிறருக்குச் சுமையாக

இருக்கிறார்கள். இவர்கள் நிலத்திற்கும் பாரம்! இவர்களை வையகம் சுமப்பதும் வம்பு. அதாவது பயனற்றவர்கள்.

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைவிடத் தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்திற்குப் பயன்படுவான். சமூகத்தில் ஒரு நிலையான இடத்தை முன்னேறிப் பெறுவான். இதுவே வாழும் நியதி.

ஆழ்கடலின் மேலே புல் பூண்டுகள் மிதக்கும், செத்தைகள் மிதக்கும். ஆனால், முத்து ஆழத்தில்தான் கிடக்கும். முத்தை விரும்புவோர் ஆழ்கடலில் மூச்சடக்கி மூழ்கித்தான் முத்தை எடுக்கவேண்டும். அதுபோல, வாழ்க்கையில் அரும் பயனையும் வெற்றியையும் விரும்புவோர் உழைத்தல் வேண்டும்.

உடம்பு, உழைப்பினாலாயது. உழைப்பதற்கே உரியது. இரும்பு, பயன்படுத்தப் பயன்படுத்த உறுதிப்படும். நீண்ட நாட்களுக்கும் பயன்படும். உழைப்பில் பயன்படுத்தப்படாத இரும்பு துருப்பிடித்து அழியும்; விலை மதிப்பையும் இழக்கும். இரும்பு துருப்பிடித்து அழிவதைவிட, உழைப்பில் பயன்படு வதன் மூலம் தேய்வதே மேல்.

மனிதராய்ப் பிறந்தோர் எல்லாரும் விரும்புவது மகிழ்ச்சி! மகிழ்ச்சியை எளிதாக அடைவதற்குரிய ஒரே வழி - மிகவும் இரகசியமான வழி - கடுமையாக உழைத்தலேயாம். அந்த மகிழ்ச்சியும் ஒரொருகால் உழைத்தலினால் கிடைக்காது. இடையீடின்றித் தொடர்ந்து உழைக்க வேண்டும்.

மனித குலத்தை வறுமைத்தீ சுட்டெரித்துக் கொண் டிருக்கிறது. இந்தத் தீயை அணைப்பதற்குரிய முயற்சியுடன் கடின உழைப்புத் தராவிடில் இந்தத் தீ அணையாது. இந்தியாவை, கடந்த பல நூறாண்டுகளாகப் பசித்தீ உள்ளீடழித்து வருகிறது.

பொதுவாக ஆண்கள் மத்தியில், அவர்களைப் பார்த்துப் பெண்கள் நகைப்பதைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். கோபம் வந்துவிடும். ஆனால் ஒரு பெண் பலநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து பரிகாசம் செய்து நகைத்துக் கொண்டே இருக்கிறாள். சூடு சுரணை வந்ததாகத் தெரியவில்லை. இனிமேலும் வருமா? வராது போனால் இந்தியா வளமான நாடாகாது. 2001-ல் புதிய நாட்டைக் காண்பதும் அரிது.

அந்தப் பெண் யார்? அவள்தான் நிலமென்னும் நல்லாள்! தன்னிடம் ஒன்றுமில்லை என்று எண்ணிச் சோம்ப லுடன் அயர்ந்து - செயலற்று இருப்பவர்களைப் பார்த்து நிலமென்னும் நல்லாள் நகைக்கின்றாள்! ஆம்! நமது நாட்டில் கோடிக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசு. பசுமைப் புரட்சிக்கு இலக்காகாத தரிசு. ஏன் இந்த அவலம்?

உழைப்பும் சுறுசுறுப்பும் இணையானவை. சுறு சுறுப்பு, உழைப்பைத் தூண்டும். ஆனால், சிலர் சுறுசுறுப்பாக இருப்பர்; முறையாக உழைக்க மாட்டார்கள். இவர்களுடைய சுறுசுறுப்பினால் என்ன பயன்? யாதொரு பயனும் இல்லை. அதுமட்டுமல்ல. எதைச் செய்வதில், எதைச் சாதனையாக மாற்றுவதில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

"வேலை செய்வது கடினம், ஆனால், எந்த வேலையும் கடினமன்று" - என்பது சைப்ரஸ் பழமொழி. வேலை செய்வது கடினமல்ல. வேலை செய்ய விருப்பம் இல்லாததால் வேலை கடினமாகத் தோன்றுகிறது.

ஆனால், ஆர்வத்துடன் அறிவறிந்த ஆள்வினையின் மூலம் எந்த வேலையையும் எளிதாகச் செய்து முடிக்க முடியும். ராபர்ட் புரூஸ் என்ற அரசன் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். பலமுறை போர்முனையில் தோற்றான். கடைசிப் போரில் தோற்று ஒரு குகையில் ஒளிந்திருந்தான்.

அந்தக் குகையில் ஒரு சிலந்தி, வலைபின்னிக் கொண் டிருந்தது. அடிக்கடி சிலந்தியின் பின்னலில் நூலிழை அறுந்து போயிற்று. ஆனால், சிலந்தி விடவில்லை. மீண்டும் மீண்டும் தொடர்ந்து வலை பின்னும் முயற்சியில் வெற்றி கண்டது.

இதனைக் கவனித்த அரசன் ராபர்ட் புரூஸ், எழுச்சி பெற்றான். போருக்கு ஆயத்தமானான்; போரிட்டான்; வெற்றியும் பெற்றான். அதுபோல் தொடர்ச்சியாக நடை பெறும் உழைப்பு, வெற்றியை ஈட்டித் தரும்.

இன்று வேலை செய்யும் நேரத்தைவிட, ஓய்வு, இளைப் பாறுதல் - இந்த வகையில்தான் அதிக நேரம் செலவழிக்கப் பெறுகிறது. ஒரு கடமையைச் செய்து முடிக்கும்வரை இளைப்பாறுதல் என்ன வேண்டியிருக்கிறது?

இன்று அலுவலக இடைநேரம், விடுப்பு தாராள மாக்கப்பட்டிருக்கும் நிலை, - இவ்வளவும் உழைப்புக்குப் பகை. பணிகளுக்கிடையில் இளைப்பாறுவது மிகவும் தவறு.

உழைப்பு, உடம்பை வலிமையுடையதாக்கும். உழைக்கும்போது வரும் இடையூறுகள் மனத்துக்கு வலிமை சேர்க்கும். அதனால் இடறினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உழைப்பினைத் தொடர்ந்து செய்தலுக்குரிய உறுதி தோன்றும்.

உழைப்பாளிகள் இழப்புக்கள், துன்பங்கள் இவை களைப் பற்றிக் கூடக் கலங்க மாட்டார்கள். "வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்?" என்பது அவர் களுடைய நெஞ்சுறுதியுடன் கூடிய பாங்கு. இத்தகு மனப் பாங்கினைப் பெற்றவர்களே உலகில் மகத்தான காரியங் களைச் செய்திருக்கிறார்கள்.

சாதனை செய்தவர்களின் வரலாறுகள் உழைப்பின் அருமையை உணர்த்துகின்றன. "பெரிய மனிதர்கள் உச்ச நிலையை அடைந்தார்கள் என்றால், அவர்கள் திடீர் என்று தாவிக் குதிக்கவில்லை. மற்றவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்

போது, அவர்கள் உழைத்து முன்னேறினார்கள்" என்று லாங்பெலோ கூறினார். நமது ஔவையாரும்,

"மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

என்றார். குறிக்கோளிலேயே கவனம் செலுத்துபவர்கள் உயர்வு, தாழ்வு, மானம், அவமானம் பார்க்க மாட்டார்கள். எவர் தீமை செய்தாலும் அத்தீமையைக் கண்டு அஞ்சிப் பணியிலிருந்து - உழைப்பிலிருந்து விலகார். காரியம் முடியும் வரை தூங்க மாட்டார்கள். பசியைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். தான் எடுத்துக் கொண்ட இலட்சியத்தை நோக்கியே பயணம் செய்வார்கள்.

உழைப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அறிவுழைப்பு. மற்றொன்று உடலுழைப்பு. இவ்விரண்டு உழைப்புக்களிலும் உயர்ந்தது, தாழ்ந்தது என்பது கிடையாது. ஆனால் காலப்போக்கில் உடல் உழைப்பை இரண்டாம் நிலைக்குத் தள்ளியிருப்பதை இன்றைய சமூக அமைப்பு உணர்த்துகிறது.

அறிவுழைப்பாளிகள் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். இது நெறிமுறையன்று. அறிவுழைப்பும் உடலுழைப்பும் இணைந்து செயல்பட்டால்தான் நாடு வளரும். இன்று உடலுழைப்பு குறைத்து மதிப்பிடப் படுவதால் அரசுப் பணிமனைகளில் ஏவலர்களாகக் கூடப் பணி செய்ய முன் வருகின்றனர். ஆனால் தோட்டப் பண்ணை அமைக்க முன் வருவதில்லை.

வாழ்வையும் வேலையையும் மதிக்காமல் வெறுக்கிறார்கள். இவர்களுக்கு உறுதிப்பாடு இல்லை. அனுபவித்த வரை இன்பம் என்ற (ஹீடனிஸ்டிக்) அபிப்பிராயத்தில் நடைலையாக வாழ்கின்றனர். இது மிகவும் ஆபத்தான தீமை.

இந்தத் திசையில் செல்லும் இளைய பாரதத்தை மடை மாற்றி இயற்கையான இயல்பூக்கம் நிறைந்த படைப்பாளி களாக வாழும் நெறிக்கு அழைத்துச் செல்ல வேண்டும். நாம் எல்லாருமே அந்தத் திசையில்தான் செல்லவேண்டும்.

எல்லாம் வல்ல இறைவனே உழைப்புக்கு மதிப்புக் கொடுத்து, திருநாவுக்கரசருக்கு வாசியில்லாக் காசு கொடுத் தான்! திருநாவுக்கரசர் செய்தது கைத் திருத்தொண்டு. பார்வாழத் திருவீதிப் பணி செய்தது - அதாவது தெருவைச் சுத்தம் செய்தது.

மதுரையில் எழுந்தருளியுள்ள ஆலவாயண்ணல், வைகையாற்றங்கரையில் கொற்றாளாய்க் கூலிக்கு மண் சுமந்த வரலாறு, உழைப்பின் உயர்வை உணர்த்துவதாகும். இளைய பாரதமே எழு! விழித்தெழு! குறிக்கோளை அடையும் அளவும் நிற்காதே! உழைத்து வரலாறு படைப்பீர்களாக!

இன்றைய இளைஞர்கள் பலர் பத்தாவது படித்து விட்டாலே மண்வெட்டி தூக்க விரும்புவதில்லை. இது மிகவும் தவறு. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று வள்ளுவத்தை உணர்தல் வேண்டும். உடலுழைப்பு இகழப் படும் நாட்டில் தேக்கமும், அழிவும் உண்டாகி வளர்ச்சிப் பாதை கடினமாகி விடுகிறது. உழைப்பு இகழப்படும் சமுதாயத்தில் பண்டப் புழக்கம் குறையும்.

அதனால் வலுவான வாழ்வு இல்லை. கலை இல்லை; மகிழ்ச்சி இல்லை. உழைப்பு விரும்பிப் போற்றப்பட்டால் வாழ்வும் ஒளியும் வளர்ந்து உழைப்பே இன்சுவையாக மாறும்; அளவற்ற மகிழ்ச்சியும் உழைப்பு வேள்வியும் நடை பெறும்.

ஆதலால், அறிவுழைப்பாளிகள் ஏழைகள் செய்யும் உடலுழைப்பைச் செய்ய முன்வர வேண்டும். உடல் உழைப்பாளிகள் அறிவாளிகளுடன், அறிவியல் மேதை

களுடன் கலந்து உறவாடித் தங்கள் உடலுழைப்பை அறிவியல் சார்ந்ததாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

அறிவுழைப்பாளிகளும் உடலுழைப்பாளிகளும் ஒன்று சேர்ந்து உழைத்து உலகியலை நடத்தும் போதுதான் மனித குலம் ஒன்றுபடும்; அற்புதங்கள் நிகழும்.

நம்மிடத்தில், நம்முடைய சமுதாயத்தில், பல தீமைகளை அகற்ற உழைப்பு உதவி செய்யும். "சின்னச் சின்னக் கவலைகளால் அளிக்கப்படும் தொந்தரவு, குடித்தல், புகை பிடித்தல், காமாந்தகாரனாகத் திரிதல், வறுமையில் கிடந்து உழலுதல், அழுக்காறு வயப்பட்டுப் புழுங்குதல்;

"வறுமொழியாளருடன், வம்பப்பரத்தருடன் கூடித் திரிதல், கோள் சொல்லுதல், பயனில பேசுதல், சிறுசிறு கலகங்களைத் தூண்டி விடுதல் - செய்தல் முதலிய தீமைகள் உழைப்பால் விலகும்" என்பது வால்டேர் கருத்து. இன்றைய தீமைகளுக்கெல்லாம் அடிப்படை உழைப்பின்மையேயாம்.

மனித சமுதாயத்தின் பிணிகளையும், துயரங்களையும் போக்கக்கூடிய தனிச் சிறப்பான மருந்து உழைப்பேயாம். அந்த உழைப்பும் "உழைப்பு, உழைப்பு" என நேர்மையான உழைப்பாக இருக்க வேண்டும். உழைப்பதற்கு உரிய ஒவ்வொரு வினாடியும் விலை மதிப்புடையது.

அந்த நேரத்தில் அரட்டையடிப்பது, செய்தித்தாள்கள் படிப்பது, காரணமின்றி அங்குமிங்குமாகச் சுற்றுவது ஆகியன செய்யத் தகாதன. இந்த உலகத் தீமைகளுக்கு எல்லாம் மருந்து கடின உழைப்பேயாம். இன்று "உழைப்பு நாள்கள்" பல வீணாகின்றன. பொழுதெல்லாம் வீணாகின்றன.

முயற்சிக்கும் உழைப்புக்கும் சில தடைகள் வருவதும் உண்டு. முதலில் நிற்கும் பெரியதடை ஊழ். ஊழ் - விதி - வினை - தெய்வம் என்பன ஒரு பொருள் சொற்கள். நமது மக்களில் பலர் ஊழின்மீது அளவற்ற நம்பிக்கை வைத்து உழைக்காமலே வாழ்கின்றனர்.

உழைத்தாலும் ஊழின் துணை இல்லாது போனால் காரியம் கை கூடாது என்ற கருத்து நமக்கு இருக்கும்வரை ஊழை வெற்றி பெற இயலாது. "அடுத்து முயன்றாலும் ஆகும் நாளிலேயே ஆகும்" என்பது அவர்கள் கூறும் பழமொழி. ஆனால் இது உண்மையன்று.

ஒரு காரியம் நிறைவேற எவ்வளவு உழைப்புத் தேவைப் படும் என்று ஓர் அளவிருக்கும். அதையும் சூழ்நிலையையும் ஆராய்ந்தறிந்து கணக்கிட்டுக் கொண்டு முறையாக அறிவார்ந்த உழைப்பு செய்யப் பெறின், வெற்றி கிடைக்கும். ஊழ், தடையாக இருக்காது. ஊழினை மாற்றுவதற்கே பிறப்பு. ஊழினை வெற்றிபெறப் பழக்கங்களை, வழக்கங்களை, வெற்றிபெற வேண்டும். நாள்தோறும் புத்துயிர்ப்பு பெற வேண்டும்.

அடுத்து உழைப்புக்கு ஒரு பெரிய தடை கடவுள் நம்பிக்கை - கடவுள் வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய தவறான நம்பிக்கை. கடவுள் நம்பிக்கை தேவை கடவுள் வழிபாடும் தேவை. ஆயினும் கடவுளே எல்லா வற்றையும் தருவான் என்று விண்ணப்பித்தலில் என்ன பயன்?

கடவுள் பருப்பொருள் எதையும் தரமாட்டான். தன் நம்பிக்கை, சோர்விலா மனம், உழைப்புக்குரிய ஆற்றல், இவையே கடவுளால் ஆன்மாக்களுக்கு வழங்கப் பெறுபவை. ஆதலால், கடவுள் நம்பிக்கையோ, வழிபாடோ மட்டும் வெற்றியைத் தந்துவிடும் என்று வாளா இருத்தல் கூடாது. உழைப்பாளர்களின் முன்னேதான் கடவுள் வாய்ப்புக்களை அருளிச் செய்கிறான்.

ஆதலால் ஊழ், நல்ல நாள், கெட்ட நாள் என்ற எண்ணத்தில் உழைப்பை ஒத்திப்போடக் கூடாது. உழைப்பைத் தவிர்க்கக் கூடாது. கடின உழைப்பே கடவுள் பக்தியின் அடையாளம். உழைப்பின் பயனை, ஆக்கத்தை,

டு-XVI.22.

மற்றவர்க்கும் வழங்கி வாழ்விப்பது ஆக்கம். உழைப்பு நிறைந்த வாழ்க்கையே நோன்பு.

உழைக்கும் கால்களே தவம் செய்யும் தாள்கள் என்றது புறநானூறு. உழைக்கும் எருதே நந்தி. கடவுட்கொடியின் சின்னம். ஏறுதான் இறைவன் ஊர்தி, எருது உழைப்பின் சின்னம் “உழுத நோன்பகடு அழிதின்றாங்கு” என்பது புறநானூறு.

உழைப்புக்கு ஊக்கம் தேவை. ஊக்கமே உடைமை என்று கூறும் வள்ளுவம். “உள்ளம் உடைமை உடைமை” ஒருவன் செல்வந்தனாய் இருப்பதை விட உழைப்பாளியாக இருப்பது உயர்வு. செல்வம் அழியும். உழைப்புத் திறன் அழியாது. ஊக்கம் என்பது உள்ள எழுச்சி, பணிமேற் செல்வதற்குரிய பாங்கு. ஔவைப் பாட்டியாரும் “ஊக்கமது கைவிடேல்” என்றார்.

உழைத்தால் முன்னேறலாம். இது பொதுவிதி. ஆனால் நம்முடைய நாட்டில், உழைத்தாலும் முன்னேற இயல வில்லை. ஏன்? பெரும்பாலோர் சொத்து இல்லாதவர்கள். சொத்துடைமையாளரைச் சார்ந்தே வாழவேண்டியிருக்கிறது. பிழைப்புக்கு வழி கூலியுழைப்பே.

சுரண்டுகிற பொருளாதாரம் உள்ளவரையில் உழைப்பு பூரண ஆக்கத்தைத் தராது. செல்வம், செல்வமுடையோர் இடத்திலேயே சேருகிறது. ஏழைகள் மேலும் ஏழைகளா கின்றனர்.

ஆனால் இது உழைப்பின் குறையன்று செல்வரிடம் சேரும் செல்வம் கூடப் பாட்டாளிகளின் உழைப்பின் விளைவே. பொருளாதார சுதந்திரமுடைய கூட்டுடைமைச் சமுதாய அமைப்புத் தோன்றினால்தான், வளம்பெற முடியும். அதுவரையில் மனித உழைப்பு ஆதிக்க சக்திகளால் சுரண்டப் பெறுவது நடந்தே தீரும்.

ஆதலால், இன்றைய சூழ்நிலையில் கடுமையாக உழைப்பவர்கள் பூரண வாழ்வு வாழ இயலவில்லை. இது விநோதமான - பைத்தியக்காரத்தனமான சமுதாய அமைப்பு. அரசாங்க இயந்திரத்தை, சந்தைகளை, ஆளுமை செய்யும் பொறுப்பும், அதிகாரமும் என்று உழைப்பாளிகள் கைக்கு வருகிறதோ அன்றுதான் உழைப்பாளிகள் சிறப்பாக வாழமுடியும்.

புவியை நடத்தும் அதிகாரம் உழைக்கும் மக்கள் கைக்கு வரவேண்டும். அப்போதுதான் இந்த வையம் பொதுவில் நடத்தப் பெறும்.

உழைப்பின் அருமைப்பாட்டை உலகச் சிந்தனை யாளர்கள் ஒரு குரலில் புகழ்கின்றனர். உன் கண் முன்னே பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள மனித நாகரீகத்தைப் பார்! உன் முன்னே இருக்கும் மாடமாளிகை, கூட கோபுரங்களைப்பார். அவ்வளவும் ஆக்கம்! சென்ற காலத் தலைமுறையினுடைய படைப்பு!

இந்த மகத்தான சாதனையைப் பார்த்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பிரமித்து நிற்கிறான்! விண்ணில் உள்ள விண்மீன்கள் உழைப்பாளிகளின் உடலில் தோன்றி யுள்ள கொப்புளங்கள், என்று பாடுகின்றான்.

"அறிவற்றவன் சிரத்தையுடன் கூடிய உழைப்பை இழந்தவன், கெடுப்பார் இல்லாமலே கெட்டுப்போகிறான்" என்றார் விவேகானந்தர்.

பல சமயங்களில் வேலை செய்வது கடினமாக இருக் கிறது. இது ஒரு மனோ நிலை. சோம்பலுக்கும் சுக வாழ்வுக்கும் அடிமைபட்ட மனோ நிலை. ஆனால் உண்மையில் நோக்கினால் எந்த ஒரு வேலையும் கடினமில்லை. "ஒரு முயற்சியில் - உழைப்பில் வெற்றிபெற அவசரமும் காட்டக் கூடாது. அது போழ்து, பணி இடையில் இளைப்பாறுவதும் கூடாது. தொடர்நிலை உழைப்பே வெற்றியை தரும்" என்றான் கதே.

சிலர் அதிர்ஷ்டத்தை நம்பி உழைப்பில் சோர்கின்றனர். அல்லது உழைப்பைக் கை விடுகின்றனர். இது முற்றிலும் தவறு. அதிர்ஷ்டத்திற்கே உழைப்புத்தான் வாயில் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

நம்மைச் சூழ்ந்து வரும் கவலைகளிலிருந்து விடுதலை பெற, உழைப்பே சாதனம். கவலையற்றவராகவும், மகிழ்ச்சி யுடையவராகவும், நல்லவராகவும் வாழ்வதற்கு உழைப்பே துணை; சாதனம்.

எழுக! விழித்தெழுக! கடின உழைப்பிற்கு ஆயத்த மாகுக! உழைப்பே வாழ்க்கையின் குறிக்கோள் எனத் தெளிக! நாளும் பயனுள்ள வகையில் உழைத்திடுவோம்! வாழ்க்கை பயனுறுதல் வேண்டும். உழைப்பு, படைப்புக்குப் பயன்படுதல் வேண்டும்.

இந்தியாவை நாடா வளத்ததாக உருவாக்கும் உழைப் பினை அனைவரும் மேற்கொள்வோம்! உழைப்பை உயர்வு செய்வோம்! உழைப்பாளிகளைப் போற்றுவோம்! உழைத்து வாழ்வதே வாழ்வு என்ற திசையில் செல்வோம்!

நாம் இப்போது செல்லும் பாதை - தடம் - உழைப் பின்றியே பணம் படைக்கும் முயற்சி! சுரண்டும் பொருளா தாரக் கொள்கைத் தடம்! இந்தத் திசை நலம் தராது! உழைப்பு - பூரண உழைப்பு என்ற தடத்தில் செல்வோம்! உழைப்போம்! உற்பத்தியைப் பெருக்குவோம்! உழைத்து வாழ்தல் பண்பாடு; நாகரீகம்!

## 4. வளர்ச்சி — மாற்றம்

**(3–9–1994 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை)**

மனிதகுலத்தின் வாழ்க்கை ஓயாத மாற்றத்திற்குரியது. மாற்றத்திற்குக் காரணம் வளர்ச்சி. வளர்ச்சிக்கு உந்துசக்தி - ஒன்று, காலத்தின் பரிணாம வளர்ச்சி. பிறிதொன்று மாற்றம்.

மாற்றங்கள் வளர்ச்சிக்குத் துணை; அரண். எந்த ஒன்றும் தேங்கிவிட்டால் அழிந்து விடும், பயனற்றுப் போகும்.

நாள்தோறும் ஊற்றெடுக்கும் கிணறுகளின் தண்ணீரே பயன்படுகிறது. இடையீடில்லாது ஓடிக்கொண்டேயிருக்கிற ஆறே ஜீவநதி; மனிதகுலத்துக்குப் பயன்படுவது. புண்ணிய தீர்த்தங்களாகக்கூட இடையீடில்லாது ஓடிக் கொண்டே யிருக்கிற ஆறுகளே அங்கீகரிக்கப்படுகின்றன.

தேங்குவன எல்லாம் குட்டை. குட்டையில் கிடக்கும் தண்ணீர் பயன்படாது. பயன்படாதது மட்டுமின்றி நோயும் தரும். ஆதலால், மனிதகுலம் வளர்ச்சியடைய வேண்டும். வளர்ச்சி, மாற்றத்தை உருவாக்கும்.

மனிதகுலம், மாற்றங்களை விரும்பினால் வளர்ச்சி பொருந்திய வாழ்க்கை முறையை அவாவுதல் வேண்டும். இந்த உலகம் எப்படி இருந்தது என்று எவரும் கூறலாம். ஆனால், இந்த உலகம் எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணுகின்ற, சொல்லுகின்ற, அமைக்கின்ற திசையில் மக்கள் செல்லவேண்டும்.

அறிவு தேக்கமடைந்து போனால், உலக வாழ்க்கை ஸ்தம்பித்துவிடும். அறிவு வளரும் தன்மையது. நாள்தோறும் அறிவை வளர்த்துக் கொள்ளும் சமுதாயத்தில்தான் வளர்ச்சிக்கு வழி உண்டு; வாயில்கள் உண்டு. மாற்றங்களும் ஏற்படும்.

வளரும் சமுதாயத்தில் பரிணாம வளர்ச்சியில் தோன்றுவதே புதுமை. புதுமை செயற்கையன்று. இயல்பாக வாழ்க்கைப் போக்கில் - பரிணாம வளர்ச்சியில் தோன்றும் புதுமைகள். விவாதங்களைக் கடந்தவை. “முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய்” என்றார் மாணிக்கவாசகர்.

பின்னைப் புதுமை, இனி எதிர்வரும் புதுமை. நம்முடைய சமுதாயத்தில் புதுமையை வரவேற்கும் இயல்

பில்லாதவர்கள் பல ஆயிரம் பேர்கள் உண்டு. அவர்களையும் கடந்துதான் புதுமை வளர்ந்து வருகிறது; இனியும் வளரும். ஆனாலும் நாட்டில் வளர்ச்சியும் மாற்றங்களும் குறைவு.

நாம் நாளை வாழ்வோம் என்ற நம்பிக்கைகூடப் பெறாதவர்களால் நிலையாமைத் தத்துவம் பிழைபட உணர்த்தப்பட்டுள்ளது. உலகத்துக்கும் உனக்கும் உள்ள உறவு நிலையில்லாதது. ஆயினும், உலகமும் உன்னுடைய வழி வழி தலைமுறைகளும் வாழப்போவது உறுதி.

ஆதலால், நமக்கும் சரி, அடுத்த தலைமுறையினருக்கும் சரி, எதிர்கால நம்பிக்கை வேண்டும். வளர்ச்சியுடன் கூடிய மாறுதல் தேவை. சென்ற காலத்தைவிட எதிர்காலம் விழுமிய சிறப்புடையதாக இருக்கவேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளம். "இனி எதிர்காலத்தின் சிறப்பும்" என்பார் சேக்கிழார். பாவேந்தன் பாரதிதாசனும், "புதியதோர் உலகம் செய்வோம்" என்றான்.

ஆதலால், இப்போது நாம் சென்று கொண்டிருக்கிற - நிறைவான வளர்ச்சியும் மாற்றமும் இல்லாத திசையில் தொடர்ந்து செல்லக்கூடாது. புறத்தோற்றத்தில் மட்டுமே புதுமை காட்டும் போக்கும் அறவே கூடாது. மனிதனே மாற வேண்டும். மனிதகுலம் மாறவேண்டும். அன்றாடம், வளர்ச்சியும் மாற்றமும் பொருந்திய திசையில் செல்ல வேண்டும்.

வளர்ச்சி—மாற்றம் என்றால் என்ன? மனிதனின் அறிவு வளரவேண்டும். வளர்ந்து வரும் உலகியலில், மானுடவியலில் எத்தனை எத்தனையோ அறைகூவல்கள் தோன்றுகின்றன. அவற்றைத் தாக்குப்பிடித்து நின்று போராடி முன்னேற வேண்டும்.

அறிவின் வளர்ச்சிக்குப் புத்தம் புதிய நூல்களைக் கற்கவேண்டும். இலக்கியங்கள், புராணங்கள் மிகப் பழமை யானவைகளைக் கற்கவேண்டும். அப்படிக் கற்பது

வாழ்நிலையின் அடித்தளத்தை வலுப்படுத்தும் - வேர்கள் மரத்தை வலுப்படுத்துவது போல!

அறிவியலில் புத்தம் புதிய நூல்களைக் கற்கவேண்டும். அறிவியல், அனுபவம் வளர வளர வளரும் தன்மையுடையது. அறிவியல் முற்றாக உலகியலை, உடலியலைச் சார்ந்தது. இந்த அறிவியல் உலகந்தழீஇயது என்றுகூடக் கூறலாம்.

கலாச்சாரம், பண்பாடு முதலியன நாடுகள் தோறும் மாறும்! இவை தலைமுறை தலைமுறையாக வருவன. இப்படி வழி வழி கலாச்சாரம், பண்பாடு ஆகியன வளரும் புதிய சமுதாயத்திற்கு மாறுபடாது. சென்ற கால வரலாற்றில் மாறுபட்டதில்லை.

ஒரு பழமை, புதுமையை ஈன்றுதர மறுக்குமாயின் அந்தப் பழமையில் ஏதோ குறையிருப்பதாகத்தான் பொருள். ஒரே வழி பழமைவாதிகள் தங்களுடைய அறியாமையை மறைத்துக்கொள்ளப் புதிய சிந்தனையை, புதியவற்றை எதிர்ப்பார்கள்.

கிரேக்க ஞானி சாக்ரட்டீஸ், கலீலியோ, ஏசுபெருமான், அப்பரடிகள், வள்ளலார் ஆகியோர் வரலாறுகள் இதற்குச் சான்றாகும். ஆனாலும் அவர்கள் கண்ட புதுமைதான் வென்றது.

அறிவு வளரும்போதே, ஆன்மாவும் ஒருங்கிணைந்து வளர வேண்டும். ஆன்மாவை வளர்த்துப் பேணிக்காக்கும் அறிவே, அறிவு. ஆன்மாவுக்குத் தொடர்பில்லாத அறிவு, வளர்ச்சிக்குத் துணை செய்யாது; மாற்றங்களுக்கும் காரணமாக அமையாது.

சிந்தனையில் வளர்ச்சி, அறிவில் வளர்ச்சி, அறிவியலில் வளர்ச்சி, வாழ் நிலையில் வளர்ச்சி, சமூகத்தில் வளர்ச்சி இவையெல்லாம் ஒருங்கிணைந்த நிலையில் நிகழுமாயின் மாற்றங்கள் ஏற்படும்.

வளர்ச்சியும் மாற்றங்களுமே மனிதகுல மேம்பாட்டுக்கு உந்துசக்திகள். மனிதன் பழக்கங்களுக்கும் வழக்கங்களுக்கும் அடிமைப்படுதல் கூடாது.

நாளும் மனிதன், புத்துயிர்ப்புப் பெறவேண்டும்; புது மனிதனாகப் பிறப்பெடுக்க வேண்டும். மனிதன் உழுத சாலிலேயே உழுது கொண்டிருக்கும் வரை, நிலம் வளம் அடையாது.

அதுபோலவே படித்த சுலோகங்களையும் கோஷங் களையும் திரும்பத் திரும்பப் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தால் வளர்ச்சி பாதிக்கும். வளர்ச்சி பாதிப் படைவதன் மூலம், மாற்றங்களும் ஏற்படாது.

அதனால், சாதி, சம்பிரதாய, மூடப் பழக்கங்களும் நிறைந்து வறுமையில் கிடந்துழலும் கூட்டமாக மக்கள் மாறுவர். இது நாட்டுக்கு ஏற்றதல்ல.

ஆதலால், ஒவ்வொரு நாளும் சென்ற காலத்திலிருந்து படிப்பினைகளை எடுத்துக் கொண்டு, நாளையை நோக்கி நடைபோட வேண்டும். வளர்ச்சி, முன்னேற்றம் என்பது நிற்பதும் அல்ல; பக்கவாட்டில் அசைந்து கொடுப்பதுவும் அல்ல. எதிர்காலத்தை நோக்கி நடைபோடுவதுதான் முன்னேற்றம்; வளர்ச்சி; மாற்றம்!

இந்தியா பழமை வாய்ந்த ஒரு நாடு. இந்திய நாகரிகத்தின் தொடக்கம் சொல்லமுடியாத அளவுக்குப் பழமை உடையது. மிகத் தொன்மை வாய்ந்த காலத்திலேயே மொழி, இலக்கிய ஆக்கங்களைப் பெற்றுச் சிறந்து விளங்கிய நாடு.

குறிப்பாகத் தமிழ் நாகரிகத்தின் பழமை, சிந்துவெளி நாகரிகத்தில் தொடங்குகிறது. தமிழ் நாகரிகம் - மெள்ள வளர்ந்து வந்து, இந்திய வரலாற்றுக்குத் தனது பங்கைச் செலுத்திச் செழுமைப்படுத்தி உள்ளது. இலக்கியங்கள்

தோன்றிப் பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் இலக்கணம் தோன்றும் என்பர் மொழியியலார்.

இன்று தமிழில் உள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் 3500 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்பது அறிஞர் கருத்து.

அப்படியானால், அக்காலத்திற்கு முன்பே தமிழில் பல இலக்கியங்கள் தோன்றித் தமிழரிடையில் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது; தமிழர் தம் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும், தமிழர் வாழ்வு உண்மையான வளர்ச்சியை அடைந்ததா? மாற்றங்களைப் பெற்றதா? என்றால், இல்லை.

ஏன்? முதல் தடை பழமையின் மீது பாசம். இரண்டாவது தடை, படையெடுத்து வந்த அயல் வழக்குகளை ஆய்வு செய்யாமல் அப்படியே ஏற்பது. குறிப்பாகச் சொல்லப் போனால், இன்று தமிழர்கள் சாமர்த்தியசாலிகளாக விளங்குகின்றனர்.

சாமர்த்தியம் என்ற சொல், தமிழ்ச் சொல் அல்ல. ஆனால் பெருவழக்காக வழங்குகின்றது. சாமர்த்தியம் என்ற சொல்லுக்கு நேரிடையான தமிழ்ச் சொல் இல்லை. சாமர்த்தியம் என்பது வேறு; திறமை என்பது வேறு. திறமை, நல்ல காரியங்களுக்குப் பயன்படுவது.

தமிழ் மொழிக்கும், பழங்காலத் தமிழர்களுக்கும் சாமர்த்தியம் இருந்ததில்லை. ஆனால், இன்றைய தமிழர் களுக்குச் சாமர்த்தியம் கை வந்த கலையாக இருக்கிறது. இன்று தமிழரில் பலர் சாமர்த்தியத்திலேயே வாழ - வாழ்ந்து முடிக்க விரும்புகின்றனர்.

இன்று யாரும் சாதனைகளைப் பற்றி, மனித உறவு களைப் பற்றி, சமூக மேம்பாடுகளைப் பற்றிக் கவலைப்படுவ தாகத் தெரியவில்லை. இன்று நம்மிடையில் சாமர்த்திய சாலிகள் பலர் உண்டு. திறமைசாலிகள் மிகவும் குறைவு.

சாதனைகள் செய்வதன் மூலம் புவியை நடத்து கிறவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. குறைபாடுகளைக் களையும் நோக்கத்தைவிட குறைபாடுகளை நியாயப்படுத்தும் வகையில் சமாதானம் கூறிவிட்டு நழுவிவிடுபவர்களே இன்று மிகுதி.

இன்று எங்கும் கேட்கும் முழக்கொலி "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!", "ஒன்றே குலம், ஒருவனே தேவன்!" என்பவை. ஆனால் உண்மையில் நடப்பதோ, நாளும் சாதிச் சங்கங்களும் அவ்வழி கலகங்களும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

மத நிறுவனங்கள் அனுட்டானத்தைவிட, பிரச்சாரப் புயலில் சிக்கித் தவிக்கின்றன. நாடோ, ஊரோ, வீடோ இன்று ஒன்றாக - ஒருருவாகவில்லை. கிராமத்தின் எல்லையில் நம்மை வரவேற்பது பசுமையும், இலைகளும், பூக்களும் நிறைந்த மரங்கள் அல்ல. கட்சிக் கொடிகளே வரவேற் கின்றன.

உள் அமைப்பு ஜனநாயகத்தையும், வளர்ச்சியையும், மாற்றத்தையும் உத்தியாகக் கொள்ளாது தேக்கமடைந்ததால் ஏற்பட்ட கோப தாபங்களால் பிரசவிக்கப் பெற்றவைகளே இன்றுள்ள பெரும்பான்மையான கட்சிகள்.

மதவாதிகள் மட்டமா, என்ன? தெருவுக்கு ஒரு கோயில்! சாதிக்கு ஒரு சாமி! இவை எல்லாமாக ஒன்று சேர்ந்து வாழ்க்கையில் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளன; வளர்ச்சிக்குக் குந்தகம் செய்கின்றன; மாற்றங்களுக்குத் தடையாக உள்ளன.

அருமைப் பெரியோர்களே! இளைய பாரதத்தினரே! இந்தப் பாதையில்தான் நாம் தொடர்ந்து, செல்ல வேண்டுமா? வேண்டாம்! வேண்டாம்! வளர்ச்சியும் மாற்றமும் பொருந்திய பாதையில் செல்ல அடியெடுத்து வைப்போம்! நடப்போம்! தொடர்ந்து நடப்போம்!

மனிதன் மாறாவிட்டால் இந்த உலகில் வளர்ச்சி இல்லை. மாற்றங்களும் நிகழா. பல நாடுகளில் இன்னமும் வளர்ச்சியடையாத மாந்தர்கள் உள்ளனர். அதற்குக் காரணம் மனிதர்களின் மாற்றத்திற்குரிய பணிகளில் ஈடுபடும் அறிஞர்கள் தோன்றவில்லை.

ஒருவகையில் இந்தியா புண்ணியம் செய்த பூமி! இங்கு, சிந்தனையாளர்கள் பலர் தோன்றித் திரும்பத் திரும்ப மக்களிடம் மாற்றத்தை உண்டாக்க அரும்பாடுபட்டனர்.

கபீர்தாசரிலிருந்து கவிஞர் கண்ணதாசன் வரையில், பசவேசர் முதல் பாரதிவரை, குருநானக் முதல் குணங்குடி மஸ்தான் வரை, கணியன் பூங்குன்றன் முதல் தாகூர்வரை, அப்பரடிகள் முதல் அரதத்த சிவாச்சாரியார் வரை, வேமண்ணா முதல் வள்ளலார் வரை என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆயினும், இவர்களுடைய முயற்சியில் தேக்கம் சற்று அகன்றதே தவிர, மாற்றங்கள் முழுமையாக ஏற்படவில்லை.

அண்ணல் காந்தியடிகளும், அமரர் நேருஜியும் சமூக மாற்றத்திற்குக் கடுமையாக உழைத்தார்கள். தீண்டாமையை அகற்றவும் சமயங்களிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அண்ணல் காந்தியடிகள் தீவிரமாக முயன்றார்.

ஆயினும் சமய அடிப்படையில், இவற்றுக்கு எதிராகத் தூண்டப்படும் செயல்களைத் தவிர்க்க இயலவில்லை. அதுமட்டுமா? அண்ணல் காந்தியடிகளின் உயிரையே மதவெறி குடித்துவிட்டது. அண்ணல் காந்தியடிகள் காட்டிய திசையில் பாரதம் செல்ல மறுத்துவிட்டது. மறுத்ததோடன்றி அதற்கு எதிர்த் திசையில் சென்றது; சென்று கொண்டிருக் கிறது.

இன்று எங்குப் பார்த்தாலும் சாதிப் பிணக்குகள், மதச் சண்டைகள் நடைபெறுகின்றன. இதனால் இந்தியாவின் வளர்ச்சி பாதிக்கிறது. மாற்றங்கள் நிகழவில்லை! இன்றும்

பலர் பழைய யுகத்திலேயே வாழ்கின்றனர். புதுயுகக் காற்றைச் சுவாசிக்க மறுக்கின்றனர்.

ஒரு காலத்தில் அரசியற் கட்சிகள் சாதி, மதங்களைச் சார்ந்து இருப்பதை விரும்பவில்லை, மறுத்தன. இன்று அரசியற் கட்சிகள் வெளிப்படையாகவே சாதிகளை, மதங் களை, அவற்றிற்கிடையே மோதல்கள் ஏற்படுவதை விரும்பி வரவேற்கின்றன. இந்தக் கொடுமையிலிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சாதியை, மதத்தை அரசியல் காரண மாகப் பயன்படுத்துவதைத் தேர்தல் ஆணையம் தடை செய்ய வேண்டும். கலாச்சாரம் என்ற போர்வையில் சாதி, மத வெறுப்புணர்வுகள் தலையெடுத்தாலும் தடைசெய்ய வேண்டும். அனுமதிக்கக் கூடாது.

மனிதனின் சிந்தனைக்கு விலங்கு போடாமல் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்பட அனுமதித்தால் வளர்ச்சி தோன்றும்; மாறுதல்களும் ஏற்படும். மனிதன் பயத்திலிருந்து விடுதலை பெற்று, பகுத்தறிவுத் தடத்தில் என்று செல்லத் தலைப்படுகின்றானோ, அன்றே வளர்ச்சிக்குரிய வாயில் தோன்றும்; தென்படும்.

இருட்டறையிலிருந்து என்று வெளியுலகுக்கு மனிதன் வருகின்றானோ அன்றுதான் மனிதன் உண்மையிலேயே மாறுவான். வளர்ச்சியும் நிகழும்; மாற்றங்களும் ஏற்படும்.

மனிதன், வரலாற்றை உந்திச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவன், மனிதனே வரலாற்றின் உயிர்ப்பு. அவனுடைய மாற்றமே வரலாறு; இயக்கம்! மனிதன் இரண்டு எஜமான் களுக்குச் சேவை செய்ய இயலாது. சுயநலம் தவிர, மற்றொன்று அறியாத மனிதன், நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய இயலாது.

அதனால் வளர்ச்சியும் ஏற்படாது. மாற்றங்களும், வாழ்வதற்குரிய வாய்ப்புக்களும் அருகிப்போகும். நாம்

மாறுவோம்! மனித குலத்தை மாற்றுவோம். வளர்ச்சிக்குரிய திசையில் செல்வோம்! மாற்றங்கள் உருவாகும்.

ஏ, என் அருமைத் திருநாடே! எழுந்திரு! விழித்துக் கொள்! வரலாற்றைப் புரட்டி வளர்ச்சியடைய காணும் திசையில் ஊக்கத்துடன் செயல்படுவாயாக! இதுவே நாம் செல்லவேண்டிய திசை! தடம்!

மனிதனுடைய வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் துணை யாக இருக்கவேண்டிய சமூகம் இன்று, மனிதனுக்கு விரோத மாகச் செயல்படுகிறது. ஆதலால், சமூக மாறுதல் ஏற்பட்டா லொழிய வளர்ச்சி ஏற்படாது; மாற்றங்களும் நிகழா.

சமூக மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்படப் பொது மக்களின் அங்கீகாரமும் ஒத்துழைப்பும் தேவை. எந்த ஒரு மாற்றமும் தங்களுடைய முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்ற நம்பிக்கையை மக்கள் மனத்தில் உருவாக்கிவிட்டால் வளர்ச்சி இயல்பாக நடக்கும், மாற்றங்கள் நிகழும்.

வளர்ச்சியும் மாற்றமும் மக்கள் மத்தியில் தோன்றி இடம்பெற வேண்டுமாயின் இலாபத்தையும் உடைமையையும் சேர்க்கும் பழைய சமூகத்தின் நடைமுறை, மதிப்பீடுகள் இவைகளுக்குப் பதிலாகப் புதிய மதிப்பீடுகளை மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

எவ்வளவு முயன்றாலும் பூரண மாறுதல் ஏற்பட, கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டும். இங்ஙனம் சொல்லுவ தால் மாறுதல் மிக மிக மெதுவாக நடக்க வேண்டும் என்று சொல்வதாகப் பொருள் கொள்ளக் கூடாது. மாறுதல் மெதுவாகவும் இருக்கக் கூடாது. சிறுகச் சிறுக ஏற்படும் மாறுதல்கள் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இடம் கொடுக்காது.

ஆதலால், சமூக மாற்றங்களை விரைந்து செய்து முடிப்பதே நல்லது. ஆனால், பழமையில் ஊறிய சமூகம் முழு மூச்சுடன் மாற்றங்கள் எந்த உருவில் வந்தாலும் எதிர்க்கும்.

சில சமூகங்கள், அறியாமையின் காரணமாகவும் ஏழ்மையின் காரணமாகவும் தங்களுடைய வாழ்க்கையை மாற்றி யமைத்துக் கொள்ளத் திறனற்றுப் போய்விட்டன.

இந்த மாதிரிச் சூழ்நிலைகளில் புதிய புதிய உத்தி களையும் திறன்களையும் மக்களிடையில் அறிமுகப்படுத்தி விழித்தெழச் செய்யவேண்டும். இந்த முயற்சியில் வெற்றி பெற்றால் வளர்ச்சி நிகழும், மாற்றமும் ஏற்படும்.

இங்ஙனம் சமுதாயத்தில் மாற்றங்களைச் செய்யும் பொழுது, இருக்கிற ஒன்றை - ஒரு தீமையை அகற்றினால் போதாது. அந்த இடத்தில் ஒரு நல்லதை வைக்கத் தவறிவிடக் கூடாது. தீமையை விலக்குவதற்குள்ள ஒரே வழி, நல்லதைக் காட்டுவதேயாம்.

இங்ஙனம் மாற்று வழி காட்டத் தவறிவிட்டால் மக்கள் மீண்டும் பழைய தடத்திலேயே செல்வர். சமூக மாற்றம் எளிதில் நிகழ முடியும். ஆனால், பழைய சமூக அமைப்பில் ஓர் அந்தஸ்தைப் பெற்றவர்கள் - அனுபவித்தவர்கள் எதிர்ப் பார்கள். தொடக்கத்தில் அது கடுமையான எதிர்ப்பாகத் தோன்றினாலும் காலப்போக்கில் சமுதாய மாற்ற முயற்சிகள் வெற்றி பெறும்.

போதும், போதும் தேக்கம்! வேண்டாம், வேண்டாம் வளர்ச்சியே இல்லாத சமூக அமைப்பு! வளர்ச்சியும் மாற்றங்களும் நிகழக்கூடிய திசையில் நடப்போம்!

நாம், அடிக்கடி பின்னோக்கிப் போகின்றோம். வழி வழியாக நமக்குக் கிடைத்துள்ள கருத்துக்கள் கூட, நம்மைப் பின்னுக்கு இழுக்கின்றன. விஞ்ஞானம், தொழில் நுட்பம் இல்லாமல் எப்படி வளர்ச்சியைக் காண முடியும்? மாற்றங் களைச் செய்ய முடியும்!

அதேபோழ்து கடந்தகாலப் பண்பாட்டினை மறந்தும், முன்னேற்றமடைய முடியாது. அப்படியே முடிந்தாலும் அந்த முன்னேற்றம் பயனுள்ளதாக அமையாது.

மனிதகுலத்தின் வாழ்க்கை பிரச்சனைகள் நிறைந்தது. இது தவிர்க்க முடியாதது. அணுவைப் பிளக்கும் இந்த யுகத்தில் நம்முன் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை நேற்றைய சம்பிரதாயங்களின் வழி தீர்வுகாண இயலாது. மதவிவ காரங்கள் மற்றும் சர்வதேச விவகாரங்கள், பிரச்சாரப் போரின்றி, சந்தடியின்றி முடிவுக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.

எத்துறையேனும் சரி, அத்துறை, பிரசாரப் போரைத் தொடங்கிவிட்டால் பயமும் குரோதமும் வளரும். அதனால், மனிதகுலத்தின் வளர்ச்சியும், வளர்ச்சியுடன் கூடிய பாது காப்பும் கிடைப்பதற்குப் பதிலாக, அபாயங்களும் விபத்துக் களுமே அதிகரிக்கிறது.

ஆதலால், பழமைவாதம், பிரச்சாரப்போர் ஒருபோதும் வளர்ச்சிக்குத் துணை செய்யாது, என்பதை உணர்தல் வேண்டும். மனிதகுலத்தில் வளர்ச்சியையும் மாற்றத்தையும் காணத் திட்டமான இலக்குகள் வேண்டும். அந்தத் திட்ட இலக்குகளை அடைவதற்குரிய அறிவறிந்த ஆளுமையும் வேண்டும்.

மக்கட் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டங்கள் நிலவு கின்றன. வர்க்கப் போராட்டங்கள் மூலம்தான் வளர்ச்சியைக் காணமுடியும்; வளர்ச்சியை உறுதிப்படுத்தி உத்தரவாதம் தரமுடியும் என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் பெரு முயற்சி எடுத்துக் கொண்டால் வர்க்கப் போராட்டம் இல்லாமலே கூட அமைதி வழியில் வளர்ச்சியைக் காண முடியும்.

தமிழக வரலாற்றில் நடைபெறும் ஒரு பெரிய விவாதம் மரபு-புதுமை என்பது. மரபு, புதுமைகளுக்கிடையே மோதல் இயல்பாக நிகழாது; நிகழவும் கூடாது. இன்றைய புதுமை, வளர்ச்சிக்குரிய வித்துக்கள் உள்ளடங்கியதாக இருப்பின்

சமூகத்தால் அங்கீகரிக்கப் பெற்று மரபாக ஏற்றுக்கொள்ளப் பெறும்.

மரபு, புதுமைக்குத் தாய்! புதிய செடி பழைய வித்திலிருந்தே உணவை எடுத்துக் கொண்டு வளர்கிறது. அது போலப் புதுமைகள் பழைய மரபுகளிலிருந்தே ஊட்டத்தைப் பெற்றுப் புதுமைகளாகிப் பின் மரபுகளாகி வரலாற்றுக்கு அணி செய்கின்றன.

மரபை மறுத்து வரும் புதுமை, எளிதில் மக்கள் சமுதாயத்தில் கால் கொள்வதில்லை. மார்க்சியம் பழமையைக் கண்மூடித்தனமாக மறுப்பதில்லை. ஆயினும், மாமுனிவர் கார்ல்மார்க்ஸ் கண்ட புதுமைச் சமுதாயம் மக்களிடத்தில் பூரணமாகக் கால்கொள்வதற்குரிய காலம் இன்னமும் கனியவில்லை.

ஆதலால், பழமையில் புதுமைக்கும், வளர்ச்சிக்கும். மாற்றங்களுக்கும் ஆக்கம் தரும் பகுதிகள் உண்டு என்பதை உணர்ந்து, அவற்றை எடுத்துக் கொண்டு சமுதாயத்தை நடத்துவது எளிதில் வளர்ச்சியை அடைவதற்குரிய வழி.

ஒரு சமூகம் சிறந்து விளங்க வேண்டுமெனில், துறை தோறும் வளர்ச்சி ஏற்படவேண்டும். சமுதாயம், பொருளாதாரம், கல்வி, கலை முதலியன அனைத்துத் துறைகளிலும் காலத்தின் தேவைக்கேற்ப, மாற்றங்கள் ஏற்பட்டு வளர்ச்சி அடையவேண்டும்.

சமுதாயத்தில் ஏற்படும் மாற்றமும் வளர்ச்சியும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தாத வளர்ச்சியினால் என்ன பயன்? இன்று நம் நாடு வளர்ந்துள்ளது. நமது நாட்டு சராசரி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லையே!

வாழ்க்கைத்தரம் உயரும்வரை வளர்ச்சிக்குரிய முயற்சிகள் இடையீடின்றி நடக்கவேண்டும். மக்கள் நலவளர்ச்சிப் பணிகளில் பழையபோக்கில் உள்ளவர்களும்,

புத்தறிவு பெற்றவர்களும் ஒருமை எண்ணத்துடன் ஈடுபடுவார்கள் ஆயின் வெற்றி எளிது.

இன்று நாம் சென்று கொண்டிருக்கும் பாதையில் வளர்ச்சியின் வேகம் போதாது. மாற்றங்கள் அறவே ஏற்பட வில்லை. நாம் வாழும் காலம், பேராற்றல் வாய்ந்தது. கம்ப்யூட்டர் யுகத்தில் வாழ்கின்றோம். காலத்தின் பேராற்றலை முறையாகப் பயன்படுத்தினால் வளர்ச்சி உறுதியாக வாய்க்கும். காலவேகத்திற்கு ஏற்றவாறு வளர்ச்சிப்பணிகள் நிகழவேண்டும்.

சமுதாயம் தனது வேலைசெய்யும் பாங்கையும் விரைவு படுத்திக் கொள்ள வேண்டும். கால வேகத்திற்கு ஏற்ப, சமுதாயம் தனது வேகத்தைக் கூட்டிக்கொள்ளத் தவறினால் சமுதாயம் பின்தங்கிவிடும். ஆதலால், விவேகத்துடன் வேகமாக நிலையான வளர்ச்சியை நோக்கிச் செல்வோமாக!

நாம் கடுமையான விதிமுறைகளையும், கடின உழைப்பையும் மேற்கொள்ளாவிட்டால் 2001-லும் இப்படித் தான் இருப்போம்! தலையின்மீது வறுமைக் கோடு! கடன்சுமை! நியாயவிலைக் கடைகளின் முன் நீண்ட வரிசை! இந்த அவலம் நமக்கு வேண்டுமா? வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!

அறியாமையை அகற்றி, வறுமையை அறவே அகற்றி, உரியவளர்ச்சிப் பணிகளுக்கு முதலிடம் தருவோம்! நமது முன்னேற்றத்திற்கு வளர்ச்சியும் மாற்றமும் தேவை. நமது பழக்கங்களில் அணுகுமுறையில், வேலைசெய்யும் பாங்கில் மாற்றங்கள் ஏற்பட்டால்தான் வளர்ச்சி நிகழும்; வாழ்வு சிறக்கும்; பழைய பைத்தியம் படீர் என்று தெளிய வேண்டும்.

புதிய இந்தியாவை, வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்க உறுதிகொள்வோம். இன்றுள்ள தேக்கமும் பின்னடைவும் நீங்கி வளர்ச்சியும் முன்னேற்றமும் உறுதிப்

படுத்தப் பெறும், புதியவழியில் செல்வோம்! மாற்றமும் வளர்ச்சியும் காண்போம்!

## 5. பொருளாதாரச் சிந்தனைகள்

(10–9–1994 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)

இந்த வாரச் சிந்தனை—பொருளாதாரத்தில் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது. நாம் போகும் திசை சரியானது தானா? அல்லது எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறோமா? ஏனெனில் மானுட வாழ்க்கையின் அடிப்படையே பொருள்தான். வாழ்க்கைக்கு ஆதாரம் பொருள்; அதனால்தான் பொருளாதாரம் என்று பெயர் வைத்தார்கள் போலும்.

மானுடத்தின் உடல் சார்ந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவை பொருள். பொருள் என்னும் சொல் விரிவான பொருளாக்கம் தரும் சொல்லாகும். உணவு, உடை, இருக்க இடம் முதலியன எல்லோருக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகள். இந்த அடிப்படைத் தேவைகள் நிறைவேறிய நிலையில் மேலும் தேவைகள் வளரும்.

தேவைகளை உழைப்பின் மூலம் அடைவது முதல் நிலை. ஆரம்பநிலை. காலப்போக்கில், சொத்து உருவாக்கும் ஆர்வத்தால், சொத்து, நிலம் முதலியன சேர்த்து, நிலப்பிரபுக் களாகி, பின் மெள்ள மெள்ள சுரண்டும் பொருளாதார நடை முறைக்கு வந்துவிட்டான் மனிதன். இது வளரும் சமூகத்திற்கு நலம் பயக்காது.

ஒரு சமூகம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்க வேண்டுமானால் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற வேலைகள் நடைபெறவேண்டும். இது தவிர்க்க இயலாதது மட்டுமல்ல அப்போதுதான் முழுமையான வளர்ச்சியைக் காணமுடியும். மானுட சமுதாயம் பொருளாதாரம். கல்வி,

கலை ஆகிய அனைத்துத் துறைகளிலும் முயற்சிகள் மேற் கொள்ளப் பெறுதல் வேண்டும்.

இவையனைத்தும் - அதாவது, கல்வி, பொருளாதாரம், கலை ஆகியன ஒன்றையொன்று தழுவியன. ஒன்றின்றிப் பிறிதொன்று முறையாக வளராது; பூரண வளர்ச்சியும் நடைபெறாது. பொருளாதாரம் என்பதன் முழுப் பொருள் பணமுடையராதல் அல்ல; சொத்துடையராதல் அல்ல; வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதாகும்; பொருளுக்காக வாழ்க்கையல்ல; வாழ்க்கைக்காகவே பொருள்.

பொருளாதாரம் உயர்ந்து வாழ்க்கைத்தரமும் உயர்ந்து விளங்கினால்தான் பாதுகாப்புக் கிடைக்கும்; சமாதானமும் அமைதியும் கிடைக்கும். உலகத்தில் பலகோடி மக்கள் வறுமையில் கிடந்து உழலும்வரை சமாதானமும், அமைதியும் பகற்கனவே.

மக்கட் சமுதாயத்தில் நிலவும் சமநிலையற்ற பொருளாதார அமைவை முதலில் சமநிலைப் படுத்த வேண்டும். இதுவே பொருளாதாரம். இந்திய சமூகப் பொருளாதாரத்தில் அசமப் பொருளாதார நிலையே தொடர்ந்து இருந்து வருகிறது. வறுமைக்கோடு விழுந்து விட்டது.

நம்முடைய இந்திய சமுதாயத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் பொருளாதார அசமநிலை இருள் நிறைந்தது. இந்த அசமநிலையை மாற்றத் தொலைத் தூரம் சென்றிடல் வேண்டும். அத் தொலைதூரத்திற்குச் செல்ல முயற்சி செய்வோம்!

நமது ஏழ்மை நிலைக்குக் கிரகங்கள் காரணம் அல்ல. நாம் தான் காரணம். வறுமையையும், ஏழ்மையையும் தொடர்ந்து போராடி அகற்றாத நாம்தான் குற்றவாளிகள். திருந்துவோம்! திருத்தமுறத் திட்டமிடுவோம்! திட்டமிட்ட திசையில் செல்வோம்!

பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண திறனுடைய முயற்சிகள் தேவை. இன்று இத்தகைய அருந்திறன் பெரும் பாலரிடம் இல்லை. வறுமொழியாளரும் வம்பப் பரத்தரும், விவாதங்களிலேயே காலத்தைக் கழிப்போரும் நிறைந்து விட்டனர். இன்று இந்தியாவின் 85 கோடி மக்களும் சாப்பிடு கின்றனர். ஆனால் உருப்படியான வளர்ச்சி பொருந்திய பொருளாதாரத்திற்கு உழைப்போர் எத்தனை பேர்?

பழங்காலத்தில் திண்ணைகள் இருந்தன. திண்ணைப் பேச்சு இருந்தது. இன்று திண்ணைகள் இல்லை. ஆதலால், இன்று முச்சந்திப் பேச்சு, கடைப் பேச்சு; என்று உழைக்கும் காலமும், மனித ஆற்றலும் விரையமாகிறது. நுகர்வோர் எண்ணிக்கைக் கூடிவிட்டது. ஆனால் நுகர்வோருக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தி செய்யப்பெறவில்லை. ஒருபுறம் பிரமிக்கத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

நவீன மருத்துவ வசதிகள் முதலியன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதனால் பல நோய்கள் நமது நாட்டை விட்டே விடைபெற்றுப் போய்விட்டன. நோய் வெளியேறிய போதிலும், பசி என்ற நோய் வெளியேறவில்லை. பலர் உயிரோடிருந்தும், பசியினால் வாடுவதில் என்ன பயன்?

போதிய, தேவையான சத்துணவு கிடைக்காமையால் உடல் நலம் குன்றி, சமுதாயத்திற்கு எந்தவிதப் பயனும் இன்றி வாழ்வோர் எண்ணிக்கை வளர்வது பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்யும். கிராமப்புறங்களில் இன்று ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலை செய்து கூலி பெற்றால் கூடச் சீராக வாழ முடியாத நிலை.

கூலியாகப் பெறும் தொகை கூடுதலாக இருக்கலாம். ஆனால் வாங்கும் சக்தியில்லை. நமக்கு உண்மையான சம்பளம் வாங்குவதிலும் பெறுவதிலும் அக்கறை வேண்டும். உண்மையான சம்பளம் என்றால் அது பணத்தின் அளவு.

அன்று; வாங்கும் சக்தியேயாகும். இதுவே இன்றைய நமது பொருளாதாரம் செல்லும் திசை.

இன்றைய இந்தியனின், குடும்பத்தின் சராசரி ஆண்டு வருமானம் 64 டாலர். அதாவது ஆண்டுக்கு சுமார் 1920 ரூபாய். மாதம் 160 ரூபாய் சம்பாதிக்கிறான். இந்த சம்பாத்தியத்தையும் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது பொருளாதாரத்தின் சமச்சீரற்ற நிலை விளங்கும்.

பொருளாதாரத்தில் வளராத நாடுகளில், வளம் - வறுமை இவை இரண்டிற்கும் உள்ள இடைவெளி மிகவும் கூடுதல். இந்த இடைவெளியைத் தொழிற் புரட்சி செய்வதன் மூலமும், வழங்கப்பெறும் கூலியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதன் மூலமும்தான் குறைக்க இயலும்.

நமது குடியரசுத் தலைவர் "நம் நாடு இன்னும் பொருளாதார விடுதலை பெறவில்லை. அந்தப் பொருளா தார விடுதலையை என்று பெறுகின்றதோ அன்றுதான் இந்தியா பரிபூரண சுதந்திரத்தை அனுபவிக்கும்" என்று கூறியுள்ளார்.

ஆம்! அரசியல் சுதந்திரம் வந்ததில் பயன் என்ன? மக்கள் நலம்பெற்று வாழத்தானே சுதந்திரம்? தேர்தலில் ஆளுக்கு ஒரு வாக்குச் சீட்டு என்பது சுதந்திரமாகுமா? கோடீசுவரனின் வாக்குச் சீட்டு சுதந்திரமாகப் பயன்படுத்தப் பெறும்; கோடீசுவரனின் வாக்குச் சீட்டு விலை போகாது.

ஆதலால் ஆளுக்கு ஒரு வாக்குச்சீட்டு என்பது சுதந்திரம் அல்ல. குடிசையில் வாழும் குப்பனும் தனது வாக்கை என்று பரிபூரண சுதந்திரத்துடன் பயன்படுத்து கின்றானோ அன்றுதான் சுதந்திரம் வந்ததாகப் பொருள். இன்று இந்தியாவைப் பற்றியுள்ள வறுமை, ஏழ்மை, சொல்லும் தரத்ததன்று. ஆனாலும் படிப்படியாகக் குறைந்து வருகிறது.

நமது நாட்டில் வறுமை, நகர்ப்புறங்களிலும் உண்டு. ஆயினும் கிராமப்புற வறுமை மிக மிகக் கொடியது. இதில் கவனிக்க வேண்டிய ஒன்று - கிராமப்புற வறுமையை யாரும் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. நகர்ப்புற வறுமை யாளர்கள் போராடும் இயல்பினர்.

கிராமப்புற மக்கள், வறுமையை இயற்கை என்று கருதி, அந்த வறுமையுடனேயே வாழ்வதில் பழகிப் போய் விட்டனர். ஆதலால் கிராமப்புற வறுமையாளர்களிடையில் “போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து” என்ற பழமொழிக்கு நல்ல செல்வாக்கு உண்டு.

இந்த மனப்போக்கு, பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்யாது. வறுமை என்பது வசதிகள் அற்ற வாழ்க்கை. ஏழ்மை என்பது உணவுக்குப் போராடும் நிலை. நமது நாட்டில் பலர் வறுமையில் வாழ்கின்றனர். ஏராளமான கிராமப்புற மக்கள் ஏழ்மையில் கிடந்து உழல்கின்றனர்.

இதில் வருத்தம் என்னவெனில், வாழ்க்கையின் அடிப் படைத் தேவைகளாகிய நுகர் பொருட்கள் உணவுப் பொருள்களை கிராம மக்களே உற்பத்தி செய்கின்றனர். ஆனால் அவர்கள் உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாக ஏற்படும் விலை வீழ்ச்சியினாலும், பணத் தேவையினாலும் ஏழ்மைக்கு ஆளாகிறார்கள். நெல்லை உற்பத்தி செய்பவன் நியாய விலைக் கடைகள் முன், நீண்ட நெடிய வரிசையில் நிற்கிறான் அரிசி வாங்க!

ஆம்! நமது நாட்டில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள், விவசாயம் செய்யப் பெறாமல் தரிசாகக் கிடக்கிறது. தேசத்தின் செல்வ வளர்ச்சிக்குரிய ஆதாரங்களை, உற்பத்திச் சாதனங்களை, முறையாகப் பயன்படுத்தி உற்பத்தியைச் செய்து, தேசத்தின் செல்வத்தைப் பெருக்க வேண்டும்.

இன்று சில கடுமையான முயற்சிகளை, வழிமுறைகளை, மேற்கொள்ளாவிட்டால் 2001-லும் நமது நிலை இப்படியே

தான் இருக்கும். நமது அடுத்த தலைமுறைக்கும், நஞ்சினும் கொடிய வறுமையை, ஏழ்மையை வழிவழியாக விட்டுச் செல்லும் பாவத்தைச் செய்தவர்களாவோம்.

இன்னும் நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும் சரி, சமூக வாழ்க்கையிலும் சரி, அரசும் சரி, "ஏழ்மை பிரதேசமே இல்லை" என்று அறிவிக்கக்கூடிய அளவுக்கு, எல்லாப் பணிகளையும்விட வறுமை ஒழிப்புப் பணியை 'இதுவே முதற்பணி' என்று கருதிச் செயல்பட வேண்டும்.

பொருளாதாரத்திற்குப் பல தடைகள் உண்டு. அவற்றில் தலையாயது பழைய நம்பிக்கைகள் - அதாவது ஊழ், விதி முதலியவற்றை நம்பி, பொருளாதார முயற்சி களைக் கைவிடுவது அல்லது சோர்ந்து போதல், மேலும் கடவுள், ஊழ் என்று வாளா இருப்பது.

கடவுள் உயர் ஆற்றல், உயர் பண்பே தவிர, கடவுள் பணம், செல்வம், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் லேவாதேவிக்காரரும் அல்ல—இரவலர்களை ஊக்குவிக்கும் வள்ளலும் அல்ல. போதிய முதலீடு வேண்டும்.

அடுத்து சிறந்த அறிவியல் தொழில் நுட்பம் இருக்க வேண்டும். நமது நாட்டில் அறிவியல் மேதைகள் நிறைய உண்டு. அறிவியல் தொழில் நுட்பங்களும் உண்டு. முதலீட்டுக்குப் பஞ்சமே இல்லை. நிறைய முதலீடு செய் வதற்குரிய பணம் இருக்கிறது. ஆனால் பொருளாக்கத்திற்குத் துணை செய்யும் வழியில் முதலீடு செய்ய முன் வருவதில்லை.

மனித ஆற்றல் நம்மிடத்தில் நிறைய உண்டு என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆயினும் பொருளாதார வளர்ச்சி மனநிறைவு தரத்தக்க வகையில் இல்லை. நல்ல நிர்வாகமும், கடின உழைப்பும் தேவை.

அடுத்து ஒரு தொழிலில் லாபம் என்றால், ஆட்டு மந்தைகளைப் போல அந்தத் தொழிலிலே பலரும் முயன்று, அந்தத் தொழிலில் உற்பத்தியைப் பெருக்கி, விலையை

இறங்கச் செய்து, ஆரோக்கியமில்லாத போட்டியால் தேசத்தின் பொருளாதரத்தை அழிக்கின்றனர். தாமும் கைம்முதல் இழந்து அல்லற்படுகின்றனர். பொருளாதார ஆக்க முயற்சிகளில் புதிய புதிய யுக்திகள் தேவை; வழிமுறைகள் தேவை. இதைத்தான் திருவள்ளுவரும்,

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்ல தரசு"

என்று கூறுகின்றார். இயற்றல் என்பது பொருள் உற்பத்திக் குரிய புதிய புதிய வாயில்களைக் காணல், பொருள் தேடும் முயற்சிகளில் புதியன காண்போர் தோன்றாததற்குக் காரணம்—அல்லது அதில் கருத்து நாடாமைக்குக் காரணம் —அதில் வருவாய் வருமா என்ற ஐயம்! சோதனைகளை ஏற்கத் தயக்கம்!

ஒருவகைப் பொருள் முயற்சி வெற்றி பெற்றது நிரூபிக்கப்பட்டு விட்டால், அந்தத் தடத்திலேயே மக்கள் செல்ல விரும்புவர். இது நமது மரபு. எல்லாவற்றுக்கும் மேலாக உற்பத்தித் தொடர்பில்லாத வழிகளிலேயே, வட்டிக் கடை நடத்துதல், வியாபாரம் செய்தல், எவரிடமாவது எடுபிடி வேலைக்கு அமர்தல் போன்றவற்றிலேயே மக்களுக்கு ஆர்வம் இருக்கிறது.

ஆர்வமும், முயற்சியும் உடையோருக்குப் பொருளாதார முயற்சிகள் எளிதில் கைகூடும். இந்த வழியில் அல்லாது, பொதுத் தொழில்களில் சுரண்டல் முறை நிலவுமானால் அது கொள்ளை நோயைவிடக் கொடியது. இந்தப் போக்கு, காரணமின்றியே வறுமையை உருவாக்கும்; இத்தகைய வறுமையை எதிர்க்கவேண்டும்.

பணவயமான சமூகம் கெட்ட பழக்கங்களில் ஈடுபடும். அதனால் வறுமை உற்பத்தியாகும். இந்த வறுமையை எதிர்த்துப் போராட வேண்டும். எல்லோரும் ஓயாமல் போராட வேண்டும்.

இந்தப் போரினைச் சுயநலக்காரர்கள், தவறான - முறையற்ற நிலையில் ஒரு அந்தஸ்தைப் பெற்றிருப்பவர்களே எதிர்ப்பார்கள். இவர்களது எதிர்ப்புகளை அஞ்சாது எதிர்த்து வெற்றி கண்டால்தான் சீரான பொருளாதாரம் வளரும்; நிலை நிற்கும்.

நமது நாட்டின் வறுமை வினோதமானது. நாட்டின் தேசீய வருவாய் அதிகரித்துள்ளது. ஆனால் அந்த அளவுக்குத் தனி நபர் வருவாய் உயரவில்லை. ஏன்? இதுதான் இன்றுள்ள புரியாத புதிர். நாட்டின் வருவாய் வளர்ந்திருந்தாலும், நாட்டின் மைய அரசும் சரி - மாநில அரசும் சரி - நிதிப் பற்றாக்குறையுடைய நிதி நிலைத் திட்டத்தையே அளிப்பதற் குரிய சூழ்நிலையே நிலவுகிறது.

ஒட்டகத்தின் முன் துரும்பெடுத்துப் போட்டு, சுமையை இறக்கிவிட்டதாகப் பாவனை செய்வது போல, மக்களுக்குச் சில சலுகைகளை அளிப்பதால் பயனில்லை. அதனால் பணவீக்கம் ஏற்படுகிறது. பணவீக்கத்தாலும் மறைமுக வரிகளாலும் விலைவாசிகள் ஏறிவிடுகின்றன.

இதனால் மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிதி நெருக்கடி தோன்றி வளர்ந்து விடுகிறது. ஆண்டுக்கு ஆண்டு அரசின் நிதிநிலைத் திட்டத்தில் நிதிப் பற்றாக்குறை கோடிக் கணக்கில் உயர்ந்து விடுகிறது. செல்வர்களுக்கு நிறைய வரிச் சலுகைகளை அளித்தாலும் நாட்டில் முதலீடு பெருக வில்லை.

அதனால் கிடைத்த பணம், ஆடம்பரமான நுகர்வுப் பொருட்களை வாங்கவே செலவிடப்படுகிறது. நுகர்வுச் சந்தை - அதுவும் ஆடம்பர நுகர்வுச் சந்தை வளர்வதன் மூலம் பணச் சுழற்சி ஏற்படாது. அதனால் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படாது. புதிய செல்வங்களும் உருவாகா. வேலை வாய்ப்புக்களும் பெருகி வளராது.

ஆதலால் வாழ்க்கைக்கு இன்றியமையாததல்லாத ஆடம்பரச் செலவுகளில் செலவு செய்வதை தடுத்து முதலீடாக மாற்றுவதற்கு ஏற்றாற்போல செலவு வரி விதிப்பதைப் பற்றி, சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் இரவும் பகலும் சினிமா தியேட்டர் களின் இயக்கம். சினிமா தியேட்டர்களுக்கு வரிவிலக்குச் சலுகைகள். சினிமாக் கொட்டகைக்காரர்கள் விருப்பம் போலக் கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம். இவையெல்லாம் மனிதகுலத்தைப் பொருளாதார முயற்சிகளிலிருந்து விடுவிப்பவையாகும்.

உழைக்கும் நேரத்தில் திரைப்பட அரங்குகளில் இருந்தால், தொலைக்காட்சிப் பெட்டியின் முன் உட்கார்ந்து இருந்தால் எப்படிப் பொருளாதாரம் வளரும்? நாட்டின் நிலையிலும் சரி - தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி - சேமிப்பு பெருகி வளர்ந்து அந்தச் சேமிப்புகள் முதலீடு ஆகும் வகையில் சமூகமும், அரசும் இயங்க வேண்டும்.

சேமித்து முதல் தருபவர்களுக்கு அரசு சலுகைகள் கூட வழங்கலாம். ஆனால் நமது நாட்டில் சேமிப்பு முதலாக மாறுவதில்லை. ஒன்று பணமாக இருக்கும். அல்லது அணி கலன்களாக இருக்கும். திட்ட முதலீட்டுச் செலவு கூடி வருதல் வேண்டும். திட்ட முதலீட்டுச் செலவு கூடினால்தான் பொருளாதாரம் வளரும். புதிய பொருளாதாரக் கொள்கை வளரும்.

விலை ஏற்றம் கட்டுப்படுத்தப்படவில்லை. மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. வேலை வாய்ப்புக்களும் அதிகரிக்கவில்லை. ஆயினும், வர்த்தகத் துறையிலும், தொழில் துறையிலும் சில விளைவுகள் ஏற்பட்டுள்ளது உண்மை. ஏற்று மதியில் சற்றேறக் குறைய 21 சதவிகிதம் வளர்ந்திருக்கிறது. அன்னியச் செலவாணி கையிருப்புக் கூடி இருக்கிறது.

இவையெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்கதெனினும், பயன் அடைந்தவர்கள் தொழிலதிபர்கள்; சாதாரணப் பொது மக்கள் அல்ல என்ற உண்மையை உணர வேண்டும்.

ஆனால் நமது நாட்டில் பொருளாதார முயற்சிகளே நடைபெறவில்லை என்று கூறமுடியாது. நமது நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்குரிய பணிகள் பரந்த அளவில் நடைபெறுவது உண்மை. இம் மாபெரும் புரட்சியானது ஏமாற்றத்தைத் தரக்கூடிய தாமதங்கள், தடங்கல்களால் பாதிக்கப்பட அனுமதித்துவிடக் கூடாது.

பொருளாதார வளர்ச்சி தொய்வின்றி நடைபெற நிர்வாக இயந்திரம் திறமையுடையதாக இருக்கவேண்டும். நிர்வாக இயந்திரம் பின்னோக்கிச் செல்கிறது. சிகப்பு நாடா முறை நமக்கு வழிவழி வந்த பிற்போக்குத் தன்மை; நமது பாரம்பரியத்தின் மிச்ச சொச்சம்.

பொருளாதார வளர்ச்சி சீராக அமையவேண்டு மானால் நிர்வாக இயந்திரம் மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். நமது நாட்டின் வளத்தைப் பெருக்க வேண்டும் என்ற கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்டு, சேவை செய்யும் அலுவலர்கள் தேவை. ஊழியர்கள் தேவை.

பொருளாதர வளர்ச்சியில் இன்றியமையாத பகுதி வேலைவாய்ப்பு. இன்று வேலை வாய்ப்பில் உற்பத்தி சார்ந்த வேளாண்மை, கால்நடைத் துறைத் தொழில் வளர்ச்சியில் ஈடுபட இந்த நாட்டு இளைஞர்களுக்கு ஆர்வம் இல்லை. அவர்கள் எங்காவது சிற்றெழுத்தர்களாக - கூரியர் சர்வீசு வேலை போன்றவைகளில் ஈடுபடத்தான் விரும்புகின்றனர்.

காரணம் அளவுக்கு விஞ்சிய பய உணர்ச்சியில் ஏற்பட்ட பாதுகாப்பு உணர்வு. அவர்கள் வீட்டு வாயிலைத் தொழில்கள் தட்டினாலும், உற்பத்தி சார்ந்த தொழில்களில், கடின உழைப்பில் ஈடுபட அவர்கள் விரும்பவில்லை.

சேவைத் துறையில் வேலை வாய்ப்புப் பெறுவது தவறானதல்ல என்றாலும் சமுதாய நோக்கில் பார்த்தால் இது நமது வாழ்க்கையைப் பாதிக்கும். ஆதலால் தொழில்துறையில் ஈடுபடுதலே சிறந்த வேலைவாய்ப்பு; ஆக்கம் தரக்கூடியது.

நமது நாட்டில், தொழில் துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவு சரி செய்யப்பட்டால்தான், வேலைவாய்ப்புக் களும், வருவாயும் பெருகும். இத்துறையில் நமது அரசுக்கும் சரி - இளைஞர்களுக்கும் சரி - சமூகத்திற்கும் சரி - போதுமான ஆர்வம் இல்லாதது வருந்தத்தக்க செய்தி.

பல நூறு ஆலைகள் பூட்டப்பட்டுள்ளன. எண்ணற் றோர் வேலைகளை இழந்துள்ளனர். எதிர்பாராத நிலையில் நலிந்துபோன தொழில்களைப் புனரமைக்க அரசுகளும், வங்கிகளும், மூலதனத்துடன் முன்வர வேண்டும். நிர்வாகக் குறையின் காரணமாகத் தொழிற்சாலைகள் நலிவுறின் அந்தத் தொழிற்சாலைகளின் நிர்வாகிகள் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

இன்றுள்ள நடைமுறையில், நிர்வாகி வசதியாக இருக்கிறார். ஒரு பைசாக் கூடக் குறையாமல் ஊதியம் வாங்குகிறார். ஆனால் பாவம், தொழிலாளர்கள் வேலையை இழந்து தவிக்கின்றனர். தொழிற் சங்கங்களும் கூட இந்த மாதிரி விஷயத்தில் பேச போதிய முயற்சிகள் எடுக்காதது ஒரு குறை. இந்த வகையில் நமக்கே சொந்த அனுபவம் உண்டு.

இன்று கூட்டுறவுத் துறை "அஞ்சூரான், புஞ்சை போல" என்பார்களே அதுபோல, நலிந்து வருகிறது. இந்தியாவின் சாதாரண மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு, கூட்டுறவே சரியான வழி. ஆனால் கூட்டுறவு இன்று செப்பமாக இல்லை.

எந்த ஒரு தனி மனிதனும் சரி - அல்லது சமூகமும் சரி - அறிந்து பாவம் செய்ய உடன்பட மாட்டார்கள். அது போலவே மக்கள் வேலையில்லாத திண்டாட்டத்தையும் விரும்பவில்லை. புதிய தொழில் ஆலை, வேளாண் பண்ணை களைத் தொடங்கி, வேலை வாய்ப்புகளை வழங்கினால் உற்பத்தி பெருகும்.

நியாயமான வழியில் பூரண வேலை வாய்ப்பை உண்டாக்குவது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரே வழி! பூரண வேலைத் திட்டம் சமத்துவ சமுதாய அமைப்பிற்குரிய முதல் முயற்சி. பூரண வேலைத் திட்டம் என்பது சக்திக்கேற்ற வேலை - வேலைக்கேற்ற ஊதியம் என்பதாகும்.

இன்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து, வேலைக்காகக் காத்திருப்போர் எண்ணிக்கை கடந்த காலங் களைவிட 20 மடங்காகப் பெருகியுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிந்திருப்போரில் 10 சதம்தான் வேலை பெறுகிறார்கள். இதுபோக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதியாமல் உள்ளவர்கள் வேறு கணிசமாக உள்ளனர்.

இனி, வருங்காலத்தில் நம்முடைய அரசுப் பணிகளிலும் சரி - வியாபாரத் துறையிலும் சரி - சேவைத் துறையிலும் சரி - வேலை வாய்ப்புக்கள் உருவாகுமா? இது ஐயப்பாடே! புதிய தொழில் ஆலைகளைத் தொடங்குவதன் மூலமே வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் வாய்ப்புகளும் ஒவ்வொரு நாளும் குறைந்து வருகிறது என்ற வருந்தத்தக்க செய்தியை அரசும் சமூக நிறுவனங்களும் உணரவேண்டும். மேலும் ஒரு வருந்தத் தக்க செய்தி, படிப்புக்கேற்ற வேலையைக் கூட பெற முடிய வில்லை.

நமது நாட்டில் குறைவான வேலை பார்த்து, பற்றாக் குறை ஊதியம் வாங்குபவர்களும் இருக்கிறார்கள். மேலும், மனித ஆற்றலுக்கும் இழப்பு ஏற்படுகிறது. வறுமை அணியில்

நிற்போர் வரிசையும் நீளுகிறது. உற்பத்தியும் பாதிக்கப் படுகிறது.

வேறு சிலர் தாம் செய்யும் வேலைக்குப் பன்மடங்கு அதிகமாக ஊதியம் பெறுகின்றனர். இவர்களுடைய மனித ஆற்றல் குறைகிறது. உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. ஆனால் நுகரும் சந்தை வளர்கிறது. இதனாலும் வறுமை வளர்கிறது. ஒருவருக்கு வேலை கிடைத்தால், அவர் முறையாக வேலை பார்த்தால் குறைந்தது மேலும் ஐவருக்கு வேலை வாய்ப்பு உண்டாக்க முடியும்.

தொழிற்கல்வி பயின்றவர்களிடையிலும் வேலை வாய்ப்பு பற்றிய நிலைமைகள் எதுவும் மாறவில்லை. தொழிற் கல்விகளைப் பொருத்தவரையில், டாக்டர்கள், பொறியாளர்கள் இவர்கள் தாமே கூடத் தொழில் செய்யலாம். ஆனால், இந்த வாய்ப்பையும் அரசுப் பணிகளில் வேலை பார்ப்போர் தட்டிப் பறித்து விடுகின்றனர்.

இதனால் நம்முடைய பொருளாதார வளர்ச்சி முயற்சிகளும் அதனைச் சார்ந்த வேலை வாய்ப்புக்களும் பின்னடைவிலேயே உள்ளன. இந்நிலையில் மாற்றம் ஏற்படா விட்டால், அடுத்த நூற்றாண்டிலும் இந்தியா இப்போது இருப்பது போலவே இருக்கும். இதை நீங்கள் விரும்பு கின்றீர்களா?

திருவள்ளுவர், "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்று கூறுகின்றார். இங்குப் பொருள் என்பது தங்கமும், பணமும் அல்ல. நுகரும் பொருட்கள், உணவு முதலியனவாம். தங்கத்திற்கும், பணத்திற்கும் கிடைத்துள்ள பாதுகாப்பு வசதிகள் உணவுப் பொருள்களுக்குக் கிடைக்கவில்லை.

ஆண்டுதோறும் லட்சணக்கான டன் தானியங்கள் போதிய பாதுகாப்பின்றி அழிந்து போகின்றன என்று அரசின் தகவலே கூறுகிறது. பொருள் என்றால் மனிதன்

உயிர் வாழ்வதற்கான நுகரும் பொருள்களே என்பதுதான் தமிழ்வழிக் கருத்து.

"யாஅம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல" என்ற பரிபாடல் வரியும் இதனையே வற்புறுத்து கின்றது. மனிதர் உண்டு, உடுத்தி வாழ்தலுக்குரிய பொருள் களை உற்பத்தி செய்யும் தொழிலே, தொழில்களில் எல்லாம் சிறந்தது.

அதனாலேயே, வள்ளுவம், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றது. ஆனால் இதுவரையில் பல துறைகளில் சக்கரவர்த்திகள் உருவாகியிருப்பதைப் போல, உழுவோரில் சக்கரவர்த்திகள் உருவாகவில்லை.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியின் பாடல் இன்னமும் பாடலாகவே இருக்கிறது. உழவர்களும், தொழிலாளர்களும் இன்னும் சமூகத்திலும் சரி - ஆட்சியிலும் சரி - போதிய அந்தஸ்தைப் பெறவில்லை. உழவும், தொழிலும் சிறந்து விளங்கி, உழவர், தொழிலாளர் வாழ்க்கை, என்று சீர்மையுடன் அமை கின்றதோ, அன்றுதான் இந்தியப் பொருளாதாரம் சீரானதாக அமையும்.

உலகம் எப்பொழுதும் தன்னல உணர்ச்சியிலேயே செயல்படும். இஃது இயற்கை. இந்தத் தன்னல உணர்ச்சியைத் தடை செய்யக்கூடாது. நல்லவர்களுடைய பிறர் நலம் நாடும் நோன்புடன் இணைத்து, கயவர்களிடத்தில் காணப்படும் தன்னலத்தின் வேகத்தை மட்டுப்படுத்த வேண்டும். இது ஒரு சிறந்த பணி.

நமது பொருளாதார ஆக்கத்திற்குரிய முயற்சிகள், மூன்று காரணங்களிலிருந்து தோன்றி வளர்கின்றன. அவை தேவைகள், தேவைகளை அடையும் முயற்சிகள், திருப்தி (Wants, Efforts, Satisfaction) என்ற மூன்றாகும்.

எது காரணமாக இருப்பினும், பொருளாதார வளர்ச்சி, மனித மனங்களிலேயே தொடங்கப் பெறுதல் வேண்டும். நமது நாட்டில் சுகபோக வாழ்க்கையை எதிர்த்துப் போராடிய சந்நியாசிகள் அறிவுறுத்திய "ஆசை அறுமின்" என்ற கோஷத்திலிருந்து, வறுமையில் கிடந்துழலும்போது நம்மால் எழுந்திருக்க முடியவில்லை.

வாய்ப்பாட்டு, சுருதிக்கு இசைந்தவாறு இருக்க வேண்டும். அதுபோல, ஆசைகளும், சமுதாய நலன், பொது நலன் ஆகியவற்றுக்கு அடங்கியதாக இருக்க வேண்டும்.

நமது பொருளாதார ஆக்கத்திற்குரிய வழி, ஒவ்வொரு பொருளையும் எவ்விதத்தில் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி எவ்வளவு கூடுதல் உற்பத்தி செய்யலாம் என்ற அணுகு முறையிலேயே இருக்கிறது. பொருளாதார வளர்ச்சிக்கு மாமேதை லெனின் 10 கடமைகளை வரையறுத்து வலியுறுத்துகின்றார். அவற்றுள் சில:

1) உங்களுடைய சோம்பேறித்தனம், கவனமின்மை பின்தங்கிய தன்மையை உள்ளவாறு உணருங்கள். இவற்றை மூடி மறைத்துப் பயன் இல்லை.

2) கல்வி இன்மையை மாற்றுங்கள்.

3) சோர்ந்து இருப்பதை எதிர்த்துப் போராடுங்கள்.

4) உங்கள் வேலைகள் எல்லாவற்றையும் சரி பாருங்கள். சொற்கள் சொற்களாகவே இருந்து விடக் கூடாது.

5) பொருள்ாதார அமைப்பில் நடைமுறையில் வெற்றி அடைந்து இருக்கவேண்டும்.

என்பனவாகும். ஆம்! நமது நாட்டில் சோஷலிச பாணி, ஜனநாயக சோஷலிசம் என்று சொன்னவைகள் எல்லாம் வெற்றி பெறவில்லை. தீர்மானங்களாகவே இருந்துவிட்டன. நடைமுறைக்கு வரவில்லை.

நமது நாடு வளமான நாடு. ஆனால் மக்களில் பெரும் பாலோர் ஏழைகள்; திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியும், சமநிலை விநியோகமும், நமது நாட்டுக்கு இன்று உடனடி யாகத் தேவை.

நமது சமுதாயம் தேனீக்களைப் போல, கூட்டுறவு முறையில் பணிப் பகிர்வு செய்து கொண்டு, அயர்விலாது, சுறுசுறுப்புடன், ஒரே குறிக்கோளுடன் உழைத்தால்தான் நமது நாடு வளமான நாடாக முடியும். எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ இயலும்.

தேனீக்களுக்கு வாய்த்தது இயல்பூக்கம். அதுபோல நமக்கும் பொருளாதார முயற்சிகளில், உற்பத்தி சார்ந்த பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்டு உழைப்பது இயல் பானதாக, ஜீவ சுபாவமாக என்று மாறுகிறதோ அன்றுதான் நாம் பொன்வளம் நிறைந்த புவியைக் காணலாம். பொது வுடைமையைக் காணலாம்.

இந்தத் திசையில் இன்று நாம் செல்லவில்லை. நாம் செல்லவேண்டிய திசை, புவியைப் பொதுவில் நடத்தும் திசையாக, உற்பத்தி சார்ந்த பொருளாதார ஆக்க வழியிலான திசையாக, பிறர் பங்கைத் திருடாத திசையாகப் பார்த்து நடைபோடுவோமாக!

**வளர்க உற்பத்தி!**
**மலர்க பொதுமை!**

## 6. வேளாண்மைச் சிந்தனைகள்

**(17–9–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

இன்றைய பொருளாதாரம் எப்படி இருக்கிறது? வேளாண்மைப் பொருளாதார வகையில் நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? நாம் எங்கே போக

வேண்டும்? நமது நாடு வேளாண்மை நாடு. வேளாண்மைக் குரிய நிலப்பரப்பு, நிலவளம், மனித சக்தி மிகுந்த நாடு. நமது இலக்கியங்களில், காப்பியங்களில் தவறாமல் வேளாண்மையைப் புகழ்ந்து பேசாத கவிஞர்கள் இல்லை.

ஆனால், இன்றைய தலைமுறையில் வேளாண்மைத் துறையில் போதிய ஆர்வம் இல்லை! அரசுப் பணிகளை விட, வியாபாரத்தைவிட, விவசாயம் இரண்டாந்தரத் தொழில் என்று கருதப்படுகிறது. இது முற்றிலும் தவறு.

*"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை"*

என்றும்

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்"*

என்றும் திருக்குறள் கூறுகிறது.

உடலோடு கூடிய உயிர் வாழ்க்கைக்கு உணவுப் பொருள்கள் இன்றியமையாதன. உணவுப் பொருள்களை வழங்குவது விவசாயத் தொழிலே! அதனாலேயே "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!" என்று இலக்கியங்கள் பாராட்டுகின்றன.

நடைமுறையில் பால் தரும் பசு, புண்ணியமானது என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. ஆனால், தமிழர் வாழ் வியலில் எருதே முதன்மை பெற்றுள்ளது. நாம் வணங்கும் கடவுள் - சிவபெருமான், தனது ஊர்தியாகவும், உயர்த்திப் பிடிக்கும் கொடியாகவும் பயன்படுத்துவது எருதுதான் என்பதை உணர்க. திருக்கோயில் முகப்பில் வரவேற்பதூஉம் எருதே!

*"உழுத நோன் பகடு அழிதின்றாங்கு"*

என்ற புறநானூற்று வரி, என்றும் போற்றத்தக்க வரி. உழுததின் பயனாகிய செந்நெல் லரிசியை, செங்கரும்பின்

சாற்றை, மனித உலகத்துக்கு உண்ணக் கொடுத்துவிடும் பண்புடையவை எருதுகள். ஆதலால்தான், தமிழர் வாழ்வில் பொங்கல் விழா உழவர் திருநாளாக உருக் கொண்டது.

மனிதன் உண்டு உயிர் வாழ்தலுக்கு ஒரு நாளைக்குச் சராசரி எவ்வளவு உணவு - கூட்டுணவு தேவையோ அது அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் வலிமையிழந்து நிற்கின்றான். நமது நாட்டில் உணவுப் பொருள் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கும் திசையில் சென்று கொண்டிருக் கிறோம். அன்றாடத் தேவைக்குரிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதைக் கூடுதலாக்க வேண்டும்.

இலாப நோக்கில் பணப் பண்டங்களை உற்பத்தி செய்வதையும் ரியல் எஸ்டேட் என்ற பெயரில் விளை நிலங் களையும் கண்மாய்களையும் பற்றிக் கொண்டு வருவதையும் தவிர்க்க வேண்டும். ஊட்டி வளர்க்கும் தாய் போன்றது நிலம். உணவளிப்பவர்கள் விவசாயிகள்! உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

நமது இந்திய நாட்டுப் பொருளாதாரத்தில் விவசாயம் கணிசமான பங்கைப் பெற்று வந்துள்ளது, பெற்று வருகிறது. நமது நாட்டுப் பொருளாதாரத்தில் விவசாயம் வகிக்கும் பங்கு 39 விழுக்காடு. அது மட்டுமல்ல. விவசாயத் தொழில் மூலம் கிடைக்கும் வேலை வாய்ப்பு 79 - விழுக்காடு என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை பெற்றுள்ள பொருளாதார விகிதம் 28 விழுக்காடு. வேலை வாய்ப்பு 62 விழுக்காடு. இந்திய நாட்டுப் பொருளாதாரத்தை விவசாயத்தின் மூலம் மேலும் கூட்ட வாய்ப்புண்டு.

அதுபோலவே தமிழ்நாட்டிலும் கூட்ட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. அந்த வாய்ப்புக்களை நாம் முழுமையாகப் பயன்படுத்தினால் பொருளாதாரத் துறையில் தற்சார்பு நிலையை அடைய முடியும். எல்லோரும் பசிதீர

உண்பது மட்டுமன்றி, பசி, பட்டினியை அறவே ஒழித்து வெளியேற்ற இயலும். "வறுமையே வெளியேறு" என்ற கோஷத்திற்கு வெற்றி சேர்க்க முடியும்.

இன்று நமது பொது உணவுப் பொருள், உற்பத்தியில் 20 விழுக்காடு அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. நமது உணவுத் தேவையில் 33 விழுக்காடு பற்றாக்குறை தான். ஆயினும் மகிழ்ச்சியான ஒரு செய்தி, மக்கள் தொகையை ஈடுகொடுத்து உணவுப் பொருள் உற்பத்தியாகி உள்ளது.

இந்திய மக்கள் தொகை, இந்திய நாட்டளவில் 2.3 தான் கூடியிருக்கிறது. ஆனால், விவசாயத்தில் வளர்ச்சி 4.2; தமிழ் நாட்டில் வளர்ச்சி 3.1 தேவையைவிட உற்பத்தி கூடுதலாகி யுள்ளது.

இப்படி உற்பத்தி இருந்தும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் முதலியன பற்றாக் குறையேயாம். இவற்றை உற்பத்தி செய்யக்கூடிய நிலங்கள் நம்மிடத்தில் இல்லையென்று கூறமுடியாது. நாட்டளவில் நிலங்கள் உள்ளன. நமது பகுதிகளில் செம்மண் சரளை மணல் நிலம் நிறைய உள்ளது.

விவசாயத்தை ஒரு தொழிலாகக் கருதிச் செய்ய வேண்டும். ஏனோ தானோ என்று செய்தால் விவசாயம் போதிய பயனைத் தராது. இன்று விவசாயத் தொழிலில் அதிகமான பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் குறைந்த பட்சம் நான்கில் ஒரு பங்கினரையாவது வேறு தொழில் களுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

இந்திய மக்கள் தொகையில் 4.2 பேர்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டு மக்களில் 3.3 மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் விவசாயிகளிடம் நிலம் நபருக்கு 4.8 ஹெக்டேராக இருந்தது. இப்போது நபருக்கு 1.5 ஹெக்டேராகக் குறைந்துவிட்டது.

பொதுவாக ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றின் பராமரிப்புக்குக் குறைந்தது ஐந்து ஏக்கர் தேவை. விளை நிலத்தின் அடிப்படையில் மக்கள் செறிவு 2.5 க்குள் இருத்தல் நல்லது. இப்போது விவசாயம் செய்யப் பெறும் நிலங்களை விட வரப்புகளே அதிகம்.

இதேபோல நெல் சாகுபடி செய்யும் நிலம் குறைந்து வருகிறது. முன்பு சாகுபடி செய்யும் நிலம் 27 இலட்சம் ஹெக்டேராக இருந்தது. இப்போது 21 இலட்சம் ஹெக்டேராகக் குறைந்து விட்டது. நிலத்தில் நெல் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக பணப் பயிர்கள், கரும்பு முதலியன உற்பத்தி செய்வது, வீட்டு மனைகளாக மாற்றி விற்பது போன்ற மனப்போக்கு வளர்ந்து வருவதால் விவசாய நிலம் குறைந்து வருகிறது.

இந்தப் போக்கு நீடித்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட வழி வகுத்ததாகி விடும். முன்பே நமக்கு, பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள் பற்றாக்குறை என்று கூறியதை நினைவில் கொள்க.

மண் என்பது ஓர் உயிரியல் பொருள் என்பதை நம்மில் பலரும் உணரவேண்டும். பொதுவாக மண்ணில் அங்ககச் சத்து (இயற்கை உரம் 5 சதம், மணிச்சத்து 45 சதம், காற்று 25 சதம், நீர் 25 சதம், தொழு உரச்சத்து 60 சதம்) இருத்தல் நல்ல விளை நிலத்திற்கு அடையாளம்.

நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மணலே, அதாவது நான்கு அங்குலம் மேற்பரப்பே வேளாண்மைக்கு ஏற்றது. இப்புவிக் கோளத்தில் கல் தோன்றிய பிறகே மண் தோன்றியது. இந்த மண் தோன்ற, குறைந்தது 10 இலட்சம் ஆண்டுகள் பிடித்தன என்று உணர்ந்தால், நிலத்தின் மேற்பரப்பில் உள்ள மண் கண்டத்தின் அருமை நமக்குப் புரியும்.

தமிழகத்தின் நிலப்பரப்பில் - விளை நிலப் பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு நிலம் செம்மண் நிலமேயாகும். இந்தச் செம்மண் கண்டமும் ஆழமற்றது; இளகிய இயல் புடையது. கார நிலையுமின்றி அமில நிலையுமின்றி, சம நிலையில் இருக்கிறது.

மண் உயிரற்ற பொருள் அன்று. பல்வகை உயிரினங் களின் வாழிடம் அது. நுண்ணாடிக்கும் புலப்படாத வைரஸ் முதல் பாக்டீரியா, ஆக்டினோமை சீட்ஸ், பாசி, ஆம்பி, ப்ரோட்சோவர், மண்புழு, எறும்பு, இன்னும் பிற பூச்சிகள், பிராணி இனங்கள் அதில் வாழ்ந்து வருகின்றன.

ஒரு கைப்பிடி மண்ணில் கோடானு கோடி உயிர்கள் இருக்கின்றன. அவற்றில் சில, சூழ்நிலை செம்மையாக வாய்ந்திருப்பின் மிக மிக விரைவாகப் பெருக்கமடைகின்றன. குளிர் மண்ணில் உயிர்களுடைய செயல் குறைவுபடுகிறது. மண்ணில் ஈரம், வெப்பம், காற்று ஆகிய மூன்றும் செவ்வையாக அமைந்தால் அவ்வுயிர்களுக்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படுகிறது.

சுறுசுறுப்பாக மண் புழுக்கள் நிறைந்திருக்கும் மண், வளம் நிறைந்திருப்பதை உணர்த்தும். அதேபோல் பல்வகை உயிரினங்கள் கண்ணுக்குப் புலனாகாவிடினும் ஒரு வாரத்தில் எண்ணற்றனவாக கணக்கிலடங்காதனவாகப் பல்கிப் பெருகி வளர்கின்றன.

மண் வளம் என்பது அளவற்ற சொத்து மதிப்புடையது. வேளாண்மை பொருளாதாரத்தின் உயிர்நாடி, மண் வளத்தைப் பாதுகாத்தலேயாம். மண்வளத்தை இரசாயன உரங்கள் மூலம் பாதுகாக்க முடியாது. இரசாயன உரங்கள் உரம் என்று கூறப்படுவதே; ஒரு உபசார முறைதான்.

நிலத்தின் வளத்தைக் காப்பது, இயற்கைத் தொழு உரமும், தழைச்சத்து உரமுமே என்பதை நம் விவசாயிகள் நினைவில் கொள்ள வேண்டும். இரசாயன உரங்கள் நிலத்தில்

உள்ள உரத்தை விரைந்து பயிர்களுக்கு எடுத்துத் தரும் கிரியா ஊக்கிகள் என்பதை நாம் உணர வேண்டும்.

மண் வளத்திற்குப் பகை, மண்அரிப்பு. இந்த மண் அரிப்பு, விவசாயத் தொழிலைச் சீர்குலையச் செய்து, மனித குலத்துக்கே அழிவைத் தரும். ராஸ்டன் செப் என்ற விஞ்ஞானி மண் வளம் பற்றி ஆராய்ந்து புகழ்பெற்ற விஞ்ஞானி. ரோம் சாம்ராஜ்யத்தின் அழிவுக்குப் பயிர்த் தொழில் சீர்குலைந்ததும் ஒரு காரணம் என்று கூறி உள்ளார் அவர்.

மண்வளம் குறைதல் ஒரு நாட்டு மக்களின், வாழ்க்கை வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகும். மனிதரின் உடல் நலிவுக்கு ஊட்டச்சத்து இன்மை காரணம். ஊட்டச்சத்து தரும் உணவின்மைக்குக் காரணம் விவசாயச் சீர்குலைவு.

விளையும் நன்செய் - புன்செய் புலங்களையோ, பழத் தோட்டங்களையோ கால்நடைகள் மேயும் மேய்ச்சல் தரையாக மாற்றுவதும் அல்லது தாமே ஆகும்படி விட்டு விடுவதும் கூடாது. கால்நடைகளைக் கண்டபடி கட்டுப் பாடில்லாத வகையில் - குறிப்பாக ஆடுகளை மேய்க்கும் முறைகேடுகளால் மண் அரிப்பு ஏற்பட்டு மண்வளம் கெடும்.

இன்று தமிழ்நாட்டில் மேய்ச்சல் தரை என்பதே இல்லை. சில இடங்களில் புல்லே இல்லாத மந்தை வெளி களை மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்துகின்றனர். ஊர்கள் தோறும் கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு மேய்ச்சல் தரையையும், கால்நடைத் தீவனத் தழைகளைத் தரும் மரங்களையும் வளர்த்தால்தான் நம்முடைய நிலத்தின் மண்வளத்தைக் காப்பாற்ற முடியும். வேளாண்மையிலான பொருளாதாரமும் செழிப்பாக இருக்க முடியும்.

காற்றினாலும் மண் அரிப்பு ஏற்படுவது உண்டு. அதாவது காற்றினால் மண் பறந்து போய்விடுதலாகும். இதனைத் தடுக்கப் புலங்களின் எல்லையில் - வேலிகளில்

காற்றுத் தடுப்பு மரங்களை - உயர்ந்த மரங்களை - உதி, பூவரசு, பலா முதலியவைகளை நடுவது நன்மை பயக்கும். இதனால், காற்றால் மண் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

நமக்குத் தீங்கு செய்யும் மண் அரிப்பு, மனிதனால் - அவனுடைய அக்கறையின்மையால், அலட்சியத்தினால் ஏற்படுவதேயாகும். மண் அரிப்பு, மனிதனுடைய கட்டுப் பாட்டுக்குள் அடங்கியதே! தடைபடா மண் அரிப்பு, வறுமைக்குரிய வாயில், சமுதாயத்தின் வலிமைக்கும் பொருளாதாரச் செழிப்புக்கும் உலைவைக்கும்.

இன்று நம்முன் உள்ள தலையாய பிரச்சனைகளுள் ஒன்று, உடனடியாகக் கவனிக்க வேண்டிய பிரச்சனைகளுள் தலையாயது மண் அரிப்பேயாகும். மண் அரிப்பு, இந்தியப் பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும். ஆதலால்,

*நிலத்தினை உழாமல் தரிசாகப் போடாதீர்!*

*நிலத்தினை மேடு பள்ளமாக அமைய விடாதீர்!*

*சமநிலைச் சமுதாயம் காண முதல் முயற்சி,*
*சமநிலை நில அமைப்பு!*

*பெய்யும் மழை நீர்,*
*நின்றும் நிற்காமலும்*
*மெல்ல நிலமகளைத் தழுவி ஓடச் செய்வீர்!*

*மனிதனுக்கு ஆடைபோல*
*நிலத்திற்கு ஒரு பசுமை, போர்வை!*

*கண்டபடி ஆடு மாடுகளைக்*
*கட்டுப்பாடில்லாமல் மேயவிடாதீர்!*

*விரைவில் கொள்ளை லாபம் தரும் எதுவும்*
*அழிவையே தரும்.*

*காடுகளை அழிக்கும் வெள்ளாடுகளைத் தவிர்ப்பீர்!*

*நிலத்தை ஊட்டி வளர்க்கும்*
*செம்மறியாடுகளைச் சேர்த்திடுவீர்!*

*காற்றுத் தடுப்பு மரங்களை*
*வேலிகள் தோறும் நடுவீர்!*

*காலத்தால் அமைந்த மண்வளத்தை இழக்காதீர்!*

*மண்வள இழப்பு,*
*மனிதகுலத்திற்கு அழிவு என்று உணர்வீர்!*

நம்முடைய விவாயப் பாதிப்புக்கும் வேளாண்மை அடிப்படையிலான பொருளாதாரப் பாதிப்புக்கும் மிக முக்கியமான காரணங்களில் ஒன்று, வறட்சி.

நமது நாட்டில் பெய்யும் மழை 76 சென்டி மீட்டருக்கும் குறைவு. இந்தியாவில் பெய்யும் மழையைத் தென்மேற்கி லிருந்து வீசும் காற்று இந்துமாக் கடலில் படிந்து நீர் சுமந்துகொண்டு வந்து தருகிறது. இதுவே, தென்மேற்குப் பருவக் காற்று மழை. தென்மேற்குப் பருவ மழையே பெய்யும் மழையில் பெரும் பகுதி தோராயமாக 75 விழுக்காடு.

அடுத்துப் பெய்வது வடகிழக்குப் பருவ மழை. ஒரு ஆண்டில் 76 சென்டி மீட்டருக்கும் குறைவாக மழை பெய்தால் அந்தப் பகுதி வறட்சியால் பாதிக்கும்.

நம் தமிழ்நாடு இவ்வகையில் பாதிப்புக்குள்ளாவது. இங்ஙனம் வறட்சியால் பாதிப்பதைத் தவிர்க்கவும் மழையைக் கூடுதலாகப் பெறவும் காடுகளின் அளவைக் கூடுதலாக்க வேண்டும். வேளாண்மை முறைப்படி மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும். இப்போது அவ்வளவு இல்லை.

பெய்யும், குறைந்த மழைத் தண்ணீரை, முறையாகப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும். கோடை மழை - தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் நிலத்தை உழுதுவிட

வேண்டும். இதனால் நிலம், பெய்த மழைத் தண்ணீரைத் தன்பால் ஈர்த்து வைத்திருக்கும்.

அடுத்து வரும் வடமேற்குப் பருவ மழைக் காலத்தில் நடவு செய்யத்தக்க வகையில் கிணற்றுத் தண்ணீரைக் கொண்டு நாற்றுப் பாவி வைத்துக் கொள்ள வேண்டும்.

வடமேற்குப் பருவ மழை பெய்தவுடன் உழுத நிலத்தை ஒன்று அல்லது இரண்டு உழவில் சேறு கலக்கி நட்டு விட்டால் தண்ணீர்ப் பாசனம் இல்லாமலே மழை நீரிலேயே பயிரை வளர்த்து மகசூல் கண்டுவிடலாம்.

நாளுக்கு நாள் பருவ காலம் மாறி வருகிறது. மழையின் அளவும் குறைந்து வருகிறது. இந்தச் சூழ்நிலைகளை யெல்லாம் கவனத்தில் கொண்டு விவசாயிகள் நடந்து கொண்டால்தான் வேளாண்மை அடிப்படையிலான பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும்.

ஆற்றில் தண்ணீர் வரட்டும், கண்மாயில் நீர் நிறை யட்டும் என்பது இன்றைய சூழ்நிலைக்கு ஒத்து வராதது. அதோடு பெய்யும் மழைத் தண்ணீரைச் சொட்டு நீர்கூட வீணாகாமல் சேகரிக்கும் மனப்பான்மை தேவை.

நிலத்தில் புல், பூண்டு முளைத்து வளர்ந்து மூடியுள்ள இடங்கள் மழை நீரை மிக மந்த கதியில் தத்திச் செல்லும். காடு அடர்ந்த நிலத்து மண், தன்மேல் விழும் நீரைக் கடற் பஞ்சுபோல் உறிஞ்சித் தேக்கி நிறுத்திக் கொள்ளும்.

ஆதலால், நீர்ச் சேர்க்கை நிலப்பகுதி, நீர்ப் புரளி நிலப்பரப்பு, கண்மாய்கள், வாய்க்கால்கள், கண்மாய்க் கரைகள் முதலியவைகளில் மரங்களை வளர்ப்பது நல்லது. இந்த மரங்கள் தண்ணீரைக் குடித்துவிடும் என்ற அச்சம் தவறானது. 10 விழுக்காட்டுத் தண்ணீரைக் கூட மரம் குடிப்ப தில்லை.

அவை, பெய்யும் மழை நீரை நிலத்துக்குள் செலுத்தி நிலத்தடியில் நீரைத் தேக்கி வைத்து, கிணறுகளில் நீர்

வளத்தைப் பாதுகாத்துத் தரும். புவியீர்ப்பு ஆற்றல் நீர்த் திவலைகளை நிலத்துக்கள் இழுத்து வைத்துச் சேமிக்கிறது.

இங்ஙனம் மரம், புல், முதலியவைகளால் மழை நீரை முறைப்படுத்திய மிதமான நீரோட்டமாக அமையவிடாமல், ஓடையாக விரிவடைந்து ஓட அனுமதித்தல் கூடாது. உடன் தடுத்துச் சீர்செய்ய வேண்டும். இல்லையேல் அவை மாபெரும் ஓடைகளாகி நிலம், பண்ணை, ஊர் முழுதும் கூட அழித்துவிடும்.

வேளாண்மை பொருளாதாரத்தில் நிலமும் நிலத்தின் வளமும் பெரும்பங்கு வகிப்பதால் மண்வளம் பற்றியும் மண் அரிப்பைப் பற்றியும் அதிகம் சொல்ல நேரிட்டது.

வேளாண்மைக்கு அடிப்படையான மண்வளத்தைப் பற்றி அறிந்துகொண்டோம். நமது தமிழ் நாட்டின் நிலப் பரப்பு, பெய்யும் மழை, இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப உள்ள தொழில், பழமரம் வளர்ப்பு. செம்மண் சரளை கலந்ததாக இருப்பதால் மாவும், பலாவும் நன்றாக வளரும்.

மாவிற்கு, வைத்த முதலாண்டிற்கு மட்டும் தண்ணீர் ஊற்றினால் போதும். பின் வரும் ஆண்டுகளில் மழைநீர் மரத்தைச் சுற்றித் தங்குவதற்கு ஏற்றவாறு மண்ணைக் கட்டினாலும், நிலத்தை உழுதாலும் போதும். தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்ற அவசியம் இல்லை.

அதிக முதலீடும் தேவையில்லை. ரூ. 5000 இருந்தால் போதும். பின் ஆண்டுதோறும் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் ரூ. 2000 வரை செலவாகும்.

மா, பயிர் செய்யும் நிலத்தில் முதல் ஆறு வருடங்கள் வரையில் ஊடு பயிர் பயறுவகைகள், கடலை முதலியன சாகுபடி செய்யலாம். இதில் பராமரிப்புச் செலவுக்குரிய தொகை கிடைத்து விடும்.

மாம்பழ வகையில் நீலம், பெங்களூர் நமது பகுதிக்கு ஏற்றது. இது பணப்பயிரும் ஆகும். இந்தப் பழ மரங்கள்

ஆண்டுதோறும் தவறாமல் காய்க்கும். மரம் முழுவதும் காய்க்கும். ஐந்து வருடத்திலிருந்தே காய்க்க ஆரம்பித்து விடும். 10 வருடத்திலிருந்து நன்றாகக் காய்க்கும்.

சராசரி மரம் ஒன்றுக்கு 50 கிலோ காய்க்கும். ஒரு கிலோ விலை 10 ரூபாய். 40 மரங்களுக்கு 2000 கிலோ. இதன் மதிப்பு 20000 ரூபாய். இவ்வளவு வருமானம் வேறு எந்தச் சாகுபடியிலும் கிடைப்பதில்லை. மாவின் வயது 35 வருடம் முதல் 40 வருடம் வரையாகும்.

அடுத்து, பலாமரம். பயிரிடும் செலவு, பராமரிப்புச் செலவு ஆகியவை மாவைப் போலவேதான் இதற்கும் ஆகும். ஆனால், ஒரு ஏக்கருக்கு 70 மரங்கள் நடலாம். பலாவும் 5 வருடம் முதல் பலன்கொடுக்க ஆரம்பித்து 10 வருடத்தி லிருந்து முழு மகசூல் தரும். அதாவது பலாமரம் ஒன்றுக்கு 10 பழம் 70 மரங்களுக்கு 700 பழம். ஒரு பழத்தின் விலை ரூ. 80 பலா சாகுபடியின் மூலம் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி ரூ. 50,000 வருவாய் கிடைக்கும்.

ஆதலால், நம் நாட்டுப் பொருளாதாரத்தில் குறிப்பாக அந்நிய நாட்டுச் செலாவணியில் பழத்தின் பங்கு அதிகம். நம்முடைய நாட்டின் ஏற்றுமதியில் 25 விழுக்காட்டுக்கும் மேலாகப் பழங்களும் பழப்பக்குவப் பொருள்களும் பங்கு வகிக்கின்றன.

பழத்தோட்டம் அமைக்கும் தொழிலை அறிய பழக் கன்றுகளை வாங்க பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலுள்ள நேமம், அரசு பழப் பண்ணையை நாடலாம்.

நமது நாட்டில் பல பகுதிகளில் தென்னை நன்றாக வளரும். தென்னை, நல்ல பணப் பயிர்; நல்ல வருமானம் தரக் கூடியது. தென்னை ஒரு ஏக்கருக்கு 50 முதல் 60 வரை நடலாம்.

சில உயர் ரகங்கள் அல்லது கவனிப்பு அடிப்படையில் ஐந்து வருடத்திலேயே காய்ப்புக்கு வந்து விடும் காலதாமத மாயின் ஏழு வருடங்களில் காய்க்கத் தொடங்கிவிடும். நல்ல முறையில் உரம் வைத்து மாதம் 2 தண்ணீர் பாய்ச்சினால் ஒரு மரம் சராசரி 200 காய் காய்க்கும். குறைந்தாலும் 100 காய்க்குக் குறையாது.

ஆனால், நாட்டில் இப்போது சராசரி மரம் ஒன்றுக்கு 60 காய்தான் காய்க்கிறது. 200-க்கும் 60-க்கும் உள்ள வித்தியாசம் – இழப்பு இது நம்முடைய பொருளாதாரத்தைப் பாதிக்கும். சராசரி ஒரு தென்னை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 800 கொடுப்பதற்குப் பதில் ரூ. 240 தான் தருகிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் தேங்காயின் பங்கு கணிசமானது. ஆதலால், தென்னையை நன்றாகப் பராமரித்து உரிய பயனை அடைவதன் மூலம் விவசாயி களின் வாழ்க்கைத் தரம் உயரும். நாட்டின் பொருளாதாரம் மேம்படும்.

இந்தியாவின் பொருளாதாரத்தில் விவசாயப் பொருள் களின் விலைக் கொள்கை, விவசாயிகளுக்கு ஏற்றதாக இல்லை. விவசாயப் பொருளாதாரத்தில் ஏற்படும் இலாபத்தைப் பெரும்பாலும் இடைத் தரகர்களே அடை கின்றனர்.

பழம், காய்கறிகளை அழுகாமல் பாதுகாக்கும் வசதிகள் உற்பத்தியாகும் தலங்களில் இல்லை. நெல்லும் கூடப் போதிய பாதுகாப்புச் செய்யப் பெறாமல் பல லட்சம் டன்கள் வீணாகின்றன.

வேளாண்மைப் பொருளாதாரத்தில் சீரான நிலை, நிலவ வேண்டுமானால் மற்றப் பொருள்களுக்குப் போல, உற்பத்தி செய்பவர்களே, விலை நிர்ணயிப்பவர்களாக இருக்க வேண்டும்.

உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் இடைத்தரகர் இல்லாமல் இருப்பது நல்லது. தவிர்க்க இயலாது எனில், தரகர்களின் எண்ணிக்கையையாவது குறைக்க வேண்டும். அப்போதுதான் விலை குறையும்; விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும்.

நமது நாடு, காய்கறி உற்பத்தியிலும் பற்றாக்குறை யுடையதேயாகும். அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதும் கூடக் காய்கறியே என்பதை மறந்து விடக் கூடாது. ஒரு ஏக்கரில் காய்கறி சாகுபடி செய்ய ரூ. 1100 செலவாகும்; ஆனால் வரவு ரூ. 4750 ஆகும். தண்ணீர்த் தேவையும் குறைவே. பராமரிப்பில் மட்டுமே அக்கறை தேவை.

அடுத்து நமது நாட்டுப் பொருளாதாரத்தில் நெல் கணிசமான பங்கு வகிக்கிறது. நெல் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருப்பது மகிழத்தக்கது.

ஆயினும், நமது நாட்டில் நெல் உற்பத்தி ஹெக்டேர் ஒன்றுக்கு 3½ டன்னுக்குப் பதில் 1½ டன்னாகத்தான் இருக்கிறது. நெல் உற்பத்தியை மேலும் கூட்டினால் வேளாண்மைப் பொருளாதாரம் சிறக்கும்.

இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மைப் பொருளாதாரம் முதல் இடத்தை வகிக்க வேண்டும். தரிசு நிலங்கள் அனைத்தும் ஏதாவது ஒருவகையில் மேம்பாடு அடைய வேண்டும்.

விவசாயத்தைப் பன் முகமாகச் செய்தால்தான் நெல், பழமரங்கள், தென்னை, காய்கறிகள் என்று நிலத்தைப் பிரித்துச் சாகுபடி செய்தால்தான் ஆண்டு முழுவதும் வருமானம் வரும்.

கூடுதலான நிலப்பரப்பில் வியாபார ரீதியான பழங்கள், தென்னை போன்றவைகளை உற்பத்தி செய்தால் தான் இந்திய நாட்டின் பொருளாதாரத்தில் அந்நியச் செலவாணியை அதிகமாக அடைய முடியும்.

வேளாண்மைத் தொழில் எல்லாத் தொழிலையும் விடச் சிறந்தது; சுதந்திரமானது; நிலையானது. விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம், உற்பத்தி செய்த பொருள் களைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கு உரிய ஏற்பாடுகள் தேவை.

**வேலை தேடிப் போக வேண்டாம்!**
**வேளாண்மையில் ஈடுபடுவோம்!**

## 7. கால்நடை

## பொருளாதாரச் சிந்தனைகள்

**(24–9–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

மனித வாழ்க்கையில் கால்நடைகள் வகிக்கும் பங்கு மிகவும் பெரியது ஆகும். மனிதனுக்கு உற்ற தோழமையாக வளர்ந்து, வாழ்ந்து அவனுக்கு ஊட்டம் தருவனவாகவும், ஆக்கம் தருவனவாகவும் விளங்கும் பெருமை கால்நடை களுக்கே உண்டு.

மனிதனின் இன்றியமையாத் தேவைகளாகிய உணவு, உடை, களிப்பு, மகிழ்ச்சி, காவல் என துறைதோறும் கால் நடைகள் முக்கியமான இடத்தைப் பெற்று வந்து உள்ளன; பெற்று வருகின்றன. விவசாயத் தொழிலுக்கும் கால்நடைகள் தேவை. நிலத்திற்கு வளம் காக்கும் தொழு உர உற்பத்திக்குக் கால்நடைகள் மிகவும் தேவை மட்டுமல்ல, இன்றியமை யாதவையுமாகும்.

கால்நடைகள் இல்லையேல் விவசாயம் இல்லை; உணவு இல்லை; ஏன் மனிதகுல வாழ்க்கையின் ஆதாரமே கால்நடைகள் என்றால் மிகையாகாது. அதனாலேயே செல்வத்திற்கு “மாடு” என்று பெயர் சூட்டியது வள்ளுவம்.

தமிழர் தம் அகத்திணை வாழ்விலும் கூட ஏறு தழுவுதல் என்ற துறை அமைந்துள்ளது. தொன்மையான சிவநெறியில் எருது சிறப்பான இடத்தை, சிவபெருமானுக்கு ஊர்தியாகவும், உயர்த்திப் பிடிக்கும் கொடியாகவும் சிறப்பிக்கப் பெறுகிறது. தைத் திங்களில் பொங்கலின் போது, மாட்டுப் பொங்கலும் உண்டு.

இந்திய நாட்டின் பொருளாதாரத்தில் கால்நடைகளின் பங்கு சுமார் 9 விழுக்காடு இருந்து வருகிறது. இந்தியாவில் வேளாண்மைத்துறை மூலம் கிடைக்கும் வருவாயில் 30 விழுக்காடு கால்நடைகள் மூலம் கிடைக்கிறது. இது தவிர, தோல் மற்றும் தோல் அடிப்படையில் ஆன பொருள்களின் உற்பத்தி 2600 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைப் பொருளா தாரத்தின் பங்கு கணிசமாக இருக்கிறது. நமது நாடு, அந்நியச் செலாவணியாக 50 கோடி ரூபாய் வரையில் கால்நடைகளின் தோல், தோல் அடிப்படையிலான பொருள்கள் ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈட்டுகிறது. ஆதலால், தரமான கால்நடை களை - மாடுகளை வளர்ப்பதன் மூலம் அந்நியச் செலா வணியைக் கூடுதலாக ஈட்டமுடியும்.

நிலங்களில் பணப்பயிர்கள் சாகுபடி செய்து அடையும் இலாபத்தை விட கால்நடைகளுக்குள்ள தீவனப்புல் வளர்த்து, கால்நடைகளையும் வளர்த்தால் அதிக இலாபம் கிடைக்கும்.

மூன்று கலப்பின ஜெர்சி கறவை மாடுகள், 54-1 அளவுள்ள தலைச்சேரி இன வெள்ளாடுகள் கொண்ட ஒரு யூனிட் வைத்து வளர்த்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 22,800 கிடைக்கும். சாதாரணமாகச் செய்யும் சாகுபடியில் ரூ. 8,450 தான் கிடைக்கும். இந்த மாதிரி பண்ணைகளுக்கு "ஒருங்கிணைந்த பண்ணை" என்று பெயர்.

இந்த ஒருங்கிணைந்த பண்ணையில் வேலை நாட்களும் குறைவு. பால் உற்பத்தியை மையமாகக் கொண்ட ஒருங்கிணைந்த கூட்டுப் பண்ணையில் பால் மூலம் கிடைக்கும் ரொக்கப் பணம் மொத்த வருமானத்தைக் கூடுதலாகத் தரும். அதுமட்டுமன்றி ஆண்டு முழுவதும் வருமானம் தரும்.

நாட்டினை வளப்படுத்தும் பாதையில் பலதரப்பட்ட தொழில்கள் இருந்தாலும் விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களும்தான் இன்னும் முன்னணியில் உள்ளன

கால்நடை வளர்ப்புக்கு அனுசரணையான வேளாண்மைக் காடுகளிலும் அதைச் சார்ந்த தொழில் களிலும் நாட்டின் 60 விழுக்காடு மக்கள் ஈடுபட்டுள்ளனர். நாட்டு மக்கள் தொகையில் 60 விழுக்காடு மக்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது கால்நடைகள் வளர்ப்பும், கால்நடை சார்ந்த தொழில்களுமே யாம்.

நமது நாட்டு மக்களுக்கு - விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்பு அறிவியல் சார்ந்த தொழில் என்பதை உணர்த்த வேண்டும். கால்நடைகளை அறிவியல் சார்ந்த வகையில் வளர்க்காவிடில் போதிய பயன் தாரா; வருவாயும் தாரா.

பழங்காலத்தில் கால்நடை வளர்ப்பு, வேளாண்மையின் துணைத் தொழிலாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இன்று, கால்நடை வளர்ப்பு, வியாபார நோக்கத்துடன் கூடிய ஒரு தொழில் என்ற நிலைக்கு வளர்ந்துவிட்டது.

கால்நடைகளில் கலப்பினம், கால்நடை வளர்ப்பில் புதிய நெறிமுறைகள் - உத்திகள், நோய்த் தடுப்பு முறை, கால் நடை அடிப்படையிலான புதிய புதிய தொழில்கள் ஆகியன நாளும் வளர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இனிமேலும் வளரும்.

இத்தகு அறிவியல் சார்ந்த பேணலால் - பராமரிப்பால், 1970-1971-ல் 93,400 டன்னாக இருந்த பால் உற்பத்தி, 3,37,500

டன்னாக உயர்ந்துள்ளது. இது தவிரக் கோழிப்பண்ணை வளர்ப்புத் தொழிலால் 1961-ல் 650 கோடி ரூபாய் மதிப்பிலிருந்து, 1989-ல் ரூ. 34,540 மில்லியன் ரூபாய் அளவுக்கு வளர்ந்துள்ளது.

உலக நாடுகள் பலவற்றையும்விட இந்தியாவில் கால் நடைகள் அதிகம். உலகத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் சற்றேறக் குறைய 21 விழுக்காடு நமது நாட்டில் உள்ள கால்நடைகள்.

கால்நடைகளில் முதன்மையானது பசு. நமது சமுதாய மரபுப்படி பசு, பூசனைக்குரியது. ஆயினும் பசுக்கள் வளமாக வளர்க்கப்படுவதில்லை.

நமது நாட்டில் 17.6 கோடி பசுமாடுகள் உள்ளன. எருமைகள் 5.3 கோடி உள்ளன. ஆக 22.9 கோடி மாடுகள். இவற்றில் காளை - கிடா ஆகியவற்றைக் கழித்துக் கணக்கிட்டதில் 8 கோடி பால் மாடுகள் உள்ளன.

இந்த 8 கோடி பால் மாடுகளில் 2.4 இலட்சம் பால் மாடுகள்தான் தினசரி 2 லிட்டருக்கு மேல் பால் கொடுக்கின்றன. பாக்கி 5.6 இலட்சம் பால் மாடுகள் தினசரி 2 லிட்டருக்கும் குறைவாகவே பால் கறக்கின்றன.

நம் நாட்டுப் பசுக்கள் வருடம் சராசரி 175 கிலோ கிராம்தான் பால் கறக்கின்றன. எருமைகள் வருடம் சராசரி 440 கிலோ கிராம் பாலே கறக்கின்றன. இந்த அளவு, அறிவியல் சார்ந்த முயற்சியால் 5431 லிட்டராக உயர்த்தப் பெற்றுள்ளது.

நமது தமிழ்நாட்டில் 107.75 இலட்சம் பசுக்களும் 28.79 இலட்சம் பால் கறக்கும் எருமைகளும் உள்ளன. தமிழ் நாட்டில் ஒரு பசுமாடு ஓர் ஆண்டுக்குக் கொடுக்கும் பாலின் சராசரி அளவு 200 லிட்டர்; ஓர் எருமை 283 லிட்டர். ஓர் ஆடு 20 லிட்டர். ஆயினும் நம்முடைய தேவையை நோக்க, பற்றாக்குறையே!

ஒரு மனிதனுக்குச் சராசரி ஒரு நாளைக்கு 280 கிராம் பால் தேவை. தமிழ்நாட்டில் கிடைப்பதோ சராசரி 61 கிராம்தான். இந்தப் பற்றாக்குறையைப் போக்க, தரமான கால்நடைகளை வளர்க்க வேண்டும்.

நவீன அறிவியல் சார்ந்த பராமரிப்பு முறைகளைக் கையாண்டு பால் உற்பத்தியைக் கூட்ட முயலவேண்டும். அப்போதுதான் நமது பொருளாதாரம் மேம்பாடுறும்.

நமது தேவையில் 37.5 விழுக்காடு பாலே இப்போது உற்பத்தியாகிறது. பால் உற்பத்தி மும்மடங்கு உயர்ந்தால்தான் சுயதேவை பூர்த்தியாகும். மக்களுக்கு நலம் சார்ந்த வாழ்க்கை கிடைக்கும்.

பண்ணைகளில் வளர்க்க, பசுக்கள் சிறந்தவையா? எருமைகள் சிறந்தவையா? கணக்கின்படி பார்த்தால் பசுவை விட, எருமை அதிகப் பால் கறக்கிறது. பசுவின் பாலில் உள்ளதைவிட எருமைப் பாலில் இரண்டு மடங்கு வெண்ணெய் அதிகமாக இருக்கிறது. பண வருவாயை நோக்கின் பசுவைவிட எருமைதான் நல்லது.

ஆனால், பசு தூய்மையாக இருக்கும். எருமை அசுத்த மானது. எருமைகள் வளர்ப்பதால் நோய் பரவுவதற்குரிய வாயில்கள் மிகுதி. மக்களின் நீண்ட நெடிய நல்வாழ்வு நோக்கில் பசுமாடுகள் வளர்ப்பே நல்லது.

மாடுகளின் வளர்ச்சி 4 முதல் 5 ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும். அதன் பிறகு அவை வளர்ச்சி அடைவதில்லை. பசுமாட்டின் சராசரி வயது 20 முதல் 23 ஆண்டுகளாகும். எருமை மாட்டின் சராசரி வயது 23 முதல் 25 ஆண்டு களாகும்.

ஆகவே, மாடுகளின் வளர்ச்சிப் பருவமாகிய கன்று களாக இருக்கும் பருவ காலத்தில் நல்ல ஊட்டச்சத்துக்கள் கொடுத்து நன்றாக வளர்க்கவேண்டும். கன்றுகளுக்குப் புரதச் சத்துள்ள உணவு அதிகம் தேவை.

ஒரு பால்மாடு சராசரி தினசரி 10 முதல் 15 லிட்டர் வரை பால் கொடுக்காது போனால் பால்மாடு வளர்த்தல் தொழில் ரீதியாக அமையாது. பண வருவாய் குறையும்; செலவு கூடும். சராசரி 8 லிட்டராவது கறக்கவேண்டும். 2 லிட்டருக்கும் பால் குறைந்தால் அந்தப் பால்மாடு வளர்ப்பவர்க்குச் சுமையேயாகும்.

இஸ்ரேல் போன்ற நாடுகளில் 60 லிட்டர் வரை ஒரு மாடு கறக்கிறது. நமது நாட்டிலும் பழைய காலத்தில் குடத்தில் பால் கறந்ததாக ஆண்டாள் நாச்சியார் கூறு கின்றார். இப்போது பால் கறப்பது செம்புகளிலும், உழக்கு களிலும்தான்!

பால்மாட்டு வளர்ப்பு மிகவும் பொருளாதார அம்சம் உடையது. ஒரு பசுவின் கறவை மறவைக் காலம் அதாவது ஒரு கன்று ஈனுவதற்கும் அடுத்த கன்று ஈனுவதற்கும் உள்ள கால இடைவெளி குறையவேண்டும். சராசரி, ஓர் ஆண்டுக்கு ஒரு கன்று ஈனுதல் வேண்டும்.

ஆனால், நமது நாட்டில் 12 மாதம் முதல் 18 மாதம் வரை கூட, சினைபிடிக்கக் காலதாமதமாகிறது. கறவை மறவைக் காலத்தைக் குறைத்தால்தான் கால்நடை வளர்ப்பில் இழப்பைத் தவிர்க்க இயலும்.

இரு கன்றுகளுக்கிடையில் 60 நாள்கள் பால் வற்றி யிருந்தால் போதுமானது. இப்போது நடைமுறையில் 60 முதல் 150 நாள்கள் வரையில் கறவை மறவை நீடிக்கிறது. பல இடங்களில் கூடுதலாகவும் இருக்கிறது.

நாட்டுப் பசுக்களைவிட, கலப்பினப் பசுக்கள் இளம் வயதிலேயே பருவம் அடைந்துவிடும். கலப்பினப் பசுக்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்று ஈனும். ஆதலால், நாட்டுப் பசுக்களைவிட, கலப்பினப் பசுக்கள் அதிகப்படியான கன்றுகளை ஈனுகின்றன.

கலப்பினப் பசுக்கள் கன்று ஈன்ற மூன்றாவது மாதத்திலேயே சினைப்பட்டு விடுவதால் சராசரி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கன்று ஈனுகின்றன. அதிகமான கன்றுகளை ஈனுவதோடு மட்டுமின்றி அதிகமான பாலையும் கறந்து தருகின்றன.

ஆதலால், வளர்ப்புக்கு - பொருளாதார ரீதியில் கலப்பினக் கால்நடைகளே நல்லது. கலப்பின மாடுகளைப் பராமரிக்க அதிகக் கவனமும், அக்கறையும், முயற்சியும் தேவை. பயனை நோக்கும்போது இது பெரிதல்ல.

கால்நடை வளர்ப்பில் முக்கியமானது பசுந் தீவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகளுக்குத் தற்சமயம் பசுந்தீவனப் பற்றாக்குறை 50 விழுக்காட்டுக்கும் கூடுதல் ஆகும். இந்த விவரம் புள்ளியியல்படியாகும். உண்மையில் இந்த அளவைவிட, பசுந்தீவனப் பற்றாக்குறை கூடுதலாகவே இருக்கும்.

பொதுவாக நமது நாட்டு விவசாயிகள், தங்களுடைய நிலத்தின் ஒரு பகுதியில் கால்நடைகளுக்குப் பயன்படக் கூடிய பசுந்தீவனங்களைப் பயிரிடுவதில்லை; பயிரிட விரும்புவதும் இல்லை.

பொதுவாகக் கால்நடைகளுக்கு, வேளாண்மைக் கழிவுப் பொருட்களையே தீவினமாகத் தருகின்றனர். இவற்றில் பிரதான இடத்தில் இருப்பது வைக்கோல்.

வைக்கோல், கால்நடைகளுக்கு மிகவும் தேவையான நார்ச்சத்து மிக்க உணவு. ஆனால், வைக்கோலின் மூலம் மாடுகளுக்குக் கிடைக்கும் ஊட்டம் மிகவும் குறைவேயாம். வைக்கோலின் பயன், மலக்குடல் இயக்கத்திற்கு - அமுக்கத்திற்கு உதவியாக இருந்து சாணத்தை வெளித்தள்ளுதலேயாகும்.

ஆதலால், பால் மாடுகளுக்கு இன்றியமையாதனவாக உள்ள பசுந்தீவனப் பயிர்களை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தவேண்டும். நமது நாட்டு விவசாயிகளில் 80 விழுக்

காடு விவசாயிகள் 2½ ஏக்கர் நிலமும் அதற்குக் குறைவான நிலமும் வைத்திருப்பவர்களேயாம். இந்தச் சிறு விவசாயி களின் பொருளாதார மேம்பாட்டுக்கு மிகுதியும் பயன்தரக் கூடியதும், பண வருவாய் உடையதுமான உபதொழில் பால்மாடு வளர்த்தல். ஏன்?

வருவாய்க்கு உத்தரவாதம் உடைய தொழிலாகவும் அமையும். சிறு விவசாயிகள் தங்களது நிலத்தில் 0.80 ஹெக்டேர் நிலத்தை விவசாயத்திற்கும் 0.20 ஹெக்டேர் நிலத்தை கால்நடைத் தீவனம் பயிர் செய்வதற்கும் என்று ஒதுக்கி, அப்பகுதியில் சோளம், மக்காச் சோளம், கோ 1, கினியாகோ 2, போன்றவைகளை வளர்த்தால் பசுந்தீவனப் பற்றாக்குறையைத் தவிர்க்கலாம்.

மேலும் பயறு வகைகளை வளர்த்தால் மனிதருக்கும் உணவாகும். பயறு வகைத் தழைகள் கால்நடைகளுக்குத் தீவனமாகவும் பயன்படும். நிலத்திற்கும் ஆக்ஸிஜன் கிடைக்கும்.

பசுந்தீவனத்தில் புரதச் சத்துள்ள சுபாபுல், கிளைரி சிடியா, அகத்தி, துவரை, வேலிமசால் போன்றவற்றை வளர்க்கலாம். இவற்றில் சுபா தழை மட்டும் சில விதிமுறை களுடன் மாடுகளுக்குக் கொடுக்க வேண்டும். 10 பங்கு சுபா தழையும் 2 பங்கு இதர பசுந்தழைகளுமாகக் கொடுக்க வேண்டும். தனி சுபா புல் மட்டும் தருவது நல்லதல்ல. தனி சுபா புல் மட்டும் கொடுத்தால் மாடுகள் கழியும்.

கால்நடை வளர்ப்பில் - பொதுவாகப் பால்மாடுகள் வளர்ப்பில் பசும்புல் முக்கிய இடத்தை வகிக்கிறது. எல்லா வகையான பசும் புற்களிலும், பயிர்களிலும் புரதம், வைட்ட மின்கள், தாது உப்புக்கள் அதிகமாக உள்ளன.

சினியாப் புல், எருமைப் புல், யானைப் புல், கொழுக் கட்டைப் புல், அருகம்புல், மக்காச்சோளப் புல், சோளப் பயிர் ஆகியவைகள் பயன்படும். மேலும், புரதச் சத்து

அதிகமாக உள்ள குதிரை மசால், பில்லி பெசரா, பர்கி ஆகியவைகளும் பசுந்தீவனமாகப் பயன்படும்.

கால்நடைகளுக்குக் கலப்புத் தீவனம், பசும்புல், வைக்கோல் ஆகியவைகள் தினசரி தீவனத்தில் இடம் பெற வேண்டும். மாட்டின் எடையில் ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் ஒரு கிலோ காய்ந்த புல்லும் மூன்று கிலோ பசும்புல்லும் கொடுப்பது நடைமுறை. இத்துடன் 1.5 கலப்புத் தீவனமும் தரவேண்டும்.

பால் தரும் மாடுகளுக்குத் தீவனம் தரும்பொழுது அவற்றின் எடை, கொடுக்கும் பால் அளவு, பாலின் கொழுப்புச் சத்து போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, தீவனங்கள் தரவேண்டும்! பசுக்களுக்குப் புரதம், எரிசத்து, கொழுப்புச் சத்து, உயிர்ச் சத்து மற்றும் தாதுக்கள் ஆகியவை நாள்தோறும் தேவைப்படும்.

ஆயினும், புரதம், எரிசத்து, தாதுச்சத்துக்கள், சுண்ணாம்பு மணிச் சத்துக்களுக்கு மட்டுமே முதன்மையான இடமளிக்கப் பெறுகிறது. தாதுக்களும், உப்பும் மாடுகளுக்குத் தேவை. உப்புச் சத்து குறைந்துபோனால், மாடுகள் சுவர்களில் உரசும். சிறுநீரை விரும்பிக் குடிக்கும்.

இதைத் தவிர்க்க மாடுகளுக்கு உப்பைத் தீவனத்தில் சேர்க்க வேண்டும். இந்த உப்பை மாடுகளுக்குத் தர, நமது நாட்டு தேசிய ஆராய்ச்சி நிறுவனம். "உப்புக் கட்டி" (Cattle lick) ஒன்றைக் கண்டுபிடித்து அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த உப்புக் கட்டியைப் பால் மாடுகளுக்கு எதிரே கட்டித் தொங்க விட்டு விட்டால் பால்மாடுகள் அதை நக்கிக் கொண்டே யிருக்கும். இந்த உப்புக்கட்டி குன்றக்குடி பால் உற்பத்தி சங்கத்தில் வியாபார ரீதியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு பால் மாட்டுக்கு நாள்தோறும் சராசரி 13 முதல் 15 கிலோ பசும்புல், 9 முதல் 10 கிலோ இலை, 2 கிலோ வைக்கோல் உணவாக வழங்கவேண்டும்.

பசும்புல் பயிர் செய்ய இயலாத காலத்தில் பயன் படுத்துவதற்காகப் பசும்புல்லை Selaje முறையில் பாது காத்துப் பயன்படுத்தலாம்.

செலேஜ் முறையாவது அரை அடி இடைவெளிகள் விட்டு குழிகளை வெட்டி அதன் அடிப்பகுதியில் வைக்கோற் படுக்கை அல்லது பாலிதீன் பேப்பரை விரித்து, குழியின் பக்கங்களிலும் பாலிதீன் பேப்பர்களைத் தடுப்பாக வைத்து, புற்களை ஒருமுழ நீளத் துண்டுகளாக வெட்டி, பரப்பி வைத்து, அதன்மேல் ஆலைக் கழிவுக் கரும்புச் சக்கைகளை உப்புடன் சேர்த்துப் பரப்பவேண்டும்.

இவ்வாறு ஒன்றன்மேல் ஒன்றாகத் தேவையான அடுக்குகளை வைத்தபின், மேல்பாகத்தில் பாலிதீன் பேப்ப ரால் மூடி, காற்றுப் புகாதபடி மண்ணைப் பரப்பிக் குழியை நிரப்பிவிட வேண்டும். மூன்று மாதத்திற்குப் பிறகு, குழியில் வைக்கப்பட்ட புற்களை எடுத்துக் கால்நடைகளுக்கு வழங்க வேண்டும்.

பசும்புல்லை விரும்பி உண்பதைப் போல, மர இலை களைக் கால்நடைகள் விரும்பி உண்பதில்லை. அதனால், தொடக்க காலத்தில் பசும் புற்களுடன் தழைகளைச் சேர்த்து அளித்துக் கால்நடைகளைப் பழக்கப்படுத்த வேண்டும்.

மர இலைகளை 12 மணி நேரம் நிழலில் உலர்த்திக் கொடுத்தாலும் கால்நடைகள் விரும்பி உண்ணும். மர இலைகள் மேல் உப்புக் கரைசலைத் தெளித்து அல்லது வெல்லம் கலந்த தண்ணீரைத் தெளித்துத் தந்தாலும் மாடுகள் விருப்பத்துடன் தின்னும்.

கால்நடைகளின் வளர்ப்பில் வேளாண்மைக் காடு களின் பங்கு மகத்தானது. எவ்வளவு புல் தீவனம் போட்டாலும் ஆடு, மாடுகளுக்கு மேய்ச்சலில் ஏற்படும் திருப்தி வராது. ஆதலால், ஊர்தோறும் மேய்ச்சல் தரைகள் அமைக்க வேண்டும். ஒரு மாடு, சுழற்சி முறையில்

ஆண்டுதோறும் மேய 1 முதல் 1½ ஏக்கர் நிலம் தேவைப் படும்.

கால்நடைப் பொருளாதாரத்தில் செம்மறி ஆடுகள் உரிய இடத்தைப் பெற்று விளங்குகின்றன. ஆழ்கூள முறையில் வெள்ளாடுகள் - தலைச்சேரி ஆடுகளை வளர்ப்பது நல்ல இலாபகரமான தொழில். வெள்ளாடுகளை ஆழ்கூள முறையில் வளர்க்க வேண்டும். இதனை 'கொட்டில் வளர்ப்பு' என்றும் கூறுவர். இதனால் வெள்ளாடுகளால் ஏற்படக் கூடிய காடுகள் பாதிப்பைத் தவிர்த்திடலாம்.

அடுத்து, கால்நடைப் பொருளாதாரத்தில் நமது கவனத்தை ஈர்ப்பது கோழி வளர்ப்பு. கோழிகளைக் கடுமை யாகப் பாதித்த "கம்போரா" நோய்க்கு எதிராக நவீன தடுப் பூசி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 310 முட்டைகள் என்ற நிலைமை மாறி, தற்போது கூடுதல் முட்டையிடும் புதிய கோழியினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த பல ஆண்டுகளாகக் கோழி முட்டைகள் உற்பத்தி கணிசமாக உயர்ந்துள்ளது.

முட்டையிடும் கோழிகளின் எண்ணிக்கை கூடியதன் வழி முட்டை உற்பத்தி 682 மில்லியனிலிருந்து 1821 மில்லிய னாக உயர்ந்துள்ளது. கோழி வளர்ப்பிலும் ஆழ்கூள முறை அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளது.

கால்நடை பொருளாதாரத்தில் மீன் வளமும் அடங்கும், நீண்ட கடற்கரைகளையுடைய நமது நாட்டுச் செல்வத்தில் மீன் வளத்திற்குரிய பங்கு மிகப் பெரிது, கடல் மட்டுமல்ல. உள்நாட்டு நீர் நிலைகளிலும் மீன் வளர்ப்புப் பண்ணைகள் உண்டு.

ஒருங்கிணைந்த பண்ணைகளில் குட்டை இருந்து மீன் வளர்த்தல் நல்ல வருவாய் கிடைக்கும். மீன்கள் அடிப்படையிலான புதிய தொழில் நுட்பங்கள் அறிமுகப் படுத்தப் பெற்றுள்ளன.

நமது நாட்டில் கிழக்கு, மேற்குக் கடற்கரைகளில் அதிகமாகப் பிடிபடும் மீன் வகைகளில் லோமியோ வகையும் ஒன்று. இந்த மீனிலிருந்து ஊறுகாய் தயாரிக்கும் முறை - தொழில் நுட்பம் வந்துள்ளது. இங்ஙனம் தயாரிக்கப்பெற்ற ஊறுகாய் 240 நாள்கள் வரையில் கெடாது. ஏற்றுமதிக்கும் உரியது.

அண்மையில் பரவலாகப் பேசப்படுவது இறால் மீன். இறால் மீனின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. செல்வவள நாடுகளுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைத் திரட்டப் பயன்படுவது இறால் மீன் பண்ணைகள். இறால் மீனுக்குரிய பொருளியல் மதிப்பின் காரணமாக இறால் "பழுப்புத் தங்கம்" என்றழைக்கப் படுகிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் கால்நடைகள் வகிக்கும் பங்கு அளப்பரியது. கால்நடைப் பொருளாதாரம் பன்முனைப் பகுப்புடையது. கால்நடைகள், அறிவியல் தொழில் நுட்பத்துடன் வளர்க்கப் பெற்றால் நல்ல இலாபம் தரக்கூடிய தொழில்.

குறைந்த முதலீட்டில் அதிகம் பேருக்கு வேலை கிடைக்கக் கூடியது. அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரக்கூடியது. உள்நாட்டில் மக்களின் உணவுப் பொருள் களாகப் பயன்பட்டு, நீண்ட நெடிய ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவி செய்யக்கூடிய சிறந்த தொழில்.

பால் மாடுகள், எருதுகள் விவசாயிகளுக்கு முழுமை யாகப் பயன்படுகின்றன. மாடுகளின் தோல் வெளி நாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவி செய்கிறது.

ஆடுகளும் கம்பளி உற்பத்திக்கும், வெறிநாய் தடுப்பூசி மருந்து தயாரிப்புக்கும் பயன்படுகின்றன. அறுவை சிகிச்சைக்குப் பயன்படும் (Citgut) தயாரிக்க உதவுகிறது. பன்றி

களின் இறைச்சி இருதய வால்வுகள் தயாரிக்கப் பயன்படு கிறது.

இங்ஙனம் குடும்பப் பொருளாதாரத்திலும் நாட்டுப் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு வகிப்பதும், மனித குலத்துக்கு எண்ணரிய நன்மைகளைச் செய்து வருவதுமாகிய கால்நடைகளைப் போற்றுவோம்! வீடுகள்தோறும் பசுமாடு களை வளர்த்து வளமுடன் வாழும் திசையில் செல்வோம்!

## 8. பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு

**(1-10-94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

மனித சமுதாயத்தில் மதிப்பீட்டுக் கொள்கை காலந்தோறும் மாறிக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் அரச பதவிகள் மதிக்கப் பெற்றன. ஆட்சித் திறனும் செங்கோன்மையுமே மதிக்கப் பெற்றன, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த அரசர்கள் எல்லோரையும் மனித குலம் மதிக்க வில்லை. புலமைக்கு, திறமைக்கு, தவத்திற்கு மதிப்பு என்றெல்லாம் இருந்து வந்துள்ளன.

இன்றைய சமுதாயத்தில் பணத்திற்கே மதிப்பு. இதனால் இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு உடைமை சேர்க்கும் சமூகத்தின் பழைய போக்குகள் - மதிப்புக்கள் இன்னமும் மாறவில்லை. இந்த மதிப்புக்குப் பதிலாகப் புதிய மதிப்புக்கள் தோன்ற வேண்டும். அதாவது மனித மதிப் பீட்டுக் கொள்கைகள் உருவாக வேண்டும்.

நமது நாட்டில் ஏழைகளின் தொகுதி மிகுதி. இந்த ஏழைகளுக்கு வாழ்க்கையில் ஆக்கமும், பாதுகாப்பும் தரக் கூடியதும், மனித மதிப்பீட்டுக்குச் சமுதாயம் உருவாகத் துணை செய்வதும் கூட்டுறவு ஒன்றேயாம்.

ஜனநாயக முறையில் பொருளாதா முன்னேற்றம் காண்பதில் பகை வராது. வன்முறைக்கு அதில் வழியில்லை. அமைதியான சகோதர அன்பின் அடிப்படையில் எளிதாகப் பொருளாதார முன்னேற்றம் காணக் கூட்டுறவு துணை செய்யும்.

ஆதிக்கம், இலாபம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் சிரத்தை உள்ளூர முரண்பாடுடையது. இலாபம், ஆதிக்கம் இவற்றில் நாட்டமுடையோர் இலாபத்திற்குத் தரும் முதன்மையை எப்போதும் அன்புக்கும், உறவுக்கும் தரமாட்டார்கள். எவரையும் எப்படியும் தன்னுடைய இலாபத்திற்காகச் சாமர்த்தியமாக உபயோகப்படுத்திக் கொள்வர்.

ஆனால், அவர்கள் மற்றவர்களுக்கு உபயோகப்பட மாட்டார்கள். உள்ளூர முரண்பாடான சிந்தனைகளைக் கொண்டிராத மனிதர்கள் அடங்கிய அமைப்புக்களில் தான், கூட்டுறவு வளரமுடியும்; நிலைபெற முடியும்.

பொருளியல் இயற்றுவதில் தனியார் துறை, அரசுத் துறை அதாவது பொதுத்துறை, கலப்புப் பொருளாதார அமைப்பு, கூட்டுறவுத் துறை என அமையும். மனிதகுலத்தில் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கக் கூடிய சமுதாய அமைப்பே நமது இலட்சியம்.

சோஷலிச சமுதாய அமைப்பை - சர்வோதய சமுதாய அமைப்பை அமைக்க விரும்பினால், அதை நிறைவேற்றத் தனியார் துறை இடமளிக்காது. பொதுத்துறை இடமளிக்கும் என்ற நம்பிக்கை சில ஆண்டுகளுக்கு முன் வரை இருந்தது. இப்போது இந்த நம்பிக்கை குறைந்து வருகிறது.

கலப்புப் பொருளாதாரத்திற்கும் இதே கதிதான். சோஷலிச இலட்சியத்தை அடைய - சர்வோதய சமுதாயத்தை அமைக்கக் கூட்டுறவுத் துறையே துணை செய்யும். இது உறுதி.

நமது நாட்டில் உள்ள இன்றைய கூட்டுறவு அமைப்புக் களின் மூலம் இதனைச் சாதிக்க இயலாது. இன்றைய கூட்டுறவு இயக்கம் அரசாங்க இயந்திரத்தின் இரும்புப் பிடியில் சிக்கியிருக்கிறது.

இழப்புக்கும், ஈட்டத்திற்கும், பொறுப்பேற்காதவர்கள் மேலாண்மைப் பொறுப்பை ஏற்கிறார்கள். கூட்டுறவில் அமைந்துள்ள உள்ளீடான ஜனநாயக மரபுகள் அழிக்கப் படுகின்றன.

இன்றைய இந்தியாவில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் கூட்டுறவு வடிவமைப்பைக் கொண்டுள்ளனவே தவிர, உணர்வால் கூட்டுறவு நிறுவனங்களாக விளங்கவில்லை. இந்தக் குறைபாட்டிலிருந்து ஓரிரு கூட்டுறவு நிறுவனங்கள் விடுபட்டிருக்கலாம். அதற்கு, நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் அரசு அலுவலர்களின் சமூகச் சிந்தனையும், ஆர்வமுமே காரணம்.

கூட்டுறவு இயக்கங்களை மக்களே கண்டு, தொடக்கத் திலிருந்து நடத்தி, நேரிடையாக என்று பங்குகொள்கிறார் களோ, பயனடைகிறார்களோ, அன்றுதான் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறும்.

நமது நாடு விடுதலை பெற்ற நாள் முதல் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வருவது "நமது இலட்சியம் கூட்டுறவுப் பொதுநலச் சமுதாயம்" என்பது. ஆனால், இந்தத் திசையில் இன்று நாம் செல்லவில்லை. வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறோம்.

முதலாளித்துவ சமுதாய அமைப்பை நோக்கியே நாடு போய்க் கொண்டிருக்கிறது. வறுமைக் கோடு என்று ஒன்று நீளுகிறது. அல்லது உயர்கிறது. இந்தப் போக்கு மாற "கூட்டுறவுப் பொதுநலச் சமுதாயம்" காண்பதே வழி; வேறு வழி இல்லை.

மக்கள் எந்தச் சூழ்நிலையிலும், பொருளாதார அடிப் படையில், ஒருவரைச் சார்ந்தில்லாமல், தாமே வாழ முடியும்

என்ற சூழ்நிலையை ஏற்படுத்த, கூட்டுறவுப் பொருளாதாரச் சமுதாயத்தினால் மட்டுமே இயலும்.

மேலும் பிற பொருளாதார அமைவுகளில் பொருள் கிடைத்தாலும் ஆன்மா வளர்வதில்லை; ஆட்சித்திறன் வளர்வதில்லை. சமூகம் ஒருங்கிணைந்து வாழ்வதற்குரிய பண்பு நலன்கள் வளர்வதில்லை. கூட்டுறவுத் துறையில் மட்டுமே ஒருங்கிணைந்த வளர்ச்சி உண்டு. ஒரு நல்ல கூட்டுற வாளன் வறியோரை - நலிந்தோரை அவமதிக்கமாட்டான்.

பொருளாதார முயற்சிகளில் கூட்டுறவுக்கு என்று தனியே எதுவும் இல்லை. எத்துறையிலும் கூட்டுறவு அடிப் படையில் பொருளாதார முயற்சிகளைத் தொடங்கலாம். குறிப்பாக வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, சிறுதொழில் முதலியன கூட்டுறவு முறையில் தொடங்கலாம்.

நமது நாட்டில் வேளாண்மைத் தொழில் கூட்டுறவு முறையில் அமைவது நல்லது. நமது நாட்டில் மிகச் சிறு விவசாயிகளும், சிறு விவசாயிகளுமே எண்ணிக்கையில் மிகுதி. இந்த விவசாயிகள் தங்களின் சிறு சிறு துண்டு நிலங்களில் நவீன சாதனங்களைப் பயன்படுத்த முடியாது. வேலை நாட்களும் அதிகம் பிடிக்கும்.

இதைத் தவிர்க்க 1000 ஏக்கர் நிலப் பரப்பளவில் ஒரு கூட்டுறவு விவசாயப் பண்ணை என்று அமைத்துக் கொண்டால் நவீன விவசாயக் கருவிகளை எளிதில் வாங்கிப் பயன்படுத்த முடியும். ஒரு விவசாய விஞ்ஞானியைக் கூட முழுநேரப் பணியாளராக அமைத்துக் கொள்ள இயலும். விவசாய வேலையில் நாள்களும் குறையும்.

தரமான கூடுதல் விளைச்சலைத் தரக்கூடிய அளவுக்கு விவசாயத்தைப் புதிய தொழில் நுட்பத்துடன் செய்ய இயலும். இன்று இந்த வாய்ப்பு இல்லை. "கூட்டுறவுப் பண்ணைகளை ஆரம்பிக்காவிடில் நாம் விவசாயப் பலன்கள்

எதையும் பெறமுடியாது" என்று காந்தியடிகள் கூறியதை நினைவு கூர்க.

கூட்டுறவுப் பண்ணையில் இரண்டுமுறை இருக்கிறது. உரிமைக்குப் பாதகமில்லாமல், நிலத்தையே கூட்டுறவுப் பண்ணையில் ஒப்படைத்து விடுவது ஒருமுறை. இன்று நமது நாட்டு நிலப்பரப்புகளில் வரப்புக்கள் அதிகம்.

நிலத்தின் அளவுக்கு ஏற்றவாறு குறைந்தது ஒரு ஏக்கர் - உச்ச பட்சம் பத்து ஏக்கர் என்ற அளவில் நன்செய்க் கழனிகளாகப் பிரித்து, சாகுபடி செய்யப்பெறும். மகசூல் தொகுக்கப் பெற்று, ஏக்கர் அடிப்படையில் பங்கிட்டுத் தரப்பெறும். இது முற்றாகக் கூட்டுப் பண்ணை. இந்த முறையில் பயன் மிகுதி.

பிறிதொரு முறை விவசாயிகள் கூட்டுப்பண்ணை. 1000 ஏக்கர் நிலத்தைக் குறியீட்டு எல்லையாகக் கொண்டு ஒரு விவசாயக் கூட்டுறவுப் பண்ணை அமைப்பது. இங்கு நிலம் பண்ணையில் சேரவில்லை. விவசாயிகள் மட்டுமே சேர் கிறார்கள். இந்தப் பண்ணை அமைப்பிலும் புதிய விவசாயக் கருவிகள் முதலியன கிடைக்கும். ஆனால், பங்குத் தொகைக்கு ஏற்பவே கிடைக்கும்.

விவசாயப் பொறுப்பு, விவசாயினுடையதே. விவசாயிக்கு வேலை நாள் கிடைக்கும். பல தனி முயற்சிகள் தேவைப்படும். நல்லமுறை தான். ஆனாலும் பயன் குறைவு. பல தனி முயற்சிகள், ஒரு மாபெரும் கூட்டு முயற்சிக்கு ஈடாகாது என்பதை நாம் உணரும் பொழுதே கூட்டுறவின் இன்றியமையாத் தேவையை உணர்வோம்.

நமது நாட்டின் விவசாயிகளில் 60 விழுக்காட்டினர் வறுமைக் கோட்டிற்குக் கீழேதான் வாழ்கின்றனர். அவர் களிடம் உள்ள நிலம் மிகச் சிறிய அளவே. இந்த நிலத்தைக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கையை நடத்த இயலாது. ஆதலால், விவசாயிகள் ஆண்டுதோறும் கடன்படுகிறார்கள்.

இன்று விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரில் நான்கில் ஒரு பங்கினரை வேறு வேலைக்கு மடைமாற்றம் செய்வது விவசாயப் பொருளாதாரத்திற்கு ஆக்கம் தரும். இங்ஙனம் வேறு தொழிலுக்கு மாறும்பொழுது கூட்டுப் பண்ணை முறையிருப்பின் அந்தப் பண்ணை அவருடைய நிலத்தை விவசாயம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்.

ஆதலால், கூட்டுப் பண்ணை முறை மிகவும் ஏற்றது, குறைந்த அளவில் பயன்தரக்கூடிய விவசாயிகள் கூட்டுறவு சங்கத்தையாவது அமைத்து நமது வேளாண்மைப் பொருளாதாரத்திற்கு ஆக்கம் தந்து நமது நாட்டைத் தற் சார்புடையதாக்க வேண்டும்.

அடுத்து, நமது வாழ்க்கையில் இடம்பெறுவது உற்பத்தி செய்த பொருள்களை விற்பது. நமக்குத் தேவையான நுகர் பொருள்களை வாங்குவது. இவ்விரண்டும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிப்பவை.

உற்பத்திப் பொருளுக்கு நியாய விலை கிடைக்க வேண்டும். இன்று அது கிடைப்பதில்லை. உற்பத்தியாகும் பண்டங்களை, பொருள்களைப் பாதுகாத்து சீரான விலைக்கு விற்கும் பணியையும், நுகர்வுப் பொருள்களை நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்யும் பணியையும் செய்வது கூட்டுறவுப் பண்டக சாலை.

இது இன்று நாள்தோறும் நஞ்சென ஏறிவரும் விலை ஏற்றத்தைத் தடுக்கக் கூடியது. கூட்டுறவுப் பண்டகசாலை உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் இலாப நோக்கில்லாது இயங்கித் தொண்டு செய்யக்கூடியது. அது மட்டுமல்ல. கலப்படமில்லாத சுத்தமான பொருள்களுக்கும் உத்தரவாதம் தரும்.

ஊர்தோறும் கூட்டுறவுப் பண்டக சாலையைக் காண்போம்! உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை

பெறுவோம்! கலப்படமில்லாத நுகர் பொருள்களைப் பெறுவோம்! நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள்களையும், மருந்துகளையும், உடுத்தும் ஆடைகளையும் பெறுவோம்!

கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கியது. இங்கிலாந்தில் கூட்டுச் சிந்தனை, கூட்டுச் செயல் என்ற நெறிமுறையில் வாழ்வோர் சிலர் தோன்றினர். இவர்களில் முதன்மையானவர் ஓவன். ஓவன் அவர்களைக் "கூட்டுறவுத் தந்தை" என்று பாராட்டுவர். கூட்டுறவு இயக்கம் கி.பி, 1844-ல் தோன்றியது.

நமது நாட்டில் 1924-ல் தொடங்கியது. இலட்சிய நோக்குடைய சிலர் கூடி, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக அமைக்கப்படுவது கூட்டுறவு. அச்சிலர் காலப் போக்கில் பலராகவும் அமையலாம்.

ஆயினும், சமூகச் சிந்தனை இலட்சியப் போக்கு, கருத்தொற்றுமை உடையோர்களே கூட்டுறவில் உறுப்பினராகச் சேரவேண்டும். இங்ஙனம் அமையாவிடில் வண்டியின் நுகத்தடி தெற்கு நோக்கியும், வண்டி வடக்கு நோக்கியும் போகவேண்டும் என்று எண்ணுவதைப் போல் முடியும்.

கூடி வாழ்தல் என்பது எளிதன்று. சுயநலமும், தன் முனைப்பும் மனிதனைக் கூடிவாழ, கூடித் தொழில் செய்ய அனுமதிக்காது. ஒருமையுளராகி உறவுகளைப் பேணி வளர்க்கத் தெரியாதார் குற்றங்களை முயன்று காண்பர், இயல்பாகக் குற்றங்கள் இல்லையெனினும் படைப்பர்; சிறுமை தூற்றுவர். இத்தகு மனப்போக்குடையோர் கூட்டுறவு வாழ்க்கைக்கு ஒத்துவர மாட்டார்கள்.

நோயும், மரணமும் துரத்தினாலும், எப்படியாவது வாழ்ந்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் மருத்துவர்களை நாடுகின்றோம்; மந்திரங்களை நாடுகின்றோம்; சாமிகளைக் கும்பிடுகின்றோம். அதுபோலத்தானே மனித உறவிலும்

பிரிவுகள் தோன்றுவது! இந்தப் பிரிவுகள் உடனுக்குடன் மருத்துவம் செய்யப் பெற்றுச் சீர்செய்யப் பெறாவிடில் கூட்டுறவு வளராது.

கோடிக்கணக்கான செற்கற்களைக் கொண்டுதான் சுவர்கள் எழுப்பப்படுகின்றன. அவற்றில் அடுக்கப் பெறும் கற்கள் ஒன்றையொன்று தழுவித் தாங்கிக் கொள்வதன் மூலமே சுவர்கள் எழும்புகின்றன. அதுபோல, நாம் ஒவ்வொருவரும் பிறிதொரு நபரைத் தழுவித் தாங்கி அழைத்துக்கொண்டு போனால் கூட்டுறவு தோன்றும்; சமூகமும் தோன்றும்.

அதுமட்டுமா? கொத்தனார் சுவர் கட்டும்பொழுது இடைவெளியைச் சரிசெய்ய சல்லிக் கற்களைப் போடுவார். சல்லிக் கற்கள் கிடைக்காது போனால் முழுக்கல்லை உடைத்துச் சல்லியாக்கிப் போடுவார். ஆனால், சுவரில் சல்லி இருப்பது தெரியாது. சுவரின் வெளிப்புறத் தோற்றம் மட்டுமே தெரியும். சுவர் தன்னுள் அடங்கியிருக்கும் சல்லிகளைக் காட்டாது. முழுத் தோற்றத்தை மட்டும்தான் காட்டும்.

அதுபோல, மனிதருள்ளும் குணக் கேடர்கள் சிலர் இருக்கத்தான் செய்வர். பலவீனர்கள் இருப்பர். நலிந்தோர் இருப்பர். மனித சமூகத்தின் இந்தக் குறைகள் வெளியே தெரியாமல் நடந்துகொள்வதுதான் கூட்டுறவின் நோக்கம். வல்லவர்களும், வல்லமையற்றவர்களும், ஒத்தாரும், உயர்ந் தாரும், தாழ்ந்தாரும், ஒருங்கு சேர்ந்து நடத்தும் இயக்கமே கூட்டுறவு.

கூட்டுறவில் அங்கத்தினர்கள் கூடுதலாகவோ, குறை வாகவோ, முதலீடு செய்யலாம். ஆனால் முதலீட்டின் அளவால் உயர்வும் இல்லை; தாழ்வும் இல்லை. எல்லாருக்கும் ஒரே வாக்குத்தான்! கூட்டுறவு சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட நடுவு நிலையைப் பேணுதல் வேண்டும். அது மட்டுமல்ல. கூட்டுறவில் செய்யப்பெறும்

முதலீட்டுக்குச் சந்தை வட்டிகூடக் கிடைக்காது. குறைந்த வட்டிதான் கிடைக்கும்.

ஆதிபத்திய நஞ்சுக்கு மாற்று கூட்டுறவேயாம். கூட்டுறவு பயன் அளிப்பது, அதன் இயக்கத்தைப் பொருத்தது. கூட்டுறவு அமைப்பிலுள்ள அங்கத்தினர்கள் அதன் செயற்பாட்டிற்கேற்ப, பயன் அடைவர்.

கூட்டுறவு ஜனநாயக மரபுகளைப் பின்பற்றுவது, கூட்டுறவு வெற்றி பெற அதன் அங்கத்தினர்கள் தொடர்ந்து இயங்கவேண்டும். பொருளாதார மேம்பாட்டுக்கும் கூட்டுறவே சிறந்தது. கூட்டுறவு மூலம்தான் கடை கோடி மனிதனையும் கடைத்தேற்ற இயலும்.

கூட்டுறவாளர், குறிப்பாகச் சுயநலமற்றவராக இருக்க வேண்டும். இந்தப் பண்பினைப் பெறுதல் எளிதன்று. குறைந்த பட்சம் நிர்வாணத் தன்மையுடைய சுயநலத்தையாவது தவிர்க்க வேண்டும். பொது நன்மைக்கு விரோதமான சுய நலம் உடையவர்கள் கூட்டுறவில் அங்கத்தினராகச் சேர்வதில் அர்த்தமில்லை.

கூட்டுறவில் அங்கத்தினராகச் சேர்வதன் நோக்கம் பலரின் துணை கொண்டு சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்ளுதல், அதுபோலவே பலருக்கு இவரும் உதவ வேண்டும். பரஸ்பர உதவியின் மறுபெயரே கூட்டுறவு.

கூட்டுறவாளனின் விருப்பமும், விழைவும், பிறர் நலம் சார்ந்ததாகவே இருக்கும். கூட்டுறவாளன் பிறருக்குச் செய்யும் உதவியைக் கடமையாகவே கருதுவான். அந்த உதவிக்குக் கைம்மாறாகப் பிறிதொரு உதவியையோ, நன்றியையோ, பாராட்டுக்களையோ எதிர்பார்க்கக் கூடாது.

கூட்டுறவாளன் எப்போதும் சொல்ல முந்தமாட்டான்; கேட்பதிலேயே ஆர்வம் காட்டுவான்; அவசியம் ஏற்படும் பொழுது சில சொல்லுவான்; பலர் வாயிலாகவும் கேட்கவே விரும்புவான். கூட்டுறவாளனின் உரிமைகள் பின் தள்ளப்

பெறும்! எந்தச் சூழ்நிலையிலும், கடமைகளே முன் நிற்கும்! எல்லோருடனும் ஒத்துப் போவதே கூட்டுறவாளனின் கடமை.

செல்வத்தைச் சம்பாதிப்பதால் மட்டும் செல்வராகி விடமுடியாது, அப்படிச் செல்வரான வரலாறும் இல்லை. வருவாய்க்கு ஏற்ற வாழ்க்கை, செலவு ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம்தான் செல்வராக முடியும்.

வரவு - உத்தரவாதமில்லாதது. கையில் வந்த அல்லது வரப்போகிற உத்தரவாதம் செய்யப்பெற்ற வரவுக்கேற்ப செலவு செய்ய வேண்டும்; சிக்கனப்படுத்த வேண்டும். அதே போழ்து நலமுடைய வாழ்க்கையும் நடத்த வேண்டும்.

அதனால்தான் கூட்டுறவில், முதலில் பண்டக சாலைகள் தோன்றின. நியாயவிலையில் கலப்படமில்லாத நுகர் பொருள்கள் கிடைக்கக் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உத்தரவாதமளித்தன. தேவைக்குரிய பொருள்களும் எளிதில் கிடைத்தன.

பொருளாதாரத்தில் மிகப் பெரிய அம்சம் சிக்கனம் தான். "வாழ்க்கைச் செலவுக்கே போதவில்லை. எப்படிச் சிக்கனப்படுத்துவது?" - இது இன்று பலர் கேட்கும் கேள்வி! உண்மையைச் சொல்லப் போனால் ஒருவர் செய்யும் செலவுகளில் முதற் செலவாகச் சேமிப்பே அமையவேண்டும். இங்ஙனம் சேமித்த பொருள் எய்ப்பினுள் வைப்பாக உதவி செய்யும்.

அடுத்து, கூட்டுறவில் பொருள் உற்பத்தி. வேளாண்மைப் பொருளாதாரத்தில் கூட்டுறவின் பங்கு பற்றி முன்பே கூறினோம். அடுத்து, கூட்டுறவு முறையில் சிறு தொழில்களைத் தொடங்கி இயக்குதல். சிறுதொழில் கூட்டுறவு சங்கங்கள் நமது நாட்டில் வேலை வாய்ப்புக்களை வழங்க உதவி செய்யும்.

இன்று நமது நாட்டின் முதல் பிரச்சனை வேலையின்மையே. வேலையைத் தேடி அலையும் இளைஞர்கள் பல இலட்சங்கள் கைம் மாறி ஒரு சிறு பணி வாங்குவதற்குப் பதிலாக கூட்டு முயற்சியில் சிறுதொழில்களைத் தொடங்கினால் அவர்களுக்கும் வேலை கிடைக்கும்; வேறு சிலருக்கும் வேலை வாய்ப்பளிக்கலாம். சிறுதொழில் கூட்டுறவுகளுக்கு மைய - மாநில அரசுகள் நிறைய ஊக்கமளிக்கின்றன.

பிரதமர் நேரு யோஜனா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் நபருக்கு ஒரு இலட்ச ரூபாய் 40 விழுக்காடு மானியத்துடன் தருகிறார்கள். இந்தத் திட்டத்தில் பத்து இளைஞர்கள் ஒருங்கிணைந்து உதவியைப் பெற்றுச் சிறுதொழில் தொடங்கலாம்.

மேலும் முதலீட்டுக்கு - கூட்டுறவு அமைப்பினுடைய பங்கு மூலதனத்துக்கு, 10 பங்கு வங்கிகள் தரும். சிறப்பாகத் தொழிற் கூட்டுறவு வங்கி தரும். ஆதலால், இன்று வாழும் முயற்சியிருப்பின் பணத்திற்குப் பஞ்சமேயில்லை.

இந்தச் சலுகைகளைக் கருவியாகக் கொண்டு கடன் வாங்குவோர் பலர். ஆனால் சிலர்தான் முழுமையாகப் பயன் படுத்துகின்றனர். கூட்டுறவைக் கடன் வாங்குவதற்குரிய சாதனமாகக் கருதாமல், பொருளாதார முன்னேற்றத்திற் குரிய சாதனமாகப் பயன்படுத்தினால் நிச்சயமாக வாழ்க்கையில் வளம் பெருகும்.

ஆர்வம் நிறைந்த அர்ப்பணிப்புணர்வுடன் கூடிய கூட்டுறவு முயற்சிகள் தோன்றின், பொருளாதாரம் வளரும். குறைந்த முதலீட்டில் வியக்கத்தக்க பொருளாதார முன்னேற்றத்தைக் காண முடியும். அதுமட்டுமல்ல. முதலாளி - தொழிலாளி என்ற சமூக அமைப்பு முறை மறையும். எல்லோரும் ஓர் நிலையே என்ற கொள்கை மேவும்.

மக்கள் புவியை நடத்தவேண்டும் எனில், பொதுவில் நடத்தவேண்டும் எனில், அதற்குரிய ஒரே ஒரு சாதனம்

கூட்டுறவுதான்! அதனால், சோவியத்தில் புரட்சிக்குப் பின் புனர்நிர்மாணத்தில் ஈடுபட்ட மாமேதை லெனின், கூட்டுறவு இயக்கத்தில் தனிக் கவனம் செலுத்தினார். கூட்டுறவின் வளர்ச்சியே சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பாகும் என்றார். பொருளாதாரச் சீரமைவுடைய சமுதாய அமைப்பு காலூன்றக் கூட்டுறவே சாதனம் என்றார்.

மக்களின் சிந்தனைப் போக்கையும் செயல்களையும் மாற்றிச் சமுதாயத்திற்குப் பயன்படுபவர்களாக மாற்றுவதில் தான் கூட்டுறவின் வெற்றி இரகசியம் இருக்கிறது. சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாகவும், உறுதுணையாகவும் கூட்டுறவு வெற்றி பெற்றால்தான் கூட்டுறவு இயக்கத்திற்கு அர்த்தமுண்டு.

கூட்டுறவு வெற்றி பெற்றால்தான் நமது நாட்டின் பொருளாதாரம் பலமான அஸ்திவாரத்தில் அமையும். நாட்டின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு ஏற்படும்.

இன்று நமது நாட்டில் கூட்டுறவு இயக்கம் வலிமையாக இல்லை. ஏன் பொதுவாகச் சிற்றூரிலிருந்து டில்லி வரை ஆட்சியிலும், பொருளாதார முயற்சிகளும் ஜனநாயக மரபுகள் வழி நடக்கவேண்டும் என்பதே அரசியல் சட்டத்தின் நோக்கம். ஊராட்சி, கூட்டுறவு அமைப்புகளில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

இன்று நம்முடைய நாட்டில் ஊராட்சி மன்றங் களிலும், கூட்டுறவு அமைப்புகளிலும் மக்கள் பங்கேற்க முடியாமல் அரசு, அதிகார வர்க்கத்தின் கையில் ஒப்படைத்து விடுகின்றது. காடு பாதி, நாடு பாதி என்பது போலத்தான் கூட்டுறவு இயக்கம். தங்களுடைய உரிமை பறிக்கப்பட்டமை குறித்து மக்களிடத்தில் கோபம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அந்த அமைப்புக்கள் இயங்கியபோது, அங்கத்தினர்கள் அந்த அமைப்புக்களில் ஆவேசிக்கப் பெற்றுப் பங்கு பெற்றி

ருந்தால் கோபம் வந்திருக்கும். பல கூட்டுறவு அமைப்புகளில் தூங்கும் அமைப்புகளே மிகுதி. மகாசபைக் கூட்டத்திற்கு அங்கத்தினர்களின் வருகை மிகவும் குறைவாகவே இருக்கும். "கோரத்தை வைத்தே தப்பித்துக் கொள்வார்கள் நிர்வாகிகள்."

இன்று நமது நாட்டுக் கூட்டுறவு நிர்வாகத்தில் அரசின் தலையீடுகள் அதிகம். கூட்டுறவு நிர்வாகத்தில் அரசின் தலையீடுகள் குறையவேண்டும். கூட்டுறவு நிறுவனங்களிலே கூட இரண்டு சாதி முறையிருக்கிறது. அரசின் அலுவலராகப் பணி செய்பவர்களுக்குக் கை நிறைய ஊதியம். கூட்டுறவு சங்கத்தின் சிப்பந்திகளுக்குச் சம்பள விகிதம் மிகவும் குறைவு.

மேலும் கூட்டுறவுத் துறையில் வேலை பார்க்கும் சில அரசு அலுவலர்களுக்குக் கூட அரசுத் துறையைப் போல ஊதியம் இல்லை என்பது ஒரு குறை. ஆதலால் இன்று நமது கூட்டுறவுத் துறை பலமாக இல்லை. கூட்டுறவுத் துறையைச் சீரமைக்க உடனடியாக மக்கள் முன்வர வேண்டும்.

மைய அரசு கூட்டுறவுத் துறை குறித்து, கொண்டு வர இருக்கும் நாடு தழுவிய கூட்டுறவுச் சட்டம் விரைவில் வரும் என்று எதிர்பார்ப்போமாக! கூட்டுறவு அமைப்பில் இன்று சரியான அடித்தளம் இல்லை. ஆனால் மேல்மட்ட அமைப்பு பலமாக இருக்கிறது, இதைத் தவிர்த்து அடிமட்ட அமைப்புகள் பலமானவையாக அமையும்படி செய்யவேண்டும்.

நமது நாட்டுப்புற மக்களின் முன்னேற்றத்திற்குக் கூட்டுறவுத் துறையைத் தவிர வேறு வழியில்லை என்பதை நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும். சிறியவர்களையும், பலவீனமானவர்களையும் பாதுகாத்துப் பயன்படுத்துவதே குறிக்கோள். நமக்குக் கதி கூட்டுறவேயாம். வேறு வழி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சமூகம் முழுவதும் வளம்பெற்று வாழ்வதற்குரிய முயற்சிகளுக்குத் துணையாக அமையக் கூடியது கூட்டுறவு தான்! உலகத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்ற

மெல்லாம் கூட்டுறவு அடிப்படையில்தான் என்பது வரலாறு. இந்த நினைப்பு - சிந்தனை, நமக்குக் கூட்டுறவின்பால்; ஈடுபடத் தூண்டும்.

சில இடங்களில் கூட்டுறவு தோல்வி அடையலாம். இந்தத் தோல்விக்குக் காரணம் உள்ளார்ந்த கூட்டுறவு உணர்வு இல்லாமையே. தோல்விகளைக் கண்டு துவள வேண்டிய அவசியம் இல்லை. உயிர்ப்பும், உறவும், கூட்டுறவுப் பண்பும் உடையவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் வெற்றி பெற்று விடுவார்கள். இது உறுதி.

ஒன்று சேர்ந்து நம்மைக் காத்துக் கொள்வோம்!

ஒன்று சேர்ந்து உண்போம்!

ஒன்று சேர்ந்து வீரியம் பெறுவோம்!

ஒன்று சேர்ந்து அறிவொளி பெறுவோம்!

எவரையும் வெறுக்காமல் இருப்போம்!

கூட்டுறவின் வழி வளம் காண்போம்! வாழ்விப்போம்! வாழ்வோம்! இதுவே நாம் செல்லவேண்டிய வழி - தடம்!

## 9. இலட்சிய சமுதாயம்

**(8-10-94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)**

மானுட வாழ்க்கை தற்செயலாக ஏற்பட்டதும் அல்ல. அஃதொரு விபத்தும் அல்ல. இயற்கை நியதி. திட்டமிட்டுப் பரிணாம வளர்ச்சியில் வாய்த்தது இந்த வாழ்க்கை. அற்புதமான ஆற்றல்மிக்க புலன்களுடனும் பொறிகளுடனும் அமைந்தது இந்த வாழ்க்கை.

இப்படி அமைந்ததொரு வாழ்க்கை பயனுடையதாக, புகழ்மிக்கதாக அமைய வேண்டாமா? அமைவுகள் மிகுதியு முடைய இந்த வாழ்க்கை எதற்காக? அறிவு அறியும்

கருவிகள், செயல் செய்யும் பொறிகள் அனைத்தும் அமைந்த வாழ்க்கையின் நோக்கம்தான் என்ன? பயன் தான் என்ன? அறிந்துகொள்ள வேண்டாமா? காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டாமா?

உடம்பொடு உயிர் பொருந்திய நிலையில் வாழ்வுக்கு உயிர்ப்பாக இருப்பது மூச்சுக் காற்று! மூச்சுக் காற்று அடங்கினால் - உயிர்ப்பு நின்றால் மரணம். அதனால், உடலில் உயிர்ப்பு நிலை இருக்கும்பொழுதே தகாதனவற்றை யெல்லாம் புறத்தே தள்ளி, நல்லன கொள்ள வேண்டாமா? எண்ணுங்கள்! சிந்தனை செய்யுங்கள்!

தேடி, சோறு நித்தம் தின்று, சின்னஞ் சிறுகதைகள் பேசி, வேடிக்கைமனிதராய் மாண்டு போகக் கூடாது. புகழ்மிக்க வாழ்க்கை வாழ்தல் வேண்டும். அதனாலன்றோ, திருக்குறள் அறத்துப்பால் - இல்லறவியலின் முடிவில் 'புகழ்' என்று ஓர் அதிகாரம் வைத்தது. புகழ் பெறுதல் என்பது எளிதன்று; இமயத்தின் உச்சியில் ஏறுவதினும் கடினமானது. பேச்சால், எழுத்தால் பாராட்டு வரலாம். அது புகழன்று. பதவிகளால் சுற்றி நின்று பயனடைவோர் வானளாவப் புகழலாம். அதுவும் போலியேயாம்! விளம்பரம் தான்! புகழன்று!

செயல்வழிச் சாதனைகள் செய்வதுதான் புகழ் பெறுவதற்குரிய வழி! அந்தச் சாதனைகளும் கூட நாட்டின் வரலாற்றை நகர்த்துவதாக அமைய வேண்டும்; மானுடத்தை அரித்துத் தின்று அழிக்கும் சாதிப்பிரிவினைகள், கொடிய நோய்கள், வறுமை ஆகியவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பணியே புகழ்மிக்க பணி! அதுவே வாழ்க்கையின் குறிக்கோள்! இலட்சியம்!

சென்ற காலத்தில் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்த சிலர் சாதித்த சாதனைகளாலேயே இன்று நம்முடைய வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும், மனித

சமுதாயத்திற்கும் குறிக்கோள் தேவை! இலட்சியம் தேவை! இன்று, இலட்சியம் உடைய மனிதர்களைத் தேடினும் காணக் கிடைப்பதில்லை. ஒரு சிலர், சின்னஞ்சிறு செயல்களையே இலட்சியம் என்று கருதிக் கொண்டுள்ளனர். வேறு சிலர் பணம் சம்பாதிப்பதையே இலட்சியமாகக் கொண்டுள்ளனர்.

கற்றவர்களும் அறிஞர்களும் வீரர்களும் பணம் சம்பாதிப்பதை ஒருநாளும் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்ளமாட்டார்கள். சின்னஞ்சிறு செயல்கள் செய்வது, பணம் சம்பாதிப்பது இவையெல்லாம் இலட்சியங்கள் ஆகா. வாழ்க்கையின் படிக்கற்கள் என்று வேண்டுமானால் கொள்ளலாம்.

“குறிக்கோள் இலாது கெட்டேன்” என்று பாடுகின்றார் அப்பரடிகள். உடலுக்கு ஆன்மா; மரத்திற்கு வேர்! மனித னுக்கு இலட்சியம்; வாழ்க்கையில் மனிதன் அடிமையாக இருக்கக் கூடாது!

ஒரு வேலையை ஊதியத்தையே குறிக்கோளாகக் கொண்டு செய்வது அல்லது பயந்து கொண்டு செய்வது என்ற குணமிருந்தாலும் அடிமைத் தனமேயாம்;

ஒரு வேலையை - ஒரு பணியை அந்த வேலைக்காகவே தாமே ஆர்வத்துடன் பயன்பாடு கிடைக்கும் வகையில் செய்வது சுதந்திரமான வாழ்க்கையாகும். தாம் எடுத்துக் கொண்ட பணியை முறையாகச் செய்வதே இலட்சியம்; சுதந்திரம்; இன்பம்!

ஒருவன் தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் எது என்று சிந்தனை செய்து முடிவு செய்ய வேண்டும். ஒரு சிலருக்குத் தன் வாழ்க்கைக்கு என்று இலட்சியம் நிர்ணயம் செய்துகொள்ளும் சூழல் அமையாது போகலாம். அப்போது நீரும் நிழலும் போலத் தன்னுடைய தோழமையாகப் பழகும் சில நண்பர்களையும் உடன் சேர்த்துக் கொண்டு ஒரு கூட்டு இலட்சியமாக எடுத்துக் கொள்ளலாம். பலர் வாழ்வில்

இதுவே நடைமுறையில் சாத்தியம்; அப்படி எடுத்துக் கொண்ட இலட்சியத்திற்காகவே வாழ்தல் வேண்டும்; போராட வேண்டும்.

இலட்சியம் என்பது பெரும்பாலும் நாட்டையும் மக்கட்சமுதாயத்தையும் மையமாகக் கொண்டுதான் அமையும். மற்ற உயிர்க்குலத்தை மையமாகக் கொண்டு இலட்சியம் தோன்றலாம். மொழி, சமய அடிப்படையிலும் கூட இலட்சியம் தோன்றலாம். எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைவதற்கேற்றவாறு தன்னுடைய ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இலட்சியம் வாழ்க்கைக்கு இன்றியமையாதது. கடந்த காலத் தோல்விகளையும் துன்பங்களையும் மறத்தல், தன் முன்னே நிற்பனவற்றை நாடுதல், நிகழ்காலத்தை மதித்தல், எதிர்காலத்தை நோக்கி விரைந்து பணி செய்தல் முதலிய குணங்கள் வேண்டும்.

பழக்கம், குணத்திற்கு அடிப்படை; குணம், இலட்சியத்தை இனம் காட்டும். எடுத்துக்கொண்ட இலட்சியத்திற்குரிய பணிகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்க! எடுத்துக்கொண்ட இலட்சியத்திற்காகப் போராடு! உயிரைக் கொடுத்துப் போராடு!

வெறும் சோற்றுப் பிண்டமாக நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட இலட்சியத்துடன் சில ஆண்டுகள் வாழ்ந்தாலே போதும். வரலாற்றில் - செய்திகளில் இடம் பெறுவது இலட்சியம் அல்ல, நீயே நாட்டின் வரலாற்றை உருவாக்க வேண்டும். அதுவே, இலட்சியம் நிறைந்த வாழ்க்கை! தெளிவான இலட்சியத்தைத் தேர்வு செய்து கொள்க! அந்த இலட்சியத்திற்காகப் போராடுக! இடையூறின்றிப் போராடுக! இலட்சியமே வாழ்வென வாழ்க!

வாழ்க்கை, முன்னர்க் கூறியபடி அறிவு சார்ந்தது; அறிவியல் சார்ந்தது. புலன்கள் அனைத்தும் அறிவை

அறியவும், அறிந்த அறிவை உணர்த்தவும் கூடியன. பொறிகள் நுகர்வுச் சாதனங்கள் மட்டுமல்ல. அறிவு அடிப்படையில் செயற்படும் தொழிற் கருவிகளுமாகும். இலட்சியத்தையும், இலட்சியத்தின் அடிப்படையிலான செயலையும் ஆய்வு செய்து இலட்சியத்தைத் தேர்வு செய்துகொள்வதே அறிவியல் பாங்கு.

அன்பாக இருப்பது என்பது ஒரு குணம் - பண்பு. இந்த அன்பு கூட, சுயநலத்தின் காரணமாக அமையலாம். அத்தகைய அன்புக்குக் கூட இடைமுறிவுகள் உண்டு. ஆனால், அன்பே இலட்சிய அடிப்படையிலிருப்பின் அந்த அன்பு வளரும். பிறை நிலாப் போல வளரும்; எல்லா இடர்ப் பாடுகளையும் கடந்து வளரும். பிரிவதற்குரிய காரணங்கள் தோன்றினாலும் அக்காரணங்கள் புறக்கணிக்கப்படும்.

மானம்கூட கூடப்பிறந்ததுதான். அதுவே இலட்சிய அன்பு. இத்தகைய அன்புடையோர் சில பொழுது மரணத்திலும் கூட ஒன்றாகிவிடுவர். இந்த அன்பு, இலட்சிய அன்பு. இங்ஙனம் அன்பு, இலட்சிய அன்பாக மாற வேண்டு மானால், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் இயல்பு தேவை. அறிவறிந்த நட்பும் உறவுமே இலட்சிய அன்பாக, உறவாக முடியும்; வளர முடியும்.

எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் நிலையாக நின்று உழைத்திட, தளர்ச்சியில்லாமல் அந்தத் திசையில் செல்ல அறிவு வேண்டும். இலட்சியத்தின் வழியில் நடைபெறும் பணிகளை, செய்யும் காரியங்களை அறிவியல் பார்வையால் ஆய்வு செய்து, குறைகளை நீக்கச் செய்துகொண்டே போக வேண்டும்.

இலட்சிய வாழ்க்கையை விரும்புபவர்கள் தங்க ளுடைய சூழ்நிலைகளின் காரணமாகப் பலவீனம் அடைந்து விடக்கூடாது. சூழ்நிலைகளையும் சரிப்படுத்திக் கொண்டு அவற்றைக் கருவிகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

அறிவியல் என்பது எதையும் ஆராய்ந்து தெளிந்து முடிவுகளை எடுப்பது, விருப்பங்களின் படியும் ஆசைகளின் அடிப்படையிலும் உணர்ச்சிகளின் நிலையிலும் முடிவு எடுத்தல் கூடாது.

வாழ்வதற்கும், பலர் கூடிவாழ்வதற்கும், இம்மாநிலம் பயனுறத் தக்க வகையில் இலட்சியத்தைத் தேர்வு செய்யவும். தேர்வு செய்த இலட்சியத்தை அடையும், முயற்சிகளுக்கும் அறிவு தேவை. அறிவியல் பார்வை தேவை. அறிவியல் சார்ந்த முடிவுகளும் செயல்களுமே வெற்றியைத் தரும். இலட்சியத்தைத் தேர்வு செய்க; அறிவியல் முறையில் ஆய்வு செய்து இலட்சியத்தைத் தேர்வு செய்க; அந்த இலட்சியத்தை அடையும் முயற்சியுடன் வாழ்க!

மனிதன் தனியே வாழ்ந்துவிட முடியாது. அவன் பலருடன் கூடி . வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால், கூடிவாழ்கிறான். அதனால், அப்படிக் கூடி வாழ்வது அன்பின் அடிப்படையில், உறவுகளின் அடிப்படையில் இல்லை. நாடகம் நடத்துகிறான்; சுயநலத்திற்காகவும், பயத்திற்காகவும் கூடிவாழ்வதைப் போல நடித்து வாழ்கின்றான்.

அவன் அன்புடன் கூடிய உறவு வாழ்க்கையை - கூடி வாழ்தலைப் பெரும் பேறாகக் கருதுவதில்லை. இத்தகைய மனிதக் கூட்டத்தில் அன்பு, கடைச் சரக்கேயாம்.

நம்முடைய நாட்டில் இன்னமும் சமுதாயம் உருவாக வில்லை. "ஒருவர் எல்லாருக்காகவும், எல்லாரும் ஒருவருக்காகவும்" என்ற சமுதாய நியதி, ஒழுங்கு, ஒழுக்கம் வெற்றி பெற்றால்தான் சமுதாயம் உருவாகும். இன்று மனிதகுலத்தை வருத்தும் தீமைகளை எதிர்த்துப் போராட வேண்டுமாயின், முதலில் சமுதாய அமைப்பு உருவாக வேண்டும். அங்ஙனம் ஒரு சமுதாயம் திடீரென்று உருவாகி

விடாது. ஒரு இலட்சியம் தோன்றினால்தான் சமுதாயம் உருவாகும்.

இன்று, நம்பிக்கையும் நல்லெண்ணமும் நிறைந்த ஓர் இலட்சிய நோக்கமுடைய சமுதாயத்தைக் காண்பதற்கு, தடைகள் பலப்பல உள்ளன. அவற்றுள் தலையாயது பணம்!

அடுத்த தடைகள் அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய தீயபண்புகள்! இத்தீய பண்புகளின் படைக்கலன்களாக உள்ளவை பூட்டுக்கள், களவு - காவல், சுவர்கள், வேலிகள் பட்டங்கள், பதவிகள் முதலியன. இவையெல்லாம் ஒருங்கிணைந்துகொண்டு சமுதாயம் அமைத்தற்குரிய அடிப்படைகளைத் தகர்க்கின்றன; மனிதனைப் பிரித்துவிடுகின்றன.

இன்று ஊர், அரசுக் கணக்கின்படிதான் உள்ளது. ஊர் என்று இலக்கணப்படி "ஒருவருக்காக எல்லாரும், எல்லாருக்காகவும் ஒருவர்" என்ற இலட்சியம் மக்களிடத்தில் இல்லை. ஆரோக்கியமில்லாத போட்டிகள், இலாப வேட்டைகள், தலைமைத்தனத்திற்கு ஆசை முதலியன ஊரை நாள்தோறும் அழித்து வருகின்றன. இவற்றை நாளும் எதிர்த்துப் போராடிச் சமுதாயத்தை விரிவாக்க வேண்டும்; இலட்சியத்தை உருவாக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் மனிதகுலத்தில் ஏற்பட்டுள்ள பிரிவுகளை அகற்றி, மனிதகுலத்தைச் சமுதாயமாக உருவாக்கலும், ஊர் கூடிவாழ அமைத்தலும் கூட ஒரு நல்ல இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை இந்தத் தலைமுறையில் அடைந்தால் இந்தியா வளரும்; வாழும்!

"பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை" என்பது வள்ளுவம்! "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மாணிக்கவாசகரின் வாக்கு! சமூகத்தை இயக்கும் சக்தி பொருளுக்கே உண்டு! நமது நாடு, வளமான நாடு! பொருள் உற்பத்திக்கு ஏற்ப, இயற்கை வளமும் மனித

சக்தியும் உள்ள நாடு. ஆயினும், இந்தியர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள்.

ஏன்? உடைமை உடையவர்களிடத்தில் உழைப்பைக் காண்பது அரிது! உழைப்பவர்களிடத்தில் உடைமையைக் காண்பது இயலாது. இது நாட்டின் சமூக, பொருளாதார அமைப்பு.

நமது நாட்டில் சோஷலிசம் அல்லது சர்வோதயம் அல்லது பொதுவுடைமைச் சமுதாயம் காண இயலாது. “உடைமைக்கு ஊழே காரணம்” என்ற சித்தாந்தம் மக்களின் மூளையில் இடம்பெற்றுள்ளவரை, மக்கள் தங்களிடம் பொருளின்மை அல்லது உடைமையின்மை குறித்து வருந்த மாட்டார்கள்!

நமது நாட்டில் ஏழ்மை, வறுமை இன்று நேற்றுத் தோன்றியதல்ல, பன்னூறாண்டுகளுக்கு முன்பிருந்தே தலை முறை தலைமுறையாக வறுமையும், ஏழ்மையும் தொடர்ந்து வருகின்றன. இதற்கு என்ன மாற்று? முதல் மாற்று கூட்டுடைமைச் சமுதாய அமைப்பு அல்லது கூட்டுறவுப் பொதுநலச் சமுதாய அமைப்பு.

கம்பன், “எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாம்” என்று ஒரு இலட்சியப் பொருளாதார சமுதாயத்தைக் காண்கிறான். “உடைமையைப் பொதுமை செய்!” என்றான் பாவேந்தன் பாரதிதாசன். நமது பொருளாதாரம் கடன் பொருளாதாரமாக அமையக் கூடாது; உற்பத்திப் பொருளாதாரமாகவே இருக்க வேண்டும்.

தனியார் துறை கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். பொதுத் துறையையும், கூட்டுச் சமுதாய அமைப்புப் பொருளாதாரத்தையும் பேணி வளர்க்க வேண்டும். துறை தோறும் தன்னிறைவு காணவேண்டும். மக்களுக்கு இலவசம், இனாம் தருவது கூடாது. தூறலால் பயிர் விளைந்துவிடாது.

அதுபோலச் சலுகைகளால் மக்கள் வளர்ந்துவிட மாட்டார்கள்.

ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவுள்ள குடும்பமாக அமையவேண்டும்; வளரவேண்டும். நாடு, நாடா வளத்ததாக அமையவேண்டும். ஒவ்வொர் இளைஞனும் சுயமுயற்சியில் பொருள் ஈட்டி, அப்பொருளால் தானே முயன்று கட்டிய வீட்டில் குடியிருக்க வேண்டும். தான் ஈட்டிய பொருளில் பலரோடு கூடி உண்ணவேண்டும்.

“தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்” என்றார் திருவள்ளுவர். இலட்சிய சமுதாயத்தில் உழவுக்கும் தொழி லுக்கும் மதிப்பு உண்டு. காடுகளைத் திருத்திக் கழனிகளாக்கு வோம்! ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் அமைப் போம்! உழைப்பவர் உலகை மதிப்போம்! பொருளினைச் செய்வோம்!

வாழ்க்கை உணவினால் மட்டும் ஆனதல்ல. வாழ்க்கைக்குக் களிப்பும், மகிழ்ச்சியும் தேவை. களிப்பும் மகிழ்ச்சியும் நாடகம், திரைப்படம் ஆகியவைகளினால் கிடைக்கும். திரைப்பட உலகம் தோன்றிய பிறகு, நாடக உலகம் வெகுவாகக் குறைந்து வருகிறது. இன்று எங்கும் திரைப்பட மயக்கம். அந்தத் திரைப்படங்களாவது மனிதர் களை அவர்கள் நிலையிலிருந்து உயர்த்துகின்றனவா என்றால் அதுவும் இல்லை.

இன்றைய திரைப்படங்களில் காமக்களியாட்டம், வன்முறை நிகழ்ச்சிகளே அதிக இடம்பெறுகின்றன. திரைப் படம் ஒரு நல்ல கலையே. திரைப்படத்தில் நல்ல இசை மற்றும் கலையம்சங்களும் உண்டு. இசையை அனுபவிக்கும் வாழ்வு தேவை. இலங்கையை வருணித்த கம்பன் “களிக் கின்றார் அலால் கவல்கின்றார், இவர்” என்றான். கலையும் இலக்கியமும் ஆன்மாவைப் பக்குவப் படுத்தும் தன்மையன.

தமிழ், முத்தமிழாகவே பிறந்தது; வளர்ந்தது. தமிழிசை வளர்ந்த இசை. கிராமங்கள் தோறும் இசைக் கலைப் பயிற்சி மையங்கள் தோன்ற வேண்டும். பழைய காலம் போல் கிராமங்களில் திருக்கோயில்களில், தமிழ் நாட்டின் தனித்துவம் பெற்ற நாதசுர இசை முழங்க வேண்டும். மக்கள் கலை, இசை ஆகியவற்றில் கவனம் செலுத்தினாலேயே குடும்ப வாழ்க்கை வெற்றி பெறும்.

கிராமங்கள் தோறும் இளைஞர்கள் நாடக மன்றம் அமைத்து, நல்ல நாடகங்களை எழுதி நடித்துப் பயில வேண்டும். நிறை நிலா நாளின்போது தவறாமல் இசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடக்கவேண்டும். மக்கள் வாழ்க்கையைச் சுமையாகக் கருதாமல் நடத்துவதற்குக் கலை, துணைசெய்யும், இசைக் கலையில் பழகிப் பக்குவப் படுபவர்கள் 'மனிதர்'களாக இருப்பர்.

நமது சமுதாய அமைப்பில் நாடகக் கலைக்கும் பல வகையான இசைக் கலைக்கும் வாய்ப்பு இருக்கிறது. தாலாட்டில் தொடங்கும் நமது இசைக் கலை வாழ்க்கை முழுதும் தொடரவேண்டும். ஓவியமும் சிற்பமும் தமிழகத்திற்கே உரிய கலைகள். இந்தக் கலைகளை மேலும் மேலும் நம்முடைய சமுதாயம் வளர்க்க வேண்டும்.

ஏழிசையை, பண்ணொடு பொருந்திய பாடலை, மக்கள் மாலைப்பொழுதில் மன்றங்கள் தோறும் அனுபவிக்க வேண்டும். பண்ணும் பரதமும் கலந்த கலையை அனுபவிக்க வேண்டும். இந்த மண்ணை விண்ணகமாக்கும் கண்ணன் குழலோசையும் ஆடல் வல்லானின் ஆடற்கலையும் நமது நாட்டின் வழி வழி வந்த கலைகள்! மேலும் சந்தத் தமிழும், சாம கானமும் நமது உரிமைக் கலைகள்! பயிலுவோமாக! வளர்ப்போமாக!

நமது நாடு அரசியலில், ஆட்சியியலில் வளர்ந்த நாடு. மனிதர்களுக்குள் உறவுகளை நிர்ணயம் செய்யும் நோக்கில்

அரசியல் தோன்றியது; காலப்போக்கில் ஆட்சி முறை வந்தது! நமது நாட்டை ஆண்ட அரசர்கள் மக்கள் நலம் நாடியவர்கள். அதனால்தான் பிரான்சு, சோவியத் போன்ற நாடுகளில் தோன்றிய புரட்சிகளைப் போல நமது நாட்டில் புரட்சி தோன்றவில்லை. என்றும் நமது நாட்டின் ஆட்சி, நீதியைச் சார்ந்திருந்தது. அந்த நீதி சார்ந்த ஆட்சிமுறையை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும்.

"ஒரு குலத்துக்கு ஒரு நீதி" என்ற கொள்கையை மறுத்து வளரும் நாம் "ஆட்சிக்கு ஒரு நீதி" என்ற முறையை மேற்கொள்ளக் கூடாது. மிக உயர்ந்த தரமான மக்களாட்சி முறையை நாம் நடத்தவேண்டும். தேர்தலில் மட்டும் ஜன நாயகமல்ல "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பெரு நெறி நமது நாட்டு அரசியலில் - ஆட்சியில் இடம்பெற வேண்டும்.

பொற்கைப் பாண்டியன் வரலாறு கண்ட நாடு நமது நாடு. இந்த நாட்டில் காவல்துறைக்கு மகத்தான பொறுப் புள்ளது. காவல்துறை அதன் ஒழுகலாறுகளை உயர்த்திக் கொள்ள வேண்டும். இந்த நாட்டில் போலீசு ஆட்சி வருவதை, போலீசுக்காரர்களும் விரும்ப மாட்டார்கள். இது நம்முடைய நம்பிக்கை. ஏன்? கோபுரத்திற்குக் கலசம் போல, நாட்டிற்குக் காவல்துறை அமையவேண்டும்.

மக்கள், நாட்டின் வளர்ச்சியில் தனிப்பட்ட முறையிலும் கூட்டு முறையிலும் பங்கேற்க வேண்டும். நம்முடைய நாடு சட்டத்தால் ஆளப்படுவது. ஆதலால், சட்டத்திற்கு மக்கள் மதிப்பளித்து ஒழுகவேண்டும்; நடந்து கொள்ள வேண்டும். சட்டங்களும் விதிமுறைகளும் மதிக்கப்படும் நாட்டில்தான் மக்களாட்சி முறை பயன்தரும். சட்டத்தை முடமாக்குவது அராஜகத்திற்கு வழி வகுக்கும்.

நம்முடைய நாட்டில் தேசியக் குடிமைப் பண்புகளைப் போற்றி வளர்ப்போம்! அரசின் சமுதாய மேம்பாட்டுப்

பணிகளுக்கு ஒத்துழைப்போம்! அரசு தீட்டும் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் உடன் நிற்போம்! அரசின் அந்நியக் கடன்களைக் குறைக்க, சிறுசேமிப்பில் முதலீடு செய்வோம்! எங்கும் அமைதியும் சமாதானமும் சகோதரத் துவமும் கூடிய வாழ்க்கை நடத்துவோம்! வளர்ப்போம்!

நமது நாடு ஆன்மிகத்தில் - சமய நெறிகளில் செழித்து வளர்ந்த நாடு. வேதங்களும், உபநிடதங்களும், சாத்திரங்களும், திருமுறைகளும், திவ்வியப்பிரபந்தமும் பெற்று விளங்கும் நாடு. இன்றும் இந்தியா உலகிற்கு அளிக்கக் கூடியது ஞானம்! ஆன்மிகம் என்பது கடவுள் நம்பிக்கை மட்டுமல்ல; வழிபாடு மட்டுமல்ல; சமய நெறி சார்ந்த சடங்குகளும் அல்ல.

ஆன்மிகம் என்பது ஆன்மாவின் - உயிரின் தரத்தை, தகுதிப்பாட்டை உயர்த்திக் கொள்ளும் கொள்கை. வாழ்க்கை முறை நாத்திகர்களுக்கும் கூட ஆன்மிகத்தில் ஈடுபாடு உண்டு. அன்பு, பொறுத்தாற்றும் பண்பு, மனிதர்கள் மீது விருப்பு - வெறுப்பற்ற உளப்பாங்குடன் பழகுதல், பிறிதின் நோய், தந்நோய் போல் போற்றுதல் ஆகிய உயர் பண்புகளைப் பெறும் முயற்சி முதலியன ஆன்மிகம்.

இந்த முயற்சியுடைய வாழ்க்கை ஆன்மிக வாழ்க்கை. இவைகளைத் தனியே பெறமுடியாத நிலையில் பெறுதலுக் குரிய சாதனம் கடவுள் வழிபாடு! கடவுளை "எண் குணத் தான்" "குறைவிலா நிறைவு" "கோதிலா அமுது" "என்னுடைய அன்பு" என்றெல்லாம் போற்றுவர்.

கடவுளை வழிபடுதல் என்பது கடவுள் வழி நிற்றல் - வாழ்தல் என்பதாகும். கடவுளை முன்னிட்டு வழிபாடு நிகழினும் அந்த வழிபாடு கடவுளுக்கல்ல; ஆன்மாக்களுக்கே! அன்பில் பழுத்த மனம் பெறுதல் ஆன்மிகம். பிறருக்கென முயலும் வாழ்க்கை நெறி, ஆன்மிக நெறி. தியாகங்கள் செய்வது. ஆன்மிக வாழ்க்கையின் அடையாளம். "தியாக

மில்லாத வழிபாடு பயனற்றது'' என்றார் அண்ணல் காந்தியடிகள்!

நாம் அனைவரும் ஆன்மாவில் சிறந்து விளங்குவதே இலட்சியம்! ஆன்மாவை உசுப்பிக்கொள்ள, விழிப்புறச் செய்யத் தேவையான அளவு சடங்குகள் இருப்பதில் தவறில்லை. ஆனால், சடங்குகளே ஆன்மிகம் அல்ல; சமயமும் அல்ல!

எங்கும் சோலைகளை வளர்ப்போம்! இயற்கையோடு இயைந்து வாழ்வோம்! நெஞ்சத்தை தண்ணளி உடையது ஆக்குவோம்! அன்பில் வளர்வோம்! அன்பில் வாழ்வோம்! வாழ்வித்து வாழ்வோம்! உயிர்க்கு ஊதியம் சேர்க்கும் தொண்டு செய்வோம்! வன்முறை தவிர்ப்போம்! எங்கும் எந்தச் சூழ்நிலையிலும் கொலையை பழிதூற்றும் சிறுமையைத் தவிர்ப்போம்! யாரிடமிருந்தும் எவரிட மிருந்தும் அந்நியமாக மாட்டோம்! ஒருமையுணர்வுடன் எவ்வுயிரிடத்தும் பேதமுறாது பேணிக் காப்போம்!

மானிட சமுத்திரம் நம்முடன் பிறந்து வளர்ந்தது: உடன் வருவது. அந்த மானிட சமுத்திரத்திற்குள் சங்கமம் ஆவதே ஆன்மிக வாழ்வு! “இவர் தேவர், அவர் தேவர் என்று இரண்டாட்டாது சமயக் கலகம் செய்ய வேண்டாம்! என்றார் அப்பரடிகள் “ஒன்றே குலம், ஒருவனே தேவன்!” இதுவே ஆன்மிக வாழ்க்கையின் தாரகமந்திரம்.

> **“ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்**
> **உலகு இன்பக் கேணி”**

என்ற சிந்தனை நமது வாழ்வாக மலரவேண்டும்.

அன்பர்களே! நமது வாழ்க்கை எங்கே போய்க் கொண்டிருக்கிறது? உண்டியை, உடையை உகந்து மகிழும் வெற்று வாழ்க்கையாக ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தப் போக்கை மடைமாற்றம் செய்வோம்! வாழ்வாங்கு வாழும் திசையில்

நடைபோடுவோம்! அறிவறிந்த ஆள்வினை மேற்கொள் வோம்! பொருள் செய்து குவியுங்கள்! உலகம் உண்ண உண்ணுங்கள்! உலகம் உடுத்த உடுத்துங்கள்! சிறந்த ஆன்மிக வாழ்க்கை வாழ்வோம்! அன்பையே உயிர் எனக் கொள்வோம்! வளமுடன் வாழ்வோம்! இலட்சிய சமுதாயம் அமைப்போம்!

## 10. சமுதாய மேம்பாட்டில் இலக்கியத்தின் பங்கு

(15-10-94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)

சமுதாயம் மேம்பாடு அடைய, சமுதாயத்தின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்! அதாவது, மனிதர்கள் நிர்வாணமாகப் பிறப்பதைப் போலவே நிர்மலமான மூளையுடனும், புலன்களுடனும் பிறக்கிறார்கள். பின் கற்றல், கேட்டல், சிந்தித்தல், செயற்படுதல் மூலம் - குறிப்பாக வாழ்தல் மூலம் - புத்திக் கொள்முதல் செய்கிறார்கள்! அறிவு பெறுகிறார்கள்.

மனிதன் அறிந்து அவனுடைய பிறப்பு நிகழ்வது இல்லை. இறக்கும்பொழுது துன்பப்படுகிறான். ஆனால், வாழ மறந்து விடுகிறான். மனிதன் வாழ்ந்தால் இறப்பில் அவன் வருந்தான். மற்றவர்கள் வருந்துவார்கள். இந்தப் பேறு கோடியில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது. மனிதர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் துயரத்தைக் குறைத்துக் கொண்டு, அன்பு, பரஸ்பர உதவி ஆகியவைகளை மேற்கொண்டு ஒழுகினால் துன்பச் சுமை குறையும்; துயரங்கள் தவிர்க்கப் பெறும்.

வாழ்க்கை என்பது தனக்காக மட்டுமல்ல. உடல் அமைப்பை உற்று நோக்குங்கள்! கண்களின் அமைப்பு, நம்மைப் பார்த்துக் கொள்வதைவிட மற்றவர்களைப்

பார்க்கக் கூடிய நிலையில்தான் அமைந்துள்ளது. செவிகளும் அப்படித்தான் அமைந்துள்ளன! வாயும் மற்றவர்களுடன் பேசத்தான்! தானே பேசிக்கொண்டால் என்ன பொருள்!

வாழ்க்கை, கடமைகளுக்காக வழங்கப் பெற்றது. வாழ்க்கை என்பது கடமைகளினால் ஆயது. சமுதாயத்திற்கு நம்மைப் பயனுள்ளவாறு ஆக்கிக் கொண்டு வாழ, நம்மை நாமே அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும்;- வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இங்ஙனம் நம்மை வளர்த்துக் கொள்ள நல்ல இலக்கியங்கள் துணை செய்யும்! இந்த உலகில் பயனுள்ள வாறு பேசிப் பழக, நல்ல மனிதர்கள் கிடைப்பது அரிது. அதனால், வளர்ந்த மனிதர்களை வரவழைத்து வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். கம்பன், வள்ளுவன், இளங்கோ, மில்டன், டென்னிசன், அப்பர் போன்றவர்களின் படைப்பிலக்கியங்களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும்; அந்த இலக்கியங்களைப் படிக்கவேண்டும். அந்த உத்தம இலக்கிய கர்த்தாக்களுடன் பழகவேண்டும்.

இலக்கியங்களைத் தொடர்ந்து கற்பது, சிந்தனையை வளர்க்கும்; அறிவை வளர்க்கும். நம் ஒவ்வொருவரையும் அனைத்துலக மனிதனாக்கும். இலக்கியங்களின் செழுமையான கருத்துக்களைப் பொறுக்கி நமக்கு வழங்குகிறவர்கள், நம்மைச் செல்வராக்குபவர்கள். மனத்திற்கு வடிவமும் இயக்கமும் தருவதில் இலக்கியம் முக்கிய பங்கை வகிக்கிறது. இலக்கியப் பயிற்சி இன்பம் அளிக்கும். நம்முடைய வாழ்க்கையை நிலைபேறுடையதாக்கி உறுதிப் படுத்துவது இலக்கியம்.

இலக்கியம் வாழ்க்கையை உருவாக்குகிறது! வாழ்க்கையிலிருந்து இலக்கியம் உருவாகிறது. சமுதாயத்தின் வாழ்க்கையை காட்டும் கண்ணாடி போன்றது இலக்கியம்! ஒரு இனத்தின் - மனிதனின் வளத்தை வரிவடிவில் காட்டுவது இலக்கியம். அதே போழ்து சமுதாயத்தை நெடிய

நோக்குடன் வளரத் தூண்டுவதும் இலக்கியங்கள் தாம். புறத்தூய்மை தண்ணீரால் அமையும். அகத்தூய்மை வாய்மையால் தெரியும். வாய்மைக்கு ஊற்று இலக்கியம். வாழ்க்கை முழுவதையுமே உருவாக்குவது இலக்கியம்.

"இலக்கியங்களைப் படிப்பதைவிட, படிக்கத்தக்க இலக்கியங்களைத் தேர்ந்தெடுப்பது மிகவும் கடினம்" என்பான் ஏடு தேடு காதலன் ரஸ்கின். திருவள்ளுவரும் "கற்பவை கற்க" என்றார். இலக்கியங்கள் வாழ்ந்த - வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்தின் எண்ணத்தை, சிந்தனைப் போக்கை, விருப்பங்களை, ஆர்வங்களை, குறிக்கோளைக் காட்டுவன. இலக்கு + இயம் = இலக்கியம்.

இலக்கியங்கள் ஒரு குறிக்கோளை நோக்கி மனித சமுதாயத்தை உந்திச் செலுத்துவன. இலக்கியப் பயிற்சி ஓர் உயரிய குறிக்கோளை மனிதனுக்குத் தந்து ஆவேசப் படுத்தவில்லையென்றால் அவன் அந்த இலக்கியத்தைப் படித்தான்! அவ்வளவுதான்! அவன் அந்த இலக்கியத்தைக் கற்கவில்லை; உணரவில்லை; அனுபவிக்கவில்லை!

"தேர்ந்தெடுத்த சில இலக்கியங்கள் திரும்பத் திரும்பக் கற்கத் தக்கன; அனுபவிக்கத் தக்கன" என்று பிரான்சிஸ் பேக்கன் கூறினான். தமிழ், இலக்கியவளம் படைத்த மொழி, தமிழிலயக்கியங்கள் வரலாற்றுப் பழைமையுடையன. தமிழிலக்கியங்கள் தமிழர் தம் அன்றாட வாழ்க்கையின் படிப்பினைகளாகத் தோன்றியவை.

தமிழிலக்கியங்களில் கற்பனைகளும் புனைவுகளும் அறவே இல்லையென்று கூறலாம். சங்க இலக்கியங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஆற்றலுடையன. காப்பியங்கள் குடும்ப, சமூக, அறிவியல் வாழ்க்கைகளை வளர்க்கும் தகையன. திருமுறைகள் அன்பில் நனைப்பன. பாரதி, சுதந்திர தாகத்தைத் தருவான், பாரதிதாசன் புதியதோர் உலகம் செய்யத் தூண்டுவான். இங்ஙனம்

இலக்கியங்கள் தனிமனித வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் உதவி செய்வன.

இலக்கியப் பயிற்சி வளர, வளர மனிதன் வளர்வான்; மனித சமுதாயம் வளரும். இளைஞர்கள் இலக்கியம் பயின்றால் இலட்சிய வீரர்கள் ஆவார்கள். இலக்கியம் கற்போம்; இலட்சியத்துடன் வாழ்வோம்!

சங்ககால இலக்கியங்கள் செல்வத்தைத் தேடும் முயற்சிக்குத் தூண்டுகோலாய் இருந்தன. “பொருளே, காதலர் காதல்!” என்று கூறும் அளவுக்கும் பொருள் வேட்கை இருந்திருக்கிறது, ஒவ்வோர் இளைஞனும் திருமணத்திற்கு முன், பொருள் தேடச் செல்லும் பழக்கம் இருந்தது.

ஆடவர் என்றால் அவருக்கு வினையே உயிர் என்று குறுந்தொகை கூறும். “கடவுள் பக்திக்கு அடுத்தபடி முக்கிய மான கடமை, அறவழியில் செல்வம் ஈட்டுவதேயாம்” என்று முகமது நபிகள் அருளிச் செய்துள்ளார். வாழ்க்கையின் கருவி, செல்வம். ‘வினை’ என்ற சொல்லுக்குத் தொழில் என்பது தான் பொருள். சமய உலகம் வேறு பொருளைக் கற்பிக்கிறது. அதனை மறந்து விடுக! ஆடவர், உயிருடன் வாழ்வதற்கு அடையாளம் அவர் செய்யும் தொழிலே, நியாயமான முறையில் பொருளீட்டும் தொழிலில் எதுவும் தாழ்ந்ததல்ல.

செய்யும் தொழிலைச் சிரத்தையுடன் செய்யவேண்டும். சாவதற்கு அஞ்சி உயிர்காத்துக் கொள்வது போலத் தொழிலைச் செய்யவேண்டும். “ஒழுக்கம் உயிர்” - என்று வள்ளுவம் கூறியதைப் போல், குறுந்தொகை “வினையே ஆடவர்க்கு உயிரே” என்கிறது, ஆம்! தொழில் செய்து பொருளீட்டி வாழ்தலே ஒழுக்கம்; இந்த ஒப்புமை சரியானதே!

நாடு, மாநிலம், மாவட்டம் பின்தங்கியது என்று அடிக்கடி பலர் கூறுகின்றனர். இது தவறான கருத்து. எந்த நாட்டில் - மாநிலத்தில் - மாவட்டத்தில் அல்லது ஓர் ஊரில் மனிதசக்தியை முற்றாக உழைப்பில் பயன்படுத்தாதவர்களும்

அல்லது மிகக் குறைவாகப் பயன்படுத்துகிறவர்களும் இருக்கிறார்களோ அந்தப் பகுதி பின்தங்கியதாகத்தான் இருக்கும்!

அதுபோலவே, பொருள் உற்பத்திக்குப் பயன்படக் கூடிய நிலம், நீர், மற்றும் இயற்கை வளங்கள், தாதுப் பொருள்கள் எங்கு முற்றாகப் பயன்படுத்தப் படவில்லையோ அந்தப் பகுதியும் பின்தங்கியதாகவே இருக்கும். இதனை ஔவையார்,

“நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!”

என்று பாடினார், அதாவது, நிலத்திற்கு என்று தனியியல்பு ஒன்று இல்லை, எங்கு நல்லவர் வாழ்கின்றாரோ அங்கு நிலமும் வளமாகவே அமையும். “நல்லவர்” என்பதற்கு இன்றைய உலக வழக்கில் உள்ள “அப்பாவி” “செயலற்றவர்” என்ற பொருள் அன்று இல்லை!

அறிவு, ஆற்றல், ஆளுமை, உழைக்கும் பண்பு அனைத்தும் பெற்றவர்களையே பண்டைக்காலத்தில் நல்லவர் என்றனர். ஆதலால், மனிதர்கள் முறையாகப் பயன்படும் இடங்களில் எல்லாம் பொருள்வளம் இருக்கும்; பொருள் வளம் செழித்த நிலையில் சமுதாய மேம்பாடு விளங்கும்.

இலக்கியங்கள், செல்வங்கள் அனைத்திலும் உயர்ந்த செல்வம் வேளாண்மை வழிச் செல்வமே என்று போற்றுகின்றன. அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடிய ஔவையார், “பகடுதரு செந்நெல் போரொடு நல்கி” என்று பாடுகின்றார். கல்லாடனாரும் “பகடு தரும் பெருவளம்” என்று போற்றுகின்றார். அதாவது, எருதுகள் உழுது உண்டாக்கிய செந்நெல் வளமும், பல்வகை நுகர்வுப் பண்டங்களும் பெருவளம் எனப்பட்டன. பொருநராற்றுப்படை,

*"சாலி நெல்லின் சிறைகொள் வேலி*
*ஆயிரம் விளையுட் டாகக்*
*காவேரி புரக்கும் நாடு"*

என்று காவேரி நாட்டின் சிறப்பினைக் கூறும் ஒரு வேலி நிலம் 6.2/3 ஏக்கர். ஒரு ஏக்கருக்கு விளைவு 150 கலம் நெல் அதனால் வளம் கொழித்திருந்தது. பசித்தவர்க்கு இல்லையெனாது உணவு கிடைத்தது. நாலடியாரும் "பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க" என்றது. தமிழ் இலக்கிய உலகம் சமுதாய மேம்பாட்டுக்குரிய பொருள் ஆக்கம் வேளாண்மை மூலமே எனக் கூறியது. திருவள்ளுவரும்

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல்பவர்"*

என்றார். புரட்சிக் கவி பாரதி,

*"உழவுக்கும் தொழிலுக்கும்*
*வந்தனை செய்வோம்!"*

என்றான். செந்தமிழ்ப் புலவர்களிலேயே சங்கப்பாடல்கள் இயற்றிய புலவர்களில் ஒருவர் பெயர் ஓரேருழவர் என்பது. இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. செல்வ மேம்பாட்டில், பொருளாதார ஆக்கத்தில் பறம்புமலை சிறந்திருந்தது. பறம்புமலையை வேள்பாரி ஆண்டான். பாரி இயற்கையை - தாவர இனங்களை மிகவும் கவனமாகப் போற்றியதன் விளைவே முல்லைக் கொடிக்குத் தேரீந்தது. அதனாலேயே அவனுடைய பறம்புமலை உழவர் உழாதன நான்கு பயன் உடையதாக விளங்கியது. அந்நான்காவன; வள்ளிக்கிழங்கு, மூங்கில் அரிசி, பலாப்பழம், தேன்.

ஆதலால், ஒரு நாடு பொருளாதாரத்தில் மேம்பாடுற்று விளங்கவேண்டுமாயின் வேளாண்மைப் பொருளாதாரத்தில் சிறந்து விளங்க வேண்டும். நம்முடைய நாடு, இன்னமும் உணவுப் பொருள்களில் தற்சார்புடையதாக இல்லை! நாம்

அங்காடிப் பொருளாதாரத்தை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறோம். இது தவறு. உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும்.

இயற்கைப் பொருளாதாரத்திற்கு - அதுவும் குறிப்பாக வேளாண்மைப் பொருளாதாரத்திற்கு நீர்வளம் தேவை. "நீரின்றமையாது உலகம்" என்றது திருக்குறள். தண்ணீருக்கு மூலம் மழை. மழைநீரைச் சேகரித்தல் வேண்டும். கழனிக்குத் தண்ணீரைக் கொண்டுவந்து சேர்ப்பது வாய்க்கால், "நீர் வழங்கும் வாய்த்தலைகளையுடைய மிழலைக் கூற்றம்" என்று மாங்குடிமருதனார் பாடியமை அறிக.

நீர்வளம் சேர்ப்பவை வரத்துக்கால்கள். மழைதரும் தண்ணீர் வளத்தைச் சேமித்துக் காக்கும் பழக்கம் தேவை. தண்ணீரைச் செல்வம் என்றே அப்பரடிகள் கூறுகின்றார். 'ஏரிநிறைந்தனைய செல்வன்" என்பது அப்பரடிகள் வாக்கு.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடியபொழுது "உடலுக்கு உணவு, உணவு என்று சிறப்பித்துக் கூறப்படுவது நிலத்தொடு கூடிய நீர். நிலத்தையும் நீரையும் கூட்டிப் பயன் காண்பவர்கள் இவ்வுலகில் உடம்பையும் உயிரையும் ஒரு சேரப்படைத்தவராவர். ஒரு நாட்டில் நிலப்பரப்பளவு எவ்வளவு மிகுதியாய் இருப்பினும் நீர்வளம் இல்லையேல் அந்நிலம் பயன்படாது. ஆதலால், நிலம் பள்ளமாய் இருக்கும் இடத்தில் கரையைக் கட்டித் தண்ணீரைத் தேக்கு!" என்று அறிவுறுத்துகிறார்.

இங்ஙனம் நீரைத் தேக்குவதைத்தான் இன்று கசிவுநீர்க் குட்டை என்று கூறுகின்றோம். இங்ஙனம் தண்ணீரைத் தேக்கிப் பயன்கொள்பவர்கள் இந்த உலகத்தின் செல்வத் துடன் இணைக்கப் பெறுவர். தண்ணீருக்குக் கரைபோட்டுத் தளையமைக்காதார் இவ்வுலகத்தில் வாழ்ந்தும் வாழாதாரே!

இனிய அன்புடையீர்! மழைவளம் வர, வரக் குறைந்து வருகிறது! மழை, தேவை! மழைவளம் சிறக்கக் காடுகளை

வளர்க்கவும்; அடர்த்தியான காடுகளை வளர்க்கவும். அகன்ற இலைகளையுடைய மரங்கள் அதிகமான மழையை வரவழைக்கும். பெய்யும் மழைத்தண்ணீரை, சொட்டு நீர்கூட வீணாகாமல் தேக்கிவைத்து, குறைவான தண்ணீரைப் பயன்படுத்திப் பயிர்களை வளர்த்துப் பயன்பெற வேண்டும்.

தண்ணீரைப் பாதுகாத்தல் என்பது சமுதாய மேம் பாட்டில் - பொருளாதார மேம்பாட்டில் முக்கியமான பணி.

இந்தப் பணியை, கடமையை நம்மில் பலர் இன்று உணரவில்லை. பல கண்மாய்கள், வரத்துக் கால்கள் தூர்ந்து கிடக்கின்றன. தூர்ந்து கிடப்பதோடன்றி அவற்றில் ஆக்கிர மிப்புகள் உள்ளன. கண்மாய்களை, ஏரிகளை ஏரிகளின் நீர்ப்பரப்புப் பகுதிகளை, தண்ணீர் வரத்துக் கால்களை ஆக்கிரமிப்பது குற்றம்; சமூகக் குற்றம்; பாபம்! இதற்கோர் முற்றுப்புள்ளி வைக்காகமல் எங்கோ போய்க்கொண்டிருக் கிறோம்!

திருக்குளங்களைக் கவனிக்காமல் திருக்கோயில் களுக்குக் குடமுழுக்கு விழாக்கள் செய்து கொண்டிருக் கிறோம்! நாம் மழைவளம் பெறுவோம்! பெய்யும் மழை வளத்தைப் பாதுகாப்போம்!

> "நிலனெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோரம்ம இவண் தட்டட்டோரே!
> தள்ளாதோர் இவண் தள்ளாதோரே!"

என்ற கவிஞனின் பாடல் வரிகளுக்கு வாழ்க்கையில் பொருள் காண்போமாக!

இயற்கை வளம் இந்நிலவுலகத்திற்கு ஒரு கொடை. இயற்கையென்பது என்ன என்று வரையறை செய்ய இயலாது. நம்மைச் சுற்றியுள்ள உலகமனைத்தும் இயற்கையே!

மலைவளம், காடுவளம், நிலவளம், வளி வழங்கும் ஞாலம், வெப்பம் தந்து வாழ்வளிக்கும் ஞாலம் திரிதரு

கதிரவன் தண்ணென நிலவு பொழியும் சந்திரன்; விலங்கினங்கள்; பறவையினங்கள் எல்லாமே மானுட வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பவை; வாழ்க்கைக்குத் தேவையானவை.

அதனால்தான் கடவுளைக் காணும் களம், இயற்கை என்றனர். அப்பரடிகள் “மூரி முழங்கொலிநீர் ஆனான் கண்டாய்!” என்றும் “வாசமலரெலாம் ஆனாய் நீயே!” என்றும் பாடினார். “பழத்திடைச் சுவை ஒப்பாய்!” என்று சுந்தரர் அருளியுள்ளமை அறிக.

தாயுமானார் மலர் கொய்து இறைவனுக்குப் பூசனை செய்ய மனம் ஒருப்படா நிலையில் “பார்க்கின்ற மலரூடும் நீயிருத்தி! பனிமலர் எடுக்கவும் நண்ணுகிலேன்” என்றார். இளங்கோவடிகள் தமது காப்பியமாகிய சிலப்பதிகாரத்திற்கு, கடவுள் வாழ்த்தே பாடவில்லை, இயற்கையை வாழ்த்தினார்!

“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி
குளிர்வெண்குடை போன்று, இவ்
அங்கண் உலகளித்த லான்.”

“ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.”

“மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவனளிபோல்
மேல்நின்று தான் சுரத்த லான்”

என்று இயற்கையை வாழ்த்தியே காப்பியத்தைத் தொடங்குகின்றார். இயற்கைச் சூழலில் மாற்றங்கள் ஏற்பட்டால் அது இயற்கையின் குறையல்ல. நாம் இயற்கையை - இயற்கையினாலாய சுற்றுப்புறச் சூழலை முறையாகப் பாதுகாக்காமையே காரணமாகும்.

"மாரி பொய்ப்பினும் வாரி வளங்குன்றினும் இயற்கையிலான செயற்கையில் தோன்றினும்" அதற்கு மக்களே பொறுப்பு. நாட்டை ஆளும் அரசுகளே பொறுப்பு என்பது சங்க காலக் கவிஞர் வெள்ளைக்குடி நாகனாரின் கருத்து. இதனை உணர்ந்து இயற்கையைப் பாதுகாப்போம்! இயற்கை, பேரழிவை நோக்கிச் செல்வதைத் தவிர்ப்போம்! இயற்கை வளர்க்கும் வழித்தடத்தில் செல்வோம்!

சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து தோன்றிய இலக்கணங்கள் ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் அகத்திணை வாழ்க்கையை - கற்பு வாழ்க்கையை வலியுறுத்தின. இலக்கியங்களிலும் அகத்திணை என்றே ஒரு துறை உண்டு. திருக்குறளில் 'காமத்துப்பால்' உள்ளமையை ஓர்க! சங்க காலத்தில் "காமம்" என்ற சொல் நல்ல பொருள் நலம் தந்த சொல்லாகவே விளங்கியது. பிற்காலத்தில்தான் காமம் என்ற சொல் கொச்சைப் படுத்தப்பட்டது.

ஆண்டுகள் பலவாயினும் நரையின்றி, மூப்பின்றி, முதுமையின்றி வாழலாம். காயகல்பம் - தங்கபஸ்பம் சாப்பிட்டா? இல்லை, இல்லை! பிசிராந்தையார் மூப்பின்றி என்றும் இளமையாக வாழ வழி சொல்லுகின்றார். "வீட்டில், மாட்சிமைக்குரிய குணங்கள் அனைத்தும் பொருந்திய மனைவி! வாய்த்த புதல்வர்களும் அறிவு நிரம்பியவர்கள்! ஏவல் செய்வோரோ நான் கருதியதே கருதிச் செய்வர்! அதனால் நரையில்லை, மூப்பில்லை, முதுமையில்லை" என்று கூறுகின்றார்!

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்காகியர் என வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை

*ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!"* (புறம் - 191)

என்பது பிசிராந்தையார் பாடல்.

வீட்டில் பொருளாதார மேலாண்மை குடும்பத் தலைவியிடம் இருந்தது என்பதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. வறுமையில் வாடிய பெருஞ்சித்திரனார் பரிசில் பெற்றுவந்தார். வந்தபின் தமது மனைவியிடம் சொல்லு கின்றார், "வாழ்க்கைத் துணை நலமே! இதோ, குமணன் தந்த பரிசுப் பொருள்கள்! உனக்கு வேண்டியவர்களுக்குக் கொடு! உன்னால் விரும்பப்படுகிறவர்களுக்கும் கொடு! உனது சுற்றத்தாருக்கும் கொடு! நமது சுற்றத்தாருக்கும் கொடு! வேண்டியவர்கள் - வேண்டாதவர்கள் என்று பாராட்டாது அனைவருக்கும் கொடு! என்னைக் கேட்காமலும் கொடு! கலந்து ஆலோசனை செய்யாமலும் கொடு! உன் விருப்பம் போலக் கொடு!" என்கிறார்.

ஆதலால், குடும்பத் தலைவிக்குக் குடும்பத்தில் பொரு ளாட்சி இருந்தது தெரிய வருகிறது. இன்றைய நிலை என்ன? ஒருசில குடும்பங்களில்தான் உள்ளன. வேலை பார்த்துச் சம்பாதிக்கும் மனைவிகூடத் தான் ஈட்டிய பொருளை அல்லது அதில் ஒரு பகுதியைக் கூடத் தான் வைத்துக் கொள்ள முடியாத நிலை! இதுதான் நமது நாட்டுக் குடும்ப வாழ்க்கை நிலை. சங்க இலக்கியங்கள் மனைவியைக் குடும்பத் தலைவி என்றே கூறுகின்றன. திருக்குறள் "வாழ்க்கைத் துணைநலம்" என்று சிறப்பிக்கிறது.

சங்க இலக்கியத்தில் பெண் அடிமைத்தனம் இல்லை. இன்று நாம் எங்கே போகிறோம்? பெண் சிசு கொலை. ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி, வரதட்சணைக் கொடுமை என்று பெண்களுக்குக் கொடுமை செய்யும் வழியில் போகின்றோம்! இந்த நிலை மாறி மகளிர் போற்றும் தடத்தில் செல்ல வேண்டும்!

சங்க காலத்தில் சமூக அமைப்பு இருந்தது. எல்லாக் குடும்பங்களிலும் மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்பதே தமிழ் நெறியின் குறிக்கோள். “எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்த வேண்டும்” - இது தமிழின் குறிக்கோள்! தமிழனின் குறிக்கோள்! தமிழ் இலக்கியம் காட்டும் பொருள் நெறி.

பக்குடுக்கை நன்கணியார் என்ற புலவர் “எல்லாருக்கும் இன்பம்” என்ற கொள்கையை வலியுறுத்துகின்றார். ஒரு வீட்டில் சாப்பறை கொட்டப்படுகிறது. ஒரு வீட்டில் மணமுரசு கேட்கிறது. ஏன் இந்த அவலம்! அருகில் நிற்போர் கடவுளின் படைப்பு என்கின்றனர்.

புலவர் இன்பதுன்பங்களுக்குக் கடவுளின் படைப்பு காரணம் என்பதை மறுக்கிறார். மறுப்பதோடன்றி, அப்படிக் கடவுள் படைத்திருந்தால் அக்கடவுள் பண்பில்லாதவன் என்று கூறுகிறார். அது மட்டுமா? இந்த உலகம் இன்னாத தாகத்தான் இருக்கும். இன்மையை - இன்னாமையைத் தாங்கிக் கொள்ளாதே! இன்னாதனவாக உள்ள உலக அமைப்பை எதிர்த்துப் போராடு! இனியன காணும் வரையில் போராடு! என்றார்.

*“ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்*
*புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்*
*படைத்தோன் மன்ற, அப்பண்பிலாளன்*
*இன்னா தம்ம இவ்வுலகம்*
*இனிய காண்க, இதன் இயல்புணர்ந்தோரே!”*

(புறம் - 194)

என்ற பாடலை, பாடற்பொருளை இலட்சியமாகக் கொண்டு நடப்போமாக!

இன்று தகவல் தொடர்புகள் வளர்ந்ததன் பயனாக இந்தப் பஞ்சபூத உலகம் நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால். மனிதன் அந்நியப் பட்டுக்கொண்டே போகிறான்! ஆனால், சங்ககாலத்தில் கணியன் பூங்குன்றன் என்ற கவிஞன்.

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்று பாடினான்! உலகம் நெருங்கிவந்தால் மட்டும் போதாது! உலக மாந்தர் ஒரு குலமாக வேண்டும். இதுவே கணியன் பூங்குன்றனின் இலட்சியம்! இந்தக் கருத்தையே வள்ளலார்,, ஆன்மநேய ஒருமைப்பாடு என்றார்.

நல்ல சமுதாய அமைப்பு கால்கொண்ட நிலையில் பெரியோரை யாரும் வியந்து பாராட்ட மாட்டார்கள். சிறியோரை யாரும் இகழ மாட்டார்கள். ஏன்? பெரியோர் பெரியோரானது அவர்களின் முயற்சியால் மட்டுமல்ல. அவர்களுக்கு இந்த உலகம் வழங்கிய வாய்ப்புக்களே காரணம். அதனால்தான் தம் புகழ் கேட்கப் பெரியோர் நாணினர் என்று இலக்கியம் கூறுகிறது.

சிறியோர் சிறியோராக இருப்பது பிறப்பினாலும் அல்ல; விதியினாலும் அல்ல. வாய்ப்புக்கள் வழங்கப் படாமையே காரணம். அது அவர்கள் குற்றமல்ல. அதனால், சிறியோரை இகழ்வது இல்லை. ஒவ்வோர் ஊரிலும் கற்று அனுபவித்து அடங்கிய சான்றோர் பலர் வாழ்தல் வேண்டும் என்பது சங்க இலக்கியக் கொள்கை. அப்படி சான்றோர் பலர் வாழும் ஊரில் பொய் இருக்காது; களவு இருக்காது; கலகம் இருக்காது; நம்பிக்கை நிலவும்; நல்லெண்ணெத்துடன் கூடிய உறவு கலந்த சமுதாயம் அமையும்; அமைதி நிலவும்.

> "ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர் யான் வாழும் ஊரே!"

என்றது தமிழிலக்கியம்.

கு.XVI.28-

தமிழிலக்கியங்கள் முடியாட்சிக் காலத்திலேயே தோன்றின. ஆயினும் முடியாட்சியைத் தழுவியே பாடினார்கள் அல்லர். அரசனின் கடமைகளை வலியுறுத்திப் பாடியவர்கள் பலர். மக்களை ஒழுங்குடன் - ஒழுக்கமுடன் வாழச் செய்ய வேண்டியது அரசின் கடமை. மக்களிடத்தில் ஒழுக்கக் கேடுகள் இருந்தால் அதற்குரிய பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்.

"நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே"

என்று பாடினார் பொன்முடியார்.

தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையில் தோன்றி மலர்ந்தவை. வாழ்க்கையை வளர்த்தவை. வையத்துள் வாழ்வாங்கு வாழ, தமிழிலக்கியங்கள் வழிகாட்டுகின்றன! பழந்தமிழ் இலக்கியங்களைப் படியுங்கள்! நச்சு இலக்கியங் களைப் படிக்காதீர்! நச்சு இலக்கியங்கள் காட்டும் திசையில் போகாதீர்! பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் பண்பாட்டு நெறியில் செல்வோமாக!

# 11. சமுதாய மேம்பாட்டில் ஆன்மிகத்தின் பங்கு

(22-10-94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)

பலர்கூடி வாழ்வது சமுதாயம். பலர் கூடி வாழ்தல் வேண்டும். அப்போதுதான் சமுதாயம் தோன்றும். வாழ்க்கை வரையறுத்த கால எல்லையையுடையது. அந்த எல்லைக்குள் மற்றவர்கள் நலனுக்குரியன செய்து, அவ்வழி ஆன்மாவை வளர்த்துக்கொள்ள வேண்டும்; முன்னேற வேண்டும். நமது வாழ்க்கை கண்ணாடி வளையல்கள்போல உடைந்து போகக் கூடியது. வாழ்க்கை நிலையில்லாதது. நிலையில்லாதன

வற்றைக் கொண்டு, நிலையானவற்றை அடைதலே வாழ்க்கையின் குறிக்கோள்.

நன்றாக வாழவேண்டும் என்றால் அதற்கென்று ஒரு விதி தனியாக இல்லை. எதைச் செய்தாலும், அழகாகச் செய்தலும், பயனுறச் செய்தலுமே நல்வாழ்க்கை. குறித்த ஒரு நோக்கத்துக்காகத்தான் வாழ்க்கையை நடத்தவேண்டும். குறிக்கோளுடைய வாழ்க்கையை நடத்துவதுதான் அதிர்ஷ்டம். வாழ்க்கை முழுவதும் விரும்பக் கூடியது ஊழியம் புரியும் சக்தியேயாம். அதுவும் சுயநலமற்ற நிலையில் ஊழியம் புரியும் சக்தியாக அமைய வேண்டும்.

வாழ்க்கையை முறையாக வாழ்ந்தால், உழைப்போடு கூடிய வாழ்க்கை நடத்தினால், அவ்வாழ்க்கையே ஒரு தொழில்தான். வாழ்க்கை இன்பமானது அன்று; இன்பமாக அமையவும் அமையாது. தைரியத்தோடும், துணிச்சலோடும் வாழ்க்கையை நடத்தப் பழகிக் கொள்ள வேண்டும். தற்கொலை செய்து கொள்வதிலும், அல்லது கொலை செய்வதிலும் தைரியம் என்பது இல்லை. வாழ்வதில்தான் தைரியம் இருக்கிறது.

உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி, இவற்றை விருப்பும், வெறுப்பும் இன்றி அனுபவிக்கத் தெரிந்துகொண்டால் மனிதனாகலாம். வாழ்க்கையின் உந்து சக்தி நம்பிக்கை. நோக்கம், கடமை, பரிவு ஆகியன வாழ்க்கைக்கு ஒளி யூட்டுவன. வாழ்க்கையில் ஏதேனும் ஒரு வேலை செய்ய வேண்டும்; யாராவது ஒரிவரிடமாவது அன்பு காட்ட வேண்டும்.

வாழ்க்கையில் வெற்றிகளை நம்பிக்கையுடன் எதிர் பார்க்க வேண்டும். இங்ஙனம் வாழக் கற்றுக் கொண்டால் அது வாழ்க்கையாகி விடும். ஏன்? இத்தகு வாழ்க்கையே வாழ்வாங்கு வாழ்தல். ஒரே ஒருமுறைதான் பிறக்கின்றோம். என்றாவது ஒருநாள் மூச்சுவிட மறந்து போவோம்; அல்லது

உயிர்ப்பு அடங்கும். இந்த இடைவெளிக் காலத்திற்குள் நாம் வாழ்ந்துவிட வேண்டும். நாம் வாழப் பிறந்தோம். "வாய்த்தது நந்தமக்கோர் ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றார் அப்பரடிகள். சாவது எளிது.

பிறவி என்பது என்ன? ஆன்மா என்பது என்ன? நான் யார்? என் உள்ளம் யார்? என்ற ஆராய்ச்சி இல்லாமல், தெளிவான அறிவு இல்லாமல், எப்படி வாழ முடியும்? இந்த "ஆன்மா" விஷயத்தில், தத்துவச் சிந்தனையாளர் களிடையிலும், மதஸ்தாபகர்களிடையிலும் நிலவுவது மாறுபட்ட சிந்தனை போக்குத்தான். ஆன்மா, பிறப்பு, இறப்பு குறித்து தமிழ் மரபு வழிச் சிந்தனையே அறிவியல் அடிப்படையில் சரியானது என்று துணிய முடிகிறது.

"உள்ளது போகாது. இல்லது வாராது" என்பது ஒரு தர்க்க அடிப்படை. இந்தத் தர்க்க நியாயத்தின்படி ஆன்மா உண்டென்பதும், அது நிலையானது என்பதும் பெறப்படும் உண்மைகள். கடவுள் ஆன்மாக்களைப் படைத்தான் என்ற கொள்கை ஏற்புடையதன்று. கடவுள் குறைவிலா நிறைவு. நிறைவிலிருந்து குறை தோன்ற முடியாது. ஆதலால், கடவுள் ஆன்மாக்களை, உயிர்களைப் படைத்திருக்க முடியாது. "எனது" என்றும், "நான்" என்றும் உரிமை கொண்டாடும் ஒன்று உளது. அதுவே ஆன்மா.

ஆன்மா என்பது சமஸ்கிருதச் சொல். உயிர் என்பது தமிழ்ச் சொல். உயிர்களின் பரிணாம வளர்ச்சி பற்றிய டார்வின் கொள்கையில் உடன்பாடு மிகுதியும் உடையது தமிழ் மரபு. உயிர்களின் பரிணாம வளர்ச்சியில், உயிர்கள் ஓரறிவுயிர் தொடங்கி, பரிபக்குவ நிலையினுக்கு ஏற்ப மாறி மாறிப் பிறந்து, கடைசியாக ஆறறிவு உடைய மனிதனாகப் பிறக்கிறது என்பது தமிழ்ச் சிந்தனை!

அறிவு சார்ந்த பரிணாம வளர்ச்சியில், பாம்பு சட்டையை உரித்துப் போட்டுவிட்டுப் புதுச் சட்டையுடன்

உலாவருதலைப் போல், உயிர் உடலை மாற்றிக் கொண்டே வந்து, மானுடப் பிறப்பை எய்தியது. அதனால்தான் சாதலையும்,· பிறத்தலையும், திருவள்ளுவர்

> "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு"

என்றார்.

ஆன்மிகம் என்பது முற்றிலும் ஆன்மாவைச் சார்ந்தது. அதாவது, ஆன்மாவின் தரத்தை உயர்த்திக் கொள்ளும் வாழ்க்கை முறை. இந்த உடல், உடலின் பொறிகள் வழி குணங்கள் இல்லை. குணங்களும், திறன்களும், பண்புகளும், ஆன்மாவைச் சார்ந்தவையே என்பது வெளிப்படை.

எல்லோருக்கும் உறுப்புக்கள் ஒத்து உள்ளன. ஆனால் பண்புகள் ஒத்து இல்லை. இதற்கு ஆன்மாக்களிடையே உள்ள தராதரமே காரணம். அறிவு, ஆன்மாவைச் சார்ந்தது. ஆன்மாவை அறிந்து, அதனை வளர்த்துக் கொள்ளுதலே வாழ்க்கையின் முதற்படி.

காணாதனவற்றைக் காண, கண்ணிற்கு ஒளியாக, அறிவொளியாக இருந்து துணை செய்வது ஆன்மா. கேளாதனவற்றைக் கேட்க, காதுகளுக்குப் புலனாக அமைந்து துணை செய்வது ஆன்மா. ஆன்மா உருவமற்றது. ஆன்மாக்கள் எண்ணிக்கையில் பல. அதன் வளர்ச்சிக்காக எடுத்துக் கொண்டது உடல்.

ஆன்மாவை, ஆன்மாவின் வளர்ச்சியை, மறந்துவிட்டு உடலால் மட்டும் வாழும் மனித மிருகங்களும் உண்டு. இவர்களே துஷ்டர்கள்; கொலைக்காரர்கள்; சமூகத்திற் குரியன செய்யாதவர்கள். ஆதலால்தான் சான்றோர் ஆன்மாவில் வாழ்தலை, ஆன்மாவைச் சார்ந்து வாழ்தலை வாழ்நிலை என்றனர்.

நெருப்பு தனக்குள் வரும் பொருள்களை எரித்து, அவற்றின் பலத்தைக் கொண்டு, மேலும் உயரமாகக் கிளம்பி எரிகிறது. அதுபோல, ஆன்ம சக்தி உடையவர்கள், தங்களுடைய வளர்ச்சிக்குத் தடையாய் உள்ளவைகளையே தன் வளர்ச்சிக்குச் சாதனங்களாக்கிக் கொண்டு வளர்வார்கள். ஆன்ம சக்தி உள்ளவர்கள், அடிபடும் பந்து மேலெழுவதைப் போல், துன்பங்கள் சூழச் சூழ மேலெழுவார்கள்.

ஆன்ம சக்தி வளரக் கல்வி தேவை; ஆற்றல் தேவை; கலைஞானம் தேவை; அறிவு தேவை; பண்பு தேவை; சான்றாண்மை தேவை; ஒப்புரவுப் பண்பு தேவை. இவையெல்லாவற்றையும் ஒருங்கே பெற்ற ஆன்மா ஆனந்தமாக வளரும்; வாழும்; வாழ வைக்கும். அதனால்தான் தம்மை உணர்ந்த நிலையிலேயே தலைவனாகிய கடவுளை உணரமுடியும் என்றனர் ஞானிகள்!

ஆன்மிகம் என்பது முற்றாகச் சமயமும் அல்ல; சமயம் சாராததும் அல்ல. ஆனால், ஆயிரத்தில் ஓரிருவர் கடவுள் பக்தியில்லாமலும், அறிவியல் மேதைகளாக, நல்லவர்களாக, சான்றோர்களாக, வையகத்தை வாழ்வித்தவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், பெரும்பாலோரின் ஆன்ம வளர்ச்சிக்குக் கடவுள் நம்பிக்கையும், வழிபாடும் ஒரு சாதனமாகும்.

கடவுள் வழிபாடு, பக்தி உடையவர்களில் பலர் ஆன்ம சக்தியே இல்லாதவர்களாக, கொடியவர்களாகக் கூட இருக்கிறார்கள். இவர்களுக்குக் கடவுள் பக்தி மனிதர்களுக்குத் தேவைப்படும் தண்ணீரைப் போல. மீனுக்குத் தேவைப்படும் தண்ணீரைப் போல, மனிதனுக்குக் கடவுள் பக்தி அமைய வேண்டும்.

ஆன்மாவின் தூய்மையே மனத் தூய்மை. மனத்தால் புலன்களும் அழுக்கற்றதாகும்; புலன்களில் தூய்மை, பொறிகளில் தூய்மை, இதுவே சீரான வளர்ச்சி. பொறிகளின் தூய்மையால், ஆன்மா தூய்மையடைதலும் உண்டு. ஆனால்

இது கடினம். பல சமயங்களில் வழுக்கல் ஏற்பட்டுத் தோற்றுப் போதலும் உண்டு. ஆன்மிக வாழ்க்கைக்கு இல்லறமா? துறவறமா? என்ற விவாதம் கிடையாது. இரண்டிலும் ஆன்மிக வளர்ச்சி சாத்தியமே. வாழ்பவர்களைப் பொறுத்ததே ஆன்மிக வளர்ச்சி.

ஆன்மிகம் என்பது துறவு நெறியைச் சார்ந்ததென்று பலர் கருதுகின்றனர். இது தவறு. உலகத்தை வெறுப்பது ஆன்மிகம் அல்ல; உலகத்தை அறிந்துகொண்டு, அதற்குள் வாழ்ந்து, தங்களையும், உலகத்தையும், ஒருசேர வளர்த்துக் கொள்வதே ஆன்மிகம். அப்பரடிகள் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியை.

"அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன் நீ இம் மணிநீ இம்முத்துநீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!"

என்று அருளியுள்ளமையை அறிக. எவன் ஒருவன் தன்னையும், தன்னுடைய பொறி புலன்களையும், தன்னைச் சுற்றி உள்ள உலகத்தையும், தன்வசப்படுத்திப் பயன் கொள்கின்றானோ, அவன் ஆன்மிகத்தில் வளர்ந்தவன்; உயர்ந்தவன். ஆன்மாவிற்குள் ஆசை வெள்ளம், பொறிகள் வாயிலாக வந்து புகுந்துகொண்டே இருக்கும். ஆனால் ஆன்மா அமைதியாக விளங்கும்; தேர்வு செய்யும்; ஏற்பன ஏற்கும். இதுவே ஆன்மிக வாழ்க்கையின் இயல்பு.

ஆன்மிகத்தில் வளர்ந்தவர்கள் மானுட சமூகத்தை இறைவன் ஒரு குடும்பமாக அமைத்தே வழி நடத்துகின்றான்; வாழ்விக்கின்றான்; என்று நம்புவார்கள். ஆன்மிகத்தின்

கொள்கை ஒருமைப்பாடே! ஆன்மா சுருங்கிப் போவதல்ல. ஆன்ம மதிப்பீடு இல்லாத உடல் வாழ்வு மட்டுமே வாழ்பவர்கள் பிரிவினை வாதிகள்.

கடவுள் ஒருவரே. கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை. அதுபோல முத்தியும் ஒன்றே. "கடவுள் ஒன்றல்ல; இரண்டு" என்று சொன்னால், அந்த நம்பிக்கை ஆன்மிகத்தின் - ஆன்மிக வாழ்க்கையின் குறிக்கோளை முறியடித்துவிடும். இத்தகைய பிரிவினைவாதிகள் மக்களை மதிக்க மாட்டார்கள். கெட்ட போரிடும் உலகத்தை உருவாக்குவர். இத்தகைய வெற்று மனிதர்கள் ஆன்மிக வேடங்கொண்டிருந்தாலும், ஆன்மிகவாதிகள் அல்ல.

ஆன்மிக வாழ்க்கையில் வளர்ந்தவர்கள் குழந்தை களைப் போன்றவர்கள். எளிதில் மகிழ்வர்; அன்பு செய்வர்; பிறருக்கு மகிழ்வூட்டுவர். ஆன்மா, அஹிம்சை, அஞ்சாமை, தியாகம், தயை, கள்ளாமை, நன்னடத்தை ஆகியவற்றைத் தனது அணிகலன்களாகக் கொண்டு பலருடன் கூடி வாழ்ந்தால் சமுதாயம் மேம்பாடுறும்.

இன்று பெரும்பாலும் ஆன்மிகம் கடவுளைச் சார்ந்து கூட இல்லை. மதங்களைச் சார்ந்திருக்கிறது. மதங்களைக் கூட அல்ல - மத நிறுவன அமைப்புக்களைச் சார்ந்திருப் பதையே இன்று ஆன்மிகம் என்று தவறாகப் பலர் கருது கின்றனர். மதங்கள் தம்முள் முரண்பட்டே விளங்குகின்றன.

ஒரோ வழி மதங்கள் அன்பை, சமாதானத்தை, சகோதரத்துவத்தைப் போதிப்பது உண்மையானாலும், இந்தப் புனிதக் கொள்கைகளை விட, மதம் என்ற அமைப்பு - நிறுவனம் இவற்றின் ஆதிபத்திய அக்கறை மதங்களுக்கு மிகுந்து விட்டது. ஆதலால் மதங்களின் பெயரால், சண்டைகள், கலகங்கள், கொலைகள் தோன்றுகின்றன. கல்லாடம் சமயப் பிணக்கை மறுக்கிறது.

வள்ளற் பெருமான் சமயப் பிணக்குகளையும், பேதங் களையும் பார்த்து வெறுத்துப் போய் "மதமென்னும் பேய்"

என்றார். இந்த உலகில் மதங்களின் பெயரால் நடந்த ஆதிபத்திய சண்டைகளே மிகுதி. ஆதலால், கடவுள் நம்பிக்கையையும் பிரார்த்தனையையும், கடவுள் வழிபாட்டையும், மதத்தோடு இணைத்துப் பார்க்கக் கூடாது. ஆன்மிக உலகம் வேறு; மத உலகம் வேறு.

ஒரு செடியிலிருந்து மணமுள்ள மலர், ஆரவாரமின்றி, முகிழ்த்து வெளி வந்து, எல்லோரும் மணத்தை அனுபவிக்கும்படி, மணத்தைப் பரப்புவதைப் போல, ஆன்மாவில் அன்பாக, அருளாக, தியாகமாக, சந்தடியின்றி, ஆரவாரமின்றி முகிழ்த்து, வாழ்வித்து வாழ்வது ஆன்மிகம்.

ஆன்மிகம் மற்றவர்களுக்கு உதவுவதில் முந்தும்; ஆறுதல் தரும். ஆன்மிகம் பயத்திற்கு அப்பாற்பட்டது; ஆளுமை உடையது. விசாலமான இதயம் உடையது. உறுதியும், உண்மையும் உள்ள உள்ளம், விருப்பத்துடன் வேலை செய்யும் ப்ண்பு இவையே ஆன்மிகத்தின் அடையாளங்கள். இறைவன் கற்கோயிலில் எழுந்தருளுவதைவிட, மனக்கோவிலில் எழுந்தருளுவதையே விரும்புகின்றான். இறைவனை, "உடலிடங் கொண்டாய்", "மனத்தகத்தான்" என்றெல்லாம் திருமுறைகள் போற்றும். கற்கோயிலை விட மனக்கோயிலிலேயே இறைவன் எழுந்தருளுகின்றான் என்பதற்குப் பூசலார் நாயனார் வரலாறே சான்று.

எந்த மனிதனிடம், சாந்தம், சத்தியம், புலனடக்கம், துணிவு, சமபுத்தி உள்ளனவோ, அந்த மனிதனே ஆன்மிகத்தில் சிறந்தவன். இத்தகைய மனிதரால், இவ்வுலகில் கோடிக்கணக்கான குலங்கள் வளரும்; வாழும். அவர்களின் உடலிலேயே இறைவன் குடிகொண்டு, அவர்களின் மூலம் தன் விருப்பத்தைக் கடவுள் நிறைவேற்றிக் கொள்ளுகின்றான். அதனால், எல்லாவற்றையும், உன்னைப் போலவே உன் ஆன்மாவைப் போலவே காண்க.

ஆன்மிகம் விலை மதிப்பிட முடியாத ஒரு செல்வம். ஆன்மிகத்தில் செழித்தவர்கள் முகத்தில் ஒரு பொலிவு - புன்முறுவல் தோன்றும்; பரிவு வெளிப்படும்; பண்பாடு இருக்கும். ஒருவன் ஆன்ம சக்தி உடையவன் என்பதை அவனுடைய ஒவ்வொரு அசைவிலும் காணலாம். எடுப்பான தோற்றம் ஆன்மிகம் வழங்கும் கொடை. ஆன்மிக நலம் பொருந்தியவன் வழங்கும் சொற்கள், அவனுடைய ஆன்மா அன்பில் நனைந்திருக்கிறது என்பதைப் புலப்படுத்தும்.

ஒவ்வொரு ஆன்மாவும் ஆன்ம சக்தியால் வளர முடியும். வாழ முடியும். சொற்கள், செயல்கள் இவை யெல்லாம் உயர்ந்த ஆன்மாவை இனம் காட்டும் அடையாளங்கள். நமது ஆன்ம சக்தியை மற்றவர்களுக்கு உணர்த்தும் சாளரங்களே கண்கள். சொற்களே தூதர்கள். முகத்தால் அமர்ந்தினிது நோக்கி, இன்சொல் கூறி, ஈத்துவந்து மகிழ்தலையே திருவள்ளுவம் பாராட்டும்.

மருந்து மரம் தன் நன்மை நோக்காது, தனக்கு வரும் வெட்டுக்களையும் ஏற்றுக் கொண்டு, மற்றவர்கள் நோய்க்கு மருந்து வழங்கும். இதுவே ஆன்மிகத்தின் பண்பு.

ஆன்மிகம் எப்போதும் அறிவைத் தேடும்; அன்பை வழங்கும்; வாழ்விக்கும். ஆன்மிகம் அருள் பழுத்த வாழ்வு; சின்னங்களும், அடையாளங்களும் மட்டும் ஆன்மிகம் அல்ல. அவை ஆன்மிக வளர்ச்சிக்குத் துணை செய்யும் சாதனங் களாக அமையக் கூடும். அப்படி அமைந்தால் வரவேற்கத் தக்கதே. இன்று பெரு வழக்காக மதத்தின் பெயரில் நடைபெறும் சடங்குகள் ஆன்மாவைத் தொடுவது கூட இல்லை.

ஆன்மிகம் மனிதத்தின் விழுமிய பயன். ஆன்மிகத்தின் மறு பெயர்தான் மனித நேயம். ஆன்மிகம் ஆன்மநேய ஒருமைப்பாடுடையது. ஆன்மிகம் சன்மார்க்க நெறி; பொது

நெறி. ஆன்மிகம் பகுத்தறிவுக்குப் புறம்பானதல்ல; ஆன்மிகம் ஞானம்; ஆன்மிகம் உலகந்தழீஇயது.

> *"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்*
> *வேறொன்றறியேன் பராபரமே"*

என்றார் தாயுமானார். இதுவே ஆன்மிகத்தின் குரல். இந்த குரல் இன்று இந்தியாவிலேயே ஒலிக்கவில்லை. தமிழகத்திலேயே ஒலிக்கவில்லை. நாளும் திருக் கோயில்கள் பெருகி வளர்கின்றன; திருவிழாக்கள் நடக்கின்றன; குட முழுக்கு விழாக்கள் நடக்கின்றன. ஆனால் இவையெல்லாம் மனிதநேயம், தாழ்வெனும் தன்மை நோக்கிச் சமயம் சாரும் இயல்பைத் தந்தனவா? வறுமை, சிறுமைகளிலிருந்து தப்ப வழி வகை கற்றுக் கொடுத்ததா?

மானுடப்பதம் தந்து வாழ்வளித்த வள்ளற்பெரு மானாகிய இறைவனிடமே இரவலனாகத்தானே மனிதன் செல்கின்றான்? திருக்கோயிலிலும் போட்டா போட்டிகள்! மரியாதைகள்! சாதிப்புன்மைகள்! பணத்தின் திருவிளை யாடல்கள்!

எங்கே பழங்காலத் திருக்கோயில்களைச் சார்ந்து வளர்ந்த ஆன்மிகம்? நாயன்மார்களும், ஆழ்வார்களும் வளர்த்த ஆன்மிகம் எங்கே? சரா சரங்கள் எல்லாம் சிவம் பெருக்கிய சீலம் எங்கே? "எந்நாட்டவர்க்கும் இறைவா" என்ற உலகப் பொதுமை தழுவிய மாணிக்கவாசகரின் ஆன்மிகம் எங்கே? "தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை" என்றவாறு தொண்டு நெறியில் வளர்ந்த ஆன்மிகம் எங்கே?

"பலர் வைகுந்தத்திற்குப் போக நான் நரகத்திற்குப் போகச் சித்தமாயுள்ளேன்" என்று மதில் மேல் ஏறி, இறைவன் நாமத்தை எடுத்து ஓதிய இராமனுசரின் ஆன்மிகம் எங்கே? "சேர வாரும் செகத்தீரே" என்று, வேறுபாடின்றி அனை வரையும் அழைத்த ஆன்மிகம் எங்கு போயிற்று? தேடுங்கள்!

ஆன்மாவின் வழி வாழக் கற்றுக் கொள்ளுங்கள்? எவ்வுயிரும் தம்முயிர் போல் போற்றும் பெருநெறி கடைப் பிடித்து ஒழுகுங்கள்! வல்லார்க்கும், வல்லமை இல்லாதாருக்கும், ஒரு சேர வாழ்வளியுங்கள்! உயிர்க்குலம் - திருக்குலம் வாழ, வளரத் தொண்டு செய்யுங்கள்! இந்த மண்ணுலகத்திலேயே விண்ணுலகத்தைக் காணுங்கள்!

ஆன்மிகம் சமுதாயத்தைக் கூட்டு விக்கும். ஆன்மிகம் சமுதாய மேம்பாட்டுக்குத் துணை செய்யும்! கடவுளை நம்பு! பிரார்த்தனை செய்! கடவுளிடம் சர்வ வல்லமையைத் தந்தருளும்படி கேட்டுக்கொள்! ஆன்மிகத்தில் சிறந்த மனிதர்கள் சமாதானத்தின் காவலர்கள். ஆன்மிகவாதிகள் சமநிலை காண்பவர்கள், எல்லோரையும் வாழவைக்கும் ஆன்மிகம் வளர்க! வாழ்க! ஆன்மிகத்தில் வளர்ந்து சமுதாய மேம்பாட்டைக் காண்போமாக!

உடலுக்கு வலிமை; ஆன்மாவுக்குத் துணிவு. உடலில் நோயின்மை; ஆன்மாவில் குற்றமின்மை. உடலுக்கு ஒழுங்குகள்; ஆன்மாவுக்கு ஒழுக்கம். உடலுக்குத் திறமை; ஆன்மாவுக்கு அறிவு. உடலுக்கு உணவு; ஆன்மாவுக்கு பக்தி. உடல் உழைப்பு மக்களுக்கு; ஆன்மாவின் உழைப்பு கடவுளுக்கு. உடலுக்குத் தனிமை; ஆன்மாவுக்கு மக்கள் திரளுடன் கூடுதல். உடலுக்குச் சுயநலம்; ஆன்மாவுக்குப் பிறர் நலம் - என்பன இயற்கையில் அமைந்த நியதிகள். இவற்றில் பல உடன்பட்டவை.

வலிமை-துணிவு; நலம்-குற்றமின்மை; ஒழுங்கு-ஒழுக்கம்; திறமை-அறிவு; மக்களுக்கு-கடவுளுக்கு இவை உடன் பாடுடையன. ஆனால் உடல் பெரும்பாலும் சுயநலத்தையே நாடும். நல்ல ஆன்மா பிறர் நலத்தையே போற்றும். உடல் பெரும்பாலும் ஆன்மாவை ஆட்டிப் படைத்துத் தனது ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ள ஆசைப்படும். ஆன்மா வுக்கு அடங்கி நடக்கும் உடலே நல்லது. ஆன்மாவின் வழி வாழ்தலே வாழ்க்கை.

ஆன்மாவினாலேயே சமுதாயத்தைக் காண இயலும்; பேண இயலும். குறைவிலா நிறைவாக, அன்பில் பழுத்து உலகம் தழீஇ வாழ்தலே ஆன்மிகம். இந்த வழியில் இனி மேலாவது நடப்போமாக!

இந்த ஆன்மிக வழியில் நடவாமல் இப்போது அசுர வழியில் போய்க் கொண்டிருக்கிறோம். [illegible] விளைவு பாதுகாப்பும், உத்திரவாதமும் இன்மை! வறுமைக்கோடு! துன்பங்கள்! துயரங்கள்! இனிமேலாவது நாளும் நமது ஆன்மாவின் தரத்தை, நலத்தை வளர்த்துக் கொள்வோம்! இம்மாநிலம் பயனுறும் வழியில் வாழ்வோமாக! ஒருவன் உலகத்தையே பெற்றாலும், தனது ஆன்மாவை இழந்து விடுவானாயின் என்ன பயன்?

இன்று ஆன்மாவை இழந்து, பொக்குகளாக, வெற்றர்களாக, வாழ்வோர் பலர். இவர்களை "இந்த வையகம் சுமப்பதுவும் வம்பு" என்றார் ஆண்டாள் நாச்சியார். சமுதாயம் தழீஇய ஆன்மிக வாழ்க்கையே வாழ்க்கை. சமுதாயத்தைப் பற்றியுள்ள துன்பங்கள் அனைத்தும் அகலத் தன்னந்தனியாகவும், கூட்டமாகவும், ஆன்ம வாழ்க்கை வாழ்வோம்! வளர்க ஆன்மிகம்! வளர்க சமுதாயம்!

கடவுளே கூட வான் பழித்து, இம்மண்ணிற்கு வந்தது மனிதனோடு கூடிவாழத்தான்! அதில் ஒரு தனி இன்பம். அந்த இன்பம் நிறைந்த வாழ்க்கைக்குத்தான் ஆன்மிகம் என்று பெயர்.

## 12. எங்கே போகவேண்டும்?

(29–10–94 அன்று மதுரை வானொலியில் ஆற்றிய உரை.)

மதுரை வானொலி நேயர்களே! இனிய நல் வாழ்த்துக்கள்! கடந்த பதினொரு வாரமாக "எங்கே போகிறோம்?" என்ற தலைப்பில் கருத்துரைத் தொடர் வழங்கும் வாய்ப்புக் கிடைத்தது. நீங்களும் கேட்டீர்கள்.

இந்தக் கருத்துரைத் தொடரின் மூலம் ஏற்பட்டுள்ள கிளர்ச்சி எவ்வளவு? எத்தகையது? என்று கணக்கிட முடியவில்லை

மதுரை அன்பர் ஏ.எஸ்.கே. ஒவ்வொரு பேச்சுக்கும் வினாக்களை எழுப்பியிருந்தார். அர்த்தமுள்ள வினாக்களாக எழுப்பியிருந்தார். அவருக்கு நன்றி! அதுபோல திருப்புன வாசல் இளைஞர்கள் கூடியிருந்து கேட்டுள்ளனர். வினாக்களும் எழுதியுள்ளனர். அந்த இளைஞர்களுக்கு நமது வாழ்த்துக்கள். வானொலி நிலையத்தாருக்கும் நன்றி சொல்ல வேண்டும். ஆனாலும் நன்றியை வார்த்தைகளால் கூறாமல், வானொலி நிலையத்தினர் நமக்குப் பல விதங்களில் சிந்திக்கும் வாய்ப்பு அளித்து வருவதை நினைந்து, திருக்குறள் வழியில் அவர்களுக்கு நன்றியறிதலுடன் வாழ்தல் நமது கடமை.

எங்கே போகின்றோம்? வாழ்க்கை ஒரு பயணம்; நெடிய பயணம் போலத் தோற்றமளித்து குறுகிய காலத்தில் முடியும் பயணம்.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு”

என்று திருக்குறள் கூறும். வாழ்க்கையில் இளமையில் பிழைகள் நேர்ந்தால் வாழ்க்கையின் நடுவில் போராட்டங்கள் அமையும்; வாழ்க்கையின் முடிவில் கழிவிரக்க நிலை தோன்றும். இந்த அவலத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டாமா? எங்கே போகிறோம்?

எது நமது வாழ்க்கையின் குறிக்கோள்? “மானுடம்” அற்புதமான பிறவி! நான்கு சுவர்களுக்குள் அடங்கிய குடும்பத்திற்காக மட்டுமா இவ்வளவு பெரிய மானுடப் பிறவியை இறைவன் வழங்கியிருப்பான்? தான் உண்டு, தான் வாழ்தல் அவசியம்; திருமணம் நிகழ வேண்டும்; வாழ்தல் வேண்டும்; அடுத்த தலைமுறைகள் தோன்ற வேண்டும்; எல்லாம் நடக்க வேண்டும்; நன்றாகவே நடக்க வேண்டும்.

ஆயினும் வீட்டிற்கு வெளியே உள்ள உலகம் வெளிச்சத்தில் இருந்தால்தான் வீட்டிற்குள் வெளிச்சம் இருக்கும். சூரியன் எரிகிறது; உலகம் முழுவதற்கும் ஒளி தருகிறது; வாழ்வளிக்கிறது; சிமினியும் எரிகிறது. ஆனால் வெளிச்சம் குறைவு. தன்னைக் காட்டுகிறது; சுற்றிலும் கிடக்கும் சில பொருள்களைக் காட்டுகிறது. இன்று பலர் சிம்னி விளக்குப் போல வாழ்கின்றனர். பலரால் அவ்வளவு தான் முடியும்.

ஒரு சிலராவது வீட்டிற்கு வெளியே உள்ள உலகத்தைப் பார்க்கக் கூடாதா? ஊருக்குப் பத்து பேர், ஊராரைப் பார்க்க, ஊரை வளர்க்க நேமில்லாமலா போய்விட்டது? அல்லது ஆற்றல் இல்லாமல் போய்விட்டதா? அதெல்லாம் ஒன்றும் இல்லை. சுயநலம் ஒரு காரணம். மற்றவர் வாழ வேண்டும் என்ற கவலையே பலருக்கு இல்லை. இன்னும் பலருக்கு அச்சம்! பயம்! ஊருக்கு நல்லது சொன்னால் எவ்வளவு பேர் கேட்பார்கள்? பலர் கேட்க மாட்டார்கள். ஆதலால் நமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்குகின்றனர்.

இந்த உலகத்தின் போக்கு வினோதமானது. இந்த உலகத்தின் அங்கீகாரத்தை எதிர்பார்ப்பவர்கள் எதையும் செய்ய இயலாது. அதனால்தான் இன்று புகழ் என்பது விளம்பரமாக, தம்முடைய கையாட்களை வைத்துச் செய்து கொள்வதாயிற்று. அண்ணல் ஏசு முதல் அண்ணல் காந்தி யடிகள் வரையில் அப்பரடிகள் முதல் அருட்பிரகாச வள்ளலார் வரையில், உலகம் அங்கீகரிக்கவில்லை மாறாகத் துன்புறுத்தியது.

ஆதலால் நீ வாழ ஆசைப்பட்டால் வாழ முற்படு! வாழ்க்கையின் குறிக்கோளை நிர்ணயம் செய்து கொள்! குறிக்கோளை அடையத் தளர்ச்சியின்றி முயற்சி செய்; நாளும் உழைப்பை, முயற்சியை, வளர்த்துக்கொள்! வாழ்வாய் மற்றவர்களையும் வாழ வைப்பாய்!

இப்பிறவி நமக்குக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு. வாய்ப்பு எப்போதும் வராது. தொடர்ந்தும் வராது. அது

நமக்காகக் காத்துக் கொண்டும் நிற்காது. வாய்ப்பு இருக்கும் திசையை நாடுங்கள்! எது வாய்ப்பு - நல்வாய்ப்பு என்று இனங்கண்டு கொள்ளும் திறமை வேண்டும்.

வாய்ப்புகளைத் தேர்வு செய்து ஏற்பதில்தான் வெற்றி இருக்கிறது. வாய்ப்புக்களைக் கவனிக்காமல் அதனைத் தாண்டி நாம் போய்விடக் கூடாது. அதுபோலவே நம்மைத் தாண்டி வாய்ப்பு போக அனுமதிக்கக் கூடாது. "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி; மதித்திடுமின்!" உளதாகும் சாக்காட்டை விரும்புங்கள்! வளருங்கள்! வாழுங்கள்!

ஒரு நாடு நல்ல குடிமக்களைப் பெற்றிருந்தால்தான் அந்நாடு வளரும்! புகழ்பெறும்! இன்று நமது நாட்டில் குடிமக்கள் தகுதி பெற்றவர்கள் மிக மிகச் சிலரே. 10 விழுக்காடு கூட இருக்க மாட்டார்கள். நாட்டுப் பற்றும், எல்லோரும் இந்தியர் என்ற உணர்வும் இன்று அருகி வருகிறது. நாட்டுக்காக அரசியல் என்பது போய், தனது ஆதாயத்துக்காக அரசியல் என்பதாகி விட்டது.

அன்று அன்னியர்கள் சுரண்டினார்கள். இன்று இந்தியர்களே இந்தியாவைச் சுரண்டுகிறார்கள். இந்த அவலம் எளிதில் அகலாது. பொது மக்கள் கருத்துத் திரண்டால், பொதுமக்கள் இதுபற்றி பேசினாலே கூட அகலும். பொது மக்களிடத்தில் அரசியல், சமூக விழிப் புணர்வுகளை உண்டாக்குங்கள்! போர்க் குணத்தை உருவாக்குங்கள்!

சுதந்திர தினப் பொன்விழா வரப்போகிறது. இன்னமுமா வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வது? நமது நாட்டு இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தவித்தும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் கூட அமையாத வாழ்க்கையில் ஒரு புழுவென நெளிந்தும் எத்தனை ஆண்டுகள் வாழ்வது? நெடுந்துயிலிலிருந்து விழித்துக் கொள்! பொது மக்களிடம் விழிப்புணர்ச்சியை உண்டாக்கு! தன்னை நாடிக் கேட்பவர்களுக்கும், ஏதாவது

தருபவர்களுக்கும், விளம்பர மன்னர்களுக்கும், வாக்களிக்க மாட்டோம் என்று உறுதி கொள்ளச் செய்க!

அடக்கமாக இந்த நாட்டை நேசிப்பவர்களை இந்த நாட்டு மக்களை நேசிப்பவர்களைத் தேடிப் பிடித்து வேட்பாளர் ஆக்குங்கள்! அவர்களுக்கே வாக்களியுங்கள்! இந்த நாட்டில் ஐம்பது ஆண்டுகள் வாழ்ந்தவர்களுக்கு இந்த நாட்டைப் பற்றித் தெரியாதா? யாருக்கு வாக்களித்தால் நல்லது என்று இளைஞர்களுக்கு வழிகாட்டக் கூடாதா?

மனிதகுல வரலாற்றை உருவாக்குவதில் மத்தியதர வர்க்கத்திற்கு ஓர் இடம் உண்டு! சமுதாய மாற்றத்தை மத்தியதர வர்க்கமே உருவாக்க இயலும். இன்று நமது நாட்டு மத்தியதர வர்க்கம் நுகர்பொருள் சந்தையில் மூழ்கிவிட்டது. மூளைச் சோம்பலுக்கு இரையாகி விட்டது. ஏழைகள் நிலையான தீர்வுகாண விரும்பவில்லை. இனாம், இலவசம், இவற்றையே நம்பி வாழ்கின்றனர். கோடிக்கணக்கான மக்கள் என்று பொழுது விடியும் என்று எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். பொழுது விடியாது! நாமாகத்தான் விடியவைக்க வேண்டும்.

ஜனநாயக மரபுகளைப் பயிற்றுங்கள்! கூடிச் சிந்தனை செய்யுங்கள்! கூடிவாழக் கற்றுக்கொள்ளுங்கள்! ஒருவர் எல்லாருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும் என்று வாழக் கற்றுக்கொள்ளுங்கள்! மக்களுக்கு நன்னடை நல்கும், அரசைப் போற்றுவோம்!

நிலத்தில் நாம் பிறக்கின்றோம். நிலத்திலேயே வாழ்கின்றோம். நிலமே நமக்கு உணவுப் பொருள்களைத் தந்து வாழ்வளிக்கிறது. இறுதியிலும் நிலத்தின் மடியையே சரண் அடைகின்றோம். நிலத்தை நம்மிடமிருந்து பிரிக்க முடியாது. இந்நிலத்தைப் பேணுங்கள்! நிலத்தின் தரத்தைக் காப்பாற்றுங்கள்! நிலத்தில் மரங்களை நடுங்கள்! பயிர்களைச் சாகுபடி செய்யுங்கள். எங்கும் பசுமை போர்த்திய நிலத்தையே காண்க!

கு.XVI.29.

விலங்குகள், பறவைகள் துணையின்றி மனிதன் வாழ்தல் இயலாது. கால்நடைகள் செல்வம். கால்நடை வளர்த்தல் பன்முகப் பயன்தரும் தொழில். பால் மாடுகள் நமக்குப் பூரண சத்துணவாக விளங்கும் பாலைத் தருகின்றன. நிலத்திற்கு உரமளிக்கின்றன. ஆதலால் வீடுகள் தோறும் பால்மாடுகள் வளர்த்து பாலும், மோரும் உண்டு வளமாக, வலிமையாக வாழ்வோமாக!

மானுட வாழ்க்கையின் அடிப்படை, மானுட வாழ்க்கையின் இயக்கம் எல்லாம் பொருளாதார அடிப்படைதான். அல்லது பொருளாதாரமேதான். ஒரு சிலர், கருத்தே உலகை இயக்குகிறது என்பர். கருத்து இந்த உலகத்தை இயக்குவதாயின் ஆன்மிக மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். உலகத்தில் மனிதன் சிந்திக்கத் தொடங்கி பல நூறாயிரம் ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

உலகத்தில் எந்த நிலையில் தோன்றிய எந்த கருத்தும் உலகத்தை வென்று விளங்கவில்லை. ஆனால் பொருளா தாரம் இயக்கி வந்திருக்கிறது. பண மதிப்பீட்டுச் சமுதாயம் விருப்பத்தக்கதல்ல என்று எவ்வளவு எடுத்துக் கூறினும் இன்னும் எடுபடவில்லை. நாட்டிற்கு நலம் செய்யும் வாய்ப்புக்களை நல்லூழால் பெற்றவர்கள் முதல் துறவியர் வரை பணமே இயக்குகிறது. ஏன்? திருக்கோயிலில் கடவுள் எழுந்தருளச் செய்யும் பொழுதுகூட பொற்காசுகள் போடு கின்றோம். அதனால்தான் மாமுனிவர் காரல்மார்க்ஸ் இந்தச் சமுதாய இயக்கத்திற்குப் பொருளே முதல் என்றார்.

நமது திருவள்ளுவரும் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்றார். "செய்க பொருளை" என்றார். ஆனால் பொருள் செய்யாமல்; பொருள் செய்யும் முயற்சியில் முழு அக்கறையுடன் ஈடுபடாமல், அதிர்ஷ்டத்தை நம்புகின்றோம். லாட்டரிச்சீட்டை நம்புகின்றோம். இது தவறு. போகும் வழியும் அல்ல.

நமது நாட்டு மக்களின் வறுமைக்கு வயது குறைந்தது இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகள் இருக்கலாம். ஆனால்

மூப்பு அடையாமல், சாகாமல், வறுமை வளர்ந்து வருகிறது. இன்று வறுமை "வறுமைக் கோடு" என்று வெளிப்படத் தோன்றி, அரசின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. இந்த வறுமையை இந்தத் தலைமுறையில் அகற்றியே ஆகவேண்டும் என்று உறுதி பூணுங்கள்.

நடுத்தர மக்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், ஏழைகளுடைய பொருளாதார ஆக்கத்திற்கும் நம் நாட்டில் தடைகள் பல உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கறுப்புப் பணத்துடன் கொழுத்து வளரும் தனியுடைமை, பன்னாட்டு மூலதனம் முதலியன. மேலும் நம்முடைய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிய தடை நிலையாமைத் தத்துவம் - விதித்தத்துவம். இவற்றை எல்லாம் எதிர்த்துப் போர்க்குணத்துடன் போராடுவோம்! வறுமையி லிருந்தும், சிறுமையிலிருந்தும் விடுதலை பெறுவோம்!

மானுடம் அறிவுப் பிறவி! - அறிவு ஜீவன்! ஆனால் அறிவைத்தான் நம்மால் பெறமுடியவில்லை. கல்வி, கேள்வி முதலிய சாதனங்கள் பல்கிப் பெருகியும் அறிவு வளரவில்லை. ஏன்? இன்று அறிவு வேட்கை உடையோர் யார்? அறியாமையையே அறிவு என்று நினைத்துக் கொண்டு, தலையால் நடப்பவர்கள் பல்கிப் பெருகி விட்டனர்.

எங்கு நோக்கினும் பட்டதாரிகள்! ஆனால் படைப் பாளிகளைக் காணோம்! ஏன் இந்த அவலம்? கற்க! தொடர்ந்து கற்க! கற்ற, கேட்ட கருத்துக்களைச் சிந்தனை செய்க! அச்சிந்தனைக்கு உருவம் தருக! உருவம் தரும் முயற்சியில் அறிவு முகிழ்க்கும்! அறிவு துன்பத்திலிருந்து பாதுகாக்கும்! அறிவைத் தேடுவோம்! நாளும் தேடுவோம்!

அறிவு நுட்பமானது அறிவு பயனுடைய வகையில் இயங்க உழைப்புத் தேவை. இந்த உடல், உழைப்பால் ஆயது, உழைப்புக்காகவே உருவானது. உழைப்பும், அறிவறிந்த ஆள்வினையும் இந்த உலகை சென்ற காலத்தில் உருவாக்கி

வந்துள்ளது. நம்முன் மதுரைப் பெருங்கோயில், வைகை நீர்த்தேக்கம், இவையெல்லாம் உழைப்பின் சிறப்பையே போதிக்கின்றன! உழைப்பு வாழ்வதற்கு இன்றியமையாதது.

உழைக்காது, அல்லது முற்றாக உழைக்காது உண்பவர்கள் சோம்பேறிகள்; கொள்ளைக்காரர்கள் உழைத்து உண்பதே உயர்வு. அறிவறிந்த ஆள்வினை சார்ந்த வாழ்க்கையை நடத்துவோமாக! உழைப்பில் இன்பம், இடையீடு இல்லாத உழைப்பில் இன்பம், பிறருக்கென உழைப்பதில் இன்பம் காண்போமாக!

மனிதனின் வரலாற்றுக்கு வளர்ச்சி தேவை! மாற்றங்கள் தேவை! ஓடிக்கொண்டே உள்ள ஆறுகள் பயன்படும் தீர்த்தம் எனப்படும். தேங்கிக் கிடக்கும் குட்டை நீர் பயன்படாது - நோய்களைத்தான் தரும். அதுபோல, வளர்ச்சியையும், மாற்றங்களையும் ஏற்படுத்திக் கொள்ளாத மனிதர்கள், மனிதகுலம் முன்னேற முடியாது; மேம்பாடு அடைய முடியாது.

பழக்கங்கள், வழக்கங்கள் என்ற சால் வழியே செல்லாது. பழக்கங்கள் தவிரப் பழகுமின்! மனிதனுக்கு வாய்க்கும் எந்த ஒரு துன்பமும் இயற்கையுமன்று நியதியு மன்று. இவையனைத்தும் மனிதனின், மனித குலத்தின் பிழைகளால் நேர்பவையே! பிழைகளைத் தவிர்த்துப் பழகுமின்!

"யாரொடும் பகை வேண்டாம்" என்றான் கம்பன், சொல் மூன்று. பொருள் பெரிது. "யாரொடும்" - உடன் பாடிலாதவரிடம் கூடப் பகை கொள்ளவேண்டாம். பகை இல்லையேல் போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது. நாமும் பகையின்றி, பண்பு பாராட்டி, உறவு கொண்டு வாழ்வோம்! யாரோடும் உறவு! எவரோடும் ஒப்புரவு! இவை நமது வாழ்க்கை நெறிகளாகட்டும்! பழமையின் சாரம் ஏற்போம்! பழமை வித்து!

பழமை இன்றையத் தலைமுறைக்கு உணவாக இயலாது. ஆனால் உட்டமேற்றும் உரமாகும். புதுமை படைப்போம்! புதியதோர் உலகைச் செய்வோம்! சாதிகளை அகற்றுவோம்! குலம், கோத்திரங்களை மறப்போம்! ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்போம்! புவியை நடத்துவோம்! பொதுவில் நடத்துவோம்! மனிதகுல சமநிலை காண்போம்! மார்க்சியம் கற்போம்! வள்ளுவம் கற்போம்! இவ்விரண்டு தத்துவங்களும் இணைந்த சமுதாயம் காண்போம்!

எல்லோருக்கும் எல்லாப் பெருஞ் செல்வமும் அடையும்படி செய்வோம்! வல்லாருக்கும் மாட்டாருக்கும் ஒருங்கே வாழ்வளிப்போம்; ஒத்தாரும், உயர்ந்தாரும் தாழ்ந்தாரும், எவரும் ஒருங்கிணைந்து உலகியல் நடத்து வோம்! கணியன் பூங்குன்றன் வழி, பெரியோரை வியத்தல் செய்வோம்! சிறியோரை இகழ்தல் அதனினும் இலம்! நாளும் புதியன கற்போம்! புதியன படைப்போம்! இன்றைய பணிகளை, இன்றைய கருவிகளைக் கொண்டே செய்வோம்! இல்லாதவர் இல்லை என்று செய்வோம்!

அப்பரடிகள் கூறியவாறு, "இன்பமே எந்நாளும் - துன்பமில்லை" என்று வாழ்வோம்! இந்த மண்ணில் விண்ணரசு காண்போம்!

'சுதந்திரம்' விலைமதிக்க முடியாதது. உலகம் முழுவதும், பல நூறு ஆண்டு காலம் மக்கள் போராடிச் சுதந்திரத்தைக் கண்டனர். 18-ம் நூற்றாண்டில், பிரஞ்சு தேசத்தில் நடந்த புரட்சி, மனித குலத்திற்கு மூன்று மந்திரங்களை வழங்கின. அவையாவன சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன. இவையே இன்றைய மனித உலகத்தின் தாரக மந்திரங்கள். இதன் பின் உலகம், சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியது.

இன்று நமது நாடு சுதந்திர நாடு! நாமே, நமக்கென்று நம்மை ஆள்வதற்கென்று ஆட்சி அமைக்கின்றோம். இன்று நமது நாட்டில் சுதந்திரத்தின் அருமை பலருக்குத் தெரிய

வில்லை ஏன் - சுதந்திரத் திருநாளைக் கூட வீட்டு விழாவாக, பொது விழாவாக மக்கள் கொண்டாடுவதில்லை.

சுதந்திரத்திற்குப் பிறகும் பழைய தீபாவளிதான் பெரிய விசேஷமாக இருக்கிறது. ஏன் - அரசு கூட துணி விலைச் சலுகைகளைச் சுதந்திர தினத்திற்குத் தரவில்லை. சுதந்திர தின விழாவை வீடுகளிலும், நாட்டு மக்கள் விரிவாகக் கொண்டாடுதல் வேண்டும்.

"நாமிருக்கும் நாடு நமது" என்ற உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். 18 வயது நிரம்பியதும், ஊராட்சி அலுவலகத்திற்குச் சென்று வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும். வாக்காளர்கள் தவறாமல், எந்தவிதமான தூண்டுதலும் இன்றி, கையூட்டும் இன்றி, வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். தவறாமல் எல்லோரும் வாக்களிப்பது என்ற கடமை மேற்கொண்டொழுகினால், கள்ளத்தனமாக ஒருவர் பெயரில் மற்றவர் வாக்களிக்க இயலுமா? அல்லது செத்தவர்தான் எழுந்து வந்து வாக்களிப்பாரா? அடையாள அட்டை அவசியப்படுமா? நம்முடைய தவறுகள்தானே அடையாள அட்டை கேட்கும்படியாகச் செய்துவிட்டது?

சுதந்திர ஜனநாயக ஆட்சியில் எல்லோரும் வாக்களிப்பது கடமை. இதில் தவறக்கூடாது. சுதந்திர நாட்டின் குடிமக்கள் அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்குரிய பணிகளில் ஈடுபட உரிமை உண்டு. ஈடுபடவும் வேண்டும். அவரவர் நிலைக்கு ஏற்பத் தாம் வாழும் ஊரின் நலனுக்கும், மேம்பாட்டுக்குமுரிய பணிகளிலாவது ஈடுபட வேண்டும். அதுவும் இயலாது போனால் குறைந்த பட்சம் ஊரின், சமூகத்தின் நலனுக்கு ஊறு விளைவிக்காமலாவது வாழ்தல் வேண்டும்.

சமூக ஒற்றுமைக்கு விரோதமாக, கோள் சொல்லுதல், சிண்டு - முடிந்துவிடுதல் போன்றவற்றைத் தவிர்த்து விடுதல் வேண்டும். ஊரைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். வீதிகளில் குப்பைகளைப் போடுதல், கழிவு

நீர்களை விடுதல் தவறு. பசுமையான மரங்களை வெட்டக் கூடாது. இங்ஙனம் நல்லன அல்லாதவற்றைச் செய்வதைத் தவிர்த்தாலும் ஊர் வளரும்! வாழும்!

ஒரு சுதந்திர நாட்டின் குடிமக்களுக்கு சமூக, பொருளாதார அறிவு தேவை. இவற்றைக் கற்றுக் கொள்ள அனைவரும் முன்வர வேண்டும்! அரசியல், சமூக, பொருளாதார அறிவினை மக்கள் மன்றத்தில் வளர்க்க, இளைஞர்கள் வகுப்புக்கள் மூலம் அரசியல் அறிவை, பொருளாதாரச் சிந்தனையை வளர்க்க வேண்டும்.

ஜனநாயக வாழ்க்கை என்பது தேர்தலுக்கு மட்டுமல்ல. ஜனநாயகம் என்பது ஒரு வாழ்க்கை முறை. ஜனநாயக வாழ்க்கை முறை தனிமனிதனின் சுய விமர்சனத்தாலும், கூட்டாகப் பலர் செய்யும் விமர்சனத்தாலும் வளரும். ஆனால் மற்றவர்கள் செய்யும் விமர்சனம் உள்நோக்கம் கொண்டதாக இல்லாமல், உண்மையில் நாட்டு நலனில் அக்கறை கொண்டதாக அமையவேண்டும். "செவி கைப்பச் சொற் பொறுக்கும்" பண்பு, ஜனநாயக வாழ்க்கைக்கு, கூட்டு வாழ்க்கைக்கு, இன்றியமையாததாகும்.

ஜனநாயக வாழ்க்கை முறையின் ஆணிவேர் கட்சிகள். தவிர்க்க இயலாத தேவைகள். இந்த அமைவுகள் அதிகார வேட்கை உடையனவாகவும், ஆதிபத்திய ஆசை உடையன வாகவும், பொருளாசை உடையனவாகவவும் இருத்தல் கூடாது. நாட்டுக்குத் தொண்டு செய்வதையே குறிக்கோ ளாகக் கொண்ட கொள்கை அணிகளாக அமையவேண்டும். அக்குறிக்கோளை அடையும் நெறிமுறைகளிலேயே கருத்து வேறுபாடுகள்!

ஆதலால், உள்நோக்கமும், பகையுணர்வும், ஆட்சி அதி காரத்தில் பிடிப்பும் உடைய அமைப்புக்களால், கட்சிகளால், நாட்டுக்குப் பயன் விளையாது. சட்டசபை, பாராளுமன்ற விவாதங்களில் சூடு இருக்கலாம். நாட்டில் சூடு இருத்தல் அறவே கூடாது. நல்ல ஜனநாயகப் பண்பு, பிறர் வாய்க்

கேட்கும் ஆர்வத்தைத் தூண்டும். யாரோடும் பகை கொள்ளாத பண்பாடே வெற்றி தரும்.

வாழ்க்கை குறிக்கோளுடன் அமைக்கப் பெற்றது என்பது வாய்த்திருக்கும் கருவிகளைப் பொருத்தே உணரப் படும் உண்மை. மானுடம் ஒரு பிறவி. மானுடம் வெற்றி பெற வேண்டும். வெற்றி பொருந்திய வாழ்க்கைக்குக் குறிக்கோள் தேவை. குறிக்கோள் இமயம் போல உயர்ந்ததாக இருக்க வேண்டும். யானையைக் குறி வை! அடிபடுவது கொசுவாக இருந்தாலும் பரவாயில்லை. குறிக்கோள் உய.ர்வாக அமைய வேண்டும்.

பல நூறு ஆண்டுகளாக நம்முடைய சமுதாயத்தை வருத்தி வரும் தீண்டாமை, சாதிப் பிரச்சனைகள், மதப் பிரிவினைகள், அறியாமை, வறுமை முதலியன. சுதந்திரம் வந்த பிறகும் அகன்ற பாடில்லை. இந்தப் புன்மைகளை யெல்லாம் அகற்றி, ஒரு புதிய உலகத்தைப் படைப்பதை இலட்சியமாகக் கொள்வோம்!

புவியை நடத்துவோம்! பொதுவில் நடத்துவோம்! கூடி வாழ்தல் ஒரு பண்பு; நாகரீகம்; கூட்டுறவு உழைப்பை ஊக்குவிக்கும்; கோடி நன்மை தரும்; கூட்டுடைமைச் சமுதாயமே எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற வழி செய்யும்! வகை செய்யும்; கூட்டுடைமைச் சமுதாயமே பொதுநலம் காண வழி!

காலம் - வாழுங் காலம் மிக மிகக் குறைவு. வாழ்க்கையின் தொடக்கத்தில் பல ஆண்டுகள் குழந்தைப் பருவத்தில் கழிந்து போகின்றன. வாழ்க்கையின் பிற்காலத்தில் பல ஆண்டுகள் ஓய்வில், முதுமையில், கழிந்து போகின்றன. இடையில் 40 ஆண்டுகள் தாம் வாழும் காலம். காலத்தை விலை மதிப்புள்ளதாக ஆக்கவேண்டும்.

இளமையில் படித்தது வாழ்க்கை முழுவதையும் நடத்தப் போதாது. நாள்தோறும் புத்தறிவு தேவை. நாள்தோறும் பழைய இலக்கியங்களைப் படிக்கவேண்டும். நாள்தோறும் புதிய அறிவியல் நூல்களைத் தேர்வு செய்து

படிக்கவேண்டும். கற்றல் ஒரு தொடர் பணி! நாம் தொடர்ந்து கற்றுக்கொண்டே போனால் நன்றாக வாழலாம். உடலுக்கு வலிவு; ஆன்மாவிற்கு கருத்து!

நல்ல நூல்களைக் கற்றல், சிந்தித்தல், தெளிதல், செயற்படுதல், ஆன்மிக வாழ்க்கைக்குத் துணை செய்யும். ஆன்மிக வாழ்க்கை என்பது ஆன்மாவின் தரத்தை உயர்த்துதல், வளர்த்தல் என்பதாகும். ஆன்மிக வாழ்க்கை மத சம்பந்தமுடையது மட்டுமன்று. கற்றல், கேட்டல், அன்பு செய்தல், ஒப்புரவு அறிந்து ஒழுகுதல் ஆகியன எல்லாம் ஆன்மிக ஒழுக்க நெறிகள்; ஆன்மிகப் பண்புகள்.

இவர் தேவர் என்றும் அவர் தேவர் என்றும், என் மதம் - உன் மதம் என்றும் கலகம் செய்பவர்கள் மதவாதிகள்; மத வெறியர்கள்; இது ஆன்மிகம் ஆகாது. விநாயகரின் வயிறு - பெறு வயிறு; அது உலகத்தின் சின்னம். உலகந்தழீஇய வாழ்க்கைதான் ஆன்மிக வாழ்க்கை. ஒத்தது அறிந்து ஒழுகுதல்தான் ஆன்மிக வாழ்க்கை.

கடவுள், ஆன்மா, நிலம், வான், வாயு, நீர், மானுட உயிர்கள் அனைத்தும் கற்பிப்பது பொதுமை! கடவுள், ஊர், பேர், மதம், இவைகளைக் கடந்து வாழ்வோம்! கடவுள் வழிபாடு என்பது பொதுமை போற்றலேயாம்! ஆற்றல்மிக்க அன்பால், அமைதி வழியில் மானுட சமுதாயத்தை அழைத்துச் செல்லுதலே ஆன்மிக வாழ்க்கை.

கடவுள் வழிபாட்டினால் ஆற்றலைப் பெறுவோம்! நாம் வளர்வோம்! நாடும் வளரும்! எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பதான திசை நோக்கி நடப்போம்! புதியதோர் உலகம் செய்வோம்!

பின்னிணைப்பு – I

# அடிகளார் நூல்களுக்கு அறிஞர்கள் வழங்கிய உரைகள் (1955-1996)

## 1. சமய மறுமலர்ச்சி

1955–டிசம்பர்

### முன்னுரை

பாரதநாடு உரிமை வாழ்வைப் பெற்றுவிட்டது. அந்த உரிமையைப் பெறுவதற்கு அதுபட்ட பாட்டைவிட, அதனைப் பேணி நலம்பெற இன்னும் மிகுதியாகப் பாடுபட வேண்டுமென்று தலைவர்களும் அறிஞர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வேற்று நாட்டினர் நாகரிகமும் கல்வியும் பழக்கவழக்கங்களும் இந்நாட்டில் புகுந்திருக் கின்றன. நம் நாட்டுப் பண்பாட்டுக்கு நலிவு உண்டாகியிருக் கிறது. மேல்நாட்டுத் தொடர்பினால் பெற்ற நல்லனவற்றை மாத்திரம் மேற்கொண்டு இந்நாட்டுப் பண்பாட்டை வளர்க்க வேண்டிய பெரிய கடமை பாரத நாட்டினருக்கு முன்னே நிற்கிறது.

இந்தியப் பண்பாட்டின் அஸ்திவாரம் கடவுள் நெறி, அல்லது சமயவாழ்க்கையே ஆகும். இந்நாட்டு எல்லை களாகிய இமயத்தின் உயர்வை அடிகளாலும் மைலாலும் கணக்கிடாமல் இறைவன் எழுந்தருளியுள்ள இடம் என்று மதிப்பது பாரதப் பண்பு. தென் குமரியைக் கடல்களின்

இணைப்பென்றும் முனையென்றும் நினைப்பதை விட அம்மையின் இடம் என்று நினைப்பதே நமக்கு வழக்கமாகி விட்டது. ஆதலின் பாரதப் பண்பாட்டை எடுத்து நிறுத்தத் தலைப்படுபவர்கள் இந்நாட்டுச் சமயவாழ்வைச் செப்பஞ் செய்ய வேண்டும். சமயவாழ்வை மீட்டும் வளமாக அமைக்க வேண்டும். அதனைச் செய்யாமல் வேறு துறைகளில் தொண்டு புரிவது உயிரூட்டாமல் உடம்புக்கு அணிசெய்வதே யாகும்.

கடவுளும் அவன் அருளும் என்றும் மாறா இயல் போடு இருந்தாலும், சமய வாழ்வு காலத்துக்குக் காலம் புதிய புதிய நெறியில் இயங்கும். அடிப்படையில் மாறுதல் இராவிட் டாலும் இயங்கும் நெறியில், தொண்டு வகையில் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப வேறுபடும். ஆதலின் இன்று நமக்கு இன்றியமையாமல் உள்ளது சமயவாழ்வு; அவ்வாழ்வில் மறுமலர்ச்சி இன்றியமையாதது.

சமய வாழ்வில் தலைசிறந்து விளங்குவது தமிழ்நாடு. இங்குள்ள திருக்கோயில்கள் இன்றும் வழிபாட்டிடங்களாக, மக்களின் மதிப்புக்குரியனவாக இருப்பதனால் இது விளங்கும். தமிழ் நாட்டு வாழ்வே திருக்கோயிலைச் சூழ்ந்து வளர்ந்தது என்று சொல்லிவிடலாம். அக்கோயில்கள் மாத்திரம் இருந்தால் போதுமா? மனிதனுடைய முயற்சிகள் அனைத்திலும் சமய உணர்ச்சி கலக்க வேண்டும். அப்போது தான் மனிதனுக்கு மனிதன் பகையும் பொறாமையும் கொள்ளாமல் வாழமுடியும்; யாவரும் இறைவனாகிய ஒரு தந்தையின் மக்கள் என்ற உணர்ச்சி தலைப்படும்.

இத்தகைய சமய மறுமலர்ச்சிக்காகத் தொண்டு புரியும் பெரியவர்களில் அருட்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் ஒரு தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறார்கள். குடும்பத்தை நீத்துத் துறவுபூண்ட அவர்கள் தமிழ் நாடு முழுவதையுமே தம்முடைய குடும்பமாக எண்ணிச் சமய வாழ்வில் புதிய

மறுமலர்சியை உண்டாக்கிவிட்டார்கள் மகாத்மா காந்தி யடிகள் போராட்டத்தில் புதிய புரட்சியை உண்டாக்கினார். வினோபாபாவே பூதானத்தில் புதிய புரட்சியை உண்டாக்கினார். குன்றக்குடி அடிகள் சமயவாழ்வில் புதிய புரட்சியை உண்டாக்கிவிட்டார்கள். வயது முதிர்ந்தவர் களுக்கும் துறவிகளுக்குமே உரியதென்று இடைக் காலத்தில் தவறாக எண்ணப்பட்டுவந்த சமய அறிவை இளைஞர்களின் உள்ளத்தில் ஊட்டிவிட்டார்கள். சமயவெறியை ஊட்டாமல் சமயப்பற்றை இளைய உள்ளங்களில் ஏற்றினார்கள்.

அழகான பேச்சு, அறிவாழமுடைய பேச்சு, காரண காரியத் தொடர்புடைய பேச்சு, ஆணித்தரமான பேச்சு என்று அவர்களுடைய அற்புதமான சொற்பொழிவுகளை யாவரும் பாராட்டுகிறார்கள். “குடிசைக்கும் கோயிலுக்கும் உள்ள தூரத்தைக் குறைக்கவேண்டும்.” “அறிவு உப்பைப் போல் அளவாக இருக்க வேண்டும்; உணர்ச்சியை அது கெடுக்கக் கூடாது.” “கலை தேசபக்தி ஆகிய தொண்டுகள் நாட்டையும் வீட்டையும் செப்பம் செய்யும். ஆனால் உள்ளத்தைத் திருத்து வதற்குச் சமயந்தான் துணைபுரிய வேண்டும்.” “தமிழும் தெய்வ நெறியும் வேறு வேறு அல்ல” என்பவற்றைப்போன்ற உண்மைகளைப் புதிய உருவத்தில் அவர்கள் வெளியிடும் பொழுது மக்கள் அவர்களுடைய அன்பையும் அறிவையும் ஆற்றலையும் உணர்ந்து பாராட்டுகிறார்கள். தமிழ்நாட்டில் அருள்நெறித் திருக்கூட்டத்தை நிறுவி, இளைஞர்களையும் ஏழைகளையும் ஈடுபடுத்திய பெருமை அவர்களுக்கு உரியது.

அடிகளார் எழுதிய பதினாறு கட்டுரைகளை இப் புத்தகத்தில் காணலாம். அவர்களுடைய சொற்பொழிவு வெள்ளம் போன்றது. அவற்றிற் காணும் துளிகள் இவை; ஆனாலும் வைரம் போன்ற கருத்துக்களை வெளியிடுபவை. எல்லாக் கட்டுரைகளிலும் சமய உணர்ச்சி இழையோடுகிறது.

சமய வாழ்க்கையின் உயர்வையும், பண்டைத் தமிழர் களின் வாழ்வில் சமயம் பெற்றிருந்த சிறப்பையும்,

வளவாழ்வுக்கு மூலகாரணம் தூய உள்ளம் என்பதையும், இவை போன்ற கருத்துக்களையும் இக்கட்டுரைகளில் காணலாம்.

தமிழ் நாட்டில் சமயத் துறையில் புதியதொரு பொலிவும் மறுமலர்ச்சியும் ஏற்பட்டுள்ளதைக் கண்டு அடிகள் உவகை கொள்கிறார்கள். பாண்டிய அரசன் இறைவன் திருக்கோயிலில் குடையை மடக்கிப் பணிந்த பழஞ் செய்தியையும், தேர்வண் மலையன், உழுத நோன்பகடு வைக்கோலைத் தின்றது போலப் பிறர் நலம் பேணி வாழ்ந்த தையும் தெரிவிக்கிறார்கள். சிவபிரான் திருக்கோயிலில் நந்தி யெம்பெருமாள் நிற்பதற்கு ஒரு புதிய உரை, அரிய உரை காணுகிறார்கள், ஆண்டவன் சந்நிதியில் நந்தியைக் காணும் போது, "ஏ மனிதனே! நீ மனிதன் என்று மார்தட்டாதே. பகுத்தறிவாளன் என்று பறை சாற்றாதே; பெருமிதங் கொள்ளாதே! இந்த எருதினுடைய-பிறர் நலம் கருதுகின்ற, உழைக்கின்ற உள்ளத்தை முதலில் பெறுவாயாக! அந்த உள்ளம் உனக்கு வந்துவிட்டதானால் சமய வாழ்க்கையில்-இறைவனோடு தொடர்பு கொள்ளும் இன்ப வாழ்க்கையில் நுழைகின்றாய்" என்று அது சாற்றுகின்றதாம். அரிய தத்துவம் இது.

பாரிக்கு உவமை கூற வந்த கபிலர் எருக்கம்பூவையும் ஏற்கும் பரமனைக் கூறுவதையும் அன்பும் அருளும் பெறாதவர் நரக வாழ்க்கை பெறுவதையும், அறமல்லாத வற்றை மக்கள் விரும்பி ஒழுகுவதனால் நாடு வளம் குன்றுவதையும், அதனால் மழை பொய்ப்பதையும் எடுத்துக் காட்டுகிறார்கள். காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுளை அறியும் நெறியைத் தெளிவாக்கு கிறார்கள்.

நம்முடைய முடிந்த முடிவான லட்சியமே ஜனநாயக வாழ்வுதான் என்று மயங்கிக் கிடக்கும் இன்றைய உலகுக்கு

அதனினும் உயர்ந்த சமய வாழ்வின் நலத்தை அழகாக எடுத்துக் காட்டுகிறார்கள். மக்களை மக்களாக மதிக்கச் சொல்லிக் கொடுப்பது ஜனநாயகம். மக்களை கடவுளாக மதித்து அன்பு செய்யக் கற்றுக்கொடுப்பது சமயம். தன்னோடு ஒப்பாக நினைப்பதிலும் தன்னினும் உயர்ந்ததாக மதிப்பிடுதல் பெரிதும் நன்மை பயக்கும் என்பதற்கும் ஐயமுண்டோ?'' என்னும் பகுதி பொன்னெழுத்திற் பொறிக்கப் பெறத்தக்கதாகும்.

இயல்வது கரவாமல் வாழும் வாழ்க்கையையும், தமிழிலக்கியம் காட்டும் நெறியையும், தமிழின் பலவகை மேன்மைகளையும் அடிகள் எடுத்துக் காட்டுகிறார்கள். 'இன்று தமிழ் நாட்டில் ஒரு புது நோய் பரவி வருகிறது. அதுதான் வசன கவிதை என்பது. யாப்பிலக்கணம் கைக்குள் அடங்காமற் போய் வசனத்தை ஆசிரியர்கள் கையாண்டால் அது கவிதையாகிவிட முடியாது' என்பதை மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பலமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வள்ளுவர் வாக்கும் வாதவூரர் மணிமொழியும் பல இடங்களில் சொல்லாலும் பொருளாலும் ஒத்து நடப்பதை ஒரு கட்டுரையில் தெளிவாக்குகிறார்கள். அடிகளுக்குத் திரு வாசகத்தில் ஈடுபாடு மிகுதியென்பதைப் பலர் அறிவார்கள். அந்த ஈடுபாட்டை இந்தக் கட்டுரையிலும் காணலாம். தமிழிசையைப் பற்றிய கட்டுரையில் ஏழு நரம்புகள் சேர்ந்து அமைந்தவை பண்கள் என்னும் போது, "ஒளியில் ஏழு வகையான நிறங்கள் இருந்து இயங்குதல்போல, ஒலிகளும், ஏழு வகைகளாக இயங்கி வெளியிற் காரியங்களை நிறை வேற்றுகின்றன" என்று எழுதுகிறார்கள். இது புதிய கருத்து; பாராட்டத்தக்கது. தமிழக எல்லையைப் பற்றிய கட்டுரைக்கு ஓரளவு பயன் கிடைக்கவிருக்கிறது. அது முற்றும் நிறைவேற இறைவன் திருவருள் செய்ய வேண்டும்.

இறுதிக் கட்டுரை மணிவாசக நினைவிலே நம்மை ஆழ்த்துகிறது. புத்தகத்தை மூடும் போது அடிகளாரும் வாதவூரடிகளாரும் நம் உள்ளத்தை விட்டு அகல்வதில்லை.

அழகான முறையில் வெளிவந்துள்ள இந்த நூல் "இன்னும் பெரிய நூல்கள் வரவேண்டும்" என்ற பெரும் பசியை உண்டாக்கினால் அது வியப்பாகாது. அந்தப் பசியையும் தணிக்க அடிகளார் முன்வரவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

கி. வா. ஜகந்நாதன்

கல்யாண நகர்—மயிலை
8–12–55.

## 2. ஈழத்துச் சொற்பொழிவுகள்

1968—சனவரி

### அணிந்துரை

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கத் தொண்டாற்றி வருபவர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்.

"சமயம் என்பது பொழுது போக்குவதற்காகப் பேசுகின்ற வரட்டு வேதாந்தமல்ல. அது வாழ்க்கையை அறநெறியில் செம்மையுறச் செய்யும் சிறப்பு வாய்ந்தது" என உலகெலாம் உணர்த்தி வருபவர்கள் அடிகளார்.

தமிழ் நாட்டில் அடிகளார் பேசாத கழகமோ, சங்கமோ, மாநாடோ இல்லை எனலாம். மக்களுடன் ஒன்றிப் பழகித் துறவிக்கும் சமூகத்துக்குமிடையே இருந்துவரும் பெரு வெளியைச் சுருங்கச் செய்து வரும் பெருமை குன்றக்குடி அடிகளாருக்கே உரியது.

அருள் நெறித் திருக்கூட்டம் ஒன்றைத் தமிழகத்திலும் ஈழ நாட்டிலும் அமைத்து இளைஞர்களிடையே இறை

பக்தியை ஊட்டி, சைவமும் தமிழும் உய்யக் காலத்துக்கேற்ற தொண்டுகளில் சைவ உலகை ஈடுபடச் செய்து வருபவரும் அடிகளார் அவர்களே.

"ஞானிகளது கடமை, உலகத்தைத் துறப்பது அல்ல; உலகை அறிவதே அவரது கடமை" வள்ளுவரும் இதை ஆணித்தரமாகக் கூறியுள்ளார். "உலகத்தை வெறுக்கும் தன்மையல்ல; சிறந்த உலகை உருவாக்குவதே ஞானிகளின் கடமையாக அமைய வேண்டும்" என்பது அடிகளாரின் ஆசை.

மக்களுக்காகச் சேவை செய்வதற்காக மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பதையே நான் வேண்டுவேன்" என அடிகளார் மேடைகளில் கூறுவதுண்டு.

பழமையிற் காலூன்றிக் காலத்துக்கேற்ற முறையில் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்துவரும் அடிகளாரை 1953ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் வரவேற்கும் பணியில் பேரன்பர்களுடன் அடியேனும் பங்கு கொண்டிருந்தேன். இதனை வாழ்க்கையில் ஒரு பெரும் பயன் எனக்கருதி அகமகிழ்கின்றேன்.

"இன்பத் தமிழையும் இறையருள் நெறியையும் நினைக்கின்ற பொழுதெல்லாம் இலங்கையை நினைக்காமலிருக்க முடியாது. சைவத் தமிழ்த் தொண்டனாக வாழவேண்டும் என்று விரும்பிய நம்மை இலங்கைத் தமிழ் அன்பர்கள் வண்ணப் பணித்து வருகவென்று வான் கருணை காட்டினார்கள்....செந்தமிழும் சிவநெறியும் கண்ணெனப் போற்றி வளர்க்கின்ற அந்நாட்டு மக்கட்கு என்றும் ஓர் எளிய தொண்டன் என்பதை மிக மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கின்றோம்" என ஈழ நாட்டு மக்களுக்கு அன்று கூறினார்கள்.

இன்றும் அடிகளார் அவ்வாறே ஒரு தொண்டனாக விளங்கி வருகின்றார்கள். அகில இலங்கை காந்தி சேவா சங்கத்து அன்பர்களின் அழைப்பை அவ்வப்போது ஏற்று ஈழ

மணித்திருநாட்டுக்கு வருகை புரிந்து செந்தமிழையும், சிவ நெறியையும் வளமாக்கப் பேருதவி புரிந்து வருகின்றார்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதையும் மக்களுக்கு அழகாக எடுத்துரைத்தும் வருகின்றார்கள்.

சமீபத்தில் அடிகளார் அவர்கள் இலங்கையின் பல பாகங்களுக்கும் மின்வேகத்திற் சென்று இனிய பல சொற் பொழிவுகளை ஆற்றித் திருமுறையின் சிறப்புகளை எல்லாம் மக்களின் உள்ளங்களில் பதிய வைத்தார்கள்.

தவத்திரு அடிகளாரின் நாவிலிருந்து உதிர்ந்த கருத்துக் களை திரட்டி நூல் வடிவில் தந்துள்ளார் எங்கள் அன்பர் ஈழத்துச் சிவானந்தன். செந்தமிழ்ப் பற்றும் இறைபக்தியும் நிறைந்த இளைஞர் சிவானந்தனுக்குத் தமிழ் மக்களின் நன்றி உரியது.

ஈழத்துச் சிவானந்தன் தமிழ் கூறும் நல் உலகத்துச் சிவானந்தனாக விளங்க வேண்டுமென்பதே எமது பிரார்த்தனையாகும்.

தமிழ் வாழ்க!

இராஜ. அரியரத்தினம்

**'கலாநிதி'**
**சாவகச்சேரி**
**இலங்கை 3—4—63**

# 5. குறட் செல்வம்

**1969—ஏப்ரல்**

**மதிப்புரை**

வள்ளுவன் குறளை வையகம் முழுதும் அறியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் வந்துள்ள விளக்கமும் அதிகம்.

G.XVI.30.

வாழ்க்கையின் அடிமுதல் நுனிவரை அளந்து காட்டக் கூடிய ஒரே நூல் திருக்குறள். மனித வாழ்க்கை மூன்று துறைகளில் போகிறது என்பதைத்தான், 'அறம் பொருள் இன்பம்' என்ற பகுப்பு நமக்குக் காட்டுகிறது.

**வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஏதாவது ஒரு திருக்குறள் எதிரொலிக்கிறது.**

தோண்டத் தோண்டச் சுரக்கும் ஊற்றுப்போல், படிக்கப் படிக்கப் புதிய பொருள்களைக் காட்டுகிறது திருக்குறள். வேறு எந்த மொழியிலும், இவ்வளவு தெளிவான ஒரு நீதி நூல் இருக்குமா என்பது சந்தேகமே.

**பேராசிரியர்களின் வழியில் வள்ளுவரின் கண்ணோட்டத்தை ஆராய்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.** நடையின் எளிமை, படிப்பதைச் சுலபமாக்குகிறது. அடிகளாரின் திறனாய்வு நடை, பாமரனும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அமைந்திருக்கிறது.

ஒரு குறளுக்கு ஒரு தலைப்பு என விளக்கம் தருவது புதிய முறை. பெரும்பாலும், ஓர் அதிகாரத்துக்கு ஒரு தலைப்பு என்ற முறையில்தான், மற்றவர்கள் எழுதி உள்ளனர். எல்லா குறள்களுமே பொருள் உள்ளவைதான் என்றாலும், சராசரி மனிதனின் தினசரி வாழ்க்கையில் ஒட்டிவரும் குறள்கள், தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டியவை.

ஆயிரத்து முந்நூற்று முப்பது அரும் குறள்களில் நாம் தேடி, சாறு திரட்டிக் கொண்டிருக்கும் வேலையை, சுலப மாக்க தாமே திரட்டித் தந்திருக்கிறார் அடிகளார்.

**வாழ நினைப்பவர்களுக்கு வழி காட்டும் நூல் இது. பொருட் செறிவுள்ள நூல்களை வெளியிடும், 'கலைவாணி புத்தகாலயம்'** உரிமையாளர் நண்பர் சீனி. திருவாவுக்கரசு அடக்கம் **மிக்கவர்.** ஆழ்ந்த கருத்துகளில் பற்றுள்ளவர். ஒவ்வொரு

வீட்டிலும் புத்தக நிலையத்திலும் இருக்க வேண்டிய சிறந்த நூல் இது.

சென்னை—17

அன்பன்,
கண்ணதாசன்.

## அணிந்துரை
## (குறட் செல்வம்)

குருமகா சந்நிதானம் சீலத்திரு
ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

'குறட் செல்வம்' எனப் பெயருடைய தமிழுரைச் செய்யுள், திருவள்ளுவர் அருளிய பாச் செய்யுளை ஆராய்ந்தெழுதியதாகும். நாற்பத்தேழு தலைப்பில் குடிமை, ஊழ், மொழியுறவு, மக்கள், அறம், பொருள், இன்பம், வீடு முதலிய பல பொருள் குறித்த நுண்பொருட் பெருந் திறனாய்வுக் கட்டுரைத் தொகுப்பாய் விளங்கிக் கற்போர் அறியாமையைக் களைந்து, மெய்ப் பேரறிவை வளர்ப்பதாக உள்ளது இச் செந்தமிழ்ப் பனுவல்.

இதன் ஆசிரியர் குன்றக்குடி அடிகளார் என வழங்க விளங்கும் திருவண்ணாமலை ஆதின குருமகா சந்நிதானம் சீலத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், மதி நுட்பம் நூலோடு உடையார்; நுண்மாண் நுழைபுலம் மிக்க சான்றோர்; சொற்பொழிவில் வல்ல பொருட்பொழிவாளர்; பற்பல பனுவல் எழுதிய ஆசிரியர். அவர்கள் சீலத்தை அறிந்து கொள்ள விழையும் அன்பர் அனைவரும் இதில் 34 ஆவது தலைப்பின் (பக்கம் 117) முடிவுரையை நோக்குதல் இன்றியமையாதது.

நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலையாவது யாது! அதைத் தங்களது கடனாகக் கொண்டு உலகிற்கு ஆற்றும் நெறிவழுவாத அவர்களே இன்ன சீரிய நூல் ஆக்கத்திற்கு உரியவர்கள். அவர்கள் நீடினிது வாழ்க. இன்ப அன்பாகிய சிவானுபூதியில் திளைக்க.

இவ்வாசிரியர் நூல்களை வழக்கமாக மிக்க சிறப்புடன் அழகாக வெளியிட்டு வரும் கலைவாணி புத்த காலயத்து முதல்வர், நிறைநாட் செல்வர், சீனி. திருநாவுக்கரசு அவர்கள் இச்செல்வத்தையும் மற்ற எட்டுச் செல்வத்தையும் எய்தி நன்கு வாழ்க!

சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

**மெய்கண்ட தேவர் ஆதீனம்**
**காஞ்சிபுரம்**

## 4. வாழ்க்கை விளக்கு

**1972—ஏப்ரல்**

**மு. கண்ணப்பன்**
**அறநிலைய அமைச்சர்**

**தமிழ்நாடு அரசு**
**தலைமைச் செயலகம்**
**சென்னை—9**
**5—4—72.**

சமயத் துறையிலும், சமுதாயத் துறையிலும் சீரிய பணியாற்றி வரும் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களை அறியாதார் இல்லை. அவர்கள் சொல்லாற்றலும் எழுத்தாற்றலும் ஒருங்கே கைவரப் பெற்ற சிறந்த சிந்தனையாளர். சமயத் துறையில் புதைந்து கிடக்கும் சீரிய கருத்துக்களையெல்லாம் சிறந்த நூல்வடிவாகவும், சொற்பொழிவுகளாகவும் தமிழகத்திற்கு அளித்து, தமிழுக்கும் தமக்கும் பெருமை தேடிக் கொள்பவராவர்.

இன்றைய சமுதாயத்திற்குப் பெரிதும் இன்றியமையாக் கருத்துக்களைத்தான் "வாழ்க்கை விளக்கு" என்ற நூல் வடிவாக வடித்துக் கொடுத்திருக்கிறார்கள். வள்ளுவம் உலகெங்கணும் பரவி வாழ வேண்டும். அதனால் தமிழகம் பெருமை ஈட்ட வேண்டும் என்ற தணியாத ஆர்வம் காரணமாக வள்ளுவருக்கு விழாக் கொண்டாடி மகிழ்வதோடு, உலகப் பொது நெறியாக மலருவதற்கு நாம்

என்ன வழி வகைகளை மேற்கொண்டோம் என்று சாடுவதிலே உண்மை இருக்கத்தான் செய்கிறது. இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கிக் காக்க, நிலம், சாதி, சமயம், இனம், மொழி ஆகியவைகளுக்கப்பால் நின்று நிலவி ஒளிரும் திருக்குறளைத் தேசிய இலக்கியமாக இனியாவது அறிவித்து வள்ளுவத்தைப் பரப்ப வேண்டும் என்று தம் வேட்கையை வெளியிடுகிறார்.

சமுதாய முன்னேற்றத்திற்காக மட்டுமின்றி சமய வளர்ச்சியின் தேவையை உணர்த்தும் அரிய கருத்துக்கள் பலவற்றையும் அவருக்கே உரிய ஆற்றொழுக்கு நடையில் அளித்திருக்கிறார்கள். தமிழில் திருமுறை வழிபாட்டு முறையை மேற்கொள்ளுமாறு தமிழகத்து இறையுணர்வு மிக்கோரை வலியுறுத்தும் பாங்கு பெரிதும் பாராட்டி மகிழ்வதற்குரியதாகும்.

அடிகளார் அவர்கள் எழுதியுள்ள 'வாழ்க்கை விளக்கு' என்னும் இந்நூல் படிக்க இன்பம் பயப்பதோடு மட்டுமின்றி புதிய சிந்தனைகளைப் படிப்போர் மனதிலும் கிளறிவிடும் ஆற்றல் பெற்றனவாய் மிளிருகின்றன.

அடிகளார் அவர்கள் எழுதியருளிய 'வாழ்க்கை விளக்கு' என்னும் இந்நூல் தமிழக மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை.

அன்பன்,
மு. கண்ணப்பன்.

## அணிந்துரை
## (வாழ்க்கை விளக்கு)

டாக்டர் ந. சஞ்சீவி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
டிப். மானிடவியல், டிப். அரசியல் — ஆட்சியியல்.
தமிழ்த் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்த் திரு நிறைந்த பெரியார், நம்மிடையே இன்று வாழும் சைவத்தமிழ்

மடாலயத் தலைவர்களுள் சமரச-சமதர்ம-நோக்கும் போக்கும் சிறந்த செம்மல் தவத்திரு குன்றக்குடி அடிகளாரே. இக்காரணத்தாலேயே இன்றைய தமிழக அரசு அவரைத் தமிழ் நாடு மேலவை உறுப்பினராய்யும் மேவியுள்ளது. இதனால் அடிகளாரும் பெருமை பெற்றுள்ளார்; அரசும் பெருமை பெற்றுள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ் பற்றியும் சமயம் பற்றியும் சாற்றிய புதிய சிந்தனைகள் பலவற்றின் கட்டுரைத் தொகுப்பே இந்நூல். செந்தமிழிலேயே பேசவும் பேசும் போக்கிலேயே எழுதவும் எழுதும் போக்கிலேயே பேசவும் வல்லவர் அடிகளார். அவர் சமுதாயத்தின் அடிமுடி கண்ட அண்ணல். எனவே அவர் எழுத்திலும் பேச்சிலும் அன்றாட வாழ்வின் அடிப்படைகள் ஆராயப்படுதல் இயற்கை. இவ் வுண்மைக்கு இந்நூலும் தக்க சான்று.

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் தொண்டுள்ளமும் சமயத் தோய்வும் பகுத்தறிவும் பண்பாடும் நிறைந்த அடிகளார் கட்டுரைகள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினராலும் ஆழ்ந்து கற்றுப் பயன்பெற-பயன்தரத் தக்கன.

இந்நூலுள் அடிகளாரின் மொழி நாட்டுப் பற்றுகளையும், அறிவருளாற்றல்களையும் காட்ட வல்லனவாய் என் உள்ளங் கவர்ந்த சில பகுதிகளையேனும் ஈண்டு எடுத்துக்காட்டுக்களாய்த் தொகுத்துத் தரச் சுவையும் பயனும் தருவதாகும்.

இவ்வாறு தொட்ட இடமெல்லாம் புதிய சிந்தனைகள் புகட்டும் இந்நூலை-ஒவ்வொரு-ஏன்-தமிழகத்தின் ஒவ்வொரு தனியகத்திலும் இருக்கத்தக்க இந்நூலை வெளியிட்டுள்ள கலைவாணி பதிப்பகத்தார்க்கு என் உளங்கனிந்த பாராட்டு.

ந. சஞ்சீவி

**சென்னை**
**2-3-72**

# 5. புனித நெறி

1973

## மதிப்புரை

(கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்)

கலைவாணியின் அழகிய மலராக—புனித நெறியாக இந்நூல் வெளிவருகின்றது. தமிழ்த்திரு சீனி. நாவுக்கரசர் இந்நூலை மிக அழகாக வெளியிட்டிருக்கின்றார்.

குன்றக்குடி முருகன் திருத்தலம்; இங்கே வீரச் செம்மல் களான மருது சகோதரர் எத்தனையோ திருப்பணிகளைச் செய்தனர். இந்தக் "குன்றின் வளரும் அருவியில்லையே என்று அவ்வீரர் அந்தக் காலம் வருந்தினர்" "என்றும் பொழி யும் தமிழின் அருவி" என்றொரு புலவர் பெரிய மருது மகிழப் பாடினார். இன்று குன்றக்குடியில் சைவத் திருக்களைத் தேவார திருவாசக உருக்களைக் கொண்ட தமிழருவி மகிழ்ச்சியால் விம்மித் ததும்பி அலைவீசிப் பாய்ந்து கொண்டேயிருக்கின்றது. இந்த அருவி முழக்கம் கோயில் வழிபாடுகளில் முழங்குகிறது; மேடைகளில் வீறிடுகிறது. தமிழகம், இலங்கை, மலேயா நாடுகளிலெல்லாம் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறைவிளங்க முரசு கொட்டுகிறது: அரசியல் மன்றங்களில் ஆர்வக் குரலெடுத்து அருள் விழிப்பைத் தருகின்றது."

இத்தகு தமிழருவியே தவத்திரு குன்றக்குடி அடிகள் ஆவார். அவர் பேச்சில் தமிழின் இனிமையும் காலத்திற் கேற்ற புதிய சிந்தனையும் புரட்சிக் கருத்துக்களும், மேன்மை கொள் சைவ நீதியும் ஒப்பனையும், கற்பனையும் செம்மை கொண்டு களிநடம் புரிகின்றன. சொற்கள் உள்ளத்திலிருந்து வெள்ளமாகப் பொழிகின்றன.

கலைவாணி புத்தகாலயம் வெளியிட்டுள்ள "புனித நெறியை" வாங்கிப் படியுங்கள். உயர்ந்த கருத்து, திருக்குறளும், திருமந்திரமும் திருமுறைகளும் அளிக்கும் பொருத்தமான மேற்கோள்கள், சலசலத்தோடும் அருவி நடை, வரிக்கு வரி வாழ்வை உயர்த்தும் பண்பாடு-எல்லாம் ஒருங்கே அடிகளார் நூல்களிற் காணலாம்.

கடவுள் யாதினும் இனியன், யாவர்க்கும் நல்லான், நெஞ்சக் கோயிலான், ஓயா உழைப்பாளி, அன்பின் பித்தன், அடியார்க்கு எளியோன் என்று அடிகள் விளக்குகிறார். அவனருளே கண்ணாகக் காணும் பெற்றியைத் துலக்குகிறார். சைவ நெறியைத் தெளிவாக மனதிற் பதிய வைக்கிறார். சைவவுணவு, சரியை கிரியை யோக ஞான சாதனம் எல்லாம் எளிய நடையில் சிறுசிறு கட்டுரைகளாக இந்த நூலிற் காண்போம். துறவு எது? உண்மைத் தொண்டர், பத்திமை என்னும் வித்து, உய்யும் நெறி, பொய்யிலா அடிமை, அகப் பகையை வெல்க முதலிய கட்டுரைகளை ஊன்றிப் படியுங்கள். சைவ ஒளி உங்கள் மனதிற்புகும். புலன்-கதவுகள் திறக்கும், திருவருட் சோதி இறங்கி வாழ்வில் இன்பமே சூழும், எல்லோரும் இனிது வாழ்வீர்.

கலைவாணி புத்தகாலயம் வெளியிடும் ஆன்மக் கருவூலங்களை ஆர்வமுடன் வரவேற்கிறேன். கலைவாணி புத்தகாலயம் பொலிவெய்தி வாழ்க! மலைவாணியின் கருத்தருவி கலைவாணியின் யாழிற் பாய்ந்து முழங்குக.

*நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!*
*இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!*

சுத்தானந்த பாரதி
20-10-73

**யோக சமாஜம்**
**அடையாறு சென்னை-20**

## அணிந்துரை
## (புனிதநெறி)

(டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.)
தமிழ்துறைத் தலைவர், மாநிலக் கல்லூரி, சென்னை.

*சமயம் என்பது போலிச் சடங்கு நெறியன்று; அன்பையும் அமைதியையும் நல்கி வாழ்வை உயர்த்தவல்ல நெறி. சமயம், பெயரால் பலவாக இருக்கலாம். ஆனால் எல்லாச் சமயங்களும் உலகுக்குணர்த்தும் மெய்ப்பொருள் ஒன்றேயாம். "வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கின் விளங்குபரம் பொருளே நின்விளையாட் டல்லால் மாறுபடும் கருத்தில்லை" என்பது தாயுமானார் கூற்று. இன்றைய உலகின் துன்பத்திற்கும் துயரத்திற்கும் அடிப்படைக் காரணம் அது சமய நெறியைப் போற்றாமையேயாம். இவ்வுண்மையை உணர்ந்து தமிழுலகிற்குப் 'புனித நெறி சமய நெறியே' என்ற உண்மையை தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அவர்தம் திருவாக்கு களின் தொகுப்பே "புனித நெறி" என்னும் இந்நூல்.*

*சமயத் துறையில் போலிகளின் செல்வாக்கு மிகுந்ததே அதன் வீழ்ச்சிக்குக் காரணம். கோயில்களும் மடங்களும் சமய நெறியை வளர்க்கத் தவறிவிட்டன. அடிகளார் கூறியது போல, "இன்றோ கண்ணப்பர்களை வளர்க்க நம்முடைய கோவில்கள் விரும்பவில்லை. சிவகோசரியர்களைப் பாதுகாக்கவே விரும்புகிறது" (பக்.42), இதனால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய சமய வீழ்ச்சி.*

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் உலகம் உய்ய வேண்டும் என்ற பேராசை உடையவர். துறவு பற்றி அடிகளார் குறிப்பிடும்போது "துறந்த பொருட்களைக் கொண்டு துறவியை நிர்ணயிக்க முடியாது. துறக்கக் கூடாததை அவன் துறக்காமல் இருக்கிறானா என்றுதான் காணவேண்டும் (பக்.58) என்று கூறுகிறார். அடிகளார்*

தமிழாசையைத் துறக்காதவர்; உலகு உய்ய வேண்டும் என்ற ஆசையைத் துறக்காதவர்; இறைவன் திருவடியில் வைக்கும் பற்றைத் துறக்காதவர். இன்றைய சமய உலகில் அடிகளார் ஒரு புரட்சித் துறவி. இத் துறவியாரின் அருள் கனிந்த பேருள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துச் சுரக்கும் நல்லெண்ணங்களை இந்நூலில் பக்கத்திற்குப் பக்கம் காண முடிகிறது. அடிகளாரின் அருள்வாக்கில் தெய்வ ஒண்தீந் தமிழின் திருவருள் நலம் மணக்கிறது.

அடிகளாரின் திருவாய் மொழிகள் நம்மை சிந்திக்க வைக்கின்றன. சான்றாகச் சில காண்போம். "சொர்க்கத்தின் வாயிலைத் திறக்கும் சாவி கடமையேயாகும்" (பக்.34).

"சொற்கள் ஈரக் கசிவுடையனவாக இருக்க வேண்டும் என்பது பற்றியே போலும்-சொல்லை வழங்கும் நாவினைச் சுற்றி ஈரப்பசை எப்பொழுதும் இருக்க உமிழ்நீர்ச் சுரப்பிகளை இயற்கை அமைத்தது" (பக்.39).

பொறிகளின் வலிமை புன்தொழிலை வளர்க்கும். புலன்களின் தூய்மை புண்ணியத்தைச் சேர்க்கும்" (பக்.71).

பண்டைநாட் சிவஞான முனிவரும், இராமலிங்க வள்ளலாரும், பாம்பன் சுவாமிகளும் இன்ன பிறரும் ஓருருக் கொண்டு திருவவதாரம் செய்தாற் போல இற்றை நாள் நம்மிடையே வாழ்ந்து வரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை நாத்தழும்பேற வாழ்த்துவதேயன்றி பாராட்ட என்ன இருக்கிறது? வாழ்க அடிகளார்!

அடிகளாரின் திருவாக்குகளைத் தொகுத்தளிப்பதன் மூலம் தமிழுலகிற்கும், சமய உலகிற்கும் கலைவாணி புத்தகாலய அதிபர், நண்பர் சீனி. திருநாவுக்கரசு அவர்கள் அருந்தொண்டு புரிந்துள்ளார். அவரது அரும் பணிகள் நாளும் சிறந்திட வாழ்த்துகிறேன்.

**மாநிலக் கல்லூரி**
**சென்னை–600 005**

**இன்னணம்,**
**மெ. சுந்தரம்**

# 6. நமது நிலையில் சமயம்—சமுதாயம்

1975

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தமிழ்நாடு அரசு
சென்னை.

## சிறப்புரை

இருபதாம் நூற்றாண்டின் சமய–சமுதாய ஞானியாகப் பாராட்டப் பெறுகிற தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எதைச் சொன்னாலும் தெளிந்து சொல்வார்-தெளி வாகவும் சொல்வார். 'எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல, தவத்திரு அடிகளார் அவர்களின் எழுத்தும் சொல்லும், சிந்தனையும் செயலும் மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டே அமையும்.

"நாம் காணும் சமய நெறி, சமுதாயத் தொடர்புடைய நெறி, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக-சமுதாயத்தின் நல் வாழ்வுக்காக வேண்டுவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அது; மனித சமுதாயத்தின் சிக்கல்கள் தொல்லைகள் அனைத்தையும் மாற்றியமைக்கின்ற பொறுப்பும் கடமையும் சமய நெறிக்கு இருக்கிறது" என்று கூறிச் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஒரு பெரும் இணைப்புப் பாலத்தை உருவாக்கும் பணியை அவர் இயன்ற வகையெல்லாம் செய்து வருகின்றார். சமயவாதிகளிடையேயும் சமுதாயவாதிகளிடை யேயும் அவர் ஒரு புரட்சிச் சின்னமாகவே திகழ்கின்றார். அவர், சைவநெறி பரப்பும் திருமடத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தாலும் அவரிடத்துச் சமய வெறியையோ, பிறசமயக் காழ்ப்பினையோ காண இயலாது.

சமய – சமுதாய சமரச ஞானியாக விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், சென்னைப் பல்கலைக்

கழகத்தில், 1974–75ஆம் ஆண்டுக்குரிய சொர்ணம்மாள் அறக் கட்டளைச் சொற்பொழிவுத் திட்டத்தின் கீழ் 'நமது நிலையில் சமயம்–சமுதாயம்' என்னும் தலைப்பில் 'சமயம் சமுதாயம்', 'சமய மறுமலர்ச்சி', 'சமய சமுதாய மறை' என்னும் முப்பெருந் தலைப்புகளின் கீழ் மூன்று நாட்களாக நிகழ்த்திய பேருரையைத் தொகுத்துப் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக் கிறது.

'நமது சமுதாயத்தில் சமய நிறுவனங்கள் ஆடம்பரமான வாழ்க்கை முறை–படாடோபமான திருவிழாக்கள் நடத்துகின்றன. அதுபோழ்து, நமது சமுதாயத்தை சேர்ந்த பல கோடி மக்கள் ஊமையராய்ச்–செவிடர்களாய்ப் பாழ்பட்டுப் புழுதியில் கிடப்பதைச் சமயத் தலைவர்கள் உணரத் தவறு கின்றனர். மக்களைத் தழுவி வளர்க்காத சமய நிறுவனங்கள் எதற்காக? நடமாடும் கோயில்களை நாடிப் போற்றாத நிறுவனங்கள் எதற்காக? என்ற வினாக்களை வரலாறு எழுப்பத்தான் செய்யும். இனி, வரலாறு எழுப்ப இருக்கும் வினாக்கள் சொற்களாகத் தோன்றா, அருளியல் வழிப்பட்ட புரட்சியாகத்தான் தோன்றும். அது சீரமைப்பைச் செய்தே தீரும்' (பக். 68) என்று அவர் சமய நிறுவனங்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை குறிப்பிடத்தக்கது. நூல் முழுவதும் இத்தகைய பல்வேறு புரட்சிகரமான சிந்தனைகளைக் காண்கிறோம்.

மொத்தத்தில், மனித இனத்துக்குச் சமயம் பெரிதும் பயன்படவேண்டும் என்னும் அருங்கருத்தை அழுத்தந் திருத்தமாக–ஆணித்தரமாக–வலியுறுத்தியிருக்கும் அடிகளாரின் இந்தச் சொற்பொழிவு நூல்–அனைவரும் படித்தறிந்து கொள்ள வேண்டிய கருத்துப் பெட்டகம்; சிந்தனைக் களஞ்சியம்.

மு. கருணாநிதி

## அணிந்துரை
## (நமது நிலையில் சமயம் – சமுதாயம்)

*சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பேராசிரியராய் இருந்து, இருபத்தைந்து ஆண்டுகள் சிறந்த தமிழ்ப் பணியாற்றிய சொல்லின் செல்வர் டாக்டர் சேதுப் பிள்ளை அவர்கள் தமது அன்னையார் திருமதி சொர்ணம்மாள் பெயரால் நிறுவிய அறக்கட்டளைச் சொற்பொழிவினை இந்த ஆண்டுத் தொடக்கத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் நிகழ்த்தினார்கள். சமயத் தொண்டராகவும், தமிழ்த் தொண்டராகவும் ஒருசேர விளங்கும் அவர்கள் "நமது நிலையில் சமயமும் சமுதாயமும்" என்ற தலைப்பினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, மூன்று நாட்கள் முறையே, 'சமயம் சமுதாயம்', 'சமய மறுமலர்ச்சி', 'சமய சமுதாய மறை' என்ற உட்தலைப்புகளில் சொற்பொழிவுகளைத் திறம்பட நிகழ்த்தினார்கள். சமய உலகில் இருந்து கொண்டு சமுதாய நோக்கு நோக்குவதில் அடிகளார் தனித்திறம் வாய்ந்தவர். தந்தை பெரியார் அவர்களுடன் தனிப்பெரும் நட்புப் பூண்டு இவர் இருந்த நிலையே இதற்கு நல்ல விளக்கம் தரும். மாடதிபதியாக இருந்தாலும், மகேசுவரனைப் பற்றி எண்ணினாலும் இவருடைய சிந்தனைகள் மக்கட் சமுதாயத்தைச் சுற்றியே சுழல்வதனைக் காணலாம். இம்முறையில் இவர் ஒரு புதுமைத் துறவியாகப் - புரட்சித் துறவியாகக் காட்சி யளிக்கின்றார்.*

*மனிதன் விலங்குத் தன்மையிலிருந்து விலகி மனிதத் தன்மையைப் பெற்று இறைநிலையை எய்தவும், இயல்பாய் குறையினின்று நீங்கி, நிறை நலம் பெறச் சமயம் துணை செய்கிறது என்றும், பல்வேறு சமய நெறிகளைக் கடந்த பொதுமை நெறியே மனித உலகத்தை ஈடேற்றுவதற்குத் தகுந்த நெறி, அந்நெறியே தமிழர் சமய நெறி என்றும் கடவுள்*

தன்மையெனப் பாராட்டப் பெறும் அன்பு, அருள், ஒப்புரவுக் கொள்கை நாட்டில் தழைக்கும்படி கடவுள் நம்பிக்கை உடையோர் வாழ்ந்து காட்ட வேண்டும் என்றும் சின்னங் களும், சடங்குகளும் மட்டுமே கடவுள் நெறிகள் ஆகா என்றும், மழைபொழிந்ததின் விளைவை மண் காட்டுவதைப் போல், சமயநெறி நின்று வாழ்வோரின் இயல்பினை வையகம் காட்ட வேண்டும் என்றும், விளைவுகள் காட்ட வேண்டும் என்றும், தமிழ்ச் சமயத்தில் தீண்டாமை இல்லையென்றும் "ஒன்றே குலம்" என்றும் திருமூலர் ஆணையின்படி ஒரு குலம் அமைக்க வேண்டுமென்றும், மனித உள்ளங்கள் அருள் நெறிவழி இணைக்கப் பெறும்பொழுது மண்ணகம் விண்ணகம் ஆகும் என்றும், தவத்திரு அடிகளார் அவர்கள் தமது முதல் நாள் சொற்பொழிவில் எடுத்துக் காட்டியிருப்பது உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

"சமய மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் அருளுடைய அடிகளார் அவர்கள் நிகழ்த்தியிருக்கும் இரண்டாம் நாள் சொற்பொழிவு, புரட்சிக் கருத்துகள் பல பூத்துக் குலுங்குவ தாகும். சான்றாக, பழங்காலத் திருக்கோயில்களில் எல்லோரும் சென்று வழிபாடு செய்துகொள்ளும் உரிமை இருந்தது என்றும், ஒரு சிலர் ஆதாயம் கருதி இடையில் அந்த உரிமைகளைப் பறித்திருக்கிறார்கள் என்றும், திருக்கோயில் கருவறைக்குச் சென்று புனலும் பூவுமிட்டு வழிபடும் உரிமையைக் கண்ணப்பர் பெயரால் அடைந்தே தீர வேண்டும் என்றும், வழிபாட்டுக்குரிய மொழி தமிழே என்றும், இறைவனைத் தமிழால் பாடித் துதி செய்தல்-நூறு கோடி அர்ச்சனைக்கு ஒப்பானது என்றும், தமிழ் வழிபாட்டு இயக்கம் மொழி இயக்கமன்று, அதன் நோக்கம் பக்தியை வளர்ப்பதே ஆகுமென்றும், பழங்காலத் திருக்கோயில்கள் சமுதாயத்தைக் கண்ணின் இமைபோல் பாதுகாக்கும் நிறுவனங்களாக நிலவின என்றும், ஒவ்வொரு திருக்கோயில்

களும் குடிகளைத் தழுவியதாக விளங்கவேண்டும் என்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கூறியிருக்கும் கருத்துகள் அனைவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாகும்.

மூன்றாம் நாள் சொற்பொழிவு "சமய சமுதாய மறை" என்ற தலைப்பில் அமைந்துள்ளது. திருக்குறளே சமய மறை நூல் என்றும் மறை நூலுக்குரிய இயல்புகளனைத்தும் திருக் குறளுக்குப் பொருந்தியிருக்கின்றனவென்றும், வாழ்வியல் நூலாகவும் திருக்குறள் அமைந்து மக்கள் வாழ்க்கையை வழி நடத்திச் செல்ல வழி செய்கிறது என்றும் அடிகளார் அவர்கள் எடுத்துக்காட்டுகின்றார். தனி மனிதன், சமய மனிதனாக, சமுதாய மனிதனாக, உலக மனிதனாக, ஒரு முழு மனிதனாக முழு வளர்ச்சியும், மலர்ச்சியும் பெறுவதற்குத் திருக்குறளே பெருந்துணை செய்யவல்லது என்றும் கன்பூஸியஸ், சாக்ரடீஸ், மார்க்ஸ், லெனின், வால்டர், ரூஸோ முதலிய உலகச் சிந்தனையாளர்கள் கருத்துகளோடு ஒப்பிட்டு நோக்கி வள்ளுவத்தின் மாண்பினை வகையுற எடுத்து மொழிகின்றார்.

சமயத்திலிருப்பவர்கள் சமுதாயத்தை மறந்து விடுகிறார்கள், சமுதாயப் புரட்சிவாதிகள் சமயத்தைக் கண் கொண்டு பார்க்கவும் விரும்புவதில்லை என்று பொதுவாக ஒரு குறை கூறப்படுவதுண்டு. ஆனால் நம் மதிப்பிற்குரிய திரு வண்ணாமலை குன்றக்குடி ஆதினத் தலைவராக விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அருந்தமிழ் கற்ற அறிஞர். சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க வேண்டும் என்ற பழமொழியோடு, சமயமும் சமுதாயமும் தழைத்தினி தோங்கவேண்டும் என்ற புதுமொழியைப் படைத்து, 'மேன்மைகொள் சமய நீதி விளங்குக உலகமெல்லாம்' என்று பாடுபட்டு வரும் அடிகளார் தமிழ்ப் பண்பாட்டுத் துறவியார் ஆவர். சமயத் தொண்டையும், சமுதாயத் தொண்டையும் தம் இரு கண்களாகப் போற்றி வளர்த்து வரும் அடிகளார் அவர்கள் ஆற்றிய அருமையான சொற்பொழிவுகளை நேரில்

கேட்டு மகிழ வாய்ப்பற்ற பலரும் பயன் கொள்ளும் வண்ணம் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் இந் நூலாக சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வருகின்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு நம் நெஞ் சார்ந்த நன்றி.

**சென்னை**
**21–7–1975**

**நெ. து. சுந்தரவடிவேலு,**
**துணைவேந்தர்,**
**சென்னைப் பல்கலைக்கழகம்.**

## பாராட்டுப் பாடல்
## (நமது நிலையில் சமயம் – சமுதாயம்)

### (வெண்பா)

*சங்கத் தமிழ்மணமும் சைவத் திருநெறியும்*
*எங்கும் பரப்பும் இறையடியார்–எங்கள்*
*குருமுனிவர் குன்றக் குடியடிகள் ஞானத்*
*திருமொழிஎம் சிந்தனைக்குத் தேன்.*

### (விருத்தம்)

*நமது நிலையில் சமுதாயம்*
*நாடும் சமய நெறியதனை*
*அமுத மொழியில் மழைபொழிந்தார்*
*அருளார் குன்றக் குடியடிகள்;*
*அமரர் சொல்லின் செல்வர்உளம்*
*அமைத்த நல்லறக் கட்டளையில்*
*தமிழர் நாட்டுத் தலைநகரில்*
*தத்துவ நாதம் முழங்கியதே!*

– புத்தனேரி ரா. சுப்பிரமணியம்.

# 7. வானொலியில்

1975 வைகாசி

இரா. நெடுஞ்செழியன்
**கல்வி, சுற்றுலா அமைச்சர்.**

## அணிந்துரை

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக் கோளை உள்ளத்தே கொண்டு துறவிக் கோலம் பூண்டு, தமிழ்த் தொண்டு ஆற்றிய சீரியோர் சிற்சிலர், பழங்காலந் தொட்டு செந்தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கின்றனர். இந்தக் காலத்தில், அத்தகைய தலைமுறையைச் சார்ந்தவர் என்று மதிப்பிடத் தக்க முறையில், அருந்தமிழ்த் தொண்டு ஆற்றி வருபவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவார்கள்.

'எதிலும் தமிழ் எங்கும் தமிழ்' என்ற கொள்கையில் உறுதி பூண்டு, தமிழ் எல்லா வகையிலும் மேம்பாடு எய்தவும், தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் சிறப்பு அடையவும், தமிழ் நாடு எல்லா நெறிமுறைகளிலும் முன்னோடியாக விளங்கவும் வேண்டும் என்பதற்காக, அடிகளார் அவர்கள், தமது நேரம், நினைப்பு, உழைப்பு, ஊக்கம், அறிவு, ஆற்றல், முனைப்பு, முயற்சி ஆகிய எல்லாவற்றையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சிறந்த சிந்தனையாளர்; நல்ல தமிழ்ச் சொற்பொழிவாளர்; அழகு தமிழ் எழுத்தாளர்; பொதுத் தொண்டு புரியும் பெற்றியாளர்; பழகுவதற்கேற்ற பண்பாளர்.

அடிகளார் அவர்கள் அவ்வப்போது வானொலியின் வாயிலாக ஆற்றிய சீரிய உரைகளைத் தொகுத்து **'வானொலியில் அடிகளார்'** என்ற பெயரில் இந்நூலினை வெளிக்கொண்டு வந்துள்ள **'கலைவாணி புத்தகாலயத்தினரைப் பாராட்டுகிறேன்'.**

கு. XVI. 31.

பல்வேறு சீரிய தலைப்புக்களின் கீழ் உரைகள் அமைந் திருக்கின்றன. அடிகளார் எடுத்துக் கொண்ட பொருளைத் தமக்கேயுரிய சிறப்பான நடையில் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டுகிறார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் அழகு முறையை அடிகளார் பாராட்டும் தகைமையில் கையாண்டுள்ளார்கள்.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் சிந்தனையைத் தூண்ட இந்த நூல் நல்ல முறையில் பயன்படும் என்பது திண்ணம். நூலை வெளியிட முன்வந்த பதிப்பாசிரியர் **திரு. சீனி திருநாவுக்கரசு** அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

**சென்னை** இரா. நெடுஞ்செழியன்
**24–6–75**

## 8. மனம் ஒரு மாளிகை

**1978 வைகாசி**

### அணிந்துரை

**சிலம்பொலி, சு. செல்லப்பன், எம்.ஏ.,பிஎச்.டி.,**

'மனம் போல வாழ்வு' என்பர் ஆன்றோர். மனத்தின் அடிப்படையிலேயே ஒருவர்க்கு வாழ்வும் தாழ்வும் ஏற்படுகின்றன. மனநலம் நல்வாழ்வைத் தருகின்றது. மனக் கோட்டம் தன்னைக் கெடுப்பதோடு தன்னைச் சார்ந்தோரையும் கெடுக்கின்றது. இதற்கு வரலாறுகள் மிகுதியும் உண்டு. அப்படியானால் நல்வாழ்வு வாழ உதவும் மனநலத்தை எல்லோரும் கடைப்பிடித்தால் என்ன?

கரும்பிருக்க இரும்பு கடித்துச் சிலர் ஏன் கலக்கமுறு கின்றனர்? விளக்கிருக்க மின்மினியில் தீக்காய்ந்து சிலர் ஏன் வாடுகின்றனர்? நல்ல வாழ்வு நீக்கி அல்லலுற்ற வாழ்வு கொண்டு ஏன் அயருகின்றனர்? எல்லாவற்றிற்கும் காரணம்

மனநலம்-மனவளம் இன்மையே. அம்மனநலம்-வளம் எளிதில் அமைந்து விடாது. அதற்கு மிகுந்த பயிற்சி தேவை; கட்டுப்பாடு தேவை; இன்னல்கட்கு தளரா இரும்புள்ளம் தேவை: எனினும் பிறரின்னல் கண்டு உருகும் கரும்புள்ளமும் தேவை.

இவ் வழிமுறைகளால் மனநலத்தை-வளத்தை அடைவது அடைய முயல்வதே நல்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய உயர்வழியாம். நிலையில்லா மனத்தை நிலை நிறுத்தி நிலையான வாழ்வு வாழ்வதே அறிவுடைமை. இதைத்தான் 'மனமென்னுங் குரங்காட்டி திரியுமென்னை' ஆட்கொள்ள வேண்டுமென்று இறைவனிடம் வேண்டினார் வள்ளலார். 'மனம் எனும் தோணி' பற்றி நான் அலைக் கழியாது அருள வேண்டும் என்றார் அப்பர் பெருமான். 'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நின்பால் உள்ளம் விடலறியேன்'- ஆகத் திரியும் என்னை ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என்றார் மணிவாசகர்.

உண்மையான உயர்ந்த நல்வாழ்வுக்கு மனவளமே மூலகாரணம் என்பதனைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். காரண காரியத் தொடர்போடு நிலைநிறுத்தி, வழிமுறைகள் கூறி குறிக்கோள் கொண்ட உயர்வாழ்வு வாழ வழிவகுத்து உதவுவதே தவத்திரு அடிகளாரின் 'மனம் ஒரு மாளிகை' என்னும் இவ்வரிய நூல். மனத்தை மாளிகையாக்க வேண்டும் என்பதே இவர்தம் சிறந்த குறிக்கோள். அதற்குரிய பல முயற்சி களையும் தெளிவாய் விளக்கிச் சொல்கிறார் நம் அடிகளார்.

அன்புள்ளம் பெற்றுவிட்டால் பின் பெறவேண்டியது என்னே? எனவே, 'மனித உலகம் அமைதியாகக் கூடிக் கலந்து சிரித்து மகிழ்ந்து வாழ அன்பே தேவை. அன்பு நெறியில் மனித உலகம் வாழும். அதனால் இந்த மண்ணகம் சொர்க்கம் ஆகும்' (பக் 11) என்று தெளிவுறுத்துகிறார். 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்றெடுத்துரைத்து அறிவைப்

பெறுதற்குரிய வாயில்களில் முதன்மையானது சிந்தனை'- (பக்.13) என்று அறிவுறுத்துகிறார்.

'வாழ்க்கை என்ற மாளிகைக்கு ஒழுக்கம் ஒளியூட்டு கிறது' (பக்.17) என்று வாய்மையின் தேவையை வலியுறுத்து கிறார். 'வாழ்க்கை வளர, இன்பமுற வாழ அறிவறிந்த ஆள் வினை தேவை' (பக்.22) என்று முயற்சியின் பெருமையைக் காட்டுகிறார். 'கற்றல்-கேட்டலின் மூலம் பெறும் அறிவு என்ன இருந்தாலும் கடன் வாங்கிய பிழைப்பே. நினைத்தலின் மூலம் பெறும் அறிவே உண்மை அறிவு. (பக்.30) என்று மனத்தின் செயலாகிய எண்ணிச் செய்தலை எடுத்துரைக்கிறார்.

இவைகள் எல்லாம் மனத்தை மாளிகையாக்கும் வழிக் குரிய படிகளாம். இப்படிகளை நாம் எங்ஙனம் பெறுவது? அதற்கும் ஆசிரியர் வழி கூறாமலில்லை. கல்விக்குரிய நூல் களும் கற்பதற்குரிய நூல்களும் அறிந்து கற்றல் வேண்டும் என்கிறார். சங்க இலக்கியங்களும், சிலம்பு முதலிய காப்பியங் களும், திருக்குறளும், தேவராார திருமுறைகளும், ஆழ்வார் களின் பிரபந்தங்களுமே அவை என்று சுட்டிக் காட்டுகிறார்.

'தன்னை அறிந்தால் பிறிதொன்றால் ஆங்கு யாதொரு தீமையும் இல்லை. இதனால்தான் கணியன் பூங்குன்றனார் என்ற பெரும்புலவர் புறநானூற்றில் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்றார் (பக்.52) என்று எடுத்துக்காட்டி அதுவே பேரின்பம் என்று விளக்குகிறார். வள்ளுவம் ஏன் பிறந்தது என்ற வினாவை எழுப்பிக் கொண்டு "வள்ளுவம் பதவுரை பொழிப்புரைக்காகப் பிறக்கவில்லை, மண்செழிக்க மழை பொழிவது போல மனிதகுலம் செழிக்க-மனித குல உள்ளங்கள் செழிக்க – உலகு செழிக்க – உயர் கடவுள் சிரித்து மகிழ வள்ளுவம் பிறந்தது" (பக்.65) என்று ஆணித்தரமான விடையும் கூறுகிறார்.

ஒழுக்கமும், பத்திமை-அருளும் செவிச் செல்வமும் மனத்தைப் பயன்படுத்தும் என்று பறைசாற்றுகின்றார். கொள்கை குறிக்கோள் தாங்கி நடைபோடும் போது மேட்டுக் குடியினர் ஆதரவு கிடைக்காது... நம்முடைய கொள்கைகளை இதயத்தில் ஏந்தித் துணை நிற்க வேண்டியவர்கள். சாதாரணமானவர்கள். கிராமங்களில் வாழ்பவர்கள். அவர் களைத் தேடுங்கள் (பக்.87) என்று நம்மைத் தூண்டுகிறார்.

நாட்டுவெறி, மொழிவெறி, இனவெறி ஏற்படுத்தாத இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்கள் என்று நிறுவுகிறார். ஆசிரியர் தமிழ் மொழியின்மேல் மிகுந்த பற்றுடையவர் என்பது நூல் முழுதும் காணக் கிடக்கின்றது. தமிழ் வளர்ந்தால் தமிழன் வாழ்வான் தமிழினம் நிலைத்து வாழும்' (பக்.110) என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார்.

இருபதாம் நூற்றாண்டே சமுதாய மறுமலர்ச்சி நூற்றாண்டு என்று சிலர் கூறுவதை மறுத்து அப்பரடிகள் ஏழாம் நூற்றாண்டிலேயே சமுதாய மறுமலர்ச்சியினைத் தோற்றுவித்துப் புரட்சி செய்தார் என்பதை 'ஏழில் இருபது' என்ற தலைப்பில் அழகுபட வரைந்துள்ளார். இறுதியில் நூலுக்கு முத்தாய்ப்பு வைத்தது போல மனம் ஒரு மாளிகை யாவதற்குக் குறியெதிர்ப்பில்லாத அறச் சிந்தனையே தேவை என்று நிறுவுகிறார். இத்தகைய அறச்சிந்தனை நம் மன மாளிகையில் நின்று நிலவுமானால் உலகில் ஒப்புரவு நெறி வளரும் (பக்.200) என்பது ஆசிரியரின் நம்பிக்கை.

இதுவரை ஆசிரியர் கூறிய கருத்துகள் மனம் ஒரு மாளிகையாய்க் காட்சிதந்து அருளுள்ளம் தழைப்பதற்குத் தேவையான நன்னெறிகளாய் அமைந்தன. இக்கருத்துக்கள் எல்லாம் தமிழிலக்கியம் பலவும் தரும் பிழிவுதானே என்று நாம் எண்ணலாம். அதுதான் உண்மை.

இவ்வரிய நூலைப் படிக்கும் போது பல தமிழிலக்கியங் களைப் படித்துப் பெறும் உயர்ந்த கருத்துப் பிழிவுகள் நமக்கு

எளிமையாய்க் கிடைப்பதே இந்நூலால் நாம் பெறும் பயன் எனலாம். இந்நூலில் நாம் விரும்பி நுழைவதற்கு ஆசிரியர் 'ஏடுதேடு காதலர், உருவெளித் தோற்றம்' 'பொல்லாங்கு' 'தற்போக்கு' முதலிய தனித்தமிழ் சொல்லாட்சிகளைக் கையாண்டு மறைமலை அடிகளை நினைவுறுத்திச் செல்வதும் காரணம் ஆகும்.

'எது அன்பு? எந்த உயிரிடத்தும் காரணம் இல்லா மலேயே பள்ளந்தாழ் உறுபுனல் போல் தோன்றி வளர்வது அன்பு (பக்.9) என்று வினா விடை முறையிலும், உவமை கூறி விளக்கும் முறையிலும் சொற்றொடர்களைக் கையாண்டு திரு.வி.க.வை நினைவூட்டிச் செல்வதும் காரணம் ஆகும். அது மட்டுமன்று; 'திருக்குறள் காட்டும் சமயம், காழ்ப்புகளைக் கடந்த கவினுறு நெறி; மேடு பள்ளங்களைக் கடந்த மேலான நெறி, ஒன்றே குலம் என்ற உத்தம நெறி' (பக். 185) போன்ற எதுகை மோனை மிக்க எழில்நடையைக் கையாண்டு ரா. பி. சேதுப்பிள்ளையை நினைவூட்டிச் செல்வதும் காரணமாகும். மேலும் 'அகர எழுத்து ஒரு பகுதி வளைந்து கிடந்தாலும் வளைந்த வட்டத்தைத் தாண்டி ஒரு நேர்க்கோட்டில் முடிகிறது. அப்பொழுதே 'அ' முதலாக அமைகிறது. அது போலவே மனிதன் சார்புகளின் காரணமாக வளைந்து கிடக்கும் வாழ்க்கையினை நேராக்கிக் கொள்ளுதலை அகரத்தை எடுத்துக் காட்டுதலின் மூலம் விளக்குகிறார் வள்ளுவர் (பக். 187) என்று ஆசிரியர் தரும் பொருள் நயமும் நூலுள் நம்மை இழுக்கிறது எனலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக அடிகளாரிடம் காணப் படும் மற்றொரு சிறப்பே இந்நூல் சிறத்தற்குக் காரணமாகவும் அமைகிறது எனலாம். அஃதாவது அவரின் பேச்சு நடையும் எழுத்து நடையும் ஒன்றுபோலவே அமைவது சிறப்புடையதாம். இதனால் அவர்தம் நூலைப் படிக்கும் போதும் அவர் முன்னே அமர்ந்து அவராற்றும் சொற்

பொழிவை நேரில் கேட்கும் உணர்வைப் பெற்று மகிழ்கிறோம்.

இத்திறன் அவர்க்கே வாய்த்த அரிய பேறு. இத்தரு சிறப்புகள் யாவும் ஒருங்கே அமைந்து இந்நூலை அணி செய்கின்றன. எனவே, மனப்போராட்டங்களால் மாளாத்துயர் கொள்ளும் இன்றைய சமுதாயத்தின் மனத்தை, ஒரு மாளிகையாக்கி உயர்வாழ்வு வாழ வழிசொல்லும் அழகுத் தமிழ் நூல் இது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அடிகளாரின் மனமாளிகைக்குள் நுழைய ஒரு நுழைவு வாயிலாக அழகிய முறையில் இந்நூலை ஆக்கித் தந்துள்ள நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களுக்கு நம் நன்றி உரியதாகும். இந்நுலின் நோக்கம் இனிதே நிறைவேற தமிழ்த் தாய் வாழ்த்துவாளாக!

சிலம்பொலி, சு. செல்லப்பன், எம்.ஏ.,பி.டி.

## 9. திருவள்ளுவர்

1981

டாக்டர் நா. பாலுசாமி,
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலை நகர்,
22—11—81

### அணிந்துரை

ஆண்டுதோறும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பற்றிய மூன்று சொற்பொழிவுகளைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் 1979ஆம் ஆண்டு நிகழ்த்தியுள்ளனர். வாழ்வியல்,

சமயவியல், அரசியல் ஆகிய முத்தலைப்புகளில் அவர்தம் சொற்பொழிவுகள் அமைந்துள்ளன.

தவத்திரு அடிகளார் தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரிய. தமிழகத்தில் மட்டுமன்றித் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் அவர் தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். ஆழந்த சிந்தனை, பரந்த நூலறிவு, சித்தாந்தப் பின்னணி, சொல்வன்மை முதலியன அடிகளாரிடம் அமைந்துள்ள பாங்கு வியத்தற்கு உரியது. சமுதாயத்தின் மீது பாசமும், நேசமும் கொண்டு பல்லாற்றானும் பணி யாற்றிவரும் அடிகளாரைச் சமுதாய முனிவர் என்றே கூறலாம்.

எழுத்திலும், பேச்சிலும், அடிகளார் தமக்கெனத் தனிநடை வகுத்துக் கொண்டவர். பொருள் ஆழமும், சொற் செம்மையும், ஆராய்ச்சி வளமும் அவர்தம் எழுத்துக்களில் மிளிரக் காணலாம்.

**வாழ்வியல்** என்ற முதற் சொற்பொழிவில் இல் வாழ்க்கை என்னும் அதிகாரத்துள் வரும் "துறந்தார்க்கும்" எனத் தொடங்கும் குறட்பாவில் அமைந்துள்ள "இறந்தார்க்கும்" என்ற சொற்கு, அவர்தரும் விளக்கம். ஆய்வுக்கு உரியது. தனக்கென வாழாது, பிறர்க்கென வாழ்ந்து, குறிக்கோள் ஒன்றை நோக்கிப் பயணம் செய்து, அதனை எய்தும் வகையால் இறந்து பட்டவர்தம் குறிக்கோளைத் தொடர்ந்து சென்று நிறைவு செய்தல், இறந்தார்க்கு இல்லறத்தார் ஆற்றும் துணையாகும் என்பது அடிகளார் கருத்து. அன்றியும், தம் குடும்பத்திற்கும், குழந்தைகளுக்கும், உரியன செய்து வைக்காமல் சமுதாயப் பணி ஆற்றுங்கால் இறந்து பட்டவர்தம் குடும்பத்ினரை வளர்த்துப் பாதுகாத்தலும், இல்லறத்தார் கடமையாகும் என்பர் அவர். இவ்வாறு, துணிந்து சிந்தித்துப் பிறரையும் சிந்திக்கத் தூண்டும் ஆற்றல், அவரது தனிச் சிறப்பாகும்.

"**சமயவியல்**" என்ற இரண்டாம் சொற்பொழிவில் திருவள்ளுவர் கூறும் துறவுபற்றி அடிகளார் தரும் விளக்கம் அவரது சிந்தனைத் துணிவையும், புரட்சிப் போக்கையும் புலப்படுத்துவதாகும். "பெண், மண்ணும் பொன்னும் செய்யும் தீமையைச் செய்யமாட்டாள். இரக்க உணர்ச்சியைத் தூண்டி வளர்க்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு. ஆனால் தமிழகத்துத் துறவு வாழ்க்கையில் மண்ணையும் பொன்னையும் துறக்காமல் பெண்ணை மட்டுமே துறக்கும் நெறி மேற்கொண்டதால், துறவிலும் முழுமையான வெற்றி பெறவில்லை" இக்கருத்து அடிகளாரின் திறந்த நெஞ்சப் பாங்கினைப் புலப்படுத்தும்.

"**அரசியல்**" என்ற மூன்றாம் சொற்பொழிவில் தனி உடைமை, பொது உடைமை பற்றிய அடிகளாரின் கருத்து ஆராய்தற்கு உரியது. "மனித குலத்திற்குத் தனி உடைமை உரிமையைத் திருக்குறள் வழங்கவில்லை. திருக்குறள் பொது உடைமையையே ஏற்றுப் போற்றியுள்ளது". அடிகளாரின் இத்துணிவுக்குரிய அகச்சான்றுகள் திருக்குறளில் உள்ளனவா என்பது விவாதத்திற்கு உரியதேனும், அது சிந்தனைக்கு விருந்தாகிறது.

சுருங்கக் கூறின், அடிகளாரின் மூன்று சொற்பொழிவு களும் திருவள்ளுவரின் உள்ளத்தை உள்ளவாறு உணர்தற்குப் பெரிதும் துணை புரிகின்றன என்பது ஒருதலை. தண்ணார் தமிழளிக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினின்று வெளிவரும் இவ்வரிய நூல், தமிழ் அன்னைக்குச் சூட்டப் படும் மற்றும் ஒரு மணம் மிக்க மாலையாகும்.

சொர்ணம்மாள் நினைவுப் பொழிவுகளை வெளிக் கொணர்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற அண்ணா மலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை வேந்தர் தமிழிசைக் காவலர், செட்டி

*நாட்டரசர், டாக்டர் மு. அ. முத்தைய செட்டியார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நினைவு அறக்கட்டளையை நிறுவிய டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களைத் தமிழகம் என்றும் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளது. இதனைச் செவ்விதின் அச்சிட்டு உதவிய சிதம்பரம் முகுந்தன் அச்சகத்தார்க்கும் அச்சு ஆகுங்கால் அச்சுப் பிழைகளைத் திருத்திய கா. ம. வேங்கட ராமையாவுக்கும் நன்றி.*

நா. பாலுசாமி
தமிழ்த் துறைத் தலைவர்
இந்திய மொழிப் புல முதன்மையர்

**அண்ணாமலை நகர்,**
**22–11–81**

## 10. சமய இலக்கியங்கள்

**1981 செப்டம்பர்**

### அணிந்துரை

**ஞானத்தமிழாகரர், டாக்டர், புலவர்**
**வை. இரத்தினசபாபதி பி.ஓ.எல்., எம்.ஏ., பிஎச்டி.**

**தத்துவத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.**

*"சமய இலக்கியங்கள்" என்பது நூலின் தலைப்பு. 'சமயம்' என்ற சொல்லின் நிலை இரண்டுங்கெட்டான் நிலை, 'சமயம்' என்ற சொல்லொலியைக் கேட்டவுடன் எழும் எண்ணக் குவியல்கள் எல்லாவற்றையும் குப்பையென நீக்கவும் குறித்த பொருள் இது என உணர்த்தவும் நின்ற முதல் நூல் இது. சமயக் கணக்கர்தம் மதிவழி போகாது, உலகியல்*

கூறிப் பொருளிது என்ற பொய்யில் புலவரே இந்நூல் ஆசிரியர்.

ஆளுதல், ஆளப்பெறுதல் என்பன இருவேறு செயல்கள். வேறுபாடுகளை இணைக்கும் ஒருமைப்பாடு என்பது அந்நியமன்று; வேறுபாடுகளிலேயே உள்ளார்ந்து கிடப்பது. வேறுபாடுகளில் அந்நியத் தன்மை புக இடம் கொடுத்தால் பிரிவினைப்படுத்தப் பெற்ற ஒட்டாநிலைகள் ஆதிக்கம் பெற்றுவிடும். இது சுதந்திரம் தந்த வரலாற்றுப் பாடம். இந்திய விடுதலை முழக்கம் அடிகளின் இளமைக் காலத் திருப்புமுனையாதலின், நூலின் உள்நின்ற தலைப்பு நான்கனுள் (சேக்கிழார் காட்டும் சமுதாயம், சமய இலக்கியங்கள், சித்தாந்தச் செந்நெறி, சமய இலக்கியங்களில் அறநெறி) இரண்டாவது தலைப்பே-நான்கனுள் நன்றே ஆளும் நிலை பெறுகிறது. அந்நியமிலாமை என்பது ஒருமைப்பாட்டு நியதி. அந்நியமிலாமையின் அரன்கழல் செலும் என்பது சித்தாந்தச் செந்நெறி.

அன்றாலின் கீழிருந்து அறமுதல் நாற்பொருளை வல்லார்கள் நால்வர்க்கும் வழங்கிய பரம்பொருளே குன்றைக் குருமணியென மானிடச் சட்டை தாங்கி, நாற் பொருள் பயக்கும் ஒருநடைத் திருவளர் இந்நூலை உலகுய்ய அருளியது என இந்நூலை ஆராதிக்கலாம். ஏனெனில், ஆராதிக்கும் மரபுநெறியில் மாறாதவன் யான். ஆனால், அடிகளை ஆராதனைப் பொருளாக ஆக்குவதைவிட, விமரிசனப் பொருளாகவே கடந்த 27 ஆண்டுகளாக அமைத்துச் செயல் பட்டுவிட்டேன். தனிவழிச் சிந்தனைக் கோட்டையைத் தகர்த்தெறிந்து கடுமையான விமரிசனத்தையே வாழ்வுப் பாதையாக்கிக் களங்கண்டு, தனிநின்று களங்கொண்டு, பரணி கொண்ட தமிழ் மாமுனிவர், மக்களாய்ப் பிறந்தார் அனைவர்க்கும் சமயத் தலைவராய் இவர் ஒருவரைத்தான் வரலாறு படைத்துக் கொடுத்திருக்கிறது. எவ்வாறு?

'புத்தகம் கைகளுக்கு அணிகலம்' என்பது ஒரு வாக்கியம். நாட்குறிப்பேடு இந்த இடத்தை இந்நாளிற் பெற்றது. நாட்குறிப்பேடுகள் பற்பல அமைப்புடையவை. நீதி மன்றக் கையேடு, ஆயுள் காப்பீட்டுக் கழகக் கையேடு அவ்வத் துறைச் செய்திகளைத் தொகுத்துத் தருவன. சமய இலக்கியங்கள் எனப்பெறும் சிவனடியார்களை அடிப்படையாகக் கொண்ட நாட்குறிப்பேடு அமைத்து, இன்று கண்ணப்ப நாயனார் என்ற சமய இலக்கிய நாள் என்று நினைவு கொள்வது மட்டுமன்றி, அவர் மேற்கொண்ட வாழ்வை, இந்நாளில் எத்தகைய தொண்டாக அமைத்துச் செயற்படுத்தலாம் எனச் செயல் திட்டமும் இயக்க வடிவும் அமைத்து வாழ்ந்து வரும் சமயத் தலைவர், என்னறிவு சென்றளவில் யானின்று அறிந்தபடி, வேறு எந்த உலக குருவோ, சமயத் தலைவரோ இல்லை. 63 நாயன்மார்களையும் தம்மைப் போலவே தம் கோயிலில் இருப்பிடமளித்த சிவன், தனித்தனி இடமே அளித்தான். 63 சமய இலக்கியங்களையும் நடைமுறைப் படுத்திய ஒரே ஒரு நாயனார்தான் உலகத்தில் உண்டு. அவரே சமய இலக்கியங்களாக நின்ற சிவனடியார்களைத் தம்முள்ளே இயக்கவழியில் செயல்படுத்திய தவத்திரு குன்றக்குடி அடிகளார். அதனாலேயே, சமயம் என்ற சொல்லுக்குச் சமுதாயநலம் என்பதே பொருளாயிற்று.

'சமயம்' என்ற சொல்லுக்கு முப்பதுக்கும் மேற்பட்ட வாழ்வியற் கோணங்களில் நின்று இயல்வரையறை செய்யப் பெற்றுள்ளது. சமயம் என்பது வாழ்க்கைமுறை. மனிதனின் சராசரித் தகுதியுடைமையை வரையறுக்கும் அளவுகோல்; மனித வாழ்க்கையை உயிர்ப்புள்ளதாக்கி, முழுமையாக்கும் உணர்வின் தேவையிலேயே மலர்ந்தது சமயம் என்பது அடிகள் அமைக்கும் விளக்கம்.

அடிகள் சிந்தனை ஓட்டத்தை விரைந்து பற்றுதல் எளி தன்று. உலகச் சிந்தனையாளர்கள் மூவகைப்படுவர். வரலாறு தழுவிய சிந்தனையாளர்கள், பரிணாம வளர்ச்சியைத் தழுவிய சிந்தனையாளர்கள். நிகழ்காலக் கணிப்பிலிருந்து

வருங்காலக் கணிப்பைக் கற்பனையில் தழுவும் சிந்தனையாளர்கள். அடிகள் இம்மூன்றையும் அறிவர்; அவர்தம் சிந்தனை இம்மூன்றையும் தழுவிய சிந்தனைபோலவே தோற்றும். ஆயினும் அடிகள் சிந்தனை, இம்மூன்றனுள் அடங்காது. எவ்வளவு உயர்ந்த ஒன்றையும் சராசரி மனிதன் நிலையில் அமைத்துக் கொடுப்பதே அச்சிந்தனைச் சிறப்பு.

"ஒரு மனிதன், சராசரித் தகுதியுடையவனாக இருப்பதற்கு அவன் இறைவழிபாடு நிகழ்த்துபவனாக இருக்க வேண்டும்."

"சராசரி மனிதன் தன் சராசரிக் குறைகளைக் கடந்த அறிவின் முதிர்ச்சியையே ஞானம் என்கிறோம்."

"சமய ஞானம் எக்காரணங்கொண்டும் சராசரி மனிதர்களை வேற்றுமைப்படுத்தி ஒதுக்காது."

என்பவைகளைக் காண்க. இவ்வகையில் அடிகள் புதியதொரு சித்தாந்தச் செந்நெறியை வகுத்தருளியுள்ளார்கள்.

உடல் வாழ்வு தன்னலம் பற்றியது; உயிர் வாழ்வு பொதுநலம் பற்றியது. சராசரி மனித வாழ்க்கையை உயிர்ப்புள்ள தாக்கி முழுமையாக்கும் உணர்வின் தேவையிலேயே தோன்றியது சமயம். இதனை நிறுவிய அடிகள், "பொதுவில் ஆடுபவன் நிழலில் பொதுமையைக் காணாமல், தீமையை அகற்றாமல், நன்மையைச் சாதிக்காமல், துன்பத்தைத் துடைக்காமல், இன்பத்தைப் படைக்காமல், கிழடுதட்டிச் செயலிழந்து போன நமது சமய அமைப்புக்கள் குறையுடைய நடைமுறைகளே" என்று சாடுவதன் மூலம் நாம் வினா எழுப்பிச் சிந்திக்க வேண்டிய நிலையில்லாமலேயே முடிவை வெளிப்படுத்தியுள்ள நயம் சிந்தனையாளர்களால் நீள நினைதற்குரியது.

யாண்டும் வற்புறுத்தாத புதிய சிந்தனையை அடிகள் இந்நூலில் அமைத்துள்ளார்கள். **தோய்ந்த சிந்தனை.** ஆம், அருளில் தோய்ந்த சிந்தனை. **அருளில் நின்று தன்னை இழந்த**

சிந்தனை. அருள்நனி பழுத்த ஆள்வினையுடைமை. அஃறிணை எனத் தம்மை நிறுத்தும் தொண்டு இவை மூன்றும் சராசரி மனிதன் சமுதாயம் தழுவிய சமய அனுபவ முதிர்ச்சி யாளனாக நின்ற-உயர்குறிக்கோள் நிலைக்குரிய அடிப்படைகள்.

தருமகருத்தாக் கொள்கையை அடிகள் விளக்கும் போது அக்கொள்கையே புதிய வலிவுபெறும். இந்நூலில் ஒரு புதிய உத்தியைக் கையாண்டுள்ளார்கள்.

"இப்பொழுது நம்மிடத்தில் பொருள் இல்லை. உடன் வந்துள்ள உதவியாளரிடம் பணம் இருக்கிறது. நாம் கேட்கும் பொழுது அவர் தருகிறார். அல்லது குறிப்பறிந்து தருகிறார். இங்கே தருதல் எந்த மனநிலையில் நிகழ்கிறதோ அதே மனநிலைதான் தேவை".

சமய இலக்கியங்கள் சிவனடியார்களே. நடமாடுங் கோயில்களே எனக் கொண்டு, சமயம் என்பது வாழ்க்கை முறை என்பதைச் சரசாரி மனிதநிலையில் விளக்கிடும் உலகத் தத்துவச் சிந்தனையாளர்களையும் சமயச் சிந்தனையாளர் களையும் திட்டமிட்டுச் சந்தித்த சந்திப்பே இந்நூல். பிசிறு தட்டாத சிவானுபவ விளக்கமே சமயம்.

நான் கண்ட சேக்கிழார், நான் கண்ட காந்தியடிகள் எனக் கூறும் சிந்தனையை ஒதுக்கி, அருளில் தோய்ந்த சிந்தனையில், அருள் பழுத்த ஆள்வினையுடைமையுடன், 'பணிசெய்து கிடைப்பதே' என முழங்கிய அஃறிணை உணர் வுடன் சமயத்தை-வாழ்க்கையை அமைத்துக் கொள்க என்று கூறி, சிவம் வாழ்த்துப் பொருள் அன்று; வாழ்வுப் பொருள் என்று உலக மக்கள் அனைவரையும் ஒருமைப் பாட்டுரிமையில் இணைந்து வாழ வேண்டும் என ஆணை யருளியுள்ளார்கள்.

என்றைக்கும் எந்தம் வாழ்பொரு ளாய
குன்றைக் குருமணி வாழ்க வாழ்க!

சென்னை-5
27-8-1981

இங்ஙன்,
வை. இரத்தினசபாபதி

# 11. சிந்தனைச் செல்வம்

1983–ஏப்ரல்

## முன்னுரை

டாக்டர். வா.செ. குழந்தைசாமி, துணைவேந்தர்,
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–600 025.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆழ்ந்த சிந்தனை யாளர். அடிகளார் சமயத் துறையின் தலைமை மாளிகை களில் புதிய சாளரங்களைத் திறந்தவர். வெயிலும், ஒளியும், புயலும், காற்றும் சமுதாயச் சூழலில் மட்டுமன்று; சமயச் சூழலிலும் இயல்பானவையே; ஏற்கத் தக்கவையே என்ற மனம் கொண்டவர்.

அறிவுலகத்தின் ஆய்விற்கும், வளரும் சமுதாயத்தின் மாற்றங்கட்கும், சமயங்கள் புறம்பானவையல்ல. இவற்றின் தாக்கங்கட்கு ஈடு கொடுத்து, சமய மரபுகள் நிற்க வேண்டுமே யன்றி, இவற்றினின்றும் பாதுகாக்கப்பட வேண்டுவன அல்ல எனும் துணிந்த உள்ளத்தினர். எனவே பகுத்தறிவு மேடையோ பொது உடைமை வாதமோ, அவர் புறக்கணிக்கும் ஒன்றாக இருந்ததில்லை.

புதிய விஞ்ஞான உலகிலும், புதிய அரசியல் கோட் பாட்டுச் சூழலிலும் புரட்சிகரமான சமுதாயத் தத்துவங் களிடையேயும், நம்பிக்கையோடும் நட்போடும், அடிப்படைச் சமய நடைமுறைகட்கு ஞாயம் கற்பித்து, உயர்ந்து நிற்பவர்.

புரட்சிகரமான கருத்துக்கள் தமிழர்தம் சமய உலகிற்குப் புறம்பானவையல்ல; அனைத்து அதிகாரமும் அரசன் கையில் இருந்த காலத்தில் "நாமார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்" என்று பாடிய அப்பரும், மண்ணிற் பிறப்பதே பாவங்களின் விளைவு என்ற மனப்

பான்மை பரவி நின்ற சூழலில் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த வையகத்தே'' என்று பாடிய திருநாவுக்கரசரும், "கண்மூடிப் பழக்கமெலாம் மண் மூடிப் போக" என்று குரலெழுப்பிய இராமலிங்கரும் புரட்சியாளர் களேயாவர். எனவே அடிகளார் தம் புதுமை உணர்வுகள், வழி வழி வரும் தமிழ்ச் சமய உலக மரபின் தொடர்ச்சியே யாகும்.

இந்நூல் 28 தலைப்புகளில் அடிகளாரின் சிந்தனை களைத் தொகுத்து அளிக்கிறது. இன்றைய சமுதாயத்தை எதிர் நோக்கும் பல பிரச்சினைகளைப் பற்றி தமது கருத்துக்களை வெளியிடுகிறார். அவருக்கே இயல்பான அணுகுமுறை ஆங்காங்கு ஒளிவிடுகிறது.

"இன்று துறவிற்கும் உழைப்பிற்கும் தொடர்பில்லை என்று சிலர் கருதுகின்றனர்...ஞான வாழ்க்கைக்கும் தளராத உழைப்புத்தான் தேவை" என்ற அவரது கருத்து ஆராயப்பட வேண்டிய ஒன்று. மனித வாழ்வின் வளர்ச்சிக்கும், நிறை விற்கும் துணை நிற்பன, "அறிவும், அன்பும்." இவற்றைப் பற்றி அடிகளார் அழகாகப் பின்வருமாறு கூறுகிறார்:

"அறிவின் சீலம் அன்பு, அன்பின் செயற்பாடு இரக்கம்" எந்தச் சூழ்நிலையிலும் போர் தீமையான ஒன்றே என்ற அணுகு முறையினை அடிகளார் ஏற்கவில்லை.

"தீயவற்றோடு பகை கொண்டு எதிர்த்துப் போராடுதல் வாழ்வின் நோக்கமாக அமைதல் வேண்டும்...மனிதத் தீமையை எதிர்த்துப் போராடியவர்கள் தீர்க்கதரிசிகள் ஞானிகள்; கொடிய ஆதிக்க வெறிபிடித்த குடிநலம் போன்ற அரசர்களை எதிர்த்துப் போராடியவர்களும் அரசியல் ஞானிகள் என்றே பாராட்டப்பட வேண்டியவர்கள் என்கிறார். ஒவ்வொரு தலைப்பிலும் அடிகளாரின் தனிச் சிந்தனையும் ஆழ்ந்த இலக்கிய ஈடுபாடும் ஒளிவிடுகின்றன. படிப்பவர் மிகுதியும் பயன் பெறுவர். தமிழகம் படித்துப் பயன்பெற வேண்டும் என விழைகிறேன்; பயன் பெறும் என நம்புகிறேன்.

நண்பர் சீனி. திருநாவுக்கரசு தமிழ் நலமும், தமிழின நலமும் எண்ணி, நூற்பதிப்புப் பணியைத் தொடர்ந்து செய்து வருபவர். கருத்து வளமும், சிந்தனைத் தெளிவும் கொண்ட தலைப்புகளையே வெளியிட்டு வரும் கொள்கையாளர். அந்த வரிசையில் இவ்வரிய நூலும் இடம் பெறுகிறது. அவரது உயர்ந்த பணியையும் உறுதி சேர்ந்த முயற்சியையும் தமிழக மக்கள் பாராட்டி, ஊக்குவிக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். ஊக்குவிப்பார்கள் என்பது என் நம்பிக்கை. கலைவாணி புத்தகாலயத்தின் தமிழ்ப்பணி வாழ்க! வளர்க!

**சென்னை–600 025**<br>
**18–4–1983**

**டாக்டர். வா.செ. குழந்தைசாமி**<br>
**துணைவேந்தர்**<br>
**அண்ணா பல்கலைக் கழகம்.**

## 12. தமிழும் சமயமும் சமுதாயமும்

**1983 நவம்பர்**

### வாழ்த்துரை...

நம் அமுதத் தமிழ் மொழி வழி தோன்றியதே சைவ நன்னெறியாகும். அருந்தமிழையும், அற்புதச் சைவ நன்னெறியினையும் வேறுபிரித்தல் இயலாது. உயிரும் உடம்பும் ஆம் முப்பது முதலெழுத்துக்கள் முப்பத்தாறு தத்துவங்களின் வெளிப்பாடேயாகும்.

அந்தத் தத்துவங்களை உணர்த்தும் சைவ நன்னெறி பற்றி ஒழுகுதல் தனி மனித மேம்பாட்டுக்கு மட்டும் உரியதன்று, சைவ நன்னெறி ஒழுக்கம் சமுதாய மேம்பாட்டுக்கும் ஆகும்.

பொருளியல் அருளியல் இரண்டையும் சமுதாயம் நிறைவுறப் பெற்றுச் சமத்துவ ஒருமையுடன் உலகியல் நடத்தி உய்யச் செய்விக்கும் நன்னெறி ஒழுக்கமே சைவம் ஆகும்.

B-XVI.32.

அருந்தமிழை ஓதியுணர்ந்த வித்தகத் திறமையோடு சைவ நன்னெறிபற்றி ஒழுகும் சீலத் திருவாளர் நம் தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** அவர்கள். தனக்கென வாழாத் தகுதி யாளர் ஆவர். அவர் வாழ்வு சமுதாய வாழ்வு, இறை வாழ்வு. இறைவனையும், சமுதாயத்தையும் பிரிக்க முடியாது. இறைவனே சமுதாயம் – சமுதாயமே இறைவன்.

சமுதாயம் என்பது மக்கள் தொகுதியை மட்டும் குறிப்பதன்று. ஏனைய உயிர்த் தொகுதிகளையும் உலகங் களையும் அது குறிக்கும். நம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களே சமுதாயம் ஆவார்கள். உலகம் ஆவார்கள்.

இத்தகு தத்துவ வித்தக ஞானியாராகிய அவர்கள் மக்கள் பொருள் உணர்ந்து அருள் பெற்று உய்வான் வேண்டி ஆற்றிய அருட்பேருரைகள் **'தமிழும் சமயமும் சமுதாயமும்'** என்ற நூலாக வெளியிடுவதற்கு மகிழ்வுறுகிறேன்.

இந்நூலினைக் கற்று மக்கள் பயன் பெறுவார்களாக.

நம் மகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சைவமும் தமிழும் தழைக்க, தமிழ் மக்களும், உலக மக்களும் உய்ய இன்னும் பல நன்னூல்களைத் தந்தருளி, நீடு இனிது நிலவி வாழ எல்லாம் வல்ல இக்குன்றுரை குமரன் எந்தை இளவழகனை இறைஞ்சி வாழ்த்தும்,

பாலமுருகனடிமை
அருள்திரு பாலமுருகன் திருக்கோயில்
இரத்தினகிரி,
கீழ்மின்னல்–632517
வட ஆர்க்காடு மாவட்டம், தமிழ்நாடு.

# 15. திருவருட் சிந்தனை

1985–டிசம்பர்

## மதிப்புரை

'பல்கலை வித்தகர்'
டாக்டர் வை. இரத்தினசபாபதி
தத்துவப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.

'திருவருட் சிந்தனை' என்ற தலைப்பில் முந்நூற்று அறுபத்தாறு தனிநிலை எண்ணங்களின் ஒரு துறைக் கோவையை கலைவாணி புத்தகாலயத்தின் மூலம் மக்கள் மன்றத்தில் மணம் பரப்ப விட்டிருக்கிறார். 'பாநயப்பாமணி' 'திருக்குறள் நெறித் தோன்றல்' கவிஞர் கலைவாணி சீனி. திருநாவுக்கரசு அவர்கள்.

திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் ஒரு புரட்சியாளர். பழைய செய்திகளைப் புதிய தலைப்பில் தரும் இக்கால வழக்கை மாற்றி, பழைய தலைப்பில் புதிய செய்தியை மக்கள் மன்றத்துக்கு வழங்கியிருக்கிறார்.

அது மட்டுமா? மரபு நெறியில் எது பிழையோ அதைச் செய்திருக்கிறார். செய்யவும் வைக்கிறார். பிறருக்கு எழுதப் பெற்ற முடங்கலையோ, நாட் குறிப்பையோ படித்தல் பிழை. அதிலும் திருமடத்தில் அருள் தலைமையேற்று அருளாட்சி புரியும் குரு மகாசந்நிதானத்தின் வாழ்நாட் குறிப்பைப் படித்தார்.

அத்துடன் நின்றாரா? அதனை வெளியிட்டுப் படிக்கவும் வைத்திருக்கிறார் என்றால், அவரது செயல் வியத்தகு புரட்சியே. கிடைத்தது அருமை. அதை அனைவருக்கும் கிடைக்க வைத்திருப்பது அருமையிலும் அருமை.

காதலனுக்கு எழுதப்பெற்ற முடங்கலைக் காதலனின் தந்தைக்குரிய காணிக்கை முடங்கலாக அமையுமாறு எழுதிய கைவண்ணம் இளங்கோவடிகளுடையது என்றால் கடைக் கணித்து மந்தணமாகப் படிக்கப் பெற வேண்டிய நாட் குறிப்பை மந்திரமாக அமைத்து மக்கள் வாழ்வைப் பண் படுத்தும் வகையில் வாழ்வியல் ஓவியங்களாகத் தீட்டியருளிய திருவருட் கொடை வழக்கமே தவத்திரு குன்றைக் குருமணியின் திருவருட் சிந்தனை.

வாழ்வியல் சிக்கல் ஒன்று வாழ் முதலாகிய பொருள் எனப்பெறும் பரம்பொருளிடம் அடியவன் கேட்டுப் பெறுதல் முறையா?

கேட்டவர்களுக்கெல்லாம் அரிய பொருளாக அகன்று விட்டது அப் பரம் பொருள் சரி, கேளாமலேயே விட்டு விடுவோம் எனில், அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற உலகப் பழமொழி அவ்வப்போது நினைவுக்கு வருகிறது.

கேட்கலாம் என்றாலோ எதைக் கேட்பது? இச் சிக்கலைத் தீர்க்கும் மணிவாசகம் ஒன்று:

**"வேண்டத் தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**
**வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ**
**வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீ யாது அருள்செய்தாய்**
**யானும் அதுவே வேண்டின் அல்லால்**
**வேண்டும் பரிசொன்று உண்டென்னில்**
**அதுவும் உன்தன் விருப்பன்றே"**

என்ற மணிவாசகத்தின் "வேண்ட முழுதும் தருவோய் நீ!" என்ற திரு வார்த்தையின் விளக்கமாக அமைத்து அருளியதே முந்நூற்று அறுபத்தாறும்.

குன்றக்குடி அடிகளார் என, அன்புளோர் நெஞ்சங்களாலும், தமிழ் மாமுனிவர் எனத் தமிழக மக்களின் தழை தமிழ் உணர்ச்சிகளாலும், அடிகளார் என அனைத்து நாட்டு ஆற்றல்சால் கொள்கைப் பேராளர்களாலும் பொதுச் சமய புனித நெறிச் சான்றோர் என அருள் நெறித் திருக்கூட்ட அகவுணர்களாலும், திருக்கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதினம் ஐந்து கோவில் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் என மரபு பேணும் மாண்புரைகளாலும், நீள நினைந்தும் நித்தமும் கை தொழுதும் போற்றப் பெறுபவர் அடிகளார்.

வள்ளுவரே இவர், சேக்கிழாரே இவர், அப்பரடிகளே இவர் என்றெல்லாம் நினைக்கப் பெறும் அடிகளார், உண்மையிலேயே இவர் யார் என்ற வினாவிற்குத் திருவருட் சிந்தனை அடிகளாரை இவர் இன்னார் இல்லை, இனியார்! இவரைப் போல இனி யார்? என்ற வகையில் நம்மிடம் அகப்பட வைத்து விடுகிறது.

திருவாசகப் பெரும் பேரின்பத்தைத் துய்த்துத் துய்த்துத் தேக்கித் தேக்கித் திகழும் அருள் நிறை நெஞ்சம் 'போற்றிப் புணர்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்' என்ற மணிவாசகத்தின் அருளனுபவத் திரு நிகழ் நெஞ்சம் உலக மக்களுக்கு வழங்கும் வாழ்வியல் வழிகாட்டியே இந்நூல்.

இறையருட் சிந்தனைக் களஞ்சியமாகிய திருவருட் சிந்தனை மக்கள் வாழ்வில் எந்நாளும் நின்று, பணி செய்வதாகுக.

அதனை அவ்வாறே பணி கொண்டும், மக்களைப் பணிகொள்ள வைத்தும் புரட்சி செய்யும் 'திருக்குறள் நெறித் தோன்றல்' 'பாநயப் பாமணி' 'கலைவாணி' **திரு. சீனி. திருநாவுக்கரசு** அவர்களின் தொண்டு வாழ்ந்து வளம் சிறப்பதாகும்.

**சென்னை** **வை. இரத்தினசபாபதி**

# அணிந்துரை
# (திருவருட் சிந்தனை)


## இராம. வீரப்பன்
### அறநிலையத் துறை முன்னாள் அமைச்சர்


*அண்ணல் காந்தியடிகள், பிரார்த்தனையின் சிறப்பைப் பற்றிக் கருத்து தெரிவித்த பொழுது, "உண்ணாமலும், நீர் பருகாமலும் கூட என்னால் இருந்து விட முடியும். ஆனால் இறைவனைப் பிரார்த்தனை செய்யாமல், ஒரு நொடி கூட என்னால் இருக்க முடியாது" என்று குறிப்பிட்டார்கள்.*

*அண்ணலின் வழியில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் ஆண்டு முழுவதும் மாந்தர்கள் எத்தகைய பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வாழ வேண்டும் என்பதைச் சிந்தித்து "திருவருட் சிந்தனை" என்ற அருமையான நூலை... பிரார்த்னை நூலாய்ப் படைத்துள்ளார்கள்.*

*பக்தி இலக்கியத்தில் உள்ள ஒரு தொடர் "சிந்தனை உனக்குத் தந்தேன். திருவருள் எனக்குத் தந்தாய்" என்பதாகும்.*

*தவத்திரு அடிகளார் நற்சிந்தனையை இறைவனுக்குக் காணிக்கையாக்கி திருவருளை இறைவனிடமிருந்து பெற்று "திருவருட் சிந்தனைகளை" நமக்கெல்லாம் வழங்கியிருக் கின்றார்கள்.*

*இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளாக அடியார்கள் எண்ணுவதுண்டு.*

*"இறைவா இறைவா" என்று ஒவ்வொரு நாளையும் பிரார்த்தனையோடு தொடங்கி, பிரார்த்தனையுடனே மனிதர்கள் முடிக்க வேண்டும் என்ற பெருநோக்கில் அடியார்களின் நிலையில் தம்மை வைத்து, அடியார்களுக் காகப் பல்வேறு பிரார்த்தனைகளை அடிகளார் படைத் திருப்பது போற்றுதற்கு உரியதாகும்.*

எப்படி "தான்" ஆகவேண்டும் என்று மனிதன் சிந்திக்கிறானோ..பிரார்த்திக்கிறானோ அப்படியே அவன் ஆகிறான் என்று ஆன்றோர்கள் சொல்லுவார்கள்.

"ஐம்புலன்களை வெல்ல வேண்டும்; அறிவினையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ள வேண்டும்; மானிடச் சமுதாயத்தின் மேன்மைக்காகப் பாடுபட வேண்டும்; பிறரை உண்பித்து உண்ண வேண்டும்; மகிழ்வித்து மகிழ வேண்டும்; வாழ்வித்து வாழ வேண்டும்.

இத்தகைய வாழ்க்கை நெறியில் நாம் வாழ்ந்திட அருள் புரிய வேண்டும் என்று நாளும் இறைவனைப் பிரார்த்திப்பதற்கு "திருவருட் சிந்தனை" என்கிற இந்த நன்னூல் வழி காட்டும்.

ஒவ்வொரு நாட் காலையிலும், எத்தகைய உறுதி மொழியை, ஒவ்வொருவரும், எடுத்துக் கொண்டாக வேண்டும் என்பதைத் தெரிவிக்கிறது. முதல் பிரார்த்தனையே இந்த ஆண்டினை உழைப்பு ஆண்டாக்கி செலவிட உறுதி எடுத்துக் கொள்ள, அருள்செய் என்பதாக இறைவனை வேண்டுவதாக அமைந்துளது.

எதிர்காலத்தைப் பற்றிக் கனவு கண்டு கொண்டும், கடந்த காலத்திற்காகக் கண்ணீர் சிந்திக் கொண்டும், நிகழ் காலத்தை வீணடித்துக் கொண்டும் காலம் கழிக்கும் காலத்தின் அருமை தெரியாதவர்களுக்காக மேலும் பல பிரார்த்தனைகளும் இந்நூலில் படைக்கப் பட்டிருக்கின்றன.

இறைவனையும் "ஐந்தொழில் நிகழ்த்தும் முதல் உழைப்பாளி" என்று அழைத்துச் சிறப்பிக்கும் அடிகளார் இடையீடு இல்லாது, ஓய்வே இல்லாது, தற்செயல் விடுப்புகூட இல்லாது, இறைவன் உழைக்கும் உழைப்பின் திறத்தை எடுத்துக்காட்டி பலரையும் உணர வைக்கிறார்.

உண்டு, நடமாடும் நடைப் பிணங்களாக, வாழும் பல மாந்தர்கள் தாமே திருந்த எத்தகைய பிரார்த்தனைகளைப்

பிரார்த்திக்க வேண்டும் என்பதாகவும் அடிகளார் சிந்தித் திருக்கிறார்.

வயிறு புடைக்க உண்டபிறகு, உண்டது போதுமா? என்று கேட்டு, மனம் திருப்தி காணுகிற வரை உண்ண விழைகிற அவர்கள், உழைப்பிலே மட்டும் அத்தகைய திருப்தியைக் காண முற்படாமல், தொழில் செய்வதாக, வெறும் பாவனை மட்டுமே புரிவது ஏன்? எனக் கேட்கிறார் அடிகளார்.

உழைக்காதவர்கள், தம் பாவம்தீர, ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டிய பிரார்த்தனைகளையும் இந்நூலில் படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

திருக்கோயிலைப் பற்றிய திருவருட் சிந்தனைகள் பலவும் இந்நூலில் வெளியிடப் பட்டிருக்கின்றன. “திருக் கோயில்கள் உயிரனுபவத்திற்குரிய பண்ணைகள்” என்பதாகப் போற்றியுள்ள அடிகளார், திருக்கோயிலின் தூய்மைப் பரா மரிப்பைப் பல பிரார்த்தனைகளில் வற்புறுத்தியுள்ளார்.

“இறைவா! மன்னித்துவிடு! இனிமேல் நீ எழுந்தருளி யுள்ள திருக்கோயில்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள முயற்சி செய்கின்றேன்” என்று அன்பர்கள், பிரார்த்திப்பதாக சிந்தனை செய்து அவர்கள் அப்பர் பெருமான் திருநாவுக் கரசரைப் போல் உழவாரப் பணி புரியவும், கைத் திருத் தொண்டு செய் கடப்பாட்டில் நிற்கவும், உறுதி கொள்வ தாகப் பிணைத்துள்ளார்.

உழவாரப் பணியை! சிறிய பணி என்று சிலர் ஏளனம் செய்யக்கூடும் என்று எண்ணி அடிகளார் அது சீரிய பணி ஆவதையும்! “தெருக்களைக் கூட்டித் துப்பரவு செய்யும் தொழிலும் கூட! அதன் தன்மையில், மிக மிக உயர்ந்த தொழில்” என்று விளக்குகிறார்.

துப்பரவு பணி கோடானு கோடி மக்களை நோயி லிருந்து பாதுகாக்கும் தொழில். அதனால் அன்றோ

அப்பரடிகள் "பார்வாழத் திருவீதிப் பணி செய்தார்" என எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

ஆலயங்களின் தூய்மையைப் பராமரிக்க வேண்டியதன் இன்றியமையாமையைத் தெரிவித்து, அண்மையில் அறநிலையத் துறையின் சார்பில் திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணி, மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் தொடங்கி வைக்கப் பெற்றது.

பதினைந்து சமூக அமைப்பைச் சார்ந்த அன்பர்கள் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தூய்மை பராமரிப்புக்கும், பொறுப்பேற்றுக் கொண்டு, செயல்படத் துவங்கியுள்ளார்கள்.

அனைத்து ஆலயங்களிலும் சமூக நல அமைப்புகளைக் கொண்டு ஆலயங்களின் தூய்மையைப் பராமரிக்க, அறநிலையத் துறை எண்ணி வருகிறது.

அரசின் முயற்சிகளுக்கு, ஆக்கமும் ஊக்கமும் தருவதைப் போல அடிகளார், ஆலயத்தூய்மைப் பராமரிப்பு யாரோ சிலரின் கடமையல்ல ஆலயத் தூய்மைப் பணிகள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் கடமையென்பதை இந்நூலில் தெளிவு படுத்தியிருப்பதைப் பாராட்டுகிறேன்.

தமிழ் அருச்சனையின் ஏற்றம் பற்றியும் பல பிரார்த் தனைகள் விளக்குகின்றன. இறைவன் படிக்காசு கொடுத்து பைந்தமிழைக் கேட்டான்; பண் சுமந்த பாடல்களைப் பெறு வதற்காக வைகை ஆற்றங்கரையில் மண்சுமந்தான், சுந்தரரின் செந்தமிழுக்காக திருவாரூர்த் தெருக்களில் நடந்தான்.

ஆகவே இறைவன் தமிழையே விரும்புகின்றான். இல்லை, இல்லை, இறைவன் தமிழாகவே இலங்குகின்றான் எனக்கூறி, "இறைவா! எங்கள் தவறை மன்னித்து அருள், நாங்கள் நல்ல தமிழில் வழிபாடு செய்கிறோம்!" என்று பிரார்த்திப்பதாக அடிகளார் அமைத்திருப்பது பாராட்டுக் குரியதாகும்.

இவை போன்ற பாராட்டுக்குரிய எத்தனையோ சிறந்த கருத்துக்கள் பிரார்த்தனைகளாக, இந்நூலில் திகழ்கின்றன. "வாழையைப் போலச் சமுதாயத்திற்கு முழுதும் பயன்பட்டு வாழ வேண்டும்; தென்னையைப் போல் நன்றியை இளநீராகக் கொடுக்க வேண்டும். எருதினைப் போல் உடல் நோவினைப் பாராது உழைக்க வேண்டும். நிலத்தைப் போல் கொத்தினாலும் வெட்டினாலும் நன்மையே செய்ய வேண்டும்" என்பதாக வரும் பல பிரார்த்தனைகள் நல்ல பண்புகளை ஊட்ட வல்லனவாய் அமைந்துள்ளன.

அடிகளார் ஓரிடத்தில் பசுவைப் பற்றிச் சொல்லும் போது பசு தன் வாழ்நாளில் 24,690 பேருக்கு ஒரு வேளைக்குத் தேவையான பாலைப் பொழிந்து தருவதைக் கணக்கிட்டுக் காட்டுகின்றார்.

கணக்கு, தமக்குப் பிடிக்காத பாடம்தான் என்று கூறும் அடிகளார், கணக்கின் முறைகளை உவமைப்படுத்தி வாழ்க்கையையும் ஒரு கணக்காகக் காட்டுவதும், "வாழ்க்கை யாகிய கணக்கில் அறிவைக் கூட்ட வேண்டும்; கெட்டவை களைக் கழிக்க வேண்டும்; ஆற்றல், செல்வம், அன்பு போன்ற நல்லவற்றைப் பெருக்க வேண்டும்; வையம் உண்ண வகுத்துக் கொடுத்து வாழ வேண்டும்" என்றெல்லாம் கூறி, வாழ வழிகாட்டும் பகுதிகள் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

தனக்காக மட்டும் வாழ்வது விலங்கின் தன்மை. பிறர்க்காக வாழ்வதே மனித தருமம் என்பதைத் "திருவருட் சிந்தனை" மூலமாக எடுத்துக் காட்டும் அடிகளார், "மனம் திருந்தி விட்டால் மண்ணில் சொர்க்கம்" "பூசைகள் நேராகின் அனைத்தும் நேராகும்" என விளக்குகிறார்.

இத்தகைய உயர்ந்த சிந்தனைகளைக் கொண்டு விளங்கும் இந்நூலைக் கற்பவர், அடிகளார் அறிவிப்பதைப் போல, அடுத்த தலைமுறைக்கு வெறும் "குரு பூசை" "திதிப் பொருளாக" மட்டும் போய் விடாமல், மரணத்தை வென்று மரணமிலாப் புகழ் வாழ்க்கையில வாழ்வார்கள் என்பது உறுதி.

தவத்திரு அடிகளார் அவர்களின் தமிழ்ப்பற்றும், சமயப் பற்றும் நாடறிந்த ஒன்று. அவர் இதுவரை எண்ணற்ற அரிய நூல்களைப் படைத்துத் தமிழன்னைக்கும் காணிக்கை ஆக்கியுள்ளார்.

இருநூறு பக்கங்களைக் கொண்ட இந்நூல் அளவால் மட்டுமல்ல, எடுத்துக் கொண்ட பொருளாலும்! பெரிய நூல். படிக்கும் அன்பர்களுக்குப் பயன் நல்குவதில் சிறந்த நூல், பிரார்த்தனை; கட்டுரை வடிவில் அமைக்கப் பெற்ற சீரிய நூல்.

ஒரே மூச்சில் படித்து முடிக்கும் விதத்தில் நயமும் நடை அழகும் அமைந்திருக்கும் நல்ல நூல்; வாழ்க்கை முழுவதிற்கும் பயன்படும் ஆழமான நூல்.

நம் அனைவருக்கும் தேவையான நூல்! என்பதைத் தெரிவித்து அடிகளாரின் அருட்பணியினைப் பெரிதும் வாழ்த்துகிறேன்...வணங்குகிறேன்.

இந்நூலைச் சீரிய முறையில் வெளியிடும் கலைவாணி புத்தகாலய உரிமையாளர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
இராம வீரப்பன்

**தி. நகர்**
**சென்னை—17**

## பாராட்டுரை
## (திருவருட் சிந்தனை)

**முனைவர், தருமையாதீனப் புலவர்**
**கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ., பிஎச்டி.,**
**முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.**

காலம் என்பது அருவப் பொருள். அது உலகியல் நிகழ்வதற்கு ஏதுவாகக் கதிரவன் முதலிய அளவைகளால்

கூறுபட்டு நாள், திங்கள், ஆண்டு எனக் கணக்கிடப்பட்டு காட்சி அளிக்கின்றது. அக்காட்சி கண்ணுக்கு இனிமை தரினும், கருத்திற்கு இனிமை தருவதில்லை. காரணம் அவ்வாறு கழியும் நாள், திங்கள், ஆண்டுகளெல்லாம் உயிரினங்களின் வாழ்நாளை அறுக்கும் வாளாக அமைந்து விடுகின்றன.

ஆதலால்தான், அறிஞர்களும் அருளாளர்களும் இளமையாக்கை, செல்வம், பொருள் அனைத்தும் நிலை யாமையுடையவை என அறிவுறுத்தினர்.

நிலையாமையை உணர்வதன் வாயிலாக நிலையுடை யனவற்றை நாடவேண்டும் என்றும் வற்புறுத்தினர். அவ்வாறு வற்புறுத்திய அறிவுப் பெட்டகமே நமக்குக் கிடைத்திருக்கும் நீதி நூல்களும் அருள் நூல்களுமாகும்.

இவ்வாறு அவ்வப் போதெல்லாம் சான்றோர்கள் அறி வுறுத்திருப்பினும் மனித இனம் அவற்றை மறந்தும் துறந்துமே பெரிதும் வாழ்கின்றது.

ஆதலால்தான் மெய்யுணர்வு உடைய சான்றோர்கள், அருளாளர்கள் மேன் மேலும் அரிய சிந்தனைகளை ஊட்ட வேண்டியவர்களாயினர்.

இவ்வாறாய அரிய சிந்தனைத் தேக்கமே, இந்நூலாக மலர்ந்துள்ளது. ஓர் ஆண்டிற்குரிய 366 நாட்களிலும் நாளும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுமாறு கொள்ளத் தக்க சிந்தனை களைத் தந்தருள வேண்டுமென இறைவனை நோக்கி விண்ணப்பிக்கப் பெற்றுள்ளது.

இவ்வரிய சிந்தனை மணிகள் திருக்குறள், திருமறைகள் முதலிய அரிய கருத்துரைகளால் கோர்க்கப் பெற்று ஒளி பெற்றுள்ளன. இவை மனித இனம் நாளும் நினைந்து நன்றாக வாழவும் உயரவும் வழிகாட்டித் தருவன.

இவ்வரிய சிந்தனைத் தேக்கத்தை வழங்கி அருளிய வர்கள் தவத்திரு அடிகளார் அவர்கள் ஆவர். அவர்கள் நாளும் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் உயர் தவச்சீலர் ஆவர்.

கற்றோர் அறியா அறிவும் கற்றோர்க்குத் தாம் வரம் பாகிய தலைமையும் பெற்றவர்கள். திருவண்ணாமலை ஆதீனத்தின் அருட்குரவராக விளங்கும் அரிய பேறு, உடையவர்கள்.

என் கடன் பணி செய்து கிடப்பதே எனும் அருளுரையைத் தம் வாழ்வின் உயிர்ப்பாகக் கொண்டு இலங்கும் உயர் பேரருளாளர் ஆவர்.

திருவருள் உள்நின்று உணர்த்த எழுந்த சிந்தனைகள் ஆதலின் இந்நூல் 'திருவருட்சிந்தனை' என்னும் பெயருடன், வெளிவருகின்றது. நாளும் இச்சிந்தனைகளை உளம் கொள்ளவும் அதற்குத்தக நிற்கவும் திருவருள் முன்னின்று அருளுமாக.

இச்சீரிய நூலை வெளியிடும் அன்பர் பாராட்டுக்குரிய கவிஞர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் ஆவர்.

அடக்கம் மிகுந்த நல்ல எண்ணத்தோடு இத்தகைய பணியை மேற்கொண்டு செய்து உதவும் அருமை அன்பர் கவிஞர் சீனி. திருநாவுக்கரசு அவர்களுக்கு தமிழுலகம் என்றும் கடமைப்பட்டதாகும்.

மன்றுளார் அடியார் அவர் வான்புகழ் நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

**திருப்பனந்தாள்.** கு. சுந்தரமூர்த்தி

# 14. தமிழமுது

**1988 டிசம்பர்**

## மதிப்புரை

**டி. வி. வெங்கட்டராமன், I.A.S.**

தமிழ் மொழி தொன்மை வாய்ந்த மொழி. தமிழ் மொழியின் சிறப்பை அளவிட்டுக் கூற இயலாது. மிக

நுண்ணிய எண்ணங்களுக்குச் சொல்லுருவும், பேச்சுருவும் தரும் ஆற்றல் படைத்த மொழியாகும். சங்கப் புலவர்கள் அகத்தையும் புறத்தையும் படமிட்டுக் காட்டிய பெருமை தமிழ் மொழிக்கேச் சாரும். தமிழை அவர்கள் மொழியாகக் கையாண்டதாலேயே இந்தச் சாதனையைப் புரிய முடிந்தது. அவர்களுக்குப் பின்னால் வந்த நால்வர்களைப் போன்ற ஒப்பற்ற இறையுணர்வாளர்கள் தமிழ் மொழியையும், ஆன்மீகத்தையும் வளர்த்த பாங்கினை உலகு அறியும். ஆழ்வார்களும் தங்களுடைய திருப்பாசுரங்களால் தமிழ் மொழியின் தேனினும் மிக்க இன்பத்தை உலகிற்குப் பகிர்ந்து கொடுத்தார்கள். திருக்குறளை அருளிச் செய்த திருவள்ளுவரால் தமிழ் மொழி உயர்ந்தது. தமிழ் மக்கள் உயர்ந்தனர். கம்பன் தமிழ் மொழியைக் கொண்டே பாமர மக்களும் கவிதை நயம், இறையுணர்வு, ஆன்மீகப்பற்று ஆகியவற்றின் உச்சிக்கிளையை அடையச் செய்தான். தமிழ் மொழியின் சிறப்பைப் பற்றி இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம், முடிவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் சற்றேறக்குறைய நூற்று ஐம்பதே பக்கங்களில் தமிழ் மொழியின் பெருமையைத் தெளிவாக்கியுள்ளார். அதை அவராலேயேதான் சாதிக்க இயலும். அவர் கையாண்ட முறைகள் போற்றத்தக்கவை. தமிழ் மொழி தமிழர் வாழ்வுடன் ஒன்றிச் செல்வதைச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். தமிழனுக்கு என்று இருந்த பண்பாடும், நாகரிகமும், நெறியும் இன்று தமிழ் இலக்கியக் குவியலில் நிரம்பிக் கிடக்கின்றன. ஒரு காலத்தில் அந்தப் பண்பாடும், நாகரிகமும், நெறியும் தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்வில் பின்னிக் கிடந்தன. இன்று அவை களுக்கு ஏட்டளவிலே, பேச்சளவிலே, மட்டும் போற்றுதல் நடந்து வருகின்றது. இதை நமக்கு எடுத்துக் காட்டி தமிழ்

மக்களின் பெருமை தமிழ் மொழியின் வளர்ச்சியின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று தெரிவித்து தவத்திரு அடிகளார் தமிழ் இலக்கியத்தில் உள்ள சிலவற்றை மட்டுமே நம் கண்கள் முன் ஓவியங்களாக நிறுத்தி நம்மையெல்லாம் மகிழ்விக்கச் செய்துள்ளார். தவத்திரு அடிகளாருடைய தமிழ் அறிவு மிக ஆழமானது. தமிழ் மக்களுடைய பண்பாட்டில் அவருடைய ஈடுபாடு மிகச் சிறந்தது. தமிழ் இலக்கியம் நமக்குத் தரும் ஆன்மீக நெறியில் அவருக்கு உள்ள பற்று யாவரையும் ஈர்க்கத்தக்கத் திறமைவாய்ந்தது. அவருடைய எழுத்தின் நடை சிந்தனைத் தெளிவைக் காட்டுகின்றது. இத்தனையும் மனதில் வைத்து தமிழ் அமுதினைப் படிக்கும் பெரியோர் நல்ல பயன் பெறுவர். ஐயமில்லை.

இந்த நூலின் பதிப்பாசிரியர் "அன்புக்கொண்டல்" திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் பல ஆண்டுகளாக அவருடைய சொந்த நிறுவனமான கலைவாணி புத்தகாலயத்தின் மூலம் தமிழுக்கும், ஆன்மீகத்திற்கும், எளிமையுடனும், நேர்மையுடனும் திறம்பட பணியாற்றி வருகின்றார்கள். அவருடைய அன்புணர்வினையும், மொழிப் பற்றினையும், இறைநெறி மீது உள்ள ஆழ்ந்த நம்பிக்கையையும் பல நண்பர்கள் நன்கு அறிவார்கள். சுயநலம் பாராது, லாப நோக்கின்றித் தமிழ் இலக்கியம் எங்கும் பரந்து நிற்க வேண்டும் என்கின்ற ஒரே கொள்கையுடன் தரமுள்ள நூல்களை, பல இன்னல்களுக்கிடையே பிரசுரித்து வருகின்ற முயற்சி எல்லோராலும் பாராட்டத்தக்கது. எளிமையே உருவான அவருடைய குடும்பத்தில் இருக்கும் எல்லோருமே இந்தத் தூய்மையான பணியில் தங்களை ஈடுபடுத்தி வருகின்றார்கள். அவருடைய தொண்டு உணர்வினைத் தமிழ் கூறும் நல்லுலகம் பாராட்டி வரவேற்பது கடமையாகும் என்று கருதுகிறேன்.

**டி.வி. வெங்கட்டராமன், I.A.S.**

## அணிந்துரை
## (தமிழமுது)

அமுதம் உண்டாரை உடல் அளவில் வாழ்விப்பது என்பர். தமிழ் அமுதோ, பருகினோரை உள்ளத்தால் வாழ வைப்பது, உள்ளத்தால் மட்டுமா? உணர்வாலும் அறிவாலும் வாழவைப்பதும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தமிழ் அமுது என்னும் நூலும் அத்தகைய சிறப்பு வாய்ந்தது.

எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அதை சமுதாய நோக்கில் காண்பது அடிகளாரின் தனி இயல்பு. அதை இந்நூலில் பரக்கக் காண்கிறோம். தாம் எடுத்துக் கொண்ட தலைப்புகளில் எல்லாம் சமுதாய நலனையே தலையாகக் கொண்டு கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். "எந்த ஒன்றும் வாழ்வுக்குரிய சாதனமேயாம். சாதனங் களையே சாத்தியங்கள் என்று நம்புவதும் அதற்காகவே வாழ்வதும் அறிவுடைமையாகாது"..'வாழ்க்கை' என்பது கடமை என்ற செயற்பாட்டுக்காகவே (பக்.32) தமக்குரிய கடமைகளைச் செய்தலையே திருவள்ளுவர் 'தவம்' என்று கருதுகின்றார் (பக்.34). இத்தகைய அடிகளாருடைய கருத்துக்கள், சமுதாய நலனில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டிற்கும் அருள் நோக்கிற்கும் சான்றுகளாகும்.

"வாழ்வியலுக்கு அப்பாற்பட்ட நடை முறைச் சாத்திய மற்ற ஒழுக்க நெறிகளைத் திருக்குறள் கூறவில்லை. வாழ் வாங்கு வாழ்தல் என்பதையே திருக்குறள் சிறந்த அறமாகப் பாராட்டுகிறது" என்று கூறுவதன் மூலம் திருக்குறள் ஓர் வாழ்வியல் நூல் என்பதை நிலை நிறுத்துகிறார்.

அறியாமையும் கொடிய வறுமையும் இருக்கும் நாட்டில் சமத்துவமும், ஒருமைப்பாடும் நிலவா; மனித மாண்புகள் மலரா. மனிதே வாழ்வே சிறக்காது. ஆகவே, ஒரு நாட்டில் வறுமையையும், அறியாமையையும் ஒழிக்கும் வரையில், அங்கே உள்ள மக்கள் அனைவரும் சமம் என்பது

வெளிப்பூச்சு; வெற்று ஆரவாரம். இக்கருத்துக்களைத் தமக்கே உரிய பாணியில் அடிகளார் கூறுவதை "பாரதியின் சமுதாயம்", "பாரதியின் சக்தி வழிபாடு" என்ற தலைப்புகளில் அமைந்த கட்டுரைகளில் காண்கிறோம். "பொருளாதார சமத்துவம் இல்லாத நாட்டில் அறம் வளராது; அன்பு வளராது. பாரதியின் 'எல்லாரும் ஓர் விலை' என்ற இலட்சியம் நிறைவேறினால்தான் இந்திய விடுதலை முழுமை பெறும்," என்று அடிகளார் கூறுவது, அரசியல் வாதிகளுக்கு அவர்கள் செய்யும் எச்சரிக்கையாகும். "பாரதியின் கவிதைப் பயணம் நாட்டு வரலாற்றில் நடக்க வேண்டிய பயணம்; நடந்து விட்ட பயணம் அல்ல" என்று அடிகளார் கூறுவது சமுதாயத்தில் நாம் செயலாற்ற வேண்டிய தேவையையும் திக்கையும் காட்டுகிறது.

வெறும் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு, அறிவை அடகு வைத்து தனிமனித வழிபாட்டு எல்லை மீறி விரும்பித் தாழ்ந்து கிடக்கும் தமிழர்களுக்கு இத்தகைய அறிவுபூர்வமான கருத்துக்கள், ஆக்கத்தை அளித்து அவர்களை வாழ்க்கையில் முன்னேறச் செய்யும்.

இத்தகைய சிறந்த கருத்துக்கள் அடங்கிய தவத்திரு குன்றக்குடி அடிகளாருடைய நூலின் பதிப்பாளர் கலை வாணி புத்தகாலயத்தின் உரிமையாளர் திரு. சீனி. திருநாவுக் கரசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இனிய, பண்புகளும், எளிய வாழ்க்கையும் அன்பும் அறநோக்கும் கொண்ட திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் இத்தகைய முற்போக்குக் கருத்துகள் கொண்ட மேலும் பல நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அளிப்பாராக.

U-1, இலாயிட்சு குடியிருப்பு,
இலாயிட்சு சாலை,
சென்னை-14.

வீ. செ. கந்தசாமி,
தலைவர்,
சென்னை மாவட்டத்
திருக்குறள் பேரவை.

ஒ-XVI.33.

# 15. அப்பர் விருந்து

1990 சூன்

## முன்னுரை

டாக்டர் வை. இரத்தினசபாபதி,
பேராசிரியர் மற்றும் தலைவர், சைவ சித்தாந்தத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

'அப்பர் விருந்து' என்னும், அரிய பெயரில் முகிழ்க்கும் இந்நூல் தவத்திரு குன்றக்குடி அடிகள் பெருந்தகையின் அறுபதாண்டுகளாக வளர்ந்து வரும் செயல்நிலைச் சிந்தனையின் அரியதொரு களஞ்சியமாகும்.

'ஏழில் இருபது' என்பது அடிகள் சமுதாயத்தொண்டில் அடியெடுத்து வைத்த நாள்தொட்டு இன்று வரை அதாவது அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழகத்தின் மூலை முடுக்குக்களெல்லாம் முழங்கி வந்த சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனையின் முதல் நின்ற திருவருள் முழக்கமாகும். சிந்தனைக் கருவூலமாக இருந்த அது செயல்நிலை மறுமலர்ச்சித் திட்டமாக மாறி நிற்பதை இக்கட்டுரையிற் காண முடிகிறது.

தவத்திரு அடிகளுக்கு இரு பக்கங்கள் உண்டு. அடிகள் தம் சிந்தனை வளத்தை அறியவேண்டும்; செயல் வளத்தை அனுபவிக்க வேண்டும்; அடிகள் தம் செயல்முறைப் புரட்சியை சமுதாய மறுமலர்ச்சித் திட்டச் செயற்பாட்டை உலகம் வியக்கிறது. ஆனால் சிந்தனைப் புரட்சியை இன்று ஒருவரும் முழுமையாக அறிந்து மகிழவில்லை.

சிந்தனையையும் செயல்முறைத் திட்டத்தையும் ஒருமுகப்படுத்தி வெற்றி கண்ட தனிப்பெருமை அடிகள் பெருந்தகைக்கு உண்டு.

ஏழில் இருபதைக் கண்டது சிந்தனைக் கருவூலம் தந்த புரட்சி. ஆனால் இருபதில் ஏழைச் செயல்முறைப்படுத்தி சமுதாயச் செயல்முறைப் புரட்சியைக் கண்டது அடிகள் பெருந்தகையின் அற்புத வெளிப்பாடு.

சமயப் புரட்சியில் தலைசிறந்து நின்றது குன்றக்குடி என்பது அன்றைய வரலாறு. சமுதாயப் புரட்சியில் 'குன்றக் குடித் திட்டம்' என்ற ஒன்றை உருவாக்கி, உலகம் வியக்கக் கூடிய வகையில் செயல்முறைப்படுத்திக் காட்டியது அடிகள் பெருந்தகை உருவாக்கிய இன்றைய வரலாறு.

'குன்றைக் குருமணி' என நாம் நாளும் நினைந்து வணங்கும் தெய்வம், திருவருளும் குருவருளும் இணைந்து நின்ற திருவுரு என நின்ற வழிபடு தெய்வமாம். அடிகள் பெருந்தகை இந்நூலுள் அருளிய பல்வேறு செய்திகளை எடுத்து எழுதினால், விமரிசித்தால் அது ஓர் ஆய்வு நூலாகும். சுருக்கமாக இரண்டொன்றைத் தருதல் வேண்டும்.

"நடலையல்லோம்" என்ற அப்பரடிகள் திருவாக்குக்கு அடிகள் பெருந்தகை அருளிய அனுபவ உரை பக்கம் 22, "மக்களுக்காகக் கோயில் கட்டுவதை விட, மக்களாகவே கோயில் கட்டியிருந்தால்" என்ற எழுத்துக்கு உரிய கருவூலச் சிந்தனையை அறிவால் அறிவதை விட அனுபவத்தால் உணரும் போது கண்ணீர்த் துளி சிந்தாமல் இருக்க முடியாது.

அடிகள் பெருந்தகை உருவாக்கிய 'குன்றக்குடித் திட்டத்தின்' 'சமயச் சமுதாயச் செயற்பாட்டு விரிவாக்கத் திட்டத்தின்' ஒருவகைக் கையேடு (GUIDE BOOK) என விளங்குவதே 'அப்பர் விருந்து' என்ற நூல் என்பதைக் குன்றக்குடித் திட்டத்தைச் சென்று கண்டவர் உணர்வர். அத்தகைய செயற்பாட்டுத் திட்டக் கருவூலமாக விளங்கும் 'அப்பர் விருந்து' மக்கள் பயன்படுத்த வேண்டிய அருள் நூல்.

அடிகள் பெருந்தகையின் சமுதாய மறுமலர்ச்சித் திட்டக் கருவூலத்தை நூல் வடிவமாக வெளிக்கொணர்ந்த "திருக்குறள் நெறித் தோன்றல்" "பாநயப் பாமணி" சீனி. திரு

நாவுக்கரசு அவர்கள் அடிகள் பெருந்தகையின் நூல்கள் பல வற்றைக் கலையழகு மிளிர வெளியிட்டு வருபவர். அவர்தம் தூயதொண்டு வாழ்ந்து வளம் சிறப்பதாகும்.

வை. இரத்தினசபாபதி

## அணிந்துரை
## (அப்பர் விருந்து)

**கவிஞர் வீ.செ. கந்தசாமி, I.R.S.,**
**தலைவர், சென்னை மாவட்டத் திருக்குறள் பேரவை.**

'மக்களுக்கே எல்லாம் என்பதே போல், 'சமுதாயத் திற்கே நாம்' என்ற சீரிய கொள்கையின் அடிப்படையில் நற்பணிகளாற்றி வரும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அப்பர் விருந்து நம் சிந்தனையைத் தூண்டும் மற்றுமோர் படைப்பாகும்.

சமுதாய சீர்திருத்தத்திற்குத் தகுதியுடைய பெரியார் அப்பரடிகள் (பக். 10) என்பதைப் பல்வேறு காரணங்களைக் காட்டி இந்நூலில் நிறுவியிருக்கிறார்கள். "அப்பரடிகள் புரட்சிக்காரர்; புதிய புரட்சியை உண்டாக்கினார்" (பக். 12) என்று கூறும் அடிகளார். சமுதாய அரசியல் சீர்திருத்தங் களுக்கு அப்பரடிகள் வகுத்த வழிகளும், கடைப்பிடித்த முறை களும் இன்றும், ஏன், என்றும் எப்படிப் பொருத்தமுடையன என்ற விளக்கத்தை அளிக்கிறார்கள். அந்த நோக்கில், யுகசந்திப்புகளும் இந்நூலில் நிகழ்கின்றன. அப்பர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டையும், புதுமை நிறைந்த, அறிவு பெருகிய மறுமலர்ச்சியும் சீர்திருத்தமும் பொங்கி வழியும் நூற்றாண்டாகக் கருதப்படும் இருபதாம் நூற்றாண்டையும் தம் நூலில் அடிகளார் சந்திக்க வைக்கிறார்கள். இது அடிகளார் அவர்களுக்கே அமைந்த தனித் திறமை; அரிய கலை.

மக்களால், மக்களுக்காக, மக்களுடைய ஆட்சி இம் மண்ணுலகிலிருந்து அழியாது என்ற, சென்ற நூற்றாண்டில்

வாழ்ந்த ஆபிரகாம் லிங்கனின் கருத்துக்கள் ஏழாம் நூற்றாண்டிலேயே அப்பரடிகள் வாக்கில் "எமக்காக ஆட்சியேயன்றி, ஆட்சிக்காக நாமல்ல" என்ற விடுதலை முழக்கத்தை படிக்கும் போது மெய்சிலிர்க்கிறது.

சமுதாயத்திற்கே எல்லாம் சொந்தம் என்ற கொள்கையில் உறுதியுடைய அடிகளார் அவர்கள், கோயில்களும் சமுதாய உடைமையாக வேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரிவிக்கிறார்கள். எப்படி? "கோயில்களை மக்கள் கட்ட வேண்டும்-இருக்கும். "ஆட்சியில், சமுதாயச் சீரமைப்பு பணிகளில் மக்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொதுமைச் சமுதாயத்திற்கு வழிகோல இதுவே அடிப்படை. இவை எல்லாவற்றிற்கும் மணிமுடியாக, "மனிதனைச் சமுதாய மனிதனாக்க வேண்டும்" (பக். 34) என்பது அடிகளார் அவர்களின் பெரு விருப்பம். 'என்னுடையது' 'நம்முடையது' ஆனபிறகே வாழ்க்கை புகழுடையதாக, சிறப்புடையதாக அமைகிறது. (பக். 115) என்ற கருத்திலும் பொதுமை நலம் இழையோடக் காண்கிறோம்.

உலகத்தின் முதல் பொதுவுடைமைத் தலைவன் இறைவனே (பக். 108), அந்த இறைவனில் மனிதன் ஒன்ற வேண்டும் (பக். 110). அறிவியல் சார்ந்த வழிபாட்டினால் இது இயலும் என்று விளக்கிக் கூறும் இந்நூல் இன்றைய சமுதாயத்திற்கு மிக மிகத் தேவை. இந்நூல் காலத்தை வென்று நிற்கும். தமிழ்நாட்டின், சிந்தனைச் சுரங்கமாக விளங்கும் தவத்திரு அடிகளாருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. ஆன்றமைந்த சான்றோராகிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் நூல்களை வெளியிடுவதில் பெருமை கொள்ளும் இனிய பண்புகளும் எளிய வாழ்க்கையும், அறநோக்கும் கொண்ட "திருக்குறள் நெறித்தோன்றல்" திருமிகு **சீனி திருநாவுக்கரசு** அவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றி பாராட்டுகிறது.

**வீ. செ. கந்தசாமி,** I.R.S.

## நானென் சொல்வேன்?
## (அப்பர் விருந்து)

*"அமுதமழை பொழிகின்ற முகிலோ?; தென்றல்*
*அழகுநடை பயிலவரும் பொதிகை ஊற்றோ?*
*கமழுமண மலரறியா நறையோ? இன்பக்*
*காவிரியோ? கவிமுழக்கப் பறையோ? நெஞ்சக்*
*குமுதமலர் திறக்குமொளி நிலவோ?" என்று*
*குளிர்தமிழின் உரைகேட்போர் வியக்கப் பேசும்*
*நமது தவத் திருஅடிகள் உரையின் மாண்பை*
*நவிலுதற்கு வல்லவரார்? நானென் சொல்வேன்?*

புலவர் புலமைப்பித்தன்

# 16. சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்

1990 செப்டம்பர்

## அணிந்துரை

### டி. வி. வெங்கட்டராமன், I.A.S.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரைத் தமிழகத்தில் தெரிந்து கொள்ளாதவர்கள் இருக்க முடியாது. நீண்ட கால மாகத் தமிழுக்கும், சைவத்திற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், ஏழைமக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அடிகள் ஆற்றி வரும் தொண்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. சமயப் பணிகளில் மட்டும் தனது பங்கினை நிறுத்திக் கொள்ளாது, நலிவுற்ற சமுதாயம் வாழ்க்கையில் வளம் பெற்று, முன்னேற்ற நீரோட்டத்தில் முழுமையாகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்கின்ற சீரிய நோக்கம் கொண்டவர் அடிகளாவார். சிறந்த சொற்பொழிவாளர். பல ஆழ்ந்த கருத்துக்களை மிகத்

தெளிவான வகையில் விளக்கி மக்கள் மனத்தைக் கவரக் கூடிய ஆற்றல் படைத்தவர். சிறந்த அறிஞர், சமயக் கோட் பாடுகளை நன்கு உணர்ந்து கொள்வதோடு மட்டும் நிற்காமல் அவற்றைத் தனது வாழ்க்கை நெறியாக்கிக் கொண்டு சிறந்த பண்புகளைப் பெற்றவராகிக் காண்போ ரையும், கேட்போரையும் அந்தப் பண்புகளால் ஈர்க்கும் வல்லமை பெற்றவர்கள்.

அத்தகைய பெரியார் பல ஆண்டுகளாகச் சைவத்தின் பால் ஆற்றிய சொற்பொழிவுகள், எனது அருமை நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களுடைய சீரிய முயற்சியால் அழகான நூலாக வெளிவருகின்றன.

சைவத்திற்கப்பால், சமயம் வேறொன்றில்லை, சைவ சமயமே சமயம் என்று ஆங்காங்குச் சான்றோர்கள் ஒலியை எழுப்பி வந்தாலும், மக்கள் எளிதில் படித்து புரிந்து கொள்ளக் கூடிய அளவிற்குச் சைவ சமயத்தின் கருத்துகள் நூல்கள் மூலமாகப் பரப்பப்படவில்லை என்பதே அடியே னுடைய கருத்தாகும். சைவத்தின் சிறந்த உண்மைகளை ஆழ்ந்து உணர்ந்த பெரியோர்கள் நம்மிடையே பலர் இருக் கின்றார்கள். நாள்தோறும் பல இடங்களில் சைவ சமயச் சொற்பொழிவுகள் நடந்து கொண்டுதான் வருகின்றன. எனினும், இத்தகைய நிகழ்ச்சிகளில் சிலரே பங்கேற்கின்றனர். குறிப்பாக, இளைய சமுதாயத்தினரை இந்த நிகழ்ச்சிகளில் காண்பது அரிதாகிவிட்டது. இதற்குக் காரணம், நுட்பமான கருத்துகளைத் தெளிவாக எடுத்துரைத்துப் படித்தவர்கள் அவற்றின்பால் நாட்டம் செலுத்தும் வகையில் நம்மிடையே நூல்கள் தேவையான அளவிற்கு வெளி வரவில்லை.

இந்தக் குறையை ஒரு வகையில் அடிகளாருடைய இந்த நூல் நிறைவு செய்கின்றது என்று சொல்லலாம். சைவ சித்தாந்த வரலாறு மிக விரிவாகவும், தெளிவாகவும் உள்ளத்தில் பதியும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது. சைவ சித்தாந்த கருத்துகள் உண்மையில் தெரிந்து கொள்வதற்கு

கடினமானவையல்ல. அன்றாட வாழ்க்கையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் சைவம் கூறும் பல மார்க்கங்களில், தெரிந்தும் தெரியாமலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சிவ வழிபாட்டினைச் செய்து வருகின்றார்கள். சைவ தத்துவ விளக்கம் அவர்களுக்கு இயல்பாகவே கிடைக்கக்கூடிய ஒன்று. அடிகளார் சைவ சித்தாந்த தத்துவங்களை விளக்கி யிருப்பது அறிஞர்களுடைய எதிர்பார்ப்பையும் ஈடுசெய்யும்.

சைவம் ஏட்டில் எழுதி வைக்கப்பட்ட சமயமன்று. பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் உணர்வில் கலந்த ஒன்றாகும். பல உயர்ந்த கோட்பாடுகளும் பண்பாடுகளும் தமிழ் மக்களிடையே பரவித் தமிழ் மக்களின் ஆன்மீகத்திற்கு அடிப்படையாக இருந்து வருவதும் சைவ சமயமே. உண்மைச் சைவர்கள் தங்கள் எளிமையான வாழ்க்கையாலும் உயர்ந்த பண்பாடுகளாலும் மக்கள் மையத்தில் எடுத்துக்காட்டாக இன்றும் விளங்கி வருவதைப் பார்க்கின்றோம். சமுதாய மேம் பாட்டிற்குச் சைவம் இதுகாறும் எத்துணை தொண்டாற்றி யுள்ளது என்பதை இங்குக் கூறத்தேவையில்லை.

இவற்றையெல்லாம் எளிதில் விளங்கும் வகையில் இங்குத் தரப்பட்டுள்ள அடிகளாரின் கருத்துகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. இவற்றைப் படிக்கும் பொழுது தமிழனாகவும், சைவத்தைச் சார்ந்தவனாகவும் ஒருவன் இருப்பது எத்தகைய பேறு பெற்ற ஒன்று என்கின்ற உணர்வினைப் பெறலாம்.

இத்தகைய அரியதொரு நூலை வெளிக்கொணர முயற்சிகளை எடுத்துக் கொண்ட திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. வணிக நோக்கில் நூல்களை அவர் வெளியிடுபவரல்லர். தமிழிலும், சைவத்திலும் அவருக்குள்ள ஆழ்ந்த பற்றின் காரணமாக இத்தகைய பணிகளை அவர் ஆற்றி வருகின்றார். அவருடைய அன்பு உள்ளமே இவற்றுக்கெல்லாம் ஒரு பெரிய தூண்டு கோலாக அமைந்து அவரை இயக்கி வருகின்றது.

அவருடைய முயற்சிகள் வெற்றி பெற எல்லாம் வல்ல சிவபெருமானை நான் வேண்டிக் கொள்கிறேன்.

டி. வி. வெங்கட்டராமன்

சென்னை
23–8–90

## மதிப்புரை
## (சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்)

சி. அருணைவடிவேல் முதலியார்

*"சைவத்தின் மேல், சமயம் வேறிலை;*
*அதில் சார் சிவமாம்*
*தெய்வத்தின் மேல் தெய்வம் இல்"*

—சைவ எல்லப்ப நாவலர்.

என்பதும்

*"சைவ சமயமே சமயம்;*
*சமயா தீதப் பரம் பொருளைக்*
*கைவந் திடவே மன்றுள் வெளி*
*காட்டும்; இந்தக் கருத்தைவிட்டுப்*
*பொய்வந் துழலும் சமயநெறி*
*புகுத வேண்டா"*

—தாயுமானவர்

என்பதும் சைவப் பெரியோர் வாக்குகள். இவற்றை இக்காலத்தில் நடுவு நின்று ஆராயும் ஆராய்ச்சியாளரும் 'உண்மை'யென உடன்படுகின்றனர். இந்திய நாட்டு வரலாறு கூறுவோரும், 'இந்நாட்டின் பண்டைச் சமயம் சைவமே' என்கின்றனர்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இச்சமயத்தின் தத்துவமே **'சைவ சித்தாந்தம்'**–என்பது பலரும் அறிந்தது.

தமிழ்நாட்டின் தொன்மைச் சமய தத்துவமாகிய சைவ சித்தாந்தம், சென்ற 7 அல்லது 8 நூற்றாண்டுகளுக்கு முன்பு

தொடங்கிச் **சைவ சந்தனாசாரியர்களால்** அளவியல் முறையில் மிக நுண்ணிதாக வகுத்தும், விரித்தும் **தமிழ் மொழியிலே** யாவரும் உணரும் வண்ணம் விளக்கப்பட்டது. 'அங்ஙனம் விளக்கப்பட்ட **நூல்கள்** இவை'-என்பதையும், 'அவை வழியாக இத்தத்துவ ஞானத்தை உலகிற்கு அளித்து வரும் **ஆதினத் திருமடங்கள்** இவை' என்பதையும் இந்நூலுள் அறியலாம்.

சைவ சித்தாந்தத்தை எளிய முறையில் விளக்க இக் காலத்தில் சில நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எதைக் குறித்த போதிலும் 'அதனால் சமுதாயத்திற்கு என்ன நன்மை என்று நோக்கும் நோக்கத்துடனே பார்க்கும் காலம் இக்காலம், அம்முறையில், 'சமய தத்துவங்களில் சைவ சித்தாந்தமே சமுதாயத்தின் உண்மையான மேம்பாட்டினைத் தருவது'-என்னும் உண்மையினைப் பல வகையில் உணர்த்துவது, **"சைவ சித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்"** என்னும் இவ்வுரை நடை நூல்.

இதனை இந்நாட்டிற்கு அளித்தருளுபவர்கள் மேற் குறித்த சைவ ஆதீனங்களுள் ஒன்றாய்ப் பாண்டி நாட்டில் விளங்கும் **குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தில்** இது பொழுது அருளாட்சி செலுத்திவரும் **திருப்பெருந்திரு தெய்வ சிகாமணி தேசிக பரமாசார்ய சுவாமிகளவர்கள்** ஆவார்கள். **'தவத்திரு குன்றக்குடி அடிகளார்'** எனத் தமிழகம் இவர்களை அழைத்து மகிழும்.

இவர்கள், 'இயல்பிலே சமுதாய நலத்தையே சிறப்பாக நோக்கும் நோக்குடையவர்கள்' என்பது நாடறிந்த ஒன்று. எனவே, இவர்கள் இத்தகையதொரு நூலைச் சமுதாயத்திற்கு ஆக்கி வழங்கியருளல் இயல்பே.

'சமுதாய மேம்பாட்டிற்கு நற்றுணையாவது சைவ சித்தாந்தமே' என்பதை அறிவியல் முறையில் இவர்கள் நிறுவி யிருப்பதைத்தான் யாவரும் ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

நூலின் கருப்பொருளை இவர்கள் இதன் முடி நிலையாக வைத்து, அதற்கு முன்னே அதுபற்றிய வரலாற்றையும், அதன் விளக்கத்தையும் தந்திருப்பது நல்லதொரு முறையாகும். நூலில் சில புதியனவான கருத்துக்களையும் அளித்துள்ளார்கள்.

இன்ன பல சிறப்புக்களை அறிஞர்கட்கு நல்கியருளும் அடிகளாரது அருட்செயலுக்குத் தமிழுலகமும், சிறப்பாகச் சைவ உலகமும் நன்றி செலுத்திப் பயன்கொள்ளும் கடப்பாடுடையன. தமிழ்ப் பண்பாட்டிற்குப் புகழ் சேர்க்கும் பயனுள்ள நூல்களை மட்டுமே வெளியிடும் பதிப்பாசிரியர் கவிஞர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களின் தொண்டு உள்ளத்தை பாராட்டுகிறேன். வேண்டும் திருவருள்.

இன்னணம்,
சி. அருணைவடிவேல் முதலியார்

**தத்துவ மையம்**
**காஞ்சிபுரம்–3**
**27–8–1990**

# 17. Tirukkural A world literature

1991 December

**Dr. K. VENKATASUBRAMANIAN** Mylapore
M.A.,B.L., B.T., Ph.D., Madras-4
Former Vice-Chancellor
Central University, Pondicherry

## FOREWORD

My friend Thiru Seeni Thirunaavukkarasu of the reputed Kalaivaani Puthakalayam has done yeoman service to Tamil

literature by publishing the great treatise of that noble Tamil savant the learned Head of the Kundrakkudi mutt.

Thavathiru Adigalar has been propagating for a long time the greatness of the inimitable Thirukkural and I had the privilege of associating myself with this noted sage of starting a campaign to make Tirukkural the National Book of India.

But in this present publication Thavathiru Kundrakudi Maha Sannidhanam, has gone one step further by declaring the immortal kural as an unparalleled literary marvel of the World.

Adigalar rightly emphasizes the role of Tirukkural as a call for social reform. The greatest maladies affecting the world today are illiteracy and poverty. Two thousand years ago the great Tamil bard Tiruvalluvar turns the spot light on these and his emphasis on removal of illiteracy and poverty marks this greatest of Tamilians as an ancient modern.

In an article on the Religious philosophy of the father of the nation the author brings out clearly the universality of mahatmas religion.

The Kundrakudi rural development project launched by Thavathiru Adigalar had attained All India reputation and even the Union Planning Commission, New Delhi brought out a booklet on this wonderful experiment.

In the article "social aspects of rural development" the author significantly emphasizes the need for proper motivation and his prescription for the ills of rural society is worth a fair trial.

The articles on 'preserving the solidarity of India', 'International peace and harmony' make the author as a strong

Integrationist and one who wants to usher in the International social order.

The essay on 'Thirukkural's message to mankind' again brings out in bold relief the fact that Tirukkural is a world literature, which was the first essay in this valuable collection of essays.

This small book outlines the great mind of the author Thavathiru Kundrakudi Adigalar who has been toiling hard for decades now for social change. As one who had the privelege of closely associating myself in his literacy ventures.

I would like to offer my prayerful congratulations to the author and my thanks to the publisher for bringing out such a timely Publication.

**Dr. K. VENKATSUBRAMANIAN**

**Madras-4**
**21-12-91**

## 18. சமுதாய மறுமலர்ச்சி

**1992 ஜூன்**

### அணிந்துரை

**டாக்டர். த. பெரியாண்டவன், எம்.ஏ.,பிஎச்.டி.,**
**தமிழ் வளர்ச்சி இயக்குநர்,**
**குறளகம், சென்னை-600 108.**

### நல்வரவாகுக

*காலந்தோறும் சமுதாயம் பல மாற்றங்களை ஏற்றும், தள்ளியும் ஏற்றம் பெற்று வருகிறது. மாற்றங்களை அவற்றின் தன்மைக்கேற்ப மறுமலர்ச்சி என்றும், புரட்சி என்றும்*

பெயரிட்டழைக்கிறோம். மாற்றம் இயற்கையாக நிகழும் ஒன்று. இந்த இயற்கை நிகழ்வைத் தடைப்படுத்தும் வல்லாண்மைகளை ஒடுக்கப் பிறப்பவர்கள் எழுதுகோல் வேந்தர்கள். உலகின் மறுமலர்ச்சிகள் பலவற்றில் எழுது கோல்களே உந்து சக்தியாய் உரம் பெற்றுள்ளன.

இத்தகு சீரிய நோக்கில், தமிழ் மாமுனிவர், தவத்திரு அடிகளார் அவர்களின் வானொலிச் சொற்பொழிவுகளை அன்பு நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் சமு தாயத்திற்குப் பயனளிக்கும் வகையில் 'சமுதாய மறுமலர்ச்சி' எனும் அழகான நூலாகப் பதிப்பித்துள்ளார். சென்னை, திருச்சி, மதுரை வானொலிகளில் ஆற்றிய பொழிவுகளின் தொகுப்பே இந்நூல், அளவிற் சிறிதெனினும் ஆற்றலில் பெரியதாய், ஆன்றவிந்தடங்கிய கொள்கை விளக்கமாய்த் துலங்குகிறது இந்நூல்.

சமுதாய மறுமலர்ச்சியில் இலக்கியங்கள், நாட்டுப் பற்று, ஒற்றுமை, உழைப்பு, மதம் சொல்லும் மந்திரங்கள், மோதியின் சிந்தனைகள், சட்டத்தின் ஆட்சி, சடங்குகளைத் தவிர்ப்போம், மனித அன்பு, கிராமங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி, புத்தாண்டுச் சிந்தனைகள், மகாவீரர் பிறந்த நாள் சிந்தனைகள், 'மே' தினச் சிந்தனைகள், எனப் பனிரெண்டு சொற்பொழிவுகள். ஒவ்வொன்றும் நம் சிந்தைக்கு விருந்தாய்; சீரிய கருத்துப் புதையலாய் கை கோர்த்து நிற்கின்றன. காலத்தால் நல்வரவு கூற வேண்டிய கவினார்ந்த முயற்சியை நூல் முழுதும் காணலாம்.

*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே*

எனச் சங்க இலக்கியம் தொடங்கி,

*மாணச் சிறந்ததொரு வாழ்க்கைச் சமுதாயம்*
*படைக்கத் துணிந்தேன் நான் பாதையிலே காணும்*
*தடைக் கற்கள் யாவும் தகர்க்கும் வலிவுடையேன்*

என அண்மைக்கால எழுத்ததாளர்கள் வரை கவிதை, புதினம் எனப் பல துறைகளில் சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்தூன்றப்பட்ட வகைகளைச் சுவையான பாடல்களால் விளக்கும் பாங்கு பாராட்டுக்குரியது. 'மதம் சொல்லும் மந்திரங்கள்' என்னும் பொழிவு, நமக்கு விழிப்புணர்வூட்டி வழிகாட்ட வல்லது.

சீனச் சிந்தனையாளர்களில் கன்பியூசியசை அறிந்திருக்கும் நமக்கெல்லாம், சடங்குகளை எதிர்த்த சீன நாட்டு 'மோதி' என்னும் பேரறிஞரையும், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களையும், இன்று நம்முடன் வாழும் அறிவியல் அறிஞர்களையும் வாழ்வியற் கவிஞர்களையும் இந்நூல் அறிமுகப்படுத்தும் பாங்கும் பாராட்டுக்குரியது. பிறநாட்டு நல்லறிஞர் ஒருவரின் பண்புநலன் பற்றி அறிய வைத்தும் உலக சமுதாய மறுமலர்ச்சிக்கான கவினுறு கருத்துப் புதையலை அளித்ததருளி செயலாற்றும் நூலாசிரியர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் மக்கள் சமுதாயத்தின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள்.

நூல் முழுதும் கருத்துமணிக் கோவையாய் கவிதை நடையாய் காலக் கண்ணாடியாய் மிளிர்கிறது.

நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன். மேலும் பல நூல்களைப் பதிப்பித்தும் படைத்தும் புகழ் பெற வாழ்த்துகிறேன்.

**த. பெரியாண்டவன்**

**சென்னை**
**19–6–92**

# 19. வாழ்க்கை நலம்

1992 டிசம்பர்

## அணிந்துரை

### சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார், தாம் கொண்ட கோலத்திற்கேற்ப தலைசிறந்த ஆன்ம ஞானி. தெய்வ பக்தி யோடு, தேச பக்தியும் கொண்டவராதலால் ஆன்மிகத்தோடு அறிவியலையும் கலந்து சிந்திக்க அவரால் முடிகிறது. பற்றுக்கள் பலவற்றை விட்டு துறவியான அடிகள். தமிழ்ப் பற்றை மட்டும் துறக்காதவராகி, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே தலைமை தாங்க வேண்டுமென்ற கொள்கை யுடையவராகி, அதற்காகப் பாடுபட்டும் வருகிறார்.

அடிகளார் பல்வேறு காலங்களில் பல்வேறு அரங்கு களில் வெளியிட்ட கருத்துக்கள் இந்நூல் வடிவம் பெற்று தமிழர் கைக்கு வருகிறது. அடிகளார் 'மெய்யறிவு' நிலையில் மட்டுமல்லாமல், விஞ்ஞான அறிவிலும் தமிழ் தலைசிறந்து விளங்க வேண்டுமென விரும்புகிறார். அதனை பல்வேறு கோணங்களில் நின்று வெளியிட்டு தமிழர்களுக்கு வழிகாட்டு கிறார்.

அறிவியற் கலைகளைப் பயிற்றுவிக்கும் கோயில்களான பல்கலைக் கழகங்களிலே இன்னமும் தமிழுக்கு இடமில்லை, அதாவது, தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலே அனைத்துப் பாடங்களிலும் தமிழில் போதிக்குங்கால், தமிழில் அறிவியல் நூல்கள் பெருகும். இந்தக் கொள்கையிலே நாங்கள் ஒன்றுபட்டவர்கள். இதனைச் சாதிக்க அரசின் துணை தேவைப்படுகிறது.

அடிகளாரும், நானும் அத்துறையில் ஒன்றுபட இறையருள் கூட்டுவிக்குமாக!

நூலை விரிவாகப் படிக்கப் படிக்க எனது அறிவு விரிவடைகிறது. ஒவ்வொரு தமிழரும் எனது நிலையை அடைய இந்நூல் பயன்படுமாக!

கலைவாணி புத்தகாலயத்தின் உரிமையாளர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் நன்றாகப் பதிப்பித்துள்ளார்.

அடிகளாருக்கு என் மனமுவந்த நன்றி, பதிப்பகத்தாருக்கு என் பாராட்டு.

ம. பொ. சிவஞானம்

**சென்னை–18**
**28–12–92**

## 20. சிந்தனைச் சோலை

**1992–டிசம்பர்**

**கலைமாமணி–தமிழ் மறைக் காவலர்**
**திருக்குறளார், வீ. முனிசாமி**

### பாராட்டுரை

ஆன்மிகம், சமுதாயம், இலக்கியம், அரசியல் இன்ன பிற துறைகளிலெல்லாம் புரட்சிகரமான நல்ல அறிவியல் கருத்துக்களைத் தமிழகத்தில் பரப்பி வருகின்ற தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் ஆழ்ந்த சிந்தனையில் தோன்றிய முத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி "சிந்தனைச் சோலை" என்ற பெயரில் நமது நண்பர் சீனி. திருநாவுக்கரசு அவர்கள் கொண்டு வந்திருப்பது மிக மிக அரிய பணியாகும்.

அன்றும், இன்றும், என்றும் எங்களுடைய போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய தமிழ் மாமுனிவர் தவத்திரு

கு-XVI-34.

குன்றக்குடி அடிகளார் அவர்களின் அரிய படைப்புக் களையும், பாரத ஒருமைப்பாட்டிற்கும், தமிழகப் பண் பாட்டிற்கும் புகழ் சேர்க்கும் படைப்புகளையும் மட்டுமே வெளிக்கொணருகின்ற கலைவாணி புத்தகாலயத்தின் பதிப்பாசிரியர், நண்பர் சீனி. திருநாவுக்கரசு அவர்கள் நம்முடைய பாராட்டுதலுக்கு உரியவராவார்கள்.

திருவள்ளுவர், அப்பர், திருஞானசம்பந்தர், குமர குருபரர் முதலிய மறை நூல் ஆசிரியர்களின் நுணுக்கமான சிந்தனைகளை அடிகளார் அவர்கள் புரட்சிப் புதுமையில் விளக்கம் செய்வதோடு, டாக்டர் அம்பேத்கார், ஜே.சி. குமரப்பா போன்ற மாமேதைகளின் அறிவுச் சுரங்கத்தில் இருந்து புதையல் எடுத்து புதிய புரட்சிகரமான ஒருமைப் பாட்டுச் செய்திகளை எல்லாம் தவத்திரு அடிகளார் அவர்கள் மிகச் சிறந்த தமிழ் நடையில் தந்துள்ளார்கள்.

எல்லோரும் தவத்திரு அடிகளார் அவர்களின் உயர்ந்த கருத்துக்களைச் சிந்திக்க வேண்டுகிறேன்.

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதற்கு இலக்கணமாகத் திகழும் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு எனது வணக்கங்கள்.

**சென்னை–35** **திருக்குறளார்**
**9–12–92**

# 21. சிலம்புநெறி

**1993 டிசம்பர்**

## அணிந்துரை

### நீதி அரசர் பி. வேணுகோபால்

தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு நன்கு அறிமுகமானவர். சிறந்த தமிழ்

பற்றாளர். தமிழ் உணர்வு படைத்தவர்கள். அவர்கள் கூறும் கருத்துக்களில் என்றும் புதுமை இருக்கும். சிந்தனையைத் தூண்டும். மக்களை நல்வழிப்படுத்த நெறிப்படுத்த, முறைப் படுத்த தேவையான கருத்துக்கள் இருக்கும்.

பகுத்தறிவு வாதிகளும் ஏற்றுக் கொள்ளும் ஆன்மிக வாதி. அது அவர்களுடைய தனிச்சிறப்பு. அரசியலுக்கு அப்பாற்பட்டவர். ஆனால் அவருடைய கருத்துக்கள் எல்லா அரசியல் கட்சிகளாலும் மதிக்கப்படும். போற்றப்படும்.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் வலிறுத்தும் மூன்று நெறிகள் எவை என்பதை தவத்திரு அடிகளார் இந்நூலில் அற்புதமாக விளக்கி இருக் கிறார். முதல் நெறி அரசியலில் உள்ளவர்களுக்கு அறநெறி பற்றிக் கூறுவது.

சிந்தனையால், செயலால், மக்களிடத்தில் அன்பு காட்டி மக்கள் இனம் வாழ்வதற்கு உரியவற்றை செய்வது தான் அறம். தொண்டு மனப்பான்மையுடன் சுயநலமில்லாத செயல்கள் மனதுக்கு தூய்மை தரும். அது தான் அறம். அதுதான் அரசியலில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய அறநெறி. இதுவே சிலம்பு நெறி என்று அற்புதமாக விளக்குகிறார், தவத்திரு அடிகளார் அவர்கள்.

சிலப்பதிகாரம் வலியுறுத்தும் இரண்டாவது நெறி "உரைசால் பத்தினியை" உயர்ந்தோர் போற்ற வேண்டும், நாடு சிறப்புற நல்ல அரசு தேவை. வீடு சிறப்புற நல்ல மனைவி தேவை. நாட்டிற்கு வலிமை சேர்ப்பதே நல்ல மனைவிதானே. நாட்டிற்கும் வீட்டிற்கும் விழுப்பம் சேர்க்கும் கற்புடைய மனைவியை, பத்தினி பெண்டிரை உயர்ந்தோர் போற்ற வேண்டும். இது இரண்டாவது சிலம்பு நெறி.

தூய அன்பு, கணவனுக்குத் தியாகம் செய்தல். வாழ்க்கையின் அனைத்துத் துறையிலும் கணவனுக்குத் தோழமையாதல், துணை நிற்றல் இவை அனைத்தும் சேர்ந்த

ஒழுக்க நெறியே கற்பு என்று அருமையாக விளக்கம் தருகிறார்.

அடிகளார் காவி உடை அணிந்த துறவிதான். மனித இயல்புகளைப் புரிந்து கொண்டு கற்புக்கு என்ன அற்புதமான இலக்கணம் வகுக்கிறார் என்பதைக் காண தமிழ் உள்ளங்கள் பூரிக்கும். மகிழ்ச்சி அடையும்.

சிலப்பதிகாரம் வலியுறுத்தும் மூன்றாவது நெறி "ஊழ் வினை உருத்து ஊட்டும்" ஊழ் வலிமை அதன் பயனைத் தந்தே தீரும். ஊழ் என்றால் என்ன? தவத்திரு அடிகளாரின் கருத்துக்களின் நுட்பம், பொலிவு, புதுமை இவை அனைத்தும் இங்கே பார்க்கலாம்.

புலன்கள், பொறிகளின் வாயிலாகச் செயற் பாட்டுக்கும் பயனுக்கும் வருவது ஊழ். இது தவிர்க்க முடியாத இயற்கை விதி, நியதி, அறத்தின் செயற்பாடு.

நேற்றையை வாழ்வின் காரணமாக இன்றைய வாழ்க்கைக்கு நமக்கு ஏற்படும் விளைவுகள். இதுதான் ஊழ். நாம் செய்த வினைகளால் ஏற்படும் விளைவுகளை நாம் அனுபவிக்கத்தானே வேண்டும். இதுதான் ஊழ் என்று விளக்கும் அடிகளார், இதனை மனிதன் எதிர்த்து போராடலாம். வெற்றியும் அடையலாம் என்று நம்பிக்கை ஊட்டுகிறார்.

கோவலன் பிணத்தைக் கொலையுண்ட இடத்தில் கண்ட கண்ணகி நீதி கேட்க பாண்டியனின் அவைக்களத்தை நோக்கி நடக்கிறாள். அப்பொழுது கண்ணகி "பெண்டிரும் உண்டு கொல்" "சான்றோரும் உண்டு கொல்" "தெய்வமும் உண்டு கொல்" என்று கூறி நீதி கேட்கிறாள். "தெய்வமும் உண்டு கொல்" என்ற கண்ணகியின் கூற்றுக்குத் தவத்திரு அடிகளாரின் விளக்கம், எங்களைப் போன்றவர்களின் மனதைத் தொடும் பகுதி...

"தெய்வம் உண்டுகொல்" என்ற கண்ணகியின் கூற்றில் "தெய்வம்" என்பதற்கு என்ன பொருள் என்பதை மிக நுட்பமாக விளக்குகிறார் அடிகளார், தெய்வம் என்பது நியதிகளின் மறுபெயர். நீதியின் வடிவம் தெய்வம்.

எங்கு நீதி போற்றப்படுகிறதோ அந்த நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்பெறும், இயற்கை நியதிகள் பாராட்டப் பெறும். வல்லாண்மை வாழும். தெய்வத்தை "நீதி" என்று திருவாசகம் போற்றுகிறது என்று அடிகளார் முடிக்கிறார். இந்த நூலில் என் உள்ளத்தையும் உணர்வுகளையும் தீண்டிய பகுதி இதுதான்.

பலமுறை படித்து மகிழ்ந்தேன். வாசகர்கள் இந்நூலின் எல்லாபகுதிகளையும் படித்து மகிழ்ந்து இன்புற வேண்டும். இதுவே என் அவாவும் வேண்டுகோளும் ஆகும்.

தவத்திரு அடிகளார் அவர்களின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் இதனையும் சிறப்பாக வெளியிட்டுள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

**சென்னை** — **தங்கள்**
**25-9-93** — **பி. வேணுகோபால்**

## 22. சமுதாய மறுமலர்ச்சி

**1993 டிசம்பர்**

### அணிந்துரை

**கலைமாமணி, தமிழ்மறைக் காவலர்,**
**திருக்குறளார், வீ. முனிசாமி.**

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் வானொலியில் ஆற்றிய இலக்கியப் பேருரைகளே "சமுதாய

மறுமலர்ச்சி இலக்கியங்கள்” என்னும் அழகான நூலாக கலைவாணி வெளியிட்டுள்ளது.

சமுதாய மறுமலர்ச்சி என்றால் என்ன என்பதைத் தவத்திரு அடிகளார் அவர்கள் சங்கப் பாடல்களையும், திருக் குறளையும் எடுத்துக்காட்டி விளக்கும் திறன் மிகவும் அருமை யானது.

திருக்குறள் முழுக்க முழுக்க மறுமலர்ச்சி இயக்க படைப்புக் கருவியாகும் (பக்.12). அடிகளார் அவர்களின் எண்ணவோட்டம் பாராட்டத்தக்கது. சமுதாய மறு மலர்ச்சிக்குப் பாடுபட்ட, கவிஞர்கள், புதின ஆசிரியர்கள் சிலரை நினைவு கூர்ந்து விளக்கும் திறன் பரந்து விரிந்த நூலறிவாற்றலைத் தெற்றெனக் காட்டுகிறது.

ஆன்மிகம், சமுதாயம், இலக்கியம், அரசியல் இன்ன பிற துறைகளிலெல்லாம் புரட்சிகரமான அறிவியல் கருத்துக்கள் பயன் தரும் வகையில் செயலாற்றி அருளும் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர் களுக்கு மக்கட் சமுதாயம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

பாரத ஒருமைப்பாட்டிற்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் புகழ் சேர்க்கும் படைப்புகளை மட்டுமே வெளியிட்டு வரும் நமது நண்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு அவர்கள் அனைவரின் பாராட்டுக்கும் உரியவர்கள்.

மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதற்கு இலக்கணமாகத் திகழும் தவத்திரு அடிகளார் அவர்களுக்கு எனது வணக்கங்கள்.

திருக்குறளார்

**சென்னை**
**28–12–93**

# 23. எங்கே போகிறோம்

1994 டிசம்பர்

முனைவர். த. பெரியாண்டவன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் வளர்ச்சித்துறை முன்னாள் இயக்குநர், சென்னை.

## அணிந்துரை

நிறைமொழி மாந்தராக விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் சைவத்தையும், தமிழையும் இரண்டு கண்களாகக் கொண்டொழுகும் செந்தண்மையாளர். சமயமும், தமிழும் சமுதாயத்தை வளர்ப்பதுடன் தமிழும் வளர வேண்டும் என்னும் கொள்கையர். மொழி வளர்ச்சி என்பதையே பண்பாட்டின் வளர்ச்சி என்பதைப் பறைசாற்றி வரும் பண்பாளர்.

ஒழுக்கத்தில் குன்றின் மேல் இட்ட விளக்காக இலங்கி வரும் அடிகளார் அவர்கள் மதுரை வானொலி நிலையத்தில் தொண்ணூற்று நான்காம் ஆண்டு பல்வேறு நாட்களில் சுதந்திர தினவிழாச் சிந்தனைகள், கல்விச் சிந்தனைகள், உழைப்புச் சிந்தனைகள், வளர்ச்சி மாற்றம், பொருளாதாரச் சிந்தனைகள், வேளாண்மைச் சிந்தனைகள், கால்நடைப் பொருளாதாரச் சிந்தனைகள் உட்பட பனிரெண்டு வெவ்வேறு பொருண்மைகளில் எங்கே போகிறோம் என்னும் வினாவை எழுப்பிக் கொண்டு விடை கண்டு மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் சமுதாயத்தின் மீது அறிவுக் கதிர் ஒளி பாய்ச்சி எழுப்ப முயன்றிருக்கும் சொற்பொழிவுகளே எங்கே போகிறோம்? என்னும் மலர்த் தோப்பாக வெளிவருகிறது. “தன் மாணாக்கன் அணிந்துரை வழங்கலாம்” என்னும் மரபுப்படி தவத்திரு அடிகளார் அவர்களின் மாணாக்கன் நிலையிலுள்ள நான் இதற்கு அணிந்துரை வழங்குவதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

காலால் நடக்கும் மனிதன் பிற கால்நடைகளிலிருந்து சிந்தனையாலும், கருத்தாலும், அறிவாலும், நாகரிகத்தாலும், பண்பாட்டாலும், படைப்பாற்றலாலும் நடந்து வேறுபடு கிறான் என விளக்கும் பாங்கு போற்றி பாராட்டிற்குரியது (பக்கம் 10).

சுதந்திர தின விழாப்பற்றி விளக்கும் போது, சுதந்திர தின விழா என்பது கொடியேற்றுதல் மட்டுமன்று. நேற்று என்ன நடந்தது, இன்று என்ன நடந்து கொண்டிருக்கிறது, நாளை என்ன நடக்கும், நாளை என்ன நடக்குமாறு செய்ய வேண்டும் இந்தக் கணக்காய்வு செய்யாமல் போனால் சுதந்திர தின விழாவிற்கு என்ன பொருள் என வினவுவதை விடுதலை நாளில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய விளக்க உரையாகும்.

தாம் நரகத்திற்குப் போனாலும் கோடான கோடி பேர் வைகுண்டத்திற்குப் போகவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட இராமானுஜர் பிறந்த மண்ணில் சுயநலம் வளர்ந்து வருகிறதே என அடிகளார் சோர்வு கொள்கிறார். இளைஞர் களின் உணர்வுகளைப் புறக்கணிக்காது வளர்க்க வேண்டு மெனவும் மக்களை அரசு காப்பாற்றக் கூடாது. அரசை மக்கள் காப்பாற்ற வேண்டும் எனவும் இவர் கூறும் அறிவுரைகள் பொன்னேட்டில் வைரங்களால் பதிக்கப்பட வேண்டிய எழுத்துக்கள்.

கல்விச் சிந்தனைகள் என்னும் பொருளில் படிப்பு வேறு, அறிவு வேறு என தெளிவுபடுத்தி தகவல்கள் நிறைய வைத்திருப்பவர்கள், நிறைய படித்தவர்கள், பட்டம் பெற்றிருப்பவர்கள் இவர்கள் எல்லாம் அறிஞர்கள் என்று பிழையாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். இவர்கள் அறிஞர்கள் இருக்கலாம். தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் கல்வியே அறிவுடைமையல்ல, கற்றவர்கள் எல்லாம் அறிவுடையவர்களும் அல்லர், கல்வியும், கேள்வியும் அறிவு

பெறுவதற்குரிய வாயில்களே ஆகும் எனவும் கூறி கல்விக்கு இலக்கணம் கூறுகிறார்.

இயற்கை வழங்கும் கொடைகளில் ஒன்று தாய்மொழி. தாய்மொழியே சிந்தனை மொழி, உணரும் மொழி என தாய்மொழி வழிக் கல்விக்கு வித்திடும் பாங்கு புகழத்தக்க வகையில் அமைந்துள்ளது. உழைப்புச் சிந்தனைகள் என்னும் பொருளில் சோம்பலுடனும், சோர்வுடனும், நூற்றாண்டுகள் வாழ்வதைவிட பெருமுயற்சி, கடின உழைப்புடன் ஒருநாள் வாழ்ந்தால் கூடப்போதும் என்னும் பொன்மொழி போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

உழைப்பு; அறிவு உழைப்பு, உடல் உழைப்பு என இரண்டாக பகுத்து அறிவு உழைப்பு எவ்வகையிலும் உடல் உழைப்பைத் தாழ்த்தக்கூடாது என வரலாற்றுச் சிறப்புகளுடன் நிறுவும் பாங்கு நிலை பேருடையது. வளர்ச்சி மாற்றம் என்னும் பொருளில், வளர்ச்சி, முன்னேற்றம் என்பது நிற்பதும் அல்ல. பக்கவாட்டில் அசைந்து கொடுப்பதும் அல்ல. எதிர்காலத்தை நோக்கி நடைபோடுவது தான். முன்னேற்றம், வளர்ச்சி, மாற்றம் என விளக்கும் பாங்கு சிறந்தது.

பொருளாதாரச் சிந்தனைகள் என்னும் பகுதியில் உண்மையான சம்பளம் என்றால் அது பணத்தின் அளவு அன்று, வாங்கும் சக்தியே ஆகும் எனக் கூறும் வரையறை, வறுமை என்பது வசதிகள் அற்ற வாழ்க்கை எனவும், ஏழ்மை என்பது உணவுக்குப் போராடும் நிலை எனவும் இவர் வகுக்கும் இலக்கணம் வானுயர நிற்பதாகும். வேளாண்மைச் சிந்தனைகள் என்னும் பொருளில் வரப்புகளே அதிகம் என நம்முடைய ஒருமைப்பாட்டின்மையை உணர்த்துகிறார்.

கால்நடைப் பொருளாதாரச் சிந்தனைகள் என்னும் பகுதியில் கால்நடைகள் இல்லையேல் விவசாயம் இல்லை, உணவு இல்லை, ஏன் மனிதகுல வாழ்க்கையில் கால்நடைகள்

என்றால் மிகையாகாது. அதனாலேயே செல்வத்திற்கு மாடு என்று பெயர் சூட்டியது வள்ளுவம், எனக் கூறும் பகுதி சிறப்பாக அமைந்துள்ளது. ஒரு வாரம் என்பது ஏழு நாள் களைக் கொண்டது. இறைவன் ஏழிசையாய் உள்ளான் என சைவ சமயம் கூறுகின்றது. செயற்கரிய செய்து வரும் பெரியார் ஆகிய தவத்திரு அடிகளார் அவர்கள் தமிழ்ச் சமுதாயம், இந்திய சமுதாயம் கை கொள்ள வேண்டிய அரிய பொருள்களை அள்ளித் தந்துள்ள பாங்கு சால்புடையது.

அடிகளார் அவர்கள் வானொலி வழி நிகழ்த்திய உரை காற்றோடு காற்றாய் கறைந்து போகாமல் நிலையாக மக்கள் உள்ளங்களில் உறைந்து போகின்ற வகையில் வரி வடிவில் அச்சேற்றி பதிப்பித்துத் தந்துள்ள பதிப்பாசிரியர் சீனி. திருநாவுக்கரசு அவர்களையும், சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்டுள்ள கலைவாணி புத்தகாலயத்தையும் மிகவும் பாராட்டுகிறேன். தவத்திரு அடிகளார் அவர்கள் தமிழுலகம் விழிப்புற காலம் தம் கருத்துக்களை ஓயாது ஒலிக்கவும் தமிழன்னை போல் தரணியில் நிலைத்த புகழுடன் வாழவும் அன்னை ஆதிபராசக்தியை இறைஞ்சுகிறேன்.

**சென்னை** த. பெரியாண்டவன்
**25-12-94**

# 24. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்

**1996 – மே**

## அணிந்துரை

### தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் சமயக் குரவர்கள் மூவரைப் பற்றியும் இருபதாம் நூற்றாண்டின்

அப்பரடிகளாக வாழ்ந்த நம் குருமகாசந்நிதானம் வரைந்த எழுத்தோவியம் நூலாக முகிழ்த்திருக்கிறது.

ஏழாம் நூற்றாண்டின் ஞானக் கதிரவனாக உலாவந்த அருள்ஞானச் சுடர் அப்பர் அடிகள், மண்மேல் சொற்றமிழ் பாடிய சுந்தரர் பெருமான், கல்லும் கரைந்துருகும் தேனார் திருவாசகம் தந்த மாணிக்கவாசகப் பெருமான் ஆகிய சமயக் குரவர்கள் சைவ சமய உலகத்தின் மாபெரும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள்!

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்!" என்று முடியாட்சிக்கு எதிராய் முதற்குரல் எழுப்பியவர் அப்பரடிகள். சாதிச் சகதிக்குள் மூழ்கிக் கிடந்த சைவ சமயத்தைப் புனருத்தாரணம் செய்தவர் அப்பரடிகள்!

சமயகுரவர் அப்பரடிகள் எங்கே துன்பம் இருந்ததோ எங்கே அவலம் இருந்ததோ அங்கெல்லாம் பயணம் செய்தவர்! பார்வாழத் திருவீதிப் பணி, திருக்கோயில் உழவாரம் என இப்படித் தொண்டே வாழ்வாய், வாழ்வே தொண்டாய் வாழ்ந்து காட்டியவர் அப்பரடிகள்!

சமுதாயத்தின் மேடுபள்ளங்களைச் சரிப்படுத்தவும் நெறிப்படுத்தவும் முடியாமல் அன்று தொட்டு இன்று வரை, பொருளியல் தத்துவங்களும், ஆட்சி அமைப்பும் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறிடத் தர்மகர்த்தா முறையினை முதன் முதலில் உலகுக்குச் சொன்னவர் அப்பரடிகள்.

அந்த அப்பரடிகளாகவே வாழ்ந்து காட்டிய, நமது குருமாக சந்நிதானம், அப்பரடிகளின் அருமை கோட்பாட்டை, புதிய பார்வையில் பரிமாணத்தில் பார்க்கும் விதம் போற்றுதற்குரியதாகும்.

நற்றமிழ்ச் சுந்தரரின் வாழ்வு, தோழமை வாழ்வுக்கு இலக்கணம்! வாழ்த்துப் பொருளாகவும் வழிபடு பொருளாகவும் இருந்த பரம்பொருள் சுந்தரர் வரலாற்றில்

வாழ்வுப் பொருளாக, மண்ணில் சராசரி மனித உணர்வுடன் நடமாடிய பாங்கு எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியதாகும்; வியப்பதற்குரியதாகும். மண்ணகம் மணக்கும் நட்பு இறைவன்-; ஆரூரர் நட்பு!

நட்பு தகுதி கடந்தது. உணர்வு கடந்தது. இது ஆற்றுதற்குரிய பணிதானா? என்ற வரம்பெல்லாம் கடந்து தோழமைக்குத் துணை நிற்றல், தோழனின் பெருமை குன்றாது காத்தல், தோழனின் தவற்றுக்காகத் திருத்தும் பொருட்டு ஒறுத்தும் திருத்துதல்-இவையெல்லாம் மண்ணில் நடமாடிக் காட்டிய மாதேவனின் செயல்கள்.

உறவுகளைத் துறக்கலாம்! குருதி கலந்த பந்தபாசங் களைத் தவிர்க்கலாம்! தோழமை உணர்வுகளைத் தவிர்க்க முடியாது. துறவிகளும் துறக்கமுடியாத உறவு தோழமை உணர்வு! பாசப்பற்று அறுத்தான் அறுக்க முடியாத பற்றாக தோழமை உணர்வை மண்ணிற்குக் காட்டியவிதம் எண்ணி எண்ணி இன்புறத் தக்கது.

அடுத்து, கல்லும் கரைந்துருகும் மணிவாசகமாம் திருவாசகம் தந்த மாணிக்கவாசகப் பெருமான்! நாடாளும் நல்லமைச்சர்! படை ஆள-பரிவாங்க வேண்டியவர் பார் போற்றும் திருக்கோயில் எழுப்புகின்றார்! ஆட்சிக்கு அவசியம் குதிரைகள் அல்ல; மக்கள் நலம் என்று பறைசாற்றுகின்றார்.

கல் எல்லாம் பேசும் பொற்சிலைகளாக மாற, மண் எல்லாம் விண்முட்டும் கோபுரங்களாக உருப்பெற, வண்ணம் எல்லாம் உயிர்ப்புடைய ஓவியங்களாக மாற வரலாற்றுப் பொக்கிஷமாய்த் திருக்கோயில் எழுப்புகின்றார். இச் செய்தி யறிந்த அரசனால் மணிவாசகப் பெருமான் தண்டிக்கப் பெற்றவுடன் அண்டர் நாயகனே எழுந்து வருகின்றான்! அடியார்க்கு அடியவனாய் எளியார்க்கு எளியனாய் எழுந்து வருகின்றான்! மண்ணில் நடமிட்டன அவன் பொற்

பாதங்கள்! பண் சுமந்த தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாக்களுக்காக மண் சுமந்தான். அவன் பொன்மேனி புண் சுமந்தது! உலகைக் காக்கும் பரம்பொருள், தானே அடிபெற்றது எதனால்? எல்லோரும் உழைக்க வேண்டும்! அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் உழைக்க வேண்டும். பெற்ற கூலிக்கு ஏற்ற நியாயமான உழைப்பினைத் தர யார் மறுத்தாலும் தண்டிக்கப்படுவர்; ஆண்டவனாக இருந்தாலும் தண்டிக்கப்படுவர், இந்தத் திருநிகழ்வு அற்புத நீதியை விளக்குகிறது என்று நம் குருமகாசந்நிதானம் புதிய விளக்கம் சொல்கிறார்கள்.

இறைவன் திருக்கோயில்களில் இன் தமிழ் மறைகள் மீண்டும் முழங்க வேண்டும்! தமிழ் கூறும் நல்லுலகத்தின் வேதமாக விளங்கும் திருமறைகள் திக்கெட்டும் முழங்குவது சமய குரவர்களுக்கு ஆற்றுகின்ற கடப்பாடு ஆகும். இந்த நூலில் சமய உலகத்திற்கு பண்ணோடு கலந்த பைந்தமிழ் உலகத்திற்கு நம் சமயக் குரவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளை நம் குருமகாசந்நிதானம் புதிய கோணத்தில் எடுத்து மொழிந்துள்ளார்கள்.

தமிழ் மந்திரங்கள் மீண்டும் திக்கெட்டும் முழங்க வேண்டும்! அவையே சமய குரவர்களுக்குச் செய்கின்ற உண்மையான கடப்பாடு, நன்றி ஆகும். குருமகா சந்நிதானத்தின் புதிய பார்வையில் மலர்ந்த இந்த நூலைப் பதிப்பித்து, பணியாற்றும் கலைவாணி சீனி. திருநாவுக்கரசு அவர்கட்கு நெஞ்சார்ந்த நன்றி, பாராட்டுக்கள்.

குருமகாசந்நிதானத்தின் நினைவுகள் மலர இந்த அரிய நூலை அவர்களின் பொன்னார் திருவடிகளுக்குச் சமர்ப்பிக் கின்றோம்.

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியன்
முன்னை துணைவேந்தர்
பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகம்

## மதிப்புரை
## (அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர்)

அருமை நண்பர் தமிழன்பர் திரு. சீனி. திருநாவுக்கரசு தலைமையேற்றுள்ள கலைவாணி புத்தகாலயம் ஒரு குன்றக்குடி சுரங்கம். தமிழகம் கண்ட தலையாய இலக்கிய முனிவர் அமரர் தவத்திரு குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்கள். தவத்திரு அடிகளார் ஒரு அற்புதத் துறவி மட்டுமல்ல தெய்வத் தமிழைப் பரப்பிய நால்வருடன் கூடச் சேர்த்து ஐந்தாமவராக வைத்து எண்ணப்படக்கூடிய பேரறிஞர் ஆவார்கள். அவரது நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டதின் பயனாகக் கலைவாணி புத்தகாலயம், பெரும் தமிழ்ப் பணி செய்துள்ளது.

இப்போது வெளி வரும் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் இந்நன்னூல் அடிகளாரின் சிவநெறிப் பற்றுக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

அடிகளாரின், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக முத்துகணேசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளைத் தாங்கியுள்ள நூல் இது.

பன்னிரு திருமுறைகளில் 4,5,6-ம் திருமுறைகளை அருளிச் செய்த அப்பர் பெருமான் பெருமைகளைக் குன்றக்குடி மகாசந்நிதானம் எழுதும்போது அப்பொன்னெழுத்துக்கள் நம் மனத்தைத் தொடுகின்றன.

நம்பியாரூரர் வரலாற்றை எழுதும் அடிகளாரின் தமிழ் நடை நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. வன்றொண்டர் புராணம் இது.

"அன்று வந்தெனை அகலிடத்தவர் முன்
ஆளதாக என்று ஆவணங்காட்டி
நின்று வெண்ணெய் நல்லூரர் மிசைஒளித்த
நித்திலத் திரள் தொத்தினை"

என்று சுந்தரர் பாடுவதை நம் கண்முன் நிறுத்தும் அடிகள்ார், இறைவன் ஒரு தொண்டனுக்கு எப்படி நண்பனாக இயங்கித் "தம்பிரான் தோழ"ரான அரிய அற்புதத்தை நமக்கு விளக்கும் பாணி நம் உள்ளத்தை உருக்குகின்றது.

இறைவனையே ஏசும் உரிமை பெற்ற கதை நம்முன் விரியும் போது இறைக் கருணைக்கு எல்லை ஏது என்னும் தத்துவத்தையும் நம் முன் கொணர்கிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

"God is my Friend" என்று 20-ம் நூற்றாண்டின் ஆப்பிரிக்க பிஷப் டூடு சொன்னதை அன்றே வலியுறுத்தி நடைமுறைப்படுத்தினார் ஒப்பற்ற சுந்தரர் பெருமான்.

திருவாதவூரர் வரலாறு என்றென்றும் தித்திக்கும் வரலாறு. அவர்தம் வாழ்க்கை ஒரு மாபெரும் தவ வாழ்க்கை. அவரது வாழ்நாள் முழுவதுமே ஒரு வேள்வி. ஞானவேட்கை கொண்ட மணிவாசகப் பெருமானைப் புகழ்ந்து, அவரது தவ ஒளியினைத் தம் அரிய ஆற்றலால் நம்முன் குன்றக்குடி அடிகளார் நிறுத்தும் போது நாம் அப்படியே தடுத்தாட் கொள்ளப்படுகிறோம்.

நரியைப் பரியாக்கிய திருவிளையாடல்கள் நாமறிந்ததே, ஆயினும் குன்றக்குடி மகா சந்நிதானத்தின் மூலம் இவ்வரலாற்றை நாம் கேட்கும் போது நம் கண் முன்னே "கவனமாக்களின்" அதிசய ஊர்வலம், அவை எப்படி இரவோடிரவாக சாதாரண நரிகளான அற்புதம் இவை நிகழ்கின்றன. பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் ஈசனை நீ நினைத்தால் அவன் உன்முன் கைகட்டி நிற்பான்

என்னும் இந்து மதத்தின் பேருண்மையை வெளிக்கொணர் கிறது.

தவயோகி அடிகளாரின் அருள்வாக்கு நால்வரில் மூவரின் சிறப்பு இவற்றை அருமை சீனி. திருநாவுக்கரசு அவர்கள் நூலாக்கியதற்குத் தமிழ்கூறும் நல்லுலகம் அவருக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

அன்புடன்
கி. வேங்கடசுப்பிரமணியன்

# 25. மண்ணும் மனிதர்களும்

**1996 மே**

**பேராசிரியர்**
**க. அன்பழகன்**
**கல்வி அமைச்சர்**

**சென்னை**
**16–5–96**

தமிழ் நாட்டு மக்களின் பேரன்புக்கும் பெரு மதிப்புக்கும் உரியவராக விளங்கிய **தவத்திரு குன்றக்குடி அடிகளாரின்** தொண்டு பல திறப்பட்டதாகும்.

இளமைப் பருவத்தில் வறுமையிலும் கல்வியில் ஆர்வம்; தாய்மொழியில் பற்று; சைவத்தில் ஈடுபாடு; பின்னர் தருமை ஆதீனத்தில் தொண்டு, அதன் விளைவாகத் துறவு தம்பிரான் நிலை, பின்னர் குன்றக்குடி சைவ மடத்தின் ஆதீனமாகப் பொறுப்பேற்றல் என்னும் வகையில் தகுதியால் உயர்ந்த அடிகளார் மக்கள் நலன் நாடும் மனவளம் பெற்ற வராகத் திகழ்ந்தார்.

நாடு விடுதலை பெற்றுப் பல பத்தாண்டுகள் கடந்தும் வறுமையும், எழுத்தறிவின்மையும் ஒழிக்கப்படாமையையும்; பிறவி வழிப்பட்ட சாதி வேற்றுமை நாளும் உரம் பெற்று வருவதையும் எண்ணிக் கவலை கொண்டார். ‘சம்பிரதாயம்’

காத்துச் சமயப்பணி ஆற்றும் பொறுப்பு மிக்கவராயினும், மக்கள் பணி ஆற்றுவதிலே ஆர்வம் கொண்டவரானார்.

சமுதாயத்தில் நிலவும் வளமும்-வறுமையும் மக்களைப் பிரிப்பதைப் போன்றே-திருமடங்களினிடையேயும் நிலவும் வளநிலை வேறுபாடு ஏதுவாக வளமற்ற திருமடத்தைத் தாழ்வாக மதிக்கும் மனப்போக்கு இடம் பெற்றிருப்பதைக் கண்டார்.

திருமடங்களுக்குள்ளேயும் துறவிகளுக்கிடையேயும் வளத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் எண்ணப்படு கின்றன. அவ்வெண்ணத்தின் வழி மதிப்பீடு குறைகின்றது. இது ஏற்க முடியாத ஒன்று "நயத்தக்க நாகரிகம் எப்போது மலரும்?" என்னும் வினாவை அவர் எழுப்பியுள்ளார்.

இதனால் சமுதாய வாழ்வில் நிலைபெற்ற வள வேற்றுமையால் உருவாகும் மனப்பான்மை, துறவிகளையும் அவர் தம் மடத்தையும் கூட விடவில்லை என்பது-துறவு பூண்டாரின் உயர்ந்த பற்றற்ற மனநிலைக்கே இழுக்காவதை அவர் உணர்ந்தார்.

மடாதிப்திகள் புறத்தோற்றத்தால் உருவாக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களாக அகத்தோற்றத்தில் இருக்க வில்லை என்பது இதனால் தெளிவாகும். திருக்கோயில்களில் எழுந்தருளும் இறைவர்களுள்ளும் செல்வச் செழிப்புடைய கோயில் உடையாருக்கே எல்லாப் புகழும் பெருமையும் உளதாவது நாம் நாளும் காண்பதுதானே!

சாதி வேற்றுமையைப்பற்றி அடிகளார் குறிப்பிடுகையில், "எம்பெருமானார் என்றும் உடையவர் என்றும் போற்றப்பட்ட ராமானுசரின் முயற்சி சாதிவேற்றுமைகளை அகற்றுவதில் வெற்றி பெறவில்லை. நம்முடைய பழக்கம் எதையும் வாழ்த்துவோம்! வழிபடுவோம்! ஆனால் (வாழ்க்கையில்) பின்பற்ற மாட்டோம்''-என்று தம் வருத்தத்தை வெளியிடுகிறார். இப்படிப்பட்ட உறுதியற்ற

மனப்போக்கு வளர்ந்ததால், நம்முடைய போராட்ட உணர்வு தவறுள பாதையில் செலவிடப்படுவதையும் இவ்வாறு சுட்டிக் காட்டுகிறார்.

"நமக்குப் போர்க்குணம் மிகுதியும் உண்டு. ஆனால் ஒரே ஒரு குறை. நமது போர்க்குணம் மனிதர்களுடன் போராடுவதிலேயே கழிகின்றது. மனித குலத்தின் பொதுப் பகையாகிய-சாதி வேற்றுமைகள், வறுமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதில் ஈடுபடுத்தப்படுவதில்லை" எனவே அடிகளார்-சமயத் தொண்டு பொருளுடையதாக வேண்டு மானால்-சமுதாய வாழ்வில் படிந்துள்ள குறைகள் நீக்கப்பட வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டவரானார்.

தீண்டாமை முற்றும் ஒழிக்கப்பட வேண்டும். சாதி வேற்றுமை உணர்வு அழிக்கப்பட வேண்டும் வறுமையை விரட்டிய வாழ்வு - மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். சைவ சமயத்தாரிடையிலும், சாதியால் சைவர் என்பார்-பிறருடன் ஒன்றாக அமர்ந்து உண்ணாமை போன்ற முறைகேடு மாற்றப்பட வேண்டும்.

இறை வழிபாட்டில்-மக்கள் உணர்வு சிறக்க ஏதுவாக அவர்கட்கு விளங்கும் தமிழிலேயே வழிபாடு (அருச்சனை) நடைபெற வேண்டும்.

இந்தி முதலான வேற்றுமொழி ஆதிக்கம் உருவாக இடந்தரக்கூடாது. வறுமையை விரட்டும் பணியே தலையான பணி. அதற்கு ஏற்ப மக்களைத் திறமான முயற்சியும், தொழிலும் வாய்ந்தவராகச் செய்ய வேண்டும் என்பன போன்றப் பல சீரிய எண்ணங்களைக் கொண்டவராகவும், அதனை மக்களிடம் பரப்பும் தொண்டில் ஈடுபட்டவராகவும் விளங்கினார்.

இளமையிலேயே அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்திலும் பேச்சிலும் ஈர்க்கப்பட்டவரானார். அண்ணா அவர்களின் கொள்கையில் உடன்பாடு கொள்ள முடியாத

அளவு அவரது சைவப் பற்று இயல்பான தடையாக அமையினும், மாற்றார் கருத்தையும் மதிக்கும் அண்ணாவின் உளப்பாங்கையும், மற்றவர்களின் கருத்தைப் பாராட்டி வரவேற்கும் அவரது தனிச்சிறப்பையும் கண்டு அவரிடம் பெருமதிப்புடையவரானார்.

அது போன்றே தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவு இயக்கம் மக்களிடையே மலிந்துள்ள மூட நம்பிக்கைகளை மாற்றுவதின் மூலமே அவர்களிடத்தில் ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும் என்னும் இலட்சியத்துடன் நடைபோடுவதையும், பெரியார் அவர்களையே நேரில் கண்டு உரையாடித் தெளிந்தார்.

தந்தை பெரியாரும் தவத்திரு அடிகளாரும் 'கடவுள்' கொள்கையில் முரண் பட்டவர்களாயினும், மக்களின் மனிதத் தன்மையை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெரியாரின் தொண்டினை அடிகள்ார் மதித்திடலானார்.

தந்தை பெரியாருடனும், அறிஞர் அண்ணாவுடனும், முதல்வராக விளங்கிய கலைஞருடனும், என்னுடனும் அடிகளார் ஒரே மேடையில் பேசுவது என்பது அந்தக் காலத்தில் தமிழ் மக்களால் ஒரு வியப்புடன் நோக்கப்பட்டது எனினும் மக்களிடையே மாறுபாட்டைக் குறைத்து ஒரு பொது நோக்கை வளர்க்க ஏதுவாகியது. சமயத்தலைவராகிய அடிகளார் பெரியாரின் நன் மதிப்பையும் அண்ணாவின் அன்பையும் பெற்றவராகத் திகழ்ந்தார்.

'சமயம் அமைந்தது சமுதாய நலன் காக்கவே" என்னும் நோக்கம் அடிகளாரிடம் மேலோங்கியபோது, சமயவாதிகள் குறிப்பாக ஆதீனங்கள், அடிகளார் சமய மரபைக் காக்க வில்லை என்று கூடக் குறை பேசலானார்கள். ஆனால் அடிகளார் அவற்றைப் பொருட்படுத்தாமல் – தமது பாதையில் தொடர்ந்து நடைபோடலானார். சைவ சமயப்

பணியினை விட அவர் தமிழுக்கும்-திருக்குறள் நெறி பரப்புதற்கும் ஆற்றிய தொண்டினை நாடறியும்.

இறைப்பற்று உணர்வில் மேம்பட்ட நிலையிலும் சமுதாயக் கேடுகளையும் குறைகளையும் கண்டனம் செய்ய முற்பட்ட வடலூர் வள்ளலாரின் வழியில் சிந்தனை கொண்டவராகி, சைவமும் தமிழும் இருகண்ணெனக் கொண்டு நாடெங்கும் முழங்கிய ஞானியார் அடிகளின் வழியில் செயற்படுபவராகி, பொது நல நாட்டத்தில் அருள் உணர்வு வேட்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க. வளர்த்த நெறியினைப் பரப்புபவராய், பெரியார், அண்ணா ஆகியோரிடம் மதிப்பு மிக்கவராய்த் தொண்டு ஆற்றிய தனிச்சிறப்புடையவர் அடிகளார்.

அடிகளார் தமது வாழ்வில் கண்டும் கேட்டும் உற்ற பட்டறிவின் பயனை மற்றவர்களும் பெற்றிட ஏதுவாக 'ஆனந்த விகடன்' ஏட்டில் தீட்டிய தொடர் கட்டுரைகளின் தொகுப்பே **'மண்ணும் மனிதர்களும்'** என்னும் இந்த நூலாக வெளிவந்துள்ளது.

இந்தக் கட்டுரைகளைப் படிப்பவர்கள், அவரது எண்ணப் போக்கையும் உளப்பாங்கையும் உணரலாகும். அடிகளாரின் சீரிய சிந்தனைகளை எல்லோரும் தெளிந்திட ஏதுவாக இதனை புத்தக வடிவில் வெளியிட முன்வந்த **கயல் தினகரன்** அவர்கட்கு எனது பாராட்டும் வாழ்த்தும் உரியவாம்.

க. அன்பழகன்

திருவருள் திரு
தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை
ஆதீனம்
குன்றக்குடி 630 206
தமிழ்நாடு

## தொடர் பயணம்!
## (மண்ணும் மனிதர்களும்)

ஒரு வரலாறு, தம் வரலாற்றை எழுதியுள்ளது. ஒரு காப்பியம் தாமே தம்மைப் பற்றி அடிமுதல் முடிவரை அளந்து பார்த்திருக்கின்றது. இஃது ஒரு சுய விளம்பரம் அல்ல, தற்பெருமை அளக்கின்ற தம் முகவரியும் அல்ல; எதிர் காலம் எந்தச் சார்புக்குள்ளாவது சிக்கி மிதமிஞ்சிய அன்புணர்வில் மிகைப்படுத்தி எழுதிவிடக்கூடாது என்ற கவன உணர்வு காரணமாக இருக்கலாம்.

இந்த வரலாறு இருளில் திசை தெரியாமல் தட்டு தடுமாறுகின்ற கலங்களுக்கெல்லாம் கலங்கரை விளக்காய் வாழ்ந்து காட்டிய **அருள்நெறித் தந்தை** அவர்களின் வரலாறு, எப்பொழுதும் துயரப்படுகின்ற முகவரி தெரியாப் பயணி களுக்கு நன்னம்பிக்கை முனை; வாழத் தெரியாதவர்களுக்கு வாழும் இலக்கணம் கற்றுத் தரும் ஆத்திசூடி; "கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!" என்று வாழ்கின்ற தற்சார்புக் காட்சிக்காரர்களுக்குத் தத்துவ போதனை; உலகம் வாழ வாழ்வதுதான் துறவுநெறி என்ற புதிய நெறி கண்ட புது வேதம்; பொது நன்மைக்காக வளைந்து கொடுக்க மறுக்கின்ற, மரபுகளை உடைத்தெறிந்த-மடாலயங்களின் வரலாற்றில் புதிய துணைவிதித் திருத்தம்; அசுத்தம் நிறைந்த உடலைத் தீர்த்தமாடி ஆலயப் பிரவேசம் செய்வதுபோல் ஏழ்மையை விரட்டிவிட்டு ஆண்டவனைத் தேடச் சொன்ன அக்கினிப பிரவேசம்; சாதிகளுக்கு மகுடம் சூட்டிப் பட்டுப் பாவாடை விரித்துக் கொண்டிருந்த சனாதனிகளின் சிம்ம சொப்பனம்; இல்லாமையாலும் கல்லாமையாலும் ஏங்கிக் கொண்டிருந்த

மக்களின் கனவுகளை நனவாக்கிய நற்றமிழ் முனிவரின் வரலாறு இது.

கருவிலேயே அமைந்த திரு என்பதைப் போல மனித நேயம் அவர்களின் இளமைக் குருதியில் கலந்த ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. அரங்கநாதனாக அவர்கள் அவதரித்த காலத்திலேயே சமூகத் தொண்டும் இறைத் தொண்டும் பிரிக்க முடியாதவாறு ஆவியில் கலந்து இருந்திருக்கின்றது. துர்நாற்றம் பிடித்த குளத்தைத் தூய்மைப்படுத்த எடுத்த முயற்சி, வழிபாடு இல்லாத ஆலயத்தில் ஊர் போற்றப் பூஜை ஏற்படுத்தியது ஆகியவை சமய சமூக உணர்வு குருதியில் கலந்தது என்பதற்கு உரிய சான்றுகள்.

அரங்கநாதனாகத் திருமடத்துப் பணியில் சேர்ந்தது அகிலத்தில் ஒரு மாபெரும் வரலாறு படைக்க நிகழ்ந்திட்ட திருப்புமுனையாகும். திருமடத்துப் பணியில் இணைவது பொன்னுக்காக பொருளுக்காக அல்ல! இலட்சயத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு இயக்கங்களில் பணியாற்று கின்ற இலட்சிய வீரர்களின் பணியைப் போன்றது! எல்லாருக்கும் இந்த நற்பேறு வாய்த்திடுவதில்லை! நம் வாழ் விலும் கல்லூரிப் படிக்கட்டை விட்டு இறங்கியதும் ஏற்றுச் செய்த பணி திருமடத்தின் பணிதான்! அதுவே நம்மை ஆயுட்காலம் முழுவதும் அன்பர் பணி செய்ய ஆட்படுத்தி யிருக்கிறது!

தருமபுரம் திருமடத்தில் அரங்கநாதனாக அலுவலகப் பணியில் ஈடுபட்டவர்கள் கந்தசாமித் தம்பிரான் எனும் திரு நாமம் பூண்டு துறவியானதுதான் திருவருள் காட்டிய பெரும் பேறு. சகல உறவுகளையும் சுற்றத்தையும் துறந்து துறவுப் பாதைக்கு அடியெடுத்து வைப்பதுதான் மிகப் பெரிய சாதனையாகும்! வைராக்கியத்தில் பலவகை சொல்வர். ஆனால் துறவு வாழ்க்கையில் வைராக்கியம் இமைப் பொழுதும் சோராது இருக்க வேண்டும்.

குன்றக்குடித் திருமடத்தில் அருள்நெறித் தந்தையவர்கள்-இளைய சந்நிதானமாய்ப் பொறுப்பு ஏற்ற பின் சந்தித்த இடையூறுகள், மகாசந்நிதானம் கருத்து மாறுபாடு கொண்டிருந்த பொழுது காட்டிய பொறுமை, சிந்திக்கத் தக்கது. கோவலனைப் பிரிந்த கண்ணகி, தன் கொழுநனைப் பிரிந்த துயரைக் கடவுளிடம் கூடச் சொல்லக் கூடாது என்ற திண்மை கற்பு வாழ்க்கையின் சிறப்பாகும். அதுபோல், துறவு வாழ்க்கையிலும் ஏற்படுகின்ற சோதனைகளைக் கண்டு தளர்வது கூடாது! எனவே, ஏற்ற வாழ்வின் இடர்களை இனிமையாக ஏற்பது துறவு வாழ்வுக்கும் பொருந்தும் என்று வாழ்ந்து காட்டினார்கள்!

தமிழ் அருச்சனைப் போராட்டம்! தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற நிகழ்வு! எந்தத் தீந்தமிழ்ப் பாக்கள் இறைவனை இன்ப அன்பில் நனையச் செய்தனவோ, எந்த பண் சுமந்த தீந்தமிழ்ப் பாக்களுக்காக மண் சுமந்து இறைவன் பொன்மேனி புண் சுமந்ததோ, எந்தத் தமிழ் கேட்கும் இச்சையால் நாளும் படிக்காசு நித்தம் நல்கினானோ "மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு" என்று நற்றமிழ்ச் சுந்தரருக்கு எதற்காக ஆணையிட்டானோ. திருமறைக்காட்டின் திருக்கதவுகள் திறந்ததும் அடைத்ததும் எந்தத் தீந்தமிழாலோ அந்தத் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாக்கள் அவன் திருச்செவியில் ஓதத் தடையிருந்த காலம்! அந்தத் தமிழ் அருச்சனைக்கு நடத்திய போராட்டம்; மிகப் பெரிய எழுச்சியினைத் தந்தது நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறிய ஆலவாயண்ணல் அகம் மலரத் தமிழ் அருச்சனைப் போராட்டம் வெற்றி பெற்றது.

1962-இல் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் தமிழருச்சனை அன்றைய அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. அதுதான், "நாமார்க்கும் குடியல்லோம்!" என்று ஓங்கி முழங்கிய

இருபதாம் நூற்றாண்டின் அப்பர் அடிகளாக அவனிக்கு நம் அருள்நெறித் தந்தையை அறியச் செய்தது!

> "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
> ஆதமிலி நாயேன்"

என்பார் மாணிக்கவாசகப் பெருமான்.

> "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
> கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?"

என்பார் அப்பரடிகள். சாதீய உணர்வுகளுக்கு இடம் அளிக்காத தமிழர் சமயம் எப்பொழுது தடம் மாறியது? நாத்திகம் நஞ்சு; அதே பொழுது கடவுள் நம்பிக்கை மனிதநேயத்திற்கு மாறாக இருப்பின் அது நாத்திகத்திலும் கொடிது! கடவுள் நம்பிக்கையை வலியுறுத்திய மதப் புரோகிதர் சுரண்டும் கூட்டத்தோடு சேர்ந்தபின் செல்வச் செழிப்பு கடவுள் கருணை-புண்ணியத்தின் பயன் என்று கூறியவுடன் சுரண்டப்பட்ட வாழ்விழந்த மக்களிடையே கடவுள் மறுப்புக் கொள்கை தோன்றிற்று; சாதீய உணர்வு களுக்கு விடை கொடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திருமடத்தின் கதவுகளை திறந்துவிட்டு வாழ்விழந்த மக்களோடு உண்டும் கலந்தும் வாழ்ந்தும் திருமடங்களின் வரலாற்றில் மாபெரும் புரட்சி செய்த முதற் புரட்சித் துறவி நம் அருள்நெறித் தந்தை அவர்கள்தான் என்பதை இந்த வரலாறு கூறுகின்றது.

சரித்திரம் இரத்தக்கறை படிந்த அந்த நாட்களை நினைவுப்படுத்துகின்றது. 1982 மார்ச் மாதம்! மண்டைக்காடு மிகப்பெரிய மதக் கலவரத்தைச் சந்திக்கின்றது! அரசால் கூடத் தடுக்க முடியாத-அணைக்க முடியாத அந்தப் பெருந்தீ, அகோரமாய் எரிந்து கன்னியாகுமரி மாவட்டத்தையே கலக்கியது; மதம் பிடித்த மனிதர்கள் விலங்குகளாய் மோதிக் கொண்டிருந்தார்கள்! உயிரைப் பணயம் வைத்து அருள்

நெறித் தந்தையவர்கள் மேற்கொண்ட தியாகப் பயணம் பல உயிர்ப் பலியைத் தடுத்து நிறுத்தியது. ஆதவனைக் கண்ட பனிபோல் இருந்த இடம் தெரியாமல் வன்முறை தடுக்கப் பட்டது! மதவெறித் தீயை அணைத்த புனித நீர் மனிதநேய மாமுனிவரின் விழி நீர்! பூமிப்பந்தை உள்ளங்கையில் உருட்டி விளையாட ஆசைப்பட்ட மதவெறி சக்திகளுக்குச் சம்மட்டி அடி!

இஃது ஒரு நீண்ட பயணம்! சமயத்தையும் சமுதாயத் தையும் இணைத்து அழைத்துச் சென்ற இலட்சியப் பயணம்!

"கவலை துறந்திங்கு வாழ்வதே வீடு" என்று பாரதி பகர்ந்ததைப் போல, இந்தப் பூவுலகத்தைப் பொன்னுலகமாக, தேவருலகமாக ஆக்க நினைத்த தேவகுமாரரின் இலட்சியப் பயணம்!

உலகம் யாரால் இருக்கின்றது என்று நமக்கு ஓர் ஐயப்பாடு! கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் புறப் பாடல் இதற்கு விடை கூறுகிறது. "உலகம் நோன்பு நோற் கின்றவர்களால் இருக்கின்றது" என்பதுதான் அந்த விடை, அவர்கள் எப்படி நோன்பு நோற்பவர்கள்? உண்ணாமல், உறங்காமல் நோன்பு நோற்பவர்கள் அல்ல! தமக்கு என்று முயலாமல் பிறர்க்கு என முயலுபவர்கள் யாரோ அவர்கள் தான் நோன்பு நோற்பவர்கள்! அப்படிப்பட்ட நோன்பை மேற்கொண்ட புனிதத் துறவியின் இலட்சியப் பயணம்! கேடும் ஆக்கமும் கெட்ட திருவினராய், ஓடும் செம் பொன்னும் ஒக்கவே நோக்கிய வித்தகத் துறவியின் விரிந்த பயணம்.

**"மண்ணும் மனிதர்களும்"** என்று பெருமையுடன் அழைக்கப்பெறும் இந்த வரலாற்றுப் பயணம் பல சான்றோர்களைச் சந்தித்திருக்கின்றது. எத்தனை உறவுகள்! அப்பப்பா! மனித உறவுகளுக்காக சகலத்தையும் துறந்தவர்கள் நமது மகாசந்நிதானம் அவர்கள். ஒருமுறை

வினோபாபாவே நம் திருமடத்திற்கு வந்திருக்கிறார்கள். வினோபாபாவேயின் கொள்கை மீதிருந்த ஈடுபாட்டின் காரணமாகத் திருமடத்தின் தலைமைப் பொறுப்பைக் கூடத் துறக்கத் துணிந்தார்கள் மகாசந்நிதானம் அவர்கள். பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் இப்படிப் பல தலைவர்கள் அந்த வரிசையில் வருகின்றனர். தந்தை பெரியாருக்கும் நமது மகாசந்நிதானம் அவர்களுக்கும் இருந்த உறவு இலட்சிய உறவு! தமிழ் மக்களின் நன்மை என்ற இலட்சிய அடிப்படையில் கொள்கை வேறுபட்ட இரண்டு இலட்சியத் துருவங்கள் இணைந்து செயல்பட்டன. அறியாமை யுடையவர்கள் அந்த நட்பின் ஆழத்தை அறியாமல் ஐயுற்றனர். மகாசந்நிதானம் அவர்களின் பயணம் "மண்ணும் மனிதர்களும்" என்று உருவாகியுள்ளது. மனித நேயத்திற் காகவே வாழ்ந்த அந்த மகாமுனிவர் மனிதர்களை எப்படி நேசித்திருக்கிறார்கள் என்பதை வரலாறு நமக்கும் விளக்குகிறது.

இதனை நூலாக்கும் கடும் முயற்சியில் தம்மைத் தாரை வார்த்துக் கொண்டவர் அருமைக்குரிய **'கயல்' தினகரன்.** அவர் குருமகாசந்நிதானத்தின் நீண்ட நெடுங்கால நண்பர். இந்த முயற்சிக்குத் தம்மைத் தந்த கயல் தினகரன் அவர்களுக்கு என்றும் நன்றிக் கடப்பாடு உடையோம்! **'மண்ணும் மனிதர்களும்'** என்ற இந்த நூல் **'ஆனந்த விகடன்'** வார இதழில் தொடராக வெளிவந்தது. இந்தத் தொடரை ஆனந்தவிகடனில் வெளியிடச் செய்த ஆனந்த விகடன் **எஸ். எஸ். வாசன்** குடும்பத்தாருக்கும் வாரந்தோறும் கட்டுரைகள் தவறாது வெளியிட அர்ப்பணித்துப் பணியாற்றிய நமது ஆதீனம் **மரு. பரமகுரு** அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றி.

இமயத்தின் உச்சியில் ஏற்றப்பட்ட இலட்சிய தீபம் ஒளியை உமிழ்ந்து கொண்டே இருக்கின்றது. அறியாமை,

*வறுமை நீங்கிடப் புறப்பட்ட இலட்சியப் பயணம்-தொடர் பயணம்! புரட்சிச் சுடர்பிடித்துத் தடம் மாறாத, இலட்சியப் பயணம் என்றும் தொடரும்.*

## வாழ்க மனிதநேயம்
## (மண்ணும் மனிதர்களும்)

கவியரசர் முடியரசனார்

*தொழத்தகு சுந்தரன் தோழமைக் குரியன்
பழுத்த பாவலன் பாரோர் போற்றும்
வலிய தொண்டன் வஞ்சமில் நெஞ்சும்
மெலிபிறை சூடிய மேன்மைக் கொடைஞன்
கண்ணுதற் பெருமான் கருத்தும் பிணைந்தது
பண்ணுறத் தோய்ந்த பைந்தமிழ் ஒன்றால்;*

அதுபோல்,

*குன்றக் குடியிற் குடியமர்ந் ததுமுதல்
என்றன் செந்தமிழ்ப் பாட்டால் இணைந்தவர்
ஈடுபட் டென்னைக் 'கவியர' சென்றனர்,
பீடுடை அடிகள் பெயருக் கேற்றவர்
நாடுயர் வழிகள் நல்கிய பெருமகன்,
மண்ணிற் புழுவென மடியாது மாந்தர்
மண்ணில் நிமிர்ந்து வாழச் சொன்னவர்,
எளியோர்க் கிரங்கும் இளகிய நெஞ்சர்.
எளிமையும் வறுமையும் இருப்பதை நாடார்,
உழைப்போன் வயிற்றில் உறுபசி வந்து
வளைத்து வாட்டி வருவது தாளார்,
ஆலயம்பதி னாயிரம் எழுப் புவதின்
மேலாம் கல்விச் சாலை எழுப்புதல்
எனப்பறை சாற்றும் இயல்பினர், தொழில்கள்*

*வனப்புறக் கண்டவர் வளர்த்தும் வந்தவர்,*
*பண்டித நேருடன் பழகிய பண்பினர்,*
*பண்டைய கொள்கை பகுத்துணர் பெரியார்*
*தொடர்பும் பொதுமையும் மலரும் தோட்டம்.*

*அடரும் பகைமை அண்டாக் கோட்டை,*
*ஏற்றத் தாழ்வுகள் இல்லாப் புதுமை,*
*சாற்றத் துடிக்கும் சமநிலைப் பாசறை,*
*கலகமில் உலகம் காணத் துடிக்கும்*
*உலக அமைதிக் குழைக்கும் வெண்புறா.*

*இனைய நலன்கள் விளையும் நோக்குடன*
*புனையும் துறவு பூண்டவர், அடிகள்*
"மண்ணும் மனிதர்களும்" *என்னுந் தலைப்பில்*
*எண்ணியெழுதினர் விகடன் இதழில்;*
நம் கயல் தினகரன் *நாடித் தொகுத்து*
*என்மனம் களிக்க ஈந்தனர் நூலென;*
*வாழ்க வாழ்க மனித நேயம்*
*வாழ்க தமிழகம் வாழிய உலகே!*

## போற்றி உரை
## (மண்ணும் மனிதர்களும்)

### முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

*பல்லக்குப் 'பவனி', பக்தர்களுக்குத் 'தரிசனம்' அடியவர்களுக்கு 'ஆசி வழங்குதல்' ஆகியனவே ஆதீனத் தலைவர்களின் பணி என்றிருந்த நிலையில், இரவு பகலெனப் பாராது, மக்களோடு ஒன்றிக் கலந்து, அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்குகொண்டு, சமுதாயம் முன்னேறத் தொண்டாற்றுவதே உண்மையான சமயத் தொண்டு என்றெண்ணி மக்களிடையே 'உலா' வந்து கொண்டிருந்தவர்* தவத்திரு குன்றக்குடி அடிகளார். *அவருடைய 'உலா'*

இன்றில்லை; என்றாலும் அந்த உலாவின் நோக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருட்டிரு தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் என்ற பெயருடன் பட்டம் பெற்ற போதிலும் 'அடிகளார்' என்றே அனைவராலும் அன்பொழுக அழைக்கப்பட்டு வந்தார். 'அடிகளார்' என்று சொன்னாலே அது குன்றக்குடி அடிகளாரைத்தான் குறிக்கும் என்னும் நிலை மலர்ந்தது.

பொருளாதாரத்தில் 'மார்க்சியமும்', சமுதாயச் சீர் திருத்தத்தில் 'பெரியாரியமும்', மனித நேயத்தில் 'காந்தியமும்' என இம்மூன்றும் ஒன்றாகி இணைந்த தனி இயமாக 'அடிகளாரியம்' இருந்து வந்தது.

அடிகளார் இன்று நம்மிடம் இல்லையென்றாலும் அவருடைய சிந்தனைகள் இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றுவிட்டன.

பொதுவாக, துறவியர், துறவு பெற்றதற்கு முன் நிகழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறுவதில்லை; நம் அடிகளாரோ தம் இளம் வயது நிகழ்ச்சிகள் எதிர்காலச் சந்ததியினர்க்குப் பாடமாகக் கூடியவை என்ற உணர்வோடு ஒரு சிலவற்றைக் கூறியுள்ளார்.

வர்க்க உணர்ச்சியை எதிர்க்க வேண்டுமென்பது அவருடைய குருதியிலேயே கலந்து நின்ற ஓர் உணர்ச்சியாகத் திகழ்கிறது. ஊரில் இருந்த ஓர் மன்றத்தில் செய்தித் தாட்களை அனைவரும் படிக்க வாய்ப்பில்லை என்ற நிலை நேர்ந்தபோது அடிகளார் உடனடியாகச் சில இளைஞர்களை ஒன்று திரட்டி 'வினோபாபாவே வாசகசாலை' என்ற ஒன்றைத் தொடங்கி அதனைப் பொது இலவச வாசகசாலை யாகச் செய்திருக்கிறார்.

பொதுத் தொண்டிலேயேயும் அவருக்கு இளம் பருவத்திலேயே நாட்டம் இருந்திருக்கிறது. ஊர்க் குளத்தருகே

துர்நாற்றம் வீசியபோது மக்கள் அங்கு செல்வதைத் தவிர்த்தனரே தவிர, துர்நாற்றத்திற்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய முன்வரவில்லை. இளமைப் பருவ அடிகளார் தம் நண்பர்களுடன் அங்கு சென்று, அருகிருந்த பிள்ளையார் கோயிலின் உள்ளே செத்துக் கிடந்த நாயின் நாற்றமே அது என்பதை உணர்ந்து, புழுத்துப் போன சதைத் துணுக்குகளை அப்புறப்படுத்தித் தூய்மையாக்கியிருக்கிறார்.

பழமையை ஒரு சிறகாகவும் புதுமையை ஒரு சிறகாகவும் கொண்டு வாழ்க்கை வானில் மக்கட் சமுதாயம் பறக்க வேண்டுமென்பது அடிகளாரின் விருப்பம். பழமை என்பதற்காகவே எதையும் அழித்தொழிக்க வேண்டியதில்லை; புதுமை என்பதற்காகவே எதையும் கண்மூடி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுமில்லை. "பழமையே புதுமையாக மாறிக் கொண்டிருக்க வேண்டும்; புதுமையாகப் பரிணமிக்காத பழமையாக இருப்பின் அந்தப் பழமை ஒன்றுக்கும் ஆகாது" என்பது அடிகளார் வாக்கு.

கருத்து வேறுபாடுடையவர்களிடம் பகை பாராட்டுதல் தவறு. அவர்களோடு பேசி இருவருக்கும் இயைந்த ஒரு சரியான முடிவுக்கு வரவேண்டும் என்பதில் அடிகளார் மிகுதியும் அக்கறை கொண்டவர். தந்தை பெரியாரை முதலில் அடிகளார் ஏற்கவில்லை; ஆனால் பெரியார் அவர்களைக் கண்டு உரையாடியதன் பின்னர் பெரியார் கூறும் கருத்துகளிலுள்ள உயிர்த் தன்மையை உணர்ந்தார் - மூடநம்பிக்கை ஒழிப்பில் பெரியாரோடு முற்றிலுமாக ஒன்றுபட்டு உழைத்தார்.

சாதி, சமயக் கொடுமைகளைச் சுட்டிக்காட்டினார் பெரியார். "இவற்றைக் கடவுள் செய்யவில்லை" என்றார் அடிகளார். "அப்படியானால் இந்த அநியாயத்தைக் கடவுள் ஏன் தட்டிக் கேட்கவில்லை" என்றார் பெரியார். பெரியார் கூறுவது நியாயந்தான் என்பதை அடிகளார் உணர்ந்தார்.

சாதிக் கொடுமை, மூடநம்பிக்கை ஆகியவற்றை ஒழிப்பதில் பெரியாரோடு ஒன்றிணைந்து செயலாற்றினார்.

பலருடன் கூடி வாழ வேண்டுமானால் முரண்பாடுகளை - மாறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல்-விரிவு படுத்தாமல் பழகக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அடிகளாரின் ஆழ் மன எண்ணம்.

சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுடைய தொடர்பு அடிகளாரிடம் தமிழ்ப் பற்றை ஊட்டியது, அருட்டிரு விபுலானந்த அடிகளாரிடம் பணி விடை செய்ததால் தீண்டாமை விலக்கு உணர்வும் மனித நேயமும் அடிகளார்க்கு வாழ்க்கைக் குறிக்கோள்கள் ஆயின.

தந்தை பெரியாருடன் ஏற்பட்ட பிணைப்பால் மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்க வேண்டுமெனும் உணர்வு மீதூரப் பெற்றது. பேரறிஞர் அண்ணாவின் தொடர்பு "மறப்போம்; மன்னிப்போம்" என்ற தத்துவத்தைத் தந்தது. இவ்வாறு ஒவ்வொருவரிடமும் பழகிய போது அடிகளார்க்கு ஒரு தாக்கம் ஏற்பட்டது போல, அடிகளாருடைய வாழ்வும் தொண்டும் நம்மிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. என்ன அது?

*மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்*
*அறிவு விரிவு செய்; அகண்ட மாக்கு*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு!*
*மானிட சமுத்திரம் நானெனக் கூவு*
*பிரிவிலை எங்கும் பேதமில்லை;*
*உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!*
*புகல்வேன், 'உடைமை மக்களுக்குப் பொது'*
*புவியை நடத்து பொதுவில் நடத்து;*

எனும் பாவேந்தரின் இப்பாடலடிகளின் கருத்தே அடிகளாரின் வாழ்வு நமக்குத் தரும் பாடம்.

"வாழும்போது புகழப்படுதல் புகழ் அன்று; அது முகமனே ஆகும். அல்லது எதிர்பார்ப்புக்குரிய கையூட்டே யாகும். ஒருவர் இறந்தபின், இறந்தவரின் சமுதாய நடப்பியலுக்கு அவருடைய தேவையை, இருப்பை எண்ணிப் பேசும் புகழே புகழ்"-புகழுக்கு அடிகளார் தந்துள்ள விளக்கம்.

நாட்டின் இன்றைய அவலங்களை எண்ணும் போது அவற்றை களைய அடிகளார் இல்லையே என்று நாம் எண்ணும்படியான புகழ் வாழ்வு வாழ்ந்திருக்கிறார் அடிகளார்.

பக்கத்திற்குப் பக்கம் அடிகளாரின் திருவுருவை திகட்டா வண்ணம் எடுப்பாக வெளியிட்டு 'ஆனந்த விகடன்' வார இதழில் வெளியான தொடர் கட்டுரையைத் தொகுத்து அழகுற நூலாக்கியிருக்கிறார் அருமை நண்பர் கயல் தினகரன்.

அடிகளார் அவர்களிடம் நீண்ட காலம் அணுக்கமாகப் பழகியதோடு, அடிகளாரின் மனித நேயம் பற்றியும், அவர் திருத்தொண்டுகள் குறித்தும் ஏராளமான செய்திகளை இதயத்தில் வைத்திருக்கிறார் கயல் தினகரன். அவைகளை எழுதி வடித்து எதிர்காலச் சமுதாயம் ஏற்றம் பெற நூலாக்கித்தர வேண்டும் என்பதே நம் அவா.

அடிகளாரின் புகழ் போற்றி, அவர் வழி நின்று நாம் கடமையாற்ற உறுதி பூணுவோமாக!

# பின்னிணைப்பு

ஒ.XVI.36

## 'பொன்'னுரை

### தவத்திரு பொன்னம்பல அடிகளார்

நேரு பெருமகனாரின் பொது வாழ்க்கையில் மகாத்மாவின் தாக்கம் இருந்தது. ஒரு படைப்பாளியின் படைப்புகளில் தாம் ஏற்றுக்கொண்ட இலட்சிய புருஷரின் தாக்கம் இருப்பது இயல்பு! வெகுசிலருக்கே தாம் ஏற்றுக்கொண்ட இலட்சியத் தலைவர் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவது உண்டு. பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு விண்பழித்து மண்ணில் கால்பதித்து இறைவன் திருவடி தீட்சை தருவது உண்டு. இறைவனின் உய்விக்கும் பணியில் சில நேரங்களில் பக்குவப்படாத ஆன்மாக்களுக்கும் அவன் அருட்பார்வை அமைந்து விடுவதுண்டு.

**'தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே!'**

என்று குருவருள் வழியே திருவருளும் துணை நிற்க, சில ஆன்மாக்களுக்கு இன்ப அன்புப்பேறு வாய்ப்பதுண்டு. மணிவாசகப் பெருமானுக்குக் குருந்தமரத்தடியில் இறைவனின் திருவடி தீட்சை வாய்க்கப் பெற்றது. கடைக்கோடி ஆன்மாவாகிய நம்மை எப்படி இறைவன் இறைபணிக்குக் குருவருளின் வழியே ஆட்படுத்தினான்? என்னே, அவன் எளிவந்த கருணைப் பெருவெள்ளம்!

போகங்களைத் துய்த்து மகிழவேண்டிய சித்தார்த்தர் எப்படி போதிமரத்தடிப் புத்தராக மாறினார்? கண்ணியம் மிக்க ஆங்கிலக் கனவானாக லண்டன் மாநகரில் உலா வந்த மோகனதாஸ் கரம்சந்த், ஆசைகள் துறந்ததன் அடையாளமாய் ஆடைகள் துறந்து அரைநிர்வாணப் பக்கிரியாய், மகாத்மாவாய் உலா வந்தாரே! இப்படி மகத்தான மனிதப் புனிதர்களைப் போல் அல்லாமல் கனவுகளையும் கற்பனைகளையும் சுமந்து திரியும் ஒரு சராசரி இளைஞனைத் துறவுப் பாதைக்கு மாற்றியது எது? காந்தம் கண்ட இரும்புபோல் நம்மைக் கவர்ந்து இழுத்தது எது? குருமகாசன்னிதானத்திடம் பிறைநிலாவாகத் தொடங்கிய உறவு நிறைநிலாவாக வளர்ந்தது. பின்னோக்கிய நிகழ்வுகள் நம்மைக் கரைத்து இழுத்துச் செல்கின்றன.

பூர்வாசிரம நாள்கள்!

நம் அருள்நெறித் தந்தை குருமகாசந்நிதானம் மதுரைக் கிளைத் திருமடத்திற்கு எழுந்தருளும்போது சிறிய வயதில் வணங்கி அருட்பிரசாதம் பெற்றதுண்டு. நகர வளர்ச்சி நெருக்கடியால் மகாசன்னிதானம் பயணியர் விடுதியில் தங்கும் நிலை ஏற்பட்டது. நாமும் கல்வி பயின்ற காலத்தில் மகாசன்னிதானத் தைத் தரிசிக்கின்ற வாய்ப்பு நமக்குக் குறைந்து போனது.

**'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்'**

என்ற குறளுக்கு ஏற்ப, சேய்மையிலிருந்து மகாசன்னிதானத்தின் செயல்களைச் செய்தித் தாள்கள், வானொலி வழியே உற்றுநோக்கி உள்ளக்கிழியில் உரு எழுதி வந்தோம். கல்லூரியில் பயிலத் தொடங்குகின்ற காலத்தில் மதுரையில் நடைபெறும் மகாசன்னிதானத்தின் ஆன்மீக, இலக்கிய சொற்பொழிவுகளைத் தொலைவிலிருந்து கேட்கும் தொண்டர் ஆனோம்.

வயிற்றுக்கும் மூளைக்கும் போராட்டம்! எப்பொழுதும் வயிறுதானே வெற்றிபெறும். நம் வாழ்விலும் அதுவே வெற்றி பெற்றது. வாழ்க்கைக்கு வழிகாட்டவேண்டிய கல்வியைத் தேர்ந்தெடுக்கும்பொழுது வயிற்று ஊருக்குப் போகின்ற பாதைதானே என்று பலமுறை சரிபார்த்துவிட்டுப் பலரும் வழிதவறிப் போகின்றார்கள். அறிவியல், பொறியியல், மருத்துவஇயல் பயின்றால் தங்கத்தட்டில் வேலை கிடைக்கும் என்றும் தமிழ் இலக்கியம் பயின்றால் வாழ்வில் எதிர்காலமே இல்லை என்றும் கருதும் வழக்கமான மாயையில் நாம் சிக்கிக் கொண்டோம். எந்தத் துறையினைத் தேர்ந்தெடுத்தாலும் தேர்ந்தெடுத்த துறையில் கடுமையான உழைப்பு. விடாமுயற்சி, தன்னார்வம், அர்ப்பணிப்பு உணர்வு இருந்தால் முன்னேறலாம் என்பதை இளைய தலைமுறைக்குச் சுட்டிக் காட்டும் வழி காட்டுதல்கள் எப்பொழுதும் குறைவு. அறிவியல் அமிலத்திற்குள் நம் தமிழ் இலக்கியத்தாகம் அவிந்து போனது. இலக்கிய மேடைகளில் உலாவந்த சுதந்திரச் சிறகுகள் வெட்டப்பட்டன. ஆய்வுக்கூடமே தவச்சாலை ஆனது. அமிலத்தில் வெந்து போன இலக்கிய இதயத்தின் இலக்கியத் தாகத்தைத் தீர்க்கும் அமுத ஊற்றாய் அருள்நெறித் தந்தையின் மேடைகள் நம்மை ஈர்த்தன. அருள்நெறித் தந்தையின் இரவு நேரப் பல்கலைக்கழகங்களில் தூர இருந்து அகரம் வாசிக்கும் ஏகலைவனாய் நாம்.

குருநாதருக்குக் கட்டை விரலைக் காணிக்கையாய்த் தந்த ஏகலைவன்போல் அன்றி நம்மையே காணிக்கையாய் ஒப்படைக்கப் போகின்றோம் என்பதை அந்நாளில் நாமும் எவரும் அறிந்திடவில்லை. கல்லூரியில் பட்ட வகுப்பு இரண்டாம் ஆண்டு பயின்று கொண்டிருந்த நேரம். மதங்களின் வலிமையை மண்டை ஓடுகளின் எண்ணிக்கையால் மதவெறியர்கள் எண்ணிக் கொண்டிருந்த நேரம். மீண்டும் ஒரு நவகாளி! குமரிமுனையில் கருங்கடலுக்கு அருகே செங்கடல்! மனிதக் குருதியால் மண்டைக் காடுப் பகுதி முழுவதும் செங்கடல்!

உயிர்ச்சேதம்! பொருட்சேதம்! மதவெறித் தீயை அணைக்க முடியாது அரசு நிர்வாக இயந்திரம் கூட ஸ்தம்பித்தது! குமரிமுனையில் தோன்றிய 'நவகாளி'யை அடக்க எந்த மகாத்மாவைத் தேடுவது? என்று பரிதவித்துக் கொண்டிருந்த வேளையில் குன்றக்குடியில் இருந்து அமைதியின் தூதுவர் குமரிமுனைக் கலவரத்தை அடக்கப் புறப்பட்டார். உயிரைப் பணயம் வைத்த பயணம்.

மகாத்மா நவகாளியில் மதக் கலவரத்தை ஒடுக்கியதைப் போல, மனித நேய மகாத்மா மண்டைக்காட்டுக் கலவரத்தை அடக்கியதை மனித நேயம் விரும்பும் எவரும் எண்ணி எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. நமது உள்ளத்து உணர்வுகள் ஒருங்கே திரள மகாசன்னிதானத்தை எண்ணி அழுத உணர்வுகள் வரிகளாயின. கவிதை இலக்கண வரம்புக்குள் வராத அந்த வரிகளை என்ன பெயரிட்டு அழைப்பது? தெரியவில்லை! நமது உள்ளத்து உணர்வுகளை ஏட்டில் பதிவு செய்து அன்றாடம் அடைகாத்து வந்தோம். பின்னாளில், அந்தக் கவிதை நாம் ஆசிரியர் பொறுப்பில் இருந்த 'மணமலர்' இதழில் வெளிவந்தது. அனுமன் இராமநாமம் செபித்ததைப் போல 'மணமலர்' ஆசிரியர் பொறுப்பில் இருந்து நாம் எழுதிய முதலும் கடைசியுமான எழுத்து மகாசன்னிதானத்தைப் பற்றிய கவிதை மட்டும்தான்! 'மனித நேய மகாத்மாவே!' என்று தலைப்பிட்டுத் தொடங்கிய வரிகள் இவைதான்!

**'மண்டைக் காட்டில்'**
**மதங்களின் வலிமையை**
**மண்டை ஓடுகளின் எண்ணிக்கையால்**
**மதவெறியர்கள் எண்ணிக்கொண்டிருக்கையில்**

உம்மால்தான்
பல மனிதப் படுகொலைகள்
தடுத்து நிறுத்தப்பட்டன!
கபால ஓடுகளையும் மனிதக் குருதியையும்
அடையாளச் சின்னமாய் அணிந்த
ஆயுதம் ஏந்திய வன்முறையாளர்களை
அமைதி வழிக்குத் திருப்பிய
புதிய அகிம்சாமூர்த்தி நீர்தான்!
அனல் பறக்கும் கந்தகக்காட்டின்
வெப்பத்தைத் தணிக்க
கற்பக விருட்சமே!
மனிதப் புனிதரே!
மனித நேய மிகுதியால்
நீர்விட்ட கண்ணீர்த்துளிகளே
மதவெறித் தீயை அணைத்த
'புனித நீர்'!
இரும்புப் பெட்டிகளில் சிறையிருந்த
இலக்கியத்தை எடுத்து
ஏழைகளுக்குப் பரிமாறியவரே!
பாமரனையும்
பைந்தமிழ் இலக்கியத்தேன் பருகச்
செய்த பாரிவள்ளலே!
வெறும்கையில் விபூதிகுங்குமம்
வரவழைக்கும்
மாயத்துறவியல்ல நீர்!
ஆனாலும்
ஏமாற்றங்களிலே வாழ்கின்ற
மக்களின் வாழ்க்கையில்
மாற்றங்களை நிகழ்த்துகின்ற
மந்திரவாதி நீரே!
உம்பார்வை பட்ட பின்தான்
பாலைகள் எல்லாம் பசுஞ்சோலைகளாயின!

நடக்க இயலாத நெருஞ்சிக் காடுகளும்
நந்தவனங்களாயின!
சஹாராக்களைக் கூடச் சமவெளிகள்
ஆக்கிய சாதனையாளரே!
ஆட்டுப்பாலும் நிலக்கடலையும்
தின்றவாறே
ஏகாதிபத்தியத்தை எஃகு குரலில்
அதட்டினாரே காந்தியடிகள்!
அவர்,
மறைந்து விட்டார் என்றிருந்தோம்!
இல்லை! இல்லை!
சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸின் பகுத்தறிவு,
பேரறிஞரின் பேச்சாற்றல்,
விவேகானந்தரின் ஆன்மீகப் பணி,
நேருவின் சோசலிஸம்
மகாத்மாவின் மனிதநேயம்
ஆகிய அனைத்தின் ஓர் உருவாய்
தவக்கோலத்தில்
தமிழ்மாமுனிவராய் அவதரித்தவரே!
காந்தியின் காலம் ஏசுவின் காலம்
என்பதுபோல்
அடிகளாரின் காலம் என்பதை
வருங்கால வரலாற்று ஏடுகள்
எழுதி வைக்கும்.
அவர் காலத்தில் நாமும் வாழ்கிறோம்
என்ற பெருமையுடன்
அவரின் தூய மனிதநேயப்
பணியினைப்
பலப்படுத்தும் அரணாய் அமைவோம்!"

தொலைவிலிருந்து ஆன்ம நாயகராக மகாசன்னிதானத்தின்பால் கொண்ட பக்தி வளர்பிறை என வளர்ந்த வண்ணம் இருந்தது. நவீனத்தை ரசிக்கின்ற இளைஞனின் ஆன்மத் துடிப்பினை மகாசன்னிதானம் உசுப்பிவிட்டார்கள்.

முதன்முறையாகப் பட்டம் பெற்ற கையோடு மகா சன்னிதானத்தை, குன்றக்குடியில் தரிசித்தோம். குன்றக்குடி மேல்மாடிக் கொட்டகையில் மகாசன்னிதானத்தின் தரிசனம்! மகாசன்னிதானத்தின் நம் முதற் சந்திப்பு! நமது விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்துவிட்டு நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கினோம். மகாசன்னிதானம் பார்த்த முதற்பார்வை ஆழமான அர்த்தம் நிறைந்ததைப் போல் இருந்தது. நமக்குப் புரியவில்லை. நம்மிடம் சில நிமிடம் பேசினார்கள். விடைபெற்ற நாம் கீழே இறங்கும்பொழுது அருகிலிருக்கும் ஊழியரிடம் "இவரைத் தெரியுமா?" என்று கேட்டார்கள். "மதுரை மணிமகன் என்பது மட்டும் தெரியும்; நமக்குப் பழக்கம் இல்லை" என்று அவர்கள் கூறியது படியில் இறங்கும் நம் செவிகளில் விழுந்தது. பார்த்த முதற்பார்வையின் பொருள் பின்னர்தான் நமக்குப் புரிந்தது.

மகாசன்னிதானத்தின் மதுரைப் பயணங்களின் பொழுது நாம் உடனிருந்து தொண்டு செய்வது பழக்கம். மகாசன்னிதானம் புறப்பட்டுச் செல்லும்வரை உடனிருந்து இட்டபணி நிறை வேற்றுவோம். மகாசன்னிதானம் நிறைய விஷயங்களை நம்மோடு விவாதமுறையில் கேட்பார்கள். மதுரையில் ஒரு கூட்டம் முடிந்ததும் சின்னாளப்பட்டியில் பட்டிமன்றம். மகாசன்னிதானம் மகிழ்வுந்தில் ஏறச் சொல்லி உத்தரவு. மகிழ்வுந்தில் ஏறிவிட்டோம். பயணத்தின்போது பல வினாக்கள் கேட்கப்பட்டன. பட்டிமன்றம் முடிந்து திரும்பி வரும்பொழுது பட்டிமன்றத்தின் தீர்ப்பைப் பற்றிக் கருத்துக் கேட்டார்கள். கூறினோம். மகிழ்ந்து பாராட்டினார்கள். மதுரையில் நடந்த திருக்குறள் பேரவை மாநில மாநாட்டில் "திருக்குறள் காலம் கடந்த நூலா? காலத்தை வென்று விளங்கும் நூலா?" என்ற பட்டிமன்றத்தில் அவர்கள் வழங்கிய அருமையான தீர்ப்பு! "திருக்குறள் காலம் கடந்து விளங்குகின்றது. ஆனால் காலத்தை வென்று விளங்கவில்லை" என்று கூறிய தீர்ப்பில் நாம் உறைந்து போனோம்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட கறுப்புதினம்! சரித்திரம் தன் மதவெறித் தீயை மீண்டும் பதிவு செய்து கொண்ட துக்க நாள். எந்தச் சமய பீடமும் அதைப்பற்றி அக்கறை காட்டவில்லை. மதுரை வீதியில் மதவெறியை எதிர்த்து மகாசன்னிதானம் குரல் கொடுத்தார்கள். மதுரையில் மிகப் பிரமாண்டமான சமய நல்லிணக்கப் பேரணி! மகாசன்னிதானம் ஒரு வாரம் முகாமிட்டு

நல்லிணக்கப் பேரணிப் பணி ஆற்றினார்கள். மகாசன்னிதானம் இட்ட கட்டளையை நாம் நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். பேரணிக்கு இருதினங்களுக்கு முன்பு நாம் மகாசன்னிதானத்திடம் நமது கருத்தை விண்ணப்பித்தோம். "சமய நல்லிணக்கம் ஒருதரப்பாய் இருந்துவிடக் கூடாது" என்றும், "சிறுபான்மை மக்கள் பெறும் சலுகைகள், உரிமைகள்" பற்றியும் பேசினோம். மகாசன்னிதானம் நம்மோடு மிக நீண்ட நேரம் பேசினார்கள். நிறைவில் நல்லிணக்கத்திற்கு நாம் இணங்கினோம். பேரணிப் பணிகள் மிக விரைவாகவும் நிறைவாகவும் சிறப்பாகவும் நிகழ்ந்தன. பிரமாண்டமான பேரணி மிகச் சிறப்பாக நடந்தேறியது. பலரும் பாராட்டினார்கள்.

குன்றக்குடியின் உற்பத்திப் பொருள்களின் சந்தை வாய்ப்பிற்கான விற்பனை மையம் ஒன்று மதுரையில் தொடங்க வேண்டும் என்று ஆணை இட்டார்கள். நாமே விற்பனை மையத்தைத் தொடங்குவதாக ஒப்புக் கொண்டு, "குன்றக்குடிச் சிறப்பங்காடி" என்ற பெயரில் பல்பொருள் அங்காடி தொடங்கப் பெற்றது. சிவகங்கை 'பிரியதர்சினி' தொலைக்காட்சிப் பெட்டி முதல் குன்றக்குடியில் தயாரான ஊறுகாய், ஜாம் வரை அனைத்தும் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் தொடக்க விழா! மகாசன்னிதானம் தலைமை ஏற்று அங்காடியைத் திறந்து வைத்தார்கள். மண்டல இணைப்பதிவாளர், காவல்துறைக் கண்காணிப்பாளர், தொழில் வணிகக்கழகத் தலைவர் சோலன்கி முதலியோர் பங்கேற்றனர். விழாவில் நாம் வரவேற்றுப் பேசினோம். மகாசன்னிதானம் நம் வரவேற்புரையைக் கூர்ந்து கேட்டார்கள். நமது வரவேற்புரைக்கு அரங்கில் மிகுந்த வரவேற்பு! எல்லாப் பெரியவர்களும் நம் பேச்சைக் குறிப்பிட்டுப் பாராட்டிப் பேசினார்கள். தொழில் வணிகத் தலைவர் ஜெட்டலால் சோலன்கி "புதிய நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதி * கணேசனை எங்களுக்குத் தாருங்கள்," என்றும் மேடையில் பேசினார். விழா நிறைவாக அமைந்திருந்தது. விழா முடிந்த பின்பும் நாமே பேசப்பட்டோம். ஆண்டுகள் இரண்டு ஓடுகின்றன. ஒருநாள் மதுரை தமிழ்நாடு தங்கும் விடுதியில் இருந்து - மகாசன்னிதானத்திடமிருந்து தொலைபேசி அழைப்பு! எப்பொழுதும் பயணத்திட்டம் பற்றிய அஞ்சலட்டை. மதுரைப் பயணமாய் இருந்தால் மதுரை அலுவலகத்திற்கு வந்து விடும்.

---

* நம் பூர்வாசிரமப் பெயர்

அப்படி அஞ்சலட்டை எதுவும் வரவில்லை. நெல்லையில் இருந்து திரும்பி வரும்பொழுது மகாசன்னிதானத்தின் இடைத்தங்கல். அப்படித் தங்குவதாகப் பயணத்திட்டத்தில் இல்லை. உடன் பயணம் செய்தவர்களுக்கும் புரியவில்லை. காலையில் 10 மணிக்கு மகாசன்னிதானத்தின் அறைக்குள் நமக்கு அழைப்பு! அறைக்குள் சென்று வணங்கி ஆசி பெற்றோம். மகாசன்னிதானத்தின் உரையாடல் தொடர்ந்து மாலை 6 மணி வரை நீண்டது. நம்மிடம் பல வினாக்கள்! தொண்டு வாழ்க்கைக்கு, துறவு வாழ்க்கைக்கு நமக்கு அழைப்பு! உலகியல் வாழ்க்கையில் சராசரி நிலையில் உள்ள நாம் பக்குவ வாழ்வுக்குப் பழக்கப்பட இயலுமா? என்று நமது மறுப்பு. மகாசன்னிதானம் நவீனத்தை நேசிக்கின்ற, நம்முள் மறைந்திருந்த ஆன்மத் தேடலை அடையாளம் காட்டினார்கள். நீண்ட மௌனம் சம்மதமாய் ஏற்கப்பட்டது. ஆசி வழங்கினார்கள்.

மகாசன்னிதானம் ஞானபீடம் ஏறிய நாற்பதாம் ஆண்டு விழா திருமடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் மறுநாள்தான் நம் ஆதீனப்புலவர் மரு. பரமகுரு அவர்களின் இல்லத் திருமண விழா. அந்தத் திருமணவிழாவில் கலந்து கொள்வதே நமது திட்டம். ஆனால் மதுரையில் புதிதாக வணிகம் தொடங்கும் நண்பர் ஒருவர், தான் புதிய கட்டிடத்தை வாடகைக்குப் பெறுவதற்காக நம்மையும் வற்புறுத்தி அழைத்தார். நாம் "மறுநாள் திருமணத்தில் கலந்து கொள்கின்றோம். இணைந்து அந்தப் பணியையும் முடிக்கலாம்" என்று சொன்னோம். அந்த நண்பர் மறுத்து விட்டார். "இந்த நாள்தான் நல்லநாள். அவசியம் வரவேண்டும்" என்று வற்புறுத்தி அழைத்து வந்தார். நாம் வந்தது தெரிந்ததும் மகாசன்னிதானத்திடமிருந்து அழைப்பு! "இன்று நல்ல நாள். இன்றைக்கு இங்கே இருக்கலாம்" என்று மகா சன்னிதானத்தின் உத்தரவு. "வீட்டில் சொல்லி வரவில்லை. சொல்லி வருகின்றேன்." என்று நம்முடைய பதில். "பிறகு சொல்லிக் கொள்ளலாம்" - இது மகாசன்னிதானம். நிகழ்வது யாதும் நமக்குப் புரியவில்லை. எல்லாம் அவன் அருள்! அவன் செயல்!

**"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்;**

**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;**
**தன்னை மறந் தாள்தன் நாமம் கெட்டாள்;**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!"**

என்ற அப்பர் பெருமானின் திருவாக்கு நம் வாழ்வைப் பொருத்தவரையில் முழுமையும் உண்மையாயிற்று! உறவுகளைத் தவிர்த்துத் துறவு என்னும் விரிந்த உலகில் உலக உறவுகளை நம் உறவுகளாய்ப் பேணும் பயணம் தொடர்கின்றது.

'மண்ணும் மனிதர்களும்' நம்மைப் பக்குவப் படுத்தியது. இமயத்தின் சுமை இந்தச் சிறிய குருவியின் தலையில் ஏற்றப்பட்டுள்ளது. இருந்த பொழுதும் நம்பிக்கைச் சிறகை நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு உயரப் பறந்து உலகை வலம் வருவோம்! மனித நேய மகாமேரு காட்டிய திசையில் தடம் மாறாத பயணம் என்றும் தொடரும்! நம் அருள்நெறித் தந்தை அறியாமை இருள் அகற்ற உதிர்த்த ஞான மொழிகள் பேச்சிலும், எழுத்திலும் வந்தவை, இங்கு நூலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ அரை நூற்றாண்டு கால மேடைத் தவமும், எழுத்துத் தவமும் நூல்வரிசையாக நம் கையில்! நூலைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்ட மகாசன்னிதானத்துடன் உடன் உறைந்து, உடன் வாழ்ந்து இன்று நமக்கு மகாசன்னிதானத்தின் தடத்தை அடையாளம் காட்டிவரும் ஆதீனப்புலவர் மரு. பரமகுரு, காரைக்குடி இராமசாமி. தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் தமிழாகரர் தெ. முருகசாமி, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன், 'எழுத்துச் செம்மல்' குன்றக்குடி பெரிய பெருமாள், ஆதீனப்புலவர் க. கதிரேசன் ஆகியோருக்கும் இந்நூல்வரிசையைச் சிறப்பாகப் பதிப்பித்து முத்திரை பதித்த வித்தகர் பதிப்புச்செம்மல் மெய்யப்பனார் அவர்களுக்கும் நெஞ்சுநிறை நன்றி! வாழ்த்து! பாராட்டுக்கள்!

தமிழகம் மேம்பாடுற இந்நூல்வரிசை பயன்தரும்!

என்றும் வேண்டும்
இன்ப அன்பு.

*(பொன்னம்பல அடிகளார்)*

# பதிப்புக் குழுவின் செய்தி

1989 ஆம் ஆண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அதன் பொன்விழாவைக் கொண்டாடியது. அவ் விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் பன்னிருவருக்குக் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கியது. பட்டம் பெற்றவர்களுள் வணக்கத்துக்குரிய குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் ஒருவர். பட்டமளிப்பு விழாவில் அடிகள் பிரான் கலந்துகொண்ட பின் ஓய்வுக்காகச் சிதம்பரத்தில் உள்ள பயணிகள் மாளிகையில் தங்கியிருந்தார்கள். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவரும் அடிகள் பிரான்பால் பேரன்புடையவருமான டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் அடிகள் பிரானைக் கண்டுகொண்டார். அப்போது "அடிகளார் எழுதி வெளிவந்துள்ள எல்லாப் புத்தகங்களையும் பொருள் வாரியாகப் பிரித்துத் தொகுத்துத் தந்தால் மணிவாசகர் நூலகம் மூலம் வெளியிடலாம் என்று விரும்புகிறேன்" என்று அடிகள் பிரானிடம் தெரிவித்தார். அப்போது அடிகள் பிரான் ஆவன செய்வோம் என்றார்கள். சில திங்கள் கழிந்தபின் தொகுப்புப் பணி தொடங்காத நிலையையறிந்த டாக்டர் ச. மெய்யப்பனார் காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் மூலமாகத் தொகுப்புப் பணியைச் செய்யத் தூண்டினார்கள். ஆயினும் அடிகள் பிரான் காலத்தில் இப்பணி தொடங்கி நிறைவேறத் திருவருள் கூட்டிவைக்கவில்லை.

1995 ஏப்ரல் 15இல் அடிகள் பிரான் பரிபூரணம் எய்தினார்கள். அதன்பின் 1999 இல் ஒரு நாள் குன்றக்குடி வந்த டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் இப்போதைய குருமகா சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களைக் கண்டுகொண்டு இந்நூல் தொகுப்புப் பணி பற்றிக் கூறினார்கள். குருமகாசந்நிதானமும் இசைவளித்தார்கள். டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களின் ஆலோசனையையும் பெற்று பதிப்பாசிரியர் குழு அமைக்கப்பெற்றது.

| | |
|---|---|
| முதன்மைப் பதிப்பாசிரியர் | தவத்திரு பொன்னம்பல அடிகளார் |
| செயலர் | பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன் |
| பதிப்பாசிரியர் குழு | தமிழாகரர் தெ. முருகசாமி |
| | நா. சுப்பிரமணியன் |
| | குன்றக்குடி பெரியபெருமாள் |
| | க. கதிரேசன் |
| | மரு. பரமகுரு |

என அக்குழு அமைக்கப்பெற்றது. இக்குழு கூடி அடிகள்பிரான் எழுதிய புத்தகங்கள் அனைத்தையும் தொகுத்து,

*திருக்குறள்*
*இலக்கியம்*
*சமய இலக்கியம்*
*சமயம்*
*பொது*

என்று ஐந்து பெரும் பிரிவுகளாக வெளியிடலாம் என முடிவு செய்தது. திருக்குறள் பற்றிய முதலிரண்டு தொகுதிகள் டிசம்பர் 1999 இல் வெளிவந்தன.

பின் இப்பணியில் ஒரு தேக்கம். அடிகள்பிரான் எழுதிய புத்தகங்களில் சில கிடைக்கவில்லை. எல்லாப் புத்தகங்களையும் முழுதாகச் சேகரித்துக் கொண்டால்தான் பொருள் வாரியாகத் திருத்தமுறத் தொகுக்க இயலும் என்று பதிப்பாசிரியர் குழு கருதியது. கைவசம் இல்லாத புத்தகங்களைத் தேடியது. இது பெருமளவு காலதாமதத்தை ஏற்படுத்தியது. டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் தூண்டுதல் வேகமாக இருந்தமையால் சில புத்தகங்கள் கிடைக்காத நிலையிலும் தொகுப்புப் பணி தொடர்ந்து நடைபெற்றது. பதின்மூன்றாம் தொகுதி தொகுத்து அச்சுக்கு அனுப்பிய நிலையில் பலவகையால் தேடியும் கிடைக்காத ‘சொல்லமுதம்’, ‘சமய மறுமலர்ச்சி’ எனும் இரண்டு புத்தகங்களும் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்களின் முயற்சியால் கிடைத்தன. இதனை இப்பதிப்புப் பணியை அங்கீகரித்த திருவருள் குறிப்பாகவே நினைக்கின்றோம். இவையிரண்டு புத்தகங்களிலும் இருந்து கட்டுரைகள் பல, முன் தொகுதிகளில் இடம் பெறத்தக்கவையாக இருந்தன. அவற்றில் சேர்க்க இயலாத நிலையில் புதிய தலைப்புகள் தந்து உரியவாறு

பிரிக்கப்பட்டுப் பதினைந்தாம் தொகுதியில் அமைக்கப் பெற்றுள்ளன என்பது வாசகர்கள் அறிந்து கொள்ளவேண்டிய செய்தி.

இத்தொகுதிகளில் உள்ள கட்டுரைகள், கவிதைகள் ஏற்கெனவே வெளிவந்த புத்தகங்களில் பதிப்பிக்கப்பெற்றவை மட்டுமல்ல, கையெழுத்துப் படிகளாகவும் தட்டச்சுப் படிகளாகவும் இதழ்களில் வெளிவந்து புத்தக உருவம் பெறாதவைகளாகவும் இருந்த அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், கட்டுரைகள் தொடர் கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள் என ஏறத்தாழ 2500 பக்கங்கள் சேகரித்துப் புதிதாகச் சேர்க்கப்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இங்ஙனம் தொகுக்கப் பெற்ற இத் தொகுதிகள் அனைத்தும் அடிகள்பிரான் எழுத்துக்கள் முழுவதும் அடங்கினவை அல்ல. இதழ்களுக்கு எழுதிய கட்டுரைகள், நூல்களுக்கு எழுதிய வாழ்த்துரைகள், அணிந்துரைகள், மலர்களுக்கு எழுதிய வாழ்த்துச் செய்திகள், அறிஞர்களுக்கு எழுதிய கொள்கைக் கடிதங்கள், 'தமிழகம்', 'மக்கள் சிந்தனை' இதழ்களில் எழுதிவந்த திருமுகம், தலையங்கம், இதழ்கள் பலவற்றுக்கு அளித்த பேட்டிகள், வினா விடைகள், பொன்மொழிகள், அமுத மொழிகள் எனப் பலவும் தொகுக்கப் பெறத் தக்கவையாக எஞ்சி உள்ளன. இவையெல்லாம் அடங்கிய முழுமையான தொகுதிகள் விரைவில் வெளிவர இறைவன் அருள்புரிவானாக.

இத்தொகுப்புப் பணியில் எங்களுக்கு ஆர்வமூட்டி வழிகாட்டிய தவத்திரு பொன்னம்பல அடிகள்பிரானுக்கு நன்றி தெரிவித்து வணங்கி மகிழ்கின்றோம்.

அடுத்து, இந்த அரிய பணியில் எங்களை வழிநடத்திய மணிவாசகர் பதிப்பக நிறுவனர் தமிழவேள் டாக்டர் ச. மெய்யப்பனார்க்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். பதிப்புக் குழுவுக்கு அவ்வப்போது உடனிருந்து உதவிய ஆதீன அலுவலகத்தைச் சார்ந்த புலவர் சு. வீரமுத்து, செல்வி ம. கஸ்தூரி இருவருக்கும் நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக தோன்றாத் துணையாய் நின்று இயக்குவித்த அருள்நெறித் தந்தையின் குருவருளையும் இறைவன் திருவருளையும் பதிப்பாசிரியர் குழு நினைந்து போற்றி வணங்குகிறது.

*பதிப்புக்குழு*

# தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் எழுதிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சொல்லமுதம் | தமிழ்ப்பண்ணை, தி.நகர், சென்னை-17 | அக்டோபர், 1966 |
| 2. | மண்ணும் விண்ணும் | தமிழ்ப்பண்ணை, தி.நகர், சென்னை-17 | சூலை, 1966 |
| 3. | முத்து மொழிகள் | தமிழ்ப்பண்ணை, தி.நகர், சென்னை-17 | அக்டோபர், 1965 |
| 4. | ஈழத்துச் சொற்பொழிவுகள் | தமிழ்ப்பண்ணை, தி.நகர், சென்னை-17 | சனவரி, 1968 |
| 5. | திருவள்ளுவர் காட்டும் அரசு | தமிழ்ப்பண்ணை, தி.நகர், சென்னை-17 | சனவரி, 1969 |
| 6. | குறட்செல்வம் திறனாய்வு | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | சனவரி, 1974 |
| 7. | அப்பர் விருந்து | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | சூன், 1980 |
| 8. | வாழ்க்கை விளக்கு | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1972 |
| 9. | திருவள்ளுவர் காட்டும் அரசியல் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1972 |
| 10. | புனிதநெறி | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1973 |
| 11. | வானொலியில் அடிகளார் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1975 |
| 12. | மனம் ஒரு மாளிகை | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | சூன், 1978 |
| 13. | குறட்செல்வம் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1969 |
| 14. | சிந்தனைச் செல்வம் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | ஏப்ரல், 1983 |
| 15. | அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | மே, 1996 |
| 16. | தமிழமுது | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1988 |
| 17. | திருவருட் சிந்தனை | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1985 |
| 18. | சைவசித்தாந்தமும் சமுதாய மேம்பாடும் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | செப்டம்பர், 1990 |
| 19. | வாக்காளர்களுக்கு வள்ளுவர் அறிவுரை | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | சூன், 1988 |
| 20. | சமுதாய மறுமலர்ச்சி | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | சூன், 1992 |
| 21. | சிந்தனைச் சோலை | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1992 |
| 22. | Thirukkural A World Literature | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1991 |
| 23. | வாழ்க்கை நலம் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1992 |
| 24. | சிலம்பு நெறி | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | செப்டம்பர், 1993 |
| 25. | சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1993 |
| 26. | எங்கே போகிறோம் | கலைவாணி புத்தகாலயம், தி.நகர், செ-17 | டிசம்பர், 1994 |

| | | | |
|---|---|---|---|
| 27. | பொங்கல் பரிசு | இளங்கோ பதிப்பகம், தி. நகர், செ-17 | மார்ச்சு, 1969 |
| 28. | அடிகளார் உவமை நயம் | இளங்கோ பதிப்பகம், தி. நகர், செ-17 | மார்ச்சு, 1970 |
| 29. | கவியரங்கில் அடிகளார் | இளங்கோ பதிப்பகம், தி. நகர், செ-17 | நவம்பர், 1970 |
| 30. | பெரியபுராணச் சொற்பொழிவுகள் | சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், செ | டிசம்பர், 1970 |
| 31. | சமய மறுமலர்ச்சி | பாரி நிலையம், சென்னை | 1955 |
| 32. | அறவழிக்காட்டி | அருள்நெறித் திருக்கூட்டம், தேவகோட்டை | 1955க்கு முன் |
| 33. | திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி விளக்கம் | அருள்நெறித் திருக்கூட்டம், கைலாசபுரம் திருச்சி-14 | 25-12-1976 |
| 34. | நாயன்மார்களின் அடிச்சுவட்டில் | திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி | 11-03-1972 |
| 35. | நமது நிலையில் சமயம் சமுதாயம் | சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை | 1975 |
| 36. | மொழிவழிச் சிந்தனைகள் | கவிதா பப்ளிகேஷன், சென்னை-33 | ஜூன் 1974 |
| 37. | திருவள்ளுவர் | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர் - 609 001 | 1981 |
| 38. | ஆலயங்கள் சமுதாய மையங்கள் | வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், செ-17 | அக்டோபர் 1987 |
| 39. | கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம் | வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், செ-17 | ஆகஸ்ட், 1994 |
| 40. | திருவாசகத்தேன் | வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், செ-17 | ஜூலை, 1995 |
| 41. | தமிழும் சமயமும் சமுதாயமும் | மு. நாகேசுவரன் ஸ்டேட் பாங்க் சத்தியமங்கலம் | நவம்பர், 1983 |
| 42. | பாரதி யுகசந்தி | நியுசெஞ்சுரிபுக் ஹவுஸ்(பி)லிட் 136, மவுண்ட் ரோடு, செ-2 | மார்ச்சு 1983 |
| 43. | சமய இலக்கியங்கள் | இந்தியா புக் ஹவுஸ், 781, அண்ணாசாலை, செ-2 | செப்டம்பர், 1981 |
| 44. | கடவுளைப் போற்று மனிதனை நினை | அருணோதயம், 3, கவுடியா மடத்தெரு, செ-1 | ஜூன், 1991 |
| 45. | திருக்குறள் பேசுகிறது | அருணோதயம், 3, கவுடியா மடத்தெரு, செ-1 | நவம்பர், 1991 |
| 46. | பாரதிதாசனின் உலகம் | பூரம் பப்ளிகேஷன் 39, ராஜூ நாயக்கத் தெரு, மே. மாம்பலம், செ-33 | 1990 |
| 47. | சிந்தனை மலர்கள் | பூரம் பப்ளிகேஷன் 39, ராஜூ நாயக்கத் தெரு, மே. மாம்பலம், செ-33 | 1990 |
| 48. | மண்ணும் மனிதர்களும் | திருமாறன் நிலையம், சென்னை-14 | மே, 1996 |
| 49. | குறள் நூறு பொருளுரை | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிவிழா வெளியீடு | ஜூலை, 1985 |

**குறிப்பு:** மேற்கண்ட நாற்பத்தொன்பது நூல்களில் உள்ள கட்டுரைகள், கவிதைகள் துறைவாரியாகப் பிரிக்கப்பட்டும் இதை தவிர இதுவரை பதிப்பிக்கப்படாமல் கையெழுத்துப் படிகளாக இருந்தவையும் இதழ்கள் பலவற்றில் வெளிவந்தவையுமான கட்டுரைகள், கவிதைகள், கதைகள், துணுக்குச் செய்திகள் ஆகியனவும் முறையாகப் பகுக்கப்பட்டும் இந்நூல் வரிசை பதினாறு தொகுதிகளிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. - *பதிப்புக்குழு.*

# மணிவாசகர் பதிப்பகத்தின்
## தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி
## அடிகளாரர் நூல்வரிசை

**7200 - பக்கங்கள் - 16 தொகுதிகள்**

| | |
|---|---|
| திருக்குறள் - தொகுதி I | 75-00 |
| திருக்குறள் - தொகுதி II | 65-00 |
| திருக்குறள் - தொகுதி III | 100-00 |
| திருக்குறள் - தொகுதி IV | 75-00 |
| இலக்கியம் - தொகுதி V | 75-00 |
| இலக்கியம் - தொகுதி VI | 100-00 |
| சமய இலக்கியம் - தொகுதி VII | 80-00 |
| சமய இலக்கியம் - தொகுதி VIII | 100-00 |
| சமய இலக்கியம் - தொகுதி IX | 75-00 |
| சமயம் - தொகுதி X | 90-00 |
| சமயம் - தொகுதி XI | 100-00 |
| சமயம் - தொகுதி XII | 125-00 |
| பொது - தொகுதி XIII | 140-00 |
| பொது - தொகுதி XIV | 125-00 |
| பொது - தொகுதி XV | 120-00 |
| பொது - தொகுதி XVI | 140-00 |

தமிழ்மாமுனிவர்
தவத்திரு
# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமய இலக்கியம்
சமயம்
பொது